Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியின் கட்டுரைச் செல்வம்

முதன் முறையாகப் பதிப்பாகும் 'இந்தியா' கட்டுரைகளின் தொகுப்பு

தொகுப்பாசிரியர்:
சீனி. விசுவநாதன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Arya Samaj Foundation Chennai an

பாரதியின் கட்டுரைச் செல்வம்

Domain. Gurukul Kangri Collection

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Presented Free of Cost

With best compliments from

Dr. Nalli Kuppuswami Chetti

PARTNER

Nalli Chinnasami Chetty

SILK CLOTH & PIECE GOODS MERCHANTS

9, NAGESWARA RAO ROAD

Opposite Panagal Park

T. NAGAR, MADRAS-600 017

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

100836

மகாகவி பாரதியின்
பிரார்த்தனை

கிழவனுடைய அறிவுமுதிர்ச்சியும்

நடுவயதிற்குள்ள மனத்திடனும்

இளைஞனுடைய உத்ஸாகமும்

குழந்தையின் ஹிருதயமும்

தேவர்களே

எனக்கு எப்போதும் நிலைத்திருக்கும்படி

அருள் செய்க.

Presented Free of Cost

With best compliments from

Dr. Nalli Kuppuswami Chetti

PARTNER

Nalli Chinnasami Chetty

SILK CLOTH & PIECE GOODS MERCHANTS

9, NAGESWARA RAO ROAD

Opposite Panagal Park

T. NAGAR, MADRAS-600 017

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

DONATION

உ

ஓம் சக்தி

பாரதியின் கட்டுரைச் செல்வம்

100839

पुस्तकालय
पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

தொகுத்துப் பதிப்பித்தவர் :

சீனி. விசுவநாதன்

வெளியீட்டாளர் :

சீனி. விசுவநாதன்
2, மாடல் ஹவுஸ் லேன்,
சி. ஐ. டி. நகர்,
சென்னை-600 035

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியின்
கட்டுரைச் செல்வம்

["இந்தியா" பத்திரிகையினின்றும்
தொகுக்கப்பட்ட கட்டுரைத் தொகுதி]

முதற் பதிப்பு	:	11 டிஸம்பர் 1989
பதிப்புரிமை	:	தொகுப்பாசிரியருக்கே
புத்தக அளவு	:	கிரவுன் 1×8
ஓவியங்கள்	:	அமுதோன்
பக்க அளவு	:	viii+544=552
அச்சகம்	:	மாருதி பிரஸ் சென்னை-600014

விலை : ரூ. 52.00

[மத்திய அரசின் நிதி உதவி பெற்று
இந்த நூல் வெளியிடப் பெற்றுள்ளது.]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

First Edition : 11th December 1989

© SEENI. VISWANATHAN

BHARATIYIN KATTURAI SELVAM

(Selected articles from "INDIA")

Compiler : Seeni. Viswanathan

Cover Design & Illustrations : Amudhone

No. of Pages : viii + 544 = 552

Printers : Maruthy Press
173, Peters Road,
Madras-600 014.

Price : Rs. 52-00

★

Published with financial assistance from the Government of India, Department of Education, Vide Sanction No.4-17/88 L.G.Cell, dated 10-8-89.

Copyright Vests with Shri Seeni. Viswanathan
2, Model House lane, C.I.T. Nagar, Madras-600 035.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரியரின் பிற நூல்கள்

ஆக்கியவை

1. மகாகவி பாரதி : நூற்பெயர்க் கோவை [1908-1980]
2. பாரதி நூல்கள் : விவரக் கோவை [1981-1985]
3. பாரதி நூல்கள் : பதிப்பு வரலாறு
4. மகாகவி பாரதி : சில புதிய உண்மைகள்
5. பாரதி ஆய்வுகள் : சில சிக்கல்கள்
6. மறுமலர்ச்சிக் கவிஞர்
7. கட்டுரை மணிகள்

தேடிப் பதிப்பித்தவை

1. சக்ரவர்த்தினி - கட்டுரைகள்
2. மும்மணிகள்
3. கட்டுரைக் கொத்து
4. மணிவாசகம்
5. பாரதியின் 'இந்தியா' கட்டுரைகள்

பாரதியின் பெருமை பேசும் கட்டுரைத் தொகுப்புகள்

1. தமிழகம் தந்த மகாகவி
2. மரணத்தை வென்ற மகாகவி
3. மகாகவி பாரதி : கட்டுரை மணிமாலை
4. மகாகவி பாரதி மஞ்சரி

மற்றும் பல...

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமர்ப்பணம்

தேசத்திற்காகத் தொண்டு பூண்டு
மனஞ் சலியாமல், தைரியம் தளராமல்,
ஊக்கம் கைவிடாமல் உள்ளன்புடன்
தேசத்திற்காக உழைக்கும்
தேசபக்த திலகங்களுக்கு
இந்த நூலைக்
காணிக்கை யாக்குகின்றேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பட விளக்கங்கள்

முதல் படம்

● 'ஆண்களோடு பெண்களும் ஸரிநிகர் ஸமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே' என்று குரல் கொடுத்த பாரதி தம் மனைவி செல்லம்மாளுடன் புதுச்சேரியில் 1917 ஆம் ஆண்டு வாக்கில் எடுத்துக்கொண்ட புதுமைப் புகைப்படம் முதல் பக்கத்தை அணிசெய்கின்றது.

இரண்டாம் படம்

● 20-4-1907 ஆம் தேதிய சென்னைப் பதிப்பு "இந்தியா" இதழை அழகு செய்த முகப்புச் சித்திரத்தை இரண்டாம் பக்கத்தில் காண்கிறோம்.

புது வருஷத் தேவியை ஜாதி-மதம் பாராமல் யாவரும் ஒரே அணியாய்த் திரண்டு வந்து தாழ்ந்து பணியும் ஆனந்தக் காட்சியைச் சித்திரம் புலப்படுத்துகின்றது.

> "புது வருஷம் நமக்கு ஸர்வ மங்களமாகவே பிறந்திருக்கின்றது. இது முதலேனும் நாம் இடையறாது விடா முயற்சியுடன் ஸ்வராஜ்யம் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் முயற்சி புரிய வேண்டுமென்பதாக நம்மவர்களிலே பலர் புது வருஷப் பிறப்பன்று பிரதிக்கினை செய்துகொண்டார்கள்"

என்று பாரதி தலையங்கத்தில் எழுதிய வசனங்கள் குறிப்பிடத்தக்கவை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மூன்றாம் படம்

● புதுச்சேரியினின்றும் பிரசுரமாகிய 'இந்தியா' 9-1-1909ஆம் தேதிய இதழின் ஓர் அரிய சித்திரமானது மூன்றாம் பக்கத்தில் இடம் பெற்றுள்ளது.

இதற்கான விளக்கமாகப் பாரதியே எழுதிய குறிப்பு வருமாறு:

"ஓயாமல் தற்கால விவகாரங்களையே பற்றிச் சித்திரம் காட்டுவதில் ஜனங்களுக்குச் சலிப்புண்டா யிருக்குமென்பது கருதி, இவ் வாரத்தில் 'புராதன இந்தியாவினின்றும் ஓர் காட்சி' என்ற ஓர் சித்திரம் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

முற்காலத்து இந்தியர்களின் வீரியத்தைக் குறிப் பிடுவதே இச் சித்திரத்தின் நோக்கமாகும். மகா பராக்கிரமும், போர்த் திறமையுங் கொண்டிருந்த பாரத ஜாதியார் ஆங்கிலேய கவர்ன்மென்டார் ஆயுதச் சட்டம் ஏற்படுத்தியபடியால் தற்காலத்தில் உலகத்தா ரெல்லாம் கண்டு நகைப்பதற்குரிய பேடிகளாய் விட்டார்கள்.

இவ் விஷயத்திலேயும் ஆங்கிலேய ராஜாங்கத் தாருக்குப் பிரெஞ்சு ராஜாங்கத்தார் சிறந்த முன்மாதிரி யாக விளங்குகின்றார்கள். பிரெஞ்சு இந்தியாவில் ஆயுதச் சட்டமில்லையே! அதனால், ராஜாங்கத் தாருக்கு ஏதேனும் கஷ்டமிருக்கிறதா? அப்படி யிருக்க, ஆங்கிலேய ராஜாங்கத்தார் மட்டும் தமது ஆயுதச் சட்டத்தை ஏன் ரத்து செய்யப் பயப்படுகிறார்கள்? அவர்களுடைய 'குற்றமுள்ள நெஞ்சு' தான் இதற்கு முகாந்தரம்."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதே சித்திரம் மீள்வும் 2-10-1909 ஆம் தேதிய 'இந்தியா' இதழில் பதிப்பிக்கப்பெற்றது. அது சமயம் பாரதி தந்த தலைப்பு: வருங்காலத்து பாரத ஜாதி—ஓர் திருஷ்டாந்தம் என்பதாகும்.

சித்திரத்திற்கான விளக்கக் குறிப்பாக,

"50 வருஷங்களின் பிறகு பாரதஜாதி இன்ன மாதிரியாக இருக்கு மென்பதற்கு ஓர் திருஷ்டாந்தமாக எழுதப் பட்டிருக்கும் பெங்காளிச் சித்திர மொன்றை இன்று முதற் பாகத்தில் பதிப்பித்திருக்கிறோம். 50 வருஷங்களின் பிறகு பாரத நாட்டில் ஆயுதச் சட்டமிராது. ஜனங்களுக்கு வீரத் தன்மை யிருக்கும். ராஜாங்கம் சுய ஆட்சி முறைமை தழுவியதா யிருக்கும். அப்போது நமது வீரர்கள் பர தேசத்தாருடன் போர் செய்யப் புறப்படும்போது வாழ்க்கைத் துணைவியரான சுந்தரிகள் வாள் கொண்டு கையில் கொடுப்பார்கள்.

இக் கருத்துக்க ளெல்லாம் சித்திரத்திலே அமைந் திருக்கின்றன. இது மிகவும் அழகிய சித்திரம். முக்கிய அமிசங்களி லொன்றாகிய சித்திர சாஸ்திரத்திலும் நம்மவர்கள் உண்மையான தேர்ச்சி பெற்று வருகிறார்க ளென்பதற்கு இது நல்ல அடையாளம்"

என்றெழுதி யுள்ளமை படித்து இன்புறத்தக்கது.

நான்காம் படம்

● விளக்கக் குறிப்பே தேவைப்படாத — பாரதியின் மணி மணியான கையெழுத்தில் அமைந்த — நம்மவர்க்கு **"வேண்டுவன"** புலப்படுத்தும் அற்புதமான பாடல் நான்காம் பக்கத்தில் காட்சி யளிக்கின்றது.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Registered No. M. 878.

இந்தியா.

சனிக்கிழமைதோறும் வெளியாகும்.

[ப. 1 பிலவங்க ஞு சித்திரை மீ 1உ ஏப்ரல் மீ 20உ 1907. இ ௧



Happy New Year's Day.

புது வருஷப்பிறப்பு நாள்.

[illegible]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Registered No. M. 771 LIBERTE — EGALITE — FRATERNITE தனிப்பிரதி அணா 1. (ஒன்று).
சுதந்திரம், சமத்துவம், ஸகோதரத்துவம்.

இந்தியா.

சனிக்கிழமைதோறும் வெளியாகும்.

பு. 1. புதுவை 1909ஆம் ஜனவரி மீ 9உ கீலகஹு மார்கழி மீ உ௫உ இல. 14

A SCENE FROM ANCIENT INDIA.



புராதன இந்தியாவிலிருந்து ஓர் காட்சி.

ராஜபுத்திரன் யுத்தத்திற்குப் போகிறான். அவன் தாய் வாளை ஆசீர்வதித்துக் [illegible] வேண்டுகிறாள். ([illegible])

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேண்டுவன.

மனதி லுறுதி வேண்டும்;
வாக்கினிலே யினிமை வேண்டும்,
நினைவு நல்லது வேண்டும்,
நெருங்கின பொருள் கைப் பட வேண்டும்;
கனவு மெய்ப் பட வேண்டும்,
கைவச மாவது விரைவில் வேண்டும்;
தனமு மின்பமும் வேண்டும்.
தரணியிலே பெருமை வேண்டும்.

(2) கண் திறந் திட வேண்டும்.
காரியத்தி லுறுதி வேண்டும்;
பெண் விடுதலை வேண்டும்,
பெரிய கடவுள் காக்க வேண்டும்,
மண் பயனுற வேண்டும்,
வானக மிங்கு தென் பட வேண்டும்,
உண்மை நின் றிட வேண்டும்;
ஓம், ஓம், ஓம், ஓம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முகவுரை

இதுநாள் வரையிலும் நூலாக்கம் பெறாத கட்டுரைத் தொகுதி இது. 1906, 1907, 1908, 1909 ஆகிய காலப் பகுதிகளில் 'இந்தியா' (சென்னை - புதுச்சேரி) இதழில் பிரசுரமான கட்டுரைகளில் ஒருசிலவற்றை மட்டும் தொகுத்துப் ''பாரதியின் கட்டுரைச் செல்வம்'' என்ற தலைப்பெயரிட்டுப் பதிப்பித்துள்ளேன்.

நாட்டு மக்களிடையே ஸ்வதேசீயம், அன்னிய வஸ்து வர்ஜனம், ஜாதீயக் கல்வி, ஸ்வராஜ்யம் போன்ற தர்மங்களை வளர்க்கவே 'இந்தியா' இதழ் பத்திரிகை வானில் விடிவெள்ளியெனத் தோன்றியது.

1906ஆம் வருடம் மே மாதம் முதற்கொண்டு சென்னையிலும், 1908ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதற்கொண்டு புதுச்சேரியிலும் 'இதழ்' வெளிவந்தது. அரசு கையாண்ட முறைகளால் 'இந்தியா' 1910ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் வெளிவருவது நின்றுவிட்டது.

பா.—1

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சென்னையிலும் சரி — புதுச்சேரியிலும் சரி — பத்திரிகை ஆசிரியர் எனப் பாரதியின் பெயர் இல்லை. ஆனால், பத்திரிகைப் பொறுப்பு முழுதும் பாரதியி னுடையது என்பது 'இந்தியா' பத்திரிகையின் உரிமையாளர்களே ஒப்புக்கொண்ட உண்மை. இது தவிர அரசுக்கு அளித்த விண்ணப்பப் படிவத்தில் 'இந்தியா' பத்திரிகையின் ஆசிரியரின் பெயர் சி. சுப்பிரமணிய பாரதி என்றே குறிப்பிடப் பட்டுள்ளது. அதனால் பத்திரிகையின் பெயர் போடாத ஆசிரியர் பாரதி என்பது ஊரறிந்த உண்மையாயிற்று.

தமிழ்ப் பத்திரிகை உலகில் தம்முடைய இருபத்திரண்டாம் வயதளவில் பிரவேசித்த பாரதி, தாம் இறக்குமளவும் பத்திரிகை உலகோடு தொடர்பு கொண்டிருந்தார்; எழுதிக் கொண்டிருந்தார்.

* * *

தமிழ்ப் பத்திரிகை உலகின் தந்தையான திரு. சுப்பிரமணிய ஐயரின் ''சுதேச மித்திர''னில் 1904 நவம்பர் முதல் 1906 ஆகஸ்டு — செப்டம்பர் வரை உதவி யாசிரியராகப் பாரதி பணிபுரிந்தார். இதனிடையில், ''சுதேச மித்திர''னில் உதவி யாசிரிய ராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும்போதே, மாதர் முன்னேற்றத்திற்காக வெளிவந்த மாதப் பத்திரிகை யான ''சக்ரவர்த்தினி'' ஆசிரியர் பதவியையும் பாரதி ஏற்றார். இப் பதவியில் அவர் 1905 ஆகஸ்டு முதல் 1906 ஆகஸ்டு வரை நீடித்தார்.

வங்கப் பிரிவினையின் எதிரொலியால் நாடெங்கும் தேசிய எழுச்சி அலையென எழுந்தது;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தீவிர அரசியலில் பாரதியின் உள்ளம் ஈடுபாடு கொண்டது. இக்காரணம் பற்றியே பாரதியினுடைய தேசியத் துடிப்பு குறிப்பிட்ட எல்லைக்குள் அடங்கிக் கட்டுப்பட்டு இருக்கவும், இயங்கவும் இயலாத நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் பாரதியின் சுதந்திர உணர்ச்சிகளுக்கு ஈடுகொர்டுக்கக் கூடிய பத்திரிகையாக 'இந்தியா' வாய்த்தது. இந்தப் பத்திரிகையில் பார்ரதி பதிவுபெற்ற ஆசிரியராகப் பெயர் போட்டுக் கொண்டு தொழிற்படாமல், பெயர் போட்டுக் கொர்ள்ளாமலே நிறைய எழுதினார். பொது ஜனங்கள் உள்ளத்தைத் தொடும் வகையில் பத்திரிகையில் தமிழ்ச் சொற்களைக் கையாண்டார். சொல்லப் போனால், பாரதியின் கைவண்ணத்தால் ''இந்தியா'' இதழ் விளக்கமுற்று சிறந்தோங்கியது எனலாம்.

பாரதியின் தமிழ் நம் மக்களிடையே செல்வாக்குப் பெற்றது. அரசியல் விழிப்புணர்ச்சியை எழுப்பியது; தேச பக்தியை ஊட்டியது; பொது அறிவை வளர்த்தது. இந்தியத் திருநாட்டின் புராதனப் பெருமைகளையும் மகிமைகளையும் நன்கு எடுத்துக் காட்டியது; பழங்கா்லத்துக் கொள்கைகளையும் கருத்துக்களையும் புதிய பார்வையில் — புதிய கோணத்தில் காட்டியது.

பாரதியின் 'இந்தியா' எழுத்துக்கள் பா்ரத நாட்டினரை—குறிப்பாக இந்தியத் தமிழ் மக்களை— ஜாதீயக் கல்வியையும், கைத்தொழில்களையும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கற்றுணர வழிகோலின; இந்து — முஸ்லிம் ஒற்றுமைக்கு அடிகோலின.

பாரதி 'இந்தியா' இதழில் பல பொருள்கள் பற்றிய கட்டுரைகள் எழுதி, ஆக்கப் பூர்வமான சேவை செய்தார் என்பது பெருமைப்படத் தக்க விஷயம்.

ஆம்; அரசியல், தமிழ் உணர்வு, தேசியப் பற்று, கைத்தொழில் மேம்பாடு, பன்னாட்டு நெறிகள், அறிஞர் பெருமக்களின் பெற்றி, சுதேசியத்தின் வெற்றி என்று இவ்வாறான பொருள்கள் பேசும் கட்டுரைகளை 'இந்தியா' இதழில் பாரதி நிறைய எழுதினார்.

பாரதியின் எழுத்துக்களை அவ்வப்போது நான் இயன்றவரை தேடிப்பெற்று நூலாக்கம் செய்து உள்ளேன். அந்த வகையில் பாரதி இலக்கியத்துக்கு அழகூட்டும் ஓர் புதுமணியாரமாகக் **'கட்டுரைச் செல்வம்'** வெளிவருகிறது.

பாரதியின் படைப்பு இலக்கியச் செல்வத்தில் மொழி - இலக்கியம், அரசியல், இந்து - முஸ்லிம் ஒற்றுமை, தொழில், சுதேசிய இயக்கம், மொழி பெயர்ப்பு, மதிப்புரை, அயல்நாடுகள், பல்சுவை — என்றிப்படி ஒன்பது பகுதிகள் இடம் பெற்றுள்ளன.

"ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்கு
உண்மை தெரிந்தது சொல்வேன்"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று பாரதி 'முரசு'ப் பாட்டிலே உரைத்ததை இதிலுள்ள கட்டுரைச் செல்வங்கள் நமக்கு நன்கு உணர்த்துகின்றன.

பாரதி தம் பாடல்களிலே எத்துணை உயர்வான கருத்துக்களை யெல்லாம் சொல்லி யுள்ளாரோ, அத்துணைக்கு ஈடாகவும் எடுப்பாகவும் வசனங்களி லேயும் வலியுறுத்தி எழுதி யுள்ளார் என்பதை இந்த நூலின் கட்டுரைகள் தெள்ளிதின் புலப்படுத்து கின்றன.

பாரதியின் நூல்களை வெளியிட உத்தேசம் செய்திருந்த 'தமிழ் வளர்ப்புப் பண்ணை' பாரதி மரணமடைவதற்குச் சுமார் ஒன்பது மாதங்களுக்கு முன்னால் - அதாவது 1920இன் இறுதியில் - விடுத்த விண்ணப்ப அறிக்கையில்,

> "ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியின் தமிழ் புதுமை, தெளிவு முதலிய பல குணங்க ளுடையதாய்த் தமிழ் நாட்டில் எல்லா ஜனங்க ளாலும் மிகவும் அன்புடனும், ஆதரவுடனும் போற்றப்பட்டு வருகிற தென்ற விஷயம் உங்களுக்குத் தெரியாத தன்று...
>
> 'கீழ்த்திசை முன்னேற்றம் பெறக் கடவது, புனர்ஜன்மம் எய்தக் கடவது' என்று கால சக்தி விதித்திருக்கிறது. தமிழ்நாடும் ஆசியாவின் பகுதியாதலால் இதற்கும் அந்தப் புனர்ஜன்மம் உண்டு. இப் புனர் ஜன்மத்தை ஏற்படுத்துவ தற்கு ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியின் நூல்களே தகுந்த கருவிகளாவன"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று தெரிவிக்கப்பட்ட வாசகங்கள், இன்றைக்கும் பொருந்துமாறு அமைந்துள்ளன; அன்று சொன்னவை இன்றைக்கும் அர்த்தமுள்ளனவாகத் திகழ்கின்றன.

முக்கால் நூற்றாண்டுக்கும் முன்பு எழுதிய 'இந்தியா' இதழ் கட்டுரைகளைப் பத்திரிகையில் வெளிவந்தவண்ணமே நான் பதிப்பித்துள்ளேன்.

பாரதியின் புதுமைத் தமிழை - புரட்சித் தமிழை - தெளிவுபெற்ற தமிழை - பழகு தமிழைப் பயில விரும்புகிறவர்களுக்கு இந்த நூல் பெரிதும் துணைபுரியும் என நம்புகிறேன்.

பாரதி காலத்திய அரசியல் நிலைகளையும், ஸ்வராஜ்ய கிளர்ச்சிச் செய்திகளையும் மட்டுமே யல்லாது, பாரதியைப் புதுக்கோணத்தில் ஆராய முற்படுகிறவர்களுக்கும் இப் புதிய நூல் சிறந்த வழிகாட்டியாகத் திகழும் என்பது என் நம்பிக்கை.

இந்தத் தொகுப்பு நூலின் சிறப்பு அம்சத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் தெரிவிக்க விரும்பு கின்றேன்.

இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள கட்டுரைகளை மேலோட்டமாகப் படிப்பதைவிட, அந்தந்தக் கட்டுரைகளின் பின்புலத்தையும், கட்டுரைகளிலே மேற்கோள்களாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளனவும், விளக்கம் பெற்றுள்ளனவுமான மேலோர், நூலோர் தொடர்புடைய வரலாற்றுப் பின்னணிச் செய்திகளை யும், குறிப்புக்களையும் நன்கு தெரிந்துகொண்டு படித்து இன்புற்றுப் பயன்பெற வேண்டும் என்று நான் பெரிதும் விரும்பினேன்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதன்பொருட்டு, மிகுந்த பிரயாசைப்பட்டு, ஆதார பூர்வமான செய்திகளைக் குறிப்புக்களாகக் கொண்ட நூல் பிரதிகளையும், பத்திரிகைப் பிரதிகளையும் தேடிப் பிடித்து, அவற்றில் இடம் பெற்றிருந்தவற்றை அடிக் குறிப்புக்களாகத் திரட்டி, அந்தந்தக் கட்டுரைகளின் இறுதியில் தந்துள்ளேன்.

பொருத்தம் நோக்கித் திரட்டிக் கொடுத்துள்ள அக் குறிப்புக்கள் வரலாற்றுச் செய்திகளையும், அறிஞர் பெருமக்களின் பணிகள் பற்றியும், இதிகாச-புராண புருஷர்கள் பற்றியும் தெரிவித்து இக்காலத் தலைமுறையினருக்கு அவற்றை நினைவுபடுத்துகின்ற பான்மையில் அமைந்துள்ளன என்பதை நீங்களே அறிந்துகொள்ளலாம்.

தேசீய இயக்கத்தின் - இந்தியப் பெருநாட்டின் வரலாற்றுச் செய்திகள் யாவும் இக் கால இளைய தலைமுறையினருக்குத் தூண்டுகோலாக அமைந்து விளங்குமன்றோ?

பாரதியின் 'சக்ரவர்த்தினி' (1905—1906), 'இந்தியா' (1906-1909) ஆகிய பத்திரிகைகளிலே காணப்பட்ட செய்திகளும், வரலாற்றுப் பின் புலத்தைத் தெள்ளத் தெளிவாகப் புலப்படுத்திக் காட்டும் செய்திக் கட்டுரைகளும் பெரும்பாலும் மிக அரிதின் முயன்று திரட்டித் தரப்பெற்றுள்ளன என்பதை வாசக நேயர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த அரிய நூல் மத்திய அரசின் நிதி உதவியுடன் பிரசுரிக்கப்படுகின்றது என்பதை நான் நன்றியுடன் நினைவுகூர்கின்றேன்.

விமர்சனங்களுக்கல்லாது, வேறு வகையில், இந்த நூலின் கட்டுரைப் பகுதிகளையோ, பிற செய்திகளையோ எடுத்தாள விரும்புகின்ற அன்பர்கள் என் முன் அநுமதி பெறுதல் வேண்டும் என்பதை மிக்க அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூல் மிக அழகாகவும் சிறப்பாகவும் வெளிப்பட நான் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக் கெல்லாம் கைகொடுத்த நண்பர்கள் பலர்.

என் பணிகள் சிறக்க எனக்குப் பயன் கருதாமல் உதவிகள் புரியும் என் இனிய நண்பர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஓம். வந்தே மாதரம்.

சீனி. விசுவநாதன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியின்
கட்டுரைச் செல்வம்

பகுதி : ஒன்று

மொழி - இலக்கியம்

1. 'கன்னி'த் தமிழ் ... 19
2. ஏக லிபி விஸ்தார பரிஷத் ... 25
3. தமிழ்நாட்டு ஜனத்தலைவர்களும் தமிழ்ப் பாஷையும் ... 27

பகுதி : இரண்டு

அரசியல்

1. இந்திய காங்கிரெஸ் மகாசபை ... 65
2. ஸ்ரீ தாதாபாய் நௌரோஜியின் உபந்நியாஸம் ... 73
3. தாதாபாய் நவுரோஜியின் அட்ரஸின் கருத்து ... 79
4. "அமைதிக் குணமுள்ள" சென்னை வாசிகள் ... 109
5. வர்த்தமான கர்த்தவ்யம் ... 115
6. சென்னையில் 'ராஜ பக்தி'க் கொண்டாட்டம் ... 120
7. இந்தியர்களின் அதிருப்திக்குச் சில புதிய மருந்துகள் ... 125

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8. தேசப் பிரஷ்டம் ... 132
9. இந்தியாவின் லாபம் ... 135
10. "ஆமார் தேச" (எங்கள் நாடு) ... 142
11. அதர்மப் பத்திரிகைகள் ... 146
12. பயித்தியங் கொண்ட செய்கை ... 152
13. பாபு அசுவினி குமார தத்தர் ... 156
14. ஆறிலொரு கடமை ... 163
15. ஸ்ரீ ஹரி ஸர்வோத்தம ராவ் ... 165
16. ஆள் பாதுகாப்பு ... 174
17. கீழ்த் திசையில் ஸ்வதந்திரக் கிளர்ச்சி-அதற்கு நேரும் பீடைகள் ... 180
18. ராஜபக்தி உபதேசம் செய்யும் சுதேசிகள் ... 185
19. நமது ஆங்கிலேய "மித்திரர்கள்" ... 191
20. ராஜத் துரோகத்தைக் கிளறிக் கிளறிப் பார்க்கிறார்கள் ... 197
21. ஷாமாஜி கிருஷ்ண வர்மாவும் லண்டன் கொலையும் ... 200
22. கஞ்சி குடிக்கும் இந்தியன் ... 204
23. ஸ்ரீ பாரத தேச தாஸர்களின் பக்தி ... 208

பகுதி : மூன்று

இந்து - முஸ்லிம் ஒற்றுமை

1. இந்தியர்களும் மகமதியர்களும் ... 225
2. கல்கத்தாவில் பக்ரீத் பண்டிகை ... 229
3. ஹிந்து - மகமதியர்கள் ... 232

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. ஹிந்து - மகமதியர்கள் ... 239
5. மத த்வேஷம் ... 247

பகுதி : நான்கு

தொழில்

1. கைத்தொழிற் சங்கத்தில் கைக்வார் மகாராஜாவின் பிரஸங்கம் ... 253
2. கைத்தறி நெசவு ... 258
3. எவ்வளவு கோரமான வீழ்ச்சி ... 264
4. வெளியேற்றப்படும் விளைபொருள்கள் ... 268
5. 1907—1908-ம் வருஷத்தில் சென்னை மாகாணத்திலே மணிலாக் கொட்டைப் பயிர் ... 274
6. பிழைக்கும் வழி ... 277

பகுதி : ஐந்து

சுதேசிய இயக்கம்

1. ஸ்டாம்பு வெண்டர்களுக்கு ஓர் வேண்டுகோள் ... 287
2. காசி மகாராஜா ... 289
3. வங்காளிகளின் சுவதேசிய அபிமானம் ... 293
4. சுதேசீயத்தின் வெற்றி ... 296
5. கண்ணுடையோ ரெல்லாம் பாருங்கள்; காதுடையோ ரெல்லாம் கேளுங்கள் ... 299
6. ஸ்வதேசிய (வர்ஜன) இயக்கம் ... 302
7. ஒத்தால் வாழலாம் ... 304
8. பஹிஷ்கார தினம் ... 308

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதி : ஆறு

மொழிபெயர்ப்பு

1. இந்தியாவின் வறுமை
(தாதாபாய் நௌரோஜி
நூலின் மொழிபெயர்ப்பு) ... 329
2. ஸ்ரீமான் திலகரைப் பற்றி
மிஸ்டர் நெவின்ஸன் கூறுவது ... 357
3. ஸ்ரீமான் அரவிந்த கோஷ் ... 363

பகுதி : ஏழு

மதிப்புரை

1. நெல் சாகுபடி ... 367
2. ராஜ பக்தி ... 371
3. 'இண்டஸ்ட்ரீ' ... 373
4. ருதுவான பிராமணப் பெண்களின்
விவாகம் சாஸ்திரீயமானது ... 375
5. பிழைக்கும் வழி ... 378
6. ஹிந்து ரஸாயன சாஸ்திரம் ... 381
7. ஸங்கீதானுபவ ஸார ஸங்கிரகம் ... 384
8. கிரிமினல் வியவஹார ஸங்கிரஹம் ... 385
9. வைசிய குல விளக்கம் ... 387
10. எல்லோரும் வாசிக்கத்தக்க
ஓர் முக்கிய அற்புத புஸ்தகம் ... 389

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதி : எட்டு

அயல்நாடுகள்

1. ஜப்பான் சென்று திரும்பி யிருக்கும் தெலுங்கு வாலிபராகிய மிஸ்டர் ராமராவ் ... 393
2. மஞ்சள் விபத்து ... 400
3. பாரிஸில் இந்தியர்களின் கூட்டம் ... 407
4. 'ருஷிய - ஜப்பானிய யுத்தம்' முதற் பருவம் - படை சேகரித்தல் ... 411
5. பொருட் சுதந்திரத்திற்கு ஜப்பானியர் படும் பாடு ... 415
6. ருஷியாவும், பிரிடிஷ் இந்தியாவும் ... 417
7. குடியரசுப் பண்டிகை ... 421

பகுதி : ஒன்பது

பல்சுவை

1. தஸரா பண்டிகை ... 429
2. புதிய வருஷத்துப் பட்டங்கள் ... 436
3. ஸ்ரீ காளி சரண பானர்ஜியின் மரணம் ... 437
4. குமார ரணஜித் ஸிம்ஹஜி ... 439
5. தேசாபிமானமும் மதாபிமானமும் ... 441
6. நமது ஸ்திரீகள் ... 443
7. யூனிவர்ஸிடி பரீக்ஷை ... 449
8. ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை கோயமுத்தூர் ஜெயில் கலகத்தைப் பற்றிச் சொல்லிய சாக்ஷியம் ... 451

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

9. தற்காலத்துப் புது நாகரீகப் படிப்பிலுள்ள சில அநுகூலங்கள் ... 463
10. பஞ்சம்! பஞ்சம்! ... 466
11. திலகர் என்ன செய்கிறார்? ... 468
12. ஸ்வீகார ராஜா ... 470
13. லா. கர்ஸனுக்கு ஓர் புது சிஷ்யன் ... 472
14. இராமமூர்த்தி யவர்களின் ஆச்சரிய பலம் ... 474
15. சர்க்கரை-தொத்து வியாதிகளை அண்டாமல் செய்தல் ... 476
16. பாரத தர்ம மஹா சபை ... 478
17. சென்னப் பட்டணத்தில் பிராமண ரல்லாதார் சபை ... 480
18. புதிய கிளர்ச்சி ... 482
19. ஸ்ரீ P. கெர்ஷாஸ்ப் I.C.S. ... 485
20. பாரத ஸங்கீதம் — இதன் எதிர்கால நிலை ... 489
21. தொழில் நிறுத்திவிடுதல் ... 491
22. ஆப்கானிஸ்தானத்தில் ராணுவப் பயிற்சி ... 496
23. மாணாக்கர்களைப் பற்றி ஜஸ்டிஸ் முகர்ஜீ ... 498

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்புகள்

1. ஹிந்துஸ்தான் ஸ்வதந்திர யுத்த சரித்திரம் ... 500

2. அசுவினி குமார தத்தர் முதலியவர்களின் ஸ்திதி ... 509

3. பண்டிதர் ஸதீஷ் சந்திர சடர்ஜி ... 515

4. ஸ்ரீமான் சியாம ஸுந்தர சக்ரவர்த்தி ... 517

5. சியாமஜி கிருஷ்ண வர்மாவின் கடிதங்கள் ... 521
   (1) பாரிஸில் இந்தியர்களின் பொய்த் துராலோசனை
   (2) கிருஷ்ண வர்மாவின் மறுப்பு- ஓர் விசித்திரமான கடிதம்

6. ஸ்ரீமான் சியாமாஜி கிருஷ்ண வர்மா ... 531

7. சென்னை ஸ்ரீமான் எதிராஜ் சுரேந்திரநாத்ஆரியரின் வழக்கைப் பற்றிய சில குறிப்புகள் ... 536

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந் நூலில் கையாளப் பெற்றிருக்கும் எழுத்துக்கள் பற்றிய விளக்கம்

1978ஆம் ஆண்டில் தமிழக அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ள எழுத்துக்கள் இந்த நூலில் பின்பற்றப் பெற்றுள்ளன.

சான்றாக விளங்கினூர் என்பது 'விளங்கினார்' என்றும், 'தலைவர்' என்பது 'தலைவர்' என்றும் அச்சிடப்பெற்றுள்ளன.

	நடைமுறையில் இருந்த எழுத்துக்கள்	சீர்திருத்தம் பெற்ற எழுத்துக்கள்
1	ணு	ணா
2	று	றா
3	னு	னா
4	ணை	ணை
5	லை	லை
6	ளை	ளை
7	னை	னை
8	ெணு	ெணா
9	ெறு	ெறா
10	ெனு	ெனா
11	ேணு	ேணா
12	ேறு	ேறா
13	ேனு	ேனா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதி : 1

மொழி — இலக்கியம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

□

இப் பகுதியில் தமிழ் மொழியின் சிறப்பு, தொன்மை, வளர்ச்சி—இவை பற்றிய கருத்துரைகள் இடம் பெற்றுள்ளன.

நம் தாய்மொழியான தமிழ்மொழியை வளர்ப்பதன் பொருட்டு அனைவரும் முன் வரவேண்டும் என்கிற கருத்தும், தென்னாட்டு மொழிகளுக்கு ஒரே லிபியைப் பரப்பவேண்டும் என்கிற கருத்தும், தமிழ்நாட்டு ஜனத் தலைவர்கள் தமது தாய் மொழியைப் புறக்கணித்து விட்டு, அந்நிய மொழியான ஆங்கிலத்தைப் போற்றுவது சரியில்லை என்கிற கருத்தும், இப் பகுதியில் காணப்பெறும் கட்டுரைகளில் இனிதே விளக்கப் படுகின்றன.

□

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'கன்னி'த் தமிழ்

[விடுதலைப் போர்க் களத்தில் தமிழ்மொழியையே வலிமை மிக்க போர்க் கருவியாகப் பயன்படுத்த முடியும் என்பதை நிரூபித்துக் காட்டிய அதே நேரத்தில் தமிழ் மீது பற்றுக் கொள்ளவும் வேண்டும் என்று படித்த மக்களுக்கு அறைகூவல் விடுத்தவர் பாரதி.

''தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்''

என்றும் பாடியவர், பாரதி.

தமிழ் மொழியின்பால் பாரதி அளவற்ற காதல் கொண்டிருந்தார். தமிழ் மொழி பற்றி எவரேனும் சிறப்பாகக் கருத்துத் தெரிவித்தால், அதை வெளியிட்டு மகிழ்வார், பாரதி.

இந்தக் கட்டுரையில் தமிழ்பற்றி உ.வே.சாமிநாத அய்யர் அவர்கள் திருவாரூரில் பேசியதைப் பாராட்டிய செய்தியைக் காணலாம்.]

தமிழ்ப் பாஷை இறந்து போய்விடுமென்றும், நமது நாட்டில் எல்லா பாஷைகளுக்குமே பிரதியாக இங்கிலீஷ் பாஷை ஏற்படுமென்றும் நம்பிய மூடர்கள் சுமார் 10 வருஷங்களின் முன்பு நமது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஜனங்களிலே பலர் இருந்தார்கள். இப்போதும் அந் நம்பிக்கை யுடையவர் ஆங்கிலேயர்களிலே அனேகர் இருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள பாஷைகளெல்லாம் மடிந்துபோய், அவற்றினிடத்திலே இங்கிலீஷ் நிலவி வருமென்பது இவர்களுடைய எண்ணம். இஃதிவ்வா றிருப்ப, மகா வித்துவான் ஸ்ரீ.உ.வே. சாமிநாதய்யர்[1] அவர்கள் சில தினங்களின் முன்பு இவ் விஷயத்தைப் பற்றிப் பேசியபோது பின் வருமாறு கூறி யிருக்கிறார் :

> "அன்னியர்களைக் குறை கூறிப் பயனில்லை. தமிழ்ப் பாஷையின் செல்வங்களை யெல்லாம் தக்கவாறு பயன்படுத்திக் கொள்ளாத குற்றம் நம்மவர்களையே சார்ந்ததாகும். எவ்வாறாயினும் நமது தாய்மொழி ஸாமானியத்தில் இறந்துவிடக் கூடியதன்று. பெரியோர்கள் இதனைக் "கன்னி"த் தமிழ் என்று பெயரிட்டழைத்திருக்கிறார்கள். இது எக் காலமும் வனப்பும் இளமையும் மாறாத கன்னிகை யாகும். இதற்கு முதுமையே கிடையாது. மரணமு மில்லை."

கன்னித் தமிழ் மொழியை முற்காலத்தில் ஆதரித்து வளர்த்தவர்களின் பெருமையைப் பற்றி ஸ்ரீ சாமிநாதய்யர் பல அரிய விஷயங்கள் பேசினார். ஆசான், சீடன் என்போர் பண்டைக் காலத்தில் எங்ஙனம் ஒழுகி வந்தா ரென்பதை இனிது விளக்கினர். இறுதியில் திருவாரூரைப்[2] பற்றித்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ் நூல்களிலே தாம் செய்த ஆராய்ச்சியினின்றும் விளங்கிய பெருமைகளை வகுத்துக் கூறினார். தமிழ் வளர்ப்பதன் பொருட்டு, முற்காலத்தில் இடத்துக் கிடம் "திருக் கூட்டங்கள்" அமைக்கப் பட்டிருந்தன. அவற்றுள்ளே புகழ் மிஞ்சிய திருக் கூட்டமொன்று திருவாரூரிலே யிருந்தது. இலக்கண விளக்க நூலாசிரியராகிய ஸ்ரீ வயித்தியநாத தேசிகர் இத் திருவாரூர்க் கூட்டத்திலே ஓர் அவயவியாக விளங்கினர்.

गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

பசுங் கன்றைக் கொன்றதின் பொருட்டுத் தன் சொந்த மகனை உருளையின் கீழே போட்டு மேலே தேரோட்டிய மனுநீதி கண்ட சோழன்[3] முதலிய மேலோர் திருவாரூரிலே வாசம் புரிந்தவர்கள் என்பதைத் தற்கால அதிகாரிகளின் நீதியைக் கண்டு மகிழ்ந்திருக்கும் அவ்வூரினருக்கு ஸ்ரீ அய்ய ரவர்கள் நினைப்பூட்டினர்.

100836

பின்னர், அவ்வூர்ச் சிறப்புகளைப் புராணக் கதைகளினின்றும் பல திருஷ்டாந்தங்கள் கூறித் தெளிவாக்கி, அவ்வூரார் தமது பண்டை மாண்புக்குத் தக்கவாறு வாழ்வதற்கு முயற்சிகள் செய்ய வேண்டுமென்பதை வற்புறுத்தினர்.

இவ் வுபதேசத்தைத் திருவாரூர்ப் பிறந்தார்கள் மட்டுமே யன்றித் தமிழ் நாட்டிலுள்ள எல்லா மக்களும் மனத்தே கொண்டு நலமுறுவாராக!

(இந்தியா : 7.11.1908. பக். 3)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. உ.வே. சாமிநாதய்யர் [1885—1942] :

"தமிழ்த் தாத்தா" என்று போற்றிப் பாராட்டப் பெறும் டாக்டர் மஹாமஹோபாத்தியாய உ.வே. சாமிநாத ஐயரைத் தெரியாதவர்கள் இருக்கமுடியாது.

தமிழுக்கும் தமிழர்களுக்கும் ஐயர் செய்திருக்கும் தொண்டைத் தமிழ் அறிஞர் உலகம் ஒருமுகமாகப் பாராட்டியுள்ளது.

1906இல் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் சாமிநாத ஐயருக்கு 'மஹாமஹோ பாத்தியாய'ப் பட்டம் கொடுத்துப் பெருமைப்படுத்திய சமயத்தில் பாரதி எழுதிய வசனங்கள் வருமாறு :

"பலவகைத் தானங்களிலே நல்லறிவுத் தானமே விசேஷ முடையதென்று மேலோர் சொல்வார்கள். அழிந்துபோன ஆலயங்களை மறுபடி புதுக்கிக் கட்டிப் பிரதிஷ்டை புரிந்தோர், நெடுங்காலமாக நின்றுபோன அன்ன சத்திரங்களுக்கு மறுபடியும் உயிரளிப்போர், வறண்டு மண்ணேறிப் போய்க் கிடக்கும் தடாகங்களை மறுபடி வெட்டி நலம் புரிவோர் என்னும் பலவகையாரினும், மங்கி மறைந்து போய்க் கிடக்கும் புராதனப் பெருங் காவியங்களைப் பெருமுயற்சி செய்து திரும்ப உலகத்துக்கு அளிக்கும் பெரியோர்கள் புண்ணியத்திற் குறைந்தவர்க ளல்லர். மேலும், புகழ் நிலைக்குந் தன்மையில் மற்றெல்லோரைக் காட்டிலும் இவரே சிறந்தவ ராவார். பிரமஸ்ரீ உ.வே. சாமிநாத ஐயர் மேற்கூறப்பட்ட பெருந் தருமத்தை நன்கு புரிந்தவர்."

(சக்ரவர்த்தினி - பிப்ரவரி 1906)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"அபிதான சிந்தாமணி' நூல் உ.வே. சாமிநாத ஐயரைப் பற்றித் தரும் தகவல் வருமாறு :

"இவர் கும்பகோணம் உத்தமதான புரத்திருந்த வேதியர். திரிசிரபுரம் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்களிடம் தமிழ் நூல்களைக் கற்றவர். இலக்கிய - இலக்கணங்களில் வல்லவர். இவரதுதவியாற் பலர் தமிழிலக்கிய வல்லவர்களாயினர்." (பக். 621)

கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்,

"டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் தமிழ்த் தாய்க்குச் செய்திருக்கும் தொண்டுகளைப் பற்றித் தெரியாதவர்கள் இருக்க முடியாது. அநேகர் பெயரளவில் மட்டும் கேள்விப் பட்டிருந்த பழந்தமிழ் இலக்கியங்களை அவர் கண்டுபிடித்து, அச்சேற்றித் திருத்தமான உயர்ந்த பதிப்புகளாக வெளியிட்டார்...

மகாமகோபாத்தியாய சாமிநாதய்யர் பழைய தமிழ்ப் பண்டிதர்களில் பழுத்துக் கனிந்த தமிழ்ப் பண்டிதர்; நவீன இலக்கிய ஆராய்ச்சியாளரில் தலை சிறந்த ஆராய்ச்சியாளர்; நவயுகத் தமிழ் எழுத்தாளரில் முதன்மையான எழுத்தாளர்."

(பாரதி பிறந்தார்—பக். 135;138)

என்று சாமிநாத ஐயர் அவர்கள் குறித்து எழுதியுள்ளதை இங்கு நாம் நினைக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

2. **திருவாரூர் :**

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது; சைவத் திருப்பதிகளில் சிறப்பு மிக்கது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய சைவ சமயக் குரவர்கள் பாடல் பெற்ற தலம் இது. பிறக்க முத்தி தருந் தலம் என்பதும் மரபு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருப்பக்கிளர் திரு. சு.அ. இராமசாமிப் புலவர் என்பார் திருவாரூர் பற்றி,

"………திருமகள் வழிபட்ட பதி யாகையால் திருவாரூர் என்று பெயர் பெற்றது என்பர். சுந்தரர் பரவையாரை மணம்புரிந்து வாழ்க்கை நடத்திய இடம். திருமகளால் உண்டாக்கப்பட்ட கமலாலயம் என்னும் பெரிய தடாகம் இங்கு உண்டு. திருமாலின் மார்பிலே இருந்த சோமாஸ்கந்த மூர்த்தியாகிய தியாகராசரை முசுகுந்தச் சக்கரவர்த்தி இந்திரனிடமிருந்து பெற்று வந்து எழுந்தருளச் செய்த பதி……

நமிநந்தியடிகணாயனார் நீரினாலே விளக்கெரித்த பதி. இவ்வூரின் சிறப்புக்களைத் திருவாரூர்ப் புராணம், தியாகராசர் லீலை ஆகியவைகள் விளக்கமாகக் கூறும்."

[சிறப்புப் பெயரகராதி—பக். 343]

என்றிவ்வாறு சிறப்புற எழுதி யுள்ளார்.

3. மனுநீதி கண்ட சோழன் :

'மனுச்சோழ'னை மனுநீதி கண்ட சோழன் என்றும் கூறுவார்கள். இவன் ஆட்சி புரிந்திருந்த இடம் திருவாரூர்ப் பதியாகும்.

சிறப்புப் பெயரகராதியை எழுதிய இராமசாமிப் புலவர் தரும் செய்தியாவது :-

"……மனு என்பவர் வகுத்த அரசியல் முறைப்படி இவன் அரசாட்சியைச் செய்தபடியால் இவ்வாறு பெயருண்டாகியது. தேவர்கள் இவனுடைய நீதி முறையை ஆராய்வான் புகுந்தகாலையில், தன் மகனைத் தேர்க்காலில் அரைத்தான். இதனால் அமரர்கள் வியந்து இவனுக்கு நல்லருள் செய்து சென்றனர்.

(சிறப்புப் பெயரகராதி—பக். 542)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏக லிபி விஸ்தார பரிஷத்

[ஒரே லிபியைப் பரப்பவேண்டுமென்ற சபை]

[நாம் வாழும் இந்தியாவில் பல மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. ஒரே மாதிரியான லிபியைப் பரப்ப வேண்டுமென்ற கொள்கையை முன்வைத்துக் கல்கத்தா நகரில் "ஏக லிபி விஸ்தார பரிஷத்" என்பதாக ஒரு சபை தோன்றியது. நாகர லிபியையே பொதுவாக்க வேண்டும் என்ற முயற்சியில் மேற்கண்ட சபை ஈடுபட்டபோது, இக் கட்டுரை எழுதப்பட்டது.

மற்றும், தென்னிந்திய பாஷைகளுக்கு மலையாளம் அல்லது தெலுங்கு லிபியைப் பயன்படுத்துவதற்கு முயற்சி செய்தல் நன்மை தரும் என்றும் இக் கட்டுரையில் பாரதி தம் நம்பிக்கையைப் புலப்படுத்தியிருக்கிறார்.]

இந்தியா முழுதும் பாஷைகள் வெவ்வேறாக இருப்பினும், லிபி ஒரே மாதிரியாக இருக்கவேண்டுமென்ற நோக்கமுடைய மேற்படி சபை கல்கத்தாவிலே இருக்கிறது. மேற்படி லிபி நாகர லிபியாகவே இருக்க வேண்டுமென்பது மேற்படி சபையாரின் எண்ணம். இச் சபையார் "பெங்காளி" பாஷையிலே எழுதப்பட்ட சில நூல்களை நாகர லிபியில் அச்சிட்டு நமது பார்வைக் கனுப்பியிருக்கிறார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தென் தேசப் பாஷைகளுக்கு நாகர லிபி போதாதென்ற நமது அபிப்பிராயத்தை முன்னமே தெரிவித்திருக்கிறோம்.* மஹாராஷ்ட்ரம், ஹிந்தி, குஜராத்தி, பஞ்சாபி, பெங்காளி, உரியா முதலிய வட நாட்டுப் பாஷைகளுக்கெல்லாம் நாகர லிபியே போதும்.

ஆனால், எ, ஒ, ற, ன, ழ முதலிய எழுத்துக்களில்லாத நாகர லிபியைத் தமிழ் முதலிய பாஷைகளுக்கு உபயோகித்தல் மிகவும் கஷ்டமாகும். ஆதலால், தென் நாட்டுப் பாஷைகளுக்கு மலையாளம் அல்லது தெலுங்கு லிபியை உபயோகிக்க முயற்சி புரிவது நன்மை பயக்குமென்று நம்புகிறோம். தமிழ் லிபியிலே 'பஞ்ச வர்க்க' எழுத்துக்களில் 3 வர்க்கம் இல்லாதபடியால் இது தெலுங்கு, மலையாளம் முதலிய பாஷைகளுக்குப் பயன்படமாட்டாது. ஏற்கெனவே, கன்னடம் சிறிது மாறுபட்ட தெலுங்கு லிபியிலேதான் எழுதப்படுகின்றது.

(இந்தியா : 8.9.1906—பக். 11)

★

---

* இப்படி தெரிவிக்கப்பட்டுள்ள செய்தியைத் தெரிந்து கொள்ள 'இந்தியா' பத்திரிகை தொடர்ச்சியாகக் கிட்டாமை காரணமாக இயலவில்லை.

—பதிப்பாசிரியர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ்நாட்டு ஜனத் தலைவர்களும் தமிழ்ப் பாஷையும்

[இந்தக் கட்டுரை வட நாட்டில் உள்ள தேசத் தலைவர்கள் கொண்டுள்ள மொழிப் பற்றையும், தமிழ் நாட்டு ஜனத் தலைவர்கள் கொண்டுள்ள மொழிப் பற்றையும் பற்றிப் பாரதி சில வார்த்தைகள் சொல்லி, அதன் பின் தம் நண்பராகிய மகேச குமார சர்மா அவர்கள் 'சுதேச மித்திர'னில் எழுதிய கட்டுரையைப் பிரசுரம் செய்ததை எடுத்துக் காட்டுகின்றது.

தமிழ்மொழி எல்லாத் துறைகளிலும் மேம்பட்டு, சிறந்து விளங்கவேண்டும் என்பதே பாரதியின் குறிக்கோள். தமிழ்மொழி வளர்ச்சி பெறுவதற்கான ஆக்க பூர்வமான முயற்சிகளிலும் நம்மவர்கள் ஈடுபடவேண்டும் என்பதுவும் பாரதியின் எண்ணங்களில் ஒன்று. தம் கருத்துக்கு ஆதரவளிப்போர்களைப் பாரதி மதிப்பவர் என்பதை இக் கட்டுரை இனிது புலப்படுத்துகின்றது.]

வட நாட்டிலே லாலா லஜபத்ராய்,[1] சுரேந்திர நாத் பானர்ஜி,[2] பால கங்காதர திலகர்,[3] விபினசந்திர பாலர்,[4] அசுவினி குமார தத்தர்,[5] முதலிய ஜனத்தலைவர்க ளெல்லாம், அன்னிய தேச வஸ்துக்களையும் சர்க்கார் உத்தியோகங்களையும் பஹிஷ்காரஞ் செய்ய வேண்டுமென்று நெடு நாளாகச் சொல்லி வருகிறார்கள். ஆனால் இவர்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ளெல்லாம் திறனற்ற மனிதர்களாகையால் இவர்களுடைய நோக்கங்கள் பாதி பலித்தும் பலிக்காமலு மிருக்கின்றன.

ஆனால், நமது தமிழ்நாட்டு ஜனத் தலைவர்களோ மஹா சூரர்கள். இவர்கள் கைக்கொண்டிருக்கும் பஹிஷ்கார விரதம் சிறிதேனும் பங்கமில்லாமல் நடந்து வருகின்றது. நமது தமிழ் நாட்டு ஜனத் தலைவர்கள் தமிழ்ப் பாஷையை பஹிஷ்காரம் செய்துவிட வேண்டுமென்று நிச்சயம் கொண்டிருக்கிறார்கள். இந்த விரதத்தை இவர்கள் சிறிதேனும் தவறில்லாமல் நிறைவேற்றி வருகிறார்கள். பெற்ற தாயை வீட்டை விட்டு வெளியே துரத்தி விடுவது நாகரிகமென்று சிலர் நினைப்பதுபோல இந்த ஜனத் தலைவர்கள் தாய்ப் பாஷையை பஹிஷ்காரம் செய்துவிட்டு, பொது உபந்நியாசம் முதலிய எல்லா விஷயங்களையும் அந்நிய பாஷையிலேயே நடத்துவது வெகு மேதாவித்தனம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய புத்திக் கூர்மையைப் பற்றி நமது நண்பராகிய மகேச குமார சர்மா[6] சுதேச மித்திரன்[7] பத்திரிகையில் எழுதி யிருக்கும் நேர்த்தியான குறிப்பின் ஒரு பகுதியைக் கீழே பிரசுரம் புரிகின்றோம்:—

கூடிய வரையில் நாம் விவஹாரங்களை நம் சுதேச பாஷையிலேயே நடத்திக்கொள்ள வேண்டுமென்ற அபிமானம் நமது பெரிய மனிதர்களுக்கும் இன்னும் உண்டாக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வில்லையே! என்னே பரிதாபம்! இன்னும் அநேகர் தாங்கள் தமிழரா யிருந்து தமிழ்ப் பாஷையில் சபைகளிலே நன்றாய்ப் பேசத் தெரியாமலிருப்பது தங்களுக்கு ஓர் அகௌரவம் என்று நினைக்கிறார்களில்லையே! கல்கத்தாவிலே ஸ்வதேசிய சர்வ கலாசாலை ஸ்தாபிக்க வேண்டுமென்று முயன்றபொழுது அதற்கு 4 லக்ஷம் ரூபாய் சகாயம் செய்வதாய் முன்வந்த ஸ்ரீயுக்த சுபோத சந்திர மல்லிக்[8] என்றவர் அப்பொழுது கூடியிருந்த நண்பர்களை நோக்கி (I am ashamed to admit that I am a product of our modern degenerate educational system unable to speak to you in our own mother tongue.) "இக் காலத்தில் வழங்கி வரும் இழிந்த கல்வி முறைப்படி கல்வி கற்ற யான் நம் சுய பாஷையில் உங்களுடன் பேச முடியாதவனா யிருக்கிறேனென்று ஒப்புக் கொள்ள வெட்கப்படுகிறேன்" என்று சொன்னார். அவ்வித வெட்க வுணர்ச்சி நம்மவருள் எத்தனை பேருக் கிருக்கின்றதோ?

* * *

தீபாவளி பண்டிகை சமயத்தில் ஸ்வதேசீய நிதிக்காகப் பணஞ் சேர்க்க வரும் தமிழ், தெலுங்கு மாணாக்கர்கள் வீட்டிலுள்ள இங்கிலீஷ் அறியாத ஜனங்களிடத்திலும் வைதீகரிடத்திலும் "நாஷனல் பண்டு" என்று விதேசீய (பரதேச) மொழியைப் பிதற்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிறார்களே யன்றி, 'ஸ்வதேசீய நிதி'' என்று வாயாரச் சொன்னால் எவ்வளவு செவிக் கினிமையா யிராது! ''புலியைப் பார்த்துப் பூனையும் சூடு போட்டுக் கொண்டது'' போல வங்காளிகளைப் பார்த்து நாமும் 'வந்தே மாதரம்' என்று சொல்லி விட்டால் மாத்திரம் போதாது. நமது நலமெனச் சொந்தம் பாராட்ட வேண்டும். அவ் விஷயத்திலும் வங்காளவாசிகளே நமக்குப் பிரதமாசிரியர் களா யிருந்து, தமது வங்காள பாஷையை ஸர்வோன்னதத்தைக்குக் கொண்டு வந்திருப் பதை நாம் நன்கறிய வேண்டும். சிறந்த தற்காலத்திய சுதேச பாஷைப் பத்திரிகைகள் எங்கே உள்ளன? வங்காளத்தில். இங்கிலீஷில் பி.ஏ.,எம்.ஏ., முதலிய பட்டம் பெற்ற புருஷர்களும் ஸ்திரீகளும் இங்கிலீஷில் தங்கள் வல்லமையைக் காட்டுவதே பெரிதென் றெண்ணாது, தங்கள் கல்வித் திறமையை யெல்லாம் சுய பாஷையின் அபிவிர்த்திக்கே தத்தம் பண்ணி வருகிற நாடு எது? வங்காளம். இங்கிலீஷில் எப்படியோ அப்படியே சுய பாஷையிலும் உபந்நியாசம் செய்யும் திறமை வாய்ந்த நாவலர் வாழும் நாடு எது? வங்காளம். தற்கால அபிவிர்த்திக்கேற்ற எண்ணங்களையும், ஸ்வதேசீய ஊக்கத்தை ஊர்ஜிதப்படுத்துவதற் கேற்ற கருத்துகளையும் நவீனகங்கள் (Novels) மூலமாகவும், நாடகங் கள் மூலமாகவும் புகட்டி வரும் நாடு எது?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வங்காளம். வங்காளத்திலே இப்பொழுது மேலோங்கி யிருக்கும் சுதேசீயக் கிளர்ச்சி யானது நேற்றுண்டான வங்காளத் துண்டிப்பின் பயனாய் ஏற்பட்டதன்று. அந்நாட்டில் இங்கிலீஷ் உயர்தரக் கல்வி ஏற்பட்ட சென்ற 50 வருஷ காலமாய் இந்தக் காரியம் மெதுவாய் நடந்து வருகின்றது. இதற்கு விதை போட்டவர் ராஜா ராம மோஹந ராயர்.[10] அதன் பின்னர் மகரிஷி தேவேந்திர நாத டாகூர்,[11] கேசவ சந்திரசேனர்[12] முதலிய மதோத்தாரகர்களும், ஈசுவர சந்திர வித்தியாசாகர்[13] முதலிய ஆசார சீர்திருத்த சிரோன்மணிகளும், மைநல மதுசூதன தத்தர்,[14] பங்கிம் சந்திர சட்டோ பாத்தியாயர்,[15] ஹேமசந்திர வந்தியோ பாத்தியாயர்,[16] தீனபந்து மித்திரர்,[17] ரவீந்திரநாத டாகூர்,[18] கிரீச சந்திர கோஷ்[19] முதலிய கிரந்த கர்த்தர்களும் தண்ணீர் வார்த்துப் போஷிக்கவே, அது பெரிய விருக்ஷமாய் இப்பொழுது வளர்ந்திருக்கின்றது. இவ்வளவும் அவர்களது தேச பாஷாபிவிருத்தி யாலேயே முக்கியமாய் நடந்திருக்கிறது. நாம் 'வந்தே மாதரம்'[20] என்று மாத்திரம் கத்துதல் போதாது. வந்தே மாதரம் என்ற கீர்த்தனம் முழுவதையும் நாம் பாடக் கற்றுக் கொண்டு, நமது ஹரிபஜனை காலங்களிலும், தீபாவளி சுதேசிய நிதி சேகர பஜனைகளிலும் அதைப் பாட வேண்டும். இன்னும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அநேகமான தேசாபிமான கீதங்களையும் நம் நாட்டுப் பாவலர்களைக் கொண்டு பாடுவித்து, அவற்றையும் பாட வேண்டும். அப்படி யெல்லாம் செய்தால்தான் சாதாரண ஜனங் களுக்கு உள்ளக் கிளர்ச்சி யுண்டாகும். இது கேவலம், என் மநோராஜ்யம் என்று நினைக்க வேண்டாம். வங்காளத்தில் இவை தினசரி காரியங்களா யிருக்கின்றன. இதற்கு இவ் வருஷம் காங்கிரசுக்குக் கல்கத்தாவிற்குச் சென்றவர்கள் சாக்ஷி கூறுவார்கள். ஆகையால் நாம் வீடுகளில் பேசும் பொழுதுகூட அநாவசியமாய் இங்கிலீஷ் பாஷை உபயோகித்து வருவதை நிறுத்த வேண்டும். சென்னையில் நடக்கும் ஒவ்வொரு பொதுக் கூட்டத்திலும் இங்கிலீஷில் பெரிய பட்டம் பெற்ற கனவான்கள் தமிழிலும், தெலுங்கி லுமே பிரசங்கிக்கத் தொடங்க வேண்டும். இங்கிலீஷ் தெரியாதவர்களுக்காகத் தமிழில் பேசுகிறோமென்று அவர்களிடத்தில் பரிதாபம் வேண்டாம். இங்கிலீஷ் அறிந்தவர்களும் சுதேசிகளே யாகையால், நம் சுய பாஷை யிலேயே பேசுவோம் என்ற பொறுமை நம் மனதில் குடிகொள்ள வேண்டும். இவ் வெண்ணமே உருக்கொண்டவர் ஸ்ரீயுக்த பால கங்காதர திலகர். இதுவே நமது பத்திராதிபர் எண்ணமும் என்பதற்கு அவர் தென் ஜில்லாக்களில் செய்த ஸ்வதேசீயத் தமிழ்ப் பிரசங்கங்களே சாட்சி பகருமாயினும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சென்னையில் தமிழபிமானம் விர்த்தியாவதற்கும், குறைந்தது மாசத்துக்கு ஒரு முறையாவது பொதுக் கூட்டங் கூடி அதில் மதம், ஜனாசாரம், ராஜ தந்திரம், கல்வி முதலிய விஷயங்களைப் பற்றி இங்கிலீஷில் பெருமை பெற்றிருக்கும் கல்விமான்களைக் கொண்டு பிரசங்கம் செய்வித்தல் சாத்தியமாகும்படி செய்வதற்கும், அதன் மூலமாய் இங்கிலீஷ் படித்தவர்களுக்கும், படியாதவர்களுக்கும் இப்பொழுதுள்ள தூரத்தைக் குறைத்து, அந்யோந்நியத் தன்மை உண்டாகும்படி செய்வதற்கும் நமது தேசாபிமான சிரோன்மணியாகிய பத்திராதிபர் ஸ்ரீ யுக்த ஜி. சுப்பிரமண்ய ஐயரவர்கள்[21] கங்கணங் கட்டிக் கொண்டாலன்றி முடியாதென்பதை என்னுடன் மித்திரனைப் படிக்கும் நண்பர்கள் யாவரும் ஒப்புக் கொள்வார்கள்.

(இந்தியா: 26.1.1907—பக். 7)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. லாலா லஜபத்ராய் (1865-1928):

‘பாஞ்சால சிங்கம்’ என்று புகழ்பெற்றவர். இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டு, இன்னுயிர் துறந்த உத்தமர்; ஸ்வதேசீயம், தேசீயக் கல்வி, அன்னியப் பொருள் பஹிஷ்காரம் என்கிற தேச பக்தி முறைமைகளிலே மிகுந்த அன்பு பாராட்டிய முன்னணித் தலைவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரத நாட்டின் ராஜநீதி விஷயங்களைப் பற்றி அயலார் அறிந்து கொள்ளும்வண்ணம் எடுத்துச் சொன்ன பெருந் தலைவர்.

பாரதநாட்டின் புன்மை போக்கும் பெருந்தொழிலில் தம்மைப் பிணைத்துக் கொண்ட லஜ்பத் ராய் அவர்களைப் பற்றிப் பாரதி பாடல்களால் நம்மவர்க்கு அறிமுகப்படுத்தினார். சமயம் வாய்க்கும்போதெல்லாம் அப் பெரியாரைப் பாராட்டப் பாரதி தவறினாரில்லை.

1907ஆம் ஆண்டு மே மாதம் லாலா லஜ்பத்ராய் கைது செய்யப்பட்டபோது 'இந்தியா' பத்திரிகையில் விரிவான செய்திக் குறிப்புக்களை எழுதி வெளியிட்டதுடன், அப் பெரியாரின் சரித்திரச் சுருக்கத்தையும் பிரசுரித்தவர், பாரதி.

> "......வீர பூமியிலே பிறந்து கல்வியிலேயும், செல்வத்திலேயும், கீர்த்தியிலேயும், மதிப்பிலேயும் நிகரற்றவராக விளங்கி வந்தவர் நமது லாலா லாஜ்பத்ராய். பரோபகாரி யென்றால், இவரையே கூறவேண்டும்.
>
> காங்கிரஸ் தலைவர்களிலே முதல் வகுப்பைச் சேர்ந்தவர். இவர் செய்து வந்திருக்கும் உபகாரச் செயல்கள் அளவில்லாதன."

(இந்தியா: 18. 5. 1907—பக். 2)

எனவும்,

> "......லௌகீக விஷயங்களிலே லாஜ்பத்ராய் எவ்வாறு திறமை கொண்டிருந்தாரோ, அதுபோலவே இலக்கியப் பயிற்சியிலேயும், ஞான சாஸ்திரங்களின் தேர்ச்சியிலேயும் உயர்ந்த புகழ் கொண்டவராக விளங்கினர். இடாலி தேசத்தைக் கொடுங் கோன்மையினின்றும் விடுவித்து ஸ்வராஜ்ய ஸ்தாபனம் செய்தவர்களாகிய மாஸினீ (Mazzini), காரிபால்டி (Garibaldi)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற மஹான்களின் சரித்திரத்தை லாலா லஜ்பத்ராய் உருது (ஹிந்துஸ்தானி) பாஷையிலே எழுதியிருக்கின்றார். மகமதிய ராஜாக்கள் கொடுங்கோன்மையிலே விருப்பங் கொண்ட காலத்தில் அவர்களது ஹிம்ஸையினின்றும் நாட்டை விடுவித்து, மஹாராஷ்ட்ர ஸ்தாபனம் செய்த சிவாஜி மஹாராஜாவின் திவ்விய சரித்திரத்தை ஹிந்துஸ்தானியிலே எழுதி உபசரித்திருக்கின்றார். ஆரிய ஸமாஜத்தின் ஸ்தாபனாசார்யராகிய மஹரிஷி தயாநந்த ஸரஸ்வதியின் சரித்திரமும், ஸ்ரீ கிருஷ்ண பகவானது சரித்திரமும் இவரால் எழுதப் பட்டிருக் கின்றன. இதன்றியும், இங்கிலீஷ் பாஷையிலும், பஞ்சாபி பாஷையிலும் பலர் அறிய உபந்நியாஸங்க ளெழுதி, பிரசித்தி பெற்றிருக்கின்றார். 1888-ம் வருஷத்திலேதான் அலஹாபாத்திலே நடந்த காங்கிரஸ் சபைக்கு வந்து இவர் ராஜாங்க விசாரணைகளில் பஹிரங்கமாகத் தலையிடத் தொடங்கினார். அது முதலாக ராஜநீதி சம்பந்தமான விஷயங்களிலே இவர் ஓயாது கவனம் செலுத்தி வருகின்றார்.

(இந்தியா : 25.5.1907 - பக். 3-4)

எனவும் பாரதியார் எழுதியதை இங்கே நினைவுகூர்க.

லாலா லஜ்பத்ராய் அவர்களின் 'Young India' நூலின் தமிழ்ப் பதிப்பு 1937இல் பதிப்பானபோது, அதன் பதிப்பாசிரியரான திரு. பி.எஸ். குமாரசாமிராஜா அவர்கள்,

"தாய்நாட்டின் விடுதலைக்காக லஜபதிராய் அவர்கள் பட்ட துன்பங்களுக்கு ஓரளவில்லை என்று சொல்லலாம். 1907-ம் வருஷத்தில் அவரை அரசாங்கத்தார் நாடு கடத்தினார்கள். அச் சமயம் அவருடைய வாய் மொழியாக நமது சுப்பிரமண்ய பாரதியார் பாடிய கவிதையில்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'தொண்டுபட்டு வாடுமென்றன் தூய திருநாட்டில்
கொண்டு விட்டங் கென்னையுடன் கொன்றாலும்
இன்புறுவேன்'

என்று கூறியுள்ளார். இக் கவிதையில் காணும் மனோரதம் லஜபதியின் வாழ்க்கையில் நிறைவேறியது. 1928-ம் ஆண்டில் சைமன் கமிஷன் லாகூருக்கு வந்த போது, பகிஷ்கார ஊர்வலத்தின் முன்னணியில் லஜபதிராய் சென்று, போலீஸ் அதிகாரிகளின் தடியடியை மார்பில் தாங்கி நின்று, அதன் பயனென்றே சொல்லக்கூடியவாறு உயிர் துறந்த சம்பவம் அனைவரும் அறிந்ததே யாகும்''

(யுவ பாரதம்—பக். 1)

என்று லாஜ்பத்ராயின் வீர மரணம் பற்றிக் குறிப்பிட்டு உள்ளார்.

2. சுரேந்திர நாத் பானர்ஜி (1848-1925) :

...'பெங்காளத்தைக் கிரீட தாரணமின்றி ஆளும் ராஜன்' என்று சொன்னவுடனே, அது சுரேந்திர நாத் பானர்ஜிதா னென்று அனைவரும் அறிந்து கொள் வார்கள்''

(இந்தியா : 22. 9. 1906—பக்.4)

என்று நெஞ்சாரப் போற்றிப் பானர்ஜியைப் பாரதி நினைவுகூர்வார்.

சுரேந்திர நாத் பானர்ஜி ஆரம்ப காலந்தொட்டே வங்கத்தின் பொதுவாழ்வில் ஈடுபட்டுப் பணியாற்றியவர்; நாவன்மை மிக்கவர்; இவருடைய பேச்சுத்திறமை உலகப் பிரசித்திப் பெற்றது; காங்கிரஸின் வளர்ச்சிக்காகப் பெரிதும் உழைத்தவர். 1895 ஆம் ஆண்டின் புனா காங்கிரஸ் மகாசபைக்கும், 1902 ஆம் ஆண்டின் ஆமதாபாத் காங்கிரஸ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மகாசபைக்கும் தலைமை தாங்கிய பேறுடையவர்; பத்திரிகையாளர்; வங்கப் பிரிவினை சமயத்தில் இவருடைய செல்வாக்கு உச்ச கட்டத்தை யடைந்தது. சிறிது காலம் ஆங்கிலப் பேராசிரியராகவும் பணியாற்றியு முள்ளவர்.

தன்னலம் கருதாமல் நாட்டிற்கு உழைத்தவரான சுரேந்திர நாத் பானர்ஜி அவர்களைக் குறித்து,

"பெங்காளப் பிரிவினை நாள்முதல் சுதேசியத்தில் அதிக ஊக்கங்கொண்டு சிறு பிள்ளைக்கு நல் உபதேசங்கள் செய்து அவர்களை நல்வழியில் விடுதலிலும், வயது வந்தவருக்குத் தாங்கள் நடந்து கொள்ள வேண்டிய வழியையும், தாய் நாட்டுக் கடமைகளையும் கல்லும் கரையுமாறு இரவும் பகலும் ஓயாமல் உபதேசித்து வரும் சுரேந்திர நாத் என்னும் மகானை உருத் தெரியாப் பிள்ளைகளும் அறிந்திருக்கு மெனில், பெரியோரை என் சொல்வது? நமது நாட்டில் சுதேசிய விதையிட்டு, அவ் வயலின்கண் குடிலிட்டுக் கொண்டு இடைவிடாது காப்பவர் இம் மகா னென்பதை யாவரும் மறுக்கார். தன் குல நன்மையைக் கருதி இனி யான் விவாஹம் புரியேனென விரதங் கொண்ட அப் பீஷ்மரைப் போலவே இம் மகானும் தான் எத்தகைய துன்பத்திற் காளாயினும் எத்தனை தரம் கைது செய்யினும் தன் தாய் நாட்டு நன்மையைத் தேடி. சுதேசீயம் செழித்துக் கிளை விட்டு, பழம்தரும் அளவும் யான் காத்து நிற்பவனெனக் கங்கணம் கட்டி யிருக்கிறார்."

(இந்தியா : 18.8.1906—பக். 7)

என்றிவ்வாறும் பாரதி சொற்சித்திரம் தீட்டிக் காட்டினார்.

1925இல் சுரேந்திர நாத் பானர்ஜி காலமானபோது பிரபல நாவலாசிரியர் திரு. அ. மாதவையா அவர்கள்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"........இவர் இந்தியப் பழம் பெருமக்களில் ஒருவர். சத்தியேந்திர நாத தாகூர், உரோமேச சந்திரதத்தர் - இவர்களுடன் ஐ.ஸி.எஸ். பரீக்ஷையில் தேறி, அஸிஸ்டண்ட் கலெக்டரானார். அந்த உத்தியோக நிருவாகத்தில் தப்பு தஸ்தாவேஜுக்குக் கையொப்ப மிட்டதற்காக வேலையினின்றும் நீக்கப்பட்டார்; இதன் உண்மைக் காரணம் வேறென்பர். அப்பால் இவர் கல்வி போதனை முயற்சியைக் கைக்கொண்டு கல்கத்தாவிலே சிறந்த காலேஜின் தலைவராக விளங்கினார்; 'வங்காளி' பத்திரிகையையும் ஸ்தாபித்து நடத்தி வந்தார். இந்தியன் நாஷனல் காங்கிரஸின் மூல புருஷர்களில் ஒருவரா யிருந்தது மன்றி, ஆண்டு தோறும் அதன் கூட்டத்தில் பேசும் வாக்கு வல்ல மேதாவிகளில் மிகச் சிறந்து விளங்கினார். இந்தியர் களின் உரிமைகளுக்காக இவர் செய்த போராட்டங் களைக் கணக்கிடுவது எளிதன்று ... இளமையிலேயே இவர் துரைத்தனச் சேவகத்தை நீங்கினது நமது நாட்டின் நற்கால மென்றே கூறலாம்"

(பஞ்சாமிர்தம் 1925—பக். 384)

என்று குறிப்பு எழுதினார்.

3. பால கங்காதர திலகர் (1856-1920):

"சுயராஜ்யம் எமது பிறப்புரிமை; அதை அடைந்தே தீருவோம்" என்று முழக்கமிட்ட மராட்டிய தேசபக்தி திலகம்; மக்கள் மனத்தில் தேசபக்திப் பேரெண்ணங்களை ஊன்றப் பாடுபட்ட தன்னலமற்ற தலைவர்.

நாட்டுப் பற்றுடன் மொழிப் பற்றையும், துணிவு, பெருமை ஆகிய நற்பண்புகளையும் வளர்க்க முயன்ற பெருந்தலைவர்களுள் திலகருக்குள்ள ஸ்தானம் தனிப் பெருமை வாய்ந்தது. பத்திரிகை உலகிலும் கொடி கட்டிப் பறந்தவர்; மேடைப் பேச்சிலும் வல்லவராகத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திகழ்ந்தவர். விக்கிரக ஆராதனையில் மிகவும் பற்றுள்ளவர். சிவாஜி உற்சவம், கணபதி பூஜை - ஆகியவற்றை மீளவும் நாட்டு மக்களுக்கு நினைவூட்டி, அவற்றின் வாயிலாகத் தேச பக்திக் கனலை வளர்த்த மூத்த தலைவர்.

1908இல் ராஜத் துரோகக் குற்றம் சாட்டி, திலகர் நாடு கடத்தப்பட்ட நிலையில் சிறைக் கோட்டத்தில் வாசம் செய்ய நேர்ந்த காலத்தும் நேரத்தை வீணாக்காமல் 'கீதா ரகசியம்' என்னும் பெரு நூலை எழுதிய பெருமையும் திலகர் பெருமானைச் சாரும்.

சுதேசிய இயக்கத்திற்குப் புத்துணர்ச்சி யளித்த திலகர் பிரான் 1916இல் தம்முடைய அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவின்போது, பொதுமக்கள் அளித்த காணிக்கையான ஓர் இலட்ச ரூபாயைப் பொதுநலப் பணிக்கே ஈந்து விட்டார்.

பாரதி தம் அரசியல் குருவாகத் திலகரையே வரித்துக் கொண்டார். பாடல்களாலும், வசனங்களாலும் தம் குரு பக்தியைப் பாரதி புலப்படுத்தி யுள்ளார். திலகரின் சொற் பொழிவுகளைச் சொற்சுவையுடன் மொழிபெயர்த்து வெளி யிட்ட தன்மையிலும் பாரதிக்குச் சிறப்புண்டு. இதே நூலில் பிறிதோரிடத்தில் திலகரைப் பற்றி நெவின்ஸன் எழுதிய நூலில் இடம் பெற்ற பகுதியைப் பாரதி மொழிபெயர்த்து வழங்கி யுள்ள பகுதியைக் கவனத்துடன் படிக்க வேண்டு கிறோம்

"........திலகர் இந்த தேசத்தினிடம் வைத்திருக்கும் அபிமானத்தையும், அவர் அதன் பொருட்டு அடைந் திருக்கும் கஷ்டங்களையும் விரித்துப் பேச வேண்டு மென்றால், நமது பத்திரிகை முழுமையும் இடம் போத மாட்டாது. ஆரம்பத்தில் இவருக்கு கவர்ன்மென்டார் ஒரு ஸப்ஜட்ஜி வேலை கொடுப்பதாகச் சொல்லிய போது, இவர் அதனை விஷமாக எண்ணி வேண்டா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மென்று மறுத்துவிட்டார். 1897-ம் வருஷத்திலே பம்பாய் மாகாணத்து மூட அதிகாரிகள் இவரைப் படுத்திய பாட்டை யெல்லாம் நினைக்கும்போதே மனம் பதறுகின்றது. அதற்கப்பால் இவர்மீது ஒரு பொய்க் கேஸ் கொண்டு வந்தார்கள். அதனால் இவருக்கேற் பட்ட கஷ்ட நஷ்டங்கள் வரம்பில்லாதவை யாகும். இவற்றை யெல்லாம் இப்போது நினைப்பூட்டுதல் அவசியமில்லை.

இந்த மஹான் நனவிலும், கனவிலும் பாரத தேசத்தின் க்ஷேமத்திற்கும், பெருமைக்கும், சுயாதீனத் திற்கும் பிரார்த்தனை புரிந்து வருகிறார். திலகர் சாமானியமாகத் தேசாபிமானிகளென்று சொல்லித் திரியும் கூட்டத்தாரைச் சேர்ந்தவ ரல்லர்......சுதேசீய தர்மத்துக்கு பிரதம குருவாக ஸ்ரீ திலகரைக் கருதலாம்)

(இந்தியா : 14.7.1906—பக். 6.)

என்று 'இந்தியா' இதழில் பால கங்காதர திலகரைப் பற்றி எழுதியுள்ளார், பாரதி.

4. விபினசந்திர பாலர் (1858-1932):

வங்கத்தின் முடிசூடா மன்னவர் எனத் திகழ்ந்த பாலர், வங்க மறுமலர்ச்சி இயக்கத்தின் சிற்பி எனவும் போற்றப்படு கின்றார்.

1886இல் காங்கிரஸ் மகாசபையில் உறுப்பினராகப் பதிவு செய்து கொண்டு, அதன் செயல்பாடுகளுக்காகப் பல்வேறு இன்னல்களையும் தாங்கிக் கொண்டு உழைத்த உத்தமத் தலைவர் இவர்.

இந்திய விடுதலைப் பணி, பத்திரிகைப் பணி, ஆசிரியப் பணி முதலான பல்விதமாயின பணிகளில் பெரும் ஈடுபாட்டுடன் பணிபுரிந்த சிந்தனையாளர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ்நாட்டு மக்களிடையே தேசீய எழுச்சியை ஊக்குவிக்க வேண்டி, பாலரைச் சென்னைக்கு வரவழைத்த பெருமையில் பாரதிக்கும் பங்குண்டு. சென்னை மாநகரில் பாலர் செய்த சொற்பொழிவுகள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தனவாகும்.

அரவிந்தர்மீது 1907ஆம் ஆண்டு நடைபெற்ற அலிப்பூர் வெடிக்குண்டு சதி வழக்கில் சாட்சி சொல்ல மறுத்ததால், சிறைத் தண்டனை பெற்றவர், பாலர்.

இங்கிலாந்து சென்று அந் நாட்டில் தாம் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இடங்களில் எல்லாம் இந்திய நாட்டின் பெருமை, இந்து மதத்தின் சிறப்பு, இந்திய அரசியல் நிலைமை, மதுபான விலக்கு ஆகியவைபற்றி உரைகள் ஆற்றி, இந்தியர்களின் பெருமையை நிலைநாட்டியவர்.

இவ்வளவு சிறப்புமிக்க தலைவரைக் குறித்துப் பாரதி 'இந்தியா' பத்திரிகையில் நிறையவே செய்திகளை வெளியிட்டுப் பெருமை யளித்துள்ளார்; இவருடைய சரிதக் குறிப்புக்களையும் பிரசுரம் செய்துள்ளார்.

பாரதி 'இந்தியா' பத்திரிகையில் எழுதியவற்றிலிருந்து நாம் தெரிந்தெடுத்துத் தரும் சில பகுதிகள் வருமாறு:

".........ஸ்ரீ ஹனுமான் எப்படி ஆஹாரம் முதலிய எவ்விதமான லோக போகங்களையும் இச்சிக்காமல் 'ராம ராம' என்று தியானம் செய்துகொண்டே ஆனந்தமடைந்திருந்ததாகச் சொல்லப்படுகின்றதோ, அதுபோல ஸ்ரீ விபின சந்திரரும் சதாகாலமும் பாரத நாட்டின் அபிவிருத்தியைப் பற்றித் தியானம் செய்வதிலேயே நாள் கழிக்கின்றார். ஹனுமானுக்கு எப்படி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'ராமாமிருதம் ஜீவனம்' ஆக இருந்ததோ, அதுபோல விபின சந்திரருக்கு 'பாரதாமிருதம் ஜீவனம்' என்று கூறுதல் மிகவும் பொருந்தும்''

என்றும்,

"கீழ்ப் பெங்காளத்திலே ஸில்ஹெட் என்ற ஊரிலே வக்கீல்களுக்குள் முதன்மைப்பட்டவராகி, மிகுந்த செல்வமும் புகழும் படைத்து விளங்கிய ஓர் பெங்காளிக் காயஸ்த பிரபுவின் குமாரராக விபின சந்திரர் பிறந்தார். வடநாட்டை ஒரே கலக்காகக் கலக்கிய சிப்பாய் குழப்பம் முடிந்து நாட்டில் அமைதி பிறந்த வருஷமாகிய 1858-ம் ஆண்டுதான் இவரது ஜனன வருஷமாகும். செல்வத்திலேயும், சிறப்பிலேயும் வளர்ந்த விபின சந்திரர் கல்வியிலே விருப்ப மற்றிராமல், வாலிபப் பிராயத்திலேயே ஞானப் பயிற்சியிலேயும் நூற் பழக்கத்திலேயும் அளவிறந்த ஆவல் கொண்டவராகி, அதி பாலியத்திலேயே மெட்ரிக்குலேஷன் பரீக்ஷை தேறிவிட்டார். அதன் பேரில் தந்தையார் சந்திர பாலரைக் கல்கத்தாவிலே கொண்டு விட்டுக் காலேஜிலே சேர்த்தார். காலேஜில் படித்துக் கொண்டிருக்கும்போது இவருக்கு பிரம ஸமாஜக் கோட்பாடுகளிலே பற்றுண்டாயிற்று.......

1879-ம் வருஷத்திலே இவர் ஒரிஸ்ஸா மாகாணத் திலே கடக் நகரத்து ஹைஸ்கூல் ஒன்றிலே ஹெட்மாஸ்டர் வேலை பார்த்தார். 1880-ம் வருஷத் திலே ஸில்ஹெட்டில் இவர் தாமாகவே ஒரு ஹைஸ்கூல் ஸ்தாபனம் செய்தார்..."

என்றும்,

"1886-ம் வருஷத்திலே விபின சந்திரபாபு காங்கிரஸ் கூட்டத்திலே சேர்ந்து கொண்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1887-ம் வருஷத்திலே சென்னையில் நடைபெற்ற காங்கிரஸில் இவர் 'ஆயுத ஆக்'டைக் கண்டனம் புரிந்து செய்த பிரசங்கம் மிகவும் வியக்கத் தக்கதாக இருந்தது. அதுமுதல் இவர் காங்கிரஸ் விஷயங்களிலே மிகுந்த சிரத்தை பாராட்டி வருகிறார்.''

(இந்தியா : 26.1.1907—பக். 4; 11.5.1907-பக். 2; 13.10.1906-பக். 6)

5. அசுவினி குமார தத்தர்:

'வங்காளத்துக்குப் பிதா' என்று கூறத் தகுந்த சிறப்புடையவர்; தேசத்தின் நலத்தையே பெரிதெனக் கொண்ட இப் பெரியாரைப் பற்றிய விரிவான செய்திகளைப் 'பாபு அசுவினி குமார தத்தர்'' என்னும் தலைப்பிலான கட்டுரையீல் காணலாம்.

6. மகேச குமார சர்மா:

சிறந்த தமிழ் அறிஞர்; பன்மொழிப் புலமை வாய்ந்தவர்; பல நூல்களின் ஆசிரியர்; குறிப்பாக, பங்கிம் சந்திரரின் 'ஆனந்த மட'த்தைத் தமிழாக்கிய பெருமைக்குரியவர்; 'சக்ரவர்த்தினி' இதழில் தொடர்ந்து எழுதிப் பாரதிக்குப் புகழ் தேடிக் கொடுத்தவர்.

'இந்தியா' பத்திரிகையில் பாரதி 'ஞானரத'க் கதையைத் தொடராக எழுதி வந்த சமயம், 'இதைப்போல் அற்புதமான கதை தமிழ்ப் பாஷையில் வேறு கிடையாது' என்று பாராட்டி மகிழ்ந்து, பாரதியை உற்சாகப்படுத்திய விரிந்த உள்ளம் கொண்ட பண்பாளர்.

1910 ஆம் ஆண்டிலே 'ஞானரதம்' நூலாக வெளிப்பட்ட போது தம் அருமை நண்பரான மகேச குமார சர்மா அவர்களைப் பற்றி,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> ......எனக்கு மிகுந்த உற்சாகமுண்டாகும்படி தூண்டிக் கடிதமெழுதிய எனது நண்பர் மஹேச குமார சர்மாவுக்கு பகிரங்கமாக எனது நன்றியும் மதிப்பும் தெரிவிக்க விரும்புகிறேன். இவருடைய கல்வியையும், அறிவுத் தெளிவையும், ரஸிகத் தன்மையையும் தமிழ் நாட்டாருக்குப் பன்முறை நன்கு திருஷ்டாந்தப்படுத்திக் காட்டி யிருக்கிறார். ஆதலின், அதை யெல்லாம் பற்றி விரிக்க எனக்கு விருப்பமில்லை. ஆனாலும், இப்படிப் பட்ட பண்டிதர்களைத் தமிழ்நாட்டார் போதியபடி ஆதரவு செய்து, அவர்களை வேறு ஸாதாரணப் பிரவிருத்திகளில் மனம் செலுத்தாதபடி காத்துக் கொள்ளவில்லை"

என்று தமக்குள்ள மனக்குறையை வெளிப்படையாகவே பாரதி எழுதியுள்ளமை சிந்திக்கத் தக்கது.

7. சுதேச மித்திரன் :

ஆங்கிலம் அறியாத மக்களும் நாட்டு நடப்புகளை அறிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆசைப் பெருக்கினால், 'ஹிந்து' பத்திரிகையைத் தொடங்கிய திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்களால் தொடங்கப்பட்ட தமிழ்ப் பத்திரிகை.

> "1882இல் வார இதழாகத் தொடங்கி, 1887இல் வாரம் மும்முறை வெளியீடாக வளர்ந்து, 1889இல் நாளிதழாகிய வரலாற்றினைக் கொண்டது சுதேச மித்திரன்"

(முதல் நாளிதழ்கள் மூன்று—பக். 27)

என்றெழுதி யுள்ளார், திரு. மா. ரா. இளங்கோவன்.

மொழிப் பற்றையும், நாட்டுப் பற்றையும், பத்திரிகை மூலம் ஊக்கிய பெருமையில் 'சுதேச மித்திரன்' பத்திரிகைக்கு என்றுமே தனித்த இடம் உண்டு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'சுதேச மித்திரன்' பத்திரிகையை ஆரம்பித்ததற்கான காரணத்தைச் சுப்பிரமணிய ஐயரின் சொற்களாலே காண்போம் :

"......'இந்து' பத்திரிகை ஆங்கிலப் பத்திரிகையாக இருப்பதால், இங்கிலீஷ் பாஷை அறியாத தமிழ் ஜனங்களும் தேச சமாசாரங்களை அறிந்து கொள்ள மார்க்க மில்லா திருப்பதை யோசித்து, 'சுதேச மித்திரன்' பத்திரிகையை 1882-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் வாராந்திரமாகத் துவக்கினேன்."

(குமரி மலர் : ஆகஸ்டு 1977—பக். 6)

சுப்பிரமணிய ஐயரால் 'தமிழ் ஜன சமூகத்தாரின் அறிவை வளர்ப்பதையே மேன்மை' என்று கருதித் தொடங்கப்பட்ட 'சுதேச மித்திரன்' பல கைகள் மாறி ஒரு நூற்றாண்டுக்கும் மேல் வெற்றி நடைபோட்டது.

8. சுபோத சந்திர மல்லிக்:

பரோபகார சிந்தையும், ஜீவதயையும் உடைய பெரியோர்; மொழிப் பற்று வளரவும், சுதேசீயக் கல்வி முறை செழித் தோங்கவும் பாடுபட்ட தியாக சீலர். 'வந்தே மாதரம்' பத்திரிகை வளர்ச்சிக்குப் பல வகைகளில் உதவிய உத்தமர்; சொல்லப் போனால், 'ஸ்வார்த்தபரி தியாக'த் திற்கு அவதார ரூபமாக இவர் விளங்கினார் எனலாம். இவர் 1908இல் காசியில் ஓய்வு பெற்றுக்கொண்டிருந்த போது, பிரிட்டிஷ் அரசால் வேட்டையாடப்பட்டு, சிறை வைக்கப்பட்டார்.

இவர் கைது செய்யப்பட்ட காலத்தில் கல்கத்தாவி லிருந்து வெளிவந்த 'ஸ்டேட்ஸ் மன்' என்னும் பத்திரிகையில் இவரைப் பற்றிய குறிப்புச் செய்தி பிரசுரமாகியது. அப் பத்திரிகையில் வெளியான செய்தியை 'விஜயா' இதழ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மொழிபெயர்த்து வெளியிட்டது. அப்படி வெளிப்பட்ட பகுதியை 'இந்தியா' பத்திரிகையும் பிரசுரம் செய்தது. அதன் விவரம் வருமாறு :

"ஸ்ரீஜத் ஸுபோத சந்திர மல்லிக்கானவர் செல்வம் மிகுந்த குடும்பத்தில் பிறந்தவர்; சிறு வயதில் இங்கிலாந்துக்குப் போயிருந்தார்.

இவர் அங்கு வக்கீல் பரீக்ஷைக்குப் படித்தார். ஆனால் ஒருநாளும் அவ் வேலை செய்யவில்லை. அதை விட்டு இந்தியாவுக்குத் திரும்பி வந்த பிறகு பொதுஜன விஷயங்களைப் பற்றிச் சில காலம் கவனிக்காமலிருந்து தான் சேர்த்து வைத்திருந்த சித்திரங்களையும், புத்தகங் களையும் விருத்தி செய்யவும் அவைகளைச் சீர்திருத்த வும் வெகு நாள்களைக் கழித்தார். இராஜாங்கக் குழப்பம் ஏற்பட்டு வங்காளப் பிரிவினைக்குப் பிறகு பழைய காங்கிரெஸ் சபையின் கோட்பாடுகளைச் சம்மதிக்காத ஸ்ரீஜத் விபினசந்திர பாலர் அவரைப் போன்ற சிலருடைய பேச்சுக்களைக் கேட்டு, அவை களைத் தள்ளாமல் நடந்து வந்தார். 'வந்தே மாதரம்' பத்திரிகைக்கு வேண்டிய பணத்தை அவர்தான் கொடுத் தார். வங்காளத்தில் ஸ்வஜாதீய கலாசாலையை ஏற்படுத்த வேண்டுமென்று வங்காளக் கல்விச் சங்கத்தார் முயற்சி செய்து கொண்டிருந்த பொழுது, அதற்காக லக்ஷம் ரூபாய் கொடுத்தவர் ஸுபோத சந்திர மல்லிக்தான். ஸ்ரீஜத் மல்லிக்கானவர் அதிகமாக பிரசங்கம் செய்ததே கிடையாது. பாப்நா மாகாணச் சபையிலும், சென்ற வருடம் கல்வியைப் பற்றிய தீர்மானத்தை ஆமோதித்த பொழுதும், அதிக பிரசங்கம் செய்யவில்லை. வங்காள ஸ்வதேசிக ளெல்லோரும் அவரிடத்தில் வைத்திருந்த பிரீதியும் பக்தியும், அம் மாகாணச் சபையில் அவர் பேச

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யெழுந்திருந்தபொழுது அவரைப் புகழ்ந்ததினால்தான் வெளியாயிற்று.

(இந்தியா : 26.8.1908—பக். 5)

9. ஸ்வதேசீய நிதி:

1905ஆம் ஆண்டில் நிகழ்ந்த வங்கப் பிரிவினையை யொட்டி நம் தேச மக்களுக்குச் சுதேசிய உணர்ச்சி ஏற்பட்டது. தேசியத் தலைவர்கள் சுதேசிய முயற்சிகளில் பெரிதும் ஊக்கம் காட்டினர். தமிழகத்தைப் பொறுத்த அளவில் திரு. சுப்பிரமணிய ஐயர் "சுதேசிய நிதி சேகரிப்புப் பணி"யில் முழு மூச்சுடன் ஈடுபட்டார்.

சுப்பிரமணிய ஐயர் செயலாளராக இருந்து 20.9.1906இல் நாஷனல் பண்ட் என்கிற 'சுதேசீய நிதி'யின் நோக்கங்கள் பற்றி வெளியிட்ட அறிக்கையின் ஒரு பகுதி வருமாறு:

"நம் தேசத்தில் நெசவுத் தொழில் முதலிய அநேக விதத் தொழில்கள் இப்போது சீமைச் சரக்குகளின் போட்டியால் அழிந்து போய்க் கொண்டு வருகிறபடியால், தொழிலாளிகளும், கூலி வேலை செய்வோரும் பிழைப்பில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இப்படி அழிந்து போகும் தொழில்களை முன்னுக்குக் கொண்டுவந்து, ஏழைகளுக்குப் பிழைப்புண்டாக்கவும், கண்ணாடி சாமான், ஸோப், மெழுகுவர்த்தி, தீப்பெட்டி முதலிய சாமான்கள் இப்போது நம் தேசத்தில் செய்யப்படாமல் அன்னிய தேசங்களிலிருந்து வருகிறபடியால், அந்தச் சாமான்களை நம் தேசத்திலேயே செய்யப்படும்படியாய் நம் பிள்ளைகளைச் செலவுக்குக் கொடுத்து ஜப்பான் முதலிய அன்னிய தேசங்களுக் கனுப்பி, அங்கே அவர்களை அந்தத் தொழில்களைக் கற்றுக் கொள்ளும்படி செய்து, அவர்கள் திரும்பி வந்ததும், நம்மூரில் அவைகளைச் செய்யும்படியாக உதவி செய்யவும் இந்த நிதி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது."

(இந்தியா : 13.10.1906—பக்.14 அ)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், பட்டினியாலும், பிணியாலும் வருந்தும் ஏழை மக்களைக் காப்பாற்றி, அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் பொருட்டாகவே 'ஸ்வதேசிய நிதி' ஏற்பட்டது.

10. ராஜா ராம மோஹந ராயர்: (1774-1933):

இந்த நாட்டு மாதர்களின் அபிவிருத்தியின் பொருட்டு முதன்முதல் பாடுபட்ட மஹான் ராஜா ராம் மோஹனராய் ஆவார். பிரம , சமாஜம் என்ற பெரு விருக்ஷத்திற்கு வித்தூன்றியவர். பெங்காளத்தை மட்டுமில்லை—இந்தியப் பெருநாட்டையே உய்விக்கத் தோன்றிய மஹான் இவர் ஆவார்.

பாரதி 'சக்ரவர்த்தினி' பத்திரிகையில் ஆசிரியராய் இருந்த சமயம், ராம் மோஹனரைப் பற்றிய கட்டுரையை எழுதி யுள்ளார். அக் கட்டுரையில் மோஹன ராயருடைய பல்வேறு சிறப்பு அம்சங்களைப் பாரதி போற்றியுள்ளார். குறிப்பாக மோஹன ராயருடைய சமூகச் சீர்திருத்தப் பணிகளே பாரதியின் நெஞ்சைத் தொட்டன எனலாம்.

பாரதி வரைந்த கட்டுரையில் இடம் பெற்றுள்ள சில பகுதிகள் வருமாறு:

> "ராம் மோஹன சூரியன் பெங்காளத்தில் உதித்த போது இத் தேசம் பேரிருளில் மூழ்கிக் கிடந்தது.
>
> உலகத்தாரின் நகைப்பு, உலகத்தாரின் நிந்தை, அவர்களின் அவமதிப்பு, அவர்களின் கோபம், அவர்கள் செய்யும் மனத்துன்பம், பொருட்சேதம், சரீரத் துன்பம் ஆகிய எவற்றையும் பொருட்படுத்தாமல் தமது மனத்தில் கடவுளால் அமைக்கப்பட்ட உண்மை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நெறியைத் தவறாது கைக்கொள்ள வேண்டுமென்ற விரதங் கொண்டாருள்ளே ராம் மோஹனர் ஒருவர்.

எண்ணிறந்த ஸ்திரீ ஹத்தி புரிந்து, இத் தேசத்துக் கெல்லாம் அழிக்க முடியாத பெரும் பழிகொடுத்த ஸதி தஹன மென்னும் அரக்கனை மிதித்துக் கொல்லும் படியாக தூக்கப்பட்ட ராம் மோஹனரின் திருவடியை நாம் மறந்து விட்டால் நமக்கு உய்யுண்டாமா?"

(சக்ரவர்த்தினி-ஆகஸ்ட் 1906)

ராம் மோஹனரைக் குறித்துச் சுகுமார் ஸென் என்பவர் தம்முடைய வரலாற்று நூலில்,

"இந்தியாவிலே உதயமாகிக் கொண்டிருந்த புதுயுகத்தின் முன்னோடிகளில் ஒருவராகப் பல வகையிலும் விளங்கியவர் இராம் மோகன ராய் என்பவர். பாட நூல்கள் அல்லாத உரை நூல்களை முதன்முதலில் வங்காளி மொழியில் எழுதியவர் அவர்தான். அவர் அவ்வாறு வெளியிட்டவை இரண்டு வேதாந்த நூல்களின் மொழிபெயர்ப்புக்களும், உபநிஷத்துக்களின் மொழி பெயர்ப்புக்களும், சமூகச் சீர்திருத்தம், சமயச் சீர்திருத்தம் என்னும் துறைகளில் அவர் கொண்டிருந்த கருத்துக்களை வற்புறுத்தி வழக்காடும் நூல்கள் சிலவும் அவரால் உரை நடையில் எழுதப்பட்டன. இந்து மதத்துக்கு விரோதமாக ஸெராம்பூர்ப் பாதிரிகள் செய்துவந்த செயல்களை யெல்லாம் எதிர்த்துப் போராடும் பொருட்டு, அவர் வங்காளி மொழி, ஆங்கில மொழி, பாரசீக மொழி ஆகியவற்றில் பத்திரிகைகள், பிரசுரங்கள் முதலியவற்றை வெளியிட்டார்"

(வங்க இலக்கிய வரலாறு—பக். 273-274)

என்று குறிப்பிட்டுள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

11. தேவேந்திர நாத டாகூர் (1817-1905) :

தேசீய உணர்ச்சியை ஆதரித்து வந்த பத்திரிகை உலகத்திற்கும் பிற ஆக்க பூர்வமான செயல்களுக்கும் ஆதரவு அளித்த இவர், ரவீந்திர நாத தாகுரின் தந்தை ஆவார். நண்பர்களின் ஒத்துழைப்புடன் முதன் முதலாகத் தேசியச் சபை என்று அழைக்கப்பட்ட "ஹிந்துமேலா"வை அமைத்தவர். தேசியத் தொடர்பான பாடல்களையும் புனைந்த பெருமை இவருக்குண்டு. தேவேந்திரரின் அருஞ் செயல்களைக் கண்டு, அவரிடம் மக்கள் பெருமதிப்புக் கொண்டு, அவரை "மஹரிஷி" என்றே அழைக்கலாயினர். ராஜா ராம் மோஹனருக்குப் பிறகு, பிரம்ம ஸமாஜத்தை ஆதரித்தவர்களுள் முன்னணியில் நின்றவர் தேவேந்திரர் ஆவார்.

தேவேந்திர நாதரின் இலக்கிய — சமூகப் பணிகள் குறித்து திரு. சுகுமார் ஸென் அவர்கள்,

> "......அவர் **தத்வ போதினி பத்ரிகா** என்னும் மாதப் பத்திரிகையைத் தொடங்கி வைத்தார். அது பிரம்மோ ஸமாஜத்தாலும் அதன் கல்வி இணைப்பான தத்துவ சபையாலும் (இது 1839ல் நிறுவப்பட்டது) வெளியிடப்பட்டு வந்தது. தேவேந்திர நாத் தாகுர் மிக நன்றாக உரைநடையைக் கையாளும் திறமை உள்ளவர். பிரம்மோ ஸமாஜத்தின் சார்பாக அவர் வெளியிட்ட சமயப் பேருரைகளே இதற்குச் சான்று. தமது கடிதங்களில் வழங்கிய நடை இதனினும் சிறந்தது"
>
> **(வங்க இலக்கிய வரலாறு—பக். 279)**

என்று தகவல் தந்துள்ளார்.

தேவேந்திர நாதரின் குணநலன் குறித்து இராமசாமிப் புலவர் பெருமிதத்துடன் தெரிவிக்கும் கருத்துக்கள் இவை :

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"......இவர், வங்காளத்தில் புதிய சமய நெறியைத் தோற்றுவித்த இராசா ராம் மோகன்ராயின் நெருங்கிய நண்பரான துவாரகாநாத டாகுரின் மூத்த புதல்வராவர். இவருடைய தந்தையார் மிகப்பெரும் செல்வ நிலையினர். இன்ப வாழ்க்கை நடத்த வசதியிருந்தும் இவர் இளமையிலேயே உலக வாழ்க்கையில் வெறுப்புற்று, மெய்ப் பொருள்களைக் காணப் பல சமயங்களின் கொள்கைகளை ஆய்வதில் நாட்டஞ் செலுத்தினார்......

.........1850இல் பிரமதர்மம் என்ற நூல் வெளியிட்டார். 1851இல் பிரிட்டன் இந்தியக் கழகத்தின் செயலாளராக இருந்து இந்தியர்களிடை ஒற்றுமை உண்டுபண்ண ஒரு பொதுக் கழகத்தின் தேவை குறித்துச் சென்னை அறிஞர்களுக்கு ஒரு கடிதம் வரைந்தார். தம் தந்தையார் காலமாகும்போது கோடிக்கணக்கான கடன் சுமை இவர் தலையில் விடிந்தபோதும் தம் நேர்மையைக் காக்கச் சொத்துக்க ளனைத்தையும் விற்று ஈடுகட்டி விட்டார்."

(சிறப்புப் பெயரகராதி—பக். 373-374)

12. கேசவ சந்திர சேனர்:

இந்தியாவில் ஆசார சீர்திருத்தம் (Social Reform) என்பதை முதன் முதலாகத் தொடங்கி வைத்தவர்களுள் தலைசிறந்தவர்; வங்கத்தில் பிறந்த மேதாவிகளில் முதல் வகுப்பைச் சார்ந்தவர்; வங்கம் தந்த செல்வரான இவர் மாதர்களின் நிலைமைகளை உயர்த்தப் பெரும் பாடுபட்டார். இவருடைய தூய வாழ்க்கையைக் கண்ட மக்கள் இவரை 'மஹரிஷி' என்றே குறிப்பிட்டனர்.

13. ஈசுவர சந்திர வித்தியா சாகர் (1820_1891):

தேசத்தைச் சீர்திருத்தி, நல்ல நிலைமைக்குக் கொணர முன்னின்று உழைத்த பேரறிஞர்; ஏழைக் குடும்பத்தில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிறந்து, படிப்படியாக முன்னேறிக் 'கருணைக் கடல்' என்று புகழத்தக்க நிலைக்கு உயர்ந்த உத்தமர். நவீன வங்காளத்தை உருவாக்கிய சிற்பி என்றே இவரை வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

வித்தியாசாகரின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தை 1908ஆம் ஆண்டிலே வெளிவந்த மாதப் பத்திரிகை ஒன்று வெளியிட்டிருந்தது. அதைப் பாரதி 'இந்தியா' பத்திரிகையில் மறுபிரசுரம் செய்திருந்தார். நீண்ட கட்டுரையில் காணப் பட்ட ஒரு பகுதியைப் படித்தாலே, ஈசுவர சந்திர வித்தியா சாகர் எப்படிப்பட்ட தலைவர் என்பது தெரியவரும். அப் பகுதி வருமாறு :

"………போதனா முறையைச் சீர்திருத்தி, பெண் கல்வியை விருத்தி செய்ய வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு அநேக பெண் கலாசாலைகளையும் பல இடங்களில் ஸ்தாபித்தார்...

……இவர் பால்ய விவாகத்தைக் கண்டித்தார். இவ்விஷயத்தில் 1854-ம் வருஷம் பங்காளிப் பாஷையில் துண்டுப் பத்திரிகைகளையும் அச்சிட்டு நாடெங்கும் பரவச் செய்தார். தற்காலத்தில் பொதுக் கூட்டங்களில் எல்லாம் உரக்கப் பேசிப் பின் வீடுபோய் படுத்துறங்கி விட்டு, பேச்சோடு நின்று விடுகிற சீர்திருத்தக்காரர் போன்றவரல்ல ரிவர். ஜனங்களுக்கு உபதேசித்து வந்ததையே தாம் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வந்தார்."

(இந்தியா : 10.10.1908—பக். 6-7)

திரு. இராமசாமிப் புலவர் வித்தியாசாகரைப் பற்றிய செய்தியைக் குறிப்பிடுகையில்,

…"இவருடைய இயற்பெயர் ஈசுவர சந்திரசர்மா என்பது………கல்கத்தா சமஸ்கிருதக் கல்லூரியில் படித்துத் தேறி 'வித்தியாசாகர்' என்ற பட்டம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெற்றார். போர்ட் வில்லியம் கல்லூரியில் தலைமைப் புலவராக இருந்து, பின்பு சமஸ்கிருதக் கல்லூரியின் தலைவராகி, பின்பு பாடசாலை இன்ஸ்பெக்டராக இருந்து கல்வித் துறையில் பல சீர்திருத்தங்கள் செய்தார். கைம்பெண் மணத்தை ஏற்கவும் பலதார மணத்தைத் தடுக்கவும் சட்டம் செய்ய இயக்கம் தோற்றுவித்தார்''

(சிறப்புப் பெயரகராதி—பக். 83)

என்று பெருமிதத்துடன் தெரிவிக்கிறார்.

வித்தியாசாகரின் வங்க இலக்கியப் பணி குறித்துச் சுகுமார் ஸென் என்பவர் தெரிவிப்பதாவது:

''.........வங்காளி இலக்கிய உரை நடையை வித்தியாசாகரர் கையாளத் தொடங்கியபோது, அந் நடை ஏற்றத் தாழ்வில்லாச் சமநிலையையும் செவ்விய ஓசையையும் பெற்றது......தேர்ந்தெடுத்த திருத்தமான சொற்களைச் சீரிய உணர்ச்சியோடு முதன்முதலாக வழங்கிய உரைநடை ஆசிரியர் அவரே.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியையும் கடைப்பகுதியையும் சார்ந்த பத்தாண்டுகளில் வித்தியா சாகரரே யாவர்க்கும் மேலான இலக்கிய ஆசிரியராக விளங்கினார். அவருக்கு வடமொழியில் இருந்த ஆழ்ந்த புலமையும், அவரது நுட்பமான, உயர்ந்த ஆராய்ச்சித் திறமையும், மக்கள் வாழ்க்கையைப் பற்றி அவர் கொண்டிருந்த சீரிய நவீன காலக் கருத்துக்களும், நோக்கும், சத்தியத்தின்மீது அவருக்கு இருந்த பற்றும், அவரது மனவலிமையும், முன்னேற்ற ஊக்கமும், யாவர்க்கும் அஞ்சாத் திண்மையுடைய நெஞ்சுறுதியும், தீமைக்கும் அநீதிக்கும் சிறிதும் இடம் கொடுக்க மறுக்கும் மாசற்ற மனநிலையும் ஆகிய யாவும் ஒன்றாகச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேர்ந்து அனைவருடைய மதிப்பையும் அவர் நன்கு பெறச் செய்தன."

(வங்க இலக்கிய வரலாறு—பக். 281)

14. மைகல மதுசூதன தத்தர் (1824-1873):

மில்டனைத் தம் ஆதர்ஷ புருஷராகக் கொண்டு காவியங்கள் பல இயற்றிப் பெருங் கவியாக விளங்கியவர்; வங்காளிக் கவிதைத் துறையிலும் புரட்சியைத் தொடங்கி வைத்தவர்; பல மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்; இலக்கியத் துறையில் தமக்கென்று ஓர் தனியிடத்தைப் பெற்றுத் திகழ்ந்தவர்.

மதுசூதன தத்தரைப் பற்றித் தம்முடைய நூலில், சுகுமார் ஸென் தெரிவிப்பதாவது :

"மைக்கேல் மதுசூதன் டட் கிறிஸ்துவ மதத்தைத் தழுவுவதற்கு முன் மதுசூதன் டட் என்றே அழைக்கப் பட்டு வந்தார். கல்கத்தாவில் வழக்கறிஞர் தொழிலை வெற்றிகரமாக நடத்திவந்த ஒருவரின் மகனாக அவர் பிறந்தார். அவருடைய தாய் தந்தையர்களுக்குப் பிறந்த குழந்தைகளில் சாகாமல் பிழைத்தவர் அவர் ஒருவரே...

மைக்கேல் மதுசூதன் டட், தாம் போஸுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தாமே கூறிக்கொண்டபடி இலக்கியத் துறையில் தோன்றிய மிகப்பெரிய புரட்சிக்காரர் என்பது உண்மையே. அவர் ஒரு பெரும் இலக்கியப் புரட்சியை மெய்யாகவே தோற்றுவித்தார். அவர் வாழ்ந்த காலத்தில் யாவற்றுக்கும் மேலோங்கிக் காணப்பட்ட முக்கிய நிகழ்ச்சி எது என்றால், பல்லாண்டு பல்லாண்டாக மாறாமல் இருந்துவந்த மரபு முறைகளையும், இலக்கியப் படைப்பை மனம்போல் செல்ல ஒட்டாமல் அடக்கி ஒடுக்கிய கட்டுப்பாடுகளையும் எதிர்த்து மீறித்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தோன்றிய புரட்சியே என்று சொல்லலாம். அச் சூழ்நிலையின் புரட்சிப் பண்பு டட்டின் மனத்திலே மிகத் திறமையுள்ள படைப்பு—ஊக்கமாக உருவெடுத்தது.''

(வங்க இலக்கிய வரலாறு—பக். 317; 335)

15. பங்கிம் சந்திர சட்டோபாத்தியாயர் (1833-1894):

இந்தியாவின் மிக முக்கியமான 'இலக்கியச் சீமான்' என்று பாராட்டப்பெறுகின்ற பங்கிம் சந்திரபாபு, நவ இந்தியாவின் முதல் நாவலாசிரியர் என்ற சிறப்பையும் பெற்றவர் ஆவார்.

'ஸுஜலாம் ஸுபலாம்' என்று தொடங்கும் 'வந்தே மாதர' கீதத்தை வழங்கிய மகான் இவர்.

பாரதியும் இவரை 'நமது மகரிஷி கணங்களிலே சேர்த்துப் பூஜை புரியத் தகுந்தவர்' என்றே போற்றிப் புகழ்ந்துள்ளார்.

பங்கிம் சந்திரர் தம் இலக்கிய வாழ்க்கையைத் தொடங்கியபோது கவிதைகளையே முதலில் புனைந்தார். பிறகு, புனைந்துரைக் கதைகளை எழுதலானார். இவர் வங்க மொழியில் நவீனங்களை அளித்தவர் மட்டுமில்லை; மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவருங்கூட.

இவருடைய இலக்கிய ஆக்கங்கள் பெரும்பாலும் இவர் அலுவலில் இருந்த காலத்தில் தோன்றியவையே.

பங்கிம் சந்திரரின் இலக்கியப் பாங்கு குறித்துச் சுகுமார் ஸென் என்பார் தம்முடைய நூலில்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"......பங்கிம் சந்திர சாட்டர்ஜி மிக நன்றாகக் கதை சொல்லுபவர். புனைவியல் கதையைக் கற்பனை செய்வதில் நிகரற்றவர்...அவர் சிறந்த நாவலாசிரியர் என்பதில் ஐயமில்லை. நல்ல நாவலாசிரியர் என்பதால் மட்டும் அவர் புகழுக்கு உரியவர் அல்லர். அவர் ஒரு புதிய வழியை நாடிக் கண்டவர். அவ்வழியை அமைத்துக் கொண்டவரும் கூட.

.........அவர் இயற்றிய நாவல்கள் இந்தியாவில் உள்ள முக்கியமான மொழிகள் எல்லாவற்றிலும் (அநேகமாக) மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. அந்த மொழிகளிலும் இலக்கியத் துறையில் ஓர் ஊக்கத்தைத் தூண்டத் துணை செய்திருக்கின்றன"

(வங்க இலக்கிய வரலாறு—பக். 357-358)

என்று பெருமிதத்துடன் எழுதி யுள்ளார்.

16. ஹேம சந்திர வந்தியோபாத்தியாயர் (1838_1903):

தேச பக்தியைத் தூண்டி விடக்கூடிய கவிதைகளை யும், கதைகளையும் இயற்றித் தம் ஆற்றலைப் புலப் படுத்திய அறிஞர், இவர்.

ஹேம சந்திரரின் கருத்தும், சாதனையும் எத்தகையன என்பது குறித்துத் தம்முடைய நூலில் சுகுமார் ஸென் அவர்கள்,

"......'தேசபக்தி உடைய இந்துக்களின் மனத்தில் ஆண்மை நிரம்பிக் கிடக்கிறது. அத்தகைய மனத்தைப் பண்டைக் காலச் சூழ்நிலையில் உருப்பெறச் செய்ய வேண்டும்' என்று அவர் கருதி யிருந்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

.........அவர் எழுதிய சிறிய கவிதைகளில் ஒன்று அவர் எழுதியவற்றில் எல்லாம் தலைசிறந்தது. மக்கள் அனைவராலும் அது விரும்பப்பட்டது. பாரத் ஸங்கீத் (இந்திய நாட்டின் பாட்டு) என்னும் அது 1870-ல் வெளியிடப்பட்டதுமே, வங்காளி நாட்டில் ஆங்கிலக் கல்வி கற்ற இளைஞர்கள் அதை 'இந்தியாவின் தேசீயப் பாசுரம்' என்று பாராட்டிப் பாடி வந்தார்கள். ஏனென்றால், இந்தியா அடிமை நாடாக இருந்ததையும், அதன் மக்கள் யாதொரு சிறப்பும் இன்றி வாழ்ந்து வந்ததையும் அவர்கள் அப்போது கண்விழித்துப் பார்த்த நிலையில் தெரிந்துகொண்டார்கள்''

(வங்க இலக்கிய வரலாறு — பக். 337)

என்று சொற்சித்திரம் தீட்டிக் காட்டி யுள்ளார்.

17. தீனபந்து மித்திரர் (1829-1874):

சமூகத் தீமைகளைக் கண்ணாடிபோல் எடுத்துக் காட்டும் நாடக நூல்கள் பலவற்றை எழுதி, நாடகத் துறையில் புதிய விழிப்புணர்ச்சியின் ஊக்கத்தைக் கிளர்ந்தெழச் செய்த பெருமைக்குரியவர் தீனபந்து மித்திரர். பொது நாடக மேடை தொடங்கப்பட்ட காலத்தில், இவருடைய நாடகங்கள் நாடக மேடையில் வெற்றி பெற்றன.

''வங்காளி மொழியில் எழுதப்பட்ட 'நீல தர்ப்பணம்'' (நீலக் கண்ணாடி) என்னும் நாடகம் வங்காளத்தில் ஆங்கிலேயர் நடத்திய அவுரித் தொழிலின் கொடுமைகளைத் தொலைக்கப் பெருங் கிளர்ச்சியை மூட்டியது. இதன் ஆங்கில மொழிபெயர்ப்பை வெளியிட்ட லாங் (Rev. Lang) என்ற பாதிரியாரை அரசாங்கம் சிறையில் தள்ளியது. இந்த நாடகத்தை எழுதியவரே தீனபந்து. கிழக்கு வங்காளத்தில் சௌபேடியா கிராமத்தில் பிறந்து, கல்கத்தாவில் கல்வி பயின்று, 1855இல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாட்னாவில் தபால் நிலையத் தலைவராகப் பதவியில் அமர்ந்து, பல இடங்களில் மாற்றல்களானபடியால் பல இடங்களில் உள்ள மக்களியற்கைகளை நேரில் கண்டறியும் அனுபவம் பெற்றார்''

(சிறப்புப் பெயரகராதி—பக். 355)

என்று தீனபந்து மித்திரரைப் பற்றிய அரிய செய்தியை இராமசாமிப் புலவர் தருகிறார்.

18. ரவீந்திரநாத டாகூர் (1861-1941):

நோபல் பரிசுபெற்ற கவிஞர் பெருமான். பிறவிக் கவிஞராகிய இவர் தம்முடைய தாய்மொழியாகிய வங்காளியில் எழுதியும், பின் ஆங்கிலத்தில் தாமே மொழிபெயர்த்தும் வெளியிட்டு இருபதாம் நூற்றாண்டு இலக்கிய உலகின்-கண் இலங்கிய கவியரசர்களினிடையே தனிப்பெருமையடைந்தவர். பாரதியும் இவருடைய கதை-கட்டுரைகளைத் தமிழில் தந்துள்ளார்.

"இக் கவீசரைப்பற்றி அதிகம் எழுத வேண்டுவதில்லை; தெய்வீகமான கவி வன்மையோடு விசால புத்தியும், உலக ஞானமும், தீர்க்க திருஷ்டியும், நம்மவர்க்கு உள்ளக் கசப்பான உண்மைகளை அஞ்சாது எடுத்தோதி இடித்துக் கூறும் தீரமும் வாய்ந்தவர்; உலகப் பிரசித்தரான இந்திய மகான். 'என்னோடு எனக்கு' என்று தன்னலமே கருதும் குறுகிய நோக்கமில்லாது 'உலகத்திலே யுள்ள மக்களனைவரும் ஒரே கடவுளின் புத்திரராக ஒத்து வாழவேண்டும்; அவ்வுணர்ச்சியை இந்தியாவே உலகத்துக்குக் கொடுத்தற்குரியது' என்று நம்பி ஒழுகுபவர்"

(பஞ்சாமிர்தம் : 1924—பக். 433)

என்று மெய்சிலிர்த்து எழுதினார், நாவலாசிரியர் மாதவையா அவர்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

19. கிரீச சந்திர கோஷ் (1844-1911) :

நாடகாசிரியராகவும், நாடக நடிகராகவும் வங்க நாட்டு மக்களுக்கு நன்கு அறிமுகமானவர் இவர். நாடகம் பார்க்க வருகிறவர்களின் இலக்கிய ரசனைக்கு ஏற்றபடி, இவர் தம்முடைய நாடகங்களை அமைத்தார். வங்க மக்களில், குறிப்பாக, கல்கத்தாவில் வாழ்ந்துவந்த நடுத்தர மக்களின் கீழ்வகுப்பினரின் வாழ்க்கை நிலைமைகளையே இவர் தம்முடைய நாடகங்களில் சித்திரித்தார்.

கோஷ் தம்முடைய இறுதிக் காலத்தில் தேசீய இயக்கத்தில் வெளிப்பட்ட நாட்டுப்பற்றை விளக்க எழுந்த நாடகங்களை எழுதிவந்தார். சுவாமி விவேகாநந்தரின் அறிவுரைகளில் இவருக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு.

கோஷ் சுமார் எண்பது நாடகங்கள் எழுதி யிருக்கிறார். களைப்பே அறியாத நாடகக் கலைஞர் இவர்.

இவருடைய நாடகப் பணி குறித்து,

"......கிரீஸ் சந்திர கோஷ் என்பவர் வங்காள நாடக மேடையைச் சார்ந்த ஆசிரியர்கள், நடிகர்கள் ஆகியோர் அனைவரிலும் சிறந்தவர்.

1872ல் டிசம்பர் மாதம் பொது நாடகமேடை தொடங்கிய காலம் முதலே, அவர் அதோடு தொடர்பு கொண்டிருந்தார். சிறந்த நடிகர் என்று அவருக்கு நிலையான புகழ் கிடைத்ததும், நாடகமேடைக்குத் தேவை இருந்த காரணத்தால், பங்கிம் சந்திர சாட்டர்ஜியின் புனைவியல் காவியங்களையும், மைக்கேல் மதுசூதன டட்டும் மற்றவர்களும் எழுதிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிதைகளையும் நடிப்பதற்கு ஏற்ற நாடகங்களாக அவர் அமைக்கலானார்''

(வங்க இலக்கிய வரலாறு—பக். 379)

என்று மிக அழகாக எடுத்துக்காட்டுவார், சுகுமார் ஸென்.

20. வந்தேமாதரம் :

தேசியப் பற்றின் சீரிய லட்சியத்தை விளக்கியும், உதாரணம் காட்டியும் எழுதப்பட்ட நூலான 'ஆனந்த மட'த்தில் தேசிய உணர்ச்சியின் மந்திரமாகப் பலரும் ஓதி வரும் 'வந்தே மாதரம்' பாடல் இடம் பெற்றுள்ளது.

'வந்தே மாதரம்' என்றால் 'தாயை வணங்குகின்றேன்' என்பது பொருள். தேசியப் போராட்டக் காலத்தில் இச் சொல் தேசிய மந்திரம் போலே நாடெங்கும் ஒலித்தது.

'வந்தே மாதர' மந்திரச் சொல்லைத் தமிழ் மக்கள் பொருள் அறிந்து உச்சரிக்க வேண்டும் என்பதன் பொருட்டாகவே பாரதி,

''வந்தே மாதர மென்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குது மென்போம்''

என்று மொழிபெயர்த்து அருளினார்.

மற்றும், ''வந்தே மாதரம்'' என்ற பொருளாழ்ந்த சொல்லை வைத்தே பாரதி பாக்கள் பல ஆக்கினார் என்பதையும் நாம் இங்கே நினைக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

பங்கிம் சந்திரபாபுவின் ''வந்தே மாதர'' கீதத்தை இரு முறை மொழிபெயர்ப்பும் ஆக்கி, அப் பாடல் தமிழ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மக்களின் நெஞ்சிலும் நாவிலும் நிலைக்கவேண்டும் என்ற வேணவாக் கொண்டவர் பாரதி என்பதையும் குறிப்பிட்டே யாக வேண்டும்.

21. சுப்பிரமணிய ஐயர் (1855 - 1916) :

தமிழ்நாட்டின் புதிய விழிப்புக்கு ஆதி கர்த்தாவாக விளங்கிய சான்றோர்; தமிழ்நாட்டின் தேசீய வளர்ச்சிக்கு அரும் பாடுபட்ட செம்மல்; மொழி வளர்ச்சிக்கு வித்திட்டவர்; சமூகச் சீர்திருத்தங்களிலும் மிகுந்த அக்கறை காட்டிய உண்மை அந்தணர்; பாரதியைப் பத்திரிகை உலகிற்கு அறிமுகப்படுத்திய பண்பாளர். இப் பெரியார் நமது செந்தமிழ் நாட்டிற்குச் செய்துள்ள நன்மைகளைச் சொல்லி முடியாது.

1916இல் இவர் மறைந்தபொழுது, 'கப்பலோட்டிய தமிழர்' என்ற சிறப்புப் பெயரால் மக்களால் மதிக்கப்பட்ட வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் பாமாலை புனைந்து புகழஞ்சலி செலுத்தினார். அவர் தம்முடைய பாமாலையில்,

"தமிழ்மைந்தர் தூக்கத்தால் தாழ்வுற்றுச் சாவில்
அமிழ்கின்ற தன்மைகண் டன்னார்க்—கமிழ்தென்னச்
செந்தமிழில் நம்முயர் சுதேசமித்திரன் தொடங்கி
நந்தமிழரை யெழுப்பி நன்கு"

என்று ஐயரின் 'சுதேச மித்திரன்' தொண்டை விதந்து போற்றி யுள்ளார்.

ஐயரின் வாழ்க்கைக் குறிப்புச் செய்திகளாக இராம சாமிப் புலவர் பின்வருமாறு எழுதி யுள்ளார் :

"திருவையாற்றில் 19.1.1855இல் பிறந்தவர். பதின் மூன்றாம் அகவையிலேயே தந்தையை இழந்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பச்சையப்பன் கல்லூரியில் வேலை பார்த்துக்கொண்டே பி.ஏ., படித்துப் பட்டம் பெற்றார். மறு ஆண்டில் திருவல்லிக்கேணி ஆங்கிலோ வெர்னாகுலர் பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்து பின்னர், திருவல்லிக் கேணியிலேயே 'ஆரியன் உயர்நிலைப்பள்ளி'யை நிறுவி அதில் முஸ்லிம்களையும் தீண்டாதாரையும் சேர்த்துக் கொண்டார். 1878இல் இந்துப் பத்திரிகையையும், 1882இல் சுதேச மித்திரனையும் துவக்கினார். 1884இல் பி. ரங்கைய நாயுடு முதலியோருடன் இணைந்து 'சென்னை மகாசன சபை'யை நிறுவினார். 1915இல் ஏ. அரங்கசாமி ஐயங்காரிடம் சுதேச மித்திரன் பொறுப்பைக் கொடுத்தார். 18.4.1916இல் காலமானார்."

(சிறப்புப் பெயரகராதி—பக். 252)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதி : 2

அரசியல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

☐

இப் பகுதி முழுக்க முழுக்க இந்திய அரசியல் சூழ்நிலையைப் பற்றியும் குறிப்பாகக் காங்கிரஸ் மகாசபையின் செயற்பாடுகள் குறித்தும், அதிலும் சிறப்பாக தாதாபாய் நௌரோஜி, பால கங்காதர திலகர், பாபு அசுவினி குமாரதத்தர், ஹரி ஸர்வோத்தம ராவ் போன்ற பெரும் தலைவர்கள் நாட்டுப் பணிகளில் கொண்டிருந்த ஈடுபாடுகள் குறித்தும் தெள்ளத் தெளிவாக விளக்கிக் காட்டும் கட்டுரைகளைக் கொண்டுள்ளது.

ஆங்கிலேயப் பத்திரிகைகள் பரப்பிய விஷமப் பிரசாரங்களையும், நம்மவர்களே நம்மவர்களை இழித்தும் பழித்தும் பேசியும் எழுதியும் வந்த போக்குகளையும், பொது மக்களுடைய பொறுப்பு, கடமை ஆகியவற்றைச் சுட்டிக் காட்டும் முறைகளையும், பிரிட்டிஷ் ஆட்சியாளரின் கொடுங்கோன்மைகளையும் கொடூரங்களையும் சித்திரித்துக் காட்டும் கட்டுரைச் செல்வங்களை இப் பகுதி கொண்டு உள்ளது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, பாரத புத்திரர்கள் தங்கள் ஜாதி, மத வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு உழைத்தால் ஸ்வராஜ்யம் கிடைத்துவிடும் என்பதை விளக்கியும், 'நமக்கு நாமே துணை' என்னும் சீரிய கொள்கையே சுய ஆட்சிக்குத் தகுந்த வழி என்பதைத் தெளிவு படுத்தியும், இந்திய மக்களுடைய நலன்களில் கவனம் செலுத்தி உழைப்பதே தகுதியான அந்தஸ்து என்பதைப் புலப்படுத்தியும் எழுதி யுள்ள பல கட்டுரைகள் இதன்பால் உள.

☐

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்திய காங்கிரெஸ் மகாசபை

[காங்கிரஸ் மகாசபையின் இருபத்திரண்டாவது கூட்டம் கல்கத்தாவில் பவானிபூரிலுள்ள ரஸ்ஸா ரோடுக்குச் சமீபத்தில் அமைக்கப்பட்டிருந்த பிரம்மாண்டமான பந்தலில் 1906 டிசம்பர் 26ஆம் தேதி கூடியது. அதைப் பற்றிய செய்தியை இக் கட்டுரை தெரிவிக்கிறது.

இந்த 1906ஆம் வருடக் காங்கிரஸ் இந்தியாவின் தேசீய சரித்திரத்தில் என்றுமே மறக்க முடியாத அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது.

வங்காளப் பிரிவினையின் காரணமாகத் தேசத்தில் ஏற்பட்டிருந்த கொந்தளிப்பு கல்கத்தா மகாசபையில் எதிரொலித்தது.

வரலாற்றுப் புகழ்பெற்ற இந்த 1906ஆம் வருடக் காங்கிரஸில் பாரதியும் பிரதிநிதியாகப் பங்கு கொண்டார். மகாநாட்டு நிகழ்ச்சிகளை நேரே கண்டார்.]

இதுகாறும் இந்தியாவின் பல கோடி ஜனங்களால் மிகுந்த ஆவலோடு எதிர்பார்க்கப்பட்டிருந்த இந்திய காங்கிரெஸ் மகா சபையானது சென்ற புதன் கிழமை மாலை 2 மணிக்குத் தொடங்கப் பட்டது. சுமார் 2,500 பிரதிநிதிகள் பற்பல

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாகாணங்களி லிருந்தும் வந்திருந்தார்கள். காங்கிரெஸைப் பார்க்க வேண்டுமென்ற விருப்பத்தோடு வந்திருக்கும் சாதாரண கனவான்கள் சுமார் 5,000 பேர் வரை யிருக்கலாமென மதிக்கப் படுகின்றது. இதுவரை நடந்த 21 காங்கிரஸ் கூட்டங்கள் ஒன்றிலாவது இத்தனை ஜனங்களும், இத்தனை பிரதிநிதிகளும் வந்திருந்ததாய்த் தெரியவில்லை. இவ்வளவு மகத்தான சபைக்கு ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி[1]யைப் போன்ற மகத்தான தேசாபிமானி சபாநாயகரா யிருப்பது மிகவும் பொருத்தமுடைய தன்றோ?

சபை தொடங்கப்பட்டவுடன் வரவேற்புச் சபையின் காரியதரிசியாகிய டாக்டர் ராஷ் பிகாரி கோஷ்[2] தமது வந்தனோபசார உபந்நியாஸம்[3] புரிந்து பிரதிநிதிகளை வரவேற்றார். அதன்பின் ஸ்ரீ தாதாபாய் தமது தலைமை உபந்நியாஸத்தை வாசித்தார். இத்துடன் புதன் கிழமை விஷயம் முடிவு பெற்றது. வியாழக் கிழமை முதல் பற்பல தீர்மானங்களும் ஆரம்பிக்கப்பட்டன.

(இந்தியா : 29.12.1906—பக்.5)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

'சுதேச மித்திரன்' புத்தக சாலைப் பிரிவு **'காங்கிரஸ் மகாசபை சரித்திரம்'** என்பதாக இரண்டு தொகுதிகளை 1929ஆம் ஆண்டு வெளியிட்டது. அந் நூலில் கல்கத்தாவில் கூடிய மகாநாட்டைப் பற்றித் தெரிவித்துள்ள செய்தி வருமாறு :

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"......1906ம் வருடத்தில் கல்கத்தாவில் சுதேசியக் கிளர்ச்சியின் மகா உக்கிரமான ஒரு காலத்தில் கூடிய 22-வது காங்கிரஸ் கூட்டத்தில்தான், முதல் முதலாக 'ஸ்வராஜ்யம்' என்ற பதம் நமது நாட்டு தேசாபிமானிகளில் முன்வைத்து எண்ணத்தக்க நமது மாபெருந் தலைவர் தாதாபாய் நவுரோஜியால் உச்சரிக்கப்பட்டது. 21 வருடங்களாக 'வேண்டுகோள்' தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டுவந்த காங்கிரஸ் மகாசபை இந்த 22-வது ஆண்டில்தான் தனது 'புருஷ'ப் பிராயத்தை அடைந்து தீவிரமான தொனியில் பேசவும், ஸ்வதேசியம், தேசியக் கல்வி முதலியவை போன்ற தீவிரமான தீர்மானங்களைத் தைரியத்துடன் நிறைவேற்றவும் முன் வந்தது. மேலும், இந்தக் காங்கிரஸில்தான் காங்கிரஸ் நடைமுறை பற்றிய முக்கியமான திட்டம் ஒன்று அங்கீகரிக்கப்பட்டு, காங்கிரஸ் மகா சபையைத் தேசப் பிரதிநிதிகளின் சபையாகச் செய்வதற்குத் திறமையான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தனது பிள்ளைப் பிராயத்தினின்றும் வெளியேறி, புருஷத் தன்மையை தனது 22-வது வயதில் அடைந்த காங்கிரஸ் மகாசபை, வரவர தனது உற்சாகத்தில் முன்னேறி வருவதையும், அதனுடன் தனது பழைய மிதவாத வழியை மாற்றி, தீவிரமான தேசீய முறையில் அதனை நடத்த 'புதிய கட்சி' ஒன்று தோன்றுவதும், பின்னர் நடந்த காரியங்களும் இனிவரும் அத்யாயங்களில் விரிவாகக் கூறப்படும்."

(பக்:34-35)

1. தாதாபாய் நௌரோஜி (1825-1917):

குஜராத் மாகாணத்தில் நௌஸாரி என்ற கிராமத்தில் 1825ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் 4ஆம் தேதி பாஸிர் குடும்பத்தில் பிறந்தவர் இம் மஹான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த மஹானுடைய பெருமையை அறியாதார் யாருமில்லை.

சர்வ சக்தியுடன் பரம காருண்ய முடையவராய் ஓயாது தம்முடைய நாட்டைப் பற்றியே நினைத்து நினைத்து வருந்தி, தம் நாடு எப்படியாவது முன்னுக்கு வரவேண்டு மென்ற எண்ணத்துடன் சலிப்பற்று உழைத்த 'முதுபெருங் கிழவ'னார்.

ராஜரீதியில் நமது இந்திய தேசத்தாரை விசாலப் படுத்தியமைக்கு ஆதார புருஷராக இருந்தோரில் தாதாபாய் நௌரோஜியே முக்கியமானவர்.

1886ஆம் வருஷத்திய காங்கிரஸ் மகாசபைக்கும், 1893ஆம் வருஷத்திய காங்கிரஸ் மகாசபைக்கும் தலைமை தாங்கிய சிறப்பு நௌரோஜிக்கு உண்டு.

பாரதி பற்பல சந்தர்ப்பங்களில் நௌரோஜியைப் பற்றி நிறையவே எழுதி யுள்ளார்.

குறிப்பாக, எண்பதாம் பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போதும், மறைவெய்தியபோதும் நௌரோஜியைப் பற்றிப் பாரதி எழுதிய எழுத்துக்கள் நெஞ்சைத் தொடுவனவாகும்.

தேசாபிமான விதைகளை ஊன்றிப் பலரும் தேச பக்தர்களாக விளங்க வழிகோலிய நௌரோஜி காலமான போது பாரதி எழுதிய வாய்மை மணக்கும் வாசகங்கள் இவை:

"......தன்னை மறந்து குற்றுயிரோடு கிடந்த ஹிந்து தேசம் மறுபடியும் உயிர் கொண்டு, ஸ்மரணை பெற்று வலிமை காட்டும் என்று ஒருநாளா, இரண்டு நாளா 70 வருஷம் இடைவிடாது நம்பினார்.

அவர் சாகு முன்னே ஹிந்துஸ்தானம் பிழைத்து விட்டது. ஹிந்துக்களுடைய சக்தி ஏறுவதைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்ணாலே பார்த்த பிறகுதான் அந்தக் கிழவனுடைய பிராணன் பிரிந்தது.''

(பாரதி தமிழ்—பக். 220-21)

2. ராஷ்பிகாரி கோஷ் (1845-1921):

மிதவாதத் தலைவர்களிலே மிக முக்கியமானவர்; சுதேசி விஷயங்களில் அக்கறை காட்டினவர்.

1907ஆம் வருஷத்திய சூரத் காங்கிரஸ் குழப்பத்தில் முடிந்தபோது, அச் சபையின் தலைவராக நியமிக்கப் பட்டார். இவர் தலைமைக்குப் பலர் எதிர்ப்புத் தெரிவித் தனர். இதன் காரணமாக, மகாநாடு ஒத்திவைக்கப்பட்டது. அப்படி ஒத்தி வைக்கப்பட்ட காங்கிரஸ் மகாசபையின் கூட்டம் 1908ஆம் ஆண்டு டிசம்பரில் சென்னை மாநகரில் மீண்டும் கூடியது. இந்தக் காங்கிரஸ் சபைக்கு ராஷ்பிகாரி கோஷ் தலைமை தாங்கினார்.

ஆரம்ப காலத்தில், 'இந்தியா' பத்திரிகை ராஷ்விகாரி கோஷின் பெயரை 'ரஸவிஹாரி கோஷ்' என்றே குறிப்பிட்டு வந்தது. 'ராஸவிஹாரி கோஷ்' என்பதுதான் சரியான உச்சரிப்பு என்று பெங்காளி நண்பர் தெரிவித்த செய்தியை 'இந்தியா' பத்திரிகையில் பிரசுரம் செய்து இருந்ததை இங்கே நினைவுகூர்வது மிகப் பொருத்தமாக இருக்கும்.

''பொதுவாகக் கல்கத்தாவிலே பல தேசாபிமான முயற்சிகளிலும், விசேஷமாக சுதேசீயக் கல்விச் சங்க விஷயத்திலும் மிகப் பாடுபட்டு வருபவராகிய டாக்டர் 'ரஸ'விஹாரி'' கோஷ் என்பவரைப் பற்றி நாம் அடிக்கடி பிரஸ்தாபம் செய்துகொண்டே வருகிறோம். ஆனால் அவருடைய பெயர் நாம் எழுதி வருவதுபோல் ''ரஸ விஹாரி'' இல்லை என்றும், 'ராஸவிஹாரி' என்றும் நமக்கு ஒரு பெங்காளி பாஷை தெரிந்த நண்பர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெரிவிக்கிறார். 'ராஸ' என்பது பெங்காளத்தில் கிருஷ்ணன் கோபிகளுடன் செய்யும் களிக் கூத்திற்குப் பெயர். எனவே, 'ராஸ விஹாரி' என்பது ஸ்ரீ கிருஷ்ணனது நாமம்.''

(இந்தியா : 1.9.1906—பக்.13)

ராஷ் பிகாரி கோஷ் காங்கிரஸில் மிதவாதக் கட்சியைச் சார்ந்திருந்த காரணம் பற்றிப் பாரதி இப் பெரியவரைக் கடுமையாகத் தாக்கி எழுதிய சந்தர்ப்பங்களும் உண்டு.

3. பொருத்தமும், அவசியமும் கருதி 22ஆவது காங்கிரஸ் வரவேற்புச் சபையின் தலைவராக அமர்ந்த ராஷ் பிகாரி கோஷ் செய்த வரவேற்புரையின் சில பகுதிகள் 'இந்தியா'வில் வெளிவந்தபடி பார்ப்போமாக:

''சிலர் ராஜ பக்தியும் தேசாபிமானமும் ஒன்றற்கொன்று நேர் விரோதமான குணங்கள் என்று நினைக்கிறார்கள். அது பெரிய பிழையாகும். ஒரு பிரஜை தன்னுடைய அரசன்மீது பக்தி யுடையவரா யிருந்தால் அவன் தன் தேசத்தின்மீது பக்தி யற்றவரா யிருக்க வேண்டுமென்ப தவசியமா? தேசத்தின்மீது அன்புள்ளவன் அரசன்மீது அன்பற்றவ னென்று சொல்வது பொருந்துமா? உதாரணமாக, ஒருவன் தாயின்மீது அன்புள்ளவனா யிருப்பதுபோலவே தகப்பன் மீதும் அன்புள்ளவனா யிருத்தல் கூடுமன்றோ? ஆனால் தாய்-தகப்பன் இருவருக்குமிடையே பகை உண்டாகும் பொழுது அவன் தனக்கு யார்மாட்டு அன்பு அதிகமோ அந்தக் கக்ஷியில் சேர்ந்தவன்போல் தோன்றுகின்றான். யாரிடம் நியாயமிருக்கிறதோ அந்தக் கக்ஷியையே அவன் நாடுகின்றான். இது அவன் மீது பெரிய குற்றமாகுமா? அதுபோலவே இந்தியர்கள் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டா ரிடமும் அன்புள்ளவர்கள்தான். அதுபோலவே இந்தியா வாகிய தாய்நாட்டின்மீது அதிலும் அதிக அன்புள்ளவர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கள். ஆனால் கவர்ன்மெண்டாருடைய செய்கைகள் இந்தியாவுக்குத் தீமை விளைவிக்கக் கூடியவை களா யிருந்தால் இந்தியர் இந்தியாவின் பக்கம் நின்று தேசாபிமானம் காட்ட வேண்டியது மிகவும் அவசியம்தான். ஆனால் இந்த ஹேதுவினால் இந்தியர்க்குக் கவர்ன்மெண்டார் மீது ராஜ பக்தி கிடையாது என்று சொல்வது பொருந்துமா? இந்தியர் கள் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரின்மீது அன்புள்ளவர் களாயும், அவர்கள் இந்தியருக்குச் செய்த அளவற்ற நன்மைகளை மறவாதவர்களாயுமே யிருக்கின்றார்கள். என்றாலும், அந்தக் கவர்ன்மெண்டாரே இந்தியருடைய தாய் நாடாகிய இந்தியாவின் நன்மைக் கியையாத காரியங்களைச் செய்யத் தலைப்படுவார்களாயின் இந்தியர் சகிக்கமாட்டார்கள். இன்னுமொரு விஷயம். குடிகளைத் தன்னைப்போலெண்ணி நடத்தும் அரசன் மீது ஜனங்களுக்கு அதிக ராஜ பக்தி யிருக்கும். குடிகளுடைய சுக துக்கங்களையும் லாப நஷ்டங்களை யும், அவர்களுடைய கூச்சலையும் சிறிதும் கவனியாமல் தானினைத்தபடி தன் சுகத்தையே கருதி அரசு புரியும் அரசன்மீது அவ்வளவு ராஜ பக்தி இருப்பது அருமை. கொடுங்கோலரசர் மீதும்கூட ராஜ பக்தி காட்ட வேண்டுமென்பது நீதி சாஸ்திரத்தின் கொள்கை யன்று. சர்வ ஜனங்களையும் தனது உயிராக நினைத்து அரசாள்பவனே அரச னென்னும் பெயரைத் தரித்தற் குரியன். அவ்வாறின்றி உலகிலுள்ள சர்வ ஜனங்களும் அரசனுடைய சௌக்கியம் ஒன்றிற்காகவே பிறந்து வாழ்கின்றதாய் எண்ணி அரசாள்பவன் பிரஜை களிடமிருந்து ராஜ பக்தியின் வாஸனையைக்கூட எதிர் பார்க்க முடியாது. ஒருக்கால் எதிர்பார்க்கினும் அது அறியாமை யாகும். இப்பொழுது வங்காள பொது ஜனங்களின் மனது கலங்கி நிற்கின்றது. இக் கலக்கத்தை அரசாட்சியார் தக்க விதமாய்ச் சாந்தப்படுத்தினா லன்றி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அக் கலக்கமும் கொதிப்பும் அமையாது. எப்பொழுது அமையவில்லையோ அது எவ்வம் மட்டிலும் திரும்பி விடுமோ தெரியவில்லை. கால தேச வர்த்தமானங்களை யறியாமலும் அந்நிய நாடுகளில் நடக்கும் குழப்பங்களை யும் ஆவேசங்களையு முணராமலும் சும்மா இந்தியரைக் காலடியிற் போட்டு மிதித்து விடலாமென்று பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் எண்ணும் எண்ணமானது அவர் களுக்கு முடிவில் நன்மை தரவே மாட்டாது என்பதிற் சந்தேகம் சிறிதுமில்லை. கவர்ன்மெண்டார் இவற்றைக் கவனித்து நன்மையைத் தேடுவார்களாக.''

(இந்தியா : 29.12.1906—பக். 4-5)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ தாதாபாய் நௌரோஜியின் உபந்நியாஸம்

[இந்தக் கட்டுரையில் தாதாபாய் நௌரோஜி தலைமை வகித்துப் பேசிய சொற்பொழிவு மிகவும் பொருள் செறிந்தது என்று விதந்து பாராட்டுகிற பாரதி, தலைமைப் பொழிவு முழுதையும் வெளியிடாமல் சாரத்தைச் சொல்லி, தம்முடைய ஆசையையும் புலப்படுத்தி யுள்ளார்.]

இவ் வருஷத்திய காங்கிரெஸில் ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி செய்திருக்கும் சபாநாயக உபந்நியாஸமானது மிகுதியும் பொருள் நிறைவுள்ளதுமாயிருக்கின்றது. முதற்கண் இந்தியருக்குச் சுய ஆட்சி (Self government) கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறதோடு அதற்கு நான்கு போதிய நியாயங்கள் கொடுத்துத் தமது கக்ஷியைப் பசுமரத்தாணி போல் ஸ்தாபிக்கின்றார். அந் நியாயங்களாவன:—

1. The Birth Right [ஜனன பாத்தியம்] :

நாம் நமது தாய்நாடாகிய இந்தியாவிற் பிறந்து வளர்ந்திருக்கின்றது மன்றி, அதையே நம்பி வாழ்கின்றோம். தம் தேசத்தைத் தாமே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரசு செய்தாலன்றி எத்தேசத்தாருக்கும் சுகம் கிடையாது. ஆகையால் இந்தியாவை இந்தியரே ஆளவேண்டும். இந்தியாவின் குறைபாடுகளும் அவற்றை நிவர்த்திக்க வேண்டிய வழிகளும் இந்தியர்க்குத்தான் தெரியுமேயன்றி, வேறொருவருக்கும் தெரியாது.

2. Pledged Right [வாக்குறுதிப் பாத்தியம்] :

பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இந்தியாவைக் கைப்பற்றி அரசாளத் தொடங்கிய பொழுது, இந்தியர்களையும் பிரிட்டிஷ் பொது ஜனங்களையும் ஒன்றுபோல நடத்துவதாய்ச் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறார்கள். அந்தச் சத்தியத்தின் பிரகாரம் பிரிட்டிஷ் ஜனங்களுக்குச் சுய ஆட்சி கொடுத்தது போலவே இந்தியருக்கும் சுய ஆட்சி கொடுக்கக் கவர்ன்மெண்டார் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

3. Reparation [பிரதிபலன்] :

சென்ற சுமார் 150 அல்லது 200 வருஷ காலமாக இந்தியர் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருடைய கொடுங்கோலின் கீழ் அநேக கஷ்ட நஷ்டங்களை அநுபவித்திருக்கிறார்கள். அந்தத் துக்கங்களையெல்லாம் நிவர்த்தி செய்து அதற்குத் தக்க சந்தோஷத்தை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இனியாவது அநுபவிக்க இந்தியர்களுக்குப் பாத்திய மில்லையா? ஒரு காலத்தில் துக்கம் அனுபவித்தவனுக்கு ஒரு காலத்தில் சுகமுண் டென்பது கடவுளுடைய நீதி யல்லவா?

4. Conscience [மனச்சாக்ஷி] :

நாகரீகமடைந்த ஒவ்வொருவனும் தன்னைப்போலவே பிறரையும் எண்ணி நடத்த வேண்டு மல்லவா? தனக்கொரு வழக்கும் பிறருக்கு ஒரு வழக்கும் பேசுவது நாகரீக மடைந்த உயர்ந்த ஜாதியாராகிய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கு அகௌரவமும் அநீதியு மல்லவா? ஆகையால் பிரிட்டிஷ் ஜனங்கள் சுய ஆட்சி அனுபவிப்பதுபோலவே இந்தியரையும் சுய ஆட்சி அனுபவிக்கும்படி விட்டுவிடுவது தான் நியாயமும் கௌரவமு மாகும்.

இரண்டாவது, பொது ஜனங்களுடைய சுக துக்கங்களை உள்ளபடியே அரசாட்சியாருக்கு எடுத்துச் சொல்வதற்கு அந்த ஜனங்களால் தெரிந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே தக்கவர்களன்றிக் கவர்ன்மெண்டார் தாம் நினைத்தபடி செய்வது ஒருபொழுதும் நீதியாகாதென்று விளக்கிக் காட்டு கின்றார்.

மூன்றாவது, பொருள் விஷயத்தில் பிரிட்டிஷாரையும் இந்தியர்களையும் ஒன்றுபோல் நடத்த வேண்டும். ஒருவர் பணத்தை வாரி ஒருவர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கையில் கொடுக்கப்படாது. இந்தியா சம்பந்தமான விஷயங்களில் இந்தியர் பணத்தைச் செலவிட வேண்டும். பிரிட்டிஷாருடைய சுகத்துக்காக இந்தியர் பணத்தைச் செலவிடுவது ஒரு பெரிய அநீதியாகுமென்று வாதிக்கின்றார்.

பின்னர், இந்தியருக்குச் சுய ஆட்சி கொடுக்க வேண்டிய முறைகளையும், எவ்வெப்பொழுது என்னவிதமாய் கொடுக்க வேண்டுமென்ற வழிகளையும் பிரேரேபிக்கின்றார். இந்தியன் ஸிவில் ஸர்விஸ் பரீக்ஷையை முதல் முதல் இந்தியாவுக்குக் கொண்டு வரவேண்டும். அப்படியே மெல்ல மெல்ல இந்தியர்களுக்கு உயர் பதவி உத்தியோகங்கள் தரவேண்டுமென்கின்றார். பின்பு மகமதியர்கள் சம்மந்தமாய்ச் சிறிது பேசி, மகமதியரும் இந்துக்களும் ஒத்துழைத்தாலன்றி இந்தியா நன்மை யடையாதென்கின்றார். இந்தியாவிற் காணப்படும் அநேக மகமதியர்கள் பூர்வத்தில் சில நூற்றாண்டுகளுக்கு முன்னமே இந்துக்களா யிருந்தவர்கள் தானென்று ரூபிக்கின்றார். அதன்பின் வங்காள மாகாணப் பிரிவினை, சுதேசீயம் — இவற்றின் சம்பந்தமாய் பேசுகின்றார். சுதேசீயம் இந்தியாவின் கைத்தொழிலபிவிர்த்திக்கு மிகவும் இன்றியமையாததுதானென்று மனப்பூர்வமாய் ஒப்புக்கொள்ளுகின்றார். முடிவில், இந்தியர்கள் அனைவரும் மத வேற்றுமை, ஜாதி வேற்றுமை, குல வேற்றுமை முதலிய யாதொரு வேற்றுமையு மின்றி ஒன்றுகூடி உழைக்க வேண்டுமென்றும், நமது தாய்நாடாகிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தியா பூர்வீக செல்வத்தையும் செழிப்பையும் திரும்ப அடையும்படி செய்து இந்திய மாதாவை மகிழ்விக்கச் செய்து நாமும் மகிழ வேண்டுமென்ற தேசாபிமானமும், உண்மையான பற்றும்' ஆசையும், ஊக்கமும், விடா முயற்சியும், அஞ்சாமையும், கலங்காமையும், சலியாமையும் ஒவ்வொரு இந்தியனுடைய மனதிலும் இராப் பகலா யிருக்க வேண்டுமென்றும் தாம் அப்படிப்பட்ட இனியதும் அரியதும் பெரியதுமான ஒரு காலத்தைத் தமது கண்ணாற் பார்க்கக் கூடியவாறு ஈசன் சிறிது தமது வாழ்நாட்களை நீடித்து வைப்பாரென்று நம்புவதாயும் சொல்லி முடித்தார்.

இதுவரை காங்கிரெஸ் சபாநாயகர்கள் செய்த எல்லாப் பிரசங்கங்களிலும் இது மிகவும் உயர்ந்ததும் பொருளமைதி பெற்றதுமென்பதில் தினையளவும் ஆக்ஷேபமில்லை என்பது எமது மனப்பூர்வமான அபிப்பிராயம். ஈசன் எமது ஸ்ரீ தாதாபாய்க்கு நீடித்த ஆயுளைக் கொடுக்குமாறு கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

(இந்தியா : 29.12.1906—பக். 6)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

காங்கிரஸ் நிகழ்ச்சிகள் அனைத்தையும் முழுதுமாக 'இந்தியா' பத்திரிகையில் வெளியிட இயலாமைக்கான காரணமாகப் பாரதி தரும் செய்தியாவது :

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"சென்ற டிசம்பர் மாதம் நடந்த 22-வது இந்தியன் நேஷனல் காங்கிரஸில் நடந்த உபந்நியாஸங்களையும் அதன் முக்கிய சாரங்களையும் எமது பத்திரிகையில் ஆதியோடந்தமாக எழுதவில்லை. ஏனெனில் அதை எழுதப் புகுந்தால் பத்திரிகை முழுதையும் கொள்ளுமென்றே. அதைத் தனிப் புத்தகமாகச் செய்து விடுவதாக எண்ணியும், அதை எழுதுவதால் இந்த வாரத்தில் அறிய வேண்டிய விஷயங்கள் நின்று விடுமென்றே பயந்து அதை நிறுத்தினோம்."

(இந்தியா : 5.1.1907—பக்.5)

'சுதேச மித்திரன்' புத்தகசாலைப் பிரிவு தாதாபாய் நௌரோஜியின் பிரசங்கத்தை நூலாகப் பிரசுரித்தது.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாதாபாய் நவுரோஜியின் அட்ரஸின் கருத்து

[இக் கட்டுரை தாதாபாய் நௌரோஜி அவர்கள் 1906ஆம் வருடத்திய காங்கிரஸ் மகாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவைப்பற்றிப் பாரதி தெரிவித்த கருத்துக்களைப் புலப்படுத்துகிறது. "நமக்கு வேண்டியது, ஒரே வார்த்தையில் 'ஸ்வராஜ்யம்' என்ற ஒன்றுதான். அதாவது பிரிட்டிஷ் நாட்டிலும் குடியேற்ற நாடுகளிலும் நடப்பது போன்ற ஆட்சிமுறை இங்கும் ஏற்படவேண்டும் என்பதே. நம்முடைய துன்பங்கள் எல்லாம் தீர சுயாட்சிதான் மருந்து. நமது மேன்மையும், பலமும், நம்பிக்கையும் சுயாட்சியில்தான் உண்டு" என்கிற நௌரோஜியின் முழக்கம் பாரதியைப் பெரிதும் கவர்ந்தது என்பதற்கு இக் கட்டுரையே தக்க சான்று.]

இதுவரையில் கண்டிராத பெருங் கூட்டம் கூடிய சென்ற வருஷக் காங்கிரஸில் அக்கிராஸனம் வகித்த தாதாபாய் நவுரோஜியின் உள் ஆழ்ந்த கருத்தைப் பொருக்கிச் சேர்த்துப் பார்க்குமிடத்து இதற்குமுன் அவர் இரண்டு தடவை[1] அக்கிராஸனம் வகித்துப் பிரஸங்கித்ததற்கும் இப்போது பிரஸங்கித்ததற்கும் ஓர் மாறுபாடு உண்டா யிருக்கிறது. இவர் இப்போது செய்திருக்கும் பிரசங்கத்தில் கண்ட விட மெல்லாம் "சுய ஆட்சி வேண்டும், சுய ஆட்சி வேண்டும்" எனச் சொல்லி, அதற்கு அனுகூலமாகப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பார்லிமெண்ட் மெம்பர்கள் வெளியிட்டிருக்கும் பல நல்ல அபிப்பிராயத்தையும் இடை இடையே காட்டி யிருக்கிறார்.

சுய ஆட்சி யில்லாமல், எதையும் பெற முடியா தென்று வற்புறுத்தி யிருக்கிறார். இந்தியாவில் பஞ்சமும், நோயும், பட்டினியும் நீங்க வேண்டு மானால் சுய அரசாட்சி பெற வேண்டுமென்று உறுதியாய்ச் சொல்லுகிறார். இதுவரையில் பலவகையாலும் கஷ்டப்பட்டு நன்மை உண்டாக்க முயன்ற இவர் கடைசியில் வேறு வழியின்றியே சுய ஆட்சி பெற வேண்டுமென்கிற எண்ணமுண்டாகி, மனக்கொதிப்படைந் திருக்கிறார். ஆனால், லிபரல் கட்சியார்[2] ஆளத் தொடங்கி யிருப்பதில் ஏதோ பெரு நம்பிக்கைகள் வைத்து, "அது நமக்கு ஏதேதோ நன்மைகளை யுண்டுபண்ணிவிடும். பொறுங்கள் பொறுங்கள்" என்கிறார். ஆனால் லிபரல் கட்சியாரோ எது செய்வதால் தங்களுக்குக் கெடுதி யில்லையோ அதைத்தான் செய்து வருகின்றார்கள்.

ஜான் மார்லி[3]யும், "இந்தியா என்றைக்கும் சுய ஆட்சி பெறக் கூடாது" என்று உறுதிமொழி கூறியிருப்பதை நாம் முன்னமே கேட்டிருக்கிறோம். இப்படிப்பட்டவர் ராஜாங்கத் தலைவரா யிருக்கும் போது சுய ஆட்சி எப்படிக் கிடைக்கும்? நமக்கு ஏதாவது நன்மை கிடைக்க வேண்டுமானால் நம்முடைய முயற்சியினாலேயே யன்றி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேறொருவரை நம்பி யிருக்க லாகாது. இங்கிலாந்தில் லிபரல் கட்சி வருவதும், கன்ஸர்விடிவ் கட்சி[1] வருவதும் நமது நற்காரியங்களுக்கு யாது ஸம்பந்தத்தையும் பெற்றில்லை. நமக்குச் சுய ஆட்சி வேண்டுமானால் நம்மாலேயே ஆக வேண்டுமன்றி வேறொருவரை நம்பி யிருத்தல் "மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்கினது" தான். நமது தேசாபிமானம் முதிர்ந்து ஒரே மனசு கொண்டு உறுதி மனத்துடன் அவர்களை வற்புறுத்திக் கேட்கும்போதுதான் அவர்கள் அதைச் செய்தே தீரவேண்டிய தென்னும் ராஜதந்திரத்தை யறிவார்கள்.

ஆனால், அப்படி வற்புறுத்தும் விதம் எப்படி யென்பதைத்தான் நாம் இது வரையில் எதிர் பார்த்திருந்தோம். தாதாபாய் நவுரோஜி சொல்லி யிருக்கும் சுய அரசாட்சிக்கு மார்க்கம் உத்தேசித்துப் பார்ப்போமாகில், இது வரையில் அனுசரித்து வந்த விண்ணப்பமும் கெஞ்சலும் தொலைந்து, புதிய கட்சியின் கொள்கையாகிய "நமக்கு நாமே துணை" யென்னும் கொள்கையையே கொண்டு பாடுபட வேண்டும்.

(இந்தியா : 5.1.1907 — பக். 7)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. 1906ஆம் ஆண்டில் நௌரோஜியின் சொற்பொழிவில் மாறுபாடு காண்கிறார், பாரதி. 1886, 1893ஆம் வருடங்களில் காங்கிரஸ் மகாநாட்டில் நௌரோஜி ஆற்றிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உரைகளைப் பாரதி ஒப்புநோக்குவதால், வாசக நேயர்களின் வசதிக்காக, முன் இரு முறைகள் அப் பெரியார் ஆற்றிய உரைகளை இங்கே தந்துள்ளோம்.

இதன் சிறப்பம்சம் என்னவெனில், பாரதியே தாதாபாய் நௌரோஜி அவர்களின் தலைமை உரைகளைக் காங்கிரஸ் சரித்திர நூலை மொழிபெயர்த்தபோது ஆக்கியமைதான். 'பாரத ஜனசபை - காங்கிரஸ் சபையின் சரித்திரம்' என்னும் தலைப்பிலான நூலைச் சுதேச மித்திரன் புத்தக சாலைப் பிரிவு 1919 நவம்பர் மாதம் பிரசுரம் செய்தது.

1886ஆம் ஆண்டில் கல்கத்தாவில் நடந்த இரண்டாவது கூட்டத்தின் சபாநாயகரான ஸ்ரீமான் தாதாபாய் நவுரோஜி பேசியதன் சாராம்சம் வருமாறு :

"என்னை இந்த ஸ்தானத்தில் உயர்த்தியது பற்றி நன்றி கூறுகிறேன். இரண்டே தினங்களுக்கு முன் இந்த சபையின் தலைமை ஏற்கும்படி என்னை வேண்டிய போது நான் மிகவும் உடன் அங்கீகாரம் செய்தேன். எனது குற்றங் குறைகளைப் பொறுக்கவேண்டும். இந்த ஜன சபை கூடியது பாரத தேச சரித்திரத்தில் மிகவும் முக்கியமான செய்திகளில் ஒன்றாம். விக்கிரமாதித்தன் முதலிய ஹிந்து ராஜாக்களின் அற்புத ராஜ்ய காலங்களிலேகூட இந்த மாதிரிக் கூட்டம் ஸாத்யமில்லை. அப்போது வெவ்வேறு மாகாணங்களிலுள்ள ஹிந்துக்களேனும் இங்ஙனம் ஒன்றுகூடி ஒரு ஜாதியாகப் பேசியிருப்பார்களா? ஹிந்து சக்ரவர்த்திகளைக் காட்டிலும் மஹமதியர் அதிக விசாலமான பூமியை ஆண்டனரென்று நினைக்கிறேன். அவர்களுடைய ஆட்சியின்போதும் இப்படிப்பட்ட கூட்டம் கூட இடமுண்டா? எல்லா ஜாதிகளும், இனங்களும் ஒரே பாஷை பேசுவோராய், ஒரே வித உயர்ந்த நோக்கங்களுடையோராய் இங்ஙனம் கூடியிருப்பார்களா? நாம் இங்கே எதன் பொருட்டுக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூடியிருக்கிறோம்? நம்முடைய எதிர்காலத்தில் மேன்மைப் படுவோமா, வீழ்ச்சி பெறுவோமா என்ற விஷயத்துக்கு ஆதாரமான கேள்விகளை ஆராய்ச்சி செய்யும் பொருட்டாக வந்து கூடினோம். இங்ஙனம் கூடுதல் நமக்கு பிரிட்டிஷ் ராஜ்யமொன்றிலே தான் ஸாத்யப்படும். இப்படி ராஜ்யம் கிடைத்தது நம்முடைய அதிர்ஷ்டம். இங்கிலாந்தின் ராணியும் ஜனங்களும் ஆளும் ஆட்சி நாகரிகத்துக்குத் தூண்டுதலிடக் கூடியது. இதன் கீழே கூடினோம். நம்மைத் தடுப்பாரில்லை. பயமில்லாமல், திகைப்பில்லாமல், மனதில் உள்ளதை இஷ்டப்படி பேசலாம். நான் இப்போது தெளிவாக ஒரு கேள்வி கேட்கிறேன். இந்த ஜனசபை ராஜத் துரோகத்தையும் கலகத்தையும் வளர்க்கும் கூட்டமா? (அன்று; அன்று) பிரிட்டிஷ் ராஜ்யத்திற்கு இஃதொரு ஸ்திரமான அஸ்திவாரக் கல் அன்றோ? (ஆம்-ஆம்)

நமக்கும் அதிகாரிகளுக்கும் உள்ள சம்பந்தம்

இங்கிலீஷ் ராஜ்யத்தினிடம் நாம் பூரா அன்பும் ஆதரவும் கொண்டிருக்கிறோம். அவர்கள் நமக்குச் செய்த நன்றிகளை எல்லாம் மறக்கமாட்டோம். அவர்கள் நமக்குக் கொடுத்த கல்வியினால் ஒரு புதிய ஒளி பெற்றோம். ஜனங்களுடைய நன்மைக்காக ராஜாவேயொழிய ராஜாவுக்காக ஜனங்களில்லை யென்ற பாடம் அவர்கள் கற்றுக்கொடுத்தார்கள். ஆசியாவின் கொடுங்கோன்மையாகிய இருளுக்கிடையே ஆங்கிலேய நாகரிகத்தின் விடுதலை ஒளி நமக்குக் கிடைத்தது. (கரகோஷம்) ஆனால் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நாம் சொல்வதை உண்மை யென்று நம்புகிறார்களா என்பது கேள்வி. நமது விசுவாஸத்தை அவர்கள் அங்கீகரிக்கிறார்களா? அங்கீகரிப்பாரும் சிலர் நம் அதிகாரிகளில் உளர் என்பதை ருஜுப்படுத்தச் சிறந்த ஸாக்ஷ்யம் இருக்கிறது. லார்ட்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ரிப்பன் சொல்லியதுபோல 'எது இந்தியாவுக்கு நன்மையோ அதுவே இங்கிலாந்துக்கும் நன்மை' என்பதை அவர்கள் அறிந்தனர். இங்கிலீஷ் படித்த வகுப்பினரைப் பற்றி ஸர் பார்ட்டில் ப்ரேர், இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் சொல்லிய அபிப்பிராயத்தைக் கேளுங்கள். அவர் இந்த தேசத்து ஜனங்களிடம் நெருங்கிய பழக்க முடையவர். அவர் சொன்னார்: "நான் போகுமிடமெல்லாம் இங்கிலீஷ் கவர்ன்மெண்டின் வழியைப் புகழ்ந்து பேசி அதை இந்தியா சுதேசிகளின் இயற்கைக் குணங்களுடன் ஒட்டி வைப்போர் யாரெனில் ஆங்கிலம் படித்த சுதேசிகளே யாவர்" என்கிறார். இது நம்முடைய உண்மைக்கு ஸாக்ஷி. ஜனங்களுக்கும் அதிகாரிகளுக்குமிடையே நாமே உண்மையான மத்யஸ்தரென்று நாம் சொல்வதற்கு இஃதொரு பலம். இப்போது இந்தியா கவர்ன்மெண்டாரின் வாக்யத்தையே எடுத்துக் காட்டுகிறேன். இந்தியா மந்திரிக்கு அனுப்பிய அறிக்கையொன்றில் (1880-ஜூன்-8) கவர்ன்மெண்டார் சொல்லுகிறார்கள்: "நாம் ஆயுத பலம் காட்ட வேண்டிய அவசியமில்லாமலே ஜனங்கள் நமது ராஜ்யத்தை அங்கீகாரம் செய்துகொள்ளுகிறார்கள். இதன் காரணங்கள் எவை யென்றால், நாம் ஸமாதானத்தைக் காப்பாற்றுகிறோம்; நீதி செலுத்துகிறோம்; தேசத்துக்கும் ஜனங்களுக்கும் பலவித லௌகிக நன்மை செய்திருக்கிறோம்; இன்னும் செய்கிறோம்; இந்தியாவிலும் வெளியிலேனும் நமதிடத்தை வஹிக்கக்கூடிய பலமுள்ள ராஜ்யம் வேறில்லை என்கிறார்கள். இதனால் இப்போதுள்ள நிலைமையில் ஸமாதானத்தைக் காக்கவும் எதிர்கால அபிவிருத்தியை உறுதியாக்கவும் வல்லது பிரிடிஷ் ராஜ்யம் ஒன்றுதான் என நாம் நம்புவதை அவர்கள் தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள் என்பது ருஜுவாகிறது. இது பொது ஜனங்களைப் பற்றிக் கூறியது. இனி இங்கிலீஷ் படித்த வகுப்பினருக்கு விசேஷ உரை சொல்லப்பட்டிருப்பதைக் கேளுங்கள். மேற்படி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸர்க்கார் அறிக்கை கூறுகின்றது: "இந்திய ஜனங்களில் இங்கிலீஷ் படித்தவர்களின் தொகை விரைவாக அதிகரித்து வருகிறது. இவர்களுடைய புத்திக்கு நிச்சய மாகவே பிரிட்டிஷ் ராஜ்யத்தைப் புரட்டிவிடவேண்டு மென்ற கொள்கை முற்றிலும் விரோதமானது. அங்ஙனம் செய்தால் மஹா கொடூரமான அராஜகமும் குழப்பமும் ஏற்படுமென்பதை இவர்கள் அறிவார்கள்." ஆகவே நம்மிடம் அதிகாரிகள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்ற உறுதியுடன் நாம் நிர்ப்பயமாக ஸமாதான நிதான மாக மரியாதையுடன், இஷ்டப்படி நமக்கு வேண்டிய தைக் கேட்கலாம். பிரிடிஷார் நமக்கு எவ்வளவோ செய்திருக்கிறார்கள். ஆனால் இன்னும் அதிகம் எவ்வளவோ செய்தால்தான் அவர்களுடைய பெருந் தொழில் நிறைவேறியதெனத் தகும்.

மஹாராணியின் ராஜ்யத் திருவிழா

அடுத்த வருஷம் நமது நல்ல ராணி—சக்ரவர்த்தினியின் ஆட்சி தொடங்கி ஐம்பது வருஷங்கள் முடியும் திருவிழா. இதையே காங்கிரஸ், தனது முதல் தீர்மானத்துக்குரிய விஷயமாகத் தெரிந்தெடுத்திருக்கிறது. காருண்ய மஹா ராணிக்கு மகிழ்ச்சிகள் தெரிவிக்கிறோம்.........

காங்கிரஸ் சபையும் ஆசாரத் திருத்தமும்

இந்த ஜனசபை ஆசாரத் திருத்தத்தைப் பற்றிய விஷயங்களையும் கவனிக்கவேண்டுமென்றும், அங்ஙனம் செய்யாதிருத்தல் நமக்கொரு பழி யென்றும் சிலர் தூற்றுகிறார்கள். ஆசாரத் திருத்தம் அவசியமென்பதை நான் மிகவும் நன்றாக அறிவேன். ஆனாலும், கனவான்களே, ஒவ்வொரு விஷயத்துக்கும் தகுந்த காலம், தகுந்த இடம், தகுந்த சந்தர்ப்பம், தகுந்த மனிதர் — இவை யெல்லாம் தனித்தனி யுண்டு. (கரகோஷம்) நாம் ராஜரீகக் கூட்டத்தார்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நமது ராஜரீக ஆசைகளை ஆள்வோரிடம் தெரிவிக்கும் பொருட்டு நாம் கூடினோம். ஆசாரத் திருத்தங்களை விவாதம் செய்ய நாம் கூடவில்லை. நாம் இவற்றைப் புறக்கணிப்பதாக நீங்கள் குறை கூறுவீராயின், காமன்ஸ் சபையார் கணித சாஸ்த்ர, வேதாந்த சாஸ்த்ரங்களின் ஸூக்ஷ்ம விசாரணை நடத்த வில்லை யென்று அந்த சபையார் மீது குறை கூறலொக்கும். மேலும் இங்கு ஸகல ஜாதி ஹிந்துக்களும் உளர். ஒரே மாகாணத்து ஹிந்துக்களுக்குள்ளே ஆசார விவகாரங்கள் மிகவும் வேற்றுமைப்படுகின்றன. மேலும் இங்கு மஹமதியரும் பல வகுப்புக் கிறிஸ்தவரும் பார்ஸி களும் சீக்கரும் ப்ரம்ம ஸமாஜத்தாரும் பிறரும் சேர்ந் திருக்கின்றனர். பாரத ஜாதியைச் சேர்ந்த எல்லா வகுப்பு மனிதரும் இங்குளர். தனித்தனி வகுப்புக்களுக்கும் அவசியமான ஆசாரத் திருத்தங்களை எல்லா வகுப்புக் களுக்கும் பொதுவான இந்த ஸபை எப்படி வாதிக்கும்? நமது வகுப்பைத் தவிர மற்றொரு வகுப்பின் வீட்டு வழக்கங்களையும், ஆசாரங்களையும், உணர்ச்சிகளை யும் தப்பெண்ணங்களையும் நாம் எவரும் உணர மாட்டோம். அந்தந்த வகுப்பிற்குரிய சீர்திருத்தங்களை அந்தந்த வகுப்பினர் செய்துகொள்வதே பொருந்தும். தேசீய ஜனசபை தேச முழுமைக்கும் பொதுவான விவகாரங்களைக் கவனிக்கும். ஆசாரத் திருத்தங்கள் முதலிய வகுப்பு விவகாரங்களை வகுப்புக்கள் கவனிக்க வேண்டும். இந்த தேசீய ராஜ்யசபை ஆசாரச் சீர்திருத்த விஷயங்களை வாதிக்காதபடியால், இங்குள்ள பிரதிநிதி கள் ஆசாரத் திருத்த விஷயத்தில் ராஜ்ய விஷயங் களுக்கு ஸமமான அல்லது அதிகமான சிரத்தை பாராட்டவில்லை யென்று நினைத்துவிடக் கூடாது. இந்தப் பிரதிநிதிகளின் வகுப்பினர் ஆங்காங்கே தத்தமக்கு வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்து கொள்ள முயலாதிருக்கிறார்களென்றும் கருதலாகாது. ஒவ்வொரு வகுப்பிலும் உயர்ந்த நிலைமை பெறவேண்டி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எத்தனை கஷ்டமான பிரயத்தனங்கள் செய்யப் படுகின்றன என்பதைக் கண்ணும் செவியும் திறந்த மனிதன் எவனும் எளிதாக உணரலாம். நமக்குக் கிடைத்திருக்கும் உயர்ந்த கல்வியினால் இந்தப் பயன் விளைந்திருப்பது ஸஹஜமே.

இங்கிலாந்தினிடம் நம்பிக்கை

சென்ற காங்கிரஸ் சபையின் தொழிலைக் குறித்துச் சுருக்கமாகக் கொஞ்சம் சொல்லுகிறேன். சென்ற வருஷம் இந்த மாஸம் காங்கிரஸ் சேர்ந்ததற்கப்பால் கொஞ்சம் அபிவிருத்தி கிடைத்திருக்கிறது. நாம் நியாய மான விஷயத்தைக் கேட்டால் சீக்கிரமாக இல்லா விட்டாலும், மெதுவாகவேனும், பிரிடிஷ் கவர்ன்மெண்ட் கொடுக்கத் தான் செய்யுமென்பதற்கு இஃதொரு ருஜு. ஆதலால் இங்கிலாந்தின் ஹ்ருதய சுத்தத்தை நம்பி நாம் விடாமுயற்சியுடன் உழைக்கவேண்டும். நியாயமும் நீதியு மானதை எவ்வளவு நஷ்டப்பட்டும் இங்கிலீஷ் ஜாதி செய்து தனது யோக்யதையை நிலைநிறுத்திக் கொள் ளும். சென்ற ஜனசபையில் நாம் ஒரு 'ராயல் கமிஷன்' நியமிக்க வேண்டுமென்று முதலாவது பிரார்த்தனை செய்து கொண்டோம். இங்கிலாந்திலுள்ள அதிகாரிகள் ஒரு 'ராயல் கமிஷன்' ஏற்படுத்த மனமில்லாதவர்களாக இருக்கிறார்கள். அங்ஙனம் செய்தால் இங்குள்ள அதிகாரிகளுக்குக் கஷ்டம் உண்டாகுமாம். இங்குள்ள கவர்ன்மெண்டாரின் கவுரவத்துக்கும் அதிகாரத்துக்கும் ஹானி நேரிடுமாம். இங்ஙனம் சொல்லுதல் இங்குள்ள அதிகாரிகளுக்கு அவமரியாதை யென்று நினைக்கிறேன். இப்போதுள்ள வைஸிராய் லார்ட் டப்ரின் ஆட்சித் தொழிலில் மிகுந்த அனுபவமுடையவர். ஒரு பெரிய ஸாம்ராஜ்யத்தை ஆளத் தெரிந்தவர். ஒரு விசாரணைக் கட்டம் வந்து இங்கு விசாரணைகள் செய்வதனாலே இவர் பயந்துபோய் விடுவாரா? பார்லிமெண்ட் சபையின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கமிட்டி யொன்று நியமித்து இங்கிலாந்தில் ஸாக்ஷ்யம் விசாரிப்பதாகச் சொல்லுகிறார்கள். அது போதாது. அந்தக் கமிட்டி, இந்திய விஷயங்களை நேரே கண்ணால் பார்க்க முடியாது. காதாலே கேட்கத்தான் முடியும். எனினும் இப்படி ஒரு கமிட்டியாவது நியமிக்கப் போவதாகச் சொல்லி யிருப்பது நமக்குச் சற்றே சந்தோஷம். வடமேற்கு மாகாணங்களுக்கும் பஞ்சாபுக்கும் சட்ட சபை கொடுக்க வேண்டுமென்று நாம் ஒரு தீர்மானம் செய்தோம். (அந்த விஷயத்தில் கொஞ்சம் அபிவிருத்தி நடந்திருக்கிறது.) ஸமீபத்தில் கவர்ன்மெண்டார் வடமேற்கு மாகாணங்களுக்குச் சட்டசபை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். மற்ற மாகாணங்களின் விஷயத்திலும் நமது ஆசையை நிறைவேற்றுவார்களென்று நம்புகிறோம். நான்காவது தீர்மானம் உத்யோக விஷயங்களைக் குறித்தது. இதிலும் நாம் சற்றே முன்னேற்றம் பெற்றுத்தான் இருக்கிறோம். ஏற்கெனவே உத்யோக விசாரணைக் கூட்டம் நியமனமாய் விசாரணை நடந்து வருகிறது. நமக்கு ஏதேனும் செய்யத்தான் வேண்டுமென்ற எண்ணம் அதிகாரிகள் உண்மையாகவே கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு மேற்படி கமிஷன் ஏற்படுத்தியது தக்க ருஜுவாகும். இந்த விஷயத்தில் நமக்கு வைஸ்ராய் மாத்திரமே யல்லாமல் இந்தியா மந்திரியும் அனுகூலமாகவே இருக்கிறார்கள். இந்தியா மந்திரியின் தீர்மானம் சொல்லுகிறது. 'இந்த விசாரணைக் கூட்டத்தின் நோக்கம் யாதெனில்,... அரசாட்சி உத்யோகங்களில் இந்தியா தேசத்து சுதேசிகளை அதிகமாகவும் மேலான பதவிகளிலும் நியமிக்க வேண்டுமென்று அவர்கள் செய்யும் பிரார்த்தனைகளுக்கு முழு நியாயம் கிடைக்கும்படி ஒரு ஆலோசனை செய்து முடிக்க வேண்டும்' என்கிறது. இந்தியா தேசத்து சுதேசிகளின் வேண்டுதல்களுக்குத் தகுந்த நீதி செலுத்த வேண்டுமென்ற கொள்கை தமக்கிருப்பதாகத் தலைமை அதிகாரியே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சொல்லுவதைப் பார்த்தீர்களா? அந்த விசாரணைக்கு நாம் நன்றி தெரிவிக்கிறோம். நாம் கேட்பதெல்லாம் நியாய மென்றும் யாரும் அங்கீகரிக்கத்தக்க தென்றும் எல்லாருக்கும் தெளிவுறக் காட்ட முடியுமென்றே நம்புகிறோம்.

நம்மை ஆள்வோரின் கருத்து

பிரிட்டிஷ் அதிகாரிகளின் கருத்தை விளக்குவதற்கு மற்றொரு ருஜு காட்டுகிறேன். ஐம்பத்து மூன்று வருஷங்களுக்கு முன்னே சுதேசிகளுக்குத் தம்முடைய உரிமைகள் இன்னவென்று சரியாகத் தெரியாமலிருந்த காலத்தில், இங்கிலீஷ் ராஜ தந்திரிகள் தாமாகவே இந்தியா விஷயத்தில் அனுஸரிக்கத் தக்க வழியொன்று நிர்மாணஞ் செய்து கொண்டனர். அதைப்பற்றி நீண்ட விவாதம் நடந்தது. எல்லாச் சார்புகளினின்றும் அதைப் பரியாலோசனை செய்தனர். ஜனங்களுக்கு ராஜரீக அதிகாரம் கொடுப்பதனால் ஆபத்து விளையுமென்பதை யும் ஜனங்களுக்குத் திறமை போதாதென்பதையும் மற்றும் பலவிதமான ஆக்ஷேபங்களையும் யோசனை பண்ணிப் பார்த்தார்கள். கடைசியாக உறுதியான ஸம்சயத்துக் கிடமில்லாத தெளிவான பாஷையில் ப்ரிடிஷ் ஆட்சி நீதி வழியையே அனுஸரிக்க வேண்டு மென்ற தீர்மானம் செய்துவிட்டனர். மனுஷ்ய ஜாதியின் ஆறிலொரு பங்கினராகிய பாரத தேசத்தாரை மேன்மைப் படுத்துவதே சரியான வழியென்று கொண் டார்கள். பாரத தேசம் அவர்களுடைய கையில் ஈசன் சுமத்திய பொறுப்பென் றுணர்ந்து, மிஸ்டர் மக்காலே சொல்லியதுபோலே 'கடமையின் தெளிவான பாதை' யில் நடக்கத் துணிந்தனர். பாரத தேசத்து ஜனங்கள் பிரித்தானியாவின் அடிமைகளாய் ப்ரிடிஷ் உத்யோகஸ் தர் முன்னே அற்பத்தனமான முகஸ்துதி பேசுவோராய் நிற்கவேண்டுமென்பது தமது நோக்கமில்லை யென்றும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரத தேசத்தார் விடுதலை பெற்று ஸ்வராஜ்யம் நடத்த சக்தியுடையவராக ஆக வேண்டுமென்பதே தமது விருப்பமென்றும் அப்போது மக்காலே சொன்னார். (கரகோஷம்) இந்த ராஜ்ய தந்திரமே 1833ஆம் வருஷத்தில் கைக்கொள்ளப் பட்டது. அந்த வருஷத்தில் ஏற்பட்ட சட்டத்தில் பின்வருமாறு கூறப்படுகிறது:

மேலே குறிப்பிட்ட ப்ரதேசங்களின் சுதேசிகளிலே எவனும் அங்கு குடியிருக்கும் ப்ரிடிஷ் குடி எவனும் தன் மதம், பிறப்பிடம், சந்ததி, நிறம் என்பவை காரணமாகக் கம்பினியாரின் கீழே எவ்விதமான உத்யோகம், ஸ்தானம் அல்லது நியமனம் பெறுவதற்கும் தகுதியற்றவன் ஆக மாட்டான். (கரகோஷம்) அவ்வளவுதான் இப்போதும் கேட்கிறோம். ஐம்பது வருஷங்களுக்கு முன்பு நாம் வேண்டுமென்று கேட்கத் தெரியாமலிருந்த காலத்தில் அவர்களாகவே வாக்குக் கொடுத்த விஷயத்தை இப்போதாவது யோக்யமாக அனுஷ்டானத்தில் கொண்டு வரவேண்டுமென்பதை மேற்படி விசாரணைக் கூட்டத்தாரிடமும் ஸர்க்காரிடமும் வற்புறுத்திக் கூறுகிறோம். (கரகோஷம்)

மகாராணியின் ராஜ விளம்பரம்

பின்பு 1857-ம் வருஷத்தில் நமது நாட்டில் குழப்பங்கள் நடந்தன. அதில் ப்ரிடிஷாருக்கு வெற்றி உண்டாயிற்று. கஷ்டங்களை விலக்கிப் பகைவரை எல்லாம் அடக்கி விட்ட பின்பு ப்ரிடிஷார் பண்டு போலே மேலான நல்லெண்ணங்களை உடையவராய் நமக்கு அற்புதமான ராஜ சாஸனம் கொடுத்தனர். அந்த ராஜ ஸ்ரீ முகம் நமக்கு 1833ஆம் வருஷத்து சாஸனத்தைக் காட்டிலும் அருமையானது. ஆங்கிலேயருடைய சரித்திரத்தில் "மாக்நாகாந்த்தா" என்ற மஹாசாஸனம் எப்படியோ நமக்கு அப்படி இது. இந்தப் புகழ் மிக்க ஸ்ரீமுகத்தின் வாக்யங்களை இப்போது திரும்பக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூறுதல் அவசியமில்லை. அது உங்கள் உள்ளத்தில் வரையப்பட்டுள்ளது. அந்த ஸ்ரீமுகம் 1833ஆம் வருஷத்தில் நிச்சயிக்கப்பட்ட வழியை உறுதி பண்ணியது மாத்திரமே யல்லாமல் மேலும் போகிறது. நாம் இப்போது வேண்டுவன, இனி வேண்டக் கூடியன எல்லா வற்றுக்கும் ஆதாரங்கள் மேற்படி ஸ்ரீமுகத்தின்கண்ணே உள. இப்போது விசாரணை செய்யும் கமிஷனுக்கும் ஸர்க்காருக்கும் முன்னே போய் நின்று கொண்டு நாம் மேற்படி ஸ்ரீமுகத்தைத் திரும்பச் சொல்ல வேண்டியதே நம்முடைய கடமை. நமக்கு வேண்டியதெல்லாம் வெகு ஸ்பஷ்டமான பாஷையில் ஏற்கெனவே இந்த சாஸனத்தின் மூலமாக வாக்குக் கொடுத்தாய் விட்டது. அதில் சொல்லிய உதாரமான வரங்களை அனுஷ்டானத் திற்குக் கொண்டுவர வேண்டுமென்பதே நாம் இப்போது செய்யும் பிரார்த்தனை. இந்த விஷயத்தைக் குறித்து நான் எவ்வளவு நேரம் பேசின போதிலும் என் மனத்தில் உள்ளதை யெல்லாம் வெளியிட்டுக் கூறுதல் அரிது. ஆதலில் இத்துடன் நிறுத்துகிறேன்.

சட்டசபைகளை விசாலித்தல்

சட்டசபைகளில் ஜனப் பிரதிநிதிகளைக் கூட்டி அவற்றைச் சீர்திருத்தி விசாலமாக்க வேண்டுமென்ப தாகச் சென்ற வருஷத்தில் நாம் மற்றொரு தீர்மானம் செய்து கொண்டோம். இதில் மற்றோரடி எடுத்து வைக்கப் போகிறோம். பிரதிநிதி அம்சம் சட்டசபையில் சேர்ப்பது எங்ஙனம் ஸாத்தியமென்பதைக் காட்டி நாம் ஓர் ஆலோசனை தயார்செய்து ஸர்க்கார் பார்வைக்குக் கொடுக்கப்போகிறோம். பிரதிநிதி அம்சம் சேர்ந்தால் அதில் ஸர்க்காருக்கே இப்போது நன்மை உண்டு. எங்ஙன மெனில், சட்டங்கள் நமக்குத் திருப்தி இல்லாமல் இருந்தால் நாம் கேவலம் ஸர்க்காரைப் பழித்து முணுமுணுக்கிறோம். சட்டசபைகளில் நம்மவரும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிலர் இருந்த போதிலும் அவர்களிடத்திலே கூட நாம் முசாந்தரம் கேட்க பாத்தியதை இல்லாதவர்களாக இருக்கிறோம். அவர்கள் நம்முடைய பிரதிநிதிகள் அல்லர். ஆகவே வேண்டாத சட்டங்களில் நமக்குண்டாகும் அதிருப்தியிலிருந்து கவர்ன்மெண்டார் தப்ப வழியில்லை. நம்முடைய பிரதிநிதிகள் கூடியிருந்து பிழைசெய்து, நமக்கு விருப்பமில்லாத சட்டங்கள் செய்தால், அதிலிருந்து விளையும் ஜன கோபத்தினின்று ஸர்க்காருக்குத் தப்ப வழி உண்டு. "ஹோ, நாங்கள் என்ன செய்வோம்? இதோ உங்கள் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். உங்களுடைய விருப்பங்களையே அவர்கள் தெரிவித்ததாக நினைத்தோம். அதனாலே சட்டத்தை உறுதி செய்தோம். எங்கள் மேலே குற்றமில்லை என்று சொல்லி நழுவி விடலாம்." அப்படி யில்லாமல் கேவலம் ஆங்கில உத்யோகஸ்தர் எத்தனை கல்வி, கேள்வி, அறிவுக் கூர்மை உடையோ ராயினும், அன்றி வானத்திலிருந்து நேரே குதித்து வந்தவர்களாக இருந்த போதிலும், நமது ஜனங்களுடைய மனத்திலுள்ள நோக்கங்கள் நமக்கு விளங்குவதுபோலே அவர்களுக்கும் விளங்க ஹேதுவில்லை. நம்முடைய எண்ணங்களை வெளியிட நம்முடைய பிரதிநிதிகள் இருந்தால், நமக்குத் திருப்தியான சட்டங்கள் கிடைக்கும். நமக்கு எது திருப்தி தருவதோ அதுவே ஸர்க்காருக்குத் திருப்தி தருதல் வேண்டும். நமக்கு எது நல்லதோ அதுவே அவர்களுக்கும் நல்லது!

பார்லிமெண்டில் பிரதிநிதி

இதிலிருந்து நமக்குப் பார்லிமெண்ட் சபையிலும் பிரதிநிதிகள் வேண்டுமென்ற செய்தி ஞாபகத்துக்கு வருகிறது. இங்குள்ள ஆட்சியின் வடிவமும் குணமும் பார்லிமெண்ட் சபையோரின் தீர்மானப்படியே நிச்சயிக்கப்படுகின்றன. என்ன விஷயமாயினும் சரி,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சட்டசபையோ உத்யோக விஷயமோ எதுவாயினும் பார்லிமெண்ட் சபையார் இப்போதுள்ள விதிகளை மாற்றினாலொழிய எவ்விதமான சீர்திருத்தத்துக்கும் வழியில்லை. யாதேனு மொரு விஷயத்தைக் குறித்து இந்த தேசத்தாரின் கருத்து யாதென்பதை அறிவிக்க அங்கே நமது தேசத்தவர் ஒருவருமில்லை. இந்த விஷயத்தைச் சில பார்லிமெண்ட் மெம்பர்களே என்னிடம் குறிப்பிட்டுக் காட்டினர். இந்தியாவின் ஜனங்களுக்கு யதார்த்தமான பிரதிநிதி ஒருவர்கூட இல்லாமல் இருப்பது பார்லிமெண்ட் சபைக்கே ஓர் ஊனமென்பதை அவர்கள் நெடுங்காலமாக உணர்வதாகக் கூறினர்.

இந்தியாவின் வறுமை

நமது தேசம் வறுமையில் மூழ்கி யிருப்பது பற்றி வருந்துகிறோ மென்பது நாம் இங்கு பேசப் போகிற விஷயங்களில் முக்கியமானது. நாம் உத்யோகங்கள் வேண்டுமென்று கேட்பது இங்கிலீஷ் படித்த சிலருடைய திருப்திக்காக மாத்திரமே யென்று பலர் கருதுகிறார்கள். இதை நீங்கள் நேரே ஆராய்ச்சி செய்தால், நம்மவர் மேல் ஸ்தானங்கள் பெறுவதினின்றும் ஜனங்களுடைய தரித்திரம் குறைய ஹேதுவுண்டாகு மென்பதை எளிதில் உணர்வீர்கள். இரண்டு வருஷங்களுக்கு முன்பு ஸர். எவலின் பேரிங் என்பவர், "இந்திய ஜனங்கள் மிகவும் கொடுமையான வறுமையிலே வருந்துகிறார்கள்" என்று சொன்னார். இப்போதுள்ள அரசிறை மந்திரியும் அந்த வார்த்தையைத் திரும்பச் சொல்லி யிருக்கிறார்கள். நமது கஷ்டங்களின் மூலாதாரங்களில் இது முக்யமான தென்ற விஷயம் கவர்ன்மென்டார் புத்தியில் புலப்பட்டு வருவது நமக்குச் சற்றே அனுகூலந்தான். 1880ஆம் வருஷம் ஜனவரி மாதம் 26 ஆம் தேதி இந்தியா மந்திரி நாணய சம்பந்தமான விவாதத்தினிடையே பொக்கிஷ மந்திரிக்கனுப்பிய ஓலையில் எழுதி யிருக்கும் சில

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வார்த்தைகளைப் பார்க்கும்போது அதிகாரிகள் விஷய நிலைமையை அறிந்துகொண்டு தீர்ப்புக் கண்டுபிடிக்கும் நோக்கத்துடனேதான் இருக்கிறார்களென்றும், தீக்கோழி போலே கண்ணை மூடிக்கொள்ளவில்லை யென்றும் தெளிவாகிறது. இந்தியாவின் வறுமையை நான் ஆரம்பத்தில் உலகறியக் கூறி அன்னிய உத்தியோகஸ்தரின் நியமனம் அவ் வறுமைக் காரணங்களில் ஒன்றென்று காட்டியபோது என்னைப் பலர் பரிஹாஸம் செய்தார்கள். இப்போது அதனை அதிகாரிகளே அங்கீகாரம் செய்கிறார்கள். மேலே குறிப்பிட்ட ஓலை யின்கண்ணே இந்தியா மந்திரி பின்வருமாறு கூறு கிறார் :—

"தீர்வை விஷயத்தையும் ஸர்க்கார் வரும்படிக்குள்ள ஆதாரங்களின் விஷயத்தையும் யோசிக்கும்போது இந்தியாவின் நிலைமை வெகு விசித்திரமானது. ஜனங்கள் பழைய வழக்கங்களைக் கைக்கொண்டு புதுமைகளை விரும்பாதோர்; ஆதலால் புதுத் தீர்வை போடும் விஷயத்தில் மிகவும் அதிருப்தி காட்டுகிறார்களென்ற ஒரு காரணத்தால் மாத்திரமன்று; ஆட்சியின் குணமும் ஒரு காரணம். அது அன்னியர் வசத்தில் இருக்கிறது. எல்லா முக்ய உத்யோகங்களையும் அன்னியர் வஹிக் கிறார்கள். சேனையிலும் அதிகத் தொகையாக இருக்கிறார்கள். தேசத்தின் மீது சுமத்தப்பட்ட பிறர் ஆட்சியின் பயனாக ஏற்படும் பெரும் செலவை வகை செய்ய புதிய தீர்வை போடுவோமானால், அதில் அதிருப்தி யுண்டாகி, ராஜாங்கத்துக்கு விபத்து நேரிடும். இந்தியாவின் அரசாட்சியில் சம்பந்தமற்றோராய், அதன் இயல்பறியா திருப்போர் இந்தச் செய்தியை உணரார். அந்த ஆட்சிக்குப் பொறுப்பாளிகள் நெடுங் காலமாகவே அந்த விபத்தைப் பெரிதாகக் கருதி யிருக்கின்றனர்" என்கிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூறு வருஷங்களாக ப்ரிட்டிஷ் ராஜ்யம் நடந்த பின்னும் இந்தியா தேசத்தார் இத்தனை ஏழைகளாக இருப்பதன் காரண மென்னவென்று ஆங்கிலேய ஜனங் களின் பொது ஹ்ருதயம் கேட்கும். இங்கிலாந்திலுள்ள 'பஞ்ச்' என்பதொரு விகடப் பத்திரிகையிலே ஜான் புல் (அதாவது இங்கிலீஷ்காரன்) படம் போட்டு "அட! இந்தியாவில் புதையல் இருக்கிறதென்று நினைத்தேன்! அவள் (இந்தியா) இத்தனை பிச்சைக்காரி என்று தெரியாதே!" என்று அவன் சொல்லி வியப்பதாக வரையப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் பிரமாண்டமான செல்வம் என்ற கற்பனை

இந்தியாவில் அளவற்ற புதையல் மறைந்து கிடப்ப தாக எண்ணுதல் பெருந் தவறு. சட்ட சபைகளில் நமது பிரதிநிதிகளுக் கிடம் கொடுத்தால், அவர்கள் நமது செல்வத்தையும் க்ஷேமத்தையும் வேரறுக்கும் காரணங்கள் எடுத்துக் காட்டி அவற்றைத் தீர்ப்பதற்குரிய மருந்தை அதிகாரிகளுக்குத் தெரிவிப்பார்கள். பிரிட்டிஷ் ஆட்சியி லிருந்து நமக்கேற்பட்ட நன்மைகளும் ஆள்வோரின் மேலான கொள்கைகளும் மேன்மேலும் வறுமையாகிய படுகுழியில் நமது தேசம் அழுந்திக் கொண்டே போனால் விழலாய் விடும். ஒரு காலத்தில் என்னை எல்லாரும் அழுமூஞ்சி யென்று சொல்லிப் பழித்தனர். இப்போது நமது நாட்டின் வறுமையை அதிகாரிகளே ஒப்புக் கொள்ளுகிறார்கள். எனவே, நாடு முழுதும் பரவி யிருக்கும் வறுமையையும் அதனை நீக்குவதற்கு அவசிய மான முதற்படிகளையும் பற்றிய நம்முடைய கொள்கை களை எடுத்துரைத்தல் இந்த ஜனசபையின் உரிமையும், கடமையும் ஆகும். இந்தியாவுக்கு க்ஷேமம் பண்ண வேண்டுமென்ற எண்ணம் இங்கிலாந்தின் ஹ்ருதயத்தில் உண்டு. நாம் போதுமானபடி உரத்த குரலில் போதுமான விடா முயற்சியுடன் கேட்போமானால் நமது பேச்சு வீண் போகாது. (நீண்ட கரகோஷம்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முடிவுரை

இன்னும் மூன்று தினங்களுக்குள்ளே இந்த ஜனசபை முன்பு வேறு பல விஷயங்களும் விவாதத்துக்கு வரும். பிரதிநிதிகளின் பெயர்களைக் கொண்டும், எனக்குக் கிடைத்த தகவலைக் கொண்டும், ஆலோசனைகளை யெல்லாம் அவர்கள் நிதானத்துடன் நடத்துவார்களென்று நிச்சயமாக நம்புகிறேன். தாம் வாழும் ப்ரிட்டிஷ் ராஜ்யத்தின் அனுகூலங்களை அறிந்திருப்பார்களென்று கருதுகிறேன். நம்முடைய க்ஷேமத்துக்கு அவசியமென்று நாம் எந்த விஷயத்தைக் காட்டினாலும் அதை அதிகாரிகள் செய்து கொடுக்க மனமுடையவராக இருத்தல் நம்மை நமது தொழிலில் உற்சாகப்படுத்துதற்குரிய செய்தியாம். இன்னும் அதிக வார்த்தைகள் கூறி, உங்களை இங்கு நெடுநேரம் தாமதிக்கச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் எனக்கில்லை. சென்ற வருஷம் வாதிக்கப்பட்ட அம்சங்களில் எத்தனை அபிவிருத்தி கிடைத்திருக்கிற தென்பதை, உங்களுக்குச் சற்றே அறிவித்து விட்டேன். சென்ற வருஷத்துத் தீர்மானங்களிலும் இவ் வருஷம் நாம் செய்யப் போகிற தீர்மானங்களிலும் கண்ட அம்சங்களில் இன்னும் அதிக முன்னேற்றம் நிகழ்ந்திருப்பதாக நாம் அடுத்த வருஷக் கூட்டத்தில் மகிழ்ச்சி கொண்டாட இடமிருக்குமென்று நம்புகிறேன். நமக்கு நாம் உண்மையாக இருந்தால் நமக்கு ராஜாங்கத்தார் கொடுத்திருக்கும் மேலான கல்விக்கும், நமது பெருந்தன்மைக்கும் குறைவின்றி நாம் நடந்துகொண்டால், நமக்குக் கொடுத்திருக்கும் பேச்சு சுதந்திரத்தைக் கொண்டு நாம் பயமின்றிப் பேசுவோமானால், கவர்ன்மென்டார் நம்முடைய வார்த்தைகளுக்குச் செவி கொடுத்து நாம் செய்யும் நியாயமான வேண்டுகோள்களுக்கு இணங்குவார்களென்றே பெரும்பாலும் எதிர்பார்க்கலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தச் சுருக்கமான ப்ரஸங்கத்தை முடிக்கு முன்னே என்னை இந்த உயர்ந்த ஸ்தானத்தில் வைத்தது பற்றி உங்களுக்கு மற்றொரு முறை நன்றி செலுத்துகிறேன். பிரதிநிதிகளின் பெயரால், நம்மெல்லாருக்கும் அன்புடன் நல்வரவு கூறி உபசாரம் செய்த நமது வங்காளத்து ஸஹோதரருக்கு மீட்டுமொரு முறை நல்லுணர்ச்சி தெரிவிக்கிறேன்.

(பாரத ஜனசபை (மறுபதிப்பு 1985)—பக். 14-25)

* * *

*1893*ஆம் ஆண்டில் லாஹோர் நகரத்தில் நடைபெற்ற ஒன்பதாவது காங்கிரஸ் மகாநாட்டின் தலைமைப் பொறுப்பில், தாதாபாய் நௌரோஜி அமர்ந்து ஆற்றிய உரை வருமாறு:

ஆங்கிலேயர் தாம் யுத்தப் பிரியரான ஜாதியாராகையால் தமக்கு தேசபக்தி, நீதி யபிமானம் முதலிய குணங்கள் இயற்கையிலேயே உண்டென்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனால் பஞ்சாபிகளும் அவர்களைப் போலவே ஆண்மையுடைய ஜாதியாரென்றும், எனிலும் ஷெ ஆண்மையால் பஞ்சாபிகளுக்கு அற்பத்தனமான ஸ்வ தேசத்துரோகம் முதலிய குணங்களே அமைந்திருக்கின்றன வென்றும் கதையில் ஒரு நாய் தானும் புல்தின்ன மாட்டாமல், தின்னக்கூடிய எருதையும் தின்னவொட்டாமல் குலைத்தது போல், பஞ்சாபிகளாகிய நீங்கள் உயர்ந்த பரீக்ஷைகள் தேறமாட்டாதவர்களாக இருப்பது மாத்திரமே யன்றி ஸமகால பரீக்ஷைகள் இந்தியாவில் நடத்துவதே, உங்களுக்கு ஸம்மதமில்லை யென்றும், இந்தியாவின் பொது அபிவிருத்திக்கே நீங்கள் விரோதிகளென்றும் சிலர் சொல்லுகிறார்கள். அந்த வார்த்தை முழுத் தவறென்பது நீங்கள் என்னை ஜனஸபைத் தலைவனாக நியமித்ததிலிருந்து தெளிவாக ருஜுவாகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காசிநாத த்ரியம்பக தெலங்கர் இறந்து போய் விட்டது பற்றி வருத்தப்படுகிறோம். அவருடைய ஸ்தானத்தில் மஹாதேவ கோவிந்த ரானடே நியமனம் பெற்றதுபற்றி மகிழ்ச்சி யடைகிறோம்.

என்னைப் பார்லிமெண்ட் மெம்பராகத் தெரிந் தெடுத்த செண்ட்ரல் பின்ஸ்பரிச் சீட்டாளிகள் இந்த ஜனசபையினிடம் தமக்குள்ள அனுதாபத்தை உங்களிடம் தெரிவிக்கும்படி எனக்கு உத்தரவு செய்திருக் கிறார்கள்.

நாம் ப்ரிட்டிஷ் ராஜாங்கத்துக்கு விரோதிகளில்லை யென்பதை அதிகாரிகளே அங்கீகாரம் செய்திருக் கின்றனர். தேசத்தில் உயர்ந்த மேதாவிகளும் நமது ஸபையில் கூடி யிருக்கின்றனர். நம்மை விரோதிகளாக் காமல் அனுகூலமாக வைத்துக் கொள்வதே ராஜாங்கத் துக்கு நல்லது.

ஸமகாலப் பரீக்ஷைக்குச் சார்பாகச் சென்ற ஜூன் 2ஆம் தேதி பார்லிமெண்ட் ஸபையில் செய்யப்பட்ட தீர்மானம் இத்தனை வருஷங்களாக நீங்கள் செய்த முயற்சிகளின் நற்பயனன்றோ? ஷை தீர்மானம் இந்த வருஷம் வரையிலும் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர வழியில்லாமல் செத்தே போய்விட்டது! இந்தத் தீர்மானத்துக்கு இந்தியா உதவி மந்திரியாகிய ஜியார்ஸ் ரஸ்லஸ் ஆரம்பத்தில் எதிரிடையாகப் பேசினா ராயினும் பின்னிட்டுச் சென்ற நாட்டுக் கணக்குச் சோதனையின் போது இத் தீர்மானத்தைப் பயன் படாமல் செய்யவேண்டுமென்ற கொள்கை தமக்கில்லை யென்பதை அவர் தெளிவுறச் சொல்லி யிருக்கிறார்...... தேச வைத்ய ஸ்தானங்களும் கல்வி யிலாகாவில் வைத்ய ஸ்தானங்களும் ராணுவ வைத்யர்களிடம் இருப்பது சரி யில்லை. குடிவைத்ய மண்டலம் தனியாக ஏற்படுத்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேண்டும். அதற்கும் இந்த ஆட்சி உத்தியோகங்களில் நாம் எதிர்காலப் பரீக்ஷைகள் நடத்த வேண்டும். உயர்தரக் குடித்தக்க ஸ்தானங்கள் ராணுவத் தச்சர் (என்ஜினீர்)களுக்குக் கொடுக்கப்படுவதும் சரியன்று.

இந்தியா விஷயங்களில் ப்ரிட்டிஷாரின் சிரத்தை

இந்தியா விஷயங்களில் ப்ரிட்டிஷாருக்குள்ள சிரத்தை அதிகப்பட்டு வருகிறது. எனக்குப் பார்லிமெண்டில் எல்லாக் கக்ஷியாரும் நல்வரவு கூறினர். நான் இங்கு புறப்பட்டு வருவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னே மிஸ்டர் டேவிட் (ஐரிஷ் கக்ஷித் தலைவரில் ஒருவர்) என்னை நோக்கி, "பார்லிமெண்ட் ஸபையில் அயர்லாந்துக்கு ஸ்வராஜ்யம் வேண்டுமென்ற கொள்கையுடைய மெம்பர்கள் அத்தனை பேரும் இந்தியா ஜனங்களுக்கு ஸ்வதந்தரம் கொடுக்கவேண்டு மென்பதில் உங்களுக்குச் சார்பாகவே நிற்கிறோ மென்பதை ஜனசபையில் உம்முடைய தோழரிடம் சொல்லும்" என்றார்......ஸர் வில்லியம் வெட்டர்பர்ன், கெய்ன் முதலிய நண்பர்களின் முயற்சிகளால் இந்தியாவுக் கனுகூலமான பார்லிமெண்ட் சபை யொன்று சமைக்கப் பட்டிருக்கிறது. அதற்கு அக்ராஸனாதிபதி ஸர் வில்லியம் வெட்டர் பர்ன்; கார்யதர்சி ஹெர்பர்ட் ராபர்ட்ஸ். இந்தக் கமிட்டியில் இதுவரை சேர்ந்திருக்கும் மெம்பர்கள் கெய்ன், ஷ்வரன், வெட்டர்பர்ன், மக்ளேரன், நவுரோஜி முதலிய பதினெட்டுப் பேர்.

சீர்திருத்தங்கள்

சட்டச்பைச் சீர்திருத்தங்களின் விஷயத்தில் இப்போது செய்யப்பட்ட சட்டத்தை, அதற்கு மிஸ்டர் க்ளாட்ஸ்டன் சொல்லிய வ்யாக்யானத்தின் கருத்துப்படி, உப விதிகள் கூட்டி நிறைவேற்றி யிருந்தாலும் நமக்குத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருப்தி யுண்டாக இடமிராது. அதில் இப்போதுள்ள உப விதிகளும் சேர்ந்து இந்த ஸபைகள் பெயர் மாத்திரம் தானே யன்றி ஜனங்களுக்கு இவற்றால் எவ்விதமான ஹிதமும் கிடையாமல் போய்விட்டது......மேலும், இந்தியாவுக்கு நேராகவே பார்லிமெண்ட் சபையில் ப்ரதிநிதிகள் நியமிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும்.

இந்தியாவின் வறுமை

ஆனால், நீங்கள் விசாரணை செய்யவேண்டிய விஷயங்கள் எல்லாவற்றிலும் அதிக முக்கியமானது பாரததேசத்தின் வறுமை விஷயம். இது பாரத ஜனங்களுக்கும் ப்ரித்தானிய ஆட்சிக்காரருக்கும் எதிர் காலத்தில் பெருந் தொல்லையாக விளையுமென் றஞ்சுகிறேன். இந்த மஹத்தான வறுமைக்கு இப்போதுள்ள உத்தியோகஸ்தரை நாம் பொறுப்பாளி யாக்கவில்லை. இப்போதுள்ள முறைமையை பொறுப் பாளி என்கிறோம். இதை யுணராத அதிகாரிகள் பலர் நாம் தம்மைக் குறை கூறுவதாகத் தப்பெண்ணங் கொள்ளுகிறார்கள். ஆனால், முற்காலத்தில் லார்ட் லாரன்ஸ் போலவும் இப்போது சமீபத்தில் அரசிறை மந்திரிகளாக இருந்த லார்ட் க்ரோமர், ஸர் ஆக்லண்ட் கால்வின், ஸர் டேவிட் பார்பர் போலவும் பல புத்திமான்களான உத்தியோகஸ்தர் பாரத நாட்டின் கொடிய வறுமையை உணர்ந்து வெளிப்படக் கூறியிருக் கிறார்கள். வருஷத்தில் ஒரு மனிதனுக்கு இந் நாட்டில் 20 ரூ. சராசரி வரவென்று நான் கணக்கிட்டேன்; 27 ரூ. சராசரி வரவென்று லார்ட் க்ரோமர் கணக்குச் சொல்லு கிறார். அங்ஙனம் அவர் கணக்கிட்டதற்குரிய ஆதாரங் களை உணர்த்தும்படி நான் லார்ட் க்ரோமரைக் கேட்டேன். அவர் உத்தரம் சொல்ல மறுத்து விட்டார்! அப்படியே 27 ரூ. என்று வைத்துக்கொண்டாலும் அது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எல்லாருக்கும் கிடைப்பதன்று. ஐரோப்பியத் தோட்டக்காரர், கைத்தொழில் முதலாளிகள், சுரங்கத் தலைவர் முதலிய ஐரோப்பியச் செல்வருக்கு வரும் வருமானமும் இந்தியாவின் வரவுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது... அதைக் கழிக்கவேண்டும். தேசத்தாரல்லாத உத்தியோகஸ்தரின் வரும்படிகளையும் அதில் கழிக்க வேண்டும். பின்னும் நமது தேசத்திலேயே செல்வமுடைய பகுதியாரின் வரவுகளையும் கழித்துப் பார்த்தால் ஏழைகளின் வருஷ வரும்படி எத்தனை பயங்கரமாகக் குறையும்?

நான் சொல்வதுபோல் 20 ரூ. என்று கணக்கிட்டாலும் அல்லது லார்ட் க்ரோமர் சொல்வதுபோல 27 ரூபாய்க்கு மேலில்லை யென்று கணக்கிட்டாலும், இரண்டு வகையிலும் இது எத்தனை இழிவான நிலைமை பார்த்தீர்களா? நூறு வருஷம் சுமக்க மாட்டாத செலவு செய்து ராஜ்யம் நடப்பித்தும் இந்த நிலையிலே இருக்கிறோம்! இது நீடித்து நிற்கத் தகுமா? ("தகாது" என்று சபையார் கூறினர்.) "தொலைவிலே இருந்து அன்னியர் ஆட்சி நடத்துவதனால் இந்தத் தீமைகள் விளைகின்றன" என்று ஸர் ஜான் ஷோர் சொல்லுகிறார்.

இந்தியாவில் கோடானுகோடி ஜனங்களை ஏழைகளாகவும் அடிமைகளாகவும் செய்து நாசமாக்கி ஆங்கிலேயர் அவர்களைக் கட்டிக் கொண்டு மூச்சு முட்டுவதைக் காட்டிலும் அவர்களை விடுதலையும் செல்வமும் உடையவராக்கி அவர்களுடன் வியாபாரம் செய்வதனால் எத்தனையோ அதிக லாபம் ஆங்கிலேயருக் குண்டென்ற கருத்துடன் மக்காலேயும் பேசியிருக்கிறார்.

மேலே கூறியபடி லார்ட் க்ரோமர் இந்த நாட்டு ஜனங்களுக்கு வருஷமொன்றுக்குத் தலைக்குச் சராசரி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ரூபாய் 27 என்று கணக்கிட்டார். 1882-ஆம் வருஷத்தில் இங்கிலாந்தின் சராசரி வருஷ வரும்படி ஒருவருக்குப் பவுன் 33 (அதாவது 495 ரூபாய்); பிரான்ஸில் 345 ரூபாய்; ஐரோப்பாவிலுள்ள நாடுகளனைத்திலும் ஏழையாகிய துருக்கியில் 60 ரூபாய். இந்தியாவில் 27 ரூபாய்; இதற்கு வேறு வியாக்கியானமும் வேண்டுமோ! மூடத்தனமாக நாமும் கவர்ன்மெண்டாரும் கண்ணை மூடிக் கொண்டு தூங்குவதில் பயனில்லை. இந்த வறுமையே நமக்கும் பெரிய விபத்து; அவர்களுக்கும் பெரிய விபத்து.

ராஜாங்கச் செலவு

மிகவும் பெரிய, மிகவும் செலவுக்கிடமான ஒரு ஐரோப்பிய ஸேனையும், ஐரோப்பிய உத்தியோக மண்டலமும் வைத்திருக்கிறோம். பாரததேசம் தமது வசத்திலிருப்பதால் ஆங்கிலேயருக்கு அளவிறந்த லாபமும் பெருமையும் உளவென்றும், ஆதலால் பாரத தேசத்தின் ஆதிக்யத்தைத் தாம் கைவிடக் கூடாதென்றும் ஆங்கிலேய ராஜ தந்திரிகள் பலமுறை கூறியிருக்கிறார்கள். அப்படியிருக்கக் கீழ்த்திசையில் ஸாம்ராஜ்ய ஆட்சி யிருப்பதனால் கிடைக்கும் புகழும், லாபமும், மேன்மையும் இங்கிலாந்துக்கும், அந்த ஆட்சியைக் காப்பாற்றும்செலவு மாத்திரம் கடைசி தம்பிடி வரை இந்தியாவுக்கும் வேண்டுமென்று திட்டஞ் செய்தல் நீதியா?

அயர்லாந்தின் நிலைமையும், இந்தியாவின் நிலைமையும்

ராஜாங்கச் செலவில் ஒரு பகுதி அயர்லாந்து தன் தகுதிக்குத் தக்கபடி செலுத்தும்படிக்கும், விசேஷச் செலவுகள் நேர்ந்தால் அவஸரத்துக் கிணங்கியவாறு தன் சக்திக் கியன்றது கொடுக்கும்படிக்கும், மற்றப்படி தன் வரவுகளை யெல்லாம் அயர்லாந்து தன் வசத்தில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வைத்துக் கொள்ளும்படிக்கும் விதி ஏற்பட்டிருக்கிறது. அயர்லாந்திலிருந்து உத்தியோகஸ்தர் பணத்தை வற்றடித்து வெளியே கொண்டு போவதில்லை. ப்ரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் லாபத்திலும் கீர்த்தியிலும் ஐரிஷ் ஜாதியாருக்குப் பங்குண்டு. ஐரிஷ்காரர் வைஸ்ராய்களாகலாம்; கவர்னர்களாகலாம். ஸாம்ராஜ்யத்தில் ராணுவப் பதவி, ஆட்சிஸ்தானம் எதுவும் அவர்கள் பெறலாம். பார்லிமெண்ட் சபையில் அவர்களுடைய மெம்பர்கள் வீற்றிருக்கிறார்கள். பாரத தேசத்தாருக்கோ என்றால் அங்ஙனம் ப்ரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் லாபத்திலும் மஹிமையிலும் எவ்வித மான பங்கும் கிடையாது. நமது சொந்த நாட்டிலே கூடப் பெரிய பதவிகள் நமக்கில்லை. இங்கிருந்து பணம் அபரிமிதமாக வற்றடிக்கப்படுகிறது. இந்தியாவுக்கு பார்லிமெண்ட் சபையில் ப்ரதிநிதி யில்லை.

இந்தியாவில் தீர்வை செலுத்துவோன் தலைமீதுள்ள சுமை

இங்கிலீஷ் ராணுவச் செலவுகளை நம்மீது சுமத்துதல் சரியில்லை யென்பதை லார்டு நார்த் ப்ருக், லார்ட் ரிப்பன் என்ற இரண்டு வைஸ்ராய்களும், ட்யூக் ஆர்கில், லார்ட் க்ராஸ், லார்ட் இம்பர்லி என்ற மூன்று இந்தியா மந்திரிகளும் லார்ட்ஸ் சபையில் சிறிது காலத்துக்கு முன்னே ஆதரித்துப் பேசினர். இந்தச் செலவுகளுக்கு நாம் பணங் கொடுப்பதை "அநியாயமாக வும், சட்ட விரோதமாகவும் இங்கிலாந்துக்கு இந்தியா இறுக்கும் தண்டம்" என்று ட்யூக் ஆப் ஆர்கில் சொல்லு கிறார். இருப்புப்பாதை முதலிய லாபகரமான தொழில் களை விலக்கிப் பார்த்தால் இந்தியாவின் மீதுள்ள நாட்டுக் கடன் ப்ரிட்டிஷ் அதிகாரத்தை ஆக்குவதற்கும் நிறுத்துவதற்கும் கொள்ளப்படுவது. இதற்கு இங்கிலாந்து கேவலம் ஜாமீனாவது கொடுக்க வேண்டு மென்று நாம் பிரார்த்தனை செய்தது பயனின்றி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முடிந்தது. இந்தியாவில் தங்கள் அதிகாரம் நீடித்திருக்குமென்பதில் ப்ரிட்டிஷாரே ஸந்தேஹப்படுவதாக இதினின்றும் இதர தேசத்தார் ஸம்சயிக்க இடமேற்படாதோ?

1870-ஆம் வருஷத்தில் நமது வருஷச் செலவு 39,000,000 பவுனாக இருந்த காலத்திலேயே இந்தியா அளவுக்கு மிஞ்சிய பாரம் சுமக்கிறதென்று மிஸ்டர் க்ளாட்ஸ்டன் சொன்னார். இப்போது அது 100க்கு 75 மடங்கு அதிகப்பட்டிருக்கிறது.

இதர விஷயங்கள்

நிர்வாக நீதி இலாக்காக்களைப் பிரிவுபடுத்துதல் அவஸரமென்பதை அதிகாரிகள் அங்கீகாரம் செய்து கொண்டபடியே பிரித்து நிறைவேற்றுவார்களென்று நம்புகிறோம். வியபிசாரத்தை ராஜாங்கத்தார் ஆதரிப்பதைக் கண்டனம் செய்து காமன்ஸ் சபையார் செய்த தீர்மானத்தை இங்குள்ளோர் நிறைவேற்றாதிருந்தனர். ஸ்டுவர்ட், ஸ்டான்ஸ் பீல்ட் என்ற பார்லிமெண்ட் மெம்பர்களும் மிஸஸ் பட்லரம்மாளும், வேறு சிலரும் விழிப்புடன் இவ் விஷயத்தைக் கவனித்துக்கொண்டு வந்தபடியால், அவர்களுடைய இடிப்பினால் மேற்படி தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற உத்தேசம் இப்போது இந்தியா கவர்ன்மெண்டாருக்கு ஏற்பட்டிருப்பது கண்டு ஸந்தோஷப் படுகிறேன். செலாவணி விஷயத்தைக் குறித்து என்னுடைய அபிப்பிராயங்கள் இன்னவென்பதை நீங்கள் ஏற்கனவே அறிவீர்கள். யூனைடெட் ஸ்டேட்ஸ் ராஜாங்கத்தார் "ஷேர்மான்" சட்டத்தை ரத்து செய்து விட்டதினின்றும், காலக்கிரமத்தில் செலாவணிக் குழப்பம் ஒருவிதமாகப் படியலாம். இங்கிலாந்தில் உபகாரச் சம்பளங்கள் பொன்னிலே கொடுக்கும்படி, இங்கு ரூபாய்கள் அனுப்பு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வதிலுண்டாகும் நஷ்டத்தை எவ்வளவு செப்பிடு வித்தை ஜாலங்கள் பேசினாலும் நஷ்டமில்லை யென்று காட்டுதல் ஸாத்தியப் படாது. இங்கிலாந்தில் தங்கத்தின் விலை ஏற்ற இறக்கத்துக்குத் தக்கபடி நாம் அனுப்புந் தொகையில் ஏற்ற இறக்கங்களுண்டாகின்றன. ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுக்கும் உயர்ந்த பரிவர்த்தன ஈடுகொடுத்து ஏழைகளின் முதுகை ஒடிக்கும் சுமை இன்னும் பாரமாக்கப்பட்டது. அதனுடன் நிஷ்காரணமாக பாங்கிகளுக்கு 138,000 பவுன் கொடுக்கிறார்கள்......இதைப் போல் அநியாயம் இங்கிலாந்தில் நடக்குமா? கவர்ன்மெண்டார் செய்த செலாவணி விதிகளால் யந்திரசாலைத் தலைவர்களின் தொழிலுக்குச் சில தடைகள் ஏற்பட்டால் அந்த நஷ்டத்துக்கு ஈடாக நாட்டு வரிப்பணத்திலிருந்து தொகை யெடுத்து ஷை யந்திரசாலைத் தலைவரிடம் கொடுப்பது சரியா? அதுபோல் அவ்வித நஷ்ட ஈடு பாங்கிகளுக்குக் கொடுப்பது நியாயமாகுமா? பாங்கிகளுக்கு நஷ்டம் ஏற்படாமல் லாபம் ஏற்பட்டிருந்த தென்று வைத்துக் கொள்வோம். அந்த லாபத்தைத் தீர்வை செலுத்தும் குடியானவருக்குப் பங்கிட்டுக் கொடுப்பார்களா?

செலாவணிச் சஷ்டங்களுக் கெல்லாம் மூலகாரணம், மேலே ஸர் ஜான் ஷோர் கூறியபடி தொலைவிலிருந்து அன்னியர் செய்யும் இயற்கைக்கு விரோதமான ஆட்சியின் தீய விளைவுகளே யன்றி வேறல்ல. இந்தச் செலாவணிக் குழப்பத்திலிருந்து புது வரி போட நேரிடும். கடன் யதேஷ்டமாக வாங்கிச் சுகமாகச் செலவு பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். உப்புத் தீர்வையை அதிகப்படுத்துவார்க ளென்று தோன்றுகிறது. பருத்தித் தீர்வைகளை மறுபடி விதித்து உப்பு வரியைக் குறைத்து ஜனங்களுக் குபகாரஞ் செய்யும்படி அதிகாரிகளை வேண்டுகிறேன். இதனால் இந்தியாவின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரம் குறைந்து விடுமென்று நான் கூறவில்லை. அந்தப் பாரம் சற்றே வலியத் தோள்களைச் சாரும். லார்ட் சாலிஸ்பரி சொல்லியது போல் இந்தியாவின் ரத்தத்தை வடித்தல் அவசிய மென்று தீர்த்து விட்டாலும் ஏற்கெனவே இரத்த நஷ்டத்தால் சோர்ந்து போயிருக்கும் பகுதிகளில் கத்தியைப் போடாமல் போதிய அளவு உதிரம் உள்ள அவயவங்களில் கத்தி போடுதலே விசேஷம் என்பது மெய்யன்றோ? எல்லா பாரதவாசிகளும் ஐக்கிய வுணர்ச்சியும் ஸஹோதர வுணர்ச்சியும் கொண்டு வாழவேண்டும். ஹிந்து மகமதியர்களுக்குள்ளே எவ்விதமான சண்டைகளும் நேரிடக் கூடாது. கவர்ன்மெண்டார் பொதுவாக இருந்தால் அவர்களுக்கே நல்லது. நம்முடைய ஸம்மதமில்லாமல் ஆங்கிலேயர்களால் நம்மை ஆளமுடியாது. லார்ட் ராபர்ட்ஸ் சொல்லுகிறார்: "பாரத ஸேனை எத்தனை வலிதும் நன்று சமைந்ததுமாக இருந்தாலும், அது யாதொரு பழுதுமில்லாமல் ஸம்பூரணமாய் இன்னும் எத்தனையோ மடங்கு அதிகத் தொகையுடையதாக இருப்பினும் ஜனங்களின் ஒற்றுமையும் திருப்தியுமே நமக்கு (எல்லா ஸேனைகளைக் காட்டிலும்) எப்போதும் பெரிய மூல பலமாகும்" என்கிறார்.

கடமை

நமது நாட்டுக்கு நாம் கடமை செலுத்தவேண்டிய வகை யாது? யஜ்ஞம் (வேள்வி). அதாவது பலி கொடுத்தல்; அஹத்தையும் பணத்தையும் காணிக்கை செலுத்தவேண்டும். இந்த பலிகள் பெரிதாகச் செய்தாலன்றிப் பெரிய காரியங்கள் ஸாதிக்க முடியாது. லண்டனில் நடக்கும் காங்கிரஸ் ஸம்பந்தமான முயற்சிகளுக்கு நாம் தக்கபடி பொருளுதவி செய்யவேண்டும். "இந்தியா" பத்திரிகை மாஸ ஸஞ்சிகையாக இருப்பதை வாரப் பத்திரிகையாக மாற்றல் நல்லது. லண்டனில் காங்கிரஸ் கூடவேண்டும். நமது நியாயமான வேண்டுதல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களுக்கு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இணங்குவார்களென்றே நம்பி யிருக்கிறேன்.

(பாரத ஜனசபை (1985)—பக். 132-140)

2. லிபரல் கட்சி :

அரசியல் மாற்றங்களை விரும்பியவர்களைக் கொண்டிருந்த கட்சி.

"பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் இது ஒரு பெரிய அரசியல் சக்தியாக இருந்தது.

பிரிட்டனில் லிபரல் கட்சி நீண்ட காலம் பெருமையோடு செல்வாக்குப் பெற்றிருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிளாட்ஸ்ட்டன் போன்ற அரசியல்வாதிகளின் தலைமையில் பல சீர்திருத்தங்களுக்குக் காரணமாக இருந்தது......முதல் உலக யுத்தத்தின்போது லிபரல் கட்சிதான் ஆட்சி செலுத்தியது"

(கலைக் களஞ்சியம் தொகுதி : 9—பக். 35)

என்ற குறிப்பு கலைக் களஞ்சியத்தில் உள்ளது.

3. ஜான் மார்லி (1838-1923) :

லிபரல் கட்சியைச் சார்ந்திருந்த தலைவர்; ராஜதந்திரி. பிரிட்டிஷ் பார்லிமெண்ட் சபையில் உறுப்பினராகப் பணியாற்றியவர்.

இவரைப் பற்றிய குறிப்பு 'கலைக் களஞ்சிய'த்தில், பின்வருமாறு தரப்பெற்றுள்ளது :

"இவர் வில்லியம் கிளாட்ஸ்டன் பிரதம மந்திரியாயிருந்த கால முதல், முதல் உலகப் போரின் தொடக்கம் வரை அரசியலில் ஈடுபட்டிருந்தார். 1908-ல் மார்லி பிரபுப் பட்டம் பெற்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1905 முதல் *1910* வரை இந்தியா மந்திரியாகப் பணி செய்தார். *1909*-ல் இந்தியாவுக்குப் பிரதிநிதித்துவ அரசியல் ((Representative Government) முறையை வகுப்பதில் பெரும் பொறுப்புடையவரா யிருந்தார். மார்லி எப்போதும் ஏகாதிபத்தியக் கொள்கையையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை விரிவாக்குவதற்காக ராணுவ பலத்தைப் பயன்படுத்துவதையும் எதிர்த்து வந்தார்.

(கலைக் களஞ்சியம் தொகுதி : 8—பக். 244)

4. கன்ஸர்வடிவ் கட்சி :

பழைமையில் ஊறியவர்கள் நிறைந்திருந்த இந்தக் கன்சர்வெட்டிவ் கட்சியைப் பற்றிக் 'கலைக்களஞ்சிய'த்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் செய்திக் கட்டுரை வருமாறு :

"இங்கிலாந்தில் உள்ள முக்கியமான அரசியல் கட்சிகளுள் ஒன்று. இது முதலாம் சார்லஸ் மன்னர் ஆட்சியில் ஏற்பட்ட உள்நாட்டுப் புரட்சிக்குப் பின் தோன்றி, 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை பெருமையுற்று விளங்கிய டோரி கட்சியை விட்டு விலகிய டிஸ்ரேலி முதலியவர்கள் சேர்ந்து தொடங்கிய கட்சியாகும். இந்தப் பெயரை அளித்தவர் ஜே. டபிள்யூ. குரோக்கர் என்பவராவர் (*1830*). முடியாட்சி, பிரபுக்களின் ஆதிக்கம், பார்லிமெண்டு முதலிய பழைய அரசியல் அமைப்புக்களைப் பாதுகாத்தலும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை நிலைநிறுத்தலும், மக்களின் நிலையை உயர்த்தலும் இக் கட்சியின் நோக்கங்க ளாகும்."

(கலைக் களஞ்சியம் தொகுதி : 2—பக். 389)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"அமைதிக் குணமுள்ள" சென்னை வாசிகள்

['பஞ்சாபி' பத்திரிகையாளர்கள்மீது 1907இல் பிரிட்டிஷ் அரசு அடக்கு முறைகளை ஏவியபோது, அரசைக் கண்டித்துச் சென்னையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் அறிஞர் பலர் கலந்து கொண்டு, சொற்பொழிவு ஆற்றினர். இக் கூட்டத்தைக் கேலி செய்து 'சென்னை டைம்ஸ்' பத்திரிகை எழுதியது. அதற்குத் தக்கபடி பதில் தந்து, பாரதி எழுதிய கட்டுரையே இங்கே இடம் பெறுகிறது.]

அடிமையிலே நல்ல அடிமை யென்றால் என்ன அர்த்தம் தெரியுமா? "மிகவும் கடைப்பட்ட அடிமை"; "தனது அடிமை நிலையைக் கீர்த்தி போலக் கொண்டு நாய்த் தொழில் புரியும் வெட்கமற்ற அடிமை" என்று அர்த்தம். கொஞ்சம் மனிதத் தன்மை கொண்டு ஈனத் தொழிலை வெறுத்து, சுயாதீன நிலைமை வெளிப்படுத்தும் பக்ஷத்தில், யஜமானனுக்குக் கோபம் வந்துவிடும். உடனே, "துஷ்ட அடிமை", "போக்கிரித் தனமான அடிமை" என்ற பட்டங்கள் கிடைக்கத் தொடங்கி விடும். இதுபோலவே நமது பிரிடிஷ் அதிகாரிகளும், அவர்களுக்கு விருது பாடுகின்ற ஆங்கிலேயப் பத்திரிகைகளும் சென்னை வாசிகளை மிகவும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"நல்ல" குடிக ளென்றும், "அமைதி" யுள்ளவர்க ளென்றும் சொல்வது வழக்கமாக இருக்கின்றது.

பெங்காளத்தார், புனாவாசிகள், பஞ்சாபிகள் முதலியவர்க ளெல்லாம் துர்க்குணமுடையவர்க ளென்றும், சென்னைவாசிகள் மட்டும் யோக்கியர்க ளென்றும் அன்னியர்கள் சொல்வதுண்டு; ஆனால், இப்போது சிறிது சிறிதாகச் சென்னை வாசிகளின் மீதிலும் பரங்கிப் பத்திரிகைகளுக்கும், மற்றப் பரங்கிகளுக்கும் கோபம் ஏற்பட்டு வருகின்றது. அமைதிக் குணமுள்ள சென்னை வாசிகளுக்குக்கூட அறிவு கெட்டு வருகிற தென்று பரங்கிகளுக்குள்ளே பிரஸ்தாபம் ஏற்படத் தொடங்கிவிட்டது. பணிவுள்ள அடிமையிடம் இருக்கும் ஒருவிதமான கர்வ சம்பந்தப்பட்ட அன்பு இனிச் சென்னை வாசிகளிடம் செலுத்தப்பட மாட்டாது.

இதைப் பற்றிச் சென்னை வாசிகள் வருத்த மடைய மாட்டார்க ளென்று நம்புகிறோம். அடிமைகளா யிருந்து அன்னிய யஜமான்கள் நம்முடைய பணிவுக்குச் சன்மானமாகப் புன்சிரிப்புச் சிரித்து முதுகைத் தட்டிக் கொடுப்பதை இனி நாம் புகழாகக் கருதமாட்டோம். எனவே, பெயர் கெட்டுப் போய்க் கிடக்கும் சென்னை "டைம்ஸ்" பத்திரிகை[1] தன் வாயினால் சென்ற புதன் கிழமை நடந்த "பஞ்சாபி" அனுதாபக் கூட்டத்தை[2] இகழ்ச்சியாகப் பேசுவதைப் பற்றி நம்மவரில் யாவருக்கும் சிறிதேனும் மனஸ்தாபம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிடையாது. "பஞ்சாபி"க் கூட்டத்திலே பேசியவர் களிலே சிலர் தக்க அந்தஸ்துள்ள மனிதர்களில்லை யென்று அந்தப் பரங்கிப் பத்திரிகை சொல்லுகிறது. என்ன விதமான அந்தஸ்தைக் குறிப்பிட்டு அப் பத்திரிகை பேசுகிறதோ தெரியவில்லை.

வெள்ளைக்காரரின் தயவினால் ஏற்படக்கூடிய பட்டங்களும், அந்தஸ்துகளும் நமக்கு வேண்டிய தில்லை. வெள்ளைக்காரர் முன்னே கைகட்டி வாய் புதைத்து நின்று அவர்களுக்கு முகஸ்துதி பேசி, அதிலிருந்து கிடைக்கும் பதவிகளை நாம் இகழ்ச்சி யாக நினைக்கிறோம். அவ்வாறின்றி இந்திய ஜனங்களுடைய மதிப்பும், தேச பக்தியும், இந்திய ஜனங்களின் பொருட்டு உழைப்பதுமே தகுதியான அந்தஸ்தென்று கூறப்படுமாயின், அவ்விதமான அந்தஸ்து பஞ்சாபி கூட்டத்திலே பேசினவர் களிடத்தி லெல்லாம் நிரம்பி யிருந்தது. மேலும் கூட்டத்தில் வந்திருந்த ஜனங்களிலே முக்கால் பங்கு சிறு குழந்தைக ளென்று "டைம்ஸ்" பத்திரிகை எழுதியிருப்பது வெகு வேடிக்கையாக இருக்கின்றது. "டைம்ஸ்" பத்திரிகையின் ரிப்போர்ட்டராகிய ராவ்பகதூர் என்.சி. ராஜகோபாலாசாரியார் ஷ மீட்டிங்கிற்கு வந்திருந்தார். அவர் பார்வைக்கு அப்படியா தோன்றிற்று? அங்ஙனம் தோன்றியது மெய்யானால், அவர் கூடிய சீக்கிரம் கண் வைத்தியம் செய்துகொள்வது நன்மையாகுமென்று நினைக்கிறோம்.

(இந்தியா: 2.3.1907—பக். 4-5)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. சென்னை 'டைம்ஸ்' பத்திரிகை :

சென்னையிலிருந்து வெளிவந்த இப் பத்திரிகை தேசாபிமானிகள் மனம் புண்படும்படி எழுதி வந்ததை அக் காலத்தில் பலரும் அறிவர். பிரிட்டிஷ் ஆட்சியாளர் களை ஆதரிப்பதையே தன் முழு மூச்சாகக் கொண்டு பத்திரிகை செயற்பட்டது.

இப் பத்திரிகையைப் பற்றி 'இந்தியா' இதழிலே,

"......சென்னையில் பிரசுரமாகும் 'டைம்ஸ்' என்ற வெள்ளைப் பத்திரிகையானது எப்போதும் நிந்தனைக் கும், அறிவின்மைக்கும் புகழ்பெற்றது...இவ்விதமான பத்திரிகைகளைத் தேசத்திலே வைத்திருப்பது பிரிட்டிஷ் ஆட்சிக்கு மிகவும் அனுகூலமான விஷயமில்லை"

(இந்தியா : 25.8.1906—பக். 4-5)

என்ற செய்திக் குறிப்பு காணப்படுகின்றது.

2. பஞ்சாபி அநுதாபக் கூட்டம் (கேஸ் விவரம்) :

பஞ்சாப் மாகாணத்தில் உள்ள லாகூர் என்னும் ஊரிலிருந்து "பஞ்சாபி" என்ற பெயருடன் பத்திரிகை ஒன்று நடத்தப்பெற்று வந்தது. இப் பத்திரிகை தேச பக்தியில் மிகுந்த சிறப்புடையதாய் விளங்கியது. ராஜத் துரோகமான சில வசனங்கள் இப் பத்திரிகையில் வெளிப்பட்டதாகக் கருதி, பத்திரிகையின் சொந்தக் காரரான லாலா ஜஸ்வந்த் ராய் என்பவர் மீதும், பத்திரிகாசிரியரான அட்வளே என்பவர் மீதும் இ. பி. கோ. *153* ஏ. பிரிவின்கீழ் வழக்குத் தொடரப் பட்டு, *1907* பிப்ரவரி மாதம் மத்தியிலே தண்டனையும் விதிக்கப்பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"பஞ்சாபி" பத்திரிகையாளர்களைக் கைது செய்தமைக்குக் கண்டனம் தெரிவித்துப் பாரத நாட்டின் முக்கிய நகரங்களில் எல்லாம் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன.

அந்த வகையில், தேசபக்த பத்திரிகையாளர்க்கு வாழ்த்துத் தெரிவித்தும், அரசைக் கண்டித்தும் சென்னை மாநகரில் 27.2.1907 அன்று பிரசிடென்சி காலேஜுக்கு எதிரே கடற்கரையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குச் "சுதேச மித்திரன்" ஜி. சுப்பிரமணிய ஐயர் தலைமை தாங்கினார். பாரதி, வி. சக்கரை செட்டியார், பார்த்தசாரதி நாயுடு, கருணாகர மேனன், சுரேந்திர நாத் ஆர்யா ஆகிய பலர் அக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினர்.

கூட்டத்தில் சுமார் 3000 பேர் கலந்து கொண்டனர் என்றும், அவர்களின் மனக் கிளர்ச்சி எளிதில் வர்ணிக்கக் கூடியதன்று என்றும் அக் காலத்திய பத்திரிகைகள் எழுதின.

'பஞ்சாபி' பத்திரிகை கேஸ் விவரமாவது :

"சில மாதங்களின் முன்பு மிஸ்டர் ஸ்பென்ஸர் என்ற போலீஸ் அதிகாரி மற்றொரு ஐரோப்பியன் சகிதமாக வேட்டையாடச் சென்றான். அப்போது ஸ்பென்ஸர் தான் சுட்டு வீழ்த்திய பன்றியைத் தன் மகமதிய சேவகனை யெடுத்துக் குதிரை சேணத்துடன் கட்டிக் கொண்டு போகச் சொல்லியதில் மகம்திய னாதலால் சேவகன் மறுத்தான். மறுத்ததின் பேரில் ஐரோப்பிய னுக்குக் கோபம் வந்து மகமதியச் சேவகனைச் சுட்டுக் கொன்றான். இப்படி வதந்தி ஊரிலிருப்பதாக வும், கவர்ன்மெண்டார் உண்மை யின்னதென்று பிரசுரம் செய்ய வேண்டு மென்றும் 'பஞ்சாபி'ப் பத்திரிகை யெழுதிற்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஐரோப்பியன் பக்கத்திலே சொல்லப்படுவது என்ன வென்றால், மகமதிய சேவகன் தன்வசம் ஒப்புவிக்கப் பட்டிருந்த ஒரு முரட்டுக் குதிரையின் மேலிருந்து விழுந்து மாண்டா னெனப்படுகிறது. இந்த இரண்டு கதைகளில் உண்மை யெதுவோ தெரியவில்லை.

மாஜிஸ்ட்ரேட்டு தம் முன்னால் வந்த சாட்சியத் தால் பஞ்சாபிப் பத்திரிகை சொன்னது தப்பென்பது நிச்சயித்துக் கொண்டு...தண்டனை விதித்து விட்டார்.

"பஞ்சாபி"யின் வீரத் தன்மை பொருந்திய தலைவர் கள் தாம் எழுதியதை மாற்றிக் கூற முடியா தென்றும், அதன் பொருட்டுச் சிறிதேனும் மனவருத்தம் கிடையா தென்றும் சொல்லி விட்டார்கள். செய்த குற்றத்தின் பொருட்டு மன்னிப்புக்கூடக் கேட்டுக் கொள்ளாதபடி யினாலேதான் தண்டனை மிகவும் உக்கிரமாயிற் றென்று மாஜிஸ்ட்ரேட் சொல்லி யிருக்கிறார். 153-ஆம் ஸெக்ஷன் (A)படி செய்யப்படும் குற்றத்துக்கு எவ்வளவு தூரம் தண்டனை செய்ய முடியுமோ அவ்வளவையும் மாஜிஸ்ட்ரேட் செய்து தீர்த்து விட்டார். இரண்டு வருஷ காலந்தான் உயர்ந்த அளவு."

(இந்தியா : 23.2.1907—பக். 1-2)

மற்றும் 'பஞ்சாபி' பத்திரிகை வழக்கு பற்றிய முறையான செய்திகளும் 'இந்தியா' பத்திரிகையில் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வர்த்தமான கர்த்தவ்யம்

[கல்கத்தா 'யுகாந்தரம்' என்னும் பத்திரிகையானது 'இப்போது நாம் செய்ய வேண்டியன' என்ற கட்டுரையைப் பெங்காளிகளுக்கு மாத்திரமே அர்த்தமாகும்படியாகப் பாங்குற வங்க மொழியில் பிரசுரித்திருந்தது. அக் கட்டுரையில் வரம்பு மீறிய வசனங்கள் சில இடம் பெற்றிருந்தனவாம்.

"யுகாந்தரம்" என்னும் பத்திரிகைக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணமுடைய ஒருசில ஆங்கிலப் பத்திரிகைகள் மேற்குறித்த கட்டுரையை மொழிபெயர்த்து நாடு முழுவதற்கும் தெரியும்படி செய்துவிட்டன.

வேண்டுமென்றே உள்நோக்கம் கொண்டு செய்த ஆங்கிலப் பத்திரிகைகளின் செய்கையைக் கண்டிப்பதுடன், நாடு சுதந்திரம்பெற சமாதான வழிகளையே கைக்கொள்ள வேண்டும் என்றும் இக் கட்டுரைச் செய்திகள் தெரிவிக்கின்றன.]

"வர்த்தமான கர்த்தவ்யம்" — அதாவது "இப்போது நாம் செய்ய வேண்டியன" என்னும் தலைப்பின்கீழ் "யுகாந்தரம்"[1] என்ற கல்கத்தா பத்திரிகை சில உக்கிரமான விஷயங்கள் எழுதியிருக்கிறது. அதை இங்கிலீஷ் பத்திரிகைகளிலே சில மொழிபெயர்த் தெழுதி யிருக்கின்றன. ஷெ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெங்காளிப் பத்திரிகையைத் தண்டனைக்கு உட்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் இந்த இங்கிலீஷ் பத்திரிகைகள் முயற்சி செய்து வருகின்றன. அதற்கு ரஹஸியமாக ஸர்க்காருக்குத் தெரிவிப்பதை விட்டு விட்டு, இந்த மூடத்தனமான பரங்கிப் பத்திரிகைகள் பகிரங்கமாக மொழி பெயர்த் தெழுதுவது இவற்றின் நோக்கத்துக்கே இடையூறாக முடிகிறது. இவ் விஷயத்தில் கவர்ன்மெண்டார் தலையிடும் பக்ஷத்தில் முதலாவது இந்தப் பரங்கிப் பத்திரிகைகளையும் பிறகு ஷி பெங்காளிப் பத்திரிகையையும் தண்டனை செய்யவேண்டும். ஏனென்றால், பெங்காளிகளுக்கு மாத்திரமே அர்த்தமாகக் கூடியவண்ணமாக ஷி யுகாந்தரம் என்ற பத்திரிகை எழுதுவதை இந்தப் பரங்கிப் பத்திரிகைகள் இந்தியா முழுமைக்கும் அர்த்தமாகும்படி செய்து விடுகின்றன.

''ஒரு தேசத்தார் சுதந்திரம் பெற வேண்டுமென்றால், அவர்கள் நீதியான உபாயங்கள் மட்டுமே யன்றி, அநீதியான உபாயங்களையும் கைக்கொள்ளுதல் பிழையாக மாட்டாது. ஸ்வாதந்திரியம் கிடைப்பதற்குரிய எவ்வித உபாயங்களும் தர்மோபாயங்களே யாகும். நமது முடிவான நோக்கம் தரும நோக்கமாக இருக்குமானால், உபாயங்களும் தர்மந்தான். ஒரு மனிதன் ஆத்ம ரக்ஷணையின் பொருட்டு விரோதிகளைக் கொல்ல விரும்பும் விஷயத்தில் எல்லா உபாயங்களும் செலுத்தல் நீதியாவது போல் ஜாதிகளும் கொடுங்கோலுக்கு விரோத

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாக எழுந்து சுயாதீனம் பெற முயல்வது நீதியே யாம். இடாலி தேசத்தார் சுயாதீனம் பெறுவதற்கு ரத்தக் கடலிலே நீந்தும்படி நேரிட்டது. இக் காலத்திலே இடாலி தேசத்தார் அவ்வாறு கண்மூடித்தனமாக இரத்தக் கடலில் மூழ்கினது பிசகென்று யார் சொல்லத் துணிவார்கள்''

என்று இவ்விதமாக இன்னும் பல விஷயங்கள் ஷி யுகாந்தரப் பத்திரிகை எழுதி யிருக்கிறது. அவை யனைத்தையும் பரங்கிப் பத்திரிகைகளைப்போல் மொழிபெயர்த் தெழுதுவதில் நமக்கு யாதொரு பயனும் இருப்பதாகத் தெரியவில்லை.

பரங்கிப் பத்திரிகைகள் ஸர்க்காருக்கும் ஜனங்களுக்கும் க்ஷணத்திலே யுத்தமுண்டாக்கி விடவேண்டுமென்ற கெட்ட நோக்கம் உடையன. ஆகையால் அவைகள் மேற்கண்டதுபோன்ற குறிப்பு களை மொழிபெயர்த் தெழுதுகின்றன. இந்த கவர்ன்மெண்ட் நமக்குச் சரிப்படா தென்றும், இதை மாற்றிவிட முயற்சி புரிதல் நியாய மென்றும் தாதாபாய் நவுரோஜி, மஹரிஷி திலகர் முதலியவர் கள் சொல்லும் அபிப்பிராயத்தை நாம் வேதம் போலக் கொண்டாடுவது மேய்யே என்றாலும், இப்போது பிரிடிஷாருடன் யுத்தம் செய்யுமாறு ஜனங்களைத் தூண்டுதல் பயித்தியக்காரத்தனமான செய்கை யென்பது நம்முடைய அபிப்பிராயம். ஆதலால் அவ்வித முயற்சி யாரும் செய்ய வேண்டா மென்று கேட்டுக்கொள்கிறோம். சமாதானமான

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உபாயங்களினாலேயே நாம் சுயாதீனமடைந்து கொள்ள எத்தனையோ வழிகள் இருக்கின்றன. தற்காலத்தில் இவற்றையே ஜனங்கள் கைக் கொள்ளுதல் பொருந்தும்.

(இந்தியா: 20.4.1907—பக்.3)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. யுகாந்தரம் :

கல்கத்தாவினின்றும் வங்க மொழியில் வெளிப்பட்ட தேசீயப் பத்திரிகை இதுவாகும்.

தேசீய உணர்ச்சியை மக்களிடையே பரப்புவதற்கும், மக்களின் சக்தியை ஒருங்கு திரட்டுவதற்கும் எண்ண மிட்ட வரீந்திரரால் இப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது.

"......வரீந்திரர் தாய்மொழிப் பத்திரிகை யொன்றை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார். அவர் இவ் விஷயமாக ஸ்ரீ அரவிந்தருடன் கலந்து பேசினார். ஸ்ரீ அரவிந்தர் அனுமதிக்கவே, எந்தக் காரியத்தையும் உடனடியாகச் செய்துமுடிக்கும் ஆற்றல் வாய்ந்த வரீந்திரர் 1906ஆம் ஆண்டு 'யுகாந்தரம்' என்ற புரட்சிப் பத்திரிகை யொன்றை ஆரம்பித்தார். அதற் குரிய உறுதிமொழி மாஜிஸ்டிரேட்டிடம் மார்ச் மாதம் 12ஆம் தேதி யன்று தாக்கல் செய்யப்பட்டது. அதன் ஆரம்ப இதழ்களில் ஸ்ரீ அரவிந்தர் தொடக்கக் கட்டுரை களில் சிலவற்றை எழுதினார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

......1908ஆம் ஆண்டில் ஜனவரியில் 'யுகாந்தரம்' பத்திரிகாலயம் சோதனை யிடப்பட்டு அதை நடத்தி வந்தவர்களில் ஒருவரான விவேகாநந்தரின் சகோதரர் கைது செய்யப்பட்டார். அப்போது அவர் தாமே ஆசிரியர் என அறிமுகப்படுத்திக் கொண்டார்''

(இந்தியப் புரட்சி இயக்கம்(1979)—பக். 79-80; 91)

என்று திரு. கோதண்டராமன் அவர்கள் 'யுகாந்தரம்' பத்திரிகை குறித்து எழுதியுள்ளமையை நினைவுகூர்க.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சென்னையில்
'ராஜ பக்தி'க் கொண்டாட்டம்

[பிரிட்டிஷ் அரசால்தான் இந்தியர்கள் அமைதியான வாழ்வு வாழ்கிறார்கள் என்று நம்மவர்களிலே பலர் நினைப்பதையும், இதே கருத்தை வலியுறுத்திப் பேசிய அந்நாளைய சென்னைக் கவர்னர் ஸர் ஆர்தர் லாலி அவர்களுடைய எண்ணத்தையும் மறுத்துரைக்கும் வகையில் இக் கட்டுரை அமைந்துள்ளது.]

சென்னப் பட்டணத்தில் நவம்பர் 2-ம் தேதியன்று ராஜ பக்தித் திருவிழா[1] நடத்தும் பொருட்டு, தீபாலங்காரம், குஸ்தி முதலிய விளையாட்டுக்கள், குழந்தைகளுக் கெல்லாம் சிற்றுண்டி கொடுத்தல் முதலிய பலவித ஏற்பாடுகள் செய்து வைத்திருந்தார்கள். ஆனால், அவ் வேற்பாடுகளைவையும் நடக்கவில்லை. மழை வந்து சகல ஆடம்பரங்களையும் நிறுத்தி விட்டது.

மனிதர்கள் செய்ய முயன்ற கபட காரியங்களிலே தெய்வத்துக்கு மனம் இணங்கவில்லை போலும்! இது நிற்க.

கவர்னருக்குச் சென்னை ராஜ பக்திக் கூட்டத்தார் வாசித்த பத்திரிகையிலேயும், அவர் மூலமாக இவர்கள் எட்வார்ட் அரசருக்கு அனுப்பிய அறிக்கையிலேயும், கவர்னர் அத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தருணத்தில் செய்த பிரசங்கத்திலேயும், முகஸ்துதிகள், பிரிய வசனங்கள், மனதறிந்த கபடங்கள் எல்லாவற்றையும் கழித்து விட்டுப் பார்த்தால், ஓர் விஷயம் மட்டிலும் பிரதானமாக விளங்குகிறது. என்னவென்றால், பிரிடிஷ் ராஜாங்கம் ஸ்தாபனமான பிறகு நாட்டிலே குழப்பங்களில்லாமல் அமைதி யேற்பட்டிருக்கிறது. இந்த அமைதி விலை மதிப்பதற்கரிய ஓர் பெரு நன்மையென்றும், இதன் பொருட்டு இந்திய ஜனங்கள் சூரிய சந்திரருள்ள மட்டும் இடைவிடாது நன்றி செலுத்தி வரவேண்டுமென்றும், இவர்களெல்லாரும் ஒன்றுசேர்ந்து ஸ்துதி பாடுகிறார்கள். சென்னை கவர்னராகிய ஸர் ஆர்தர் லாலி[2] மிக்க ராணுவப் பயிற்சியுடையவர். இவர் சொல்லுகிறார்:—

"பிற நாடுகளிலே நான் யுத்த சமயங்களில் இருந்து பார்த்திருக்கிறேன். அந்த கோரங்களெல்லாம் எனக்குத் தெரியும். அத்துடன் இந்தியர்கள் நிரந்தரமாக அனுபவிக்கும் பரிபூரண அமைதியை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது எத்தனை அபூர்வமான நன்மையென்பதை ஒருவேளை இந் நாட்டினராகிய நீங்கள் அறிவீர்களோ, மாட்டீர்களோ என்று எனக்கு வியப்புண்டாகிறது" என்கிறார்.

நல்லது: பிரிடிஷ்காரராக இருந்து யுத்த நிலையிலுள்ள நாடுகளில் போய் வேலை பார்த்து, அபாயங்களுக்குட்படுவதைக் காட்டிலும் பிரிடிஷ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ராஜாங்கத்தின்கீழ் இந்தியராக, நிரந்தர அமைதி யனுபவிக்க ஸர் லாலி தாம் சம்மதிக்கிறாரா? ராஜாங்க உரிமைகள் சம்பந்தப்பட்ட மட்டில் தமக்குள்ள ஆங்கிலேய உரிமைகளை இழந்து, இந்திய உரிமைகளை மேற்கொள்ள இவருக்கு விருப்பந்தானா என்பதை நாம் அறிய விரும்பு கிறோம்.

இவரைப் போய்க் கேட்பதேன்? ஜப்பான், சீனா, பாரஸீகம், ருஷியா, துருக்கி, இத்தாலி, கிரீஸ், ஆஸ்திரியா, ஸ்பெயின், ஸ்விட்ஜர்லந்து, டென்மார்க், நார்வே, பிரான்ஸ், இங்கிலந்து முதலிய எந்தத் தேசத்தில் பிறந்த மனிதனிடத்தி லும் போய் "அப்பா, பிரிடிஷ் இந்தியாவில் மிகுந்த அமைதி யிருக்கிறது. குழப்பங்க ளொன்றுமில்லை. சுகமாக வாழலாம். நீ, பிரிடிஷ் இந்தியக் குடியாக இருக்கிறாயா?" என்று கேட்டால், அவன் "ஸ்வதந்திர மில்லாத நாட்டில் அமைதி யிருந்து எதற்காயிற்று? நான் மாடாக இருந்து நிலம் உழுதாலும் விசேஷம். பிரிடிஷ் இந்தியாவில் யாதொரு சுதந்திரமு மின்றி வாழும் அடிமையாக இருக்கவே மாட்டேன்" என்று மறுமொழி கூறுவான்.

இவ் விஷயம் ஸர் ஆர்தர் லாலிக்கும் தெரிந்திருக்கு மென்று நம்புகிறோம்.

(இந்தியா: 7.11.1908—பக்.5-6)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. ராஜ பக்தித் திருவிழா:

1857ஆம் ஆண்டின் சிப்பாய்ப் புரட்சிக்குப் பின் இந்தியப் பெரு நாடு பிரிட்டிஷாரின் நேரடி ஆளுகைக்கு உட்பட்டது. 1858ஆம் ஆண்டின் இறுதியில் கம்பெனியாரின் ஆதிக்கம் அகற்றப்பட்டது. அதுசமயம் இங்கிலாந்தின் அரசியாக இருந்தவர் விக்டோரியா ராணியாவார். ராணியாரே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அதாவது, கம்பெனியாரிடமிருந்து பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரே பாரத ராஜாங்க அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டனர்.

1858இல் விக்டோரியா ராணியார் பேரறிக்கை ஒன்றை விடுத்தார். இந்திய மக்களின் நலனே தம்முடைய தலைமை நோக்கமென்று அதில் தெரிவித்திருந்தார்.

1908இல் மகாராணியின் ஆட்சியில் ஐம்பது வருடங்கள் முடிவு பெற்றதைக் குறித்து நன்றி பாராட்டும் கூட்டம் கூட்டச் சென்னை நகரப் பிரமுகர்களான திருவாளர்கள் 'சுதேச மித்திரன்' ஜி. சுப்பிரமணிய ஐயர், நவாப் ஸய்யது மஹமத், 'ஹிந்து' கஸ்தூரி ரங்கய்யங்கார் முதலானவர்கள் முயற்சிகளை மேற்கொண்டனர். இப்படி முன்னேற்பாடுகள் செய்து கொண்டாட நினைத்த மஹாராணி விளம்பரத்தின் 50ஆம் வருஷாந்தக் கொண்டாட்டமே இங்கு 'ராஜ பக்தித் திருவிழா' என்பதாகக் குறிப்பிடப்படுகின்றது.

'ராஜ பக்தி'க் கொண்டாட்டம் தேச பக்தி கொண்டவர்களால் நடத்தப் பெறுவதைக் கேட்டு பாரதி மனம் மிக வருந்தினார். மகாராணியின் விளம்பரத்தில் கூறப்பட்ட அம்சங்கள் சரிவர நிறைவேற்றப்படாத நிலையில் திருவிழாவாக விசேஷ கவனம் செலுத்திக் கொண்டாடுவதைப் பாரதி வெறுத்தார்.

"மஹாராணி விளம்பரத்திலே கூறப்பட்ட அமிசங்களில் ஒன்றேனும் இதுவரை சரியானபடி நிறைவேற்றப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படவில்லை. இதுவே காங்கிரஸ் சபையின் அபிப்பிராயம். 'ராஜ பக்தி'க் கூட்டத்திலே சேர்ந்திருப்போர்களில் பலர் காங்கிரஸிலேயும் சேர்ந்தவர்களா யிருக்கிறார்கள். மஹாராணி விளம்பரத்தைப் பூஜை செய்யப் போகின்ற இவர்கள், அதைக் கவர்ன்மெண்டார் அனுசரித்து நடக்கவில்லை யென்ற உண்மையையேனும் வெளிப் படையாகச் சொல்வார்க ளென்று நாம் நம்பி யிருந் தோம். வைஸிராய் லார்ட் கர்ஸன் அவ் விளம்பரத்தைப் பகிரங்கமாக இகழ்ச்சிக்குக் கொண்டு வந்ததை இந்த மனிதர்கள் இதற்குள் மறந்து போயிருக்க மாட்டார்க ளென்று எண்ணுகிறோம். அவ் விளம்பரத்தின் கருத்துக்கு நேர் விரோதமாகவே தற்காலம் பிரிட்டிஷ் ராஜாங்கம் நடந்து வருகிறது. இந்திய ஜனங்களுக்குப் பிரதிநிதி யாட்சி கிடைக்கும் வரை அந்த மாதிரியாகவே ராஜாங்கம் நடந்து வரவும் போகின்றது. அவ் விளம்பரக் கருத்தின்படி ராஜாங்கம் செலுத்த வேண்டு மென்று கவர்ன்மென்டாருக்கு நவம்பர் மாதம் 2-ம் தேதிக் கொண்டாட்டத்தில் சென்னைக் கூட்டத்தார் வற்புறுத்திக் காட்ட வேண்டுமென்று 'பெங்காளி'ப் பத்திரிகை எழுதிற்று. அதுகூட இல்லாமல் 'உபசாரங் களை'ப் பற்றிப் பாட்டுப் பாடி நன்றி செலுத்தப் போகிறார்களாம்!"

(இந்தியா : 17.10.1908—பக். 2)

இப்படி 'மஹாராணி விளம்பரக் கொண்டாட்டம்' என்ற கட்டுரையில் பாரதி தெள்ளத் தெளிவாக எழுதி யுள்ளார்.

2. ஸர் ஆர்தர் லாலி:

1906 முதல் *1911* வரை சென்னைக் கவர்னராக இருந்தவர். இவர் காலத்தில்தான் தமிழக தேசபக்தர்கள் சிறைத் தண்டனை பெற்றனர்; தமிழகம் அடக்குமுறை களைக் கண்டது.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தியர்களின் அதிருப்திக்குச் சில புதிய மருந்துகள்

['ஸ்வராஜ்யமே மனித இயற்கைக்கும், தெய்வ சித்தத்திற்கும் இணங்கியதாகும்' என்ற கொள்கைப் பிடிப்புடன் பாடுபடும் உத்தமர்களை வெகு ஜாக்கிரதையுடன் கவனிக்கவேண்டும் எனவும், தேசபக்த சிரோன்மணிகளை மக்கள் தெய்வம்போலே கொண்டாடுவதைத் தடுத்து நிறுத்த வேண்டிய செயல்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் 'டெயிலி டெலி கிராப்' என்ற லண்டன் பத்திரிகை கருத்துத் தெரிவித்ததை இக் கட்டுரை புலப்படுத்துகிறது.

மேற்குறித்த பத்திரிகையின் கருத்துப்படி அரசு நடந்தால், அதன் விளைவு யாதாக இருக்கும் என்பதையும் ஒரே ஒரு வார்த்தையில் புலப்படுத்திவிடுகிறார், பாரதி. ஆம்; 'யாரேனும் தான் சர்க மருந்து குடிப்பார்களா?' என்பதே பாரதி கேட்கும் கேள்வி.]

இந்தியர்களுடைய அதிருப்தியை நீக்குவதற்கு ஆங்கிலேய ராஜதந்திரிகள் புதிய புதிய மருந்துகள் கண்டுபிடித்து வருகிறார்கள். "டெயிலி டெலிகிராப்" என்ற லண்டன் பத்திரிகையை நடத்தும் ராஜதந்திர வைத்தியர் இதற்கு முன் வந்த வைத்தியர்களெல்லோரைக் காட்டிலும் அதிக சாமர்த்தியமுடையவராகக் காணப்படுகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவர் எழுதுவது :

"சிப்பாய்க் கலகம்[1] நடந்ததிற் கப்பால் இப்போதிருப்பதைப் போன்ற அபாயகரமான நிலைமைக்கு இந்தியா தேசம் ஒருபோதும் வந்தது கிடையாது. எனினும், நாம் பதறி விட வேண்டியதில்லை. ஆனால், நாம் ஒரு உண்மையை மட்டும் பூராவாகத் தெரிந்து கொள்ளவேண்டும். அது யாதெனில், இன்னும் நெடுங் காலத்திற்குப் பிரிட்டிஷ் ராஜ்யத்தின் கீழுள்ள எல்லாப் பிரதேசங்களைக் காட்டிலும் அதிக அதிருப்தி கொண்டதாகவே இந்தியா தேசம் இருந்துகொண்டு வரும். நாம் சலன மின்றி ஸ்திரமாக நிற்போமானால் இது ஓர் பெரிய விஷயமாக மாட்டாது. நாம் அதைரியப்பட்டு விடும் பக்ஷத்தில் இது வெகு பயங்கரமாக முடிந்துவிடும். நமது ராஜ்யம் இந்தியாவில் நிலைப்பதே சந்தேகத்தில் வந்திருக்கிறது. இந்தச் சமயத்தில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் கொலைஞர் களில் சிலருக்கு அந் நாட்டார் தெய்வ உபசரணை செய்வதாகக் கேள்விப்படுகிறோம். இதுபோன்ற செய்கைகளுக்கு நாம் இடங் கொடுக்கலாகாது. மிகக் கண்டிப்பான ஏற்பாடு கள் செய்யவேண்டும். இந்த அதிருப்தி அடங்கும் வரை இந்தியர்கள் படிக்கும் காலேஜ் களையெல்லாம் அடைத்து வைத்துவிட வேண்டும். இப்பொழுதிருப்பதைவிட அதிகக் கடுமையான சட்டங்கள் ஏற்படுத்த வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கல்கத்தாவிலுள்ள போலீஸார் தமது கடமையைத் தக்கபடி பார்த்துக்கொள்ள முடியாமற் போகுமானால், ராணுவ அதிகாரிகள் வசம் அக் கடமையை ஒப்புவித்துவிட வேண்டும். ஆங்கிலேயத் துருப்புக்களைப் பலப்படுத்த வேண்டும். இதை யெல்லாந் தவிர, ஜனானா ஸ்திரீகளே நமது ராஜாங்கத்திற்கு மிக்க அபாயகரமான ஸ்திரீகளா யிருக்கிறார்கள். இவர்களை வெகு ஜாக்கிரதையுடன் கவனிக்க வேண்டும்'' என்று எழுதுகிறார்.

சரியான மருந்துகள்!

காருண்ய ஆங்கிலேய கவர்ன்மெண்டார், காலேஜ்களை யெல்லாம் அடைத்துத் தெருவெல்லாம் ராணுவத்தைக்கொண்டு நிறுத்தி, அந்தப்புர ஸ்திரீகளையும் உபத்திரவம் செய்யத் தொடங்கி விட்டால், அவர்களுக்கு தாமம் மிகவும் அதிகரித்து, அவர்களுடைய கீர்த்தியும் திசைதோறும் எட்டிப் போய்விடும். அவர்களுடைய புகழுக்கு இதுவெல்லாம் செய்யத் தொடங்காததே ஓர் குறையாக இருக்கிறது.

இப்படி யாரேனும் 'தான் சாக மருந்து குடிப்பார்களா?'

(இந்தியா: 28.11. 1908—பக்.3)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. சிப்பாய்க் கலகம் :

1857ஆம் வருடத்தில் நடைபெற்ற இந்தியச் சுதந்திரப் போரைப் பிரிட்டிஷ் சரித்திர ஆசிரியர்கள் "சிப்பாய்க் கலகம்" என்ற பெயரால் குறிப்பிடுகின்றனர். நாட்டுப்பற்றின் காரணமாகப் பல்லாயிரக் கணக்கான மக்கள் உயிரையே பணயம் வைத்துப் போராடிய பேரெழுச்சியை "இந்தியச் சுதந்திரப் போர்" என்று குறிப்பதே நியாயமும், பொருத்தமும் உடையது ஆகும். அறிவிலும் ஆற்றலிலும் நாட்டுப்பற்றிலும் சிறந்து மிக்கோங்கிய மேலோர் பலர் தலைமை தாங்கி உயிர்த் தியாகம் புரிந்தும் இந்தப் போர் வெற்றி பெறவில்லை.

இந்தியா சுதந்திரம் அடைய வேண்டும் என்ற மேலான நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட புனிதப் போரைச் "சிப்பாய்க் கலகம்" என்று பெயரிட்டழைப்பது சரியில்லை. இந்தியர் என்னும் நிலைமையில் நின்று, வீரசவர்க்கார் உண்மையான விஷயங்களை மறைக்காமல் தம்முடைய நூலில் எழுதி யுள்ளார். நூலின் பெயர் "எரிமலை" என்பதாகும்.

இனி, போர் மூண்டதற்கான காரணங்களைப் பார்ப்போம் :

"ஆங்கில ஆட்சிமுறையால் இந்தியர் மனத்தில் பொங்கி யெழுந்த ஆத்திரந்தான் 1857-ல் தோன்றிய கிளர்ச்சிக்கு அடிப்படையான காரணம். 'வாரிசிலிக் கொள்கை'யின்படி டால்ஹௌசிப் பிரபு பல இராச்சியங்களைப் பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்படுத்தினார். இது இந்திய மன்னர்களிடையே பேரச்சத்தை விளைவித்தது. மேலும், இவர் அயோத்தியைக் கைப்பற்றியதும், பேஷ்வா பாஜிராவின் தத்துப் புதல்வர் நானாசாகிபுக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உபகாரச் சம்பளத்தை நிறுத்தினதும் பரபரப்பை மிகுவித்தன. நில மானியக்காரர்கள் பலரை அரசாங்கம் வெளியேற்றியதால் வேலை யில்லாத் திண்டாட்டம் பெருகியது. அன்றியும், இருப்புப் பாதை, தந்தி முதலிய கருவிகளும், ஆங்கிலக் கல்வி, சமுதாயச் சீர்திருத்தங்கள் ஆகியவையும் இந்துக்களைக் கிறிஸ்தவர்களாக்க அரசாங்கம் செய்துவரும் சூழ்ச்சிக ளென்று கருதப் பட்டன. இவை யெல்லாம் கிளர்ச்சிக்கு அடிப்படையான காரணங்களா யிருந்தாலும், கலகம் தலைதூக்கியது சிப்பாய்களிடையேதான். இந்தியப் படையைச் சார்ந்த சிப்பாய்கள் கடல் கடந்து, அயல்நாடுகளுக்குச் சென்று போரிட மறுத்தனர். இத் தருணத்தில் பசு, பன்றி ஆகியவற்றின் கொழுப்பைத் தடவிய தோட்டாக்களைக் கொண்டு சுடும் துப்பாக்கிகள் சிப்பாய்களுக்குக் கொடுக்கப்பட்டன. அவைகளைக் கையாளச் சிப்பாய்கள் மறுத்துக் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர்.

கிளர்ச்சி சிறிது சிறிதாகப் பெருகி, மீரட்டில் தோன்றிப் பின்பு டெல்லிக்கும் பரவியது. ஊர்க் கொள்ளை, சிறைகளிலிருந்து கைதிகளை வெளிப்படுத்தல், ஆங்கிலேயர்களைக் கொலை செய்தல் ஆகியவை நாளுக்கு நாள் அதிகரித்தன. விரைவில் கான்புரிக்கும் லட்சுமணபுரிக்கும் கிளர்ச்சி பரவியது. ஜான்சி ராணி, நானாசாகிப், அவர் தளகர்த்தர் தாந்தியாத் தோபி முதலியோர் கிளர்ச்சியின் முன்னணியில் நின்று அரசாங்கத்திற்குப் பல இடையூறுகளை விளைவித்தனர்.

ஆனால், இறுதியாக ஜான் லாரென்சும், நிக்கல் சனும் ஆறு நாட்கள் கடும் போர் புரிந்து டெல்லியை மீட்டனர். ஹாவ்லக் நானாசாகிபைத் தோற்கடித்துக் கான்புரியைக் கைப்பற்றினார். இதற்கிடையே ஜான்சி ராணி போரில் மாண்டாள். தாந்தியோத் தோபி, பகதூர்ஷாவின் பிள்ளைகள் முதலியோர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆங்கிலேயர்களின் கையில் சிக்கினர். விரைவில் பிரிட்டிஷார் ஒவ்வோர் இடத்தையும் மீட்டார்கள். தகுந்த தலைவர் தோன்றாததும், தோன்றிய தலைவர் களிடம் ஆழ்ந்த யோசனையும் ஒத்துழைப்பும் இல்லா ததுமே கிளர்ச்சி சீர்குலைந்ததற்கு முக்கிய காரணங் கள். மேலும், கூர்க்கரும், சீக்கியரும், நாட்டு மன்னர் சிலரும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு உதவியா யிருந்த னர். அன்றியும் கிளர்ச்சியில் மக்கள் பெருவாரியாகச் சேர வில்லை; ஆங்காங்குச் சச்சரவுகள் நடந்தனவே யன்றி நாடு முழுவதும் கிளர்ச்சி பரவவில்லை. முக்கியமாக, இக் கிளர்ச்சி வட இந்தியாவில் மும்முரமாக இருந்த தாயினும், சென்னை மாகாண மக்கள் இதில் எவ்விதத் திலும் கலந்து கொள்ளவில்லை.''

(கலைக் களஞ்சியம் தொகுதி1—பக். 566-567)

''இந்தியாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நடந்த முதலாவது அரசியல் இயக்கம் இக் கலகந்தான். அது தேசீய இயக்கமு மாகும். அதற்கு மூலாதாரமான காரணங்களும், அதை நடத்தி வைத்த சக்திகளும் பலதிறப்பட்டவை.

...கலகம் தோல்வியே யடைந்தது. அதற்குக் காரணம், கலகக்காரர்களின் நிர்மாணத் திறமையில் தேச மக்களுக்குப் பொதுவாக நம்பிக்கை யின்மையே யாகும். கலகக்காரர்கள் முதலில் பிரிட்டிஷாரைத் துரத்திவிட்டுப் பின்னர் தங்களுடைய நிர்மாண நோக்கங் களைக் குறித்து முடிவு செய்து கொள்ளலா மென்று தங்களுக்குள் எண்ணி யிருந்தார்கள். ஆனால், பொது ஜனங்கள் அதற்கிணங்கவில்லை.

எல்லாரையும் ஒரு கொடியின் கீழ் ஒன்றுசேர்க்கக் கூடிய மகாவீரன் கலகக்காரருக்குள் ஒருவனுமில்லை.''

(யுவ பாரதம் (1937) : பக். 156-157)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறு பாஞ்சால சிங்கம், தியாகமூர்த்தி லாலா லஜ்பத்ராய் அவர்கள் தம்முடைய நூலில் 1857ஆம் வருடத்திய இந்தியப் பெருங் கிளர்ச்சியைப் பற்றி எழுதி யுள்ளார்.

"இந்தியாவிலே சுவராஜ்ய ஸ்தாபனம் செய்ய எண்ணங் கொண்டு இந்த ஆங்கிலர்களைத் துரத்தி விட 1857-ம் வருஷம் ஒரு பெரிய சிப்பாய்க் கலகம் நடந்த விஷயம் நாமெல்லோரும் அறிவோம். அப்போதுதான் நானாஸாகிபு என்ற ஒரு பெயர் பெற்ற- இப்போது நினைக்கும்போதே ஒவ்வொரு ஆங்கிலனும் நடுக்க முண்டாக்கத்தக்க - ஒரு மராட்டிய சிற்றரசர் அந்தக் கலகத்தை நடத்தினார். அந்தக் காலத்தில் நானா சாயபுவின் (நானாராவ் என்றும் அவருக்குப் பெயர்) கத்திக்குச் சுமார் 20 ஆயிரம் ஆங்கிலர்கள் இரையாக்கப்பட்டார்கள். அப்போது இருந்த கவர்ன்மெண்டார் இங்கிலாந்திற்கு அதிக வெள்ளை சயின்னியத்திற்குத் தந்தி யடிக்கும்போது ஒவ்வொரு ஆங்கிலேயனும் "அவ்வளவு தூரதேசத்திற்குப் பிராணனை விடவா போக வேண்டும் நாங்கள் ஒருவரும் வரமாட்டோ" மென்று சொல்லிவிட்டார்களாம்"

(இந்தியா : 31.10.1908—பக்.9)

என்று பாரதியும் 'இத்தாலியும் இந்தியாவும்' என்ற கட்டுரையிலும் இந்தியப் புரட்சி இயக்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டு எழுதி யுள்ளார்.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேசப் பிரஷ்டம்

[ஓர் ஜாதியார் சுதந்திரத்தின் பொருட்டுத் தியாகங்கள் புரியத் தயாராக இருக்க வேண்டும் என்பதை இக் கட்டுரை எடுத்துக் காட்டுகிறது. அதாவது கொடுமைகளைக் கண்டு அஞ்சாது போராடி, உயிர்த் தியாகம் புரிந்தோ, சிறை வாழ்க்கை அனுபவித்தோ, சுதந்திரம் என்னும் நிகரற்ற செல்வத்தைப் பெற வேண்டிய நிர்ப்பந்தமும் உண்டு என்பதையும் கட்டுரைப் பொருள் நினைவூட்டுகின்றது.]

பிரிடிஷ் இந்தியாவில் இதுவரை ராஜ்ய விவகாரங்கள் விளையாட்டாக நடந்தன. இப்போது தான் ராஜ்ய விவகாரங்களை முழு ஹிருதயத்துடன் நம்மவர்கள் நடத்தத் தொடங்கி யிருக்கிறார்கள். உலகத்திலே பற்பல நாட்டினரும் முற்காலத்தில் எவ்வாறு கொடுங்கோன்மையை அழித்து ஸ்வதந்திரம் பெற்றிருக்கிறார்கள் என்பதை விளக்கும் சரித்திரப் புஸ்தகங்கள் படித்திருப் போருக்கு நாம் மேலே கூறி யிருப்பதின் கருத்து யாதென்பது விளங்கும். எப்போது ஒரு நாட்டிலே தேசபக்தர்கள் சிறைப்பட்டும், வெளி நாடுகளுக்குத் துரத்துண்டும், தூக்கு மரத்தி லழிந்தும் இடருறு கின்றார்களோ அப்போது ஸ்வதந்திர யுத்தம் உண்மையாக ஆரம்பம் செய்துவிட்ட தென்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அர்த்தம். ஓர் அடிமைத் தேசத்தில் இவ்விதக் காரியங்கள் தோன்றும் வரை அந் நாட்டார் கூடும் கூட்டங்களும், நடத்தும் பத்திரிகைகளும், பேசும் பேச்சுக்களும் குழந்தைகள் மணல் வீடுகட்டி மணற் சோறு சமைத்து விளையாடுவதை ஒக்கும்.

இவ் வுலகத்தில் ஒவ்வொன்றுக்கும் விலை யுண்டு. யாதேனுமோர் நற்பொருள் - பிரமஞான முதலாகக் குதிரை வண்டி வரை - எதுவா யிருந் தாலும் சரி - ஒருவனுக்குக் கிட்டவேண்டுமானால், அவன் அதற்குத் தக்க விலை பொருளாகவேனும், உழைப்பாகவேனும், துன்பமாகவேனும் கொடுத்தே தீரவேண்டும்.

ஸ்வதந்திரம் என்ற நிகரற்ற செல்வத்தை ஓர் தேசத்தார் பெறவேண்டுமானால், அதற்கு அவர்கள் இறுக்கவேண்டிய கடமைகள் தேசப் பிரஷ்டம்,[1] சிறை வாழ்க்கை முதலியனவாகும். ஆதலால், தற்காலத்தில் மேற்கண்டவாறு பலவகைத் துன்பங்களில் வாடுவோர் சலிப்பேனும், "நாமேன் இம் முயற்சியிலே தலையிட்டோம்" என்ற வருத்த மேனும் அடையாதிருக்கும்வண்ணம் அவர்களுக்கு மனவுறுதி யருளும்படி நாமெல்லோரும் ஈசனைப் பிரார்த்தனை செய்து வரல்வேண்டும்.

(இந்தியா : 28.11.1908—பக்.5)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. தேசப் பிரஷ்டம் :

வெளிநாடுகளுக்குத் துரத்தப்படுதல் என்ற பொருளில் வழங்கி வரும் சொற்றொடர், இது. ஆனால், இந்தப் பதப் பிரயோகம் தவறு என்று பாரதியே பின்னொரு சமயம் பிழை — திருத்தம் வெளியிட்டு, மிகச் சரியான பதப் பிரயோகத்தைத் தெரிவித்திருக்கிறார். அவர் தெரிவித்த குறிப்பாவது :

"நம் தேசத்தவர்களை வெளிநாடுகளுக்குக் கொண்டு போய் சிறை வைப்பதை **தேச ப்ரஷ்டம்** என்பது பிசகு. அதை **நிர்வாஸம்** அல்லது **வெளியேற்றம்** என்று சொல்வதுதான் ஸரி.

"ஜாதி பிரஷ்டம்" என்றால், ஜாதியார்களால் ஜாதியின் கூட்டத்தினின்றும் விலக்கப்படல். அப்படியே தேச ப்ரஷ்டம் என்றால், தேசத்தவர்களால் தேசத்தினின்றும் விலக்கப்படல் என்றருத்தம். ஆகையால், தேச ப்ரஷ்டம் என்று சொன்னால், அவர்களைத் தேசத்தவர்சள் அடித்து ஓட்டிவிட்டதாய்ப் பொருள்படும். இந்த அர்த்த பதம் அனர்த்த பதமாய் விடும். அவர்களுக்கும் இது வசைச் சொல்லே. பிரஷ்டம் கூட்டத்தைப் பொருந்தியது. பதிதன் எனப் பொருள். ஊரைப் பொருந்தியது அன்று. ஆகையால் "நிர்வாஸம் அல்லது வெளியேற்றம்" என்பதே ஸர்வ சம்மதமான பதம்."

(இந்தியா 31.7.1909—பக்.10)

எனவே, இந்த விளக்கத்தில் கண்டபடி இக் கட்டுரையிலும், வேறு பிற கட்டுரைகளிலும் 'தேசப் பிரஷ்டம்' என்ற சொல் வரும் இடங்களில் அதைத் "தேச நிர்வாஸம் அல்லது வெளியேற்றம்" எனத் திருத்திக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தியாவின் லாபம்

[இந்தியாவில் விளையும் பொருள்களைக் கப்பல் கப்பலாக வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவிட்டு, உள்நாட்டு மக்கள் உண்ண உணவின்றி வாடுவதையும், பஞ்சத்தால் அவதிப்படுவதையும் இக் கட்டுரை விவரிக்கின்றது.

"கஞ்சி குடிப்பதற்கில்லார்—அதன்
காரணங்க ளிவையெனு மறிவுமிலார்
பஞ்சமோ பஞ்ச மென்றே—நிதம்
பரதவித் தேயுயிர் துடிதுடித்துத்
துஞ்சி மடிகின்றாரே"

(இந்தியா: 13.3.1909 – பக்.8)

என்று வரும் பாரதி பாடல் வரிகளையும் இக் கட்டுரையுடன் ஒப்பிட்டுக் காண்க.]

ஆங்கிலேய ராஜா பாரத ஜனங்களுக்குச் சென்ற நவம்பர் மாதத்தில் அனுப்பிய அறிக்கையிலே பின்வரும் வசனங்கள் சொல்லி யிருக்கிறார் :

"பஞ்சத்தையும், பிளேக் வியாதியையும் எவ்விதமான ராஜாங்க ரஹஸ்யத்தாலும் மாற்ற முடியாது. ஆயினும், இயற்கையால் விளைந்த இந்த விபத்துக்களைச் சாந்தப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படுத்துவதற்கு மனிதர்களின் திறமையினாலும், ஊக்கத்தினாலும் எவ்வளவு தூரம் செய்யமுடியுமோ அவ்வளவு தூரம் நமது அதிகாரிகளிலே அனுபவஸ்தர்கள் யோசித்துச் செய்திருக்கிறார்கள். உங்கள் தேசத்தில் இது வரை எப்போதும் இல்லாதபடி அத்தனை நீடித்த காலவரையாக உள்ளெல்லைக்குள்ளே யுத்தத்தில் கோர விபத்துக்கள் ஏற்படாமல் பாதுகாத்திருக்கிறோம். இடையற்ற அமைதி ஏற்பட்டு வந்திருக்கிறது'' என்கிறார்.

இந்த நன்மைகளை யெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துச் சீர்தூக்கிப் பார்ப்போம்.

முதலாவது பஞ்சமும், பிளேக் நோயும் இந்த விபத்துக்கள் நேரிடாதபடி மனித சக்தியால் முடியாதென்று எண்ணி யிருந்த காலமெல்லாம் அன்றைக்கே போய்விட்டது. அவற்றை மனிதர் முயற்சியால் நாசம் செய்து விடலாமென்று கையிலுள்ள கனிபோல விளக்கப்பட்டிருக்கிறது. திருஷ்டாந்தமாக, மேற்கு ஐரோப்பியாவில் பஞ்சமென்பது பழங்காலத்துக் கதையாய்ப் போய் விட்டது. உண்ணும் உணவில் ஐந்தில் நான்கு பங்கு வெளித் தேசங்களிலிருந்து வந்து தீரவேண்டிய நிலைமையிலிருக்கும் இங்கிலாந்திலேகூட பஞ்சம் உண்டாய் எத்தனையோ வருஷங்களாய் விட்டன. ஆனால் உணவுப்பொருள் விஷயத்தில் இறக்குமதியே யில்லாது ஏற்றுமதியே விதியாக இருக்கும் இந்தியாவிலோ வருஷந் தவறாமல், பஞ்சம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வருவதுடன் மென்மேலும் பலமடைந்து கொண்டும் வருகிறது. பக்கத்துத் துறைமுகங்களிலே கப்பல் கப்பலாக இங்கிலாந்துக்குக் கோதுமையும், சீனாவுக்கு அரிசியும் ஏற்றுமதியாகிக் கொண்டிருக்க, உள்நாட்டுக் கிராமங்களிலே ஜனங்கள் உணவின்றி மடியும் ஆச்சரியம் இந்தியாவைப் போல உலகத்தில் வேறெந்த நாட்டிலும் கிடையாது.

நாளுக்கு நாள் பஞ்சங்களின் இடையறவு விருத்தியடைந்து கொண்டு வருவதற்கு முகாந்தரமென்ன? ராஜ பக்த சிகாமணியாகிய ரமேச் சந்திர தத்தர்[1] கூடப் பின்வருமாறு எழுதி யிருக்கிறார் :

"விக்டோரியா ராணி[2] பட்டம் பெற்ற வருஷத்திலே மஹா கோரமான ஒரு க்ஷாமம் வந்து வட இந்தியாவை நாசம் செய்தது. கோடிக்கணக்கான ஜனங்கள் இறந்தனர். அது முதல் இருபது வருஷங்களுக்குப் பெரிய க்ஷாமமொன்றும் இல்லாமலிருந்தது. (1857-ம் வருஷ முதல் தொடங்கிய) அடுத்த இருபது வருஷக் காலத்திற்குள் மூன்று க்ஷாமங்கள் வந்து தேசத்தை அழித்தன. வடமேற்கு மாகாணப் பஞ்சம், ஒரிஸ்ஸா (ஒட்டிரம்) பஞ்சம், பெஹார் பஞ்சம். மஹாராணி, 'இந்தியா சக்கரவர்த்தினி" என்ற பட்டம் தரித்துக் கொண்ட வருஷத்திலே சென்னை மாகாணத்தில் மகா கோரமான பஞ்சம் நேரிட்டது. ஐம்பது லக்ஷம் ஜனங்கள் மாய்ந்து போயினர்" என்கிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மகாராணியின் வயிர ஜூபிலி வருஷமாகிய 1897-ம் வருஷத்தில், ஒரு பஞ்சம் வந்தது. அதில் 8 கோடியே 14 லக்ஷத்து 19 ஆயிரம் ஜனங்கள் அவதிக்குட்பட்டார்கள்.

1899—1900-ம் வருஷத்தில் மறுபடியும் பஞ்சம் வந்தது.

அதனால் பிரிடிஷ் இந்தியாவில் 2½ கோடி ஜனங்களுக்குக் கஷ்டமுண்டாயிற்று. அந்த வருஷத்துப் பஞ்சத்தைப் பற்றி வைஸிராயாகிய லார்டு கர்ஸன்[3] கூடப் பின்வருமாறு வருத்தப்படுகிறான் :

"இது மாதிரியான பஞ்சம் இந்தியாவிலேனும் இவ் வுலகத்தில் வேறெந்த நாட்டிலேனும் இதுவரை நிகழ்ந்ததே கிடையாது. மத்திய மாகாணங்களைத் திருஷ்டாந்தமாக எடுத்துக் காட்டுகிறேன்.

1897-ம் ஞு பஞ்சத்தில் மே மீ கடைசியில் 7 லட்சம் ஜனங்கள் பஞ்ச நிவர்த்தி சாலைகளிலே வேலைக்கு வந்திருந்தார்கள். ஆனால், இந்த வருஷத்தில் மார்ச்சு மீ முடியு முன்பாகவே 15 லக்ஷம் ஜனங்கள் நிவர்த்தி சாலைக்கு வந்து விட்டார்கள். ராயபூர் ஜில்லா ஒன்றிலே மட்டிலும் மொத்த ஜனத் தொகையிலே 100-ல் 30 பங்கு ஜனங்கள் பஞ்ச நிவர்த்திக்கு வந்துவிட்டனர். அதாவது 16 லட்சம் ஜனங்களுடைய ஜில்லாவிலே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5 லட்சம் பெயர் ராஜாங்கத்தார் செலவில் ரக்ஷிக்கப்பட்டு வருகிறார்கள்.''

எனவே, நமது தேசத்தில் பஞ்சம் கொடுமையிலேயே அதிகரிப்பதுடன் மேலுக்கு மேல் அதிக துரிதமாகவும் வந்து கொண்டிருக்கிறது என்பதை லார்ட் கர்ஸனுடைய ஸாக்ஷியத்தினால்கூட அறிகின்றோம். இதன் முகாந்திர மென்ன?

(இந்தியா: 23.1.1909—பக்.4)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. ரமேச் சந்திர தத்தர் (1848_1909) :

இந்தியன் சிவில் சர்வீசில் இவர் தேர்ச்சி பெற்றவர்; காங்கிரஸ் சபையில் தீவிர ஈடுபாடு கொண்டு, அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர். 1899இல் லக்னோவில் கூடிய காங்கிரஸின் தலைவராகவும் ஒருமுறை இருந்தவர். பரோடா சமஸ்தானத்தில் திவானாகவும் பணியாற்றியவர்; இலண்டன் பல்கலைக் கழகத்தில் சிலகாலம் இந்திய வரலாற்றுப் பிரிவு ஆசிரியராகவும் இருந்திருக்கிறார்.

''ரமேஷ் சந்திர டட் என்பவர் வங்காளத்தில் அல்லாமல் வெளிநாடுகளில் உள்ளவர்களுக்கு ஆர். ஸி. டட் என்ற பெயரால் நன்கு தெரிந்தவர்.

.....பங்கிம் சந்திர சாட்டர்ஜியின் சொல்லுக்கு இணங்கி, அவர் வரலாற்றுப் புனைந்துரைக் காவியங்களையும், வீட்டு நிகழ்ச்சிகளைப் பற்றிய புனைந்துரைக் காவியங்களையும் எழுதத் தொடங்கினார்...

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வங்காளி நாட்டின் இலக்கிய சரிதத்தைக் கூறுவதிலும், அதன் பண்பாட்டுச் சரிதத்தை விளக்குவதிலும், ஓரளவு இந்திய நாட்டின் அரசியல் வரலாற்றைக் கூறுவதிலும் கூட, டட் நல்ல தொண்டு புரிந்திருக்கிறார். அவர் மிகச் சுறுசுறுப்புள்ளவர்''

(வங்க இலக்கிய வரலாறு : பக். 361; 363.)

என்று ரமேச சந்திர தத்தரின் இலக்கிய - அரசியல் வாழ்வைத் தெரிவிக்கிறார், சுகுமார் ஸென்.

2. விக்டோரியா ராணி (1819-1901) :

இவர் பிரிட்டிஷ் ஐக்கியத்தின் அரசியாவார்; இவ்வுலகத்தில் ஐந்திலொரு பங்கை அரசாளத் திறமையும் கொண்டிருந்தார். பெண்மைக்கே ஓர் அலங்காரமாய்த் திகழ்ந்தவர்; பெருந்தகைமையும் உயர்குணங்களும் ஒருங்கே கொண்டிருந்தவர். அவருடைய ஆட்சிக் காலத்தில் தொழில் துறையும் விஞ்ஞானத் துறையும் மேம்பாடு அடைந்தன.

''நவீன சாஸ்திரக் கல்வி, புதுப் பாஷைகளில் தேர்ச்சி, மறக்க விட்டிருந்த பழங்காலத்துப் பெரு நூல்களை மறுபடி ஆராய்ச்சி புரிதல், தொழிற் கல்வி முதலிய எண்ணிறந்த நன்மைகள் இப் பெண்ணரசின் அரசாட்சிக் காலத்தே இந் நாட்டுக்குக் கிடைத்திருக்கின்றன....

விக்டோரியா மகாராணியின் சரித்திரத்திலிருந்து நமது பெண்கள் அறிந்துகொள்ள வேண்டியவற்றில் கல்விச் சிறப்பு ஒன்றாகும். மகாராணியின் கல்வித் திறனைப் பற்றி ஒருவர் பின்வருமாறு எழுதுகிறார் :

'விக்டோரியா சக்ரவர்த்தினி வித்தியா விநோதினி. இவள் ஐயந்திரிபறக். கற்றுத் தேர்ந்த சிரேட்ட மங்கைத் அருங் கிரந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மொன்று இயற்றியவள்; வித்துவஜனப் பிரியை; இவளாற் பல வித்துவான்கள் பொருளுதவி பெற்றதுண்டு. இவள் சமஸ்தானத்து வித்துவான்களாக ஓர்ட்ஸ் வொர்த்து, டெனிசன் ஆகிய சிரேட்டர்கள் விளங்கினார்கள். இவள் சாதுரிய சம்பாஷணி; மாதுரிய வசனப்பிரியை; எத்துணை நாடக வித்துவான்கள், எத்துணை சங்கீத வித்துவான்கள், எத்தனை நாகரிக வித்தியா நிபுணர்சள், எத்துணை சித்திரக் காரர்கள் இவளால் உற்சாகமும், ஊக்கமும், ஆதரணையும் பெற்றவர்கள்!

விக்டோரியா மகாராணியின் பெருமைக்கு முதற் காரணம் அவரது கல்வித் திறமையே''

(சக்ரவர்த்தினி : ஆகஸ்டு 1905)

என்று விக்டோரியா மகாராணியாரைப் புகழ்ச்சி செய்துள்ளார், பாரதி.

3. லார்டு கர்ஸன் (1859-1925) :

1899ஆம் ஆண்டு முதல் 1905 ஆம் ஆண்டு வரை இந்தியாவின் வைஸ்ராயாக இருந்தவர்; கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்தவர்; இந்திய சுதேச மன்னர்களின் சுதந்திரங்களைக் கட்டுப்படுத்தியவர்; வங்கப் பிரிவினைக்கு வித்தூன்றியவர். ''பாரதவாஸிகளின் நெஞ்சிலே ஸ்வதந்திராபிமானத்தின் விதைகளை நன்கு ஊன்றிச் செய்தவராகிய லார்ட் கர்ஸன்'' என்று 'இந்தியா' பத்திரிகை ஒருசமயம் எழுதியது சிந்தனைக்குரியது.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"ஆமார் தேச"

(எங்கள் நாடு)

[கல்கத்தா நகரின் போலீஸ் கமிஷனர் பதவிப் பொறுப்பை வகித்தவர் 'வந்தே மாதரம்', 'ஆமார் தேச' ஆகிய இரண்டு பாடல்களைப் பொது நாடக மேடையில் பாடுவதையும், அப் பாடல்களைக் கொண்ட இசைத் தட்டுக்கள் விற்பனை செய்யப்படுவதையும் தடை செய்து, அவற்றிற்கான உத்திரவுகளைப் பிறப்பித்த போது, 'மாடர்ன் ரெவ்யூ' பத்திரிகை ஆசிரியர் சற்று நகைச்சுவையுடன் 'ஆமார் தேச' என்கிற பாடலைப் போலீஸ் கமிஷனர் ஏன் தடை செய்திருக்கக் கூடும் என்பதைக் குறித்து எழுதினார். அதை விளக்குகின்றது இந்தக் கட்டுரை.]

கல்கத்தா போலீஸ் கமிஷனர் சில வாரங்களின் முன் "வந்தே மாதரம்", "ஆமார் தேச" என்ற இரண்டு கீதங்களையும் நாடக சாலைகளிலே பாடக் கூடாதென்றும், ஷை பாடல்களுடைய போனகிராப் (தொனிக்கருவி) தட்டுக்களை யாரும் விற்கக் கூடாதென்றும் கட்டளை பிறப்பித்தனர். இவற்றுள் "வந்தே மாதரம்" என்ற பங்கிம் ராய் கீதத்தை நாட்டில் எல்லோரும் அறிவார்கள். "ஆமார் தேச" என்ற பாட்டைப் பலர் அறிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாட்டார்கள். இது பெங்காளத்தில் ஆங்கிலேய கவர்ன்மெண்டாரின் கீழ் மாஜிஸ்ரேட் உத்தியோகம் பார்க்கும் ஸ்ரீ. D.L. ராய் என்பவரால் இயற்றப்பட்டது. இது ஸாதாரண தேச பக்திப் பாடல். இதில் ராஜத் துரோகமென்று சட்டத்தால் கருதத்தக்க வசனங்களெவையு மில்லை.

இந்தப் பாடலைப் போலீஸ் கமிஷனர் ஏன் தடுத்தாரென்று கல்கத்தாவில் பல பத்திரிகைகள் ஆச்சரியப்படுகின்றன.

இவ்வாறு அந்தப் பத்திரிகைகள் ஆச்சரியப் படுதல் அவற்றின் அறிவுத்தடிப்பைக் காண்பிக் கிறதே யன்றி, நியாயமில்லை யென்பதாக "மாடர்ன் ரெவ்யூ" (நவீன விமர்சகம்) பத்திராதிபர் எழுதுகிறார். அருமையான தேச பக்தியும், பாரத தேசம் தற்காலம் வீழ்ந்திருக்கும் நிலையை நோக்கி அடங்காத வயிற்றுக் கொதிப்பும் உடையவராகிய "மாடர்ன் ரெவ்யூ" ஆசிரியர் ஸ்ரீ ரமாநந்த சட்டோபாத்தியாயர் பின்வருமாறு விகடமாக எழுதுகின்றார் :-

> "ஆங்கிலேயர் வழுக்களற்ற நிர்ணயமான பதப் பிரயோகங்களிலே பிரியமுடையவர்கள். இந்த "ஆமார் தேச" என்ற பாடலோ வழுக்கள் நிரம்பி யிருக்கிறது. அதனால்தான் தடுத்திருக்கிறார்கள். முதலாவது பிழையைப் பாருங்கள். ஸ்ரீ ராய் இந்தப் பாடலுக்கு 'ஆமார் தேச' (எங்கள் நாடு) என்று பெயர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொடுத்திருக்கிறார். இதுவே பிழை. பாரத நாடு பாரத ஜனங்களுடையது என்பது இவரால் ருஜூப்படுத்த முடியுமா? இந் நாடு ஆங்கிலேயர்களுக் கல்லவோ உரிமையானது? இன்னும் இந்தப் பாட்டிலே ஸ்ரீ ராய் "ஆம்ரா குசாபா தோர் தைன்ய; மானுஷ் ஆம்ரா நஹி தொ மேஷ்' என்று சொல்லுகிறார். இதன் பொருள்:- 'தாயே, உன்னுடைய தீனதசையை நாங்கள் மாற்றுவோம். நாங்கள் மனிதர்கள். ஆடுகளில்லை.'

இதுவும் பிழை. 'நாம் மனிதர்கள், ஆடுகளில்லை' என்பதை இவரால் ருஜூப் படுத்த முடியுமா? தென் ஆபிரிக்காவிலே ஒரு பிரிடிஷ்காரன் ஒரிரண்டு மாதங்களின் முன்பு நம்மவரில் ஒருவனுடைய காதை அறுத்து விட்டுவிட்டான். கோர்ட்டில் அந்தப் பிரிடிஷ் காரனை, 'ஏன் இப்படிச் செய்தாய்?' என்று கேட்டதற்கு, அவன் 'ஆடுகளின் காதை அறுத்தால் கவர்ன்மெண்டார் அதற்கு ஆக்ஷேபம் செய்வதில்லை. இந்தக் கூலியினுடைய காதை அறுத்தால் என்ன குடி கெட்டுப் போய்விட்டது?' என்றான். இதற்கப்பாலும்கூட அந்தப் பிரிடிஷ்காரனுக்கு ஜட்ஜி 20 பவுன் அபராதமே விதித்தான். இந்த விஷயத்தைப் பற்றிப் பார்லிமெண்டிலே பிரஸ்தாபம் வந்து, இது பார்லிமெண்ட்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ரிப்போர்ட்டிலே கூடக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எனவே, நம்மை, 'ஆடுகளில்லை. மனிதர்கள்' என்று ஸ்ரீ ராய் சொல்லியிருக்கும் வழுவுடைய பாட்டை ஏன் தடுக்கக் கூடாது?' என்று ரமாநந்தர் கேட்கிறார்.

பாரத தேசத்தவர்களே, மறுமொழி சொல்லுங்கள்.

(இந்தியா : 23.1.1909 — பக்.5)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதர்மப் பத்திரிகைகள்

[ஸ்ரீ சாரு சந்திர ராய் அவர்களைப் பற்றித் தவறான செய்திகளைச் சென்னை 'டைம்ஸ்' பத்திரிகை எழுதியதை இக் கட்டுரை மிக வன்மையாகக் கண்டிக்கிறது. ஆங்கிலேய பத்திரிகைகளின் ஆசிரியர்கள் கொண்டுள்ள கர்வமும், அதர்மமுந்தான் இந்தியாவின் அமைதி யின்மை என்ற நெருப்புக்கு நெய் ஆகின்றன என்பதையும் கட்டுரை சுட்டிக் காட்டுகின்றது.]

விரோதம் தூண்டுவதிலேயும், கோள் மூட்டுவதிலேயும் சென்னை "டைம்ஸ்" பத்திரிகை "எம்.ஏ" பரீக்ஷை தேறி யிருக்கிறது.

பெங்காளத்திலுள்ள சந்தர் நகர் (சந்திர நகரம்) என்ற பிரெஞ்ச் பட்டணத்திலே யாரோ சில பயித்தியக்காரர்கள் "யுகாந்தரம்" என்பதாக ஓர் காகிதம் அச்சடித்து, அதில் கொலை, ரத்தம் என்று அசாத்தியக் கதைக ளெல்லா மெழுதி மூலைக்கு மூலை யொட்டி யிருக்கிறார்கள். இதைப்பற்றி அந்த "டைம்ஸ்" பத்திரிகை என்ன எழுதியபோதிலும், எழுதிக்கொள்ளட்டும். ஆனால், அது செய்திருக்கும் மற்றொரு வஞ்சனைதான் மிகக் கொடிதா யிருக்கிறது. ஸ்ரீ சாரு சந்திர ராய்[1] பாடசாலைக்குள் வந்த தினத்தன்றே "யுகாந்தர"க்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காகிதங்கள் ஒட்டப்பட்டன என அப் பத்திரிகை இரண்டு சங்கதிகளையும் சேர்த்தெழுதுகிறது.

ஸ்ரீ சாரு சந்திர ராய் பிரெஞ்ச் குடி. அவரை அதர்மமாகப் பிரிடிஷ் அதிகாரிகள் அமுக்கிவிடப் பார்த்தார்கள். பிரெஞ்ச் கவர்ன்மெண்டார் தர்ம சித்த முடையவர்க ளாதலால், அதற்கு இடங் கொடுக்கவில்லை. அதில் இந்த "டைம்ஸ்" பத்திராதிபர் போன்றவர்களுக்குப் பொறாமையும் வயிற்றெரிச்சலும் ஏற்பட்டிருக்கின்றன. அதனால் ஸ்ரீ சாரு சந்திர ராயரை இணைத்துத் "தென்னை மரத்திலே அடிக்கத் தென்னாலுராமன் பல் விழுந்தது" என்பது போன்ற ஓர் மூட வர்த்தமானம் பிரசுரம் செய்திருக்கிறது. ஆங்கிலேயப் பத்திராதிபரின் கர்வமும், அதர்மமுந்தான் இந்தியாவின் அமைதி யின்மை என்ற நெருப்புக்கு நெய்யாகின்றன.

(இந்தியா: 13.2.1909—பக்.4)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. சாரு சந்திர ராய்:

கல்லூரிப் பேராசிரியரான இவர் பிரெஞ்ச் குடிமகனும் ஆவார். இவரை முசாபர்பூரில் நடைபெற்ற கொலைச் சதி வழக்கில் சம்பந்தப்படுத்தி, தண்டனைக்குட்படுத்தப் பிரிட்டிஷ் அரசாங்க அதிகாரிகள் பலவித முயற்சிகளில் ஈடுபட்டனர். ஆனால் அரசாங்க அதிகாரிகளின் சூழ்ச்சி எண்ணங்கள் பலிக்கவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சாரு சந்திர ராய் என்பவரைப்பற்றி 'இந்தியா' இதழ்களில் இடம் பெற்றுள்ள செய்திகள் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தனவாக அமைந்துள்ளதால், அவற்றை இங்கே காண்பது பயன் தரும். எனவே, அவசியங் கருதி இதழ்களில் வெளிவந்த செய்திக் குறிப்புக்களைப் பார்ப்போம்.

'பிரெஞ்சு குடியும் இங்கிலீஷ் சட்டமும்' என்ற தலைப்பில் வெளிவந்துள்ள செய்தியாவது:

"சாரு சந்திர ராய் என்பவர் பிரன்சு இலாகா சந்திர நாகூர் பள்ளிக்கூடத்தில் ஒரு வாத்தியார். இவர் கல்கத்தா வெடிகுண்டு கேசிலும், ராஜத் துரோகக் கேசிலும் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கண்டு கல்கத்தா அலிப்பூர் மாஜிஸ்திரேட்டின் வாரண்டின் பிரகாரம் சந்திர நாகூரில் இவரைப் பிடித்துக் கல்கத்தாவுக்குக் கொண்டுவந்து ஸெஷனுக்கு கம்மிட்டு செய்திருக்கிறார்கள்.

சென்ற மாதம் 15 உ தேதியன்று கல்கத்தா ஹைக்கோர்ட்டில், வக்கீல் ஹெமேந்திரநாத் மித்தர் சாரு சந்திர ராய் பக்கம் பின்வருமாறு ஒரு மனுக் கேட்டுத் திரும்புகிறார்.

(1) ராஜாங்க விரோதமான குற்றங்களுக்காகக் கைதிகளைப் பிரென்சு இலாக்காவினின்றும் கொண்டு வந்து பிரிட்டிஷ் கோர்ட்டுகளில் விசாரிப்பது, இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் ஏற்பட்டிருக்கிற உடன்படிக்கை சட்டத்துக்கு முற்றிலும் விரோதம். இந்த ஒரு காரணத்திற்காகவே, ஸெஷனுக்கு கம்மிட்டு பண்ணியிருக்கிற உத்திரவை ரத்து செய்யவேணும்.

(2) குற்றவாளி, பிரென்சு இலாகாவில் பிறந்து வளர்ந்த குடியா யிருப்பதால், பிரிட்டிஷ் கோர்ட்டில் அவரை விஜாரிக்கிறதற்கு மேற்குறித்த சட்டத்தின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரகாரம் கொஞ்சமேனும் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு அதிகாரமில்லை.

(3) என்னென்ன குற்றங்கள் சாரு சந்திர ராய் செய்திருப்பதாகப் பிரென்சு அதிகாரிகளுக்குத் தெரியப் படுத்தி இவரைப் பிடித்துக்கொண்டு வந்தார்களோ, அந்தக் குற்றங்களை விட்டுவிட்டு இவர்மேல் வெடி குண்டு உண்டாக்கியதாகவும், கொலைக்கு உதவி செய்ததாகவும், பிரிட்டிஷ் ராஜாங்கத்திற்கு விரோதம் செய்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டு செஷன்ஸுக் கம்மிட்டு செய்திருப்பது மேற்படி இங்கிலாந்து — பிரென்ஸ் உடன்படிக்கை சட்டத்திற்கு முற்றிலும் விரோதமா யிருக்கிறது. பிரிட்டிஷ் கோர்ட்டில் இவை களை விசாரிக்கிறதற்குப் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு அதிகாரம் கிடையாது.

இன்னும் சில சட்ட குறைவுக ளிருப்பதினால் சாரு சந்திர ராயை விடுதலை செய்யவேணுமென்று கேட்டுக் கொண்டார். கல்கத்தா ஹைக்கோர்ட்டு ஜட்ஜிகள், அலிப்பூர் மாஜிஸ்திரேட்டிடம் சாரு சந்திர ராயை ஏன் விடுதலை செய்யக் கூடாது என்று கேட்டிருக்கிறார் கள்.''

(இந்தியா : 17.10.1908—பக். 9)

இந்தச் செய்தியை யடுத்து, ''ஆங்கிலேயரின் பிடிவாதம்'' என்ற தலைப்பில் காணப்படும் செய்தியாவது:

''பிரெஞ்சுக் குடியாகிய சாரு சந்திர ராய் என்னும் உபாத்தியாயரைத் திரும்பவும் அரஸ்ட் செய்து கொலை, கொலை செய்யத் தூண்டுதல், சட்டத்திற்கு விரோத மாக ஆயுதங்களை வைத்திருத்தல் என்னும் இக் குற்றங் களைச் சாட்டி ஜெயிலுக்குள் அடைத்திருக்கிறார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இக் குற்றங்கள் ஆங்கிலோ—பிரஞ்சு உடன்படிக்கையில் விலக்கப் படாதவைகள். அவர் பிரஞ்சுக் குடியாய் இருந்தும் இங்கிலீஷ்கார ஹிம்சையிலிருந்து தப்பிப் போக வழியில்லை. இங்குள்ள ஆங்கிலேயர் ஒரு இந்தியன் மேல் பகை கொண்டால், அவனை எவ்விதத் திலும் நாசப்படுத்தி விடுவார்கள் என்பது இதனால் ஏற்படக்கூடிய முடிவாகிறது. இந்தக் கருத்தை இந்தியா மனதில் ஊன்றிப் பதித்தால்தான் தங்களுக்கு நிர்ப் பயமான வாழ்க்கை சித்திக்கும் என்று அவர்கள் நம்பி யிருக்கிறார்கள். இதற்காகவே அவர்களுடைய நியாய ஸ்தலங்களும் சட்டதிட்டங்களும் ஏற்பட்டிருக்கின்றன.''

(இந்தியா : 14.11.1908—பக். 3)

''சாரு சந்திர ராய் ஸமாசாரம் - பிரெஞ்சுக்காரரின் பெருந்தன்மை'' என்ற தலைப்பில் தரப்பெற்றுள்ள செய்தியாவது:

''சந்திர நகரில் தூப்ளே காலேஜ் உபாத்தியாயரும் பிரெஞ்ச் குடியுமான ஸ்ரீ சாரு சந்திர ராய் என்பவரை வெடிகுண்டுக் கேஸிலே சேர்த்துத் தூக்குப் போடுதல் அல்லது தீபாந்தரமனுப்புதல் முதலிய இனிய தண்டனை களுக்குள்ளாக்கி விடலாமென்று அன்னிய ராஜாங்கத்தா ராகிய ஆங்கிலேய அதிகாரிகள் கருதினார்கள். அதற்கு ஆரம்பத்தில் சில பிரெஞ்சு உத்தியோகஸ்தர்களும் கடமை யறியாமல் மனமிணங்கி விட்டார்கள். இச் செய்தி பிரான்ஸுக் கெட்டியது. ''ஸ்வதந்திரம், ஸமத்துவம், ஸகோதரத்துவம்'' என்ற மூன்று தர்மங் களையுமே துவஜச் சின்னமாக உடைய பிரெஞ்சு கவர்ன்மெண்டார் உடனே சாரு சந்திர பாபுவை ஆங்கிலேயர் கையிலிருந்து மீட்பித்து க்ஷேமமாக ஊர்கொண்டு சேர்த்தார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ் விஷய மெல்லாம் படிப்பவருக்கு ஏற்கெனவே நன்றாகத் தெரியும். இப்பொழுது சாரு சந்திர பாபுவுக்கு பிரான்ஸ் தேசத்திலிருந்து ஒரு புதிய கவுரவம் அளிக்கப்பட்டிருக்கிறது. பரீஸ் நகரத்து வித்வத் ஸங்கத்தார் ஸ்ரீ சாரு சந்திர ராயை ஒரு மெம்பராகச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். பிரான்ஸ் தேசத்திலே பல பிரபல பண்டிதர்களுக்குக்கூட இப் பெருமை கிடைப்பதற்கரிய தென்று தெரிகிறது.”

(இந்தியா: 5.6.1909—பக். 2)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பயித்தியங் கொண்ட செய்கை

[கல்கத்தாவிலிருந்து வெளிவந்த பத்திரிகைகளில் குறிப்பிடத்தக்க பத்திரிகையாக "யுகாந்தரம்" சிறந்து விள்ங்கியது. இது தேசாபிமானத்திற்குப் பெயர்போன பத்திரிகை. இந்தப் பத்திரிகையின் பெயரைப் பயன் படுத்தி யாரோ சிலர் ராஜமகேந்திரபுரம், புதுச்சேரி ஆகிய ஊர்களிலிருந்து கல்கத்தா பிரமுகர்களுக்கு 'ஸைக்லோ ஸ்டைல்' மூலம் பிரதியெடுத்து அனுப்பியது பற்றிய செய்தியை இக் கட்டுரை தெரிவிக்கின்றது.

தேவையில்லாத பிரச்சினைகளை உருவாக்கும் நிலையில் அமைந்தவர்களை இக் கட்டுரை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது.

யாரோ சிலர் எதையோ நினைத்துச் செய்த காரியத்தின் விளைவுகளைப் பாரதி தம் கட்டுரையில் சுட்டிக் காட்டுவதுடன், தம்முடைய நண்பர் ஒருவர் என்ன விதமாகச் சந்தேகித்தார் என்பதையும் சுருங்கச் சொல்லியு முள்ளார்.]

"யுகாந்தரம்" என்ற பெயருடன் பெங்காளி பாஷையில் எழுதப்பட்டு, "ஸைக்லோ ஸ்டைல்" கருவியிலே தயார் செய்யப்பட்ட பல பத்திரிகைகள் ராஜமகேந்திர புரத்திலிருந்தும், புதுச்சேரியி லிருந்தும் கல்கத்தாவில் அநேக விலாஸதார் களுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக "ஹிந்து"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பத்திரிகையில் ஓர் தந்தி பிரசுரமா யிருக்கிறது. இது எவ்வளவு தூரம் வாஸ்தவமோ தெரியாது. இது வாஸ்தவமா யிருக்கும் பக்ஷத்தில் இங்ஙனம் செய்தவர்களின் காரியம் மிகவும் கண்டிப்பதற் குரியது. அனாவசியமாக, அசாத்தியமான மூட விஷயங்களை எழுதிப் பிறர் மனதைப் புண்படுத்து வதில் யாதொரு பிரயோஜனமும் கிடையாது.

''யுகாந்தரம்'' போன்ற பத்திரிகைகள் பிரசுரம் செய்வதால் இரண்டு விதமான பயனுண்டு. ரஹஸியப் போலீஸ்[1] சேவகர்களுக்கு ஜீவனம் செழிப்பாக நடக்கும். நமது ஜனங்களை அதிகாரி கள் அதிகமாக அனாவசிய இமிசைக்குட் படுத்து வார்கள். இந்த இரண்டு பயன்கள் விளையுமாறு வேலை செய்பவர்கள் தேசாபிமானிக ளாவார் களா? ஒப்பு நிகரில்லாத மூடர்க ளாவார்கள். நமது சிநேகித ரொருவர் ரஹஸியப் போலீஸ் சேவகர் களே தமது பிழைப்பின் பொருட்டு இம் மாதிரி வேலைகள் செய்திருக்கக் கூடுமென்று சந்தேகப்படு கின்றார்.

(இந்தியா : 13.3.1909—பக்.3)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. ரஹஸியப் போலீஸ்:

ரகசியப் போலீஸார் என்று கூறப்படும் வேவுகாரர் களைப் பற்றிப் பாரதி அவ்வப்போது எழுதி வந்திருக் கின்றார். அவற்றில் எல்லாம் அவர்களின் அக்கிரமச் செயல் களைக் கண்டித்தும் உள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ரகசியப் போலீஸ் தொழில் எத்துணை இழிவானது என்பதைப் பற்றிப் பாரதி எழுதி யுள்ளதை இனிக் காண்போம் :

"ஒற்றர்கள் என்றும் சாரர்கள் என்றும் நமது முன்னோர்களால் அழைக்கப்பட்டு வந்த ரஹஸியப் போலீஸாரின் வேலையானது, உலகத்திலுள்ள எல்லாத் தொழில்களிலும் அதிக நிஷித்தமானது. முற்காலத்தில் குண்டகர், கோளகர் முதலிய குலஹீனர்கள் இந்தத் தொழிலுக்கு ஆளாகி வந்தார்கள்.

இங்கிலந்து முதலிய அநாரிய தேசங்களிலேகூட ஒற்றர்களாக வேலை பார்ப்பவர்கள் வயிற்றுக் கில்லாத கொடுமையால் அது செய்ய உடன்படுகிறார்களே யல்லாமல், அந்த வேலையில் சந்தோஷமடைகிற வழக்கம் கிடையாது.

ஆனால், பிரிடிஷ் இந்தியாவிலோ, இந்த இழிதொழில் செய்பவர்கள் தமக்கு இந்திர பதவி கிடைத்து விட்டதாக எண்ணி, மகிழ்ச்சி பாராட்டு கிறார்கள். ஆஹா! பாரத தேசம் எவ்வளவு சீர்குன்றிப் போய்விட்டது."

(இந்தியா : 5.12.1908—பக். 5-6)

குலஹீனர்கள் செய்யும் தொழில் ஒற்றர் தொழில் எனக் குறிப்பிட்ட பாரதி, பின்னொரு சமயத்தில், பாரத தேசம் பெற்றிருந்த செல்வங்கள் யாவையும் இழந்துவிட்டது பற்றி யாரும் வருத்தமடைய வேண்டாம் எனவும், புதிய செல்வ மாக ரகசியப் போலீசாரைப் பெற்றுள்ளது எனவும் எழுதி யுள்ளார். மனித வாழ்வு எப்படி அமையவேண்டும் என்பதை யும் அவர் இங்கே எடுத்துக்காட்டத் தவறவில்லை. இனி, அவர் வாய்மொழியாலே அவற்றைப் படிப்போம் :

"நமது தேசம் புராதன செல்வங்களை யெல்லாம் இழந்து விட்டதுபற்றி நாம் வருத்தப்பட வேண்டாம்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏனென்றால் இப்போது புதிய செல்வங்கள் பலவற்றைப் பெற்று நமது நாடு விளங்குகின்றது. ரஹசியப் போலீஸார் என்று கூறப்படும் வேவுகாரரில் பிரிட்டிஷ் இந்தியாவைப் போல இத்தனை பெருமை கொண்ட தேசம் உலகத்தில் வேறொன்றிருக்குமென்று நமக்குத் தோன்றவில்லை. ஹே மாதா! நீ என்ன பாக்கியம் பெற்றுவிட்டாய்! ரிஷிகள் இல்லை; கவிகள் இல்லை; யுத்த வீரர் இல்லை; சாஸ்திர விற்பன்னர்கள் இல்லை; இவர்க ளெல்லாம் இல்லாமல் போய் விட்டதனால் என்ன நஷ்டம்! எங்கு திரும்பினாலும் வேவுகாரர்கள் அகப்படுகிறார்களே, அது போதாதா? சுதேசிய மெழுகு வர்த்திகள் எங்கேனும் பம்பாயிலிருந்து தருவித்தால், கல்கத்தாவிலிருந்து வெடிகுண்டு செய்யச் சாமான்கள் தருவித்தான் என்று எழுதி அதிகாரிகளிடம் கொண்டு ரிப்போர்ட்டை நீட்டிவிடுகிறார்கள். பொய் சொல்லி, ஸுஜனத் துரோகம் செய்து பிழைப்பதும் ஒரு பிழைப் பாகுமா? வயிற்றை நிரப்புவதற்காக மட்டிலுந்தானா மனிதன் உலகத்தில் ஜீவித்திருக்கிறான்?

நாய்கள், ஆந்தைகள் — இவைகூட எப்படியோ வயிறு வளர்த்து விடவில்லையா? மானத்துடனும், தெய்வ பயத்துடனும், தர்ம சிந்தையுடனும் வாழ்வ தன்றோ மானிட வாழ்க்கை? ஐயோ, பேதை ஸஹோதரர்களே, இந்த வேவுத் தொழில் செய்வதைக் காட்டிலும் மண்வெட்டிப் பிழைப்பது தாழ்வென்றா உங்கள் மனதில் தோன்றிவிட்டது? மஹா புனிதமான பாரத தேசத்திலே பிறந்து பரலோக நினைப்பையே மறந்து வாழும்வண்ணமாக அத்தனை நீசத்தன்மை கொண்டு போய்விட்டீர்களா? உங்களுடைய கபடறியாத பிதுர்க்கள் உங்களைக் கனவில் வந்து குத்திக் காட்டாமலா இருக்கிறார்கள்?"

(இந்தியா : 9.1.1909—பக்.2)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாபு அசுவினி குமார தத்தர்

[பாபு அசுவினி குமார தத்தரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு இந்தக் கட்டுரையில் "அமிர்த பஜார்" பத்திரிகையினின்றும் மொழிபெயர்க்கப்பட்டுத் தரப்பெற்றுள்ளது. அசுவினி குமார தத்தரின் உதார குணத்தைச் சுட்டிக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

ராஜாங்கத்தாருக்கு விரோதமாகச் செயல்புரிபவர்கள் என்ற காரணங் காட்டி, அகாரணமாக அவர்களுக்குத் துன்பம் தருவதையும் இக் கட்டுரை வாயிலாகக் கண்டனை புரிகிறார், பாரதி.

பாபு அசுவினி குமார தத்தரிடம் பாரதி கொண்டிருந்த பற்றை 'ஆறிலொரு பங்கு' நூலிலும் காணலாம்.]

ஸ்ரீமான் அசுவினி குமார தத்தர் முதலிய 9 பேர்களைப்[1] பிரிடிஷ் கெவர்ன்மெண்டார் எதன் பொருட்டு நாடு கடத்தி யிருக்கிறார்க ளென்ற விஷயம் இதுவரை பொது ஜனங்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. அவர்கள் ராஜாங்கத்தாருக்கு விரோதமாக வேலை செய்தார்க ளென்று சொல்லும் பக்ஷத்தில் அவர்களைப் பகிரங்கமாக விசாரணை செய்து தண்டித்திருக்கலாம். ஒருவனைக் குற்றவாளி யென்று தண்டிப்பதற்கு முன்னாக, அவன் தன்னைக் காத்துக்கொள்வதற்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குரிய வழக்குச் சொல்ல இடந்தர வேண்டுமென்பது நீதி சாஸ்திரத்திலே முதலாவது தர்மம். அசுவினி பாபு முதலிய 9 பேருக்கும் இந்த அனுமதி கொடுக்கப் படவில்லை.

* * *

அசுவினி பாபுவைப் பற்றி "அமிருத பஜார்" பத்திரிகையிலே ஒருவர் "சரிதை விவரம்" ஒன்றெழுதி யிருக்கிறார். அதைப் படிக்கும்போது யாருக்கும் மனங் கரையத் தக்கதாக இருக்கின்றது. அவர் எப்படிப்பட்ட "குற்றவாளி" யென்பதை அப் பத்திரிகையினின்றும் சில திருஷ்டாந்தங்கள் எடுத்துக்காட்டி விளக்குகின்றோம்.

பாரிஸாலில் அவர் ஸ்தாபனம் செய்து 20 வருஷங்களாகப் பராமரித்து வரும் விரஜமோஹன பாடசாலை என்ற "காலேஜ்" பிள்ளைகள் அசுவினி பாபுவின் மேற்பார்வையின் கீழ் 'தயா சங்கம்' என்று ஓர் சங்கம் நடத்தி வருகிறார்கள். பாரிஸாலில் அநாதை நோயாளிகளை யெல்லாம் - முக்கியமாக வாந்திபேதி நோய் கொண்டவர்களை - இச் சங்கத்தார் அருகிருந்து ஸம்ரக்ஷணை செய்து மருந்துகள் கொடுத்து சொஸ்தப்படுத்துவதையே நெறியாகக் கொண்டவர்கள்.

எத்தனையோ வாந்தி பேதி நோய் கண்ட ஜனங்களை அசுவினி பாபு தாம் நேரிலேயே போய்ப் பார்த்து இரவு நெடுநேரம் அவர்கள் படுக்கை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யருகில் உட்கார்ந்து கொண்டே யிருப்பாராம். பாரிஸாலின் எல்லையிலே அசுவினி பாபுவுக்கு வயது வந்த நாள் முதல் அவரைக் கைதியாக்கிய நாள் வரை ஒரு ஏழையேனும் கவனிப்பா ரில்லாமையால் இறந்துபோனது கிடையாது.

ஓர் முடவன் விருத்தாந்தம்

வீடு வாயிலற்ற ஓர் முடவன் பாரிஸாலின் ஒரு மரத்தடியிலே கிடந்து வெயிலிலும் மழையிலும் மிகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். அதை அசுவினி பாபுவின் தயா சங்கத்தைச் சேர்ந்த கைலாஸ நாத பண்டிதர் என்ற உபாத்தியாயரும் மற்றப் பிள்ளைகளும் பார்த்தார்கள். அதன் பேரில் ஒரு விடுமுறை நாளன்று காலையில் அந்தப் பண்டிதரும் 25 மாணாக்கர்களும் ஒன்றுகூடி வந்து ஓர் காலி நிலத்திலே வானந் தோண்டிச் சுவர்கள் கட்டி, தளம் போட்டு, கூரை மேய்ந்து, அன்று மாலைக்கு முன்பு அந்த முடவனுக்கு ஓர் நேர்த்தி யான குடில் கட்டிக் கொடுத்து விட்டார்கள். ஒரு கூலியாளுடைய உதவிகூட இல்லாமல், இந்த மாணாக்கர்களே வேலை செய்து முடித்தார்கள்.

ஸ்ரீசன் என்ற சிறுவனது பெரிய நெஞ்சம்

அசுவினி பாபுவும், அவருடைய அபிமானிகளும் மனிதர்களிடம் மாத்திரமே அன்பு பூண்டிருந்து, மற்றக் கீழ் ஜந்துக்களைக் கவனியாம லிருந்தவர்க ளல்லர். அவருடைய தயா சங்கத்தைச் சேர்ந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீசன் என்ற சிறுவன் ஒருநாள் தெருவிலே ஒரு நாய் பெரிய புண்ணுடையதாகி வருந்துவதைக் கண்டான். உடனே இவன் அதை வீட்டிற்குக் கொண்டுவந்து அதன் காலுக்கு ஒரு மாத காலம் மருந்தெண்ணெய் போட்டு சம்ரக்ஷணை செய்து, சொஸ்தமான பிறகு வெளியே விட்டான்.

தம்மைச் சூழ்ந்திருந்தவர்களுக் கெல்லாம் இவ்வாறு தெய்விகமான சிந்தை ஏற்படும்படி செய்த மஹானையே ஆங்கிலேய கவர்ன்மெண்டார் மிகவும் கேடு விளைவிக்கக்கூடிய துஷ்டனென்று கருதி நாடு கடத்தி யிருக்கிறார்கள்.

(இந்தியா : 13.3.1909—பக்.4)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. அசுவினி குமார தத்தர் முதலிய 9 பேர்கள் :

பிரிட்டிஷ் அரசு வங்கம் பெற்றெடுத்த தேசபக்தர் களை 1908 டிசம்பரில் சிறைப்படுத்தியது; அசுவினி குமார தத்தர் உட்பட ஒன்பது பேர்களையும் வங்கத்திலிருந்து வெளியேற்றி, வெளியிடங்களில் சிறையில் வைத்தது. பாபு அசுவினி குமார தத்தருடன் சிறைப்பட்ட மற்றவர்கள் குறித்தும் 'இந்தியா'வில் செய்திக் கட்டுரை ஒன்று வெளிவந் துள்ளது. தொடர்பு கருதி, 'சட்டம் பனஞ் சட்டமாய்ப் போய்விட்டது' என்னும் கட்டுரையின் முழு வடிவத்தை இங்குக் காண்போம்:

"முன்னொரு சமயம் லார்ட் கர்ஸன் தமது சட்ட சபையிலே ஓர் பிரமுகராகிய இந்தியா மெம்பரை நோக்கி, "எங்கள் ராஜாங்கத்திலே சட்ட ஒழுங்கு நின்று போய்விட்டதென்று உம்முடைய அபிப்பிராயமா?"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று கேட்டார். அந்த நாளில் இருந்த நிலைமையைப் பற்றி இப்போது பேசிப் பயனில்லை. ஆனால், இந்தச் சமயத்தில் பிரிடிஷ் இந்தியாவிலே சட்ட வொழுங்கு நின்று போய்விட்டதென்று 'கண் கெட்ட பேருக்கும் வெளியாய்'க் காணப்படுகின்றது.

(1) ராஜா சுபோத சந்திரமல்லிக் (2) பாபு மனோரஞ்ஜன குஹர் (3) ஸ்ரீ கிருஷ்ண குமார மித்திரர் (4) ஸ்ரீ ஸசீந்திர பிரஸாத வஸு (5) ஸ்ரீ சியாம சுந்திர சக்ரவர்த்தி (6) ஸ்ரீ புலின விஹாரி தாஸ் (டக்காவாசி) (7) ஸ்ரீ பூபேச சந்திர நாகர் (8) மஹரிஷி அசுவினி குமார தத்தர் (9) ஸ்ரீ ஸதீச சந்திர சட்டோபாத்தியாயர்—என்ற 9 பேரையும் பிடித்து தேசப் பிரஷ்டம் செய்திருக்கிறார்கள். இவர்களில் சுபோத சந்திரர் கோடீசுரர். இவர் பெருமையைப் பற்றிப் பலமுறை நமது பத்திரிகையிலே பேசி யிருக்கிறோம். மனோரஞ்சன் குஹர்தான் பாரிஸால் வீரனாகிய சித்தரஞ்சனனுடைய தந்தை. மஹரிஷி அசுவினி குமார தத்தர் கீழ் பெங்காளத்துக்குப் பிதா. எவனெல்லாம் ஏழையோ, எவன் வயிற்றிலே பசியும், மனதிலே துக்கமும் இருக்கின்றனவோ அவனெல்லாம் அசுவினி பாபுவின் சொத்துக்கு உரிமை யுடையவனாவான். இவருடைய உள்ளக் கருணையைப் பற்றி, விவேகாநந்தருடைய மடத்தைச் சேர்ந்த நிவேதிதா தேவி தமது புஸ்தக மொன்றிலே எழுதி யிருப்பதைப் படித்தவர்களுக்கு இவர் கர்ணாவதார மென்பது விளங்கும். இவர் பெரிய வேதாந்தி. ராமகிருஷ்ண மடத்தாருக்கு இவர் செய்திருக்கும் உதவி கொஞ்சமன்று. ஐம்பத்தைந்து வயதுக்கு மேற்பட்ட விருத்தாப்பியர். இவர் ஒரு ஜமீந்தார். ஜனங்களிடம் இவருக்குள்ள செல்வாக்குக்கு அளவில்லை. நெடுங்காலமாகப் பாரிஸாலிலே ஒரு காலேஜ் வைத்து நடத்தி வருகிறார். இவரைப் பிடித்துக்கொண்டு போகக் கலெக்டர், கமிஷனர் முதலியவர்கள் வந்தபோது இந்தக் கிழவர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வீட்டிலிருந்து 'ஜய துர்க்கா' என்ற தொனியுடன் வெளியேறினதாகச் சொல்லப்படுகிறது.

மேலே கூறப்பட்ட பெரியோர்களும் மற்றும் அந்த ஜாப்தாவிலே உள்ளவர்களும் அராஜகக் கூட்டத்திலே சேர்ந்தவர்களென்று.

100836

வியாபாரம், தொழில், உத்தியோகம் முதலிய வற்றிலே சுதேசியம் பாராட்ட வேண்டுமென்ற குற்ற மற்ற தர்மத்தை ஜனங்களுக்குப் போதனை செய்தவர்கள். இவர்கள்மீது ஆங்கிலேய கவர்ன்மெண்டாரே பகிரங்கமாக யாதொரு குற்றமும் கூறமுடியவில்லை. 1818-ம் ஆண்டின் விதி (லாஜபத்ராய், அஜித்ஸிங் இவர்களைத் தீபாந்தர மேற்றிய விதி)யைக் கொண்டு கேஸ், விசாரணை யொன்றுமே யில்லாமல் சாமான் மூட்டைகளை அனுப்புவதுபோல இஷ்டமான இடங்களுக்குப் பிடித்தனுப்பி விட்டார்கள். இன்ன இடங்களுக்கு அனுப்பி யிருக்கிறார்களென்று குறிப்பாகச் சொல்வதற்கிடமில்லை. ஆனால், இந்தியா தேசத்திலேயே பல இடங்களில் வைத்திருக்கிறார்களென்று ஊஹிக்கப் படுகிறது."

(இந்தியா : 19.12.1908—பக். 5-6)

இக் கட்டுரையை யடுத்து, இங்கிலீஷ் பார்லிமெண்டில் எழுந்த கேள்வியைப் பற்றித் 'தேசப் பிரஷ்டங்கள்' என்கிற தலைப்பில் பாரதி எழுதியதாவது :

"தமது பிறப்பிடத்தினின்றும் வெளி நாடுகளுக்குக் கடத்திச் செல்லப்பட்ட 9 தேச பக்தர்களைப் பற்றி இங்கிலீஷ் பார்லிமென்டிலே கேள்விகள் ஓயாமல் கேட்கிறார்கள். விசாரணை யின்றி தேசப் பிரஷ்டம் செய்தல் மஹா அநீதி யென்பதை யுணர்ந்த ஐந்தாறு மெம்பர்கள் மட்டிலும் மாற்றி மாற்றிக் கேள்விகள் கேட்டதினால் என்ன நடக்கும்?

பா.—11

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உப மந்திரியாகிய புகானன் என்பவர் இவ்விதமான கேள்விகள் வந்த வுடனே "ரிஷி"யாய் விடுகிறார். அதாவது அதிக வார்த்தைகள் செலவழிப்பதில்லை. ஓரிரண்டு பதத்தில் மறுமொழி சொல்லி முடிக்கிறார். அந்தச் சொற்ப வார்த்தைகள்கூட அனேக அர்த்தங் களுக் கிடமாய் அமைக்கப்படுகின்றன. அந்தக் கேள்வி களை யெல்லாம் இங்கே திருப்பி எழுதுவதில் நமக்குப் பிரியமில்லை. கோகலேகூட வைசிராய் சபையில் இதைப் பற்றிப் பேசினார்.

கவர்ன்மென்டார் ரெயில்வேயில் நஷ்டமுண்டாய் விட்டதென் பதைப் பற்றி விசாரப்படுகிறார்களே யொழிய, குற்றவாளியா யிருந்தாலுமே, இல்லா விடினுமே அதிகாரிகளின் கோபத்துக்குட்பட்டு, தேசப் பிரஷ்ட மடைந்த அசுவினி குமார பாபு போன்ற நல்லோர்களின் கதி எப்படியானால் அவர்களுக்கென்ன? 'அசுவினி பாபு மீது இன்ன குற்றமென்று தெரிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் அவரை விடுதலை செய்ய வேண்டு'மென்று அவர் மனைவி செய்துகொண்ட விண்ணப்பத்தை இந்தியா கவர்ன்மென்டார் ரத்து செய்து விட்டார்க ளென்ற விஷயம் வாசிப்போருக்கு ஏற்கெனவே தெரிந்ததாகும்."

(இந்தியா : 3.4.1909—பக். 4)

இந்தக் கட்டுரைகள் தவிர, தொடர்ந்தாற்போல் இந்த ஒன்பது தேச பக்தர்கள் பற்றிய செய்திக் குறிப்புக்களும் அவ்வப்போது 'இந்தியா' பத்திரிகையில் பிரசுரமாகி யுள்ளன.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆறிலொரு கடமை

[ராஜ பக்தியைப் பற்றி உபதேசம் செய்பவர்களும் ஆங்கிலேய ஆட்சிக்கு விசுவாசமாக இருப்பவர்களும் ராஜபக்தியை மறப்பவர்களைப் பற்றிக் கூறும் கருத்துக்கு மறுப்புத் தெரிவிக்கும் கட்டுரை இது.]

சென்னை "டைம்ஸ்" பத்திராதிபர், கும்பகோணம் திவான் பகதூர் ரகுநாத ராயர் முதலிய பல ஆங்கிலேயர்கள் நமது நாட்டவர்களுக்கு அடிக்கடி ராஜ பக்தியைப் பற்றி உபதேசங்கள் செய்வதில், "ராஜ பக்தியை மறப்பவர்கள் ஹிந்து சாஸ்திரத்துக்கு விரோதிகள்; ஏனெனில், ஹிந்து சாஸ்திரங்கள் தெய்வ பக்திக்கு அடுத்த தரமாக ராஜ பக்தியைச் சொல்லி யிருக்கின்றன. ஆதலால் ராஜாங்கத்தாருக்குக் கோபம் வரும்படி நடக்கும் ஜனங்க ளெல்லாம் ஹிந்துக்க ளில்லை. மிலேச்சர்கள்" என்று பலமுறை எடுத்துக் கூறுகிறார்கள். இவ்விருவரில் சென்னை "டைம்ஸ்" பத்திராதிபர் ஹிந்து சாஸ்திரங்களை எந்த ஆசாரியரிடம் கற்றுக்கொண்டாரென்பது நமக்குத் தெரியாது. ஆயினும் இவர்கள் சொல்லும் விஷயத்தை நாம் ஆக்ஷேபிக்கவில்லை. நியாய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மென்று ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால், ஒரு சிறு கேள்வி மட்டிலும் இவர்களைக் கேட்க விரும்புகிறோம்.

ஆறிலொரு கடமைக்கு மேலே அதிகமாக வாங்கும் ராஜாவைப் பற்றி ஹிந்து சாஸ்திரங்கள் என்ன சொல்லுகின்றன என்பதை ரகுநாத ராயர் கேள்வி யுற்றிருக்கிறாரா? சென்னை "டைம்ஸ்" பத்திராதிபர் கேள்விப்பட்டிருப்பதுண்டா?

(இந்தியா : 3.4.1909—பக்.2)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ ஹரி ஸர்வோத்தம ராவ்

[மிகச் சிறந்த தேச பக்தரும், பத்திராதிபருமான ஸ்ரீ ஹரி ஸர்வோத்த ராவ் அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையைக் குறிக்கும் இக் கட்டுரையில் அரசினரின் உட்கருத்து எது என்பதைப் பற்றியும் பாரதி புலப்படுத்தி யுள்ளார்.]

ஸ்ரீ ஹரி ஸர்வோத்தம ராவுக்கு[1] "ஸ்வராஜ" கேஸில் கிருஷ்ணா ஜில்லா ஸெஷன்ஸ் ஜட்ஜியினால் 6 மாதம் மெய்காவல் தண்டனை விதிக்கப்பட்ட காலத்திலேயே நாம் இது ஆங்கிலேயர்களுடைய கோபத்துக்குப் போதுமானதா என்று சந்தேகப் பட்டோம். ஸ்ரீ கெர்ஷாஸ்ப் (ஸெஷன்ஸ் ஜட்ஜ்) பக்கம் பக்கமாய் பலமான காரணங்கள் காட்டி, ஸ்ரீ ஹரி ஸர்வோத்தம ராவுக்கு 6 மாத தண்டனைக்கு மேல் விதிக்கவே கூடா தென்பதை ஸ்தாபித்துத் தீர்ப்பெழுதி யிருந்தார். அதன் பேரில் கவர்ன்மென்ட் வக்கீல் ஹைக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்து ஹரி ஸர்வோத்தம ராவின் தண்டனையை அதிகப்படுத்த வேண்டுமென்று பிரார்த்தனை செய்துகொண்ட விஷயம் நேயர்களுக்குத் தெரியும்.

ஹைக்கோர்ட்டார் ஸ்ரீ ஹரி ஸர்வோத்தம ராவின் தண்டனையை 3 வருஷம் கடுங்காவலாக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாற்றி யிருக்கிறார்கள். போடி நாராயண ராவ் என்றவரை 9 மாதத்துடன் விட்டுவிட்டார்கள். ஆனால், ஸ்ரீ ஹரி ஸர்வோத்தம ராவ் கல்விமான், அறிவாளி என்பது கருதி அவருக்கு 3 வருஷம் போட்டிருக்கிறார்கள். பிரிடிஷ் இந்தியாவில் கவர்ன்மென்ட் ஒரு புறமும், தெய்வம் எதிர்ப்புறமுமாக நின்றுகொண்டு போராடுவது போலத் தோன்றுகிறது. எவன் புத்திமானோ, எவன் நெஞ்சத்தில் தூய்மை யுடையவனோ, எவன் உண்மையான தேச பக்தி யுடையவனோ அவனையெல்லாம் கண்டால் பிரிடிஷ் கவர்ன்மென்டாருக்குக் கடுங் கோபம் உண்டாகிறது.

ஹரி ஸர்வோத்தமர் அதி துர்ப்பலமான சரீர முடையவர்; பலமான காற்றடித்தால் பொறுக்க மாட்டார். மூன்று வருஷக் கடுங்காவலை அவர் எப்படித்தான் தாங்குவாரோ?

(இந்தியா : 17.4.1909—பக்.4)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. ஹரி ஸர்வோத்தம ராவ் (1883 - 1960) :

ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த இவர், பள்ளி வாழ்க்கையிலேயே தேசீயப் பற்றுக் கொண்டு விளங்கினார்; 'வந்தே மாதர'க் கிளர்ச்சியில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தார்.

1907 ஏப்ரலில் விபின சந்திர பாலர் ராஜமகேந்திரத்திற்கு வருகை புரிந்தபோது, ஹரி சர்வோத்தம ராவ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தம்முடைய கல்லூரி மாணாக்கர்களுக்குத் தலைமை தாங்கி, 'வந்தே மாதரம்' என்று பொறிக்கப்பட்டிருந்த வெள்ளிப் பதக்கங்களை அணிந்துகொண்டு கல்லூரிக்குச் சென்றார். மற்றும், பாலருக்குத் தம் கல்லூரி முன்பாக, மாணவர் படை புடை சூழ, வாழ்த்துப் பத்திரமும் வாசித்து அளித்தார்.

இதன் காரணமாக ராவ் பட்ட பாடுகளைப் பற்றிப் பாரதியின் 'இந்தியா' பத்திரிகை தரும் சில சுவையான செய்திகள் வருமாறு :

"ராஜமகேந்திரத்தில் விபின சந்திர பாபு வந்தது பயனற்றுப் போய்விடவில்லை. இவர் வந்தவுடனே ராஜமகேந்திரத்தில் தேச பக்தி யாவேசம் வேரூன்றிப் போய்விட்டது. வந்தேமாதர மந்திரத்தின் உண்மையான திறமை இப்போதுதான், ஜனங்களுக்குப் புலப்பட்டது. இக் கிளர்ச்சி முக்கியமாக மாணாக்கர்களுக்குள்ளே பரவியபடியால், அவர்களெல்லாம் "வந்தே மாதரம்" என்று எழுதப்பெற்ற வெள்ளிப் பதக்கங்கள் மார்பின் மீது அணிந்துகொண்டு பாடசாலைக்குச் சென்றார்கள்.

சென்னைக் கிறிஸ்தியன் காலேஜில் எம்.ஏ. பரீக்ஷை தேறி, ராஜ மகேந்திரம் டிரெயினிங் காலேஜில் பயிற்சி பெற்றுவந்த ஸ்ரீ ஹரி ஸர்வோத்தம ராவ் என்ற மாணாக்கரே இளைஞர்களுக்கெல்லாம் தலைமை பூண்டிருந்தார். இவரும் வேறு சிலரும் வந்தே மாதரப் பதக்கங்கள் அணிந்துகொண்டு வந்தது பற்றிக் காலேஜிலிருந்து தள்ளி விடப்பட்டிருக்கிறார்கள்."

(இந்தியா : 4.5.1907—பக்.2)

"மாணாக்கர்கள் பிரின்ஸிபால் சொல்லைத் தட்டிவிட்டு, ராஜாங்க விவகாரங்களிலே பிரவேசித்தமை, வந்தே மாதர மெடல்கள் தரித்துக் கொண்டமை,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாபு விபின சந்திர பாலருக்கு உபசரணைகள் முதலியன புரிந்தமை முதலிய விஷயங்களைக் கவர்ன்மெண்டார்... உத்தரவிலே கண்டனை செய்திருக்கிறார்கள்.

இதன்பேரில் கவர்ன்மெண்டார் விதித்திருக்கும் தண்டனைகள் மஹா கொடூரமாக இருக்கின்றன. மிஸ்டர் ஹரி ஸர்வோத்தம ராவ் எம். ஏ. பாடசாலை உபாத்தியாயர் வேலைக்கே இனி எப்பொழுதும் வரக் கூடாது என்று விதிக்கப்பட்டிருக்கிறது."

(இந்தியா : 22.6.1907—பக்.2)

இவ்வாறு அவ்வப்போது ஹரி சர்வோத்தம ராவைப் பற்றிய செய்திகள் 'இந்தியா' பத்திரிகையில் வெளி வந்துள்ளன.

அரசினரின் நடவடிக்கையைப் பற்றி ராவ் சற்றும் சவலைப்படவில்லை. 1908லிருந்து அவர் பத்திரிகைத் துறையில் பணியாற்ற முற்பட்டார். 'ஸ்வராஜ்' (Swaraj) என்ற பெயரில் பத்திரிகையைப் பெஜவாடாவி லிருந்து நடத்தி வரலானார். அப் பத்திரிகையில் ராஜ நிந்தனையான விஷயங்கள் பிரசுரமாகின்றன என்கிற காரணத்தைக் காட்டிப் பத்திரிகையின் பேரில் அரசினர் வழக்குத் தொடர்ந்தனர். வழக்கு மசூலிப்பட்டணத்தில் நடந்தது. 1908 நவம்பரில் பத்திரிகையின் உரிமையாளர் என்கிற முறையில் ஹரி சர்வோத்தமருக்கு ஆறு மாதம் வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

அரசுத் தரப்பு வக்கீல் தண்டனைக் காலத்தை அதிகப் படுத்த வேண்டும் என்று கோரியதன் பேரில், ராவுக்கு மூன்றாண்டுகள் கடுங்காவல் விதிக்கப்பட்டது.

இவர் சென்னை சட்டமன்ற உறுப்பினராகவும் சில காலம் இருந்திருக்கிறார். இவர் சட்டமன்ற உறுப்பினராக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருந்த சமயத்தில்தான், பாரதி பாடல்களில் ராஜத் துரோகமான கருத்துக்கள் இருப்பதாகக் கருதி, 1928 ஆம் ஆண்டின் பிற் பகுதியில், பாடல் நூல்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

அரசின் செயலைக் கண்டித்து, சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்த நாவலர் - தீரர் சத்தியமூர்த்தி அவர்கள் 8-10-1928 அன்று ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றைக் கொணர்ந்தார். மறுநாள் விவாதம் நடைபெற்றது.

வரலாற்றுப் புகழ் கொண்ட இந்த விவாதத்தில் திரு. ஹரி சர்வோத்தம ராவ் உணர்ச்சி பூர்வமான சொற் பொழிவை ஆற்றினார். அவசியங் கருதி, அதை இங்கே காண்பது பொருத்தமே யன்றோ?

"அக்கிராசனாதிபதி அவர்களே! ஐயா, இது, அரசாங்க எந்திரத்தின் உயிரற்ற ஜடத்தன்மையை வெளிப்படுத்தும் ஒரு சம்பவம். இந்த உத்தரவைப் போட்டது பர்மா அரசாங்கம். இந்த அரசாங்கம் அதனை செயின்ட் ஜார்ஜ் கோட்டை கெஸட்டில் மறு பிரசுரம் செய்திருக்கிறது. உடனே போலீஸ், பறிமுதல் ஆணைக்கு விண்ணப்பிக்கிறது. மாஜிஸ்திரேட் ஆணையைப் பிறப்பிக்கிறார். புத்தகங்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன. போலீஸ் துறை நிர்வாகத்திற்குப் பொறுப்பான எவருமோ, இல்லை, கனம் சட்ட மெம்பரோ அல்லது உள்துறை மெம்பரோ நடவடிக்கை எடுக்குமுன் இந்தப் பிரச்சினை குறித்துக் கணநேரமும் சிந்திக்கவில்லை.

இந்தப் பிரேரணை இங்கு விவாதத்திற்கு வரு முன்னரே, பாதிக்சப்பட்டவர்களுக்கு உரிய நீதி வழங்கு வதற்குப் போதிய நேரமும், அவகாசமும் அவர்களுக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருந்திருக்கும். இந்தப் பாடல்கள் தோன்றி முப்பது வருடங்கள் ஆகிவிட்டன. நாடெங்கும் பாடப்பட்டு வந்திருக்கின்றன. அந்தப் பாடல்கள் சிலவற்றில் எனக்குப் பரிச்சயமுண்டு. நான் ஒரு ஆந்திரனாக இருப்பதால், அந்தப் பாடல்களைப் பற்றி ஓர் ஆழ்ந்த அறிவு இருப்பதாக நான் சொல்லிக்கொள்ள முடியாது. சென்னை நகரத்தில் இருக்கும்போது எனக்குத் தமிழோடு ஏற்பட்ட உறவின் அடிப்படையில் நான் ஒன்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டவன். என்னை மிகவும் கவர்ந்து மயக்கிய அற்புதமான பாடல்கள் இந்தத் தொகுதிகளில்தான் இருக்கின்றன. ஒரு நாட்டின் இலக்கியங்களைத் தடை செய்வதைவிட அதிகமாக அந்த நாட்டின் சுயமரியாதைக்குப் பங்கம் ஏற்படுத்தி விட முடியாது. இது ஓர் முதல்தரமான இலக்கியம். மிகவும் உயர்ந்த தரமுடையது எனக் கருதி, பள்ளிக் கூடங்களிலும், கலாசாலைகளிலும் இதனைப் பாடமாக வைத்துள்ளனர். இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முன், இத்தகைய சூழ்நிலைகளை எல்லாம் அதிகாரிகள் மனத்திற்கொண்டு ஆழ்ந்து சிந்தித்திருக்கவேண்டும்.

வங்கத்தின் வழக்கு மொழியைப் பற்றிய ஒரு உத்தரவு, மக்களைப் புண்படுத்தியதின் விளைவாகத் தான் வங்கப் பிரிவினைப் போராட்டமும், வந்தேமாதரப் போராட்டமும் எழுந்தன. இந்த அரசாங்கமும் அதே பாதையில் சென்று பாரதியின் பாடல்களைக் கைப்பற்றினால் தமிழ்நாடு முழுவதும் கிளர்ச்சி ஏற்படும். தமிழ்நாடு முழுவதும் எழுந்து நின்று ஒரே குரலில், "இதோ தடை விதிக்கப்பட்ட எங்களது பாடல்கள்; நாங்கள் அவற்றைப் பாடுவோம்; தொடர்ந்து பாடுவோம் என வற்புறுத்துவோம். இந்த அரசு என்னதான் செய்கிறது எனப் பார்ப்போம்" என முழங்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கனம் சட்ட மெம்பர் அல்லது போலீஸ் துறைக்குப் பொறுப்பான மெம்பரின் முயற்சியில் இந்தச் சபையில் இந்தப் பிரேரணை தோற்கடிக்கப்படுகிறது என வைத்துக்கொள்வோம். அப்போது அத்தகைய ஒரு இயக்கம் தோன்றினால் நான் வியப்படைய மாட்டேன். இந்தச் சபையின் மெம்பர்களுக்குத் தங்கள் பொறுப்புக் கள் பற்றிய பிரக்ஞை உண்டு. இந்தப் பிரேரணை வெற்றி பெறும் என நான் உறுதியாக நம்புகிறேன். இந்தப் பிரேரணை இந்த அவைக்கு வருவதற்குக் காரணமே இந்த அரசாங்கம்தான். போட்ட உத்தரவைத் திரும்பப் பெறுவதும் அவர்கள் கையில் தான் இருக்கிறது. கனம் சட்ட மெம்பருக்கும், உள்துறை மெம்பருக்கும் ஏதேனும் ஒரு தென் இந்திய மொழி தெரியும். இருந்தும் போலீஸ் அதன் வேலையைச் செய்து முடிக்கும்வரை, உண்மையில் இவர்கள் இருவரும் அமைதியாக அமர்ந்திருந்தார்கள். இந்த நாட்டு மக்களுக் குக் கிடைத்திருக்கும் அரசமைப்பைப் பற்றிய விமர்சன மாக இந் நிகழ்ச்சி விளங்குகிறது. இந்த அமைப்பின் உயிரற்ற தன்மை வெளிப்படையாகிறது. பல்லாண்டுக் காலமாக மக்கள் நாவில் வழங்கி வந்திருக்கும் உன்னத மான கவிதைகளைத் தடை செய்வதென்பது தேசத் துரோகத்தை விடக் கேவலமானது. இது இந்தத் தேசத்தின் உயிர் நிலைக்கும், ஆன்மாவிற்கும் எதிராகச் செய்யப்பட்ட துரோகம்.

ஐயா, இந்தப் புத்தகங்கள் கடந்த முப்பதாண்டுக் காலமாக இங்குப் படிக்கப்பட்டு வந்திருக்கின்றன. தமிழிலக்கிய அபிமானிகள் அத்தனை பேருக்கும் இது பிடித்திருந்ததாலும், சாதாரண மக்களின் கற்பனையை யுங்கூடக் கவ்விப் பிரமிப்பை உண்டாக்கி இருந்ததாலும் இந்தப் புத்தகங்களின் பல பதிப்புக்கள் இதுவரை வெளிவந்திருக்கின்றன. விவரமறியாத ஒரு பிரசுர

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கர்த்தர் இப் புத்தகங்களைப் பல லட்சக்கணக்கில் அச்சிட்டு விடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். இந்நிலையில் அரசாங்கமோ இல்லை ஏதேனும் ஓர் அதிகாரியோ அவற்றைக் கைப்பற்றுதல் நியாயமா? அதனால் ஏற்படும் நஷ்டத்தை யார் ஏற்றுக்கொள்வது? இது மிகவும் அதர்மமானது; அநீதியானது.

எனவே கனம் சட்ட மெம்பர், உள்துறை மெம்பர் ஆகியோரது ஆதரவையும் இந்த ஒத்திவைப்புப் பிரேரணை பெற்றிருக்கவேண்டும் என நான் விரும்புகின்றேன். நம்மோடு அவர்கள் இணைந்து வாக்களிக்காவிட்டாலுங்கூட நடுநிலை வகிக்கலாம். அல்லது இப்போதுங்கூட இந்தப் பிரேரணையை ஏற்றுத் தவறைத் திருத்திக் கொள்ளலாம். தனிப்பட்ட முறையில் அவர்களிடம் கலந்துரையாடினால் அவர்கள் நிச்சயம் நமக்கு வாக்களிப்பார்கள் என்பதில் எனக்கு ஐயமே யில்லை. தங்களது கருத்துக்களை அரசாங்கத்தின் மீது வலியுறுத்துவதற்கு அவர்களுக்குத் தைரியமில்லை. மக்களுடன் நின்று சரியான காரியத்தைச் செய்கிற தைரியம் அவர்களுக்கு இருந்தால் அவர்கள் அங்கே அந்த இடத்தில் இல்லாதிருப்பது நல்லது. தான் போன போக்கில் காரியங்களைச் செய்கிற அதிகார வர்க்கத்திற்கு உடந்தையாக இருப்பதற்காகவே அவர்கள் அங்கிருக்கிறார்கள். பதவிக்காலம் முடிந்து அவர்கள் வரும்போது அவர்கள் செய்தது முற்றிலும் தேச பக்தியற்ற செயல் என்றும், இந்தத் தேசத்தின் கண்டனத்திற்கு அவர்கள் முற்றிலும் தகுதியானவர்கள்தாம் என்றும் இந்த நாடே அவர்களை நோக்கிச் சொல்லத்தான் போகிறது.

ஐயா, இந்தப் பிரேரணை, அரசாங்கத்தை அதன் சுயப் பிரக்ஞைக்குக் கொண்டுவரும் எனவும், இந்தப் பிரச்சினைக்கு விரைவான தீர்வு நமக்குக் கிடைக்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனவும், அதிகாரவர்க்க அரசாங்கம் ஒன்றினால் இந்தத் தேசத்தின் ஒளிமயமான ஆபரணங்களில் ஒன்று பறிக்கப் பட்டு இருட்டறைக்குள் எறியப்படும் அவமானத்தைப் பார்க்கும் கொடிய வாய்ப்பு இந்த நாட்டிற்குக் கிட்டாமற் போகும் எனவும் நாம் எதிர்பார்ப்போம்."

(பாரதியார் பாடல்களுக்குத்
தடை (1985) - பக். 60 - 63)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆள் பாதுகாப்பு

[பிரிட்டிஷாரின் ஆட்சியில் ஆள் பாதுகாப்புச் சட்டம் எந்த விதமான முறையில் நடைமுறைப் படுத்தப்பட்டது என்பதை இக் கட்டுரை விளக்கிக் காட்டுகிறது. குறிப்பாக, அக் காலச் சென்னை மாகாணத்தில் சென்னைக் கவர்ன்மெண்டார் தங்களிஷ்டம்போல் செயல்களை ஆற்றிவந்தனர் என்பதையும், அவர்களின் மனப்போக்கையும் இக் கட்டுரை எடுத்துக் காட்டுகின்றது.]

பிரிடிஷ் கவர்ன்மெண்டாரால் நமக்கு ஏற்பட்ட முதலாவது அனுகூலம் யாதென்று கேட்டால் "ஆள் பாதுகாப்பும், உடைமைப் பாதுகாப்பும்" (Security of Person and Property) என்று சொல்லு கிறார்கள். இந்தியர்களுக்கு உடைமை அதிக மில்லை. உடைமை யிருப்பி னல்லவோ பாது காப்பைப் பற்றிப் பேசவேண்டும்?

இனி, ஆள் ஸம்ரக்ஷணை எத்தனை நியாயமாக நடந்து வருகிற தென்பதற்குச் சமீபத்தில் லாஜ்பத் ராய், அஜித்ஸிங்,[1] கிருஷ்ண குமார பாபு,[2] அசுவினி பாபு முதலிய பலருடைய திருஷ்டாந்தங் கள் கண்டிருக்கிறோம். இவ்விதமான கிருத்தியங்கள் நமது சென்னை மாகாணத்திலும் ராஜாங்கத்தார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடிக்கடி செய்து வருகிறார்களென்பது சென்னைப் பத்திரிகை யொன்றிலிருந்து, கீழே யெடுத்துக் காட்டி யிருக்கும் குறிப்பினால் காணப்படும்.

1819-ஆம் வருஷத்து இரண்டாவது சென்னை ரெகுலேஷன்படி விசாகப்பட்டணம் ஜில்லாவில் சிலர் பிடித்தடைக்கப்பட்டும், மற்றபடி காவல் செய்யப் பட்டுமிருப்பதைப் பற்றி மிஸ்டர் வி. கிருஷ்ணசாமி ஐயர்[3] சென்னை சட்ட நிரூபண சபையில் சில கேள்விகள் கேட்டிருப்பதும், அவைகளுக்குக் கவர்ன்மெண்டார் சொல்லி யிருக்கும் பதிலும் நம் நேயர்களுக்குத் தெரியும். இக் கேள்விகள் இப்போது இந்தியா மந்திரியின் கவனத்துக்கு வந்திருக்கின்றன. இவ்விதம் காவல் செய்யப்பட்டவர்கள் மூவர். நௌரங்பூரில் திவானாய் வேலை பார்த்த மோஹன சாந்திராய் என்பவர் ஒருவர். சென்ற 1907-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 9ஆம் தேதி முதல் இவர் விசாகப்பட்டணத்தில் காவல் செய்யப் பட்டிருக்கிறார்.

சென்ற 1899 ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 3ஆம் தேதி முதல் விசாகப்பட்டணம் போலீஸாரால் காவல் செய்யப்பட்டு வரும் நாராயண ஸிங்லால் என்பவரும், சென்ற 1906 ஆம் வருஷம் சூலை மாதம் 17ஆம் தேதி முதல் விசாகப் பட்டணம் டிஸ்டிரிக்ட் ஜெயிலிலும், பிற்பாடு சோடாவரத்திலும் காவல் செய்யப்பட்டு வரும் ஸிட்டாபுலி டவுகாபுலி யென்பவருமே மற்றவர்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இம் மூவரில் கடைசியில் சொல்லப்பட்டவரைக் கவர்ன்மென்டார் இப்போது விடுதலை செய்து விட்டார்கள். முதலில் கூறப்பட்டவரைப் பற்றி மட்டும் தமக்குத் தெரிய வருமென்றும், மற்றவர் களைப் பற்றித் தமக்கு யாதொன்றும் தெரியா தென்றும் இந்தியா மந்திரி கூறுகிறார். இவர்கள் மூவரைத் தவிர வேறு 14 நபர்களும் பிடிக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்களை எல்லாம் பற்றியும் இவர்களுக்குக் கொடுக்கப்படும் படி விகிதங்களைப் பற்றியும் இந்தியா மந்திரிக்கு யாதொன்றுந் தெரியாது. சென்னைக் கவர்ன்மென்டார் தங்களிஷ்டம் போலவே காரியாதிகளை நடத்தி யிருக்கிறார்க ளெனக் கருதவேண்டி யிருக்கிறது.

(இந்தியா : 24.4.1909—பக். 4)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. அஜித்ஸிங் :

பஞ்சாப் நாட்டிலே ஜலந்தர் மாவட்டத்தில் உள்ள பெரிய கட்கர் (கலான்) என்ற ஊரில், எளிய குடும்பத்தில் 1881ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இவர் பிறந்தார். பல மொழிகளில் தேர்ச்சி பெற்றவர். . இளமைக் காலத்திலேயே தேச பக்தி கொண்டு, அதற்கான பணிகளில் தீவிரமாக ஈடுபட்டவர். லாலா லஜ்பத் ராய் அவர்களை மாண்ட்லே சிறைக்கு அனுப்பிய காலத்தில், அவருடன் மாண்ட்லே சிறையில் வாசம் செய்யும் பேறு பெற்றவர். 1907 சூரத் காங்கிரஸில் பங்கு கொண்டவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1907 சூரத் காங்கிரஸுக்குப் பாரதி போய் வந்ததும், "எங்கள் காங்கிரஸ் யாத்திரை" என்பதாக ஒரு நூல் எழுதியிருக்கிறார் அல்லவா? அந் நூலில் அஜித் ஸிங் என்பவரைப் பற்றி, அவர் வாயிலாகவே அவருடைய திருச்சரித்திரத்தைக் கேட்டு, அவர் தெரிவித்ததைப் பாரதி அப்படியே தம் நூலில் எழுதி யுள்ளார்.

பாரதி எழுதிய வசனங்களில் ஒருசில வருமாறு :

"...அஜித் ஸிங் 26 வயதுள்ளவர். சாமானிய குடும்பத்தில் பிறந்தவரான போதிலும் பார்வைக்கு ராஜ குமாரனைப் போலிருக்கிறார். வீரியமும், பராக்கிரமமும், ஸாஹஸமும், கூர்மையான அறிவும், களங்கமற்ற சிந்தையும் இவர் முகத்திலே ஜொலித்துக் கொண்டிருக்கின்றன.

...இவருடைய தகப்பனாரின் பெயர் அர்ஜுன ஸிங் என்பது. தாயார் பெயர் ஜயகுமாரி. க்ஷத்திரிய குலத்திலே ஷ்டி இரண்டு நல்லோரின் தவப்பேறாகவும், பாஞ்சால நாடு செய்த புண்ணியத்தாலும் 'வெல்ல முடியாதவன்' என்ற பொருள் கொண்ட "அஜித்" என்ற திருநாமம் பூண்ட வீரக் குழந்தை தோன்றியது...

...அஜித் ஸிங் பாலியத்திலேயே சிறந்த அறிவுக் கூர்மையுடையவராய்த் தம்மைக் கண்டோர்களெல்லாம் வியப்படையுமாறு கல்வி கேள்விகளிலே தேர்ச்சி யடைந்தார். இளமையிலேயே ஜலந்தரில் ஆங்கிலோ ஸம்ஸ்கிருத பாடசாலையிலேயும், அப்பால் லாஹோர் தயானந்த ஏ.வி. காலேஜிலும் கல்விப் பயிற்சி பெற்றார். இங்கிலீஷ் பட்டங்கள் அதிகமாகப் பெற்றுக்கொள்ளாவிடினும், இவர் பஞ்சாபி, உருது, பாரஸீகம், ஸம்ஸ்கிருதம் என்ற பாஷைகளிலே உயர்ந்த திறமை யுடையவரானார்...

பா.—12

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

...1902-ம் வருஷத்திலே இவர் கைங்கரிய முயற்சிகள் தொடங்கினார். இருபத்தொரு பிராயத்திலே ஜனாசார விஷயங்களைப் பற்றி அரிய நூல்கள் பல எழுதி யிருக்கின்றார். அப்பால் ஜீவனத்தின் பொருட்டாக, இவர் ராணுவத்திலுள்ள பல ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுக்கு, பாரஸீகம், உர்து முதலிய பாஷைகள் கற்பித்துக் கொடுக்கும் முன்ஷியாக உத்தியோகத்திலே யமர்ந்தார். ராணுவத்திலே நம்மவர்களால் ஸர்க்காருக்கு ஏற்படும் பலத்தையும், சுதேச ராணுவத்தார்களை அதிகாரிகள் நடத்தும் மாதிரிகளையும் நன்கு தெரிந்து கொள்வதற்கு இவருக்குப் போதுமானபடி ஸவுகரியங்கள் ஏற்பட்டன. இந்த உத்தியோகம் நான்கு வருஷ காலம் பார்த்துக் கொண்டிருந்து 1907-ம் வருஷம் பெப்ருவரி மாதத்திலே இதை நிறுத்தினார். இடையே இவர் ஆரவார மில்லாமல், மவுனமாக இருந்துகொண்டு தம்மால் இயன்ற வரை சுதேச அபிவிருத்திக்குரிய காரியங்கள் பல செய்து கொண்டு வந்தார்.''

2. கிருஷ்ண குமார பாபு :

வங்கத்திலிருந்து ராஜத் துரோகக் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டு, வெளியேற்றப்பட்ட ஒன்பது பேர்களில் ஒருவர்; 'ஸஞ்ஜீவினி' பத்திரிகையை நடத்தியவர். இவர் மனைவிக்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் மாதந்தோறும் 200 ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால், அம் மாதரசியார் தொகை தேவை யில்லை என்று கூறி மறுத்து விட்டார்.

3. வி. கிருஷ்ணசாமி ஐயர் (1863-1911) :

ஜில்லா முனிசீப் வேங்கடராம அய்யரின் புதல்வராகப் பிறந்த இவர், கும்பகோணத்தில் கல்வி பயின்றார்;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருவாளர்கள் பி.எஸ். சிவஸ்வாமி அய்யர், பி.ஆர். சுந்தரம் அய்யர் ஆகியவர்களை இளமைக் கால நண்பர்களாகக் கொண்டார்.

மயிலாப்பூரில் வசித்து, பிரபல வக்கீலாக விளங்கினார்.

கோபால கிருஷ்ண கோகலே அவர்களுக்கு மிக நெருங்கிய நண்பராகத் திகழ்ந்தார்.

சென்னையில் சிறந்து விளங்கிய மிதவாதக் கட்சிப் பிரமுகர்களில் மிக முக்கியமானவர். பாரதியாரின் மூன்று பாடல்கள் கொண்ட "ஸ்வதேச கீதங்கள்" சிறு பிரசுர நூலை வெளியிட்டவர். அரசியல் கொள்கைகள் காரண மாகப் பாரதி இவரைப் பலமுறை கடுமையாக விமர்சித் துள்ளார். 1903இல் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸில் வரவேற்புக் குழுவிற்குத் தலைமை தாங்கிய இவரே, சூரத் காங்கிரஸிற்குப் பின் பிளவுபட்ட 1908 சென்னை காங்கிரஸ் மாநாட்டிற்கான ஏற்பாடுகளைச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்க பங்கும் ஆற்றியவர்.

சட்டசபை அங்கத்தினராகவும், உயர் நீதிபதியாகவும், கவர்னரின் நிர்வாக சபை அங்கத்தினராகவும் பொறுப்பு வகித்துப் பணியாற்றியவர்.

தர்ம காரியங்களுக்குத் தாராளமாக நன்கொடைகள் அளித்துள்ளார்.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கீழ்த்திசையில் ஸ்வதந்திரக் கிளர்ச்சி - அதற்கு நேரும் பீடைகள்

[இந்தக் கட்டுரை கீழ்த்திசை நாடுகளில் நடைபெற்ற ஸ்வதந்திர கிளர்ச்சிகளைப் பற்றிய செய்திகளை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் ஆராய்கிறது. ஏற்றமும் இறக்கமும் இயற்கையின் நியதி என்பதை உலக சரித்திரத்திலிருந்து எடுத்துக்காட்டி, இந்திய நாடும் அதி விரைவில் விடுதலை பெறும். அதுவும் தர்மத்தின் துணையால் என்பதை இக் கட்டுரையில் பாரதி மிக அழகாக விளக்குகிறார்.]

கீழ்த்திசை நாடுகளில் ஜனாதிகாரம், ஜன ஸ்வதந்திரம் என்பவற்றைப் பரப்புதற்குரிய ஞான அலை சென்ற வருஷங்களாக மேன்மேலும் மோதிச் செல்லுகின்றது. ஆனால், ஏற்றம் கண்டதில் இறக்கம் தோன்றுவது இயற்கையின் விதி. ஏறின அலை இறங்கும். மிகுந்த முயற்சிக்கப்பால் சிறிது நேரம் தளர்ச்சி... பிறகுதான் மறுபடியும் மும்முரமாக முயற்சி தொடங்கும். ஆனால், உலக சரித்திரப் பயிற்சியினால் நாம் ஒரு விஷயந் தெரிந்திருக்கிறோம். அது யாதெனில், பெரிய ஜன எழுச்சிகள் தோன்றி மேன்மேலும் வளர்ந்து செல்லும் மார்க்கத்தில் இறக்கக் காலங்கள் நீடித்தனவாக மாட்டா. ஸ்வதந்திர சந்திரனுடைய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கமனத்திலே சுக்ல பக்ஷங்கள் நீடித்தவை. கிருஷ்ண பக்ஷங்கள் சொற்ப கால முடையனவாம். ஞான சூரியனுடைய கதியில் இரவுக் காலம் கிடையாது. கிரகண பீடைகள்தா னுண்டு.

* * *

கீழ்த்திசையில் ஸ்வதந்திரக் கிளர்ச்சி சில வருஷங்களின் முன் உண்டாயிற்று. அதன் விளைவு கள் ஒன்றல்ல; இரண்டல்ல, பல. பிரிடிஷார் முதலிய ஐரோப்பிய ஜாதியார் நினைத்த மட்டிலே நடுங்கும்படி அத்தனை வல்லமை கொண்டிருந்த ருஷியாவின் வல்லமையை மிகச் சிறிய நாடும், மேற்கு நாட்டாரால் கடுகென்று மதிக்கப்பட்டு வந்ததுமாகிய ஜப்பான் ஒரு க்ஷணத்திலே சிதறடித்துவிட்டது. இரண்டாயிர வருஷமாக அபினியால் மயக்கப்பட்ட அறிவும், சலனமின்மை யால் மழுக்கமடைந்த ஆத்மசக்தியுங் கொண்டு உறங்கிக் கிடந்த சீனா கண்ணைத் திறந்து, இனி அபின் வேண்டாமென்று கர்ஜனை செய்தது. ஆயிரக்கணக்கான பிள்ளைகளை ஐரோப்பாவிற் கும், ஜப்பானுக்கும், அமெரிக்காவுக்கும் புதிய கலைகளும், தொழில்களும் பயின்று வரும்படி சீனா அனுப்பிற்று. நாடெல்லாம் பாடசாலைகளை விருத்தி செய்தது. பத்திரிகைகள் பரவின. ஜன ஆட்சி ஒன்பது வருஷங்களுக்குப் பின் ஏற்பட வேண்டு மென்று, காலஞ்சென்ற சீனராணி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(ஆரம்பத்தில் ஜனர்பிவிருத்திக்கு நேர் விரோதமாயிருந்தவள்) சாகும்போது நியமனம் செய்துவிட்டுச் செத்தாள்.

* * *

இந்தியா — வேதோப நிஷத்துக்களை மறந்து குக்கிராமங்களுக் கெல்லாம் புராணங்கள் கட்டிப் படனஞ் செய்யத் தொடங்கிய இந்தியா — பிரதாப் ஸிம்ஹனையும் சிவாஜியையும் மறந்து மேத்தாவையும் கிருஷ்ணசாமி அய்யரையும் ராஜரீக விஷயங்களில் வழிகாட்டிகளாகக் கொள்ளத் தொடங்கிய இந்தியா — செல்வமிழந்த இந்தியா — பிரிவுபட்டு ஆயிரந் துண்டாய்க் கிடந்த இந்தியா — அறிவும் ஆண்மையும் பெருமையும் ஸகல நற்குணங்களும் இழந்து நின்ற இந்தியா — திடீரென்று ஸ்வதந்திரத் தொனி எழுப்புவதாயிற்று. ஒரு நிமிஷம். காட்டுத் தீயைப்போல நாடு முற்றிலும் ஞானத் தீப்பற்றி விட்டது. பெங்காளம் "வந்தே மாதரம்" என முழங்கிற்று. இமயமலைக் குகைகளினின்றும், கன்யாகுமரி அலைகளினின்றும், "வந்தே மாதரம்" என்று எதிரொலிகள் பிறந்தன. நாட்டிலெங்கும் ஸ்வந்திர தாகம் உண்டாயிற்று. நமது கைத் தளைகளும் கால் தளைகளும் படீர் படீரென்று அறுந்து விழுவதாயின. அறிவிலே தெளிவுண்டாயிற்று' தோளிலே பலமுண்டாயிற்று. மனதிலே ஆண்மை பிறந்தது.

* * *

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரஸீகம் — துருப்படர்ந்து போயிருந்த பாரஸீகம் — பாசி பிடித்த பாரஸீகம் — ஜன ஆட்சிக்கு யுத்தம் செய்யலாயிற்று. ஐரோப்பிய ரெல்லாம் கொடுங்கோன்மைக்கும் பலஹீனத் திற்கும் திருஷ்டாந்தமாகச் சொல்லி வந்த துருக்கி ஜாலவித்தை போல அரை க்ஷணத்திலே பார்லி மெண்ட் ஸ்தாபனம் செய்தது. இவை யெல்லாம் கீழ்த்திசைக் கிளர்ச்சியின் விளைவுகள்.

* * *

தற்காலத்திலே, சிறிது இறக்கமுண்டா யிருக் கிறது. ஜப்பானியர் பொருளாசை கொண்டு கொரியாவின் சுதந்திரத்தை நாசமாக்குகிறார்கள். இந்தியாவின் ஸ்வதந்திர எழுச்சியினிடம் சிறிதேனும் அனுதாபம் பாராட்டாமலிருக்கிறார் கள். பாரஸீகம் கலக முற்றி ஒரு பயனுமில்லாமல் ருஷியா, இங்கிலாந்து என்னுமிரண்டு திமிங்கிலங் களின் வாயில் வீழ்ந்து விடும் போலிருக்கிறது. துருக்கியில் பார்லிமெண்ட் ஸ்தாபனம் செய்த பாலத் துருக்கிகளின் கட்சிக்கு எதிரிகள் பலராய் விட்டார்கள். இந்தியாவில் தேசாபிமானிகள் பயந்து கலங்கி நிற்கிறார்கள். ஜனங்கள் திகைப்பி லிருக்கிறார்கள். இதுவே கீழ்த்திசை ஸ்வதந்திர சூரியனைப் பற்றி யிருக்கும் கிரகண பீடைக்கு அடையாளங்கள். இந்தக் கிரகணம் சீக்கிரம் விலகிப் போய்விடு மென்பதில் ஆக்ஷேபமில்லை. இதற்கு உலக சரித்திரம் சாக்ஷி. ஆனால் இந்தக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிரகணம் எத்தனை நாள் நிற்குமோ என்பது தான் தெரியவில்லை. ஸ்வதந்திர சூரியனுடைய கிரணங்களைக் கண்கள் பரவசத்துடன் திரும்ப எப்போது பார்க்குமோ என்ற கவலை க்ஷணநேரங்கூட நீங்காமல் நெஞ்சைப் பற்றி யிருக்கின்றது. எல்லாவற்றிற்கும் தர்மத்தைத் துணையாக நம்பி யிருக்கிறோம்.

(இந்தியா : 1.5.1909—பக். 2)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

சுயாதீன விருப்பத்தோடு பாடுபட்ட நாடுகளின் எழுச்சிகளைப் பற்றிய கட்டுரைகள் பலவற்றைப் பாரதி தம் 'இந்தியா' பத்திரிகையில் எழுதி யுள்ளார்.

குறிப்பாக, துருக்கி, பாரசீகம் ஆகிய பிற நாடுகளில் நடைபெற்ற சுயாதீனக் கிளர்ச்சிகளைப் பற்றிப் பாரதி எழுதிய சிலகட்டுரைகளைப் "பாரதியின் 'இந்தியா' கட்டுரைகள்" என்னும் நூலில் காணலாம்.

இந் நூலில் துருக்கியைப் பற்றிய மூன்று கட்டுரைகளும்' பாரசீகத்தைப் பற்றிய ஐந்து கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

மற்றும், "ஸ்வராஜ்யம்" என்கிற தலைப்பில் கிழக்குத் தேசத்தவர்கள் பிரதிநிதி யாட்சி முறைக்குப் போராடியதை விளக்கும் கட்டுரைகளும் அந் நூலில் இடம் பெற்றுள்ளன.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ராஜபக்தி உபதேசம் செய்யும் சுதேசிகள்

[காமாட்சிநாதன் செட்டியார் என்பவர் 'ஆங்கிலேய அரசாட்சியின் நன்மைகளும் அனேக இந்தியரின் வீண் முணுமுணுப்பும்' என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டிருந்தார். நூலாசிரியர் என்ன கருத்துடன் எழுதியுள்ளார் என்பதை அறிந்துகொள்ள முடியவில்லை என்பதாகக் கூறி, உண்மையில் செட்டியார் ஸ்துதி செய்தாரா நிந்தை செய்தாரா என்பதைப் பாரதி தம் பத்திரிகை வாசக நேயர்களின் முடிவுக்கே விட்டு விடுகிறார்]

திருநெல்வேலி ஜில்லா நரசிங்க நல்லூர் கிராமத்தில் காமாக்ஷிநாதன் செட்டியார் என்ற ஒருவர், "ஆங்கிலேய அரசாட்சியின் நன்மைகளும் அனேக இந்தியரின் வீண் முணுமுணுப்பும்" என்பதாக ஒரு துண்டுப் புஸ்தகம் எழுதிப் பிரசுரம் செய்திருக்கிறார்.

விகடமா? உண்மையா?

இந்தப் புஸ்தகம் ஆங்கிலேய ராஜாங்கத்தைக் கேலி செய்ய வேண்டுமென்ற கருத்துடன் எழுதப் பட்டதா? அல்லது உண்மையான புகழ்ச்சிதானா என்றறிவது சிரமமா யிருக்கிறது. இக் காலத்தில் இவ்விதமான புஸ்தகங்கள் வெளிப்படும்போது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரியர் விகடக் கருத்துடையவரா அல்லது உண்மையான சிந்தையுடன் ராஜபக்தி பேசுகிறாரா என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. கவர்ன்மெண்டாரை நேரே குறை கூறினால் தண்டனை யேற்படுமென்ற அச்சத்தினால் சிலர் இந்த "ஸ்துதி நிந்தை" (ஸ்துதி பேசுவதுபோல நிந்தித்தல்) முறைமையைக் கைப்பற்றுகிறார்கள். நாம் சொல்வது வேடிக்கை யன்று. சில தினங்களின் முன்பு யதார்த்தமாகவே இப்படி ஒரு விவகாரம் நடந்தது.

திருஷ்டாந்தம்

அவ் விஷயம் பின்வருமாறு:- கள்ளிக்கோட்டையில் 'மேற்குக் கரை ஸாக்ஷி' (வெஸ்ட் கோஸ்ட் ஸ்பெக்டேடர் என்பது இப் பத்திரிகையின் இங்கிலீஷ் பெயர்) என்பதாக ஒரு பத்திரிகை நடந்து வருகிறது. இப் பத்திரிகையிலே சுமார் 20 தினங்களுக்கு முன்பாகச் சென்னை கவர்ன்மெண்டார் ஜன அதிருப்தியைச் சுலபமாகவும், மிகத் திறமையுடனும் அடக்கிவிட்டார்களென்று புகழ்ந்து ஒரு வியாஸம் பிரசுரிக்கப்பட்டது. "இந்த வியாஸம் இவ்வூர்ப் பிரதான வக்கீல்களி லொருவரால் நமக் கெழுதி யனுப்பப்பட்டது" என்று அந்தப் பத்திராதிபர் குறிப்பிட்டுக் காட்டி யிருப்பதுடன், சிற்சில இடங்களில் அந்த வக்கீலின் அபிப்பிராயங்களுக்கு மறுப்பு மெழுதி யிருக்கிறார். இப்படி யிருக்க அதே வியாசத்தைச் சிலசில பதங்களை மட்டும் மாற்றி "இந்தியன்" என்ற கையெழுத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திட்ட ஓர் நிருபர் சென்னை "டைம்ஸ்" பத்திரிகையில் சில தினங்கள் கழித்துப் பிரசுரம் செய்திருந்தார். இந்த "இந்தியன்" என்ற இந்திய விரோதி நெடுங்காலமாகச் சென்னை "டைம்ஸ்" பத்திரிகையிலே ஸ்வஜனங்களை மனம் போனபடியெல்லாம் தூஷணை செய்து எழுதி, ஆங்கிலேயர்களின் தயவைச் சம்பாதிக்கலாமென்று முயற்சி செய்து வருகிறான். இவன் இன்னானென்பது மட்டிலும் நமது ஜனங்களுக்குத் தெரிய மார்க்கமில்லாமலிருந்தது.

மேற்கூறப்பட்ட இரண்டு வியாசங்களையும் பார்த்த "ஹிந்து" பத்திராதிபர் "இவ்விரண்டையும் கள்ளிக்கோட்டை வக்கீல்தான் எழுதினவரா? அப்படியானால் இத்தனை நாள் நமக்குத் துப்புத் தெரியாமல் இருந்த ஒரு தேசத் துரோகியை இப்போது கண்டுபிடித்து விடலாம் அல்லது ஒருவேளை கள்ளிக்கோட்டை வக்கீல் எழுதிய வியாசத்தை இந்த "டைம்ஸ்" பத்திரிகையில் சுதேச தூஷணை செய்துவரும் திருடன் தன்னுடைய வியாசமென்று உலகத்தார் நினைத்துக் கொள்ளட்டு மென்பதாகச் சிலசில பதங்களை மட்டிலும் மாற்றி அயோக்கிய வேலை செய்திருக்கிறானா? இதன் உளவு தெரியவில்லை" என்று வியாக்கியானம் செய்திருந்தார். இதன் பேரில் ஷி கள்ளிக்கோட்டை வக்கீல் ஹிந்து பத்திரிகைக்கு ஒரு கடிதமெழுதி யிருப்பதில், "டைம்ஸ்" பத்திரிகைக்கு அவ் வியாசம் எழுதிவிடுகிறவன் நானன்று. எனக்கு "டைம்ஸ்" ஸமாசாரமே தெரியாது. நான் இவ்வூர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''ஸாக்ஷி'' என்னும் பத்திரிகையில் எழுதிய வியாசங் கூடச் சென்னை கவர்ன்மென்டாரைக் கேலி செய்ய வேண்டு மென்று விகடக் கருத்துடன் எழுதினேனே யன்றி உண்மையான மனதுடன் எழுதவில்லை. இந்த விகடார்த்தம் தெரியாமலே என்மீது ''ஸாக்ஷி''ப் பத்திராதிபர் கோபங் காட்டி விட்டார்'' என்று தெரிவித்திருக்கிறார்.

''ஸாக்ஷி'' பத்திராதிபர் கோபித்ததுகூடப் பெரிதில்லை. இந்த ''இந்திய'' விரோதியாகிய மூடன் அக் கேலி வார்த்தைகளை உண்மைப் புகழ்ச்சியாகக் கருதி அதைத் தான் திருடி எழுதினால் தன்மீது ஆங்கிலேயர்களுக்குத் திருப்தி யுண்டாகு மென்று கருதியதே விந்தையிலும் விந்தை யாகும்!

இந்தக் கள்ளிக்கோட்டை வக்கீலைப்போலவே மேலே குறிப்பிடப்பட்ட நரசிங்க நல்லூர்ச் செட்டி யாரும் ஒருவேளை ஸ்துதி நிந்தையாக எழுதி யிருக்கலா மென்று நாம் சந்தேகப்படுகிறோம். ஆனால், கள்ளிக்கோட்டை வக்கீல் கற்றுணர்ந்த பண்டிதர். ஆகையால் அவருடைய 'ஸ்துதி நிந்தை' எளிதில் விளங்கத்தக்கதும், படிக்க ''ரஸ'' முடையதுமா யிருக்கிறது. நரசிங்க நல்லூர்க் காமாக்ஷிநாதன் செட்டியார் அதிகமாக அரிச்சுவடி யில் பழகினவரென்று தோன்றவில்லை. ஆகையால் அவருடைய ''ஸ்துதி நிந்தை'' விஷயத்தில் சந்தேக முண்டாகும்படியாக இருக்கின்றது. அந்தப் புஸ்தகத்திலே யிருந்து சில வசனங்கள் எடுத்துக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காண்பிக்கிறோம். அது யதார்த்தமான ஸ்துதியா அல்லது வேடிக்கை ஸ்துதியா என்பதை நமது பத்திரிகை படிப்பவர்களே நிச்சயித்தறிந்து கொள்க.

செட்டியார் செய்யும் புகழ்ச்சி

காமாக்ஷிநாதன் செட்டியார் பின்வருமாறு சொல்லுகிறார்:-

> இத் துரைத்தனம், தன்னாஸ்தியாகிய இவ் விந்தியாவை நல்ல ஸ்திதியில் வைத்து அதன் க்ஷேமத்திலிருந்து பலன் பெறவேண்டுமென்று இச்சிக்கிறது. திருஷ்டாந்தமாக "நாம் ஒரு தோட்டத்தில் விருக்ஷ ஜாதிகளை வைத்து அதன் பலனை அனுபவிப்பதற்காக அவ் விருக்ஷங்களுக்குப் பக்குவப்படி வுணவளித்தும் அவைகள் சேதப்படாவண்ணம் காவல் செய்தும் வருகிறோம். அவ்விதம் செய்தாலன்றோ, அதன் பயனை யனுபவிக்கலாம்? அன்றேல் அது நாசமடையு மல்லவா? ஆங்கிலேய கவர்ன்மெண்டார் நிரம்பவும் புத்திசாலிகளானதால், அவர்களது ஆஸ்தியாகிய இந்தியாவை நல்ல ஸ்திதியில் வைத்திருப்பதே பலனடைந்து வருவதற்குச் சாதகமென்றிருக்கும். அவ் வைரோப்பிய ஞானிகளுக்கு யார் புத்தி கற்பிக்க வேண்டும்?"

சரியான புகழ்ச்சி! ஆங்கிலேய கவர்ன்மெண்டார் நம்மை மரங்களை நடத்துவதுபோல நடத்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிறார்களென்று அர்த்தம். நம்மைப் போஷணை செய்வது மெய்யானால், அதுகூட அவர்களுடைய சொந்த நன்மைக்குத்தான் செய்கிறார்களே யல்லாமல், நமது நன்மைக்கன்று. பழம் வேண்டுகிற வரை நம்மைப் பரிபாலனம் செய்து, பழத்தை அவர்கள் பறித்துத் தின்று கொண்டிருப்பார்கள். விறகு வேண்டியபோது வெட்டிச் சாய்த்து விடுவார்கள். கரி வேண்டி யிருந்தால் நம்மைச் சுடுவார்கள். வனத்தைத் திருத்தி வீடுகளாகக் கட்ட வேண்டு மென்ற விருப்பம் வந்தால் நாம் இருந்த இடமே புலப்படாதபடி செய்து விடுவார்கள்.

ஆங்கிலேய கவர்ன்மெண்டாருக்கு என்ன புகழ்ச்சி! அவர்கள் நம்மை அவர்களுக்கு ஸமமான ஸ்வதந்திர ஜனங்களாக ஒருபோதும் நடத்த மாட்டார்கள். நம்மை விருஷங்களாகவும் அவர்களுடைய "ஆஸ்தி" (உடைமை) யாகவும் எண்ணி நடத்துவார்களென்று காமாட்சிநாதன் செட்டியார் சொல்லுகிறார்.

இப்படி இங்கிலீஷ் கவர்ன்மெண்டாரைப்பற்றி இகழ்ச்சியான எண்ணங்கள் பரப்புவோர்களை அந்த கவர்ன்மெண்டார் நண்பர்களாக நினைக்க மாட்டார்களென்று நம்புகிறோம்.

(இந்தியா : 8.5.1909—பக். 3)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நமது ஆங்கிலேய "மித்திரர்கள்"

[கோகலே, மேத்தா முதலானவர்கள் இந்தியா மந்திரிகளிடமும், பார்லிமெண்ட் உறுப்பினர்களிடமும் நம்பிக்கை கொண்டு, ஆங்கில அரசாங்கத்துடன் ஒத்துழைத்துச் சுயராஜ்யம் பெறவேண்டும் என்று சொல்வது எந்த அளவுக்குச் சாத்தியமானது என்பதை இக் கட்டுரையில் பாரதி தமக்கே உரிய நகைச்சுவையோடு தெரிவித்துள்ளார்.]

பார்லிமெண்டில் நமக்குப் பல "சினேகிதர்கள்" இருக்கிறார்கள். கோகலே முதலிய மேத்தா வகுப்பினருக்கு இந்த ஆங்கிலேய சினேகிதர்களே "பரமாசாரியர்கள்". இந்தியா கவர்மெண்டார் ஏதேனும் வெளிப்படையான பச்சை அதர்மங்கள் செய்யும்போது, இந்த சினேகிதர்கள் எழுந்து நின்று கொண்டு "கேள்விகள்" கேட்பார்கள். உடனே வேறு பலர் எழுந்து இந்த சினேகிதர்களைப் பரிஹாஸம் செய்வார்கள். சபையோ ரெல்லாம் நமது "சினேகிதர்"களைப் பார்த்து நகைப்பார்கள். பிறகு ஒரு மந்திரி யெழுந்து (தக்க பயிற்சி யற்றவர்களால் எழுதப்படும் வேதாந்த வினா விடைகளில் இருப்பது போன்ற) தகவலற்ற மறுமொழிகள் சொல்வார். கடனுக்குக் கேள்வி கேட்ட நமது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"சினேகிதர்" அத்துடன் திருப்தி யடைந்து உட்கார்ந்து விடுவார்.

சில சமயங்களில் இந்த ஆங்கிலேய ஆசாரியர்கள் இந்தியாவிற்கு 'அனுகூல'மாகத் தீர்மானங்களும் திருத்தப் பிரேரணைகளும் (Resolutions and Amendments) கொண்டு வருவார்கள். அதை 'வோடிங்' (மெம்பர்களின் வாக்கு) வரையிலுங் கூடக் கொண்டு போவதில்லை. இவர்கள் பேசி முடிந்த வுடனே ஒரு மந்திரி எழுந்து "இந்தப் பிரேரணையை நமது ஆனரபில் மெம்பர் (இன்னார்) வற்புறுத்தமாட்டா ரென்று நம்புகிறேன். நமக்குள்ளேயே அபிப்பிராய பேதங்களிருப்பது இந்தியா ஜனங்களுக்குத் தெரிவது பெருந் தீங்கான விஷயம். மேலும், இந்தியா கவர்ன்மென்டார் ஸகல அமிசங்களிலேயும் தர்ம சாஸ்திர முறை தவறாதபடிதான் நடப்பார்கள். ஆதலால் ஆனரபில் மெம்பர் தமது பிரேரணையை நழுவ விட்டுவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்" என்பார்.

அந்த வார்த்தையில் பரமானந்தங் கொண்டு நமது பார்லிமென்ட் மித்திரர் "யதாஸ்தானம் ப்ரதிஷ்டாபயாமி" என்று உட்கார்ந்து கொண்டு விடுவார். அவருக்கு வந்த ஆத்திர மெல்லாம் காற்றிலே போய்விடும். இவர்கள் மனப்பூர்வமாக முயற்சி யெடுத்திருந்தா லல்லவோ மேன்மேலும் சிரத்தையோடும், விடா முயற்சியுடனும், கோபத்துடனும் பாடுபடுவார்கள்? வேறொரு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விஷயத்திலும் பார்லிமெண்டில் பெயர் வாங்க மார்க்கமில்லாத இக் கூட்டத்தார் தம்மை விளம்பரப் படுத்திக் கொள்வதற்கு இந்தியாவின் கஷ்டங்களை ஒரு சாதனமாக வைத்திருக் கிறார்கள்.

* * *

இந்த 'மித்திரர்கள்' ஸர் ஹென்ரி காட்டன், மிஸ்டர் ஸ்மீடன் முதலியவர்களே யென்பது படிப் போருக்கு ஏற்கெனவே விளங்கி யிருக்கும். இவர் களில் ஸ்மீடன் என்பவர் 'இந்நியா கவுன்சில் மசோதா'வைப் பற்றிக் காமன்ஸ் சபையில் நடந்த விவகாரத்தின் போது பின்வருமாறு பேசி யிருக்கிறார் :

"இம் மசோதாவில் பிரபுக்கள் சபை யோரால் களைந்தெறியப் பெற்ற மூன்றாம் விதி *(Cause III)*யை மறுபடி நுழைப்பதில் எனக்கு ஸம்மத மில்லை.

இதற்கு முகாந்தரங்க ளாவன:—

(1) புதிய நிர்வாக சபைகளை நாமேற் படுத்துவது இந்தியாவிலுள்ள பொதுஜன அபிப்பிராயத்தால் விரும்பப்பட்ட தன்று. (அவர்கள் கேட்காத அனுகூல(?)த்தை நாமாகச் செய்துவிடுவது பெருந் தோஷம்!)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(2) இந்தியர்களின் நேர்மை, யோக்கியதை, தகைமை என்பவற்றில் ஆங்கிலேயர்களுக்குத் தமது சொந்த ஜாதியார் விஷயத்திலிருப்பதுபோல அத்தனை நிச்சயமான விசுவாசம் கிடையாது (இந்தியர்கள் பொய்யர், அயோக்கியர்; ஆதலால் நிருவாக சபையில் நியமிக்கத் தகுதியற்றவர்கள் என்பது கருத்து) நான் இந்தியாவில் சில மாகாணங்களில் உத்தியோகம் செய்திருக்கிறேன். இந்தியர்களுடைய நடத்தை சுத்தமில்லை யென்பதை என் அனுபவத்தால் கண்டிருக்கிறேன். இந்திய உத்தியோகஸ்தர்களின் மனது வீட்டில் மனைவி முதலிய பந்து ஜனங்கள் செய்யும் விஷமங்களுக்கு எளிதில் வசப்படக் கூடியது'' என்று சொல்லுகிறார்.

மேத்தா பக்ஷத்தவர்கள், இந்த ஸ்மீட்டன் முதலியவர்கள் மூலமாகவே நமக்கு ஜாதீய முக்தி கிடைக்கப் போகிறதென்று நம்பி யிருக்கிறார்கள்! நாடு பாழடைந்து போய்க் கொண்டு வருகிறது. கோகலே'யும், மேத்தா'வும் ''ஸ்மீட்டாய நம:'' ''காட்டாய நம:'' என்று மந்திரம் ஜபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

(இந்தியா: 22.5.1909—பக். 4)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. கோகலே (1866-1915) :

பலன் எதையும் எதிர்பாராமல், கடமையைச் செய்த பாரதத் தலைவர்களில் இவரும் ஒருவர்; ஏழைக் குடும்பத்தில் பிறந்து, முயற்சியால் முன்னேறிய பெரியோர். அரசியல் கொள்கை காரணமாக, இவரைப் பாரதி பற்பல சந்தர்ப்பங்களில் விமர்சனம் செய்ய நேர்ந்ததும் உண்டு. 'சக்ரவர்த்தினி' பத்திரிகையில் ஆசிரியராகப் பாரதி இருந்தபோது, இப் பெரியாருடைய திவ்விய சரித்திரத்தை எழுதி யுள்ளார்.

"...இவர் தேசாபிமான மென்னும் ஒடித்தற்கரிய விரலின்மீது தமது பேரறிவு என்னும் குன்றைத் தூக்கி நிறுத்தி, நம்மவர்களை ரக்ஷணை புரியத் தலைப்பட்டிருக்கின்றார்.

...இவர் தமது வாழ்நாள் முழுவதிலும் தமக்கு வரப்போகின்ற இன்பத்தையேனும், நலத்தையேனும், புகழையேனும் சிறிதேனும் எதிர்பாராதவராகித் தமக்குப் பெருங் கடமையாகத் தோன்றும் தொழிலை முடிப்பதிலேயே அடங்காத பற்றுக் கொண்டவராக இருக்கின்றார்"

(சக்ரவர்த்தினி –1905 டிசம்பர் இதழ்)

என்று பாரதி தம் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

1905 காசி காங்கிரஸ் சபைக்குத் தலைமை தாங்கிய பெருமைக்குரியவர் இவர். "இந்திய ஊழியர் சங்கம்" என்பதாக ஒன்றை ஸ்தாபித்து, அதில் இளைஞர்களைச் சொற்ப சம்பளம் பெற்றுக் கொண்டு உழைக்க வழிகாட்டியவர் இச் சீலர். காந்தியடிகளால் தம் அரசியல் குருவென மதிக்கப் பட்டவர். இந்திய மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்ட உத்தமர்களில் இவர் பெயர் என்றும் அழியாது நின்று ஒளிரும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பதில் எவருக்கும் இரண்டுபட்ட கருத்து கிடையாது. கோபால கிருஷ்ண கோகலே என்பது இவரது முழுப் பெயர்.

2. மேத்தா (1845 - 1915) :

சர் பெரோஸ்ஷா மேத்தா என்பதே இவருடைய திரு நாமம். பம்பாயில் செல்வ வள்மிக்க பார்சி குடும்பத்தில் பிறந்த இவர், இங்கிலாந்தில், பாரிஸ்டர் படிப்புக்குச் சென்றார். அங்கு இவர் தங்கியிருந்த போது தாதாபாய் நௌரோஜி போன்ற இந்திய அறிஞர்களுடன் நெருங்கிப் பழகினார்.

பல பொறுப்பான பதவிகள் வகித்த இவர், 1889 பம்பாய் காங்கிரஸ் சபையின் வரவேற்புக் குழுத் தலைவராக அமைந்தார்; 1890 கல்கத்தா காங்கிரஸ் சபைக்குத் தலைமையும் தாங்கினார்.

1907 சூரத் காங்கிரஸில் தோன்றிய கட்சி வாதங்களில் இவர் மிதவாதத் தலைவராகக் கருதப்பட்டார். தீவிரவாதத் தலைவர்களின் அணியை ஆதரித்து நின்றமை காரணமாகப் பாரதி இவரையும் கடுமையான வார்த்தைகளால் தாக்கிக் கட்டுரைகள் பல எழுதி யுள்ளார்.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ராஜத் துரோகத்தைக் கிளறிக் கிளறிப் பார்க்கிறார்கள்

[தமிழ் அறியாத மஹாராஷ்டிர வாலிபரான தரபர்வே என்பவருக்கு, இலண்டனிலிருந்து எவரோ தமிழில் அமைந்த ராஜத் துவேஷ மூட்டும் துண்டுப் பிரசுரங்களை அனுப்பி, அவற்றைத் தமிழ்நாட்டில் சில ஊர்களுக்கு விநியோகம் செய்யும்படி குறிப்பிட்டிருந்தனராம். தரபர்வேயும் கோவை, திருச்சி ஆகிய ஊர்களுக்கு, அத் துண்டுப் பிரசுரங்களை அனுப்பி இருந்தாராம். இச் சம்பவம் நடந்து முடிந்த ஓராண்டின் பின், போலீசார் அவர்மீது வழக்குத் தொடர நடவடிக்கை மேற்கொண்டபோது, போலீஸாரின் செய்கையைக் குறிப்பிட்டுப் பாரதி எழுதிய கட்டுரை இதுவாகும்.]

வெகு விநோதமும் துக்ககரமுமான ஒரு கேஸ் சில தினங்களின் முன்பு நமது கவனத்திற்கு வந்தது. நாஸிக் நகரத்தில் ஸ்ரீ தர பர்வே என்றொரு ஜாகீரதாருக்கு (இவர் வாலிபரா யிருக்கலாமென்று நினைக்கிறோம்) லண்டனிலிருந்து யாரோ தமிழில் சில ராஜத் துரோகமான துண்டுப் பத்திரிகைகள் அச்சிட்டனுப்பி, அவற்றைத் தமிழ் நாட்டில் சில இடங்களுக்கு அனுப்பும்படி எழுதி யிருந்தார்களாம்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ தர பர்வே மஹாராஷ்டிரர்; இவருக்குத் தமிழ்ப் பாஷை தெரியாது. அதன்பேரில் இவர் அத் துண்டுப் பத்திரிகைகளில் சிலவற்றைக் கோயம்புத்தூர், திருச்சினாப்பள்ளி முதலிய இடங்களுக்கு அனுப்பினாராம். அத்துடன் ஒரு கடிதமு மனுப்பி அதில் "இதன் பொருள் இன்னதென்று எனக்குத் தெரியவில்லை. தயவுசெய்து தெரிவிக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

இதெல்லாம் எப்போது நடந்தது? சென்ற வருஷம் ஆகஸ்ட் மாதத்தில். இப்போது வருஷம் ஒன்றாகப் போகிறது. அதை இப்போது கிளறிப் பார்த்து அந்த பர்வேயைப் பிடித்திருப்பதுடன், அவர் மேல் 'ராஜாவுக்கு விரோதமாக ஜனங்களைப் போருக்குத் தூண்டுதலுக்கு உடந்தையாயிருத்தல்;' 'ராஜத்துரோகம்' முதலிய பிரமாண்டமான குற்றங்கள் ஏற்படுத்தி, விசாரணை செய்யப்போகிறார்கள். இதற்கெல்லாம் ஒரே அர்த்தம்: ஆங்கிலேய கவர்ன்மென்டார் அறிவில்லாமையாலும், மூட பயத்தாலும் போலீஸ்காரர் தொகையை இரண்டு மடங்கு மூன்று மடங்கு அதிகப்படுத்தி நாடு முழுதும் விதைத்துவிட்டார்கள். இப்போது அந்தப் போலீஸாருக் கெல்லாம் சரியானபடி வேலையில்லை. ஏதேனும் கேஸுகள் கொண்டு வராமற் போனால் ஜீவனத்துக் கிடமிராது. அதனால் அவர்கள் பழைய காலத்துக் குப்பைகளை யெல்லாம் கிளறிக் கிளறிப் பார்த்து ஏதேனும் சிறுபிள்ளைத் தனமான கேஸ் மூட்டைகள் கொண்டு வருகிறார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கள். அந்த பர்வே செய்தது குற்றமாக வைத்துக் கொண்டபோதிலும், ஸ்வதந்திரமுள்ள தேசங்களிலே அவரைக் கூப்பிட்டு லேசாக எச்சரித்துப் போகச் சொல்லிவிடுவார்கள். ஆங்கிலேய கவர்ன்மென்டார் என்ன செய்யப் போகிறார்களென்பதை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

(இந்தியா : 29.5.1909—பக்.3—4)

*

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஷாமாஜி கிருஷ்ணவர்மாவும் லண்டன் கொலையும்

(இலண்டன் மாநகரில் 1909 ஜூலை 1ஆம் தேதி கர்ஸன் வில்லியை மதன்லால் திங்கரர் என்பவர் சுட்டுக் கொன்றுவிட்டார். அந்தக் கொலைக்கும் ஷாமாஜி கிருஷ்ண வர்மாவுக்கும் தொடர்புண்டு என்பது போல ஆங்கிலப் பத்திரிகைகள் எழுதிய சமயம், கிருஷ்ண வர்மா அவர்கள் கொலைக்கும் தமக்கும் எவ்விதத்திலும் தொடர்பில்லை என்று மறுத்து அறிக்கை விட்டார். மற்றும் அவர் அந்த அறிக்கையில், 'திங்கரா தேச சுதந்திரத்தின் பொருட்டு உயிரை இழக்கும் மகான்' என்றும், 'ஆங்கிலேயர்கள் தொடர்ந்து அநீதிகள் இழைத்துக் கொண்டிருக்கும் பக்ஷத்தில் உலகத்தார் வியக்கும்படியான விபரீதம் விளையும்' என்றும் குறிப்பிட்டார். இவர் சொன்னதன் பொருளைத் திரித்து "மதராஸ் டைம்ஸ்" பத்திரிகை எழுதியதற்கு மறுப்புரையாக அமைந்ததே இக் கட்டுரையாகும்.)

லண்டனில் நடந்த கொலையைக் குறித்து ஷாமாஜி கிருஷ்ண வர்மா[1] லண்டன் டைம்ஸுக்கு எழுதிய கடிதத்தில் லவலேசமும் தனக்கும் கொலைக்கும் சம்பந்தமில்லையென்றும் திங்கரா வென்பவர் தன் தேச ஸ்வதந்திரத்திற்காக உயிரை யிழக்கும் மகா னென்றும் எழுதி யிருக்கிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேலும் ஆங்கிலேயர்கள் இந்தியாவில் இன்னும் அனியாயம் செய்துகொண்டிருக்கும் பக்ஷத்தில் லோகத்தாரெல்லோரும் வியக்கும்படி ஒரு விபரீதம் நேருமென்று சொன்னார். அவர் எதை யெண்ணிச் சொல்லுகிறாரே அது நமக்குத் தெரியாவிட்டாலும் அநீதி வெகுநாள் நிலைக்காதென்பது எல்லோருக்கும் திண்ணம். இதை யறியாமல் "மதராஸ் டைம்ஸ்" மிண்டோ'வைக் கொல்வதற்கும் மார்லியைக் கொல்வதற்கும் ஷாமாஜி கிருஷ்ண வர்மாவுக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்றும் கூறுகிறது. இப்படி வீணாக அயலாரின் பேரில் பழிசொல்வது என்ன பிரயோசனம்! தேசத்தில் நடக்கும் அனியாயத்தினால் சிலர் மன வெறுப்புண்டு பைத்தியக்காரர்களைப் போலச் செய்யும் செயல்களுக்கு முக்கிய காரணம் அநீதிதானே! அதை விட்டுவிட்டு ஷாமாஜி கிருஷ்ண வர்மா பேரிலும் மற்ற இதரர்கள் பேரிலும் குற்றம் சாட்டுவது தங்கள்பாலுள்ள குற்றத்தை மறைக்கும் பொருட்டே யல்லவா?

நான்கு வருஷ காலமாகக் கொடூர தண்டனைகளைத் தாங்கள் குற்றவாளிகளென்று நினைப்பவர்களின் பேரில் விதித்தும், தேசத்திலிருக்கும் அதிர்ப்தியை நீக்க முடியாததை அனேக ஆங்கிலேயர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்களல்லவா? இப்பொழுதாவது அந்த அதிர்ப்தியை நீக்கும் மற்றொரு வழியில் செல்லக் கூடாதா? அதாவது பிரஞ்சு கவர்ன்மெண்டார் புதுச்சேரியில் செய்திருப்பதுபோல இந்தியாவிலும் ஆங்கிலேயர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தியர்களுக்கு ஸ்வராஜ்யத்தைக் கொடுப்பதே யாம். இதுதான் ஷாமாஜி கிருஷ்ண வர்மாவின் அபிப்பிராய மென்று நம்புகிறோம்.

(இந்தியா: 24.7.1909—பக்.2)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. ஷாமாஜி கிருஷ்ண வர்மா (1857-1931) :

இவர் கச் சமஸ்தானத்தில் மாந்துவி என்னும் ஊரில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். இளம் வயதிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். பிற்காலத்தில் ஆக்ஸ் போர்டு அடைந்து அங்கே பயின்று, பட்டமும் பெற்றார். இந்தியா திரும்பி வந்து ரட்லம் சமஸ்தானத்தில் திவானாகப் பணிபுரிந்தார். பின்னர் திரும்பவும் இங்கிலாந்து சென்று, தேசிய இயக்கப் பணிகளில் தீவிரமாகப் பங்கு கொண்டார்.

விடுதலைப் போராட்ட வரலாற்றில் பெருமைமிக்க இடம் பெற்றுள்ள இவரைப் பற்றிய குறிப்பு பாரதியின் 'இந்தியா'வில் வெளிவந்துள்ளது.

"இந்தியாவின் முக்கிய ஆங்கிலேய நண்பரென்று புகழ்பெற்ற பிராண சினேகிதரும், இந்தியாவிலிருந்து அனேக வாலிபர்கள் பிற நாடுகளுக்குச் சென்று சுயா தீனத்தின் இனிமையை அறிந்து வருமாறு உபகாரம் செய்யும் பொருட்டு யாத்திரை நிதிகள் ஏற்படுத்தி யிருப்பவரும், இங்கிலாந்தில் உயர்ந்த கல்வித் தேர்ச்சி பெற்று இந் நாட்டிற்கு வந்து கவர்ன்மென்ட் வேலையை எதிர்பார்க்காமல், வக்கீல், டாக்டர், உபாத்தியாயர், வர்த்தகத் தலைவர் என்பவை போன்ற வேறு பதவி களி லிருக்க விரும்பும் இளைஞர்களுக்கு ஸ்காலர்ஷிப்பு கள் அமைத்திருப்பவருமாகிய ஸ்ரீ சியாமஜீ கிருஷ்ண

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வர்மா பண்டிதர் M.A., (oxon) இங்கிலாந்திலேயே ஸ்திரமாக வாசம் செய்துகொண்டு "இந்தியன் ஸோஷாலஜிஸ்ட்" என்னும் பத்திரிகை நடத்திவருவதை சுதேச மித்திரன் பத்திரிகை மறந்துவிட்டதா?

சியாமஜீ கிருஷ்ண வர்மா இந்தியாவுக்கு மேற்கண்ட உபகாரங்கள் மட்டுந்தானா செய்திருக்கிறார்? "இந்திய சுய ஆட்சிச் சங்கம்" (Indian Home Rule Society) என்பதாக லண்டனில் ஒன்று ஸ்தாபித்து அதிலே எத்தனை திறமை யுடைய இந்தியர்களைக் கூட்டி, வெகு சாமர்த்தியமாக நடத்தி வருகிறார். தமது பத்திரிகை மூலமாகவே எத்தனையோ இந்தியாவின் பொருட்டுப் பாடுபட்டு வருகின்றார்."

(இந்தியா : 3.11.1906—பக் 1-2)

என்றுள்ள வசனங்கள் ஷாமாஜி கிருஷ்ண வர்மாவின் சீரிய தொண்டுகளை விவரிக்கின்றன அன்றோ?

2. மிண்டோ (1845-1914) :

கர்ஸான் பிரபுவுக்குப்பின் இந்தியாவின் ராஜப்பிரதிநிதி யாக 1905இல் வந்தவர்; இவர் அடக்குமுறையுடன் கூடிய சமரச ஆட்சியைத் தொடங்கி வைத்தவர். 1910இல் இவருடைய வைஸ்ராய் பதவி முடிந்தது.

இவர் வைஸ்ராயாக இருந்தகாலத்தில் இந்தியர்களுக்குச் சில சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கஞ்சி குடிக்கும் இந்தியன்

[திருநெல்வேலியைச் சார்ந்த — வக்கீல் தொழில் புரிந்த குருசாமி அய்யர் மிதவாதக் கட்சியை ஆதரித்து வந்தவர். அவர் 1909 ஆகஸ்ட் 21இல் நடைபெற்ற மாவட்டக் காங்கிரஸ் மகாசபையில் தலைமை தாங்கி, பிரிட்டிஷ் ஆட்சியைப் புகழ்ந்தும், அவர்களாலேதான் நமக்கு நன்மைகள் கிடைக்கப் போகின்றது என்றும் பேசினார்.

குருசாமி அய்யரின் பேச்சு இந்திய ஜாதிக்கே இழிவைத் தரக்கூடியது என்பதைப் பாரதி இக் கட்டுரை யில் சுட்டிக் காட்டி யுள்ளார்.]

வட ஆற்காடு ஜில்லாவின் இவ் வருஷத்திய மஹாநாடு ஸபையானது சித்தூரில் இவ் வாகஸ்டு மீ 21உ கூடிற்று. அதற்கு கனம் மிஸ்டர் கே. ஆர். குருஸாமி அய்யர், B. A. B. L. அக்ராஸனாதிபதி. இவர் தமது அக்ராஸன உபந்நியாஸத்தில் விசேஷமாய் அடிமைத்தனமும், கோழைத்தனமும், பிரிடிஷ் பூஜையில் ஆழ்ந்த தாஸத்துவமும் காட்டி யிருப்பது இந்திய ஜாதிக்கே ஓர் அவமானத்தை விளைவிக்கக் கூடியது.

"கனவான்களே! மஹா சுத்தமாயும் மங்களகரமாயும் உள்ள ராபர்ட் கிளைவின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கையில் பிரிடிஷ் ஏகாதிபத்தியத்திற்கு அஸ்திவாரக் கல் நாட்டி, தேச சரித்திரத்தில் பரிசுத்தமாக்கப்பட்ட திவ்ய பூமியின்மேல் இன்று நிற்கிறோம். நமது ஜாதீய முயற்சி களை ஸரியானபடி நடத்திக்கொண்டு போவதற்கு ஆவசியமாயுள்ள ராஜ விசுவாசத்தை (பிரிட்டனுக்கு இந்தியா பாராட்ட வேண்டிய ராஜ விசுவாசத்தை) மறுபடியும் உறுதிப்படுத்த இதைவிட வேறு நல்ல இடம் கிடையாது; ஸமயமும் கிடை யாது. இன்னும் சில நாளைக்கு அவர்கள் (பிரிடிஷார்கள்) சோற்றை ஸாப்பிடும்படிக்கும் நாம் அந்தச் சோற்றின் நீசதண்ணியை (கஞ்சியை)க் குடிக்கும்படி நேர்ந்தாலும் நாளடைவில் நமக்கு நன்மை உண்டாகு மென்று சொல்ல நான் ஸித்தமாய் இருக் கிறேன்''

என்று சொல்லி யிருக்கிறார்.

ராபர்ட் கிளைவின் மங்களகரமாயும் சுத்தமா யும் உள்ள கையை யோசிப்போம். அதுதான் முதல்முதல் இந்திய மாதாவுக்கு பிரிடிஷான் கை யால் விலங்கைப் பூட்டினது. இந்தியர்கள் தலையில் தரித்திரத்திற்கு உலை வைத்தது. உமாச் சந்தன் என்னும் வங்காள வர்த்தகனை ஏமாற்றப் பொய்ப் பத்திரம் எழுதியது. வாட்ஸன் கையெழுத்து போடமாட்டே னென்று சொன்னபோது, அவன் பெயரைத் தப்புக் கையெழுத்துப் போட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவன் சீமையிலிருந்து திரும்பி வந்து சென்னையில் கவர்னரா யிருந்தபோது சேனையிலிருந்த சிப்பாய் கள் - தாங்கள் கஞ்சி குடித்தாவது கிளைவுக்குச் சோற்றைக் கொடுத்த சிப்பாய்கள் - பணத்திற் காகக் கொஞ்சம் கலகப்பட்டபோது அவர்களைக் கொன்று அதை அடக்கியது இந்தக் கிளைவின் கையே. தப்புக் கையெழுத்துப் போட்டதாய்க் குற்றஞ் சாட்டப்பட்ட மஹாராஜா நந்த குமாரர் என்னும் வங்காளியை வாரன் ஹேஸ்டிங்ஸ் நாளில் தூக்கில் போட்டார்கள்! பிரத்தியக்ஷமாய்த் தப்புக் கையெழுத்துப் போட்ட கிளைவுக்கு என்ன தண்டனை? தன் தேசத்திற்கு மெத்தப் புண்ணிய கரமான காரியம் செய்தான் என்று புகழ்ந்து பிரிடிஷார்கள் கொண்டாடியதுதான். இவனுடைய வண்டவாள மெல்லாம் நாம் எடுத்துரைக்கில் பெருகும்; மிஸ்டர் குருஸாமி அய்யர் போன்றவர்கள் வயிறும் எரியும்.

தற்காலத்தில் பிரிடிஷான் சாப்பிடுவது சோறானால், கனம் குருசாமி அய்யர் போன்ற வர்கள் ஸாப்பிடும் ஸாப்பாடு கஞ்சியே. ஏழை இந்தியன் கதி என்ன? வயிற்றுக் கில்லாமல் பட்டினி கிடந்து அகால மரணத்திற்கு ஏதுவாகும் ஏழை இந்தியன் கதிக்கு என்ன பரிஹாரம்? பிரிடிஷானுக் காக எத்தனை இந்தியன் சாகலாம்? ஏன் அவனை நாம் போஷிக்கவேண்டும்? நம்மை யடக்கி அடிமைத்தனத்தில் வைத்து ஆளவா? கருப்பு மனிசா என்று பூட்ஸ் உதை கொடுக்கவா? நாம் இந்த ஸ்திதியிலேயே இருந்தால் கனம் குருஸாமி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அய்யர் போன்றவர்கள் காலத்திலும் இனி எந்தக் காலத்திலும் இந்தியா நன்மையே அடையப் போகிறதில்லை என்பது உண்மை.

இந்தியர்கள் ஏற்கெனவே பிரிடிஷார்கள் சோற்றில் மெத்த கொஞ்ச பாகத்தைப் பெற்றுக் கொண்டு விட்டார்கள். ஆனால் இனிமேல் அவர்கள் மேல்மேலும் பெறப்போவது அவர்கள் (பிரிடிஷார்களுக்குக் கொடுக்கும்) உண்டையின் (பலகாரத்தின்) அளவுக்குத் தக்கபடி இருக்கிற தென்று 'டைம்ஸ்' பத்திரிகை கூறுகிறது. எந்தச் சோற்றை இந்தியர்கள் பெற்றுக் கொண்டார்கள்? பிரிடிஷான் சாப்பிட்டு மிகுந்த சோற்று அவிழையா? பிரிடிஷார்களை மெச்சுபவர்களுக்குப் பிரிடிஷார்கள் தின்ற பிறகு சிந்தி யிருக்கும் அவிழ்தான் மகா பிரசாதம்! அது கிடைத்ததற்கே பிரிடிஷானுக்கு ஸ்தோத்ரம்! என்ன பஞ்சைப் பாட்டு! என்ன அடிமைத்தனம்! இந்தியர்களின் முன்னோர்களின் விசாலமான உரிமையும் பெருமையும் எங்கே? இவர்கள் சிறுமையும் தாழ்மையும் எங்கே?

அடடா! தேசத்தின் பெருமையான பெயரைக் கெடுக்கப் பிள்ளைகளாக எப்படி எப்படி பாரதமாதா பெற்றிருக்கிறாள்!

(இந்தியா: 28.8.1909 — பக். 2)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ பாரததேச தாஸர்களின் பக்தி

[நம் பாரத நாட்டின் முற்காலப் பெருமை, தற்காலத்திய சிறுமை இவற்றைத் தெள்ளத் தெளிவாகப் பல சான்றுகளுடன் இக் கட்டுரை விளக்குவதுடன், நாட்டின் அடிமை நிலை நீங்கினால் ஏற்படும் நன்மைகளையும் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது.]

நமது ஆரியா வர்த்தமானது புண்ணிய பூமி. இதில் பிறக்க வேண்டுமானால் வெகு புண்ணியம் செய்திருக்கவேண்டும். இந்த நாடானது நீர்வளம், நிலவளம் முதலியவைகள் நிரம்பியுள்ளது. பழைய நாளைய புத்தகங்களைப் பார்த்தால் முதலில் நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு என்ற இரண்டு அத்தியாயங்கள் தனியாக இருக்கின்றன.

நமது தேசம் முன்னாட்களில் எப்படி கல்விப் பொருளிலும் செல்வப் பொருளிலும் குறை வில்லாதவர்க்கு உறைவிடமாய் இருந்தது என்பதை அதனால் அறியலாம். ஜனங்கள் எவ்வளவு நாகரீகம் அடைந்திருந்தார்கள்; என்னென்ன போகங்களை அனுபவித்து வந்தார்கள்; என்னென்ன யோக ஸித்தியை அடைந்தார்கள்; என்னென்ன ரமணீய மான திவ்ய ஆச்ரமங்க ளிருந்தன; எத்தனை தவ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முனிவர்கள் திவ்ய தபோ மஹிமையுடன் விளங்கினர்; புஜபல பராக்கிரமமுள்ள அரசன் எப்படி யெப்படி பிரஜைகளைப் பரிபாலித்து வந்தான்; எப்படி யெப்படி தர்மிஷ்டனாய் இருந்தான் என்ற இன்னும் பல அரிய பெரிய விஷயங்களை நாம் தெரிந்துகொள்ள தனது அமிர்த மயமான ஞானத்தை நமக்குத் தருகின்றன.

இதை யெல்லாம் நாம் **வேடிக்கையாக** மாத்திரம் படிக்கக்கூடாது. அதை **வாடிக்கையாக்க** முயலவேண்டும். நமது பாரதநாடு அன்னியர்கள் ஆளுகையில் இல்லாமல் ஸ்வராஜ்யமாய் இருக்கிற தென்று வைத்துக்கொள்வோம். நமது நாடு என்ன உயர்ந்த நிலைமையி லிருக்கும்! நாம் அன்னியர் களுக்கு அடிமைகளாக அரை நிமிஷமேனும் இருக்க வேண்டியதில்லை. ஸ்வயேச்சையாய் இருக்கலாம். நாடு செழிக்கும். தருமமும், தவமும் தழைத் தோங்கும். மன நிச்சிந்தையுடன் கடவுளைத் தொழலாம். கைத்தொழில்களை நமது இஷ்டப்படி விருத்தி செய்யலாம். அனாவசியகமான வரிகளை எடுத்துவிடலாம். ஆவசியகமான கட்டாயப் படிப்பு முதலியவைகளை நமது பிள்ளைகளுக்கு நாட்டின் செலவில் சொல்லிக் கொடுக்கலாம். எண்ணிறந்த ஏழைகளுக்கு ஏராளமாகப் பிழைப்புக்கு வழியுண்டு. ஐக்கியத்தைப் பலப்படுத்தலாம். வியாபாரம் விருத்தியாகும். நமது தேசத்துப் பணம் வெளி நாட்டுக்கு வருஷா வருஷமும் போகாது; நமது நாட்டிலேயே இருக்கும். நமது தேசத்தவர்களை

பா.—14

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அயல் நாட்டவர்களும், அயல் நாட்டிலும் மிருகங்களைப்போல் நடத்த மாட்டார்கள்; வெகு மரியாதையுடன் நடத்துவார்கள். உலகத்தில் பாரத நாட்டின் பெயர் ஒரு மரியாதை பெறும் பெயராய் இருக்கும். நாட்டை நலியும் பஞ்சமும் தரித்திரமும் விசனமும் இரா. நாடெங்கும் ஸந்தோஷமும் உத்ஸாஹமும் ஜனங்கள் முகத்தில் உல்லாஸமாய் பிரகாசிக்கும். ஜனங்கள் மனத் திருப்தியுடன் ஸுகமாக வாழ்வார்கள். மஹா தேஜஸ்விகளாய் பாரத புத்ரர்கள் விளங்குவார்கள். பாரதநாடு முன்போல் பூலோக ஸ்வர்க்கமாய் ஒளிவீசும்.

இப்படிப்பட்ட மேலான நோக்கத்தை லக்ஷிய மாக (முன்னிலையாக) வைத்துக்கொண்டு தேச ஸேவை செய்து வருகிறவர்கள் தேச பக்தர்கள். இவர்கள்தான் புதிய கக்ஷிக்காரர்கள். இவர்கள் நோக்கம் பாரத ராஜ்யம் ஸ்வதந்திர மடைய வேண்டு மென்பதே. 'நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை' என்பது இவர்கள் துணிபு. மாத்ரு பூமிக்கு பய பக்தியுடன் விசுவாஸம் பாராட்டி, கைங்கரியம் செய்வதே இவர்களுடைய மேலான விருப்பம். இந்த மாதிரி தேசத் தொண்டு பூண்டு நடந்துவரும் தேச பக்தர்கள் தங்களுடைய உடல், பொருள், ஆவி இம் மூன்றையும் தேசத் திற்கே அர்ப்பணம் செய்திருக்கின்றனர். சிலர் தூக்கினி லிறக்கின்றனர்; பலர் தேச நிர்வாஸம் செய்யப்படுகின்றனர். எண்ணிறந்தவர் புன் சிறைக் களத்தில் அடைக்கப்படுகின்றனர். பலர் தமது ஸொத்துக்களை அரசாங்கத்திற்குப் பறி கொடுக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்றனர்; பலர் வீணாகப் போலீஸ், மிலிடெரி முதலிய கொடுந் துன்பங்களுக்கு உட்படுத்தப் படுகின்றனர். பலர் அயோக்கிய சட்டங்களால் இன்னும் பற்பல விதமாய்ப் பீடிக்கப்படுகின்றனர்.

இம்மாதிரி தேச பக்தர்கள் கொடூரமாய் நடத்தப்படுவதற்குக் காரணங்கள் பல இருப்பினும் அவற்றுள் முக்கியமானவைகள் இரண்டே; ஒன்று பிரிடிஷ் அரசாங்கத்தின் கொடுமையான நிரங்குச ஆளுகை; மற்றொன்று இந்தியர்களில் சிலர் அந்தக் கொடிய ஆக்ஷிக்கு உடந்தையாய் இருப்பது. பிந்திய காரணம் இல்லாவிட்டால் முந்திய காரணத்தை நம்மிஷ்டப்படி சரிப்படுத்தி விடலாம்.

தேச பக்தனை ராஜத் துவேஷி என்று சிறைப் படுத்தும் போலீஸ் சேவகன் ஓர் இந்தியனே. அவனை முதலில் விசாரித்து கமிட் செய்யும் மாஜிஸ்திரேட்டும் வக்கீலும் பெரும்பாலும் இந்தியரே. அவன் மேல் தப்பு ஸாக்ஷி சொல்பவனும் ஓர் இந்தியனே. இப்படி யெல்லாம் தேசபக்தர்கள் செய்கைகளுக்கு விரோதமாய் இந்தியன் இருக்கிறானே; இதற்குக் காரணம் என்ன? போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்குப் பணக்காரனாய் விடவேண்டுமென்ற விருப்பம் ஒன்று; மற்றொன்று பேராசை பிடித்த தனது பிரிடிஷ் எஜமானனைத் திருப்தி செய்ய வேண்டுமென்பது ஆகிய இவ்விரண்டுமே முக்கிய காரணமாம்.

இப்படிப்பட்ட பாதகச் செயல்களைச் செய்பவனுக்குப் புத்தி வருவிக்க ஒரு பெரிய தண்டனை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நம்முடைய கையிலேயே இருக்கிறது. அதாவது அப்படிப்பட்ட தேசத் துரோஹிகளை ஜாதி பஹிஷ்காரம் செய்வதே. அவனுடன் ஒருவனும் எவ்வித ஸம்பந்தமும் வைத்துக் கொள்ளக்கூடாது. அவன் வீட்டில் ஒருவரும் பெண் கொடுக்கக்கூடாது; அவன் பெண்ணை ஒருவனும் கொள்ளக்கூடாது; அவனை ஒரு வீட்டிற்கும் சாப்பிடக் கூப்பிடக் கூடாது; அவன் வீட்டிற்கு ஒருவரும் சாப்பிடப் போகக் கூடாது; அவனுடன் பேசக் கூடாது; அவனைக் கண்டால் நீசனுக்கு ஒதுங்குவதுபோல் ஒதுங்கிப் போகவேண்டும். இதுதான் அத்தகைய தேசத் துரோஹிகளுக்கு அருமருந்து. அவர்கள்மீது நமக்குள்ள கருணையால் நாம் இந்த மருந்தை அவர்களுக்காகவே கண்டு பிடித்திருக்கிறோம். ஏனென்றால், நோயாளியின் நன்மைக்காகவே வைத்தியன் கடினமான மருந்து கொடுப்பது ஸஹஜமே.

மெத்தவும் மேலான நோக்கத்துடன் இன்னாட்களில் பாரத தேசத்தில் கொண்டாடப் பட்டுவரும் இந்த தேச பக்தியை இத்தனை தடைகள் நடுவில் ஸரிவர அநுஷ்டிப்பதற்குத் தேச பக்தர்களுக்குத் தைரியம் எங்கிருந்து உண்டாகும்? என்பது ஒரு பெரிய கேள்வியே. இதற்குப் பதில் (விடை) நாம் இப்போது கூறுவோம்; கேண்மின்: இந்தப் புதிய கிளர்ச்சியானது கடவுள் இந் நாட்டிற்குத் தந்தருளியது என்பது தேச பக்தர் களின் பரம நம்பிக்கை. கடவுள் கட்டளை யாதலால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதைச் செய்து முடிக்க வேண்டியது தங்கள் கடமை. இந்தக் கட்டளையைத் தடுத்து அடக்க எவனாலும் முடியாது. எப்படியானாலும் கடவுள் ஸங்கல்பம் பூர்த்தியாய் விடும்; நமக்கு ஸ்வராஜ்யம் வந்து விடுமென்பது அவர்கள் முழு விசுவாஸம்.

மேலும் தங்கள் முன்னோர்களின் திடசித்த மானது இவர்களுக்கு ஒரு பெரிய ஆதாரம். முற்காலத்தில் சிபி என்னுமோர் சக்ரவர்த்தி புறாவுக்காகத் தனது சரீரத்தை யறுத்துக் கொடுத்துவிட்டார். அசுரர் கொடுமையால் பீடிக்கப்பட்ட அமரர்களின் துயர் நீக்க வஜ்ஜிராயுதம் செய்யத் ததீசி முனிவர்[1] தமது முதுகெலும்பைத் தந்தனர். ஒரு ஸமயம் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவானவர் ஸந்நியாஸி வேஷம் பூண்டு அர்ஜுனனைச் சீடனாக எண்பித்து, மயூரத்துவஜ னென்னும் அரசனிடம் போய் 'வாரீர் ராஜனே! உமது பத்னி ஒரு பக்கமும் உமது புத்திரன் ஒரு பக்கமும் இருந்து ரம்பத்தை உமது தலையில் வைத்து ஸந்தோஷமாய் இரண்டாக உமது தலையை அறுத்துப் பிளந்து வலது பாகத்தைத் தாரும்' என்று கேட்டபடியே மயூரத்வஜ மஹாராஜன் கொடுத்தான். பிறகு அக் கடவுளின் அருளால் உயிர் பெற்றனன்.

வைகுண்ட ஏகாதசி விரத பரிபூர்த்திக்காய் ருக்குமாங்கத மஹாராஜன்[2] சிறு குமாரனான தர்மாங்கதன் தனது தலையைத் தந்தனன். அதிபால குமாரனான துருவன்[3] பல பாடுபட்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துருவ பதவி பெற்றனன். எண்ணிறந்த துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்ட பிரஹ்லாத ஆழ்வான்[4] பக்தர்களில் முதல்வர் ஆயினர். திருவாதவூரடிகள்[5] திருப்பெருந்துறையில் திருப்பணிக்குப் பணத்தைச் செலவிட்டதற்காகப் பாண்டியன் அவருக்குக் கடுந் தண்டனை விதித்தனன். அப்பர் சுவாமிகள்[6] கற்பாறையில் கட்டப்பட்டு கடலில் எறியப் பட்டனர்; ஸ்ரீ கிருஷ்ண பகவான் கம்ஸனால்[7] என்னென்ன அபாயங்களுக்கு உள்ளாயினர். முடிவு எல்லாரும் அறிந்ததே. பாரதவாஸிகள் இவர் களைத் தெய்வமாக வணங்குகிறார்கள்.

இத்தகைய கம்பீரமான மனோவிலாச மாண்புடன் வாழ்ந்து வந்த மஹான்களின் திடமான பக்தியை முன்னிலையாகக் கொண்டு தேசத்திற்குத் தொண்டு புரிந்து வருகின்றனர். மனதுக்கு ஸங்கடம் வருங் காலத்தில் ஸ்ரீமத் பகவத் கீதை[8] யில் ஆறுதல் பெறுகின்றனர்.

> "யேது ஸர்வாணி கர்மாணி மயி
> ஸந்நியஸ் யாத்பாத்ம சேதஸா||
> நிராசீர் நிர்மமோ பூத்வா யுத்யஸ்வ விகதஸ்வர:||

(எல்லாக் காரியங்களையும் ஸம்பூர்ண மனதுடன் என்னிடத்தில் வைத்துவிடு; ஒன்றுக்கும் ஆசைப்படாதே; கர்வப் படாதே; பயத்தை உதறிவிட்டு யுத்தஞ் செய்.)

என்ற ஸ்ரீ பகவத் கீதையின் வாக்கியப்படி திடமான மனதுடன் கடவுளின் மேல் பாரத்தைப் போட்டு நிஷ்காம்யமாய் தேசபக்தர் தேச நன்மைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காகத் தொண்டு பூண்டு வருகின்றனர். எல்லாம் வல்ல இறைவனான கடவுள் இவர்களுக்குக் கருணை கூறுவாராக!

பாரத புத்ரர்கள் தங்கள் ஜாதி மத வேற்றுமைகளைப் பொதுநலத்தில் காட்டாமல் ஒன்றுசேர்ந்து ஒரே மனதாய் ஊக்கத்துடன் வேலை செய்து வந்தால் ஸ்வராஜ்யம் வந்துவிடும்! பாரத புத்ரிகளும் புத்திரர்களும் ஸ்வதந்திர மடைவார்கள். கடவுள் திருவருள் (புரிவாராக;)

(இந்தியா: 28.8.1909—பக். 3 - 4)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. ததீசி முனிவர்:

சிறந்த தவ ஒழுக்கமுடையவரும், தன்னல மற்றவருமான இம் முனிவரைப் பற்றி,

"வானவரும் அசுரரும் பாற்கடலில் கடையச் சென்ற போது, அவர்களுடைய போர்க் கருவிகளை யெல்லாம் இவரிடம் வைத்துச் சென்றனர். கடைந்து அமுதம் பெற்ற பிறகு, அவர்கள் திரும்பவும் வந்து வாங்கிக் கொள்ளவில்லை. ஆகையால் அப் படைகளை யெல்லாம் இவர் விழுங்கி விட்டார். அவை இவர் முதுகெலும்புடன் இணைந்துவிட்டன. பின்னர் ஒரு காலத்தில் இந்திரன் விருத்திராசுரனைக் கொல்லத் தன் வச்சிரப் படை பயன்படாமையால், இவரை யடைந்து, இவருடைய முதுகெலும்பைத் தர வேண்டினான். அழியக் கூடிய யாக்கை மற்றவர்களுக்குப் பயன்படுதலே நன்றென விரும்பித் தன் உயிரைத் தவ வலிமையாலே போக்கிக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்டார். இந்திரன் இவருடைய முதுகெலும்பை வச்சிரப் படையாக்கி விருத்திராசுரனைக் கொன்றான்.''

(கலைக் களஞ்சியம் தொகுதி 5—பக். 455)

என்ற செய்தி கலைக் களஞ்சியத்தில் காணப்படுகின்றது.

2. ருக்குமாங்கத மஹாராஜன் :

சூரிய வம்சத்து அரசனாகிய இவனை இந்திர சபையில் வசிட்டர் புகழ்ந்து கூறினர். இவன் ஏகாதசி விரதத்தின் சிறப்பை உணர்ந்தவன். தன் நாட்டில் உள்ளார் அனைவரையும் ஏகாதசி விரதமிருக்கச்செய்து, தானும் விரதமிருந்தான்.

திரு. ஆ. சிங்காரவேலு முதலியார் அவர்கள் இம் மன்னனுடைய ஏகாதசி விரத மகிமை பற்றிய செய்தியைக் கூறுமிடத்து,

"......இவனாட்டி லுள்ளார் அனைவரும் ஏகாதசி விரதம் அனுட்டித்து வருகையில், யமன் தனக்கு வேலையின்றிப் பிரமனிடம் முறையிட, அவன் மோகினியையேவி அரசனை மயக்குவிக்க, அரசன் அவளிடத்து மயங்கியிருந்தனன். ஒருநாள் ஏகாதசி யென்று முரசு அறையக் கேட்டு நீங்க, மோகினி அரசனைப் பார்த்து 'உன்னை நீங்கா திருக்கின்றேன். கேட்டது தருகின்றேன் என்ற சொல் மறந்தீரோ' என, அரசன் 'நீ எது வேண்டினு மீவேன்; ஏகாதசி விரதம் இழக்கேன்' என்றனன். மோகினி 'ஆயின் உன் குமரனைத் தாய் பிடிக்க, நீ கொலை புரிந்து தருக' என, அவ் வகையே தன் தேவியிடத்துக் கூறிக் குமரனைக் கொலைசெய்கையில் தேவர்கள் தரிசனந் தந்து குமாரனை உயிர்ப்பித்து அரசனுக்கு வேண்டிய வரந் தந்து தமதிருக்கை சென்றனர். அரசன் சிறிது காலம் அரசாண்டு தன் குமரன் தருமாங்கதனுக்குப் பட்டம் அளித்து நல்லுலக மடைந்தனன்''

(அபிதான சிந்தாமணி—பக். 197-198)

என்று குறித்துள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. துருவன் :

வடக்குத் திசையை யறிய இரவில் துருவ நட்சத்திரமே ஆதாரமாக உள்ளது என்பது நம் நாட்டவர்களின் நம்பிக்கை யாக இருக்கின்றது.

துருவன் துருவ பதம் என்றவொரு பதம் பெற்ற வரலாற்றை திரு. இராமசாமிப் புலவர்,

"உத்தான பாதன் என்னும் அரசனுக்குச் சுநீதி என்னும் மனைவியிடந் தோன்றியவன். இவன் தந்தையின் மடியிலேற முயன்றபோது மாற்றாந் தாய் சுடிந் துரைத்ததைக் கேட்டு வெறுப் படைந்து, தாயிடம் போய் நடந்ததைக் கூறினான். அவள் தவமுடையவர் கட்கே எல்லாச் சிறப்புக்களும் உண்டாகின்றன என்றாள். இவன் முனிவர்களிடம் போய் அருளுரை பெற்றுத் தவஞ் செய்தான். தவஞ் செய்கையில் பேயொன்று தோன்றி அச்சுறுத்தியது. அவன் அஞ்சாது பெருந் தவஞ் செய்து துருவ பதம் என்னுஞ் சிறந்த பதத்தைப் பெற்றான். இப் பதம் ஏழு முனிவர்களின் மண்டலத்திற்கு மேல் பதின்மூன்று லட்சம் யோசனை தொலைவில் இருக்கிறது. இவன் தவ நிலையில் இருந்து நீங்கித் தாய் தந்தையரிடஞ் சென்றான். இருபத் தாறாயிரம் ஆண்டுகள் அரசு புரிந்தான்"

(சிறப்புப் பெயரகராதி—பக். 360)

என்று எழுதி யுள்ளார்.

4. பிரஹ்லாத ஆழ்வான் :

தாய் வயிற்றில் இருக்கும் போதே இவன் நாரத முனிவரால் அருளுபதேசம் பெற்றவன் என்பர்.

பிரகலாதனது வரலாற்றுக் குறிப்பாக திரு. ஆ. சிங்கார வேலு முதலியார் எழுதி யிருப்பதாவது :

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"இரண்ய கசிபு குமரன். இவன் இளமையில் ஆசாரிய புத்திரனாகிய சண்டனிடத்தில் கல்வி கற்கத் தந்தை யால் ஏவப்பெற்று ஆசாரியன் கற்பித்தவாறு ஓதாமல் அரிநாமம் ஓதினன். இதை உபாத்தியாயர் அரசனுக்கு அறிவிக்கவும், அஞ்சாது மீண்டும் தந்தை எதிரிலும் அரி நாமமே ஓதினன். அரசன் குமரனிடத்தில் கோபித்து ஆயுதம் முதலியவைகளைப் பிரயோகித்தும், அக்கினியில் தள்ளியும், நாகங்களை விட்டுக் கடிப் பித்தும், யானையை யேவுவித்தும், கோபுரத்தில் இருந்து தள்ளுவித்தும், கடலில் பாய்ச்சுவித்தும், விஷம் ஊட்டுவித்தும், சம்மட்டியால் அடிப்பித்தும் இம்சிக்கச் சிறிதும் அஞ்சாது இரண்ய கசிபின் எதிரில் இருந்து அரிநாமம் ஸ்மரித்தனன். அசுரன் கோபித்து, 'உன் தேவன் எங்கு இருக்கின்றனன்' எனக் குமரன் 'எங்கும் உளன்' என, 'எதிரில் இருந்த தூணில் இருக் கின்றனனோ' எனக் கேட்கக் குமரன் 'ஆம்' என, அசுரன் அதை உதைக்கத் தூணில் இருந்து வெளிவந்த நரசிங்கத் திருவுருவை அவனுக்குக் காட்டித் தந்தையை உயிர் போக்குவித்தனன். இவன் விஷ்ணு மூர்த்தி தரிசனந் தந்த காலத்து அசுரரை இனிக் கொல்லா வரமும் அரிபதம் மறவா உரிமையும் பெற்றவன்."

(அபிதான சிந்தாமணி—பக். 1114-1115)

5. திருவாதவூரடிகள் :

திருவாசகம், திருக்கோவையார் முதலான நூல்களை யாத்தவர்; சைவ சமயாச்சாரியர் நால்வருள் ஒருவர்; மாணிக்கவாசகர், ஆளுடை நம்பி, அடிகள் என்பன இவர்க்கு வழங்கும் வேறு பெயர்களாகும். பாண்டிய நாட்டில் மதுரைக்குக் கிழக்கே உள்ள திருவாதவூரில் அவதரித்தவர்.

"இவர் கலை யெலாங் கற்றுப் பாண்டியனுக்கு மந்திரி யானார். அரசன் குதிரைகள் வாங்கத் தந்த பொருளொடு போம்போது, வழியில் திருப்பெருந்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துறையில் குரு மூர்த்தி ஒருவரைக் கண்டு, அவரது ஞானமொழியைக் கேட்டு, அழலிடைப்பட்ட மெழுகு போல் உருகித் தாம் கொண்டு வந்த பொருள்களைச் சிவன் பணிக்கே செலவு செய்து, ஞான நிலையில் நின்றார். அரசன் இவரை வரவழைத்துக் குதிரைகள் எங்கெனச் சிவபெருமான் உரைத்தவாறே ஆவணி மூலத்து வருமென உரைத்தார். இவர் சொன்னது பொய்யென்று நினைத்த அரசன் இவரை ஒறுத்தான். ஆவணி மூலத்தன்று சிவபெருமானே குதிரை விற்கும் தலைவராக வந்து, குதிரைகளை அரசனிடம் ஒப்பு வித்தார். ஆனால், வந்த குதிரைகள் அன்றிரவே நரிகளாகிக் காட்டுக்குள் ஓடின. அரசன் கோபங் கொண்டு, வாதவூரரைப் பின்னும் ஒறுத்தான். அப்போது சிவபிரான் வைகையில் வெள்ளம் வரச் செய்து, ஒரு பிட்டு வாணிச்சிக்குத் தாமே கூலி ஆளாக வந்து, சரிவர அணை கட்டாத காரணத்தால், பாண்டியன் கைப் பிரம்பால் அடியும் பட்டார். அந்த அடி எல்லா உயிர்கள்மீதும் பட்டது. கூலியாள் மறைந்தார். வானொலி ஒன்று வாதவூரரது உண்மைப் பெருநிலையைப் பாண்டியனுக்கு எடுத்துக் கூறிற்று. அதைக் கேட்ட பாண்டியன் அஞ்சி வாதவூரரை உபசரித்து, அவர் விருப்பப்படியே செல்ல விடுத்தான்''

(கலைக் களஞ்சியம் தொகுதி 8—பக். 217)

என்று இப்படி வாதவூரரின் சிறப்பு கலைக் களஞ்சியத்தில் கூறப்பட்டுள்ளமை காண்க.

6. அப்பர் சுவாமிகள் :

திருநாவுக்கரசர், நாவுக்கரசர் என்ற பெயர்களாலும் அழைக்கப்பெறும் அப்பர் சுவாமிகள் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். தென்னார்க்காடு மாவட்ட திருவாமூரில் வேளாளர் குலத்தில் தோன்றியவர். இவருடைய இயற் பெயர் மருணீக்கியார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்பைக் கீழ்க்கண்ட வகையில் 'கலைக் களஞ்சிய' நூல் தந்துள்ளது:

"......பெற்றோர்களை இளமையில் இழந்து தமக்கை திலகவதியாரின் ஆதரவில் வளர்ந்தார். சமண மதம் புகுந்து தருமசேனன் என்னும் பெயர் பூண்டார். அதுகண்ட திலகவதியார் தமது குறையைத் திருவதிகைச் சிவபிரானிடம் விண்ணப்பிக்க, இறைவர் மருணீக்கியார்க்குச் சூலை நோயை ஏவினார். அந் நோய் சமணச் சார்பினரால் நீங்கப் பெறாது வருந்த, மருணீக்கியார் திலகவதியாரை அடைந்து, அவரால் திருநீறு பூசப்பெற்றுச் சிவ சந்நிதியை உற்றனர்.

முன் செய்த தவப் பேற்றால் இறைவனுக்குப் பாமாலை சாத்தும் உணர்வு பெற்றுக் 'கூற்றாயினவாறு' என்னும் பதிகம் பாடிச் சூலை நோய் நீங்கப் பெற்றார். இறைவன் திருநாவுக்கரசு என்னும் பெயர் தந்தனர். சமணர் இவரைக் கொல்லக் கருதி நீற்றறையில் இட்டனர். நஞ்சூட்டினர். மத யானையை ஏவினர். ஆனால், இவர் சாகவில்லை. அதனால் கல்லொடு பிணைத்துக் கடலில் எறிந்தனர். அப்போது 'சொற் றுணை வேதியன்' என்னும் நமச்சிவாயப் பதிகத்தைப் பாடிக் கல்லே தெப்பமாகத் திருப்பாதிரிப் புலியூரிற் கரை சேர்ந்தனர்."

(கலைக் களஞ்சியம் தொகுதி 6—பக்.3)

7. கம்ஸன் :

"கண்ணனுடைய அன்னையாகிய தேவகியின் அண்ணன் இவன். யது வமிசத்தில் போச குலத்தில் உக்கிர சேனனுடைய மகனாகத் தோன்றியவன். இவன் தன்னுடைய தங்கை வயிற்றில் பிறக்கும் எட்டாவது பிள்ளையால் தனக்கு அழிவு நேரிடும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பதை உருவிலி வாக்கால் உணர்ந்தான். உடனே தேவகியையும் அவளுடைய கணவராகிய வசுதேவரையும் சிறையி லிட்டான். பிறகு அவர்கட்குப் பிறந்த ஏழு குழந்தைகளையுங் கொன்றான். எட்டாவது குழந்தை பிறந்தவுடன் திருமால் அருளால் வசுதேவர் அக் குழந்தையைக் கொண்டுபோய் நந்தகோபன் மனையிலே யசோதையிடம் விட்டுவிட்டு யசோதையின் பக்கத்திலே பெண் வடிவத்தோடு கிடந்த மாயையைக் கொண்டு வந்து தேவகியின் அண்மையிலே விட்டு விட்டார் கம்சன் அம் மாயை யாகிய குழந்தையைக் கொல்லப் புகுந்த பொழுது, அது விண்ணிலே சென்று நின்று "மூடா! உன்னைக் கொல்வதற்குக் கண்ணன் ஆயர்பாடியிலே வளருகிறான். அவனால் நீ அழிந்தொழிவது திண்ணம். இதனால் நீ உன்னுடைய சாவைப் போக்கிக் கொள்ள முடியாது" என்று கூறிவிட்டு மறைந்துபோய்விட்டது. கண்ணனைக் கொலை புரியுமாறு கம்சன் பல அசுரர்களை ஏவினான். அவர்க ளனைவருங் கண்ணனால் கொன்றொழிக்கப் பட்டனர். பிறகு மதுராவிலே நடந்த இந்திர விழாவுக்குக் கண்ணன் சென்று கம்சனைக் கொன்றான். கம்சன் முன் பிறவியிலே காலநேமி என்னும் அசுரனாக இருந்தவன் என்று கூறுவர்.

(சிறப்புப் பெயரகராதி - பக். 124)

8. **பகவத் கீதை :**

பூமண்டலத்திலுள்ள ஞானிகளால் புகழப்படுவது; அருச்சுனன் பொருட்டுக் கண்ணனால் உபதேசிக்கப்பட்ட ஞான யோக நூல். மெய்ஞ்ஞானம் போதிக்கும் நூல்களிலே தன்னிரகற்று விளங்குவது, ஸ்ரீமத் பகவத் கீதை.

உலகில் நீதியும், தர்மமும் நிலைப்பதன் பொருட்டு அவதரித்த ஸ்ரீ கிருஷ்ண பகவானால் அருளிச் செய்யப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெற்ற கீதை, பதினெட்டு அத்தியாயங்களாகப் பகுக்கப் பட்டுள்ளது.

யானையும், தேரும், பரிகளும் நிறைந்த குருக்ஷேத்திரப் போர்க்களத்தின்கண்ணே தேர்மிசை இருந்தவாறே பார்த்தன் (அர்ஜுனன்) தன் எதிரில் பகைவர் சார்பில் வில்லேந்தி நிற்கும் உற்றார், உறவினர், மேலோர் முதலானவர்களைப் பார்த்ததும், 'இவர்களுடன் போர் புரிந்து இவர்களைக் கொல்வது பாவம்' என்கிற கலக்கம் எங்கிருந்தோ வந்து, அவன் நெஞ்சில் புகுந்து கொண்டபோது 'வாடி நில்லாதே, மனம் வாடி நில்லாதே' என்று அருள் வார்த்தைகள் கூறி, அவனுடைய மயக்கத்தைத் தீர்த்து, கடமையை உணர்த்திடப் போர்க்களத்தே பார்த்தசாரதியாக நின்று பரஞான மெய்க் கீதை புகன்றவன் கண்ணன்.

கீதையின் உபதேச மொழிகள் யாவும் உபநிஷத்துகளின் சாரமாய் உள்ளது.

வேதங்களின் கொள்கைகளை விளக்கும் பொருட்டாக அருளிச் செய்யப்பட்ட கீதை, ஞான சாஸ்திரங்களில் முதன்மைப் பட்டிருப்பதுபோல, காவிய வரிசையிலும் மிக உயர்ந்ததாக மதித்துப் போற்றப்படுகின்றது.

கீதைக்குப் பாரதியும் உரை செய்துள்ளார்; நீண்ட விரிவான முகவுரை ஒன்றையும் எழுதி யுள்ளார்.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதி : 3

இந்து-முஸ்லிம் ஒற்றுமை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

□

இந்திய நாட்டில் இந்தியர்களும், முஸ்லிம்களும் ஒரே குடும்பத்தில் பிறந்த சகோதரர்களைப் போல் ஒத்து வாழ்கிறார்கள் என்பதையும், அனுசரிக்கும் மதம் வேறாயிருந்தாலும் தேசம் ஒன்று என்னும் உயர்ந்த சிந்தனையை இரு திறத்தாரும் மனத்திடை எண்ணி, அற்பமான காரியங்களுக்காகச் சண்டை சச்சரவுகள் செய்வது தகாது என்பதையும், இரு மதத்தவர்களும் ஒருவருக்கொருவர் விரோத மனப் பான்மையுடன் இருத்தலாகாது என்பதையும், இரு திறத்தாருள்ளும் சிநேக பாவ உணர்ச்சியும், சகோதரப் பான்மையும் நிலவ வேண்டும் என்பதை யும், தென்னாட்டில் குணங்குடி மஸ்தான் என்ற மகமதியப் பெரியவரை ஹிந்துக்க ளெல்லாம் தாயுமான சுவாமிகளுக்குச் சமானமாக மதித்து வணங்குகிறார்கள் என்பதையும், மதத் துவேஷ மென்றும், ஜாதி பேதமென்றும் சொல்வதெல்லாம் அக்கால ஆட்சியாளர்களின் கற்பனை என்பதையும் இப் பகுதியில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் அனைத்தும் உள்ளங்கை நெல்லிக்கனி போன்று காட்டுகின்றன.

□

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தியர்களும் மகமதியர்களும்

[பாரத நாட்டில் இந்துக்களும் மகமதியர்களும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்போல் ஒத்து வாழ்ந்த போதிலும், சில மூட எண்ணங்கொண்ட ஆங்கிலோ-இந்தியர்கள் ஒற்றுமைக் குறைவை ஏற்படுத்த முயன்றனர் என்பதையும், பெங்காளப் பிரிவினை தான் அவ்விரு திறத்தாருள்ளும் பகைமை மூட்டிய தென்று ஸர் ஹென்றி காட்டன் சொல்லியதே உண்மை என்பதையும் இக் கட்டுரை எடுத்துச் சொல்கிறது]

இந்த நாட்டில் இந்தியர்களும் மகமதியர்களும் ஒரே குடும்பத்தில் பிறந்த சகோதரர்களைப்போல ஒத்து வாழ்கிறார்களே யொழிய வேறில்லை. அந்த இரண்டு இனத்தாரிலும் படித்தவர்களா யுள்ளவர்கள் இந்த நாட்டில் தேசக்கட்டை வளர்க்க வேண்டு மென்றே பாடுபட்டு வருகிறார்கள். பெங்காள பிரிவினை தினத்தன்று மகமதியர்களுள் ஒரு பகுதியார் ஹிந்துக்களோடு சேர்ந்து அந்த தினத்தில் துக்கம் பாராட்டினதே நாம் மேலே சொல்லி யிருப்பதை ஸ்தாபிப்பதற்குப் போது மானது. இருந்த போதிலும் இடை இடையே மகமதியர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் ஒற்றுமைத் தப்பை உண்டாக்க, சில ஆங்கிலோ - இந்தியர்கள் பிறருக்குத் தெரியாமல் முயன்று வருகிறார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவர்கள் தூபம் போட்டுக் கொண்டிருப்பதை ஒழித்து விடுவார்களாயின், மகமதியர்களும் தங்கக் கம்பிகளாய் விடுவார்கள். இந்த உண்மையை ஸர் ஹென்றி காட்டன்[1] நன்றாய் அறிவார். அதுபற்றி அவர் தற்போது பெங்காளத்தில் மகமதியக் கூட்டத்தில் ஒரு பகுதியார் ஹிந்துக்களினின்றும் வேறுபட்டிருப்பதைக் குறித்துக் கேள்விப்பட்டு **இந்தியா**[2] பத்திரிகைக்கு எழுதும் ஒரு கடிதத்தில் சாதாரணமாய் ஹிந்துக்களுக்கும் மகமதியர் களுக்கும் உட்பகை இருந்ததென்று சொல்லுவதற் கில்லை யெனவும், பெங்காள மாகாணப் பிரிவினை காரணமாகத்தான் இரு திறத்தாருக்கும் பகைமை மூட்டப்பட்ட தெனவும், அந்தப் பகைமையை ஒரு லெப்டினண்டு கவர்னர் தம்முடைய யோசனை யற்ற ஒருபுடைச் சார்பால் வளர்த்து விட்டா ரெனவும் சொல்லி யிருக்கிறார். ஸர் ஹென்றி காட்டன் சொல்லி யிருப்பதில் எள்ளளவும் பிசகில்லை.

(இந்தியா: 3.11.1906—பக்.11)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. ஸர் ஹென்றி காட்டன் (1345-1915) :

இவர் இந்தியாவில் இந்திய சிவில் சர்வீசில் பணி யாற்றியவர்; இந்திய தேசியக் காங்கிரசின் பணிகளில் பங்காற்றியவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1904இல் பம்பாய் நகரில் கூடிய 20ஆம் காங்கிரஸ் சபைக்குத் தலைமை தாங்கிய பெருமை இவருக்கு உண்டு: இங்கிலாந்து பார்லிமெண்டில் உறுப்பினராகவும் இவர் இருந்து, இந்தியர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டவருங்கூட.

இவரைப் பற்றிப் பாரதியே எழுதி யுள்ளதாவது:

"இங்கிலாந்திலிருந்து ஜனஸபைக்குத் தலைமை வஹிக்கும் பொருட்டாக ஸர் ஹென்றி காட்டன் வந்தார். இவர் ஸர்க்கார் உத்யோகத்தில் பெரிய பதவிகள் வஹித்து உபகாரச் சம்பளம் பெற்று விலகிய பின்பு ஸ்வதேசியக் கக்ஷிக்குச் சார்பாய்ப் பல விதங்களில் உழைத்து வந்தவர். 'புதிய இந்தியா' என்றொரு புஸ்தகம் எழுதி யிருக்கிறார். அதில் ஆங்கிலேய ஆட்சியின் தற்கால முறையிலுள்ள குற்றங் குறைகளை நன்றாக எடுத்துக் காட்டி, ஸ்வராஜ்யம் அவசிய மென்பதற்குரிய பல காரணங்களையும் தெளிவாக உணர்த்தி யிருக்கிறார்."

(பாரத ஜனஸபை: இரண்டாம் பாகம்—1920 : பக். 169-170)

2. **இந்தியா :**

இலண்டனில் இந்தியர்களின் நிலைமைகளை விளக்கத் துவக்கப்பட்ட வாரப் பத்திரிகை யாகும்.

இப் பத்திரிகையின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளைக் குறித்து, 1901இல் கல்கத்தா நகரில் கூடிய 17ஆவது காங்கிரஸ் மகாசபையில் நிறை வேற்றப்பட்ட இரண்டாம் தீர்மானம் தெளிவாக்குகிறது.

அத் தீர்மான விவரமாவது: "லண்டனில் ஒரு கமிட்டி தன்னுடன் ஒத்துழைப்பதும், தன் கருத்துக்களை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ப்ரசாரம்செய்ய லண்டனில் ஒரு வாரப்பத்திரிகை நடை பெறுதலும் தன் கார்ய ஸித்திக்கு அவசியமென்று இந்த ஜனஸபை அபிப்பிராயப்படுகிறது. இப்போதுள்ளபடியே ப்ரிட்டிஷ் ஸமிதியும் அதனால் வெளிப்படும் "இந்தியா" பத்திரிகையும் தொடர்ந்து காக்கப்படவேண்டுமென்றும், அச் செலவைப் பின்வரும் விஹிதப்படி கட்டவேண்டு மென்றும் இந்த ஜனஸபை நிச்சயிக்கிறது.

...சென்னை மாகாணம் 700 பிரதிகள். வட்டங் களுக்கான கார்யதர்சிகள் அவரவர் வட்டங்களுக்கு விதிக்கப்படும் 'இந்தியா' பிரதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகைக்குத் தாமே ஜவாப்தாரிகளாவா ரென்றும், தொகையை முன்பணமாக இரண்டு அரை வருஷத் தவணைகளில் கட்டிவிடவேண்டு மென்றும் இந்த ஸபை நியமிக்கிறது...

பிரிட்டிஷ் கமிட்டி, 'இந்தியா' பத்திரிகை - இவற்றின் செலவைக் கட்டுவதற்கு அவசியமானதொரு மிச்சத் தொகை சேகரிக்கும் பொருட்டாக 1902ஆம் வருஷ முதல் ஒவ்வொரு ப்ரதிநிதியும் இப்போது செலுத்தும் ப்ரதிநிதிக் கட்டணத்துடன் இன்னும் அதிகம் பத்து ரூபாய் செலுத்தவேண்டுமென்று இந்த ஜனஸபை நியமிக்கிறது."

(பாரத ஜனஸபை: இரண்டாம்
பாகம்—1920 : பக். 123-124)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கல்கத்தாவில் பக்ரீத் பண்டிகை

[கேவலம் மத விஷயமாகக் கருத்து வேறுபாடு கொள்வதும், அதன் காரணமாக ஒரு ஜாதியார் மற்றொரு ஜாதியாரிடம் பகைமை பாராட்டுவது தேச நன்மைக்குத் தீங்கென்றும் இக் கட்டுரை தெரிவிக்கிறது. குறிப்பாக, ஹிந்து, முஸ்லிம் ஒற்றுமை யுணர்ச்சியுடன் செயல்பட வேண்டுவதன் ஆவசியத்தையும் இக் கட்டுரை சுட்டிக்காட்டுகிறது.]

வருஷந்தோறும் கல்கத்தாவில் மகமதியர் "பக்ரீத்" பண்டிகை[1] கொண்டாடும் பொழுது வழக்கமாய் இந்துக்களுக்கும் மகமதியருக்கும் சிற்சில அசந்தர்ப்பமான மனஸ்தாபம் நேரிடுவது வழக்கம். ஆனால், அப்படிப்பட்ட தொன்றும் நேரிடப்படாதென்று சில வாரங்களுக்கு முன்னமே வங்காளிகளும் வேண்டிக் கொண்டார்கள்; மகமதியரும் வேண்டிக் கொண்டார்கள். அதற் கிசையவே கல்கத்தாவில் பக்ரீத் பண்டிகை இவ் வருஷம் கொண்டாடப்பட்டபொழுது யாதொரு கலகமாவது, மனஸ்தாபமாவது உண்டாகவில்லை யென்றும், இரண்டு மதஸ்தர்களும் சகோதர பாவமாய் நடந்து கொண்டதாயும் அறிந்து மிகவும் சந்தோஷிக்கிறோம்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கேவலம் மத விஷயமான அபிப்பிராய பேதத்திற்காக ஒரு ஜாதியார் மற்றொரு ஜாதியாரிடம் பகைமை காட்டுவது இருவருக்கும் பொதுவான தேச நன்மைக்குச் சிறிதும் இசையாத காரியம். மதம் வேறே; தேசம் வேறே. அனுசரிக்கும் மதம் வேறாயிருந்தாலும் கடவுளும் ஒன்று; வாழும் தேசமும் ஒன்று என்ற உயர்ந்த அபிப்பிராயத்தை இருவரும் மனதில் எண்ணி அற்பமான சண்டை சச்சரவுகளை விலக்குவார்களானால், இந்தியருக்கு இணையான ஜாதியார் உலகத்திலேயே இல்லையென்று சொல்லும்படியான நிலைமைக்கு வருவோம்.

(இந்தியா: 2.2.1907—பக். 13)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. பக்ரீத் பண்டிகை:

முஸ்லிம்களால் மிகப் புனிதமாகக் கருதிக் கொண்டாடப் பெறும் பண்டிகைகளில் ஒன்று

இப் பண்டிகையின் உட்கருத்துப் பற்றி,

"......ஈத்-உல்-அஸா என்ற நோன்புக்கு இந்தியாவில் இப் பெயர் பொதுவாக வழங்குகிறது. ஈத் என்பது ஒருவருக்கு ஏற்படும் நிகழ்ச்சியின் பெயராக முதலில் வழங்கிற்று. இஸ்லாம் மதத்தின்படி இதற்கு விருந்து நாள் என்றும், எல்லோரும் கூடுகின்ற ஒருநாள் என்றும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வருஷாந்திர விருந்து நடைபெறும் நாளென்றுப் பொருள் கூறலாம்.

கடமையைச் செய்வதாலேயே உண்மையான இன்பம் பிறக்கிறது என்பதை இந்த நோன்பு குறிக்கிறது''

(கலைக் களஞ்சியம் தொகுதி 6—பக். 627)

எனக் கலைக் களஞ்சியம் தரும் குறிப்பால் உணர்ந்து கொள்ளலாம்.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஹிந்து - மகமதியர்கள்

[ஒற்றுமையைப் பற்றியும், கூடி வாழ்தல் பற்றியும் எத்துணை முறை எப்படியெழுதினாலும், குறிப்பாக வங்காளம் போன்ற ஒருசில இடங்களில் இந்து - முஸ்லிம் களுள்ளே கலகங்கள் நேர்ந்த சந்தர்ப்பங்கள் உண்டு. அங்ஙனம் நேராமல் தடுப்பதற்குரிய ஏற்பாடுகளைக் கல்கத்தாவில் சில பெரிய மனிதர்கள் செய்யவேண்டு மெனத் தீர்மானித்தனர். அதற்கான நடவடிக்கை களிலும் ஈடுபட்டனர்.

தமிழ் நாட்டிலேயும் அவ்விதமாக விரோதங்கள் பரவாதபடி தடுத்தல் நம்மவர்களின் கடமை என்பதை இக் கட்டுரையால் பாரதி தெளிவுபடுத்துகிறார்.]

கல்கத்தாவில் சில பெரிய மனிதர்களும் ஜனத் தலைவர்களும் சேர்ந்து பெங்காளத்தில் ஹிந்து-மகமதியர்களுக்குள்ளே அடிக்கடி கலகங்கள் நிகழாத வண்ணம் ஏற்பாடுகள் செய்ய வேண்டு மென்று யோசிக்கிறார்கள். இது மிகவும் அவசியமான விஷயம். இரண்டு வருஷங்களாகப் பெங்காளத்தில் மகமதியர்கள் ஹிந்துக்களிடம் அதிக விரோதம் பாராட்டுவதற்கு என்ன முகாந்தரமென்பது நேயர் களுக்குத் தெரியாத விஷயமன்று. இதிலிருந்து பரஸ்பரம் மத விரோதங்களும் கொஞ்சம் ஏற்பட்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விட்டதாகத் தெரிகிறது. சில தினங்களின் முன்பு 'தித்தகர்''[1] என்ற இடத்தில் 'ஈது' பண்டிகையின் போது ஹிந்து - மகமதியர்களுக்குள் நடந்த கலகத்தைப்பற்றி ஏற்கெனவே நமது பத்திரிகையில் குறிப்பிட்டிருக்கிறோம். வருமுன் காப்பதே அறிவு. ஆதலால் மேற்கூறப்பட்ட மட விரோதங்கள் தமிழ் நாட்டிலேயும் பரவவிடாதபடி தடுத்தல் நம்மவர்களின் முக்கியக் கடமை யாகும்.

பல நூற்றாண்டுகளாக அண்ணன் தம்பிபோல ஒத்து வாழ்ந்தவர்கள், திடீரென்று நிஷ்காரணமாகச் சண்டைகள் போட்டுக் கொள்வது நமது ஜாதீய வாழ்வுக்கே பெரியதோர் அவமதிப்பாகும். இப்போது, நமக்கு முன் நிற்கும் இப் புதிய விபத்திற்கு உபாயம் பின்வருமாறு : ஹிந்துக்கள் தமது சபைகளிலும், பொதுச் சட்டங்களிலும், ஆடல் பாடல் கச்சேரிகளிலும், பாடசாலைகளிலும், உத்தியோக சாலைகளிலும் மகமதியர்களை அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். மகமதியர்களும் இவ்வாறே ஹிந்துக்களிடம் நேசம் பாராட்டுதல் தகும்.

சமீபத்தில், லார்டு மார்லி சீர்திருத்தக் கதை[2] யொன்று வெளியிட்டா ரல்லவா? அதிலிருந்து, ஏற்கெனவே காங்கிரஸ் கட்சியாருக்கும், இந்தியன் 'முஸ்லிம் லீக்' என்ற சங்கத்தாருக்கும் பரஸ்பர மாற்சரியங்கள் உண்டாய்விட்டன. முஸ்லிம் சங்கத்தார் இன்னின்ன விஷயங்களில் தமது வகுப்பினரைக் காட்டிலும், இந்துக்களுக்கு அதிக நன்மை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கள் கொடுபட்டு விட்டனவென்று முறையிடுகிறார் கள். அதற்குள் தர்மாவதாரமாகிய அலஹாபாத்துப் 'பயோனீர்' பத்திரிகை "ஐயோ, பாவம்! லார்டு மார்லி ஹிந்துக்களுடன் சேர்ந்துகொண்டு மகமதி யர்களுக்கு விரோதம் செய்கிறார். மகமதியர்களுக்கு இப்படி கவர்ன்மெண்டார் வஞ்சகம் செய்வது நியாயமே யில்லை" என்று சொல்லி ஓநாய்க் கண்ணீர் வடிக்கின்றது.

லண்டனிலே ஸ்ரீமான் அமீர் ஆலி முதலிய சில மகமதிய கனவான்கள் சீர்திருத்தங்களின் சம்பந்த மாக லார்டு மார்லியைச் சந்தித்து விண்ணப்பம் செய்ததாகத் தெரிகிறது. இந்த மாதிரியான விஷயங்களில் பெரும்பகுதியரான ஹிந்துக்கள் சிறு பகுதியரான மகமதியர்களின் இஷ்டப்படியே நடந்துகொள்ளுதல் நேச வளர்ச்சிக்கு மிகவும் நியாயமாகும். இதில் இகழ்ச்சி நேரிடுமாயின், அதிலிருந்து பெருங் கெடுதிகள் விளைவதற் கிடமுண்டு என்ற போதிலும் ஒருபோதும் வரப் போகாதனவும், வரினும் பயனற்றனவுமாகிய மார்லியின் சீர்திருத்தங்களுக்கு இந்த ஜனங்கள் ஒருவரை யொருவர் முட்டிக் கொள்வது வியப்புத் தருகிறது. 'பிறவாத பிள்ளையை ஸ்வீகாரம் கேட்டுப் பிரமாதச் சண்டை வளர்த்தல்' என்ற வேதநாயகம் பிள்ளை[3] கதை நினைப்பிற்கு வருகின்றது.

(இந்தியா : 30.1.1909 — பக் 2)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

இக் கட்டுரையில் கண்டுள்ளவாறு கல்கத்தா ஜனத் தலைவர்கள் ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமைக்கு மேற்கொண்ட ஏற்பாடுகள் பற்றிப் பின்னொரு சமயம் பாரதி எழுதிய கட்டுரை இது பொருத்தம் கருதி இங்கே காண்போம்.

"முஸ்லிம்களும், ஹிந்துக்களும் ஒற்றுமையாய் வாழும் பொருட்டு, கல்கத்தாவில் செய்துவரும் சில ஏற்பாடு களைக் கேட்க மிகவும் ஸந்தோஷமுண்டாகின்றது.

வங்காளத்தில் ஸ்வதேச பாஷையில் அச்சிட்டிருக் கும் சில புத்தகங்கள் சிறிது முஸ்லிம்களுக்கு விரோதமா யிருக்கின்றன. தவிர, அங்கு ஆடிவரும் சில நாடகங் களும் முஸ்லிம்களின் கோபத்தை யுண்டாக்கத் தக்க வையா யிருக்கின்றன. மேலும், பக்ரீத், தஸரா முதலிய பண்டிகைகளில் ஹிந்து - முஸ்லிம்களுக்குள் எங்கிருந்தோ சண்டை யுண்டாகி விடுகிறது. இச் சண்டை சச்சரவுகள் நீங்கி இரு மதஸ்தர்களும் ஒற்றுமையாய் வாழும் பொருட்டு, முஸ்லிம்கள் ஒரு சபை கூடி, ஹிந்துக்களோடு ஓர் உடன்படிக்கை செய்துகொள்ளத் தீர்மானித்திருக் கிறார்கள்.

சென்ற ஞாயிற்றுக் கிழமை நடந்தேறிய ஸங்கத்தில் கீழ்வருமாறு தீர்மானஞ் செய்தார்கள்:

(1) நாம் ஐக்கியமாய் வாழும் பொருட்டு ஹிந்து ஜனத் தலைவர்களோடு ஒன்றுசேர்ந்து தொழில் புரிந்து வரவேண்டியது.

(2) நாடகங்களிலும், இதர புஸ்தகங்களி லும் நமக்கு விரோதமா யுள்ள விஷயங்களை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யெல்லாம் அவர்களுக்கு (ஹிந்துக்களுக்கு)த் தெரியப்படுத்தி, ஓர் ஸமாதானம் செய்து கொள்ளவேண்டும்.

இத் தீர்மானங்கள் மிகவும் வியக்கத்தக்கவைகளா. யிருக்கின்றன. இந்தியா முழுவதும் இவ்வித ஏற்பாடு களைச் செய்து வந்தால் நலமா யிருக்கும். வேற்றுமை நீங்கி, ஒற்றுமை பொங்குக."

(இந்தியா : 10.7.1909—பக். 2)

* * *

1. "தித்தகர்" கலகம் :

கீழ் வங்காளத்தில் உள்ளது தித்தகர் என்கிற ஊர். இந்த ஊரில் பெரும்பான்மையாக இந்துக்கள் வசித்தனர் முஸ்லிம் களும் கணிசமான அளவில் குடியேறி இருந்தனர்.

3-1-1909 அன்று 'பக்ரீத்' என்கிற முஸ்லிம் திருவிழாவின் போது, உணர்ச்சி மேலிட்ட காரணத்தால் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பெரும் கலகம் மூண்டது. பட்டாளத்தார் வந்து கலகத்தை அடக்கினர். கலகத்தில் பலர் காயமடைந் தனர்; பலர் உயிர் இழந்தனர்.

கலகம் அடக்கப்பட்ட பின்னர், சமாதான முயற்சிகளை இரு மதத்தவர்களும் மேற்கொண்டனர்.

ஒரு வகுப்பார் பிறிதொரு வகுப்பார்க்கு ஆகாத செயல்கள் செய்வதால், விளையும் தீங்கைத் திக்கரில் நடை பெற்ற நிகழ்ச்சி எடுத்துக் காட்டியது.

2. மார்லி சீர்திருத்தக் கதை :

*1909*இல் இந்திய அரசியல் முன்னேற்றங் கருதி, அரசப் பிரதிநிதியாகிய மின்டோ பிரபுவும், இந்தியா காரியதரிசி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாகிய மார்லி பிரபுவும் சில சீர்திருத்தங்களைக் கொணர்ந்தனர். இவை மின்டோ - மார்லி சீர்திருத்தங்கள் என்ற பெயரால் அழைக்கப்பட்டன.

இச் சீர்திருத்தச் சட்டம் இந்தியாவில் பிரதிநிதித்துவ ஆட்சியை ஏற்படுத்த இருப்பதாகத் தெரிவித்தது. பொது மக்களுக்குச் சட்டசபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை வழங்குவதாகவும் பிரகடனப் படுத்தியது.

மிதவாதிகள்கூட இச் சீர்திருத்தங்களால் மன நிறைவு பெறவில்லை.

முஸ்லிம்கள் கோரிய தனித்தொகுதி தேர்தல் முறையை இச் சட்டம் அங்கீகாரம் செய்தது. முஸ்லிம்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் முஸ்லிம் வாக்காளர்களால் நிரப்பப்படவேண்டும் என்பதே இதன் பொருள்.

மின்டோ - மார்லி சீர்திருத்தங்கள் பற்றிய பேச்சு எழுந்த போதும் சரி - சீர்திருத்தங்கள் அமுலுக்குக் கொணரப்பட்ட போதும் சரி - அதன் அம்சங்களை யெலாம் அலசிப் பாரதி எழுதினார்.

3. வேதநாயகம் பிள்ளை :

மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை என்றே சிறப்பாக இவர் மக்களால் அழைக்கப்பட்டார்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் சிறந்த பயிற்சி பெற்ற இவர், முயற்சியால் முன்னேறி முன்சீப் உத்தியோகம் வரை உயர்ந்தார்.

பொதுநலப் பணிகளில் அக்கறை கொண்டவர்; சில காலம் மாயூரம் முனிசிபாலிடியில் சேர்மனாகவும் இருந்து, ஊர் மக்களுக்கு அநேக நன்மைகளைச் செய்துள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரதாப முதலியார் சரித்திரம், சுகுண சுந்தரி முதலிய கதை வசன நூல்களையும், நீதி நூல், சர்வசமய சமரசக் கீர்த்தனை போன்ற செய்யுள் நூல்களையும், பெண்மதி மாலை போன்ற வசனம் கலந்த செய்யுள் நூல்களையும் ஆக்கித் தந்து தமிழ் மக்களை மகிழ்வித்தவர்.

எளிய நடையில் ஜனரஞ்சிதமான நூல்களை எழுதிய காரணத்தால், இவர் ஆக்கி அளித்த நூல்களை மக்கள் பெரிதும் வரவேற்றனர்.

பிரதாப முதலியார் சரித்திரம், சுகுண சுந்தரி ஆகிய இந்த நாவல்கள் இன்றும் தமிழ் நாவல் இலக்கிய உலகில் புகழ் சிறந்து விளங்குகின்றன.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஹிந்து - மகமதியர்கள்

[இந்தியாவின் க்ஷேமத்திற்கு இன்றியமையாதது இந்து - முஸ்லிம் ஒற்றுமையே என்பதையும், இரு திறத்தாரும் தலைமுறை தலைமுறையாக எப்படி வாழ்ந்து வந்தனர் என்பதையும் இக் கட்டுரையானது சான்றுகள் பலவற்றுடன் நமக்குத் தெரிவிக்கின்றது.]

ஹிந்துக்களும் மகமதியர்களும் ஆயிர வருஷங்களாகத் தலைமுறை தலைமுறையாய் இந் நாட்டில் வாழ்ந்து வருகின்றனர். ஒரே நிலத்தில் பிறந்தவர்கள்; ஒரே நீர் அருந்துபவர்கள். வியாபாரம், வர்த்தகம், தொழில், நடை இவற்றால் பிணைக்கப்பட்டவர்கள். ஒரே பாஷை பேசுபவர்கள். ஹிந்துஸ்தானி பாஷையை வட நாட்டில் கோடிக்கணக்கான ஹிந்துக்கள் பேசுகிறார்கள். அது ஹிந்துக்களுடைய பாஷையே. பெரும்பான்மையான மகமதியர்களின் உடலத்துள்ளே ஹிந்து ரத்தந்தான் ஓடுகின்றது.

ஹிந்துக்களுடைய உற்சவங்களில் மகமதியர்களும், மகமதியருடைய பண்டிகைகளில் ஹிந்துக்களும் சேர்ந்து கொண்டாடுகிறார்கள். இந்த இரண்டு மதத்தையும் சேர்த்து ஸமரஸப்படுத்திய கபீர்தாஸ்[1] முதலிய பெரியோர்களை இரு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திறத்தாரும் குருவாக வணங்குகிறார்கள். தென்னாட்டில் குணங்குடி மஸ்தான் சாமி[2] என்ற மகமதியப் பரதேசியை ஹிந்துக்களெல்லாம் தாயுமானவருக்கு[3] ஸமானமாக மதித்து வணங்குகிறார்கள்.

நாகூரில்[4] ஹிந்து யாத்திரிகள் எத்தனையாயிரம் பேர் வருஷந்தோறும் சென்று தொழுது வருகிறார்களென்பதைத் தென்னாட்டில் அறியாதவரில்லை. அடடா! இதைக்கூட விஸ்தாரமாகக் காரணங்கள் கூறி எழுதும்படியான காலம் நமக்கு வந்துவிட்டதே!

நாம் பிரிவுபட்டவர்கள் என்று சிலர் சொல்லும் பேச்சைக் கேட்டுக்கொண்டு நம்மிலேயே சில மூடர்கள் திருப்பிச் சொல்லுகிறார்களேயென்ற வருத்தத்தினால்தான் இதை எழுத நேரிட்டது. இல்லாவிட்டால் இத்தனை ஸகஜமான விஷயத்தைப் பற்றி நாம் பேசவே இடமிருந்திராது.

உள்ளங்கை நெல்லிக்கனியைப் பார்ப்பதற்கு யாரேனும் தூரதிருஷ்டிக் கண்ணாடி கொண்டு காட்டுவார்களா?

(இந்தியா : 20.3.1909 — பக்.2)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

இக் காலத்து முஸ்லிம்கள் பாரத பூமியின் சொந்தப் புத்திரர்கள் என்றும், ஹிந்துக்களும், மகமதியர்களும் ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகள் போல் நடந்துகொள்ள வேண்டும் என்றும் பாரதி விரும்பியவண்ணமே, தேசீயத் தலைவர்களும் வற்புறுத்தி யுள்ளனர்.

அந்த வகையில் பாரதியின் கருத்தை எதிரொலிக்கும் லாலா லஜ்பத் ராயின் எண்ணங்களைப் பார்ப்போம்:

"...இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியை அன்னிய ஆட்சி என்று சொல்வது சரியாகாது. முதன் முதலில் படையெடுத்து வந்த முஸ்லிம்கள் அன்னியர்கள் என்பதில் சந்தேக மில்லை. (நார்மானியரும், டேனியரும் முதன் முதலில் இங்கிலாந்துக்கு வந்தபோது அன்னியர்களாகவே இருந்தார்கள்). ஆனால், அவர்கள் இந்தியாவில் குடியேறி, இந்தியாவையே தங்கள் தாய் நாடாகக் கொண்டு, இங்கேயே வீடு வாசல்கள் கட்டி, கலியாணம் செய்து, குழந்தைகள் ஈன்று வளர்த்து வந்தார்களாதலின், இந்த நாட்டின் சொந்தப் புதல்வர்களே ஆகிவிட்டனர். டில்லியிலும், பிற விடங்களிலும் இன்றைய தினம் உள்ள மொகலாயர்களையும், பட்டாணியர்களையும் போலவே, அந் நாளிலிருந்த அக்பரும், அவுரங்கசீப்பும் இந்தியர்களே யாவர். கிரேட் பிரிட்டனில் நார்மன் வில்லியம் (William the Conquerer), ஆரஞ்சு வில்லியம் (William of Orange) இவர்களுடைய சந்ததியார்கள் எப்படி அன்னியர்களாக மாட்டார்களோ, அவ்வாறே இந்தியாவிலும் ஷெர்ஷாவும், இப்ரஹிம் லோடியும் அன்னியர்களாக மாட்டார்கள். தைமூரும், நாதிர்ஷாவும், ஆமத்ஷா அப்தாலியும் இந்தியாவின்மீது படையெடுத்தபோது அவர்கள் இங்கே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்திய முஸ்லிம்களால் ஆளப்பட்ட இராஜ்யத்தையே தாக்கினார்கள். அவர்கள் ஹிந்துக்களுக்கு எவ்வளவு தூரம் பகைவர்களோ அவ்வளவு அம் முகம்மதிய அரசர்களுக்கும் பகைவர்களா யிருந்தனர்.

பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தி வரையில் இந்தியாவில் அரசியல் அதிகாரம் வகித்த முஸ்லிம்கள் இந்தியர்களே யாவார்கள். அவர்கள் பிறந்தது இந்தியாவில்; மணம் புரிந்தது இந்தியாவில்; அவர்கள் இறந்ததும், புதைக்கப் பட்டதும் இந்தியாவிலேயே. இந்தியாவில் அவர்கள் வசூலித்த வரிப்பணத்தில் ஒவ்வொரு காசும் இந்தியாவி லேயே செலவழிக்கப்பட்டது. அவர்களுடைய சைன்யமோ முழுதும் இந்திய சைன்யமாகும். ஹிந்துஸ் தானத்துக்கு வெளியிலிருந்து புதிய குடும்பங்கள் வந்து இந்தியாவில் குடியேறுவதற்கு அவர்கள் அநுமதித் தார்கள். ஆனால், இந்தியாவிலேயே நிலையாகத் தங்கி இதையே தங்கள் தாய்நாடாகக் கொள்ள விருப்ப மில்லாதவர்களை அவர்கள் உத்தியோகங்களில் அமர்த்தியது மிகவும் அபூர்வமாகும். ஹிந்துக்களிடம் அவர்களுக்கு விரோத பாவம் ஏதேனும் இருந்திருப்பின், அது சமய சம்பந்தமானதே யல்லாமல் அரசியல் துறையைச் சார்ந்த தன்று. பிறப்பிலிருந்தே முஸ்லிம் களாயிருப்போரைக் காட்டிலும் புதிதாக அம் மதத் தைத் தழுவியவர்களுக்குச் சில சமயம் விசேஷ சலுகை யும் காட்டப்பட்டது. அக்பர் இந்த மத வேற்றுமையை அடியோடு தொலைத்துவிட்டான். ஆனால், இந்திய முஸ்லிம் அரசர்களுக் குள்ளே மிகுந்த மதவெறி பிடித்தவனுங்கூட, தற்போது இந்தியாவை ஆளும் பிரிட்டிஷாரைப் போல் சாதிக் கர்வமும், சுதேசிகளுடன் கலந்து பழகாத குறுகிய மனப்பான்மையும் கொண் டிருக்கவில்லை. முஸ்லிம் ஆட்சியின் கீழ் சாதிப் போராட்டம் எப்போதேனும் தலை காட்டிற் றென்றால்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அது ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் எழவில்லை. முஸ்லிம்களுக்குள்ளேயே அப் போராட்டம் ஏற்பட்டது. துக்ளக்குகளுக்கும் — பட்டாணியருக்கும், மொகலாயர்களுக்கும் — லோடி வம்சத்தாருக்கும் ஏற்பட்ட போராட்டங்களை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

ஷெர்ஷா, அக்பர், ஜிகாங்கீர், ஷாஜஹான் முதலியோர் போன்ற மன்னர்களின் ஆட்சியில், அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர்களுக்கு அடுத்தபடியாகப் பெரிய உத்தியோகப் பதவிகள் எல்லாவற்றிற்கும் ஹிந்துக்கள் உரியவர்களா யிருந்தனர். அவர்கள் மாகாண அதிபதிகளாகவும், சைன்யங்களின் தளபதிகளாகவும், ஜில்லா அதிகாரிகளாகவும் பதவி வகித்திருக்கின்றனர். சுருங்கக் கூறினால், அரசியல் துறையிலோ சமூகத் துறையிலோ ஹிந்து முஸ்லிம்களுக்குள் எவ்வகை வேற்றுமையும் பாராட்டப்படவில்லை. அரசியலையும், பொருளாதாரத்தையும் பற்றிய வரையில் ஹிந்து அரசைப் போலவே முஸ்லிம் அரசும் சுதேச ஆட்சியே யாகும். பொது ஜனங்களை நிராயுதபாணிகளாக்க முஸ்லிம்கள் முயன்றது கிடையாது. ஆயுதங்களின் உற்பத்தியையோ இறக்குமதியையோ அவர்கள் தடை செய்ததில்லை. அரேபியா, பாரஸீகம் அல்லது ஆப்கானிஸ்தானத்திலிருந்து அவர்கள் உத்தியோகஸ்தர்கள் கொண்டு வரவும் இல்லை. லங்காஷயர் தொழில்களைப் போல் அவர்கள் பாதுகாக்க வேண்டி யிருந்த அன்னிய நாட்டுத் தொழில் எதுவுமில்லை. எனவே, இந்தியாவில் செய்த சாமான்களுக்கு எதிர் வரி விதிக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படவில்லை. அவர்கள் வந்தபோது தங்கள் சொந்த பாஷையையும், இலக்கியத்தையும் தங்களுடன் கொண்டு வந்தது உண்மையே. சிறிது காலத்திற்கு அவர்கள் அரசாங்கக் காரியங்கள் எல்லாம் தங்கள் சுய பாஷையிலேயே நடத்தி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யிருக்கலாம். ஆனால், விரைவிலேயே அவர்கள் புதிய இந்திய மொழி ஒன்றை ஏற்படுத்திக் கொண்டார்கள். உருது அல்லது ஹிந்துஸ்தானி என்று தற்போது வழங்கும் அப் புதியமொழி அடிப்படையில் சுத்த இந்திய மொழியேயாகும். பாரஸீகம் அல்லது ஆப்கானிஸ்தானத்தின் தொழிலாளி வகுப்பாரின் நன்மையைக் குறித்து முஸ்லிம் இந்திய மன்னர்கள் எவ்விதத்திலும் கவலை கொண்டிருக்கவில்லை. வெளி நாட்டார் எவரேனும் அவர்களுடைய ஆதரவைப் பெற விரும்பினால் அவர்கள் முதலில் இந்தியாவுக்கு வந்து குடியேற வேண்டும். எனவே முஸ்லிம்களின் அரசாங்கம் இந்திய அரசாங்கமேயன்றி ஒரு நாளும் அன்னிய அரசாங்கம் அன்று.''

(யுவபாரதம் (1937)—பக். 114-117)

* * *

1. கபீர்தாஸ் (1440 - 1518) :

''இந்திய நாட்டுச் சிறந்த மெய்ஞ்ஞானிகளுள் கபீர் ஒருவராவர். இவரைத் தெய்விக மனிதரென்று கூற வேண்டும். ஒப்பற்ற சமரசத் தூத ராவர். இந்தி மொழியில் ஆதி கவி யாவர். இவர் சமூக சீர்திருத்தக்காரர்; சமயக் குறைபாடுகளைப் போக்க முயன்ற புரட்சி வீரர்.''

(கலைக் களஞ்சியம் தொகுதி 3—பக். 213)

2. குணங்குடி மஸ்தான் சாமி (1800-1847) :

''இவருடைய இயற்பெயர் சுல்தான் அப்துல் காதிர் லப்பை. இவர் மதுரையில் பிறந்ததாகச் சிலரும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள குணங்குடி என்னும் ஊரில் பிறந்ததாகச் சிலரும் கூறுகிறார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவர் தம் இதயத்தை முற்றிலும் இறைவன்பால் ஈடுபடுத்த விரும்பிச் சிக்கந்தர் மலையிலுள்ள குகைகளில் தங்கி 40 நாள் யோக நிஷ்டையில் இருந்தார்...

இவர் குணங்குடி மஸ்தான் சாகிபு என்ற பெயருடன் விளங்கி வந்தார்.

இவர் அவ்வப்போது பாடிய பாடல்கள் மஸ்தான் பாடல்கள் எனப் பெயர் பெறும். இவை எளிய சொற்களும் ஆழ்ந்த பொருளு முடையன. பெரும்பாலும் தாயுமான சுவாமிகள் பாடல் போலிருக்கும்.

இவருக்கு இந்துக்களிலும் முஸ்லிம்களிலும் சீடர்கள் இருந்தனர்."

(கலைக் களஞ்சியம் தொகுதி 8—பக்.207)

3. தாயுமானவர் (1705 - 1742):

தாயுமானவர் கி.பி. 1705-ல் தமிழ் நாட்டில் இப்பொழுது வேதாரணியமென்று வழங்கும் திருமறைக்காடு என்னும் பழம் பதியில் வேளாளர் குலத்தில் பிறந்தார்...

திருச்சிராப்பள்ளியில் கோயில் கொண்டுள்ள தாயுமானவரைத் தொழுது இவரைப் பெற்றமையால் இவருக்குத் தாய் - தந்தையர் தாயுமானவர் என்று பெயர் வைத்தனர்.

தமிழிலும் வடமொழியிலும் சிறந்த புலமை பெற்றவர்.

வேதாந்தத்தையும் சித்தாந்தத்தையும் சமரசப் படுத்தும் வேலையை மேற்கொண்டார்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலங்கள்தோறும் சென்று தியானமும் பூசையும் செய்து, பாடல்கள் இயற்றுவதிலும் காலத்தைக் கழித்தார். இவருடைய பாடல்கள் பக்திச் சுவை நிரம்பியவை.''

(கலைக் களஞ்சியம் தொகுதி 5—பக் 281)

4. நாகூர்.

''தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் நாகப் பட்டினம் தாலுகாவில் கிழக்குக் கரையில் இருக்கும் பட்டினம்...நாகப்பட்டினத்திலிருந்து நான்கு மைல் தொலைவி லிருக்கிறது.

துறவி மீரான் அவர்களின் சமாதி புகழ்பெற்றது. அத் துறவியார் 400 ஆண்டுகளுக்கு மேல் உயிர் வாழ்ந் தார் என்றும், தஞ்சை அரசர்களால் சிறப்பிக்கப் பெற்றவர் என்றும் சொல்லப்படுகின்றது. இலையுதிர் காலத்தில் ஆண்டுவிழாக் கொண்டாடப்படும். இவ் விழா பன்னிரண்டு நாட்கள் நடைபெறும். ஆயிரக் கணக்கான முஸ்லிம்களும், இந்துக்களும் விழாவுக்கு வந்து தம் வேண்டுதல்களை நிறைவேற்றி வைப்பர்.''

(கலைக் களஞ்சியம் தொகுதி 6—பக். 330)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மத த்வேஷம்

[இக் கட்டுரையிலும் ஜாதீய ஐக்கியத்தையே பாரதி வற்புறுத்துகிறார். இந்தியாவில் நடைபெற்ற ஜாதீய சச்சரவுகளை ஆங்கிலேயர்கள்தாம் பெரிது படுத்தினார்கள் என்றும் பாரதி இக் கட்டுரையில் சுட்டிக் காட்டவும் தவறவில்லை.]

ஆங்கிலேயர்கள் சாதாரணமாய் இந்தியாவில் ஐக்கியமே இல்லையென்றும், ஜாதி மத வேறுபாடுகளினால் ஜனங்கள் வைஷம்யம் பாராட்டி வருகிறார்களென்றும் சொல்லுகிறார்கள். இந்தியர்கள் ஸ்வதந்திர மிழந்து, அந்நிய அரசாட்சிக்கு உட்பட்டுவிட்டபடியால், அவர்களை எவ்வளவு இழிவாகக் கூறினபோதிலும் உலகத்தார் நம்பும்படியா யிருக்கிறது. அதுவே இந்தியாவானது ஸ்வதந்திரத்தை யனுபவித்துக் கொண்டிருக்கும் பக்ஷத்தில் ஒருவரும் ஒரு வார்த்தையும் சொல்ல மாட்டார்கள். கீழே விழுந்தவன் தலைமீது கல்லெடுத்துப் போடுவது எல்லாருக்கும் எளிதே.

இப்பொழுது இந்தியாவில் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மத த்வேஷ மிருக்கிற தென்று அந்நியர் சொல்லுகிறார்கள். உண்மையாய்ப் பார்க்குங்கால், சிறிது துவேஷங்கூடக் கிடையாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மொஹரம் பண்டிகை[1] வந்தால், அப்பொழுது ஹிந்துக்க ளெல்லாம் முஸ்லிம் சகோதரர்களோடு ஒன்றுகூடி மனங் களிக்கிற தில்லையா? நாகூர் மீராஸாப் கோவிலில் ஹிந்துக்கள் - முஸ்லீம்கள் இருவரும் பிரார்த்தனை செய்து கொள்ளுகிற தில்லையா?

வட இந்தியாவில் பக்ரீத் மகோற்சவத்தின் பொழுது, ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சிறு சண்டை யுண்டாயிற் றென்று பத்திரிகைகளி லெல்லாம் அமக்களம் செய்தார்கள். ஆனால், எல்லாம் சிறு மக்கள் சண்டையாய் விட்டன.

மேற்படி சிறு சச்சரவுகளினின்று ஹிந்து - முஸ்லிம்களுக்குள் இராஜரீக விஷயங்களில் ஐக்கியமே யில்லை என்று ஆங்கிலேயர்கள் சொல்லும் பக்ஷத்தில் இங்கிலாந்தில் மாத்திரம் மத த்வேஷம் கிடையாதா? சென்ற வாரங்கூட இங்கிலாந்திலுள்ள லிவர்பூலென்னும் பட்டணத்தில் புராடஸ்டெண்ட் மதஸ்தர்களுக்கும் ரோமன் காதலிக் மதஸ்தர்களுக்கும் சண்டை யுண்டாய் மண்டை யுடைந்து 50 கலாசாலைகள் மூடிவிடப் பட்டன. இப்படி இங்கிலாந்தில் நடந்தால் இதற்கு ஒற்றுமை யென்று பெயரோ?

ஆகையால் இந்தியாவும் ஸ்வதந்திரம் பெற்றிருந்தால் ஒருவரும் ஒரு பேச்சும் பேச மாட்டார்கள். மத த்வேஷ மென்றும், ஜாதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பேத மென்றும் சொல்வ தெல்லாம் ஆங்கிலேயர் களுடைய கற்பனையே யொழிய வேறொன்று மில்லை.

(இந்தியா: 3.7.1909—பக்.3)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. மொஹரம் பண்டிகை (முகரம், மொகரம், முஹர்ரம்) :

திருக்குர் ஆனில் புனிதமாகக் கூறப்பட்டுள்ள மாதங் களில் இப் பண்டிகை முஸ்லிம் மக்களால் வழிவழியாகக் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. முகம்மதிய ஆண்டின் முதல் மாதம் முகரம் வரும்.

இப் பண்டிகையின் தத்துவம் பற்றிய செய்தியைக் 'கலைக் களஞ்சியம்' இப்படி தெரிவிக்கிறது:

"இஸ்லாம் தோன்றும் முன்புகூட, இந்த மாதத்தில் தான் இறைவன் பல நபிகளை அவர்களின் இன்னல் களிலிருந்து விடுவித்துத் திருவருள் ஈந்தார் என எண்ணு கின்றனர்.

இந்த மாதத்தில்தான் புனிதர் மோசசும், அவரைப் பின்பற்றியோரும் மன்னன் 'பெர்-அவுன்' இழைத்த கொடுமைகளுக்கு எதிராக, நீர் பிரிந்து விந்தையாக வழிவிட்ட நைல் ஆற்றைக் கடந்து, தங்கள் மறையைப் பரப்பினர்...

இஸ்லாம் காலத்து 61ஆம் ஆண்டு இம் மாதம் மற்ற மாதங்களைவிடப் புனிதமாகியது. ஏனென்றால், இம் மாதத்தில் நபி முகம்மது அவர்களின் பேரனும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நான்காவது காலிப் ஹசரத் அலி அவர்களின் மகனுமான ஹசரத்-ஹுசேன், அவருடைய உறவினரோடும், அவரைப் பின்பற்றிய ஒருசிலரோடும் மோ ஆவியாவின் மகன் ஏசித் என்பவரின் பெரும்படைக்கு எதிராகக் 'கர்பலா' பெருநிலத்தில் போரிட்டுத் தம் புனித உயிரிழந்து உண்மை நெறிப் புரவலரான ஓர் ஒப்பற்ற தனி இடத்தைப் பெற்றார்.

இந்நாட் தொட்டு உலக முழுவது முள்ள முகம்மதி யர்கள் இவர் இறப்பை எண்ணி வருந்தி, ஒவ்வோர் ஆண்டும், இந் நாளை இவரது நினைவுநாளாகக் கொள்கிறார்கள். முகம்மதியர்கள் இன்று விரதமிருக் கிறார்கள்."

(கலைக் களஞ்சியம் தொகுதி 8—பக். 389)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதி : 4

தொழில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்திய நாட்டுக் கைத்தொழில்களின் நிலை, விவசாயிகளின் மனப்பாங்கு, கைத்தறி நெசவு, கைத்தொழில் கல்வியின் அவசியம் — இவை பற்றிய கருத்துக்கள் இப் பகுதியில் அடங்கி யுள்ளன.

வெளிநாடு சென்று, தொழில் நுட்பங்களை யறிந்து வந்து தாம் கண்டறிந்த புதுமை வழிகளை விளக்கிப் பேசிய கைக்வார் அரசரின் கருத்தைப் போற்றி எழுதிய கட்டுரையும், சரித்திர ஆதாரங் களையே மேற்கோள் காட்டிப் பேசும் வழக்க முடைய ரமேச சந்திர தத்தர் அவர்கள் நம்முடைய இந்தியக் கைத்தொழில்களின் முற்காலப் பெருமையை விளக்கிச் சொற்பொழிவு செய்ததைப் பாராட்டும் கட்டுரையும், நமது இந்திய நாட்டி லிருந்து வெளியேற்றப்படும் விளைபொருள்கள் பற்றிய கட்டுரையும், நம் நாட்டு விவசாயிகள் ஆகாரப் பொருட்களைப் பயிரிட்டு வந்த நிலையை மாற்றிக் கொண்டு, அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக — உணவுக்குப் பயன்படாத — ஏற்றுமதிப் பயிர்களைப் பயிரிட்டு வந்ததைக் கண்டனை செய்த கட்டுரையும், ஆங்கிலக் கல்வியில் மோக முற்று, பரம்பரைத் தொழில்களை மறந்து விடுவது பிழை என்று சுட்டிக்காட்டிய திரு. வி. கிருஷ்ணசாமி ஐயரின் கருத்தை ஆதரித்த கட்டுரையும் இப் பகுதியை அணி செய்கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கைத்தொழிற் சங்கத்தில் கைக்வார் மகாராஜாவின் பிரஸங்கம்

[கல்கத்தா தொழிற் சங்கக் கூட்டத்தில் கைக்வார் மகாராஜா ஆற்றிய உரையின் சுருக்கத்தைப் பாரதி இந்தக் கட்டுரையில் அளித்து, அவருடைய உரையின் உள்ளாழ்ந்த பொருளைக் கவனித்து நடக்கும்படி நமக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.]

இவ் வருஷம் கல்கத்தாவில் கூடிய தொழிற் சங்கத்தில் பரோடா மகாராஜா[1] செய்திருக்கும் உபன்யாஸத்தில் இதுவரையில் நாளுக்கு நாள் க்ஷீண தசையை யடைந்து வரும் தொழில்கள் அபிவிருத்தி யடையவும், அதனால் இந்தியா இழந்து போன செல்வத்தையும் புகழையும் அடையவுமான மார்க்கங்களைப் பலவாறு விளக்கி யிருக்கிறார். அந்த உபன்னியாஸத்தை முற்றும் மொழி பெயர்க்கப் பிறகு இயலுமாயினும் தற்காலம் அதன் உள் ஆழ்ந்த கருத்துகளையே எழுதுகின்றோம்.

ஆரம்பத்தில் நமது இந்தியாவின் பூர்வ நிலைமையையும், தற்கால நிலைமையையும் பற்றிச் சுருக்கமாய்ப் பேசினதில், நமது தேசம் பூர்வத்தில் கைத்தொழிலின் திறமையால் அடைந் திருந்த பெருங் கீர்த்தியையும், தற்காலம் அவை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யெல்லாம் நாச மடைந்து செல்வ மிழந்து நிற்கும் நிலைமையையும் தெளிவாய் எடுத்துக் காட்டினார். நகரங்களிலும், கிராமங்களிலும் தற்காலம் தொழிலைக் கைவிட்டு, கதியில்லாமல் நிற்கும் கைக்கோளர், கம்மாளர், குயவர் முதலிய பல தொழிலாளிகளின் அகோர நிலைமையையும், அதனால் அத் தொழிலாளிகள் பஞ்சத்தில் வருந்துவோரது கூட்டத்தில் முன்னிற்கும் பரிதாபத்தையும் எடுத்துக் காட்டி யிருப்பதில் அவருக்குப் பொது ஜனங்களிடத்திலுண்டா யிருக்கும் அனுதாபம் அளவிடக் கூடாததா யிருந்தது.

"பெரிய கைத்தொழிலுக்குப் பாடுபடுவது மன்றிச் சிறிய கைத் தொழிலில் ஜீவனம் செய்யும் ஏழை ஜனங்களுக்கு அனைவரும் கூடி உதவி புரியவேண்டும். அதற்கு ராஜாங்கமும் உதவி புரியக் கடவதாக. தற்காலம் இந்தியா வில் ஏற்படுத்த வேண்டியது பெரிய பெரிய யந்திரசாலைகளும் பெருந் தொழில்களு மல்ல. விளக்கேற்றிப் பார்க்கும்படியாக மறைந்து கிடக்கும் ஏழை ஜனங்களும் அவர்களுடைய அழிந்து போன தொழிலுமே முன்னுக்கு வரும்படியான மார்க்கத்தைத் தேட வேண்டும்'' என்று பேசி யிருக்கிறார்.

இவர் சுதேசீயத்தைப் பற்றிப் பேசியதில், "அது நமது நாட்டுச் செல்வம் வளருவதற்கு ஓர் கருவி. அதை யாவரும் கைவிடாமல் நமது ஏழை ஜனங்களின் தொழிலையே பாதுகாத்து வருவது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நமது சிக்கனத்துக்குப் பெரிய ஆதாரம்'' என்று சொன்னார். உள் நாட்டுச் சரக்குகள் நன்றா யில்லை யென்றும், இரண்டு துட்டு அதிகமாகவே யிருக்கிற தென்றும் அதைக் கைவிடுவோமாகில் சுதேசீயம் நிலைபெறா தென்பதை வற்புறுத்து கிறார்.

இவர் பேசி யுள்ளதை விரிவாய் எழுத முடியாமைபற்றி விசனிக்கிறோம். இவர் வெளி நாடுகளுக்குச் சென்று வந்ததின் பயனாக, பிரதம கல்வியைக் குறித்தும், கைத் தொழில் போதனை யைக் குறித்தும் அதிக ஊக்கத்துடன் பேசுகிறார். அவர் கடைசியாகக் கூறியிருக்கும் ஒரு உறுதி மொழியை யாவரும் கவனிக்கவேண்டும். ஒரு தேசத்தார் தங்கள் ஏழை ஜனங்களின் அபிவிருத்தியைக் கவனித்து நடக்காவிடில், அஸ்திவார மில்லாமல் வீடு கட்டுபவன் போலாவர். அதாவது, அவர்கள் பொது விஷயங் களில் எவ்வளவு உழைத்தாலும், ஏழைக் குடிகளின் தரித்திர நிலைமையால் அந்த நாடு நிலை நிற்பது கடின மென்பதைக் காட்டி யிருக்கிறார். இப்படி வெளி தேசம் சென்று பல நுட்பங்களையும் அறிந்து வந்து தனது குடிகளை யன்றி நம்மனை வரையும் நல்வழிப்படுத்த முயலும் இக் கருணை வள்ளலது ஊக்கம் தளராமல் மேன்மேலும் தனது குடிகளுக்கும் நமக்கும் நல்வழிகள் காட்டி வருவாரென நம்புகின்றோம்.

(இந்தியா : 5.1.1907—பக் 1)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

பரோடா மகாராஜா :

தற்போதைய மாநிலப் பிரிவினைப்படி பரோடா என்கிற பட்டணம் குஜராத் மாநிலத்தில் உள்ளது. சுதேச மன்னர்கள் காலத்தில், பரோடா மன்னர் கைக்வார் என்பவர் சமஸ்தானத்தின் அதிபதியாக விளங்கினார். சுதேசியம், தேசியக் கல்வி, பெண்கல்வி — ஆகியவற்றை ஆதரித்த பெருமைக்குரியவர்; தம் ஆட்சிக்காலத்தில் பலவித சீர்திருத்தங்களை அமுலுக்குக் கொண்டு வந்த சிறப்பும் இவருக்கு உண்டு.

"சுதேச ராஜாக்களுக்குள்ளே சிரோரத்தினம் என்று கூறத்தகுந்தவர்" என்று பாரதி இவரைப் பெரிதும் பாராட்டி யுள்ளார்.

அமெரிக்கா, ஐரோப்பா முதலான நாடுகளில் விரிவான சுற்றுப் பயணங்களை மேற்கொண்ட இவர், நம் நாட்டுக் கைத்தொழில் அபிவிருத்தியில் அக்கறை காட்டியமை மெச்சுதற்குரியது.

பொருத்தம் கருதி, அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, 25 வருடங்கள் முடிவடைந்த நிலையில் 'சுதேசிய'த்தைப் பற்றி அம் மகாராஜா ஆற்றிய சொற்பொழிவுப் பகுதியை இங்கே காணலாம்:

"இந்தியா ஒருபோதும் கைத்தொழில் செய்து அளவற்ற செல்வம் வளர்த்துச் செல்வத்தைப் பாராட்டுவதே பெருமை யென்று நினைக்கவில்லை. அற்பப் பொருளாகிய செல்வமே முக்கியப் பொருளென்று இனி எப்போதும் நினைக்கப் போவதும் கிடையாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆனால். இந்தியா கைத்தொழில் விஷயத்தில் சுயாதீனம் பெற முயன்றால்தான் இப்போதிருக்கும் தாழ்ந்த நிலை மாறி மற்ற தேசவாஸிகளுடன் சமான நிலைமையை யடையலாம். இதற்குக் கைத்தொழில் புரிந்து செல்வ மேற்படுத்திக் கொள்வதே தக்க அஸ்திவார மாகும். அன்னியரைச் சார்ந்திராமல் செல்வநிலை விஷயத்தில் ஸ்வதந்திரம் பெற்றிருக்க வேண்டுமென்ற ஆசையே இப்போது எல்லா இடங்களிலும் 'சுதேசியம்' என்று புகழ்மிகுந்து விளங்குகின்றது இந்த சுதேசிய மில்லாமல் ஒரு தேசமும் அபிவிருத்தி யடைய முடியாது'' என்றார்.

கவர்ன்மெண்டாரின் அதிருப்திக்குப் பயந்து, சுதேசீயத்திற்கு விரோதிகள்போல நடித்துக் கொள்ளும் கோழைப் பிரபுக்கள் சக்ரேசனாகிய பரோடா மகாராஜாவின் வசனத்தைக் கவனிப்பார்களென நம்புகிறோம்.

(இந்தியா : 16.3.1907—பக். 2)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கைத்தறி நெசவு

[கைத்தறி நெசவுத் தொழிலைப் பற்றிச் சென்னையில் பேசிய மிஸ்டர் சாட்டர்டன் என்பவர் சுதேசி இயக்கத்தின் விரோதிகளில் ஒருவர் என்றாலும், நெசவுத்தறிகளுள் விசை நாடாத் தறிகளே சிறந்தவை எனவும், இந்திய மக்கள் முன்னுக்கு வர வேண்டுமானால், அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்தும் அவர் பேசியதை மொழிபெயர்ப்புச் செய்து, பத்திரிகை ஒன்றில் பிரசுரம் செய்திருந்ததைப் பாரதி கண்டார். அதை அவர் மறுபிரசுரம் செய்ததை இங்கே காண்கிறோம்.]

''எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினு
மப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு''

என்பது திருவள்ளுவர்[1] வாக்கு.

நமக்கு விரோதிகள் சொல்லும் விஷயங்களிலே கூட நமக்கு ஹிதமான விஷயங்களைத் தெரிந்தொழுக முயலவேண்டுவது நமது பெருங் கடமையாகும்.

சென்ற சனிக்கிழமை மைலாப்பூர் தென் இந்நியா சங்கத்தில் கைத்தறி நெசவைப் பற்றி உபந்நியாசம் புரிந்த மிஸ்டர் சாட்டர்டன் நமது சுதேசிய முறைமையின் சத்துருக்களிலே ஒருவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனினும், இவர் அன்று செய்த உபந்நியாசத்திலே சுதேசிய நிந்தை மட்டுமே யன்றி வேறு சில நல்ல விஷயங்களு மிருந்தன. இவரது உபந்நியாசத்திலே நம்மவர்களுக்கு ஹிதமான வசனங்களை வேறொரு பத்திரிகை மொழிபெயர்ப்பி னின்றும் எடுத்துப் பதிப்பிக்கின்றோம்.

சமீபத்தில் நேரிட்ட பெரும் பொருள் நஷ்டமானது இந்தியர்களுக் கருமையான பாடத்தைப் படிப்பிக்கத்தக்கது. ஆயிரக் கணக்கான குடும்பங்கள் சேர்த்து வைத்திருந்த பொருள் நஷ்டமாகிவிட்டது; ஒரு தலைமுறைக் காலத்தில் சேர்க்கக்கூடிய பணத்தை யிழந்து போனார்கள். போனதற்குப் பிரதி யேதேனும் உண்டா? இந்தியர்களாகிய நீங்கள் சேர்த்து வைத்த பணத்தை உங்கள் மனிதர்கள் வசம் ஒப்புவித்து அவர்கள் நடத்தும் தொழில்களில் உபயோகப்படும்படி செய்யாமல், அயலாரை நம்பிக் கொடுத்து மோசம் போனீர்கள். உங்களில் தலையாயினோர் பிரிட்டிஷ் ஆட்சி காரணமாக இந்தியாவின் பொருள் அன்னிய தேசம் போய்விடுகிறதென்று கூச்சலிடுகிறார்கள். பொருளோடு கூட, பொருளைப் போலவே மதிக்கக்கூடிய அனுபோகமும் அறிவும் போய்விடுகின்றனவே! அதைப்பற்றிப் பேச்சைக் காணோம். இந்தியாவில் தொழில்கள் நடக்காமலா இருக்கின்றன? நடக்கிறவைகளெல்லாம் அன்னியர் வசமிருக்கிறபடியால்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவர்கள் சம்பாதிக்கும் பொருளெல்லாம் தேசத்தை விட்டுப் போய்விடுகிறதல்லாமல், அவர்கள் பெறும் அனுபோகமும் அவர்களுடன் போய் விடுகின்றது. இந்தியாவானது பூர்வம் தொழில், வியாபாரம் முதலியவைகளில் சிறப்புப் பெற்று வாழ்ந்தது என்பதில் சந்தேகமில்லை; அப்படி யினியும் அது வாழவேண்டுமென்று நீங்கள் விரும்புவீர்களானால், காலத்துக்குரிய வேற்றுமைகளைக் கூசாமல் மேற்கொண்டு, இப்போது மேல் நாடுகளில் தொழில்கள் என்னவிதமாய் நடத்தப்படுகின்றன வென்பதைத் தெரிந்துகொண்டு, உங்கள் தலைவரை நீங்கள் முழுதும் நம்பி உங்கள் பணத்தை யவர்கள் வசம் ஒப்புவிக்க வேண்டும். மற்றத் தேசங்களிலிருக்கும் தொழிலாளிகளுடன் நீங்கள் போட்டி போட்டு எதிர்த்து உங்கள் நாட்டுத் தொழில்களை நிலைநிறுத்த விரும்பினீர்களானால், மேலே நான் சொன்ன மாதிரியாக அனுபோகம், பயிற்சி ஆகிய அரும் பொருள்களைச் சேர்க்க வேண்டும். ஜப்பானுக்குச் சிறுவர்களை யனுப்பி அங்கே யவர்கள் பயிற்சி பெற்று வந்தால் அவர்களைக்கொண்டு உங்கள் தொழில் மீட்சியைச் செய்துகொள்ளலா மென்று நம்புகிறீர்கள். இது தற்காலம் கைகூடத்தக்க தல்ல. முதலாவது, இங்கிருந்து போகிற சிறுவர்கள் தக்க யோக்கியதை யுள்ளவர்களாகப் போகிறதில்லை. இரண்டாவது, போய்த் திரும்பி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வருகிறவர்கள் தாங்கள் கற்ற தொழில்களைச் செய்ய வேண்டிய வசதிகளும் அனுகூலங்களும் கிடைக்காமல், அவர்களது பயிற்சியானது வீணாகிவிடுகிறது. படிப்புக் கற்றவர்களில் யார் யூனிவர்ஸிடி பரீக்ஷைக்குப் போய்த் தேறக் கூடாதவர்களோ, அவர்கள்தான் ஜப்பான் போக முன்வருகிறார்கள். ஏனெனில், தற்காலம் கற்றவர்களுக்குத் தொழில், வியாபாரம் ஆகிய துறைகளில் கௌரவமான ஜீவனத்துக்கு வகை யில்லை.

இந்தியாவில் நெசவுத் தொழில் விருத்தி யாக வேண்டுமானால், இப்போது போடப் பட்டுவரும் நாட்டுத் தறிகளை விருத்தி செய்து, அதிக நெசவு செய்வதாகச் செய்து, அந்தத் தறிகளில் 40 அல்லது 50 ஒரே இடத்தில் வைத்துப் போதுமான முதல் போட்டு நெசவுக் காரர்களை வேலைக்கு வைத்து நடத்த வேண்டும். அப்படிச் செய்தால்தான் இப்போதைப் போல அந்தத் தொழிலானது வறுமையால் வருந்தாமல் காலத்துக்குத் தக்க படி விருத்தியாகி முன்னுக்கு வரும். சிலவித மான துணிகள் செய்வதில், மேல்நாட்டு விசைத்தறிகளே (Power looms) வெற்றி கொண்டதாயிருக்குமாயினும், வேறு சில துணி கள் செய்வதில் இந்தியத் தறிகளை அவைகள் வெல்ல முடியா. வேண்டிய முதல் போட்டு நடத்திவருவதுமல்லாமல், நெசவுச்சாலைகளை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(Factories) நடத்துவோர் படிப்பாளி களாயிருக்க வேண்டும். தொழில் செய்வோருக்கும் படிப்புச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அவர்களது திறமை யதிகப்பட்டு அவர்கள் நல்ல நிலைமைக்கு வரவேண்டும்.' தங்கள் தங்கள் வீடுகளில் வேலைசெய்து அகப்பட்டதைத் தின்று அதிக சிரமமில்லாமல் காலங் கழிக்கும் நெசவுக்காரர்கள் பாக்டரிகள் என்கிற நெசவுச் சாலைகளில் ஒரு முதலாளியின் கீழ் கூலிபெற்று நிர்ப்பந்தத்துடன் வேலை செய்ய ஒப்பமாட்டார்கள். இது அனுபோகமாயிருக்கின்றது. ஆயினும், விசேஷமான கூலி கொடுத்தும் அவர்களிற் சிறுவர்களுக்குக் கல்வி கற்பித்தும் இந்த விருப்பின்மையை வெல்ல வேண்டும். சென்னை நகரில் தண்டையார் பேட்டையில் மிஸ்டர் பிட்டி தியாகராஜ செட்டியார்[2] சுமார் 40 தறிகள் வைத்து நெசவு நடத்தி, லாபம் பெற்று வருகிறார். அவரைப் போல அனேகர் செய்யவேண்டும்.

(இந்தியா :2.2.1907—பக்.6-7)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. **திருவள்ளுவர் :**

"திருக்குறளை இயற்றியவராகிய திருவள்ளுவரின் காலம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தாகையால் உண்மையான வரலாறு இன்னதெனக் கண்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிடிக்க முடியாததாக இருக்கிறது. பழைய திருக்குறள் உரையின் முன்னால் வெளியாகியுள்ள வரலாறு சன்ன பரம்பரையாக வழங்கி வருகிறது.......திருக்குறள் நூலைக்கொண்டு திருவள்ளுவரின் வரலாற்றையோ சமயத்தையோ கண்டு பிடிப்பது முடியாததாக இருக்கிறது. இவர் சென்னை மயிலாப்பூரில் வாழ்ந்த தாகக் கூறுவர். சென்னை திருமயிலையில் திருவள்ளுவ ருக்குக் கோயில் ஒன்று இருக்கிறது."

(சிறப்புப் பெயரகராதி — பக். 340-341)

பிட்டி தியாகராஜ செட்டியார் (1852-1825) :

பொதுநலப் பணிகளில் மிகுந்த ஆர்வம் காட்டியவர்; 1905இல் வங்கப் பிரிவினையை யொட்டி, நாட்டில் மலர்ந்த சுதேசி இயக்கத்தில் தம்மையும் ஈடுபடுத்திக் கொண்டவர், இப் பெரியார். பண்டைய தொழிலான கைத்தறி நெசவுக்குப் புனர்வாழ்வு கிடைக்க அயராது உழைத்த இவர், தென்னிந்திய வர்த்தக சபையை ஆரம்பிப்பதற்கும் உறுதுணையாக இருந்திருக்கிறார். மற்றும் தமிழ்நாட்டில் தொழிற்கல்வியைப் பரப்பப் பெரும் முயற்சிகளை எடுத்துக் கொண்டவர்.

பற்பல பொறுப்பான பதவிகளை ஏற்று வகித்தவர்.

ஆரம்பத்தில் காங்கிரஸ் இயக்கத்தில் பங்கு கொண்ட இவர், பிற்காலத்தில் 'நீதிக் கட்சி'யைத் தோற்றுவிக்க முன்னின்றவருங்கூட.

'வெள்ளுடை வேந்தர்' என்று அழைக்கப்பட்ட இவருக்குப் பிரிட்டிஷ் அரசு பல கௌரவ பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தது.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எவ்வளவு கோரமான வீழ்ச்சி !

[பரோடா அரசிறை மந்திரியாகப் பணிபுரிந்த ரமேச சந்திர தத்தர் என்பார் சூரத் நகரத்தில் கைத்தொழில் சங்கத்தில் ஆற்றிய கருத்தாழம் கொண்ட உரையைத் தந்த பாரதி, நம் நாட்டின் தாழ் நிலைமைக்கு யாது காரணம் என்பதை அதிகாரிகளின் சிந்தனைக்கே விட்டு விட்டார்.]

ஸூரத் நகரத்திலே சில நாட்களின் முன்பு கூடிய மாகாணக் கைத்தொழிற் சங்கத்திலே ஸ்ரீமான் ரமேச சந்திர தத் (பரோடா அரசிறை மந்திரி) செய்த உபந்நியாசத்தைப் படித்தபோது நமக்கு மிகுந்த துக்கம் உண்டாயிற்று. அவர் தமது உபந்நியாசத்தில் இந்தியா பழங் காலத்தில் இருந்த மஹோன்னத நிலைமையைப் பற்றிப் பேசியிருக்கிறார். அதை இந்தியா இக் காலத்தி லிருக்கும் நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்த்ததில், உண்மையுடன் தேசாபிமானி ஒவ்வொருவனுக்கும் கண்ணிலே நீர் ததும்பயாக இருக்கிறது. ஸ்ரீமான் தத் சாதாரண ஜனங்களைப்போல வீண் புகழ்ச்சி செய்பவ ரில்லை. பிழை யில்லாதவையும் எல்லாராலும் அங்கீகாரம் செய்யத்தக்கனவு மாகிய சரித்திர புஸ்தகங்களின் ஆராய்ச்சியையே ஆதாரமாகக் கொண்டு பேசுபவர். அவர் இந்தியாவின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முற்காலத்து நிலைமையைப் பற்றிக் கூறிய வசனங்களின் கருத்தைக் கீழே எடுத்து எழுதுகின்றோம்:

"பண்டைக் காலத்தில் அதாவது டச்சுக் காரர்கள், போர்த்துகேயர்கள், பிரெஞ்சுக் காரர்கள், ஆங்கிலேயர்கள் இவர்களெல்லோரும் இந்தியாவின் பொருள்களுக்கு ஆசைப்பட்டு அதனோடு வர்த்தகம் செய்யத் தலையெடுப்பதற்கு முன்னே பினீஷியர்கள் இங்கு வந்து அகப்படும் சரக்குகளை வாங்கிக் கட்டிக் கப்பலேற்றிச் சென்றார்கள். அப்பால் ரோம் நாட்டாரும் கிரீஸ் நாட்டாரும் இந்தியாவுக்கு வந்து வியாபாரஞ் செய்து போனார்களென்றும் சொல்லப் போதுமான அத்தாட்சிகளிருக்கின்றன.

பழைய நாள் வர்த்தக நுட்பங்களைப் பற்றிச் சொல்லும் புஸ்தகம் ஒன்றை நான் சோதித்துப் பார்த்தமட்டில் இந்திய நாட்டின் கரையோர வியாபாரம் அந்தக் காலத்தில் பலத்திருந்ததாய்த் தெரியவருகிறது. சிந்து நதியின் முகத்துவாரத்திலுள்ள "பார்பரீக்" என்ற வியாபார ஸ்தலத்திலிருந்து (இது கராச்சிக்குச் சமீபமா யிருந்திருக்க வேண்டுமென்று ஊகிக்கப்படுகிறது) அவுரி, பஞ்சு, பட்டு தினுசுகள், ரத்தினங்கள் இவைகள் ஏராளமாய் ஏற்றுமதி செய்யப்பட்டன. கத்தியவார் நாட்டிலிருந்து உணவுத் தானியங்களும், பருத்தியும் ஏற்றுமதியாயின.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்னே ப்ரொச் பட்டணம் மேற்கிந்தியாவிலே வெகு பிரபலமான துறைமுகப் பட்டினமா யிருந்தது. உள் நாட்டிலிருந்து அந்தத் துறைமுகம் மார்க்கயாய் வெளிச் சென்ற பட்டுகளுக்கும், துணிகளுக்கும், ரத்தினங்களுக்கும், வாசனைத் திரவியங்களுக்கும், தானியாதிகளுக்கும் கணக்கே யில்லை. உள் நாடுகளி லிருந்து பலவகைப்பட்ட இயற்கைப் பொருள் களும், செயற்கைப் பொருள்களும் ப்ரொச்சில் வந்து குவிய, அங்கே வந்து கப்பலை வைத்துக்கொண்டு காத்துக் கிடந்த அலெக்ஸாண்டிரியா (இது ஆபிரிகாக் கண்டத்தில் உள்ளது) வியாபாரிகள் அவை களை வாரிச் சென்றார்கள்.

இந்தியாவிலிருந்து ரோம் நாட்டுக்குப் பலவகைப்பட்ட ரத்தினங்கள் முற்காலத்தில் கணக்கின்றி ஏற்றுமதி செய்யப்பட்டன. பழைய நாட்களில் கங்காதீர நாட்டைச் சேர்ந்த பட்டணங்க ளெல்லாம் நல்ல கைத் தொழில்கள் நடைபெறும் பட்டணங்களாயும், பெருத்த வியாபாரம் நடக்கும் ஸ்தலங்களாயும் இருந்தன"

என்று ஸ்ரீமான் ரமேச சந்திர தத் கூறினர்.

இது நமது பூர்வீக நிலை. தற்கால நிலைமையை என்னென்று வர்ணிப்போம்! உடுக்கும் கந்தைகூட அன்னிய நாட்டிலிருந்து வந்துதான் தீரவேண்டு மென்ற ஸ்திதிக்கு நம்மில் அனேகர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வந்துவிட்டார்கள். இக் காலத்திலும்கூட நமது தேசத்துப் பூமி செல்வ மிக்கதாகவே யிருந்த போதிலும், நமது ஜனங்கள் உலகத்தா ரெல்லாம் கண்டு நகைப்பதற்குரிய பரம ஏழைகளாய்ப் போய் விட்டார்கள். இந்திர லோகத்திலே பஞ்சம் பிடித்தாற்போல் நமது நாட்டிற்கு ஏன் இந்த நிலைமை வரவேண்டும்? கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களே, தயவுசெய்து சொல்ல மாட்டீர்களா!

(இந்தியா: 6.4 1907—பக்.2)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெளியேற்றப்படும் விளைபொருள்கள்

[இந்தக் கட்டுரை நமது நாட்டு மக்களின் கடமை உணர்வுகளை வலியுறுத்த எழுந்தது. பஞ்சத்தின் காரணம், விலைவாசி உயர்வின் காரணம், மழை பெய்யாததற்குக் காரணம், பேராசையின் காரணம் ஆகிய இவற்றை உள்ளடக்கிய இக் கட்டுரை பொருளாதாரச் சிந்தனையின் அடிப்படையிலும் சிறந்து விளங்குகிறது.]

நம் நாட்டில் வடகோடியிலிருந்து தென் கோடி வரையிலும், கீழ்க் கோடியிலிருந்து மேல் கோடி வரைக்கும் எங்கே போயினும் ஒரே பஞ்சமாகத்தான் இருக்கிறது. கோதுமையோ அரிசியோ கேழ்வரகோ சோளமோ பயர் வகைகளோ இன்னும் மற்ற ஆகாரத்திற்குரிய சாமான்களோ எல்லாம் மிகவும் கிராக்கியாக இருக்கின்றன. தாது வருஷம் பஞ்சத்தில் விற்ற விலைவாசியினும் இப்பொழுதுள்ள விலைவாசி அதிகமாய் ஏற்பட்டிருக்கிறது. தினே தினே ஒவ்வொரு சாமான்களின் விலையும் ஏறிக்கொண்டே வருகிறது. போன வருஷத்தினும் இந்த வருஷம் விலை யேறிப் போய்விட்டது. இது இப்படி யிருக்க, ஜனங்கள் சம்பாதிக்கும் வருமானமும் குறைந்து கொண்டே வருகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விலையும் ஜாஸ்தியாகி வருமானமும் குறைந்தால் நம்மவர்களின் கதி என்னவாகும்? அதோகதிதான்!

எத்தனையோ கோடானு கோடி ஜனங்கள் குடிக்கக் கூழில்லாமல் முழுப் பசி, முக்கால் பசியாக வருந்தி நாளடைவில் எமனுக்கிரை யாகிறார்கள். இந்தியர்கள் தலை ஒன்றுக்குச் சராசரி சம்பாதிக்கும் சம்பாத்தியம் ஒரு வருஷத்திற்கு ரூபா 15 அல்லது ரூபா 14 தான் ஆகிறது. இந்த உலகத்தில் எந்த நாட்டிலும் ஜனங்கள் இவ்வளவு குறைவான வருமானத்தை அடைவதில்லை. நம்முடைய நாடோ அஷ்ட இலக்ஷ்மிகளும் வசிக்கப்பெற்ற திவ்ய க்ஷேத்திரம். நிலவளம், நீர்வளமற்ற பாலைவனமல்ல. அப்படி யிருக்க ஏன் இந்தப் பஞ்சம்?

இந்தப் பரிதாபமான நிலைமைக்கு நாம் வந்ததற்கு அனேக காரணங்கள் உண்டு. அவற்றில் ஒன்றைமட்டும் இங்கு எடுத்துக் கூறுவோம். முற்காலத்தில், நம் நாட்டிலுள்ள விவசாயிகள் அங்கங்கே முக்கியமாக நவதானியங்களையும் ஆடு மாடுகளுக்கு வேண்டிய தீவனங்களையும் பயிரிட்டு வந்தார்கள். இப்பொழுது அவற்றை விட்டுவிட்டு அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களையே விசேஷமாகப் பயிரிட்டு வருகிறார்கள். பருத்தியும், மணிலாக் கொட்டையும் (நிலக்கடலை அல்லது வேர்க்கடலை) அவுரியும், சணலும், நம் நாட்டாருக்கு உபயோகத்திற்கு வேண்டிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அளவினும் மிகுதியாகப் பயிரிடப்பட்டு வருகின்றன. அவற்றை மிகவும் தாழ்ந்த விலைக்கு விற்று அடையும் லாபத்தைக்கொண்டு ஆகாரத்திற்குரிய சாமான்களை வாங்குகிறார்கள். ஆகாரத்திற்குரிய பொருள்களை விசேஷமாய்ப் பயிரிடாவிட்டால், அவை மிகவும் கிராக்கியாகத்தானே விற்கும். அதுவும் போதாதென்று அற்ப சொற்பமாகப் பயிரிடும் நவதானியங்களையும் அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விடுகிறோம். இதை நிறுத்த நம்மாலாகாதா? சர்க்காருக்குக் கட்ட வேண்டிய தீர்வைக்காகப் பணம் எங்கே யிருந்து கிடைக்குமென்றால், 'நாம் நமக்கு வேண்டிய நவ தானியாதிகளைத்தான் பயிரிடுவோம்; ஏற்றுமதிப் பொருள்களைப் பயிரிட மாட்டோம்' என்று உறுதி யாய் நின்றால் அவர்கள் செய்யக்கூடியதென்ன? மேற்சொன்ன பொருள்களை ஜப்தி செய்து ஏலம் போடுவார்கள். அவற்றை ஏலத்தில் எடுப்பது யார்? நம்மவர்களேதான் எடுக்க வேண்டும். அப்படி அவர்கள் ஏலத்தில் எடுத்தாலும் நமக்கேதான் திரும்ப விற்றுவிட வேண்டும். அப்பொழுதும் ஆகாரப் பொருள்கள் மலிவாய்த் தான் விற்கும். மாடுகளுக்கு ஆகாரமாகும் சோள நாற்றுகளையும் கொள்ளையும் இன்னும் மற்றப் பயிர்களையும் அவர்கள் சீமைக் கேற்றுவார்களா? முடியாது. மனிதருக்கு ஆகாரமாகும் நவதானியங் களில் கோதுமை, மக்காச் சோளம், எள்ளு, தேங்காய் முதலிய சில பொருள்களைத்தான் அவர் கள் சீமைக்கு அனுப்புகிறார்கள். உளுந்து, பச்சைப் பயர், துவரை, கடலை, கம்பு, கேழ்வரகு, நெல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதலியவற்றை அவர்கள் வேண்டார்கள். பருத்தியும், சணலும், நிலவாகையும், அவுரியும், வேர்க்கடலையும் அவர்களுக்குப் பிரயோஜனப்படுவது போல் மற்றவை பிரயோஜனப்படா. ஆகையால், நாம் அவற்றைப் பயிரிடுவதை யொழித்து, ஆகாரப் பொருள்களைப் பயிரிட்டால் விலைவாசி இறங்கி விடும். அப்படிச் செய்வதால் அன்னிய நாட்டு வர்த்தகர்களுக்கு நஷ்ட முண்டாகும். அவர்களுக் குண்டாகும் நஷ்டத்தின் அளவாகவே நமக்கு லாபமும் உண்டாகும். நாம் பணத்திற்கு ஆசைப் பட்டு, பின்னால் விளையும் கேட்டை நினையாமல் ஏற்றுமதிப் பொருள்களைப் பயிரிட்டால், அதன் பயனாக க்ஷாமம் உண்டாகின்றது.

இன்னுமொரு கேட்டை நாமே தேடிக் கொள்ளுகிறோம். மலைச்சாரல்களில் உள்ள மரஞ் செறிந்த காடுகளைக் கொளுத்திப் பொட்டலாக்கி, காப்பிச் செடியென்றும், தேயிலைச் செடியென்றும் அன்னியர் பயிரிடுகிறார்கள். ஆகாயமளாவிய விருக்ஷ ஜாதிகளை வெட்டிவிட்டால் மழை யெப்படி வருஷிக்கும்? முற்காலத்தில் மாதம் மும்மாரி பெய்த தென்று எல்லோரும் சொல்லுகிறார்கள். அதற்குக் காரணம் என்ன? நம் நாட்டிலுள்ள மலைக ளெல்லாம் பிரமாண்டமான விருக்ஷங்க ளடர்ந்த ஆரண்யங்களால் மூடப்பட்டிருந்தன. அக் காரணத் தினால் மலைப் பிரதேசங்கள் இப்பொழுது இருப்பதைவிடப் பன்மடங்கு அதிகக் குளிர்ச்சியான ஆகாயத்தால் சூழப்பட்டிருந்தன. நீராவியால் சுமத்தப்பட்ட பெருங் காற்றுகள் அவ்வித மலைப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரதேசங்களில் அடித்தவுடனே அங்குள்ள குளிர்ச்சியால் நீராவி மழையாய் மாறிச் சொரிந்தது. மலை நாடுகளில் காடுகள் இருந்தாலே அங்குள்ள ஈரம் வெயிலால் சுண்டிப் போகாது; நதிகளில் நீராகப் பெருகி வரும். இப்பொழுதோ மலைகள் எல்லாம் மொட்டையாய் நிற்கின்றன. மழையும் பெய்வதில்லை. நதிகளில் முன்போல் நீர்ப் பெருக்கும் இல்லை.

இக் கேட்டை நாமே தொலைத்துவிடலாம். மலங்காட்டை வெட்டித் தேயிலை, காப்பி முதலிய செடிகளைப் பயிரிட அன்னியர்களுக்கு நம் உதவி அவசியம் வேண்டி யிருக்கிறது. நாம் அவ்வித உதவியைச் செய்யமாட்டோம் என்ற தீர்மானத்தோடு இருக்க வேண்டியது அவசியம். நமது கிராமங்களில் இருந்து மலங்காட்டிலுள்ள தோட்டங்களுக்கு வேலை செய்யப்போகும் ஜனங்களை அங்கங்கே பஞ்சாயத்துக்கள் சேர்ந்து நாம் தடுத்துவிட வேண்டும். நம்முடைய வேண்டுகோளை மீறி நடப்பவர்களை நாம் ஜாதிப் பிரஷ்டம் செய்து விட வேண்டும். அவர்களோடு யாதொரு விதமான சம்பந்தமும் வைத்துக் கொள்ளக்கூடாது. இவ்விதமான முயற்சிகளால்தான் நாம் க்ஷேம மடையலாம். வெளிநாடுகளுக்குத் தோட்டக் காடுகளில் கூலிவேலை செய்யப்போகும் பேதைகளையும் நாம் சொல்லி நிறுத்திவிட வேண்டும். சகல வித செல்வங்களையும் பெற்றுள்ள இப் புண்ணிய தேசத்தில் பிழைக்காதவன் வெளியூரில் போய் என்னபிழைப்புப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிழைக்கப் போகிறான்? அங்கே கேவலம் மிருகங் களுக்குச் சமானமாக நடத்தப்படுகிறார்கள். இந் நாட்டில் கிடைக்கும் கூலி விகிதத்தைவிட 1 அணா அல்லது 2 அணா அங்கே ஜாஸ்தி கிடைக்கும். அந்த அதிக சம்பாத்தியமும் ஒரு தடவை தான் ஊருக்கு வந்து திரும்பினால் செலவாகிப் போய் விடும். கப்பல் சார்ஜூம் துறைமுகங்களிலும், ரயில்வேக்களிலும் உள்ள வேலைக்காரர்களுக்குக் கொள்ளை கொடுக்கும் பணமும் சேர்ந்து இவன் சேர்த்து வைத்த பொருளில் பாதிக்கு மேலாகி விடும். ஆள் மட்டும் மிச்சம். பெண்பாலர்களைக் கூட இட்டுக்கொண்டு வெளிநாட்டுக்குக் கூலி வேலை செய்யப்போகும் முட்டாளைவிடக் கேடு கெட்ட மனிதன் ஒருவனும் இல்லை. அவர் களுடைய மானத்தையும் பதிவிரதா தர்மத்தையும் இவனால் பாதுகாக்க முடியுமா? மான மிழந்த பின் வாழாவிட்டாலென்ன?

நமது நேயர்கள் இதை யறிந்து தம்மால் கூடிய முயற்சி யெடுத்து கிரா்மவாசிகளைக் கட்டுப்படுத்துவார்க ளென்று நம்புகிறோம்.

(இந்தியா : 5.12.1908 — பக்.7)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1907—08-ம் வருஷத்தில் சென்னை மாகாணத்திலே மணிலாக் கொட்டைப் பயிர்

[ஆகாரத்திற்குரிய உணவுப் பொருள்களைப் பயிரிடாமல், ஏற்றுமதிக்கான பொருள்கள் பயிரிடப் படுவதால் விளையும் கேட்டை நம் நாட்டு விவசாயப் பெருமக்களுக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றது, இக் கட்டுரை.]

(1906—07-ம் வருஷத்தோடு முடிவு பெற்ற ஐந்து வருஷக் காலத்திலே பிரிடிஷ் இந்தியா முழுமையிலும் ஏற்பட்ட மணிலாக் கொட்டை விளைவிலே 100க்கு 82 பங்கு சென்னை மாகாணத்தில் உண்டாயிருக்கிறது.)

1. 1908-ம் வருஷத்து டிஸம்பர் முடிவு வரை ரயத்வாரி கிராமங்களிலே மணிலா பயிரிடப்பட்டிருக்கும் நில விஸ்தீரணம் 6,81,600 ஏக்கர். அதாவது 1907-ம் வருஷத்தில் அப் பயிரின் கீழிருந்த நில விஸ்தீரணத்தைக் காட்டிலும் 100ல் 14 பங்கு அதிகமாகும். 5 வருஷம், 10 வருஷம் சராசரிகளைக் காட்டிலும் இது முறையே 100ல் 47 பங்கும், 85 பங்கும் அதிகமாகின்றது. தென் ஆற்காடு,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோயம்புத்தூர், செங்கல்பட்டு, சேலம், திருச்சினாப்பள்ளி என்ற ஜில்லாக்களிலேயே இப் பயிர் மிகவும் அதிகரித்திருக்கின்றது. இவ் வருஷம் ஷி பயிர் ஆகஸ்ட் அல்லது ஸெப்டெம்பர் மாதத்தில் விதைக்கப்பட்ட தாகத் தெரிகிறது.

இம் மாதங்களே அந்தப் பயிரின் தொடக்கத் திற்குப் பருவமாகும். பயிர் நிலை சுமாரா யிருக்கிற தென்றும் தெரிகிறது.

சாதாரண மாசூலிலே முக்கால் பங்கு தேறு மென்று மதிக்கப்படுகின்றது. சில தாலுக்காக் களிலே இன்னும் அறுவடை தொடங்கவில்லை. ஆனால், நவம்பர், டிஸம்பர் மாதங்களில் அறுவடை யான தாலுக்காக்களில் மாசூல் சரியானபடியே கண்டதாகச் சொல்லப்படுகிறது. கொட்டையாக 2,42,000 டன் தேறக்கூடும்.

2. ரயத்வாரி அல்லாத கிராமங்களிலே மணிலா விதைக்கப்பட்டிருக்கும் நில விஸ்தீரணம் 11,500 ஏக்கர். அதாவது 1907-ம் வருஷத்திலிருந்ததைக் காட்டிலும் 5000 ஏக்கர் அதிகமாகும். இந்த நில விஸ்தீரணத்தில் 4500 டன் கொட்டை தேறக் கூடும்.

இந் நாட்டில் மேற்கண்டவாறு, உணவு தானியங்களுக்குள்ள பயிர் விஸ்தாரத்தைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறைத்துக்கொண்டே போனால், பிறகு ஜனங்கள் சாப்பாட்டிற்கு? ரங்கூனில் அரிசி வானத்திலிருந்து உதிர்ந்து கொண்டே யிருக்கவில்லை. அங்கிருந்து வரக்கூடிய மொத்தத்திற்கு ஓர் அளவுண்டு. அங்கிருந்து ஓயாமல் சுண்ணாம்பரிசி வந்து கொண்டே யிருக்குமா? அட, மூட ஜனங்களே! மேலே அறிக்கையிற் கண்டபடி, உணவுக்குப் பயன் படாத ஏற்றுமதிப் பயிர்கள் நமது நாட்டில் அதிகரித்துக்கொண்டே போகுமானால், நமது ஜனங்கள் மண்ணை நிறுத்து வாங்கித் தின்னும்படி யான காலம் வெகு சீக்கிரத்திலே வந்துவிடும்.

(இந்தியா : 6.2.1909—பக். 2)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிழைக்கும் வழி

பிள்ளைகளை யெல்லாம் இங்கிலீஷ் பாடசாலைகளுக்கு அனுப்பும் மடச் செய்கை

ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி அய்யரின் உபதேசம்

[திரு.வி. கிருஷ்ணசாமி அய்யர் "பிழைக்கும் வழி" என்கிற பத்திரிகையில் நம் நாட்டு வாலிபர்கள் ஆங்கிலக் கல்வி கற்பதனால் யாதொரு பயனும் அடைகிறதில்லை என்றும், தொழிற்கல்விதான் அவர்களுக்கு வாழ்வுப் பயனைத் தரும் என்றும், தங்கள் சக்திக்கு ஏற்றவாறு படிப்பது நல்லது என்றும் எழுதிய சமயத்தில், பாரதி எழுதிய தலையங்கம் இதுவாகும்.

கிருஷ்ணசாமி அய்யரின் கருத்துக்களை ஆதரித்து எழுதிய அதேபோதில், அரசு தொழிற் பாடசாலை களை ஏற்படுத்தவேண்டும் என்று அவர் சொன்ன கருத்திற்கும் பாரதி தமக்கே உரிய முறையில் தக்க பதில் அளித்து நம்மவர்க்கு அறிவுரை வழங்கிய பான்மையையும் இக் கட்டுரையில் காணலாம்.]

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருக்குறள்

மனுஷ்ய சித்தம் கடல் நீரைப் போலன்று. ஒரே மொத்தமாக எங்கு பார்த்தாலும் உப்பா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யிருக்கமாட்டாது. சுபாவத்தினின்றும் மிகுந்த மாறுபாடடைந்த சித்தங்களிலேகூடச் சிலசில விஷயங்களில் தெளிவும், இனிமையும் இருக்கும். ஆதலால், மிகுந்த கல்வியும், நுட்பமான அறிவும் உடையவரும், ஆனால் அக் கல்வியையும், அறிவை யும் சென்ற மூன்று வருஷங்களாகத் தேச விரோத மான முயற்சிகளிலே செலவிட்டு வருபவருமாகிய ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி அய்யர் மனதிலேகூடச் சில சமயங்களில் பொது ஜன நலத்திற்கு அனுகூலமான உணர்ச்சிகள் ஜனித்துவிடுகின்றன.

சென்னப் பட்டணத்தில் "பிழைக்கும் வழி" என்றோர் மாதாந்த பத்திரிகை நடைபெற்று வரு கின்றது. அதில் இந்த வாரம் நமக்குக் கிடைத்த சித்திரை மாதத்து ஸஞ்சிகையின் தலையுரை ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி அய்யரால் எழுதப்பட்டிருக் கின்றது. இவ் வுரையிடத்தே, ஸ்ரீ அய்யர் நமது தேசத்தார் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய பெரிய விஷய மொன்றை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லி யிருக்கிறார். அவர் சொல்வதின் ஸாரம் யாதென்றால், "நமது தேசத்து வாலிபர்களை யெல்லாம் ஒரே யடியாக இங்கிலீஷ் பாடசாலை களுக் கனுப்பி நாம் நாசம் செய்து விடுகிறோம். இனி அங்ஙனஞ் செய்யலாகாது" என்பதே யாகும்.

இவர் சொல்லும் விவகாரம் பின்வருமாறு :-

"வருஷந்தோறும் நமது சென்னை ராஜ தானியில் சுமார் பதினாயிரம் பிள்ளைகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்குப் போகிறார்கள். அவர்களில் சராசரி 2000 பிள்ளைகள் தேறுவ தாக வைத்துக்கொள்ளலாம். பாக்கி 8000 பேர்கள் தவறிப் போகிறார்கள். இவர்களில் பலர் ஒரு தரமோ, இரண்டு தரமோ, அதற்கும் மேற்பட்ட தடவைகளோ அந்தப் பரீக்ஷைக்குச் சென்று தேறினாலும், வருஷம் ஒன்றுக்கு இரண்டாயிரத்துக்குக் குறையாமல் இனி மெட்ரிகுலேஷன் முகம் பார்ப்பது ஸாத்திய மல்லவென்று ஒழிந்து விடுகிறார்கள். இதே விதமாய் மெட்ரிகுலேஷன் கிளாஸுக்குக் கீழ்ப்பட்ட ஐந்து வகுப்புகளில் இருந்து, மேற் செல்ல மாட்டாமல் வருஷா வருஷம் படிப்பி லிருந்து நின்று விடுகிறவர்கள் உண்டு!"

இவர்களை யெல்லாம் ஒன்றாகக் கூட்டிக் கணக்குப் பார்த்தால், வருஷ மொன்றுக்குக் குறைந்த பக்ஷம் இந்த ஒரு மாகாணத்திலே மாத்திரம் பதினாயிரம் பேர் இருக்கும். இங்கிலீஷ் படிப்பையே தாரகமாக நம்பி மூடத் தாய் தந்தை கள் தங்கள் வயிற்றைச் சுருக்கி, வாயைச் சுருக்கிச் சொல்ல முடியாத கஷ்டங்கள் பட்டு பிள்ளை களைப் பாடசாலைகளுக்குப் போக்குகிறார்கள். எவ்வளவு கஷ்டப்பட்டாலும் பல பிள்ளைகள் தவறுவது நிச்சயம். நாளுக்கு நாள் அன்னியன் தனது படிப்புக்குக் கூலியை அதிகப்படுத்துகிறான். அனாவசியமும் கஷ்டமுமான பாடங்களைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்டு நுழைக்கிறான். பிள்ளைகளின் பணச் செலவும் சிரமமும் அதிகப்படுகின்றன. எப்படி யேனும் படிப்பை நிறுத்தித் தீர்தல் அவசியமா கிறது.

மாயை யப்பா மாயை!

இந்தப் படிப்பினால் பிள்ளைகளுக்கு என்ன லாப முண்டாகிறது? யாதொரு தொழில் செய்வ தற்கும் இது ஸாதகமன்று. பரம்பரையான தொழிலையும் - இந்த மோசப் படிப்பை நம்பி - இளமையிலேயே கற்றுக்கொள்ளாமல் விட்டுவிடு கிறார்கள். பிழைப்புக்கு வழியில்லாமல் போகிறது. பலவிதத் துன்பங்களி லுழன்று மடிகிறார்கள். அப்படியானால் 'அநேகர் இந்தப் படிப்பிற்கு மக்களைப் போக்குவதின் காரணந்தா னென்ன?' என்று பலர் சங்கை கொள்ளலாம். விபினபாபு சொல்வதுபோல "மாயை! மாயை! மாயை!" மாயைதான் காரணம்.

வி. கிருஷ்ணசாமி அய்யர் எழுதுகின்றார் :

"ஸாமாந்ய கிராமத்து ஜனங்கள் தகுந்த இங்கிலிஷ் படித்து நல்ல ஸ்திதிக்கு வருவதில் இருக்கும் கஷ்டங்களைச் சரிவர அறியாமல் தூரத்துப் பச்சை யென்று மயங்கிப் பிந்திப் பணச்செலவே யொழியப் பிள்ளை பிழைப்ப தில்லை என்றுணர்ந்து துயரப்படுகிறார்கள். 'இவ்வளவுதான் சாத்தியம்; இதற்கு மேல் லாப மொன்றும் கிட்டாது' என்று முந்தியே அவர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களுக்குப் புலப்படுமானால், செலவுக்கும் பின் வருத்தத்திற்கும் உடன்படமாட்டார்கள். இந்த விஷயங்களை நன்றா யறிந்தவர்கள், 'இங்கிலிஷ் படிப்பில் இவ்வளவு பிரமை வேண்டாம். அது யாவருக்கும் பயன் தருகிற தில்லை. வேறு வழியில் முயற்சி யெடுத்துக் கொண்டால் பிழைப்புண்டாகும்' என்று எச்சரிக்கை செய்தால், அதைப் பத்தியமான வார்த்தையாகக் கொள்கிறவர் களில்லை'' என்கிறார்.

நமது ஜனங்கள் இவ் விஷயத்தில் செய்யத்தக்கது யாது?

''மனுஷ்ய ஜன்மம் எடுத்த ஒவ்வொருவரும் பால்ய சிட்சை அவசியம் பெறவேண்டியது தான். அதற்கு அதிகமாகப் படிப்பதானால் ஒவ்வொருவரும் தங்கள் ஸொத்துக்கும், புத்திக் கும் தகுந்த மார்க்கத்தில் புகுந்து வித்தையை அப்பியசிக்க வேண்டியதே தவிரக் கண்டபடி ஆடுகளுக் கொப்பாக ஒருவர் பின் மற்றொருவ ரார்கச் செல்வது கொஞ்சமேனும் சரியன்று.''

எல்லா ஜனங்களுக்கும் எழுத்து, படிப்பு, இலக்கமிடுதல் என்ற மூன்றும் அவசியமாகத் தெரிந் திருக்க வேண்டும். அதற்குமேல் சிறிது பூகோள சாஸ்திரம், சிறிது சுதேச சரித்திரம், சரீர சுகவழி என்பவையும் கற்றுக்கொள்ளுதல் நலம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதற்கப்பால் இந்த ஏழைத் தேசத்தார் தமது வாயில் வழங்குதற்கரிய பலவித விநோத நாமங்கள் கொண்ட ஆங்கிலேய ஆசிரியர்களின் நூல்களைப் பொருளுணராமல் கற்பதாகிய சேற்றுத் துறையிலே பதினாயிரம் கணக்காகப் போய்க் குதிப்பதுதான் பிழை. ஸ்ரீ அய்யர் சொல்லுகிற பின்வரும் வார்த்தைகளிலே ஒவ்வொன்றும் மணி மணியான வார்த்தைகள். [தன்மத்யே (இதற்கிடையே) ஒரு செய்தி : தாய்மொழியிலே இவ்வளவு நல்ல விஷயத்தைப்பற்றி எழுதவேண்டுமென்ற சற்புத்தி வி. கிருஷ்ணஸ்வாமி அய்யருக்கு வந்ததினால் உண்டான ஆனந்தம் நமக்கு எக்காலத்திலும் தீரமாட்டாது.]

ஸ்ரீ அய்யர் சொல்லுகின்றார் :

"பிழைப்பதற்கு ஆதாரமாக எவ்வளவோ தொழில்கள் உண்டு. அவரவருக்கு ஏற்றபடி இரண்டொரு கைத்தொழில்களை ஒவ்வொருவரும் அவசியம் கற்று வந்தால் ஒருவனுக்கு ஏன் பிழைப்புக்கு ஹானி வரும்? பழைய நாளில் இந்த தேசத்தில் வெகு ஜாதிகளில், தகப்பன் தொழிலைப் பிள்ளை கற்று வரவில்லையா? அதே விதமாய் இப்பொழுதும் கற்பதற்கு அட்டி என்ன? ஜாதிமுறை என்னும் அகங்காரத்தை விட்டு, புதிதாக இதரர் தொழிலைக் கற்பதற்கு ஆக்ஷேபம் ஏது? கை காலுள்ளவர்கள் அவைகளை எந்த விதத்திலாவது ஒரு தொழிலுக்குத் தயார் செய்வதில் அதிக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கஷ்டம் உண்டா? ஐரோப்பா, அமெரிக்கா முதலிய தேசங்களில் தேக சிரமப்பட்டு வேலை செய்து ஜீவனம் சம்பாதிப்பதில், எவரும் கௌரவ தாழ்ச்சி பாராட்டுகிறதில்லை. நமது தேசத்தில் மாத்திரம் வழக்கமென்றும், பரம்பரை தர்மமென்றும், முன்னோர்கள் சென்ற வழியென்றும், பலவித பந்தங்களுக்குள்ளாகி, இங்கிலீஷ் படிப்பினால் ஏதோ அளவில்லாத சுகம் பெறலாமென்று பிரமையடைந்து வழி தெரியாமல், பலர் கஷ்டப்படுகிறார்கள்.''

கைத்தொழிற் கல்வியே நமக்குப் பிராணாதாரம். நமது பால பாடசாலைகளிலே கைத்தொழில் வகுப்புகள் ஏற்படவேண்டும். இத்துடன் ஊர்தோறும் தனியான தொழிற் பாடசாலைகள் ஏற்படவேண்டும். இதற்கு கவர்ன்மெண்டார் முயற்சி பண்ணவேண்டுமென்பதாக ஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் சொல்லுகிறார். அப்படிச் சொல்வது அவருடைய இரத்தத்தோடு கலந்த தீங்கு. அதைப் பற்றி நாம் விசாரப்பட்டுப் பயனில்லை.

ஆங்கிலேய ஸர்க்காருக்கு நமது ஜனங்களின் கைத்தொழிலபிவிருத்தியிலே சிரத்தை ஒருபோதும் ஏற்பட மாட்டாது. அவர்களுக்கு மாஞ்செஸ்டர் கைத்தொழில் நீடித்து வாழவேண்டுமென்ற ஒரு நோக்கந்தானுண்டு. மாஞ்செஸ்டர் கைத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொழிலுக்கு விரோதம் செய்வோர்களை (போலீஸ் ரிப்போர்ட்டை வேதமாக வைத்துக்கொண்டு) தீபாந்தர மனுப்பாம லிருந்தால் அதுவே போதும். சர்க்காரை நம்பிக் கொண்டிருந்தால் யுக முடிவில் தான் கைத்தொழில் செழிப்படையும். ஜனங்கள் தாமே விழித்தெழுந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். இதைத் தவிர வேறு வழி கிடையாது.

"முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்"

(இந்தியா: 22.5.1909—பக்.3-4.)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதி : 5



சுதேசிய இயக்கம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

□

சுதேசிய முயற்சிகளிலே நம் நாட்டு மக்கள் அனைவரும் அக்கறை காட்டவேண்டும் என்பதும், அம் முயற்சி எவ்வாறெல்லாம் வெற்றி பெற்றது என்பதும் இப் பகுதியில் காணப்பெறும் வரலாற்றுச் செய்திகள் புலப்படுத்துகின்றன.

குறிப்பாக, வங்க மக்கள் கொண்டிருந்த சுதேசிய அபிமானத்தை விளக்கும் கட்டுரைகளும், சுதேசியப் பொருள்களுக்கு நாளுக்கு நாள் செல்வாக்கு பெருகி வந்ததை எடுத்துக்காட்டும் கட்டுரைகளும், சுதேசிக் கப்பல் முயற்சியை நம் முன்னோர் பெருமைக்கு ஏற்பச் செய்தல் அவசியம் என்பதை வலியுறுத்தும் கட்டுரையும் இப் பகுதியில் அடங்கி யுள்ளன.

□

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்டாம்பு வெண்டர்களுக்கு ஓர் வேண்டுகோள்

[பிரிட்டிஷ் அரசு தபால் சம்பந்தமான சீர்திருத்தங்கள் சிலவற்றைச் செய்து, ஸ்டாம்ப் வெண்டர்களுக்குக் கமிஷன் தருவதை நிறுத்திவிடத் தீர்மானித்தபோது, ஸ்டாம்ப் வெண்டர்கள் சுதேசீயப் பொருள்களை விற்பனை செய்து ஜீவனம் செய்யலாம் என்பதை இக் கட்டுரைச் செய்தி தெரிவிக்கிறது.]

தபால் சம்பந்தமான சில அனுகூலங்கள் செய்து கொடுத்துவிட்டு, அத்துடனேயே ஸ்டாம்பு வெண்டர்களுக்குக் கமிஷன் கிடையாதென்று கவர்ன்மெண்டார் தீர்மானம் செய்திருப்பது இடக் கையால் கொடுத்து வலக் கையால் பறித்துக் கொள்வதுபோல இருக்கின்றது.

இதனால் அனேக ஸ்டாம்பு வெண்டர்களுக்கு மிகுந்த நஷ்டமேற்படும். தபால் உத்தியோகஸ்தர்களுக்கு சிரமம் ஜாஸ்திப்படும் என்பதைப் பற்றி நமக்கு அதிக விசாரமில்லை. அது கவர்ன்மெண்டார் பாடு.

ஸ்டாம்ப் வெண்டர்களிலே ஷை ஸர்க்கார் ஏற்பாட்டினால் நஷ்டமடையக் கூடியவர்களுக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரு யோசனை இருக்கிறது. அதாவது அவர்கள் சுதேசீய சாமான்கள் விற்று ஜீவனம் செய்யலாம். சுதேசீய முயற்சிகளுக்கு நற்காலம் பிறந்திருக்கும் இத் தருணத்தில் ஸ்டாம்பு வெண்டர்கள் சுதேசீய முயற்சிகளிலே கருத்தைச் செலுத்தும் பக்ஷத்தில் அவர்கள் சுலபமாக ஜீவனம் புரியலாமென்று நமக்குத் தோன்றுகிறது.

(இந்தியா : 20.4.1907—பக்.2)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காசி மகாராஜா

[சுதேச மன்னர்களில், பெயரளவில் 'மகாராஜா' என்கிற பட்டம் பெற்ற காசி மகாராஜாவானவர் 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகையில் நமது நாட்டு மக்களின் சுதேசிய முயற்சிகளைக் கண்டனம் செய்து ஒரு கடிதம் எழுதப் போக, அதற்குத் தெளிவான விளக்கம் தரும் வகையில் அமைந்த பாரதியின் கட்டுரையே இங்கு இடம் பெற்றுள்ளது.]

பனாரஸ் மஹாராஜா 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில் நமது நாட்டுத் தேசாபிமானிகள் அபேக்ஷிக்கும் சீர்திருத்தங்களையும் பஹிஷ்கார முயற்சியையும் கண்டித்துப் பேசுகிறார். பாரத தேச ஜனங்களுக்கு ஸ்வராஜ்பம் கிடைக்குமானால் "சுதேச அரசர்கள்" என்று இப்போது கூறப்படும் மகாராஜாக்கள், ராஜாக்கள் முதலியவர்களுக்குப் பிரதிகூலமா யிருக்கு மென்பது இவருடைய கருத்து.

இதில் முதலாவது விஷய மென்னவென்றால், இவர் பெயருக்கு மட்டிலும் மகாராஜாவே யல்லாது திருவாங்கூர், மைசூர் அரசர்களைப்போல முடிமன்ன ரன்று. இவர் ஓர் சொற்ப ஜமீந்தார். பரம்பரையை உத்தேசித்து இவருக்கு மகாராஜா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற பட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே முடி மன்னர்களுடைய ஸௌகரியா ஸவுகரியங் களைப் பற்றி இவர் "லண்டன் டைம்ஸ்" பத்திரிகைக்கு எழுதப் புகுந்ததின் பொருள் தெளிவு படவில்லை. "சுதேச அரசர்"களிலே நாகரீகத் திலும், கல்வியிலும், அறிவிலும் முதற்பட்டவராகிய பரோடா மகாராஜா போன்றவர்கள் சுதேசியத்தில் அபிமான முடையவர்களா யிருக்க, இந்தக் காசி ராஜாவைப் போன்ற ஜமீந்தார்கள் துக்கமடைவது வினோதமா யிருக்கின்றது.

'வாரன் ஹேஸ்டிங்ஸ்'[1] என்ற முதல் கவர்னர் ஜெனரலை இந்தக் காசிராஜாவின் மூதாதையாகிய "செயித் ஸிங்" என்பவர் கொலை செய்துவிட நிச்சயித்துத் தக்க சூழ்ச்சிகள் செய்து வைத்திருந் தார். அப்போது காசியிலே கங்கைக் கரையிலுள்ள ஓர் கோட்டையில் இருந்த வாரன்ஹேஸ்டிங்ஸ் உயிர் பிழைத்து ஓடப் பட்ட பாடு தெய்வமறிந்து போய்விட்டது. அதன் பிறகுதான் கம்பெனியார் காசி மகாராஜாவின் அதிகாரங்களையும், உடைமை களையும் பிடுங்கிக் கொண்டு ஓர் சிறிய ஜமீந்தாராக்கி வைத்துவிட்டார்கள். அப்பொழுது இந்த ராஜ வமிசத்தாரின்மீது பிரிடிஷ் கவர்ன் மெண்டார் இழந்துவிட்ட நம்பிக்கையை இவர் இப்போது முகஸ்துதியால் மீண்டும் பெற்று விடலா மென்று நினைப்பதாகத் தோன்றுகிறது.

பிரான்ஸ் முதலிய நாகரீக தேசங்களிலே முற்காலத்தில் ஜமீந்தார்கள் முதலிய பிரபுக்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொது ஜனங்களின் அபிவிருத்தியை எதிர்க்க முயன்றார்கள். அவர்களுக்கான கதியே நமது நாட்டில் சீர்திருத்தங்களை எதிர்க்கப் பிரயத்தனப் படும் பிரபுக்களுக்கும் ஆகும்.

தண்ணீரில் முழுகிச் சாகப் போகிறவன் துரும்பைத் துணையென்று பிடிப்பதுபோல பிரிடிஷ் உத்தியோகஸ்தர்கள் இந்தப் பிரபுக்களை ஓர் பலமான துணையென்று நம்பி, இவர்களுக்கு ஹிதஞ் செய்து, இவர்களுடைய தயவைச் சம்பாதித்துக்கொண்டு, பொது ஜனங்களை அமுக்கி விடலாமென்று உத்தேசிக்கிறார்கள். இது நிற்க.

பஹிஷ்காரத்திற்கு விரோதமாகக் காசி ராஜா சொல்லும் விவகாரம் மிக வேடிக்கையாக இருக்கிறது. "அன்னிய தேசத்துச் சாமான்களை நாம் விலக்கி வைத்தால், நமது தேசத்துச் சாமான்களை அன்னிய தேசத்தார் விலக்கி வைப்பார்கள். அப்போது நமது ஏற்றுமதி வியாபாரத்துக்கு மிகவும் இடைஞ்ச லுண்டாகும்" என்று இந்த வித்வான் வருத்த மடைகிறார். ஐயோ, போகட்டும்! நமது ஏற்றுமதி வியாபார விஷயத்தில் இவரைப் போன்ற தயவு யார் பாராட்டப் போகிறார்கள்?

இங்கிலாந்து தேசத்தார் இந்த நாட்டிலிருந்து விளைபொருள்கள் தருவிக்க வேண்டாமென்று நிச்சயித்து விடப்போகிறார்களே யென்று இந்த ராஜா வருத்த மடைகிறாரா? அப்படி நிறுத்தி வைத்துவிட்டால் மறுநாட் காலையில் அவர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களுடைய தொழிற்சாலைகளை யெல்லாம் அடைத்து வைக்க வேண்டியதுதானே? பிறகு மண்ணையா தின்பார்கள்? இந்தியாவிலிருந்து விளைபொருள்கள் ஏற்றுமதியாகா விட்டால் அதில் இந்தியாவுக்கு நஷ்டம் கிடையாது. அன்னிய தேசங்களுக்கே நஷ்டம். ஆனால், செவிடர்களின் காதிலே சங்கை வைத்து ஊதுவதிலே என்ன பயன் இருக்கிறது?

(இந்தியா: 7.11.1908 — பக். 4)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. வாரன் ஹேஸ்டிங்ஸ்:

இவர் கல்கத்தா கவர்னராக 1772இல் நியமிக்கப் பட்டார்; பின்பு ஒழுங்குமுறைச் சட்டத்தால் கவர்னர்-ஜெனரல் ஆனார். அதன்முன் இவர் பதினான்கு ஆண்டுக் காலம் குமாஸ்தாவாகப் பணிபுரிந்தவர். தம் சுயமுயற்சியால் முன்னுக்கு வந்தவர்.

இவர் தம்முடைய ஆட்சிக் காலத்தில் நிர்வாகத் துறையில் பற்பல சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். கிளைவால் ஏற்படுத்தப்பட்ட "இரட்டையாட்சி" முறையை ஒழித்தார்.

இவர் மேற்கொண்ட சில அடாத செயல்களால் இந்திய சுதேச மன்னர்கள் இவரை வெறுத்தனர்.

பதவி விலகியதும் இவர் மீது பல இலஞ்சப் புகார்கள் கூறப்பட்டன. வழக்கின் இறுதியில் இவர் குற்றவாளி யல்லர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வங்காளிகளின் சுவதேசிய அபிமானம்

[கல்கத்தா நகரில் கல்வி கற்காமல் இருந்து, கூலி வேலை செய்பவர்களுக்குக் கல்வியறிவு புகட்டுவதற்காக ஜோதிந்திர நாத் பானர்ஜி என்பவர் ஓர் இரவுப் பாடசாலையை ஏற்படுத்தினார். அப் பாடசாலையில் புதிதாக எழுத்தறிவு பெறுகிறவர்களுக்குச் சுதேசியத்தில் பற்றுக் கொள்ளும்படிக்கும் கற்பித்தார்கள்.

மற்றும், அங்கே படிப்புச் சொல்லிக் கொடுக்கிறவர்களுக்குச் சம்பளம் தரப்படவில்லை: படிக்க வருகிறவர்களிடமும் தொகை வசூலிக்கப்படவில்லை.

இந்தக் கைம்மாறு கருதாத ஏற்பாடு சிறந்த ஏற்பாடு என்பதைக் கண்ட பாரதியும், தமிழ்நாட்டிலேயும் அத்தகைய இலவசக் கல்வி ஏற்பாட்டைச் செய்யும்படி வேண்டுகோள் விடுக்கிறார். நமது கடமையை வலியுறுத்தும் மிகச் சிறந்த கட்டுரைகளில் இதுவும் ஒன்று.]

கல்வி யறிவில்லாத சாதாரண ஜனங்களுக்குச் சுதேசியத்தைப்பற்றி எத்தனையோ உபதேசங்கள் செய்தபோதிலும் ஒன்றும் தெரியாம லிருப்பதற்குக் காரணம், அவர்கள் மடமைதான் என்றறிருந்த வங்காளி வித்துவான்கள், அறிவிலிகளாக இருக்கும் தமது கூலிவேலை செய்து ஜீவிக்கும் சஹோதரர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களுக்குக் கல்வியறிவு புகட்டுமாறு கல்கத்தாவில் இராப்பள்ளிக்கூடம் ஒன்று ஸ்தாபித்திருக்கிறார்கள். இது இராத்திரி 7½ மணி முதல் 9½ மணி வரை நடக்கிறது. எம். ஏ., பரீட்சை பாஸ் பண்ணினவர்களும், பி.ஏ. பரீட்சை பாஸ் பண்ணினவர்களும் இங்கு வந்து இரவில் சிரமப்பட்டு அதிக ஊக்கத்துடன் கற்றுக் கொடுக்கிறார்கள். கற்றுக் கொடுப்போருக்கும் சம்பளம் கிடையாது; கற்றுக் கொள்பவரிடத்திலிருந்தும் சம்பளம் வாங்குவதில்லை.

இந்த இராப்பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தினவர் ஸ்ரீமான் ஜோதிந்திர நாத் பானர்ஜி, எம்.ஏ. பி.எல். இவர் ரிப்பன் காலேஜில் பண்டிதர். இப்படிக் கல்வி கற்றுக் கொடுப்பதால் அவர்கள் ஹிருதயத்தில் சுதேசியம் நன்றாய் வேரூன்றித் தழைக்கும்.

ஆகையால் இச் சென்னை மாஹாணத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள கல்விமான்களையும், செல்வவான்களையும் நாம் கேட்டுக்கொள்வது அந்தந்தக் கிராமத்தில் பகற் காலத்தில் கல்வி கற்க நேரமில்லாமல் வயிற்றுப் பிழைப்புக்காக நெற்றி வேர்வை நிலத்தில் சிந்தப் பாடுபடும் கல்வியறிவில்லாத பாமர சஹோதரர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்க, வங்காளத்தில் தேசாபிமானிகள் செய்தவாறே இராப்பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த வேண்டுமென்பதுதான்.

இந்த வித்யா தர்மத்தைச் செய்ய ஒவ்வொரு கிராமங்களிலும் தொன்று தொட்டுக் குடியிருந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரும் கல்விமான்களுக்கும் செல்வவான்களுக்குமே சாத்தியமான விஷயம். இது உண்மை. இது நமது மனப்பூர்த்தியான ஐயமற்ற நம்பிக்கை. கிராம ஜனங்களுக்குத் தங்கள் கிராமத்தில் வம்ச பாரம்பரையாக இருந்து வரும் வித்வானிடத்தில் இருக்கும் மதிப்பும் அன்பும் அளவற்றன. மேலும், இப் பூர்வீகவாசிகளாகிய வித்வான்களுக்கு மாத்திரமே கிராமத்தாருடைய குணாதிசயங்கள் நன்றாகத் தெரியும். இன்னும் ஸ்வ ஜாதியக் கல்வி யபிவிர்த்திக்கும் ஸ்வதேசாபி விர்த்திக்கும் ஆங்கில பாஷையாகிய இந்த அன்னிய பாஷை இன்றியமை யாத தன்று. நமது தாய் பாஷைகளாகிய ஸம்ஸ்கிருதம், தமிழ் முதலிய பாஷைகளில் வித்வான்களாக இருப்பவர்களே சிறந்தவர்கள். கிராமவாசிகளாகிய செல்வர்களுக்குத் தாங்கள் தாங்கள் வசிக்கும் கிராமத்தில் அளவற்ற செல்வாக் குண்டென்பது நமக்கு நிச்சயமாகத் தெரியும்.

கிராமவாசிக ளாகிய செல்வர்களே, வித்வான்களே, ''நல்லறிவு எல்லாச் சிறப்பும் தரும்;'' கல்வி யறிவில்லாமல் மனம் இருளடைந்து இருக்கும் சஹோதரர்களாகிய கூலிவேலை செய்து பிழைக் கும் சாதாரண ஜனங்களுக்குக் கல்வி யறிவு உண்டாக்க வேண்டியது உங்களுடைய கடமை யாகும்.

(இந்தியா : 28.11.1908—பக்.9)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுதேசீயத்தின் வெற்றி

[அன்னிய தேசத் துணிகளை வாங்கி வியாபாரம் செய்தவர்கள் அடங்கிய சங்கம் ஒன்று பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டு இருந்தது.

சுதேசியக் கிளர்ச்சியின் பயனாய், அன்னிய தேசத் துணிகளை வாங்குவாரில்லாமல் வியாபாரம் க்ஷீண தசையை யடைந்த நிலையில், அவ் வியாபாரிகள் யாவரும் கூடி, பிரிட்டிஷ் இந்தியா வைஸ்ராய்க்குத் தங்கள் வியாபார நிலைமைகளை விளக்கி ஓர் விண்ணப்பம் அனுப்பினர்.

அதன் முக்கியத்துவத்தைச் சொல்லி, நமது நாட்டு வியாபாரிகளுக்குப் புத்திமதி வழங்கும் முறையில் அமைந்த கட்டுரை இதுவாகும்.]

பம்பாயிலே 'துணி வியாபாரிகளின் சங்கம்' என்றதோர் சபை இருக்கிறது. அமெரிக்கா, ஐரோப்பா முதலிய இடங்களிலிருந்து (முக்கியமாக மாஞ்செஸ்டர், லாங்கஷைர், கிளாஸ்கோ என்ற பிரதேசங்களிலிருந்து) துணிகள் தருவித்து வியாபாரம் செய்யும் இந்திய வர்த்தகர்கள் தங்களுடைய பொது நலத்திற்குரிய காரியங்களைக் கவனித்து வரும் பொருட்டாக அந்தச் சங்கம் ஏற்பட்டு நடந்து வருகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அந்தச் சபையார் சில தினங்களின் முன்பு கூடித் தீர்மானம் செய்து பிரிடிஷ் இந்தியா வைஸிராய்க்கு ஓர் விண்ணப்பத்தில் அவர்கள் கூறுவதின் ஸாராம்சம் பின்வருமாறு :

"எங்களால் தடுக்க முடியாத பல காரணங்களை முன்னிட்டு, சென்ற இரண்டு வருஷ காலமாக அன்னிய நாடுகளிலிருந்து தருவித்து விற்கப்படும் துணிகளின் வியாபாரம் மிகவும் சீர்குலைந்துபோய், நஷ்டத்திற்கு ஹேதுவா யிருக்கிறது.

சென்ற இரண்டு வருஷங்களாக எங்களுக்குப் பெருங் கஷ்ட காலம். இவ் வருஷத்தில், எங்கள் மொத்த நஷ்டத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால் அது அளவிற் கடங்காததா யிருக்கும். அன்னிய தேச வஸ்திரங்கள் நாளுக்கு நாள் விலை குறைந்து கொண்டே போகும் விபத்தைத் தடுத்து, எங்கள் ஜீவனத்திற்கு நாசம் வராமலிருக்கும்படி, நாங்கள் எவ்வளவு தூரம் முயற்சிகள் செய்து பார்த்தும் எங்களுடைய முயற்சி கைகூடி வரவில்லை. நாங்கள் தருவித்து வைத்த வஸ்திரங்களெல்லாம் வாங்குவாரில்லாமல் மூட்டை மூட்டையாகக் குவிந்து போய்க் கிடக்கின்றன. பிரின்ஸ், விக்டோரியா துறைமுகங்களிலும், மற்றபடி ஊருக்கிடையிலு முள்ள எல்லாக் கடைகளிலேயும், அன்னிய வஸ்திர மூட்டைகள் வாங்குவாரில்லாமல் நிறைந்து போய்க் கிடக்கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அந்த வஸ்திரங்களுக்குத் தேவையே இல்லாமல் போய்விட்டது. ஆகையால் இவ் வருஷம் எங்களுக்கு வருமான வரி விதியாமல் வஜா செய்து காப்பாற்றவேண்டும்.''

இதுவே ஷை சபையாரின் விண்ணப்பம். இதைப் படித்துப் பார்த்த பிறகேனும் பிரிடிஷ் இந்தியாவில் இங்கிலிஷ் துணிகள் வாங்கி வியாபாரம் செய்யும், தேச நலமறியாத மனிதர்களுக்குப் புத்தி வருமென்று நம்புகிறோம். ஆங்கிலேய கவர்ன்மெண்டாரிடம் பம்பாயிலுள்ள அன்னிய தேசத் துணி வியாபாரிகள் 'ஐயோ உங்களை நம்பி இப்படிக் கெட்டுப் போனோமே' என்று சொல்லி நஷ்ட ஈடு (Damages) கேட்டிருந்தால் ரஸமா யிருந்திருக்கும். வியாபாரிகளே, எச்சரிக்கை.

(இந்தியா : 12.12.1908 — பக். 6)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்ணுடையோ ரெல்லாம் பாருங்கள்; காதுடையோ ரெல்லாம் கேளுங்கள்

[சுதேசி இயக்கத்தால் இந்திய நாட்டுக் கைத் தொழில் வெற்றிப் பாதையில் பீடு நடை போட்டுச் சென்றதை இக் கட்டுரைச் செய்தி நமக்குப் புலப்படுத்து கின்றது.

'லண்டன் டைம்ஸ்' பத்திரிகை எடுத்துக்காட்டிய யதார்த்த நிலையைப் பாரதி பெருமிதத்துடன் வெளியிட்டு, சுதேசியத் தேரை ஊக்கத்துடன் வடம் பிடித்து இழுக்கும்படி நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தமை சிந்திக்கத்தக்கது.]

1908-ம் வருஷத்தில் உலகத்து வர்த்தகத்தைப் பற்றி 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகை 40 பத்திகள் கொண்ட ஓர் பெரிய உபந்யாச மெழுதியிருக்கிறது. அதனிடையே பின்வரும் விஷயம் குறிப்பிடப்பட் டிருக்கிறது :

''லாங்கஷைரில் (மாஞ்செஸ்டர் ஜில்லா வில்) வியாபாரம் வெகு மந்தமாய்ப் போய் விட்டது. 540 யந்திர சாலைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. 160 யந்திர சாலை களிலேதான் வேலை நடந்தது. 50,000,000

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பவுன் விடுமுதல் பலன் தராமல் உறங்கிக் கொண்டிருந்தது. 4 லக்ஷம் தொழிலாளிகளுக்கு மேல் வேலை யற்றிருந்தார்கள். தொழிற் கூலியில் மட்டும் வார மொன்றுக்குச் சராசரி 3,30,000 பவுன் நஷ்டமாயிற்று. (லாங்கஷைரின் கதி இவ்வாறிருக்கப் பம்பாய் நெசவு யந்திர சாலைகளின் ஸ்திதியைக் கவனிப்போம்.)

1904-ம் வருஷத்திலே பம்பாயில் மிகுந்த கஷ்ட முண்டாயிற்று. சில யந்திர சாலைகள் சொற்ப நேரம் மட்டும் வேலை செய்து நிறுத்திக்கொண்டு வந்தன. வேறு சில யந்திர சாலைகள் ஏலத்துக்குப் போகக் கூடிய நிலைக்கு வந்துவிட்டன. இந்தச் சமயத்தில் சுதேசீயம் - அதாவது அன்னிய வஸ்து வர்ஜனம் - தொடங்கிற்று. அது முதல் பம்பாய் யந்திர சாலைகள் ஒய்வொழிச்ச லில்லாமல் வேலை செய்துகொண்டு வருகின்றன. 1908-ம் வருஷத்தில் தேவைக்குத் தக்கபடி ஷை யந்திர சாலைகள் சரக்குத் தயார் செய்து கொடுக்க முடியாமல் போய்விட்டது.

சுதேசித் துணிகளுக்கு நாட்டிலே அத்தனை தூரம் ஆவல் அதிகரித்து விட்டது. 1904-ம் வருஷத்திலே பம்பாய் யந்திர சாலைகளை விழுங்கிவிடத் தெரிந்த ஆபத்திலிருந்து அவற்றைக் காப்பாற்றி 1908-ம் வருஷத்திலே அவற்றுக்கு இவ்வளவு க்ஷேமத்தைக் கொடுத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தது சுதேசீய (வர்ஜன) முயற்சியே யாகும். உலக முழுதிலும், துணிக் கைத்தொழில் இறக்கமடைந்து போயிருக்கும் சமயத்தில் பம்பாய் யந்திர சாலைகள் மட்டும் வெகு சுக தசையிலே யிருக்கின்றன. உலகத்துத் துணிக் கைத்தொழிலின் இறக்கத்தால் பம்பாயில் பங்கு மார்க்கெட், தொழிற் கூலி, முதலாளி களின் லாபம் - இவற்றிற்கு யாதொரு குறை வும் ஏற்படாமல் சுதேசீயம் செய்துவிட்டது. வெளிநாடுகளில் துணி வியாபாரத்தின் இறக்கத் தைப் பம்பாய் யந்திரசாலைத் தலைவர்கள் சிறிதேனும் லக்ஷ்யம் செய்யாமல், தமது தறி களையும், நாழிகளையும் அதிகப்படுத்திக் கொண்டு சுகமாக லாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள், சுதேசீயத்தின் ஆசீர்வாதத்தால்.''

மேற்கண்ட விஷயம் நாம் சொல்வ தன்று. சுதேசீய முயற்சியை வயிற்றெரிச்சலோடு பார்க்கும் லண்டன் 'டைம்ஸ்' என்ற ஆங்கிலேயப் பத்திரிகை சொல்லி யிருக்கிறது.

சுதேசீயத் தேரை மிகக் கஷ்டத்துடன் இழுத்துச் செல்லும் தீர ஜனங்களே! ஈசன் உங்கள் மீது அருள் செய்து விட்டார். இனி வடத்தைத் தளர விடாதேயுங்கள். இழுங்கள்! இழுங்கள்! இழுங்கள்!!

(இந்தியா : 27.2 1909 — பக். 4)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்வதேசிய (வர்ஜன) இயக்கம்

[சுதேசி இயக்கத்தினால் நாடு பயன்பெற்று, கைத்தொழில் அபிவிருத்தி யுற்றதை இக் கட்டுரை தெளிவுபடுத்துகிறது

யார் இகழ்ந்து பேசினாலும், உண்மையை மறைக்க முடியாது என்பதையும் இக் கட்டுரைச் செய்தியால் அறிந்து கொள்ளலாம்.]

இந்தியாவில் ஸ்வதேசிய (வர்ஜன) இயக்கத்தினால் இந்தியர்களுக்கு அநேக லாபமுண்டாயிருக்கிறது. இவ் வியக்கத்தின் பலனாக இங்கிலாந்தில் அநேக துணிநெய்யும் சாலைகள் மூடப்பட்டனவென்று மான்செஸ்டர் வியாபார சங்கத்தின் அக்கிராஸனர் கூறி யிருக்கிறார். பிஷப் ஹென்ரி, ஸி.பாடர், டாக்டர் ஸிகத்பர்ட் ஹால் முதலானவர்கள் ஸ்வதேசிய (வர்ஜன) இயக்கத்தைப் புகழ்ந்தும், ஆங்கிலேயர்கள் இந்தியாவை நாசஞ் செய்து வருவதை இகழ்ந்தும் நியூயார்க்கு பட்டணத்தில் பிரஸங்கம் செய்திருக்கிறார்கள்.

இப்படி யிருக்க, நம்முடைய ஜனங்களிலேயே அநேகர் ஸ்வதேசிய (வர்ஜன) இயக்கத்தை இகழ்ந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பேசுகிறார்கள். யார் என்ன சொன்னபோதிலும், இந்தியாவில் நெசவுத் தொழில் அபிவிருத்தியானபடியால் மான்செஸ்டரில் வேலைக்காரர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் விடுமுறைக்குப் பதிலாக 3 நாள் விடுமுறையாய் விட்டது. இதனாலேயே மான்செஸ்டர் வியாபாரம் அதிகரிக்கிறதோ அல்லது ஸ்வதேசியம் அதிகரிக்கிறதோ வென்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

(இந்தியா : 10.7.1909—பக் 2)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒத்தால் வாழலாம்

['ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்கிற உயர்ந்த தத்துவமும், 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்கிற பெருநோக்கமும் இந்தக் கட்டுரையில் விளக்கம் பெறுகின்றன.

சுதேசிய முயற்சிகளுக்குப் பாரத நாட்டுச் செல்வந்தர்கள் ஆதரவு தருதல் வேண்டும் எனப் பேசும் இக் கட்டுரையில், சிதம்பரம் பிள்ளை அவர்களின் சுதேசியக் கப்பல் முயற்சியும் சிறப்பிக்கப்படுகின்றது.]

முன்னொரு காலத்தில் சர்வ லோகத்தாரும் உஜ்ஜீவிக்கும்வண்ணம் திருப்பாற் கடலைக் கடைந்து அமுத முதலிய உலகத்திற்கு வேண்டிய ஐஸ்வரியங்கள் யாவும் ஒத்துழைத்து வரப்பெற்ற பரம சந்ததியைச் சேர்ந்த இந்திய பிராதாக்களே, நீவிர் யாவரும் ஒன்றுசேர்ந்து சின்னாளாய் கொஞ்சம் அநாதரவடைந்துள்ள சுதேச நீராவிக் கப்பலைப் பற்றியேன் கவனிக்கக் கூடாது? அதைப் பற்றிக் கவனித்தால் நம்முடைய முன் சந்ததி யாருக்கும் பின்வருபவருக்கும் எவ்வளவோ இயம்ப முடியாத புகழும் இன்பமு மளிக்கு மென்பதில் எள்ளளவும் தடையில்லை யென்பதை யறியாதார் யாருமில்லை. அப்படிக்கிருந்தும் கைக்கெட்டிய அமிர்தத்தை வாய்க்குள் வைக்க வருத்தப் படுபவரு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முண்டா? நமது பிராதாவாகிய ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளை[1] முதலிய சிலருக்கிருக்கும் ஊக்கம் ஏன் ஏனையோருக் கிருக்கக் கூடாது?

ஓர் பெருங் காரியத்தை யாவரும் ஒன்றுசேர்ந்து செய்தாலல்லது அது முடியா தென்பதை நாம் யாவரும் எளிதிலறிய வேண்டியே நம் முன்னோர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் உற்சவங்களும் அவ்வுற்சவத்தில் பல்லாயிரவர் சேர்ந்து ஓர் பெரிய தேரை இழுப்பதென்றும் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட தேரானது ஒருவரிருவரால் இழுத்து நிலை சேர்க்க முடியுமா? அதற்கு எவ்வளவு பெரிய மனிதர்கள், மடாதிபதிகள், ஏழை ஜனங்கள் இவர்களின் உதவி வேண்டி யிருக்கிறது. மேற் சொன்னவர்களில் ஒருவரின் உதவி குறைந்தால் அத் தேர் எப்படி நிலைக்கு வாராதோ அதுபோலவே தான் ஒவ்வொரு காரியமும் முடியும். நம்முடைய தேசத்து மேற்கத்தியர் ஒவ்வொரு கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து சேர்ந்து வந்து எவ்வளவு துகைகளை எவ்வளவிதமாகவோ கொண்டு போகிறதைப் பார்க்கிறோ மல்லவா? பார்த்தும் பராமுகமா யிருப்பது பரிதாப மல்லவா? முதுகெலும்பைத் தந்த முனீஸ்வரனும், சதையை யறுத்துத் தந்த சக்கரவர்த்தியு மிருந்த பெருமை படைத்த சந்ததியைச் சேர்ந்த நாம் சொற்ப காரியமான சுதேசிக் கப்பலை முன்னுக்கு வரச் செய்யாவிடில் அந்தப் பெருமை படைத்த சந்ததியில் பிறந்தோ ராவோமா? வட்டிக்குக் கொடுத்து வழக்காடித்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தோற்பதிலும் பாங்கியில் போட்டுப் பணமிழப்பதிலும் இச் சுதேசக் கப்பலை முன்னுக்கிழுக்கலாகாதா? நமது வடநாட்டுச் சகோதரர்கள் செய்யு முயற்சியில் ஆயிரத்தி லொன்றேனும் நாம் செய்கிறோமா? இவ்வளவு நாம் சொல்வதும் பணத்தைப் பாழாக்க வேணும் அல்லது இனாமாகக் கொடுத்துவிட வேணுமென்றேனு மல்ல. பின்பென்னவெனில், தக்க பொருளாளிகளெல்லாம் தங்கள் அந்தஸ்துக்குத் தக்கபடி பங்கு சேர்ந்து முயற்சிக்க வேணுமென்பதே எமது கருத்து. ஆகையால் பாரத புத்திரர்களொவ்வொருவரும் "முயற்சி திருவினை யாக்கும்" என்ற முதியோர் மொழிப்படி தம்மாலியன்ற அளவு பங்குகள் வாங்கிப் பயனடைய வேண்டுவ தவசியம். தவறாதீர்கள். இதுவே நல்ல தருணம். இதுவே நம் தாய்த் திருநாட்டிற்குச் செய்யுங் கைங்கரியங்களி லொன்று. வந்தே மாதரம்.

(இந்தியா : 17.7. 1909—பக்.3)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. சிதம்பரம் பிள்ளை (1872-1936):

தென்னாட்டுத் திலகர் என்றும், கப்பலோட்டிய தமிழர் என்றும் போற்றப்படும் ஒப்பிலாத தேச பக்தர். வக்கீல் தொழிலில் வருவாய் ஈட்டியவர்; தமிழ் மறவாத சைவ சமய ஆராய்ச்சியாளர்; ஆங்கிலேயக் கம்பெனிக்கு, எதிராகச் சுதேசிக் கப்பல் ஓட்டிய தமிழ் வீரர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியால் 'தம்பி' என அன்புடன் அழைக்கப்பட்ட பரலி. சு. நெல்லையப்பர் தாம் எழுதிய நூலில்,

"........சிதம்பரம் பிள்ளை தேச பக்தியில் சிறந்தவர்; தியாக புத்தியில் உயர்ந்தவர். பால கங்காதர திலகர், லாலா லஜபதி ராய், அஸ்வினி குமார தத்தர் முதலிய உத்தம தேச பக்தர்கள் திருக்கூட்டத்தில் அவர் சேர்தற்கு உரியவர். அவர் தமிழ் அன்பர்; தமிழ் அறிஞர். தமிழ் வளர்ப்பை அவர் தமது வாழ்நாளில் பெருங் கடமையாகக் கொண்டிருந்தார். சுதேசி யென்றும், சுயராஜ்யம் என்றும் சொல்லவும் மக்கள் அஞ்சி யிருந்த தென்னாட்டில், வந்தே மாதரம் என்று வாயால் சொல்லவும் அஞ்சி யிருந்த தமிழ்நாட்டில் சுதேசி முழக்கமும் வந்தே மாதர முழக்கமும் செய்து சுயராஜ்ய உணர்ச்சியை எழுப்பிய பெருந் தலைவர்"

(வ.உ. சிதம்பரம் பிள்ளை - சரித்திரம்
(1948)—பக் : 26; 28)

என்று எழுதி யுள்ளார்.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பஹிஷ்கார தினம்

[வங்கப் பிரிவினையை முன்னிட்டு 1905 ஆகஸ்டு மாதம் 7ஆம் நாள் கல்கத்தாவில் முதலாவதாகச் சுதேசிய விரதம் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி தினத்தில்தான் இந்தியாவில் புதிய உணர்ச்சி பிறந்தது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், 1905 ஆகஸ்டு 7ஆம் நாள்தான் 'Boycott'—'அதாவது அன்னிய சம்பந்தம் விலக்கு' (பஹிஷ்காரம்) என்கிற மகா மந்திரச் சொல் தோன்றியது.

1906-1907ஆம் ஆண்டுகளின் காலப் பகுதியில் சுதேசீயக் கிளர்ச்சிகள் நாட்டில் உச்ச கட்டத்தை யடைந்தன.

சுதேசி இயக்கத்திற்குக் களம் அமைத்துக் கொடுத்த கல்கத்தா நகரமே ஆண்டுதோறும் பகிஷ்கார தினத்தை மகோத்சவ தினமாகச் சிறப்புறக் கொண்டாடுவதிலும் முன்னணியில் இருந்தது.

1909-ஆம் ஆண்டைய ஆகஸ்டு கொண்டாட்டம் கொண்டாடப்படுவதற்கான கூட்ட ஏற்பாடுகளை இக் கட்டுரை விவரிக்கின்றது.]

இத் தினத்தை இவ் வருஷம் ஆகஸ்டு மீ 7 உ சனிக்கிழமை யன்று பஹிஷ்கார மகோத்சவ தின மாகக் கொண்டாடப் போகிறார்கள். அதற்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டு ஓர் பொதுச் சபை கல்கத்தாவில் நடந்தேறிற்றென்பது நேயர்கள் யாவருக்கும் தெரிந்த விஷயம். அதில் ஸ்ரீமான் அரவிந்த கோஷ்[1] செய்த உபந்நியாசத்தின் மொழிபெயர்ப்பை இப் பத்திரிகையின் மற்றொரு பக்கத்தில் வரைந்திருக்கின்றோம்.

ஸ்ரீ அரவிந்த கோஷானவர் தன்னிடத்தில் ஓர் துர்க்குண முண்டென்று ஒப்புக்கொள்ளுகிறார். அந்த துர்க்குணம் இதர மாகாணங்களிலும் சிலருக்காவது இருக்கும் பக்ஷத்தில் நம் அபீஷ்டங்கள் நிறைவேறுவதற்கு நாம் வெகுநாள் காத்திருக்க வேண்டாம். நம் தென்னிந்தியாவில் சிலர் ஜனத் தலைவர்க ளென்று சொல்லிக்கொண்டு உண்மையான பொது நன்மையைச் செய்தால் போலீஸ் அதிகாரிகளும் கவர்ன்மெண்டாரும் என்ன செய்வார்களோ என்று திகிலடைந்து கிடப்பதை நாம் அனேகம் தடவைகளில் பார்த்திருக்கிறோம்.

பம்பாயிலும் கோகலே என்பவர் கவர்ன்மெண்டாரின் தயவைச் சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசையுள்ளவராய் மகா பாதகத்திற்கும் பயப்படாமல் அரவிந்த கோஷ் முதலிய சுதேச சகோதரர்களைத் தேசத் துரோகிக ளென்றும், தேசாபிவிருத்திக்குத் தடை செய்கிறார்க ளென்றும், பயித்தியக்காரர்க ளென்றும் மனம் போனபடியெல்லாம் பிதற்றுகிறதைக் கண்டிருக்கிறோம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவர்களுக்குக் கடவுள் கருணைபுரிந்து ஸ்ரீமான் அரவிந்தரின் துர்க்குணத்தில் சிறிதேனும் கொடுப் பாராகில் இவர்கள் இம் மாதிரி நடந்துகொள்ள மாட்டார்களென்று எல்லோருக்கும் விளங்கும்.

இது நிற்க. அத் துர்க்குணம் யாதென்று சொல்லிக் கொள்ளுகிறார். போலீஸார் அவரைப் பொதுச் சபைகளில் பிரசங்கிக்கக் கூடாதென்றும், பத்திரிகைகளுக்கு எழுதக் கூடாதென்றும், ஜெயி லில் தாங்கள் செய்யும் விஷயங்களை வெளியிடக் கூடாதென்றும், அப்படிச் செய்தால் வெளியேற்றி விடுவோமென்றும், ஆபத்துகளை விளைவிப்போம் என்றும் குழந்தைகளுக்குப் பூச்சி காட்டுவதுபோல் பயமுறுத்துகிறார்கள். இதற்கெல்லாம் தான் பயப் படும் ஆசாமி யல்லவென்று கமர்தோலி தோட்டத் தில் செய்த உபன்னியாசத்தில் நன்றாய் விளக்கிக் காட்டி யிருக்கிறார்.

இவரைப் போன்ற அனேகர் அன்று உபன்னி - யாசம் செய்தவர்கள் ஒவ்வொருவரும் பயமென்பது தெரியாதவர்களைப் போல ஜனங்களைத் தாய் நாட்டின் நன்மையின் பொருட்டு பஹிஷ்காரத்தைக் கைவிட வேண்டாமென்றும், இப்பொழுதுதான் நம் தொழிலாளிகள் சிறிது தலையெடுக்கிறார்கள் என்றும், நாம் மனவுறுதியுடனிருந்தால்தான் நமது அபீஷ்டங்கள் நிறைவேறு மென்றும் ஓயாது சொல்லி வருகிறார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லலித மோகன தாஸென்பவர் முக்கியமாய் "ஆங்கிலேயர்களின் வஸ்துக்களை சர்வ பிரகாரத் தாலும் வர்ஜனம் செய்ய வேண்டும்; லார்ட் கர்ஸன் நாள் முதற்கொண்டு நம்மவர்களில் பிரிவினையை உண்டாக்கும் பொருட்டு வங்காளத் தைத் துண்டித்தார். அப்பொழுது ஜனங்களிட்ட கூக்குரலை அதிகாரிகள் கவனிக்கவே யில்லை. இவ்வளவு அலக்ஷியத்தோ டிருக்கும் இவர்களின் தேச சாமானை வாங்குவதைக் காட்டிலும் இதர ஐரோப்பா தேச சாமான்களை வாங்குவது இவர் களுக்கு நம்மால் விதிக்கக்கூடிய சிக்ஷை; நமக்கு என்ன ஆபத்து வந்தாலும், இவ்வித வர்ஜனத்தைக் கைவிடாது செலுத்திவரவேண்டு"மென்றார்.

பிறகு காவ்விய தீர்த்தா வென்பவர் சென்ற வருஷம் நடந்தேறிய உற்சவத்தில் இல்லாத சிலர் இவ் வருடத்தில் வந்திருந்தார்க ளென்றும், இருந் தவர்களில் முக்கியமானவர்கள் வெளியேற்றப் பட்டும், இப்பொழுது இருப்பவர்களில் சிலர் வெளியேற்றப்படுவார்க ளென்றும், அவர்களிடத் திற்கு வேறு சிலர் வருவார்க ளென்றும், இப்படி வெளியேற்றப்படுவதும் வந்து சேருவதும் சர்வ சாதாரணமாய் நடக்குமாகையால் இதை யாரும் ஒரு பொருட்டாக நினைக்கக் கூடாதென்றும் தாய் நாட்டின் நன்மையைத் தேடுவதை மோக்ஷ சாதக மென்றும் அதற்கனுகுணமா யுள்ள பஹிஷ்காரத் தைக் கைவிடாது நடத்த வேண்டுமென்றும் சொல்லி முடித்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இம் மாதிரியாக மகான்கள் சேர்ந்து ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்று யெத்தனித்தால் அது நடந்தேறுவதில் யாதொரு சந்தேகமுமில்லை.

இத் தாய்நாட்டிற்கு ஓர் பெரும் வினையை உண்டாக்கிய இத் தினத்தை ஓர் கரிநாளாகக் கொண்டாடுவது வங்காள வாசிகளுக்கு மாத்திரமேயல்ல. இப் பாரதவாசிகளாகிய இந்து, மகம்மதிய, பார்ஸி, சுதேச கிருஸ்தவர்களாகிய நாமெல்லோரும் அத் தினத்தில் பிரதிக்ஞை செய்து கொண்ட அன்னிய தேச சாமான் விலக்கலை முதற் கடமையாகக் கொண்டு நமது ஆசாரத்தின்கீழ் யனுதினமும் அனுசரித்து வரவேண்டுமென்பது எமது பிரார்த்தனை.

(இந்தியா : 24.7.1909—பக். 3)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

வந்தே மாதர மந்திரமும், ஸ்வராஜ்யக் கொள்கையும் மனத்திடை ஆழப் பதித்திருந்த தேசபக்த தலைவர்கள் கல்கத்தாவில் பஹிஷ்கார தினத்தை 1909 ஆகஸ்டு 7ஆம் தேதி கொண்டாட வேண்டி, 11-7-1909இல் குமர்தோலித் தோட்டத்தில் ஏற்பாடு செய்திருந்தனர். அதில் அரவிந்தர் கலந்துகொண்டு உணர்ச்சி மிக்க சொற்பொழிவை ஆற்றினார்.

அரவிந்தர் ஆற்றிய சொற்பொழிவு இக் கட்டுரையில் 'மற்றொரு பக்கத்தில் வரைந்திருக்கிறோம்' என்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெரிவித்து இருப்பதால் வாசகர்களின் வசதிக்காகச் சொற்பொழிவின் முழு வடிவமும் 'இந்தியா' பத்திரிகையில் பிரசுரித்தவண்ணமாகத் தரப்பெற்றுள்ளது.

அரவிந்தரின் சொற்பொழிவு 'இந்தியா' பத்திரிகையில் 24-7-1909 (பக். 4-5), 31-7-1909 (பக். 4-5) ஆகிய இரு இதழ்களில் இடம் பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீமான் பாபு அரவிந்த கோஷின் உபந்நியாசம்

நான் இக் கூட்டத்திற்கு வர ஒத்துக்கொண்ட பொழுது உபன்னியாசம் செய்யப்போவதாக எண்ணவே யில்லை. வாஸ்தவத்தில் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்தவர்கள் என்னைச் சும்மா வந்திருக்கும்படியாகக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால், இங்கு வந்த பொழுது உபன்னியாசம் செய்யப் போகிறவர்களின் பெயர்களில் எனதும் சேர்க்கப்பட்டிருந்தது. மேலும் அக்கிராசனர் என்னைப் பேசும்படி சொல்வதை நான் ஓர் கட்டளையாகப் பாவித்து இப்பொழுது பேசப் புகன்றேன்.

பேசக்கூடா தென்பதற்கு இரண்டு காரணங்கள்

நான் பேச வேண்டா மென்றிருந்ததற்கு இரண்டு காரணங்க ளுண்டு. முதலாவது, என்னுடைய தேச பந்துக்களுக்குத் திரும்பவும் உபன்னியாசிக்கச் சுதந்திரம் கிடைத்த நாள் முதல் அனேக உபன்னியாசங்களைச் செய்து, சொல்லவேண்டிய விஷயங்களை யெல்லாம் சொல்லிவிட்டேன். அவைகளையே அடிக்கடி சொல்ல இஷ்டமில்லை. நான் ஓர் பெருத்த உபன்னியாசிப்பவ னல்ல. ஆனால், நான் சொல்லிய தெல்லாம் என் தேசத்தவர்களின் மனதில் பதிந்து, அவர்கள் அதை செய்கைகளினால் காட்டுவார்க ளென்று நம்பி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யிருக்கிறேன். ஆகையால் இப்பொழுது உங்கள் செய்கைகளைக் கவனிப்பதுதான் என் வேலை.

இரண்டாவது, நம் ஸ்வ பாஷையில் பேச அசக்தனாய் வங்காளிகளாகிய உங்களுடன் இங்கிலீஷில் பேசி வருத்தப்படுத்த இஷ்டமில்லை.

சில விவரங்கள்

இப்பொழுது உங்களுடன் சில வார்த்தைகள்தான் பேசப் போகிறேன். ஏனென்றால், என் சிநேகிதர்களுக்குச் சில விவரங்கள் சொல்லவேண்டும். நான் ஜெயிலிலிருந்து வந்த பிறகு என் நடத்தையை அனேகர்கள் ஒப்பவில்லை.

'இங்கிலீஷ்மன்' பத்திரிகை

எனக்கும் இந்தியா தேசத்திற்கும் உகப்பான ஒரு பெரும் சிநேகிதர் ஹேர் தெருவில் இருக்கிறார். (நகைப்பு) அவருக்கு என்னுடைய நடத்தை சிறிதும் பிடிக்கவில்லை. இந்தியர்களிடத்தில் இவருக்கிருந்த அதிப் பிரீதியான முகாந்தரம் 15,000 ரூ. இழக்கும்படி நேர்ந்தது. (7,500 ரூ. கோர்ட்டு செலவு என்று ஓர் சப்தம் கேட்டது.) இந்தியர்களுக்கு உதவி செய்யும் ஆத்திரத்தினால் "சத்திய மென்பது இதரர்களுக்கு நன்மையைத் தருவது" என்னும் மூதுரையை மேற்கொண்டார்.

ஆனால், ஜட்ஜானவர் இவருடைய மேலான எண்ணத்தை ஒப்புக்கொள்ளவில்லை. நம் சிநேகிதர் தன் கஷ்டங்களை வெளியிடாமல் சும்மாவிருக்கிறார். (நகைப்பு) இச் சிநேகிதர் "கல்விப் பயிற்சியிலும் மத விசாரணையிலும் நாட்களைக் கழிப்பதாக வாக்களித்த அரவிந்தர் ஜாலாகட்டிக்குப் போய் சுதேசீயம்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வர்ஜனம்—இவைகளைப்பற்றி உபன்னியசிப்பது மிகவும் ஆச்சரியமா யிருக்கிற''தென்று எழுதினார். நானோ கல்வியிலும் மதத்திலுமே காலங் கழித்து வருகிறேன். நான் முன்போலவே ஸ்வராஜ்யம், ஸ்வதேசியம்—இவை களைக் குறித்து எழுதுகிறேன். இது ஒரு கல்வி யல்லவா? நான் ஸ்வராஜ்யம், ஸ்வதேசியம் — இவைகளைக் குறித்துப் பேசிக்கொண்டு வருகிறேன். இவைதான் என் மதம். (ஆனந்த கோஷம்)

போலீஸார்

என்பேரில் இன்னும் அருவெறுப்புள்ளவர்களில் போலீஸார் ஒருவகையார். (நகைப்பு) நான் அதிகமாக வாய் திறப்பதாக அவர்கள் தெரியப்படுத்தினார்கள். ஓர் பத்திரிகையின் பிரதிநிதியோடு அலிப்பூர் ஜெயி லாகிய கவர்ன்மெண்டு ஹோட்டலில் கொடுக்கும் சாப்பாட்டையும் இதர அசௌகரியங்களையும் குறித்து நான் பேசினது போலீஸாருக்கு எட்டி, இம்மாதிரி சொல்லியது பிசகென்றும், அதனால் எனக்கு ஆபத்து வருமென்றும் உடனே தெரியப்படுத்தினார்கள். நான் ஜாலாகட்டிக்குப் போனபொழுது போலீஸார் பின் தொடர்ந்தார்கள். பாரிஸாலில் ஜனங்களிடத்திலும் வர்த்தகர்களிடத்திலும் என்னை அழைப்பித்தால் ஜில்லா கான்பரன்ஸ் நிறுத்தப்படுமென்று சொல்லிப் பயமுறுத்தினர். கான்பரன்ஸை நடத்துவது தங்கள் கையிலில்லாவிட்டாலும், ஸ்ரீமான் அரவிந்த கோஷை யழைப்பது அவர்களால் முடியுமென்றும் கான்பரன்ஸ் எப்படியானாலும் அரவிந்தரை அழைத்தே தீருவோ மென்றும் ஜனங்கள் சொன்னார்கள். கான்பரன்ஸும் நடந்தேறிற்று.

நான் திரும்பி வந்ததும் அடிக்கடி பொதுச் சபை களில் பேசி வருவதால் வெளியேற்றத்திற்குப் பாத்திரன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆகிறேனென்று பயமுறுத்தினார்கள். தேச நன்மைக்காகப் பாடுபடுபவர்களில் சிலரை வெளியேற்றியதற்குக் காரணம், கொலைகளுக்கும் கலகங்களுக்கும் திரவிய சகாயம் செய்வதாய் முதலில் சொன்னார்கள். பார்லிமெண்டில் இது பிசகென்று ஏற்பட்ட பிறகு ஒரு மெம்பர் அகஸ்மாத்தாக சொன்ன காரணம், முக்கியமாய் வெளியேற்றப்பட்டவர்களெல்லாம் சுதேசியத்திற்காக உழைத்ததேயாம் என்றார். மேலும், என்னைச் 'சுதேசியத்திற்குப் பாடுபடுவதினால் வெளியேற்றப் படுவாய்' என்று பயமுறுத்துவதினாலும் வெளியேற்றப் படுவதற்குக் காரணம் சுதேசியத்திற்கு உழைப்பதுதானென்று செம்மையாக விளங்குகிறது.

ஆனால், என்னிடத்தில் ஓர் துர்க்குணமுண்டு. அதாவது, நான் யாவராலும் பயமுறுத்தப்படாமையே என்னைப் பயமுறுத்துங் காரியங்களை நான் அதிக ஊக்கத்தோடு செய்வது வழக்கம். இன்று நான் பேசுவதற்குக் காரணம், அம் மாதிரி தடை செய்ததினாலேயே

சென்னை நண்பர்

மேல் கூறியவர்களைக் காட்டிலும் நெருங்கிய சிநேகிதர்கள் சிலர் என்னுடைய நடத்தையில் அதிர்ப்தியடைகிறார்கள். 'இந்தியன் பேட்ரியெட்' என்ற சென்னை நண்பர் ஒருவர் இராஜாங்க விஷயங்களை விட்டு, ஸன்னியாசியாய் விடும்படி எனக்கு உபதேசம் செய்கிறார். என்னுடைய மோக்ஷ சாதகத்தில் இவர் இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டு, அதையே வற்புறுத்துவது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை யுண்டு பண்ணுகிறது. எனக்கு நேரும் ஆபத்துகளை நீக்கும் பொருட்டாகத்தான் என்னை வெறுமனே யிருக்கச் சொல்லுகிறாராம் பொது நன்மைக்குப் பாடுபடுபவர்களைத் தங்கள் கடமையிலிருந்து இம் மாதிரி காரணங்கள் சொல்லி விடுவிப்பது வியக்கத்தக்கதா யிருக்கிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சீர்திருத்தங்கள்

சென்னை நேசரின் உபதேசத்திற்கு மற்றொரு காரணம், நான் சீர்திருத்தங்களுக்கு மாறாகப் பேசுவதென்பதாம். சீர்திருத்தங்கள் உண்மையில், சரியானவையல்லவென்று நான் சொல்வது பிசகாம். ஆனால், அதிகாரிகள் ஜனங்களுக்குச் செய்யும் சீர்திருத்தங்களை அதிகமாகக் கவனிப்பது என் வழக்கம். ஆங்கிலேயர்களோ ஒன்றை இனாமாகக் கொடுக்கும் பொழுதாவது, விற்கும் பொழுதாவது மேலுக்குத் தளுக்கு செய்து நல்ல பெட்டியில் வைத்துக் கொடுப்பது அவர்களின் ஆசாரம். நான் வெகுகாலம் இங்கிலாந்திலிருந்ததினால் 'பிரமகம் கூட்ஸ்' என்று சொல்லும்படியான உபயோகமற்ற குஜிலிக்கடை சாமான்கள் அனேகம் எனக்குத் தெரியும். அவைகள் முற்றிலும் பிரயோசன மற்றவை. எனக்குச் சீர்திருத்தங்களைப் பார்த்தால் இவ்வித வஸ்துக்களில் ஒன்றுபோல் தோற்றுகிறது. மேலும் அதிகாரிகளிடத்திலிருந்து இனாமாகப் பெறுவது எனக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லை. ஏனெனில், அவர்களுக்கும் நமக்கும் கொஞ்சமும் பொருத்தமில்லை. இனிமேலாவது ஜனங்களுக்கு ஏதாவது ஸ்வதந்திரங்களைக் கொடுத்தால் (வாஸ்தவத்தில் இப்பொழுது ஒரு ஸ்வதந்திரமுமில்லை) உத்தியோகஸ்தர்களின் அதிகாரத்தைக் குறைத்தே கொடுக்கவேண்டும். அப்படி குறைப்பதற்குச் சிறிதும் ஒப்புக் கொள்ளார். ஆகையால் நான் சீர்திருத்தங்களைப் பெறும்பொழுது அவை எவ்வளவு தூரம் ஸ்வராஜ்ய சாதகத்திற்கு உதவி புரியுமோவென்றும் அல்லது அதினிருந்து ஜனங்களின் நோக்கத்தை இதர வழியில் திருப்புகின்றனவாவென்றும் நான் எப்பொழுதும் கவனிப்பதுண்டு. இப்பொழுது கொடுத்திருக்கும் சீர்திருத்தங்கள் நமக்கு இராஜ்ய நிர்வாகத்தில் சிறிதும் அதிகாரம் கொடாமல் நம்முள் பிரிவினையை அதிகப்படுத்துவதாகத் தோற்றுகிறது. நம் ஐக்கியத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திற்கு இதுவும் ஓர் தடையாக நிற்கின்றது. சீர்திருத்தங்களை ஆமோதிப்பவர்கள் தாங்கள் கெடுவதுமன்றி இதரர்களையும் கெடுத்து விடுகிறார்கள்.

புனா உபந்நியாசம்

இரண்டு மூன்று நாட்களுக்கு முன்புதான் மேல் கூறியவை ஸ்திரப்பட்டன. தேச நன்மையின் பொருட்டு, ஸ்வய நலத்தை யெல்லாம் துறந்த ஒருவர் தான் சொல்லத்தகாத சில வார்த்தைகளைச் சொன்னார். அதாவது ஸ்வராஜ் என்னும் திருமந்திரத்தைப் பிரசுரிப்பவர்கள் ஆஸ்பத்திரியில் அடைக்கப்படாத பைத்தியக்காரர்கள். மேலும், ஸ்வராஜ்யத்தை யடையும் பொருட்டு பாஸிவ் ரெஸிஸ்டென்ஸ் ஒரு மார்க்கமென்று சொல்பவர்கள், உள்ளெண்ணத்தை வெளியிடாத — சுகத்தைப் பாராட்டும் — பொய்யர்களென்றும், தேசத்துரோகிகளென்றும் நிந்திக்கவேண்டும். கவர்ன்மெண்டார் செய்வதெல்லாம் நியாயம்தான். அவர்கள் ஈவிரக்க மில்லாமல் தான் நடக்கவேண்டும் என்பதாம்.

ஆனால், பயத்தின் பொருட்டு பாஸிவ் ரெஸிஸ்டென்ஸை மேற்கொண்டும், வெளியேற்றப்படுவதினால் பகிஷ்காரத்தை விட்டுவிட்டும், ஸ்வராஜ், பகிஷ்காரம் — இவைகளைப் பகிரங்கமாய்ச் சொல்லப் பயந்தும் இருந்திருக்கும் பக்ஷத்தில் இவர் சொல்வது உண்மையாகும். அப்பொழுது தான் அடைய முடியாத அபீஷ்டத்தை யுடைத்தா யிருந்தார்களென்றும், அதை அடையும் வழிகள் கஷ்டத்தைத் தருவதினால் அவர்களால் நம்ப முடியவில்லை யென்றும் சொல்லலாம்.

பகிரங்கமாகக் குழப்பத்தை விருத்தி செய்பவர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்று நான் பலமுறை பயமுறுத்தப் பட்டிருக்கிறேன். நான் மகாசூரனாக இல்லா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விட்டாலும், வருஷத்தில் பெரும்பான்மை ஜெயிலில் தனியறையில் வைக்கப்பட்டிருந்தமையால் வெளியேற்றத்தின் பயமே என்னை விட்டு நீங்கியது. (நகைப்பு) அதிகாரிகளின் தயவினால்தான் இப் பயமும் நீங்கிற்று. ஸ்வராஜ்ஜியத்தை யடைய வேண்டுமென்ற பீஷ்டமும் வந்தேமாதர மந்திரத்தின் உச்சாரணையும் ஹிருதயத்தில் பதித்தவர்கள் ஜெயிலாவது வெளியேற்றத்திலாவது பயப்படவேண்டிய காரணமே இல்லை. இதுதான் என்னுடைய அனுபவ மென்பதை உங்கள் மனதில் பதிய வைக்கவேண்டியது எனது கோரிக்கை. தர்ம விஷயத்தில் சிறைப்படுவது பயங்கரமான தல்ல. அங்கு படும் துன்பத்தைச் சகிப்பது மிகவும் அரிதல்ல. நமது அபீஷ்டம் மகத்தானதால், அதற்குத் தகுந்த விலையைக் கொடுத்துத்தான் பெறவேண்டும்.

கலப்பு முறை

நான் சிறைச் சாலைக்கும், தேச பிரஷ்டத்திற்கும் பயப்படவில்லை. ஆனால், என்னை முதுகில் தட்டிக் கொடுப்பவர்களையும், என்னிடம் வெகு நளினமாகப் பேசுகிறவர்களையும் கண்டு பயப்படுகிறேன். ஒரு பக்கத்தில் அடக்கு முறை அனுஷ்டிக்கப்படுவதும், மற்றொரு பக்கத்தில் பட்சம் பாராட்டப்படுவதுந்தான் என்னை அதிகமாகப் பயப்படுத்துகிறது. சவுக்கானது மேலே விழாவிட்டாலுங்கூட உயரத் தூக்கிப் பிடித்த படியே ஒரு கை யிருக்கிறது. மற்றொரு கையோ தலையில் தட்டிக் கொடுத்து சாந்தப்படுத்தப் பார்க்கிறது.

இவ்விதமாக ஒரு கை இணங்கிவிடப் பார்ப்பதும், மற்றொரு கையில் அடக்கு முறையின் பாரம் இருப்பதும், தேசத்தோர்களின் முயற்சியைத் தளரச் செய்து, புத்தியைக் கலங்கச் செய்வதற்கு ஏதுவாக இருக்கிறதே யன்றி, வேறில்லை. தேச பிரஷ்டம் என்னும் பெயரோடு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒன்பது தேசாபிமானிகள் பிரிடிஷ் ஜெயிலில் கிடந்து பதனமுகிறார்களென்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. அஸ்வினி குமாரதத், கிருஷ்ண குமார மித்திரர்—போன்றவர்கள் உங்களிடமிருந்து பிரித்துக் கொண்டுபோகப் பட்டு, இதுவரையில் திரும்பி உங்களிடம் சேர்க்கப்படா திருக்கும்போது இணக்கம் பார்க்கிறதினால் என்ன பிரயோஜனம்? இந்தப் பெரிய குற்றம் இன்னும் பரிகரிக்கப்படாம லிருக்கும்போது உங்களுக்குக் கொடுக்கப்படும் இந்த இணக்கம் எப்படிப் பட்டதா யிருக்க வேண்டும்? இம்மாதிரியான ஐக்கியத்தை யார் நம்பக் கூடும்?

பாய்க்காட்

அன்னிய சரக்கு விலக்கு என்று சொல்லப்படும் பாய்க்காட்டை அனுசரிக்கத் தலைப்பட்டபோது என்ன தீர்மானித்தார்கள் என்பதை மறந்துவிடவேண்டாம். வங்காளப் பிரிவினையை நீக்கிவிடுவதாகத் தீர்மானித்தார்கள். ஆனால், பிரிவினையோ இன்னும் அப்படியே இருக்கிறது. அது அப்படியே இருக்கும்போது, இணக்கமான வார்த்தைகளைக் கேட்கலாமா? அன்னிய சரக்கு விலக்கை அடியோடு நீக்கிவிடலாமா? அல்லது பாய்க்காட்டைத் தளர விடலாமா? தேசத்தின் கைத்தொழிலை மறுபடியும் சீர்திருத்தி அபிவிருத்திக்குக் கொண்டுவர வேண்டுமெனத் தீர்மானித்திருக்கிறார்கள்.

நீங்கள் உங்களுடைய தேசத்தோரைக் கொடும் பட்டினியிலிருந்து காப்பாற்றுவதாகத் தீர்மானித்தீர்கள், இந்தத் தீர்மானங்களோ இன்னும் நிறைவேறவில்லை. அப்படியிருக்கும்போது அன்னிய சரக்கு விலக்கை விட்டு விடலாமா? தளரச் செய்யலாமா? இப்போது செய்யப் பட்டிருக்கும் புதிய சீர்திருத்தம் ஜனங்களைக் கொடும் பட்டினியினின்றும் காப்பாற்றுமா? லோகல் கவர்ன் —

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மெண்டார் நாட்டில் பஞ்சம் வந்து விட்டதென்று சொன்னவுடன் இந்தியா கவர்ன்மெண்டார் பஞ்ச நிவர்த்தி வேலைகளை ஏற்பாடு செய்கிறார்கள். இதனால் அநேக ஆன்மாக்கள் காப்பாற்றப்படுகின்றன என்பதில் ஆட்சேபணை யில்லை. ஆனால், இது நம்மைத் துன்பத்தினின்றும் மாய்வதினின்றும் காப்பாற்றவில்லை. இது பஞ்சத்தையும் பட்டினியையும் வேரோடு களையவில்லை.

சுதேசியம், பாய்க்காட்—இவைகள் மாத்திரந்தான் பஞ்சத்தையும் பட்டினியையும் வேரோடு நீக்கும் சக்தி யுடையன. அன்னிய நாட்டு வியாபாரம் தேசத்தில் மும்முரமாய் இருக்கும்வரையில் பாய்க்காட்டை விட்டு விடலாமா? அதைத் தளரச் செய்துவிட்டால் தேசத்திற்குத் தீங்கு விளையாதா? இப்படி யிருக்கிறபோது யாராவது தட்டிக் கொடுத்து நயமாகப் பேசினால், அந்த வார்த்தைக்குக் காது கொடுப்பவர்கள் தேசத்திற்குத் தங்கள் நன்றியறிதலைக் காட்டுகிறவர்க ளாவார்களா? இப்படி செய்பவர்கள் துன்பத்தைத் தாங்கச் சக்தி யற்றவர்கள்! தங்கள் தேசத்தை மேலுக்குக் கொண்டு வர ஏற்படும் கிரயத்தைச் செலுத்த வழியற்றவர்கள்! ஆகவே இவர்கள் நாடி யிருக்கும் சுதந்திரத்தை அடைவதற்கு இவர்கள் கொஞ்சமும் யோக்கியதை யுடையவர்கள் அல்ல வென்பது ஏற்படும். இந்தச் சமயமோ மிகவும் நெருக்கமான சமயமாக இருக்கிறது. இன்னொரு முறை உங்களுக்குக் கேள்விகள் போடப்படும்போது பதில் சொல்வதற்கு நீங்கள் தயாராக இருக்கவேண்டும்.

ஆகஸ்டு ஏழாந் தேதி

ஆகஸ்டு மாத ஏழாந் தேதி மிகவும் சமீபித்து விட்டது. அதுதான் பாய்க்காட் பிறந்த நாள்! அதுதான் இந்தியாவில் புதிய உணர்ச்சி பிறந்த நாள்! நீங்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்ய வேண்டிய தொன்றும் அதிகமாயில்லை. இன்னும் ஒரே ஒருதரம் 'வந்தே மாதரம்' என்னும் பரிசுத்தமான மந்திரத்தை உச்சரிக்க வேண்டியதுதான்! இந்தியா உயிரற்று இருக்கவில்லை யென்பதைச் சொல்ல வேண்டியதுதான்!

இந்தத் தேதியில் வங்காளத்தில் என்ன சம்பவிக்கப் போகிறதென்பதைப் பார்ப்பதற்காக நான் காத்திருக்கிறேன். நீங்கள் நூற்றுக்கணக்காக வந்து கூடுகிறீர்களோ—அல்லது பதினாயிரக்கணக்காய் வந்து கூடுகிறீர்களோ—அதை நான் பார்க்கவேண்டும். இந்த விவகாரத்தின் பாரமானது வங்காளத்தைத்தான் பொருத்திருக்கிறது! ஏனெனில், அதுதான் மகா வாக்கியத்தை முதன் முதல் உபதேசித்தது! அதுதான் இந்த மகா வாக்கியத்தின் நிமித்தம் உண்டாகும் துன்பங்களை யெல்லாம் சகிக்கும் தைரியமுடையதா யிருக்கிறது. ஆகையாலே கடவுள் துன்பத்தின் பெரும்பகுதியை அது தான் தாங்கவேண்டுமென நியமித்திருக்கிறார். அப்படி அவர் செய்வதினாலே வங்காளத்தினிடத்தில் அதிகமான பட்சத்தைக் காட்டுகிறார் என்பது தெளிவாகிறது. இந்தியாவின் விதி வங்காளிகளைப் பொருத்ததா யிருக்கிறது. இவர்கள் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் சொல்லிவிட்டால் இந்தியாவின் வருங்கால நிலைமை இன்னதென நிச்சயித்துவிடலாம்!

இந்தக் கேள்வி ஏற்கெனவே கேட்கப்பட்டது மாகாது; இனி கேட்கப்படுவதுதான் கடைசி தடவை யென்பது மாகாது; ஏனெனில், ஒரு நிமிஷத்திற்கே இது உரியதாகாமல் தொடர்ச்சியான விவகாரத்திற்கு உரியதா யிருக்கிறது. இந்தக் கேள்வி எப்போதும், ஒவ்வொரு நிமிஷமும் உங்களுக்குக் கேட்கப்படலாம். இதற்குச் சரியான அருத்தத்தில் பதில் சொல்ல நீங்கள் பொறுப்புள்ளவர்களாகவே இருக்கிறீர்கள்! அதிலும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆகஸ்டு ஏழாந் தேதி போன்ற நாளில் இந்தப் பொறுப்பு இன்னும் அதிகமாக இருக்கிறது. இந்தக் கேள்விக்கு என்ன பதில் வரப்போகிற தென்பதை நாம் பார்க்கக் காத்திருக்கிறோம்.

முடிவு

நான் எதிர்பார்த்ததைவிட ஊக்கம் குறைவாக இருந்தபோதிலும், ஜனங்கள் கொஞ்சமாக விஜயம் செய்தபோதிலும் அப்போதும் நான் அதைரியப்பட மாட்டேன். தங்களுடைய கொள்கையில் போதுமான தைரியத்தை உடையவர்களில் சொற்பப் பெயரை யாவது இந்தத் தேசம் உடைத்தா யிருக்கிற வரையில், தங்களுடைய விசுவாசத்தை எடுத்துச் சொல்லி, அதை ஜீவிய தசைக்குக் கொண்டுவர முயல்கிறவர்கள் சிலரை இத் தேசம் உடைத்தா யிருக்கிற வரையில், அந்த விசுவாசம் வெற்றி பெறாதெனப் பயப்பட வேண்டிய தில்லை.

உண்மை விசுவாசமானது கொலைகளினால் எப்படி யிழிந்த தென்றும், ஜிகோவா என்னும் தெய்வத்தை வணங்குவதினின்றும் வேறு தெய்வங்களை வழிபட இஸ்ரவேலை செய்ததென்றும், பிரதம தீர்க்கதரிசிகூட தனியாக யோசித்து எப்படித் தன்னுடைய தலையை ஒளித்துக்கொண்டா னென்றும் கிறிஸ்துவர்களுடைய பைபிளில் சொல்லப்பட்டிருக்கிறது.

கடவுள் இந்தத் தீர்க்கதரிசியைக் கூப்பிட்டு "நீ போய் மற்றவர்களோடு உண்மையின் நிமித்தம் போராடு" என்றார்.

"எப்போதும் ஒரு தேசத்தில் உண்மை வழியில் நிற்பவர்கள் சிலரேனும் இருக்கிறார்கள். அதேமாதிரி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தத் தேசத்திற்காக ஏழாயிரம் பேர் இருக்கிறார்கள்'' என்று அவர் சொன்னார்.

அதே விதமாகக் கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்ட இந்த வங்காளத்திலே எப்பொழுதும் விசுவாசத்தில் உண்மை வைத்திருப்பவர்கள் ஆயிரக்கணக்கா யிருப் பார்கள். பொய்யான கடவுளை நோக்கி இவர்கள் தலைகுனிய மாட்டார்கள். இவர்களுடைய சத்தம் மௌனமாக்கப்பட்டால், இவர்கள் கொண்டு போகப் பட்டால், இவர்களுடைய இடத்தில் வேறு சிலர் வருவார்கள். இவர்களும் கொண்டுபோகப் பட்டால் இவர்களுடைய இடத்திற்கு மற்றுஞ் சிலர் வருவார்கள். வருகிறவர்கள் சொற்பமா யிருந்தபோதிலும், உண்மை யுள்ளவர்களா யிருப்பார்கள்!

தங்களுடைய தாயின் பெயரைச் சொல்லுவதற்குச் சிறிதும் அஞ்சாதவர்களிற் சிலர் எப்போதும் இருந்து கொண்டே யிருப்பார்கள்! சிலர் உண்மையைக் காப்பாற்றும் பொருட்டு மகா வாக்கியத்தை உபதேசித்துக் கொண்டே இருப்பார்கள்! ஏனெனில், இவர்களுடைய செய்கை கேவலம் அசேதனமும், அழிவுள்ளதுமான வஸ்துவிலிருந்து உற்பத்தியான தல்ல. ஆனால், அழிவில்லாததும் என்றுமுள்ளதுமான வஸ்துவி னிடத்திலிருந்து உற்பத்தியானது. இதை நெருப்பால் எரிக்க முடியாது; கத்தியினால் கொல்ல முடியாது; அடக்கு முறைக் காற்றினால் இதை அடித்துக்கொண்டு போகமுடியாது; தண்ணீரானது இதை முழுகச் செய்யாது.

ஆகஸ்டு ஏழாந் தேதியில்தான் ஒரு முக்கியம் இருக் கிறது. அன்று நடைபெறும் செய்கையைப் பொருத்த தாகத்தான் இருக்கும் நம்முடைய பந்த நீக்கம் சமீபத்திலிருக்கிற தென்பதும். சுதேசியம், பாய்க்காட், பாஸிவ் ரிஸிஸ்டென்ஸ் — இவைகளைப் பொருத்தாக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமாதானமும், தெய்வீகமுமான முத்தியின் நம்பிக்கையிருக்கிறது. மானத வலிமையினாலும், பொறுமையான சகிப்பினாலும் இந்தியா முன்னுக்கு வந்ததென்று தேச சரித்திரத்தில் எழுதப்படும், படாதென்பது இவைகளைப் பொருத்ததாக இருக்கின்றது.

ஆகஸ்டு ஏழாந் தேதி யன்று தேசத்தோர்களின் பலம்—எண்ணிக்கை பலமல்ல; ஆனால் மானத பலம் எல்லாச் சரீர ஆற்றலைவிடப் பெரிதாக இருக்கும் ஆன்ம பலம் — இவ்வளவென்பதாக அளவிடப்படும். ஆயிரக்கணக்காக இப்போது கூடியிருக்கும் உங்களில் ஒருவராவது அன்றைய தினம் விஜயம் செய்யத் தவறக் கூடாதென நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த நாள் வணங்குவதற்காக ஏற்பட்ட நாளாகும். அன்று தினம் மாதாவானவள் ஒருங்கு கூடியிருக்கும் தனது புத்திரர்களைப் பார்த்துக் கடாட்சிக்கும் நாளாகும்.

ஆகஸ்டு ஏழாந் தேதி யன்று 'என்னுடைய புத்திரர்களில் எத்தனை பேர் என்னிடம் விசுவாசத்துடனிருக்கிறார்கள்' என்று அன்னையானவள் கேட்பாள். 'இத்தனை நூற்றாண்டுகளாகியும் இன்னும் நான் துன்பப்பட்டுக்கொண்டுதா னிருக்கவேண்டுமா அல்லது என்னுடைய புத்திரர்களின் அன்பினாலும் பலத்தினாலும் சுகமடைந்து விடலாமென நம்பலாகுமோ?' என்னும் கேள்வியை நமது தாய் கேட்பாள்.

யாராவதொருவர் நன்றி யற்றவர்களா யிருக்கும் பக்ஷத்திற் அவர்கள் யாருக்கு நன்றியற்றவர்களா யிருக்கிறார்க ளென்பதை ஞாபகத்தில் வைக்கட்டும் — தங்களுக்கு, தங்களுடைய பிரதிக்கினைக்கு, தங்கள் தேசத்தின் வருங்கால நிலைமைக்கு, கடவுளுக்கு, தாய்க்கு — இவர்கள் நன்றிகெட்டவர்க ளாகின்றார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. அரவிந்த கோஷ் (1872-1950) :

சுதந்திர இந்தியச் சிற்பிகளின் வரிசையில் முதல் வகுப்பைச் சார்ந்தவர். பெரும் எழுத்தாளராகவும் கவிஞராகவும் திகழ்ந்தவர்.

கல்கத்தாவில் பிறந்த இவர், 14 ஆண்டுகள் இங்கிலாந்தில் தங்கிப் படித்துவிட்டு, இந்தியா திரும்பினார். சிறிது காலம் பரோடாவில் பேராசிரியராகப் பணியாற்றினார்.

அரவிந்தரைப் பற்றிக் 'கலைக் களஞ்சியம்' வரைந்துள்ள மதிப்பீடு இதுவாகும்:

> "...அரவிந்தரின் எழுத்து, சுதேசி இயக்கத்திற்குப் புதிய உணர்ச்சியும், வேகமும் அளித்தது. அயர்லாந்தில் நடந்த இயக்கம்போலவே இந்திய சுதந்திரக் கிளர்ச்சியை நடத்த இவர் விரும்பினார். தன்னுதவி, நாட்டுத் தொழிலாக்கம், நாட்டுக் கல்வி வளர்ச்சி, ஒற்றுமை, தியாகம் என்னும் இவற்றால் விடுதலை பெறலாம் என்று இவர் விளக்கினார்."

(கலைக் களஞ்சியம் தொகுதி 1—பக். 184)

அலிப்பூர் வெடிகுண்டு வழக்கில் அரவிந்தருக்கு நேரிடையான தொடர்பில்லை என்றாலும், 1908ஆம் ஆண்டு, இவர் கைது செய்யப்பட்டார். இக்கால முதல் சுமார் ஓராண்டுக் காலம் இவர் சிறை வாழ்க்கை அமைந்தது. சிறையின் தனிமை இவருக்கு ஆன்மிக வேட்கைகளை உணர்த்தியது. சிறை வாசத்தினின்று நீங்கிய அரவிந்தர் 1910 ஏப்ரலில் புதுச்சேரியை வந்தடைந்தார். ஆன்மிகக் கருத்துக்களைப் பரப்புவதில் முனைந்தார்; யோக சாதனையில் ஆழ்ந்தார்.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதி : 6

Translation from
"Poverty and Un British rule in India,"
Dadadhai Naoroji.

II

தாதாபாய் நெளரோஜி

[ஸ்ரீ தாதாய் நௌரோஜியவர்கள் அநேக
வருஷங்கள் முன்பாக இந்தியாவினுடைய
நிலைமையைப் பத்தி. பிரிட்டிஷ் ராஜாங்க
யில் முறையிட்டு, நேர்த்த பிரமாணத்
ட்ட அர்சாட்சி பெறவேண்டு
த்துடன் இல்லாத திருத்
(Hague) என்னும்

மொழி பெயர்ப்பு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தியாவின் முதுபெருங்கிழவர் என்று மதிக்கப் பெற்ற தாதாபாய் நௌரோஜி அவர்கள் இந்திய நாட்டினுடைய ஏழ்மையையும், ஆங்கிலேயர்களுடைய தீய அரசாட்சியையும் பற்றி "POVERTY AND UN—BRITISH RULE IN INDIA" என்னும் நூலில் எழுதியதையும், நெவின்ஸன் என்னும் ஆங்கில நூலாசிரியர் "THE NEW SPIRIT IN INDIA"—என்கிற தம்முடைய நூலில் திலகரைப் பற்றியும், அரவிந்தரைப் பற்றியும் எழுதியவையும் அனைத்துத் தரப்பு மக்களும் அறிந்து கொள்ளும் பொருட்டு, மொழிபெயர்த்து அளித்த பகுதிகள் இங்கே இடம் பெற்றுள்ளன.

□

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தியாவின் வறுமை

தாதாபாய் நௌரோஜி நூலின் மொழிபெயர்ப்பு

(இந்தியாவினுடைய ஏழ்மையையும் ஆங்கிலேயர்களுடைய தீய அரசையும் பற்றி ஸ்ரீ தாதாபாய் நௌரோஜியவர்கள் எழுதி யிருக்கும் புத்தகத்தினின்றும் கீழ் வரும் விஷயங்கள் மொழிபெயர்க்கப் பட்டன. இவர் தன்னைத்தான் ஒரு ஆங்கிலேயனாகப் பாவித்துக்கொண்டு எழுதுகிறார்.)

1

ஆங்கிலேயர்களின் ஸத்திய வாக்கு

"இந்தியாவிலாயினும் அல்லது ஆங்கிலேய இராஜ்யத்திற்குள்ளாயினும், பிறந்திருக்கும் ஒவ்வொருவருடைய மதமும், பிறந்த இடமும், வம்சமும் எதுவா யிருந்தபோதிலும் யாதொரு

குறிப்பு : இம் மொழிபெயர்ப்பில் இந்த இபிழ்ப் பகுதியில் மட்டும் "இராஜஸிம்மன்" என்ற பெயர் காணப்படு கின்றது. பின்னிட்ட பகுதிகளில் பெயர் இடம் பெற வில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தடையு மில்லாமல், மேற்கூறிய இராஜாங்கத்தின் கீழ் உத்தியோகம் பெறலாம்.

"நாம் ஹிந்துஸ்தானத்தில் வசிக்கும் பிரஜைகளுக்கு மற்ற ஆங்கிலேய இராஜ்யத்திற்குள் வசிக்கும் பிரஜைகளுக்கு எவ்வளவு கட்டுப்பட்டிருக்கிறோமோ அவ்வளவு கட்டுப்பட்டிருக்கிறோம். ஆகையால், நாம் உங்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை எல்லாம் ஸர்வ சக்தரான பகவானுடைய ஆசீர்வாதத்தைப் பெற்று, மனப்பூர்வமாய் தவறாமல் நிறைவேற்றுவோம்.

"அதுவுமன்றி நம்முடைய ஆளுகைக்கு உட்பட்டிருப்பவன் எந்த ஜாதி அல்லது வம்சமா யிருந்தபோதிலும் யாதொரு தடையும், பேதமுமின்றி, அவன் கற்றிருக்கும் கல்விக்கும், அவனுடைய சக்திக்கும், யோக்கியதைக்கும் தகுந்தபடி எங்களீடத்திலிருக்கும் உத்தியோகங்கள் சரியாய் செய்யும் பொருட்டுக் கொடுக்கப்படும்.

"ஸ்ரீ பகவானுடைய கிருபையினால் தேசத்தில் சமாதான முண்டான பிறகு, கைத்தொழில் முதலியவற்றை யதிகரித்து, ஜனங்களினுடைய ஸம்ரட்சணைக்காகவும், நன்மைக்காகவும் செங்கோல் செலுத்தி வர வேண்டுமென்று நமது ஹிருதயத்திலிருக்கிறது. நீங்கள் சுகித்து வாழ்வதில்தான் நமது பலமிருக்கிறது; நீங்கள் திருப்தி யடைந்திருந்தால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தான் நமக்கு க்ஷேமம்; உங்களுடைய நன்றியறிவுதான் நமக்குப் பெரும் வெகுமதி. ஆகையால் ஸர்வ சக்தரான கடவுள் நமக்கும், நமது கையின் கீழ் வேலை செய்வோ ரனை வருக்கும் எங்கள் கடமைகளைச் சரியாய் நிறை வேற்றும்பொருட்டு பலமளிப்பாராக.''

1860 - ம் வருஷம் இந்தியாவில் கல்லரை நீங்கி ஆங்கிலேயர் அரசாட்சி மீண்டும் ஸ்தாபிக்கப்பட்ட பிறகு விக்டோரியா சக்கிரவர்த்தினியானவள் (Queen victoria) மேல் சொன்ன அதிகாரங்களை யெல்லாம் ஹிந்துஸ்தானவாஸிகளுக்குக் கொடுத் தாள்.

1877 - ம் வருஷம் ஜனவரி (January) மாதம் முதல் தேதி லார்ட் லிட்டன் (Lord Lytton) டில்லியில் சபை சேர்த்தபொழுது கீழ்வருமாறு உரைத்தார் :

“ஹே, ஹிந்துஸ்தானவாஸிகளே, உங்க ளுடைய ஜாதியும், வம்சமும் எதுவா யிருந்த போதிலும், ஆங்கிலேயர்களுடன் ஒன்று சேர்ந்து, உங்கள் சக்திக்குக் கூடின மட்டும், இத் தேசத்து அரசாட்சி பாரத்தை வகிப்பதில் உங்களுக்கும் ஒரு பெரும் பாகமுண்டு. இந்த அதிகாரமானது ஒரு பெரும் நியாயத்தின் பேரில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ் வதிகார மானது மீண்டு மீண்டும், ஆங்கிலேயர்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ளாலும், ஹிந்து தேச இராஜாங்க விற்பன்னர்களாலும், ஆங்கிலேய இராஜ சபையாலும் உறுதி கூறப்பட்டது. ஹிந்து தேச இராஜாங்கத்திற்கு இது ஓர் பெருங் கண்ணியமாயும், அது செல்லும் ஸன்மார்க்கத்தை ஒத்ததாயுமிருக்கிறது.''

1877 -ம் வருஷம் மார்ச்சு (March) மாதம் லிட்டன் துரை கல்கத்தா வித்தியா சங்கத்தில் "இராணி தானாகக் கொடுத்திருக்கும் உரிமைகள் பெருந் தர்மத்திற்கு இணங்கினவையாக இருக்கின்றன'' என்று கூறினார்.

1887 - ம் வருஷம் விக்டோரியா சக்கிரவர்த்தினியினுடைய 60 - ம்வயதைக் கொண்டாடின பொழுது, பம்பாய் பட்டணத்தார் ஓர் புகழும் பத்திரிகை அனுப்பினபொழுது, 'தான் ஜனங்களுக்கும், சிற்றரசர்களுக்கும் கொடுத்த அதிகாரங்களை எடுத்துக் கூறி, தர்மத்தை இடைவிடாது செலுத்துவதுதான் தன்னுடைய இஷ்டம்' என்று மறுமொழி கூறினாள்.

(இந்தியா : 1.12. 1906—பக். 13, 14)

* * * *

[ஸ்ரீ தாதாய் நௌரோஜி யானவர் அனேக வருஷங்கள் முன்பாக இந்தியாவினுடைய நிலைமையைப் பற்றி, பிரிட்டிஷ் இராஜாங்க சபையில் முறை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யிட்டு, சிறந்த பிரமாணத்திற்குட்பட்ட அரசாட்சி பெறவேண்டுமென்ற எண்ணத்துடன் இங்கிலாந்திற்குச் சென்றார். ஹேக் (Hague) என்னும் பட்டணத்தில், உலகத்திலிருக்கும் இராஜாங்கத்தார் அனைவரும் சபை சேர்ந்தபொழுது, இவரையும் அழைத்தார்கள். இவர் அந்த சபா மண்டபத்திற்குட் சென்றவுடனே, மகா பெரியவர் வந்தாரென்று யாவரும் எழுந்து நின்று, மரியாதை செய்து, கொண்டாடி, இவருடைய உட்கருத்தைக் கேட்டார்கள். அவர் அப்பொழுது "இந்தியா சுய அரசாட்சி பெறவேண்டும்" என்பதுதான் என் கருத் தென்றார். இவர் இந்தியாவினுடைய ஏழ்மையையும், ஆங்கிலேயர்களுடைய தீய அரசாட்சியையும் பற்றி எழுதி யிருக்கும் இப் புத்தகத்தில் ஆங்கிலேயர்கள் செய்யும் தீவினை யாவும் எடுத்துரைக்கப் பட்டிருக்கின்றன. இவர் 'இங்கிலாந்தில் முறையிடுவதில் யாதும் பயனில்லை என்றறிந்து, இப்பொழுது இந்தியாவுக்குத் திரும்பி வருகிறார். இவர் இந்த வருஷம் (1906) காங்கிரெஸ்ஸில் அதிபதியாக (President) ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்.]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2

தற்கால நிலைமை

தற்காலத்தி லிருக்கும் அரசாட்சியானது ஹிந்து தேசத்தாருக்கு நாசத்தைத் தருவதாயும், கொடுங்கோ லரசாட்சியாயு மிருப்பதுமன்றி, ஆங்கிலேயர்களுடைய சுய நாசத்திற்கும் காரண மானதா யிருக்கிறது. ஆனால், ஆங்கிலேயர்கள் சரியாய் செங்கோல் செலுத்தி வந்தால், ஆங்கிலே யர்கள் — இந்தியர்கள் இருவரும் நன்மை யடையலாம். தற்காலத்துக் கொடுங்கோல் அரசாட்சியை விவரிப்பதற்கு முன், ஆங்கிலேயர் களுடைய சம்பந்தத்தால் இந்தியாவுக்கு உண்டான நன்மையையும், ஆங்கிலேயர்களுடைய சௌக்கியத் திற்கும், பெருமைக்கும், புகழ்ச்சிக்கும் இந்தியா வானது அவசிய மென்பதையும் எடுத்துப் பார்ப்போம்.

இந்தியாவுக்கு உண்டான நன்மைகள்

ஆங்கிலேயர்களுடைய உயர்ந்த நாகரீகத் தினால், முன் காலத்தில் இந்தியாவில், நடந்து வந்த உடன்கட்டை ஏறுதலென்னும் கொடிய வழக்கம் நீங்கி, அனேக உயிர்கள் காப்பாற்றப்பட்டு, எவ்வளவோ நன்மையை அடைந்தது.

உயர்விக்கும்படியான, கண்ணியமான, நாகரீகம் தரும்படியான ஆங்கிலேயர்களுடைய கல்வியையும் சிறந்த சாஸ்திரங்களையும் இந்தியா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வில் கற்பிக்க ஏற்பாடு செய்தது என்றைக்கும் அழிவில்லாத நன்மைக்கும், நன்றி யறிவிற்கும் காரணமா யிருக்கிறது. இக் கல்வியானது ஒவ்வொருவனும், இராஜாங்கத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளைக் கற்பித்து, கல்வி கற்றிருப்போர் ஹிருதயத்தில் தேசத்திலிருக்கும் மற்றத் தாழ்ந்த வர்களையும் நல்ல நிலைக்குக் கொண்டுவர வேண்டு மென்கிற எண்ணத்தை உண்டாக்கிற்று.

நூற்றைம்பது வருஷ காலமாய் நம்பிக்கை பங்கமடைந்து, நிலைகுலைந்து, கொடுங்கோலரசாட்சி செலுத்தி வரப்பட்ட போதிலும் மேற்கூறிய நன்மைகளைக் கண்டு அவர்கள் கபடமற்றவர்களாயும், விசுவாஸ முள்ளவர்களாயு மிருக்கிறார்கள். அவர்களின் விதமாயடைந்த, நாகரீகம் தரும்படியான நன்மைகளை எடுத்துக் கூறுவது அனாவசியம். ஆனால், இப்படிச் செய்த நன்மைகளில் மிகவும் நாணயமானது 1833-ம் வருஷம் அளித்த ஸத்திய வாக்கும், 1858, 1877, 1887-ம் வருஷங்களில் விக்டோரியா சக்கிரவர்த்தினி ஸத்தியம் செய்த வார்த்தையும்தான். இவ் வாக்குகளானவைகள் விசுவாஸத்துடன், மனப்பூர்வமாய் நிறைவேற்றப்பட்டால் இங்கிலாந்திற்குப் பெரும் லாபமும், சிறந்த கீர்த்தியும், இந்தியாவுக்கு உயர்ந்த நற்கதியு முண்டாகும்.

ஆங்கிலேயர்கள் நீதியும் ஒழுங்கும் தேசத்தில் ஸ்தாபித்ததற்குப் பெருமை பாராட்டிக் கொள்வது நியாயம்தான். அப்படி நீதியும் ஒழுங்கும் செலுத்தி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வருவதில் ஆங்கிலேயர்களுடைய அரசு இந்தியாவில் நிலைபெற்றிருக்க எவ்வளவு அவசியமோ, அவ்வளவு ஹிந்து தேசத்தார் நன்மைக்கும் அவசியம். மற்றும் ஆங்கிலேயர்கள் ஹிந்து தேசத்தாருக்கு மனதி லிருப்பதை வெளியிட சுவாதந்திரிய மளித் திருப்பதைப் பற்றியும், அதனாலுண்டாகும் அனேக நன்மைகளைப் பற்றியும் பெருமை பாராட்டிக் கொள்ளலாம்.

இங்கிலாந்தினுடைய பெருமைக்கும் செழிப்பிற்கும் இந்தியாவானது மிகவும் அவசியம்

லார்ட்டு கர்ஸன் (Lord Curzon) இந்தியாவுக்குப் பிரதியரசனாகச் (Viceroy) செல்லுவதற்கு முன்னமே இந்தியாவானது இங்கிலாந்திற்கு மிகவும் அவசிய மென்பதைப் பற்றி இரண்டு, மூன்றுதரம் உறுதியாகச் சொன்னார். "இந்தியாவானது நம்முடைய இராஜாங்கத்திற்கு மூல பலம்; நம்முடைய இராஜ்ஜியத்தில் எந்தப் பாகத்தை இழந்துவிட்ட போதிலும், நாம் ஜீவிக்கலாம்; ஆனால், நாம் இந்தியாவை இழந்து விட்டோமே யானால் நம்முடைய இராஜ்ஜியத்தில் பிரகாசிக்கும் சூரியன் உடனே அஸ்தமித்து விடுவான்'' என்று சொன்னார். (Times : 3. 12. 1898)

லார்ட்டு ராபர்ட்ஸ் (Lord Roberts) இந்தியாவில் உத்தியோகத்தை விட்டு இங்கிலாந்திற்குத் திரும்பினபொழுது, லண்டன் வர்த்தகர் சங்கத்தில் (London Chamber of Commerce) "நம்முடைய பிரிடன் தேசத்துச் செழுமையானது, அந்தப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பரந்த கிழக்கு தேசங்களைப் பெற்றிருப்பதினால் தான் என்பதை நீங்கள் யறிந்திருப்பதைப் பற்றி நான் சந்தோஷிக்கிறேன்'' என்று சொன்னார். (Times : *25. 5. 1893)*

''கிழக்கு தேசங்களை வைத்துக்கொண்டிருப்பது பிரிட்டனுடைய மேன்மைக்கும் சுகத்திற்கும் வெகு பிரதானமானது'' என்று சொன்னார். (Times : *29. 7. 1893*) இன்ன காரணத்தினால், இந்தியாவானது நம்முடைய சுவாதீனத்திலிருக்கிற தென்பதைப் பற்றியும் மிகவும் உறுதியாய்ச் சொன்னார். ''மூர்க்கமான படை பலத்தினா லல்ல. ஆனால், இந்தியாவிலிருக்கும் சேனையானது நற்பயிற்சி பெற்று, நிகரில்லாததா யிருந்த போதிலும், அங்கிருக்கும் சேனை இப்பொழுதிருப்பதைவிட வெகு அதிகமா யிருந்த போதிலும், ஹிந்து தேசத்தார் ஐக்கியமாய் திருப்தி யடைந்திருப்பதில்தான் நம்முடைய பலமிருக்க வேண்டும்'' என்றுரைத்தார்.

இப்பொழுது ஆங்கிலேயர்களுடைய அரசாட்சியிலிருக்கும் பிழைகளைக் கண்டெடுக்கலாம். இப்பிழைகளானவைகள் நன்மையைக் காட்டிலும் அதிகமா யிருக்கின்றன.

கொடுங்கோ லரசு

இங்கிலாந்தில் இராஜாங்கச் சபையார் எழுதியிருக்கு மனேக கடிதங்களில், ''இந்தியா முழுவதிலு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மிருக்கும் ஒவ்வொரு ஆங்கிலேயனும் தான் பெற்றிருக்கும் அதிகாரத்தைத் திக்கற்ற அத் தேசத்தாரைப் பீடிக்க உபயோகிக்கிறான். நம்முடைய வேலைக்காரர்கள் செய்யும் தீதினாலும், கொடுமையினாலும் அங்கு உண்டா யிருக்கும் பரிதாபிக்கப்படும்படியான ஸ்திதியை நாம் நன்றா யறிந்திருக்கிறோம். ஒரு தேசத்திலும் ஒரு காலத்திலும் காணாதவ்வளவு கொடுமையும், துயரமுமான காட்சியைக் காணலாம்'' என்று சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் பிரிட்ட னுக்கும் இந்தியாவுக்குமுள்ள சம்பந்தம் துரதிர்ஷ்ட மாய் ஆரம்பத்திலேயே இப்படி யிருக்கிறது. பணப் பேராசையும், கொடுமையும், நம்முடைய போராத வேளைக்கும், நாசத்திற்கும் தகுந்தபடி முன் சொன்ன தீங்குகளானவை இன்றை வரைக்கும் நீங்காமல் நாளுக்கு நாள் தெரியாமலே விருத்தி யடைகிற படியால், தேசமானது மேலும் மேலும் ஏழையாய்க் கொண்டு வருகின்றது.

முன்னமே 1787 - ம் வருஷத்திலேயே, கவர்னர் ஜனரலாய் (Governor General) வந்த ஸர் ஜான் ஷோர் (Sir John Shore) தற்காலத்து ஹிந்துதேச அரசாட்சியிலுண்டாகப் போகிற தீங்குகளை அப்பொழுதே எடுத்துக் கூறினார்.

அவரொரு கடிதத்தில் இம் மாதிரி யெழுது கிறார் : ''ஹிந்து தேசத்தாரின் கைத்தொழில்களை யதிகரிக்க எவ்வளவு சகாயம் செய்த போதிலும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஜனங்களின் வறுமை யதிகமா யிருத்தலால், அதனால் உண்டாகும் நன்மைகளைப் பார்க்கிலும் அன்னிய தேசத்தார் அரசாட்சியினாலுண்டாகும் நீங்காத தீமைகளே அதிகமென்று நிச்சயிக்கலாம்.''

சாதாரண புத்தியை யுடைய எவனும் இதை யறியலாம். இவ் வறுமை ஓயாமலே விருத்தியாய்க் கொண்டு வந்தது. தேசத்தில் விளையும் விளைச்சலைக் காட்டிலும், அதிகரித்திருக்கிற ஜனங்களின் தேவையினால் உண்டா யிருக்கும் துன்பத்திற்குக் காரணம் அன்னிய இராஜாங்கத்தார் அனேக விதமான நுட்ப வழிகளால் 30000000 ஸவரன் வரைக்கும் நம்முடைய தேசத்தின் செல்வத்தைக் கொண்டுபோய் விடுகிறபடியால் தான்; சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் இத் தேசத்திலிருந்து 3000000 வரைக்கும் கொண்டு போகப் பட்டதாகத் தெரியவருகிறது. மற்றச் சம்பளச் செலவோடு 5000000 அல்லது இப்பொழுது கொண்டு போகப்படுவதில் ஆறில் ஒரு பாகம். இராஜாங்கத்தார் கணக்கில் வராத ஏற்றுமதி, கப்பல் சத்தம் முதலியவற்றாலுண்டாகும் லாபங்களைக் கணக்கிட்டால் இப்பொழுது ஏறக்குறைய 40000000 ஸவரன் வரைக்கும் கொண்டு போகப் படுகிறதாக ஏற்படும். (இக் கணக்கின் பிரகாரம் 10 ரூபாய் கொண்டது ஒரு ஸவரன்.)

(இந்தியா : 8.12. 1906—பக். 13-14)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3

இந்தியாவைப் பற்றிச் சிலர் அபிப்பிராயம்

மாண்ட்கோமிரி மார்ட்டின் (Montgomery Martin) என்பவர் இந்தியா உத்தியோக சாலையில் (India Office) 1807-ம் வருஷம் முதல் 1814-ம் வருஷம் வரையிலுமுள்ள வங்காளம், பீஹார் இவைகளினுடைய நிலைமைகளைப் பற்றிய அறிக்கைகளைப் பரிசோதித்துப் பார்த்து, 1835-ம் வருஷம் தான் எழுதியிருக்கும் "கிழக்கு இந்தியா" (Eastern India) என்னும் புத்தகத்தில் கீழ்வருமாறு சொல்லியிருக்கிறார் : - "விசேஷமாய் எடுத்துக் காட்டும் படியான இரண்டு விஷயங்களைக் குறிப்பிடாமலிருப்பதரிது. முதலாவது, தேசத்தின் வளமையும், இரண்டாவது ஜனங்களின் வறுமையும்; ஆங்கிலேயர் ஆட்சி கொண்டிருக்கும் இந்தியாவிலிருந்து வருஷந்தோறும் கொண்டு போகப் படுகிற 3000000 ஸவரன், 100க்கு ஒரு வருஷத்திற்கு 12 - பிரகாரம் வட்டியோடு, 30 வருஷத்திற்கு ஒரு பெருந் தொகையாகிய 723900000 ஸவரனாகின்றது. இப்படி யிடைவிடாமல், மேல் மேல் பணமானது கொண்டு போகப்பட்டால் இங்கிலாந்துகூட வெகு சீக்கிரத்தில் ஏழையாய் விடும். வேலைக்காரர்கள் ஒரு தினத்திற்கு 2 அணா, 3 அணா கூலி வாங்கும் இந்தியாவில் இது எவ்வளவு தீமையை விளைவிக்கும்." அவர், வருஷத்திற்கு 5000000 ஸவரன் கொண்டு போகப்பட்டால் என்ன விளைவு உண்டாகுமோ அதையும் கூறியிருக்கிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்பொழுது வரவர அதிகரித்து பெருந்தொகை யாகிய 30000000 ஸவரன் வருஷந்தோறும் தப்பாமல் கொண்டுபோகப் படுகிறபடியால், க்ஷாமமும், பெருவாரிக் காய்ச்சலும் (பிளேக்கும்) நாசமும், வறுமையும் நேரிடாவிடில் வேறு என்ன தான் சம்பவிக்கும்?

மில் (Mill) என்பவர் எழுதி யிருக்கும் ஹிந்து தேச சரித்திரத்தில் (Vol. VI P. 671; "India Reform Tract" II, P. 3) பின்வருமாறு சொல்லுகிறார்: "பணமானது மறுபடியும் திரும்பாமல், அப்படியே போய் விடுகிறபடியால், தேசமானது களைப் படைந்து வரவர வற்றிப் போய்விடுகிறது. கைத் தொழில்களின் தேகத்திலிருந்து பிராணாதாரமான இரத்தமானது எடுத்து விடப்பட்டு, மீண்டும் முன்னிலை யடைய உணவளிக்கப்படுகிறதில்லை."

ஸர் ஜார்ஜ் வின்கேட் (Sir George Wingate) என்பவர் 1859-ம் வருஷம் இப்படி சொல்லி யிருக் கிறார் :— "வரிகளை, வசூல் செய்த ஊரிலேயே செலவழிக்கிறதற்கும், ஒரு ஊரில் வசூல் செய்து, மற்றொரு ஊரில் செலவழிக்கிறதற்கும் அனேக வித்தியாசங்கள் உண்டு. முதலாவது பிரகாரம் ஜனங்களிடத்திலிருந்து வசூல் செய்யப்படும் வரியானது, மறுபடியும் தொழில் செய்யும் ஜனங் களுக்கே திரும்பி விடுகிறது. ஆனால் வரியை வசூல் செய்த ஊரிலேயே செலவழிக்காமற் போனால் வேறு மாதிரியாய் விடுகின்றது. அவைகள் முழுதும் நஷ்டமாயே முடிகின்றன. மேலும், ஒரு தேசத்தில் வசூல் செய்த பணத்தை இதர தேசங்களில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செலவழிப்பது சமுத்திரத்தில் எறிந்து விடுகிறதற்கு ஒப்பாகும். நாம் இந்தியாவிலிருந்து இவ்வளவு நாளாய் இவ்வாறுதான் பணத்தைப் பறித்தோம். மேற் சொல்லியதில் நின்றும் இந்தியாவைக் குரூரத்தோடு நாசம் செய்யும்படியான வரி இப்படிப் பட்டதென்று நாம் சுமாராகத் தெரிந்து கொள்ள லாம். இந்தியாவிலிருந்து வசூல் செய்யப்படும் தொகையானது நியாயமாய்ப் பார்த்தாலும் அல்லது நம்முடைய சுய நன்மைக்காகப் பார்த்தாலும் நம்மை கிருபை யில்லாதவர்களாகவும், இயற்கை யறிவில்லாதவர்களாகவும், யாவரு மறிந்த தன சாஸ்திரத்தின் நீதியை யறியாதவர்களாகவும் ஆக்குகின்றது.

ஸாலிஸ்பரியும் இந்திய வரியும்

லார்ட் ஸாலிஸ்பரி (Lord Salisbury) என்பவர் இந்தியாவின் இராஜாங்க காரியதரிசியாக (Secretary of State) ஒரு கடிதத்தில் (26. 4. 1875) சொல்லி யிருக்கிறார்: "பிரதிபல னில்லாமல், கிஸ்திப் பணத்தை எடுத்துக்கொண்டு வரும் இந்தியாவின் தீமையானது விபரீதமாகச் சொல்லப் படுகின்றது. இந்தியாவின் உதிரத்தை உறிய வேண்டு மென்று தீர்மானித்தபடியால், அதற்கு உரிய கத்தியை உதிரம் நிறைந்த அல்லது போதுமா னவ்வளவு உதிரமுள்ள பாகத்தில் உபயோகப் படுத்தவேண்டுமே யொழிய, கொஞ்சமும் இரத்த மில்லாதவர்களாயும், அசக்தர்களாயு முள்ளவர்கள் (உழவர்கள்) இடத்தில் உபயோகிக்கக்கூடாது."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இது 26 வருஷத்திற்கு முன்னமே சொல்லப் பட்டது. அப்பொழுது உடம்பில் போதுமா னவ்வளவு இரத்தம் உடையவராக எண்ணப் பட்டவர் யாவரும் வரவர க்ஷீணகதியை யடைந்து கொண்டிருக்கிறார்கள். இரத்தக் குறைவானது உழவர்களிடத்தில் வரவர அதிகரிக்கிறபடியால், ஜனங்கள் தற்காலத்தி லிருக்கும்படியான க்ஷாமங் களுக்கும், தொற்றுநோய்களுக்கும் அதிசீக்கிரத்தில் இரையாய் விடுகிறார்கள்.

லார்ட் லாரன்ஸூம் (Lord Lawrence), லார்ட் க்ரோமரும் (Lord Cromer), ஸர் ஆகுலாந்து கோல்வினும் (Sir Auckland Colvin), ஸர் டேவிட் பார்பரும் (Sir David Barbour) இன்னும் இதரர்களும் இந்தியாவானது வெகு ஏழையா யிருக்கிறதென்று கூறியிருக்கிறார்கள்.

இப்படி பணத்தைக் கொண்டு போகிறது மாத்திர மல்ல, இந்தியாவில் பிரிடிஷ் இராஜாங் கத்தை ஸ்தாபிப்பதற்காக நடந்த எல்லா யுத்தங் களிலும் ஹிந்து தேசத்தாரின் உதிரம் சிந்தப் பட்டது மல்லாமல், இன்றை வரைக்கும் இராஜாங் கத்தை ஸ்தாபித்து, அதைக் காப்பாற்றும் பொருட்டு இந்தியாவுக்குள்ளும், வெளியிலும் நடந்த எல்லா யுத்தங்களிலும், இன்னும் இதர வழிகளினாலும் செலவழிந்த ஒவ்வொரு தம்பிடியும் (சில அற்ப செலவு தவிர) ஹிந்து தேச ஜனங்களிடத்திலிருந்தே பறிக்கப்பட்டது. ஆனால், பிரிட்டனோ ஒரு காசு கூடச் செலவழிக்கவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரிடிஷ்காரர்களுடைய நன்மைக்காகச் செய்யும் ஒவ்வொரு செலவுங்கூட இந்தியாவின் தலை மீதே போடப்பட்டு, அனியாயம் செய்யப்படுகின்றது. இந்தியாவின் வரவைப் பரிசோதித்துப் பங்கிட இராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட சபையின் சிபார்சினால் ஒரு வருஷம் 250000 ஸவரன் திருப்பி விட்டு ஏதோ வெகு கொஞ்சம் நியாயம் செய்தார்கள். இப்படி செய்யும் சொல்ப நியாயத்திற்கும்கூட நாம் எவ்வளவோ நன்றியறிவுள்ளவர்களா யிருக்கிறோம். இவ்வாறே மேல்மேலும் நியாயம் செலுத்தப்படுமென்று நம்புகிறோம். இச் சிறு நியாயத்திற்குக்கூட ஆங்கிலேயருக்கு ஒவ்வொரு விஷயத்தையும் தெரியப்படுத்தி, அவர்களின் சம்மதத்தைப் பெறுவது மிகவும் அவசியம்.

மேற்கூறிய காரணங்களினால் உண்டாகும் பெருங் களைப்பும், நாசமும் வெகு பயங்கரமா யிருக்கின்றன. மேலும் இவைகள் தற்காலத்தி லிருக்கும்படியான க்ஷாமங்கள், தொற்று நோய்கள் முதலியவைகளை விளைவிக்காமற் போகாது. பிரிடன் தேசமானது இப்படிப்பட்ட ஸ்திதிக்கு வந்தால் அதன் கதி என்ன? இக் கேள்வியை அது தானே கேட்டுக்கொண்டு உத்தரவளிக்கட்டும். இந்தியாவி லிருக்கும் ஆங்கிலேயர்கள் இக் கேள்விக்கு முகங் கொடுத்து விடை கொடாமல் எப்பொழுதும் பின்வாங்குகிறார்கள். அவர்களுடைய சுயநலத்தையே பாராட்டும்படியான அற்பத் தன்மை, அவர்களை இக் கேள்விக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விடை கொடுக்கத் திறமில்லாத குருடர்களாகவும், செவிடர்களாகவும் ஆக்கி விடுகின்றது.

கொடுங் கோன்மை

இந்தியாவின் வருமானத்தைச் செலவழிப்பதில் ஹிந்து தேசத்தாருக்குக் கொஞ்சங்கூட அதிகார மில்லாதபடியால், தேசத்தின் நல்லாட்சியிலும் அவர்களுக்கு அதிகாரமே யில்லை என்பதை மாத்திரம் சொன்னால் போதும். இராஜாங்கத்தின் அதிகாரம் முழுதும் சுயேச்சையானதும், கொடுமை யாயு மிருப்பது மல்லாமல், அரசாட்சியானது அன்னியரால் செலுத்தப்பட்டு, இரத்தத்தை எல்லாம் உறியும்படியானதா யிருக்கிறபடியால், தடை யில்லாமல் களைப்பையும், நாசத்தையும் தருவதா யிருக்கின்றது.

ஸர் வில்லியம் ஹண்டர் (Sir William Hunter) வாஸ்தவமாய்ச் சொல்லி யிருக்கிறார்: "உலகத்தி லிருக்கும் ஜனத்தொகையில் ஆறில் ஒரு பங்குள்ள ஜனங்களானவர்கள், சிறு வயது முதல் ஆங்கிலேயர் களால் கொடுக்கப்பட்ட சுவாதந்திரிய மென்னும் உணவைப் புசித்து, ஊக்கத்தோடு வாழ்ந்த பிறகு தங்களுடைய சுய அரசாட்சியைச் செலுத்துவதில், என்றென்றைக்கும் கொஞ்சங்கூட அதிகாரம் கிடையா தென்று சொல்லலா மென்பதை நான் நம்புகிற தில்லை. 'அதிகார மில்லாமற் போனால் வரியு மில்லை' (No Taxation without representa-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

tion) என்ற யாவரு மறிந்த நீதியை நாம் ஒரு கூட்டத்தார் மனதில் நன்றாய் அழுந்தும்படி கற்பித்து விட்டு, அவர்களுடைய தேசத்து வருமானத்தைச் செலவழிப்பதில் ஒரு அதிகாரமும் என்றைக்கும் கொடாமல் மறுத்துவிடலா மென்பதையும் நான் நம்புகிற தில்லை.''

(இந்தியா: 15.12.1906 — பக். 8-9)

* * *

4

பிரிடிஷ்காரருக்குத் தகாததும், சுய நாசத்திற்குக் காரணமானதும்

இந்திய இராஜாங்கக் காரியதரிசியின் சபையைச் சேர்ந்த ஐவர்கள், ''பிரிடிஷ் இராஜாங்கத்தார் வெளிக்கு வாக்குத் தத்தம் செய்துவிட்டு, உள்ளே அதைத் தவறி நடக்கும் அபவாதத்திற்கு ஆளாயிருக்கிறார்கள்'' என்று சொல்லி யிருக்கிறார்கள். (Report 20th January 1860)

லார்ட் லிட்டன் (Lord Lytton) என்பவர் இந்தியாவுக்குப் பிரதியரசனாக யிருந்த பொழுது, 1878-ம் வருஷம், மே (May) மாதம் 2-ம் தேதி, இந்திய இராஜாங்கத்தைப் பற்றி யெழுதும் ஓர் கடிதத்தில் சொல்லுகிறார்: ''1833-ம் வருஷம் சட்டமானது (Act) நியமிக்கப்பட்ட வுடனே, இராஜாங்கமானது அதை நிறைவேற்றாமல், நழுவுதற்கு வேண்டிய வழிகளை எல்லாம் தேடத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொடங்கிற்று. ஆகையால் நாம் அச் சட்டத்தை நிறைவேற்றாம லிருப்பதற்கும், அவர்களை மோசம் செய்வதற்கும் இடையே ஓர் வழியைத் தேட வேண்டியதாயிற்று. ஆகையால் நாம் கொஞ்சமும் ஸன்மார்க்க மில்லாத வழியைத் தேடி யெடுத்தோம். இவ் வழியோ, நியமித்த சட்டத்தை ஓர் பயித்தியக்காரச் சட்டமாக்கிவிட்டு, அதை (Charter) ஓர் உபயோகமற்ற கடிதமாக்கிவிட, பதபதப்புடன் செய்யும் தெளிவான உபாய தந்திரங்கள். இங்கிலாந்து, இந்தியா இரண்டு இராஜாங்கங்களும் வெளிக்கு மாத்திரம் வாக்குத் தத்தம் செய்கிறார்களே யொழிய, நிச்சயமாய் காரியத்தில் ஒன்றும் செய்கிறதில்லை யென்று அவர்கள் பேரில் சொல்லும் பழிக்கு, விடை கொடுப்பதற்கு அசக்தர்களா யிருக்கிறார்க ளென்பதில் எனக்கு சமுசயமே யில்லை.'' (ஹிந்து தேச காங்கிரஸின் முதல் ரிப்போர்ட்—First Report of the Indian National Congress)

இங்கிலாந்தி லிருக்கும் ஆர்கயல் (Argyll) என்னும் மாகாணத்துப் பிரபுவானவர் சொல்லி யிருக்கிறார் : "நாம் நம்முடைய கடமைகளை யாகினும் அல்லது செய்த வாக்குத் தத்தத்தை யாகினும் அல்லது எடுத்துக்கொண்ட வினையை யாகினும் நிறைவேற்றவில்லை (Hansard: 9.4.1883.)

லார்ட் நார்த் புருக் (Lord Northbrook) என்பவர் பிரிட்டிஷ்காரர் செய்த ஸத்திய வாக்கை (Solemn Pledges) நிறைவேற்றும்படி லார்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸாலிஸ்பரியை (Lord Salisbury) வேண்டின பொழுது, அதற்கு அவர் "அதெல்லாம் 'இராஜ தந்திர' வஞ்சனை" (Political Hypocrisy) என்று விடை கொடுத்தார். (Hansard : 9.4.1883)

பிரிட்டனுடைய சுய நாசத்திற்குக் காரணமானது

ஸர் ஜான் மால்கோம் (Sir John Malcolm) சொல்லுகிறார் : "நாம், தேசவாஸிகளைக் கௌரவமும், கண்ணியமுமான உத்தியோகத்திலிருந்து நீக்கினால் இந்த மகத்தான இராஜாங்கம் வெகு காலம் நீடித்திருக்குமென்று நம்புவதற்கு ஹிந்து தேசச் சரித்திரத்திலாவது அல்லது வேறு எந்த தேச சரித்திரங்களிலாவது இடமே கிடையாது... நாம் கொடுக்கும் வித்தையை நாமே உபயோகிக்கா விட்டால் நமக்கு விரோதமாகவே முடியும்... மேற் சொன்ன ஏற்பாடுகளின்படி நாம், வித்தை கற்பிப் போர்களின் புத்தியை உபயோகிக்கத் தக்க கடமைகளை உண்டாக்காவிட்டால், நாமே நம் முடைய இராஜ்ஜிய நாசத்திற்கு வேண்டிய கருவி களை யுண்டாக்குவது போலாகும். ஆகையால், இதனால் விளையும் தீங்கானது நம்மோடு மாத்திரம் போகிறதில்லை. ஆனால், நம்முடைய இராஜ்ஜிய நாசத்திற்குக் காரணமான தீங்குகளும்கூட அதிலேயே பொருந்தி யிருக்கின்றன."

ஜான் பிரைட்டினுடைய (John Bright) அபிப்பிராயம் : "இப்படிப்பட்ட அரசாட்சியில், ஆங்கிலேய இராஜாங்கத்திற்கும், ஆங்கிலேயர்களுக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கும் வெகு சீக்கிரத்தில் பெரும் பீடையையும், மான பங்கத்தையும் விளைவிக்கத்தக்க ஏதோ ஒரு அபார மான குற்றமிருக்கிற தென்பது என் கருத்து.'' (மான்செஸ்டர் பட்டணச் சாலையில் [Manchester Town hall] செய்த பிரசங்கம் 11-12-1877)

இங்கிலாந்திலிருக்கும் டிவான்ஷயர் (Devonshire) என்னும் மாகாணத்துப் பிரபுவானவர், "ஹிந்து தேச ஜனங்களுக்கு வித்தை கற்பித்து, அவர்களுக்கு உங்களுடைய நாகரீகத்தையும், வளர்ச்சியையும், உங்களுடைய நூல்களையும் கொடுத்து விட்டு, அதே காலத்தில் அவர்களை ஆளும் ஆங்கிலேயர்களை முதலில் துரத்திவிட்டா லொழிய, வேறு எவ்விதத்தாலும் அவர்களுடைய தேசத்தை ஆளுவதில் சிறிதேனும் அதிகாரம் கிடையா தென்பது கொஞ்சமும் விவேகமான தல்ல'' என்று எடுத்துக் கூறி யிருக்கிறார். (Hansard : 23.8.1883)

(இந்தியா : 22.12.1906—பக்.8)

* * *

லார்ட் ராண்டோல்ப் சர்ச்சில் (Lord Randolph churchill) என்பவர் இந்திய ராஜாங்கத்தின் காரிய தரிசியா யிருக்கும்பொழுது கஜானா அதிகாரிக்கு ஓர் கடிதத்தில் எழுதி யிருக்கிறார் :

"ஹிந்து தேசத்தார் அனாதியான வழிகளி னின்றும் மாறக் கொஞ்சமும் உடன்பட மாட்டார் கள். அதிலும் புதிதாய்ப் போடப்பட்ட வரிகளுக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடியோடு சம்மதிக்க மாட்டார்கள். அதுவுமன்றி இராஜாங்கத்தி லிருக்கும் எல்லா உத்தியோக சாலைகளிலும், சேனையிலும் அனேகமாய் அன்னியர்களான ஆங்கிலேயர்களே யிருக்கிறபடியால், வரியையும் அரசிறை முதலிய வருமானத்தையும் பற்றிய இந்தியாவினுடைய ஸ்திதியானது வெகு விநோதமா யிருக்கிறது. இந்தியாவுக்கு வெளியே செலவழிப்பதற்கு அன்னியரான ஆங்கிலேயர்களால் போடப்பட்ட இப் புதிய வரிகளினால் உண்டா யிருக்கும் கோபாவேசமானது, இராஜாங்கத்திற்கு வெகு அபாயகரமா யிருக்கும். இந்த அபாயத்தின் அளவை இந்திய இராஜாங்கத்தில் சிறிதும் சம்பந்தமில்லாதவர்கள் கொஞ்சமும் தெரிந்து கொள்ளாததுமன்றி, இந்திய இராஜாங்கத்திற்கு உத்திரவாதிகளா யிருப்பவர்களும் இவ்வபாயத்தை யறியாமல் அரசாட்சியானது மிகவும் ஒழுங்கானதா யிருப்பதாக எண்ணி யிருக்கிறார்கள். இப்படி யிருப்பது உசித மல்ல.''

லார்ட் ஜார்ஜ் ஹாமில்டன் (Lord George Hamilton) என்பவர் கபடமின்றிக் கீழ்வருமாறு எழுதி யிருக்கிறார்: ''நம்முடைய அரசாட்சியானது இந்தியாவில் புகழப்படுகிற தில்லை. ஒருநாளும் புகழப் படாது. (Times : 16.6.1896)

வேறு எப்படித்தா னிருக்கும்? தற்காலத்திய பிரிட்டிஷ்காரருக்குத் தகாத, சுய நாசத்திற்குக் காரணமான, இவ் வரசாட்சியானது நீடித்து வருமாகில், இது இந்தியாவில் ஒருநாளும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புகழ்ச்சியை யடையவு மடையாது; அடையவும் முடியா தென்பதைச் சாதாரண புத்தியினாலேயே தெரிந்து கொள்ளலாம். இப்படிப்பட்ட துக்கத்திற்கு ஹேதுவான சட்டமானது மாளாவிடில், அனியாயமானது, உலகத்தில் மிகவும் உயர்ந்த பதவியி லிருப்பவரையும் தாழ்த்திவிடும். "சுமைகளி லெல்லாம் அன்னியனைச் சுமப்பது பெருஞ் சுமை" என்று மெகாலே (Macaulay) சொல்லி யிருக்கிறார். பிரிட்டிஷ் இராஜாங்கமானது சினேகத்துடனும் பிரிட்டிஷ்காரர்களுக்குத் தக்கபடியு மில்லாமல் இப்பொழுதிருக்கிற மாதிரி ஒரு பெருஞ் சுமையாயும், அன்னியருடைய கொடுங்கோலரசாட்சியாயும் இருக்குமே யானால், சீக்கிரத்தில் சிதைவடையும். தீங்கானது ஒருநாளும் சாசுவதமன்று. இனி யாகினும் ஒருநாளும் சாசுவதமா யிருக்காது.

5

நியாயமான பிரிட்டிஷ் அரசு

நியாயமான பிரிட்டிஷ் அரசானது பிரிட்டன்-இந்தியா இரண்டிற்கும் அத்யந்தம் லாபத்தைத் தருவதா யிருக்கும். நான் எழுதுவதி லெல்லாம் என் முக்கிய அபிப்பிராயம் என்னவெனில், இப்பொழுது கண்ணியமில்லாத பிரிட்டிஷ்காரர்களுக்குத் தகாத அரசு புரிந்துவருவதின் பலனாக ஓர் பெரும் நாசத்தைத் தரும்படியான பிரிட்டிஷ் இந்திய இராஜாங்கக் கொந்தளிப்பு உண்டாவதற்குப் பதிலாக, பிரிட்டிஷ் ஜனங்கள் மாத்திரம் தங்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடமைகளைச் செய்யக் கண் விழித்து, தங்கள் மனப்பூர்வமாய் சூதில்லாமல் நியாயம் செலுத்திவர வேண்டுமென்று வாஸ்தவமான எண்ணங்கொண்டு அவர்கள் மிகவும் சிரேஷ்டமாய்த் தந்த வாக்குத் தத்தங்களையும், ஸத்திய வாக்குகளையும் விசுவாசத்துடன் மனச் சாக்ஷியாய் நிறைவேற்றத் தீர்மானித்து நின்றால், இப்பொழுது எண்ணமுடியா தவ்வளவு விஸ்தாரமான மகத்தான கீர்த்திகரமான நன்மை பிரிட்டன் - இந்தியா இரண்டிற்கும் அவசியமா யுண்டாகும் என்பதைப் பிரிட்டிஷ் ஜனங்களின் மனதில் நன்றாய்ப் பதிப்பிக்க வேண்டு மென்பதுதான்.

ஜான் பிரைட் (Mr. John Bright) என்பவர் வாஸ்தவமாய்ச்சொல்லியிருக்கிறார்: "இங்கிலாந்தி னுடைய நன்மையானது, இந்தியாவினுடைய நன்மை வாய்க்கால்களின் மூலமாய்த்தான் வர வேண்டும். இந்தியாவோடு நம்முடைய சம்பந்தத் தினால், எதையும் அடைய இரண்டு வழிகள் உண்டு. அதில் ஒன்று ஹிந்து தேச ஜனங்களைக் கொள்ளை யடிப்பதினாலும்; மற்றொன்று அவர் களோடு வியாபாரம் செய்வதினாலும். ஆனால் அவர்களோடு வியாபாரம் செய்து, அதினின்றும் வேண்டியவற்றை யடைவதே உசிதமானதென்று நம்புகிறேன். ஆனால் இந்தியாவோடு வியாபாரம் செய்து இங்கிலாந்தானது ஐசுவரியமுள்ளதாக வேண்டுமானால், இந்தியாகூட ஐசுவரியமுள்ள தாக வேண்டு மல்லவா?"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆகையால், பிரிட்டிஷ் அதிகாரிகள், சுய நலத்தைப் பாராட்டுவதில் மேற்கூறியபடி கொஞ்சம் விவேகமான வழியைத் தேடலாகாதா? இதுவரையில், இங்கிலாந்தானது கொஞ்சந் தூரம் வரைக்கும் பலவிதமான சூதும் சாமர்த்தியமுமுள்ள வழிகளினால் இந்தியாவைக் கொள்ளை யடித்து, செல்வமடைந்தது. ஆனால் நான் விரும்பி, உறுதி யாகச் சொல்லுவது என்னவெனில், இங்கிலாந் தானது இந்தியாவொடு நியாயமாயும் கௌரவத் தோடும் நடந்து கொண்டால் மிகுந்த திரவியம் பெறலா மென்றும், அப்படி இங்கிலாந்தானது நடந்து கொள்வதினால் இந்தியாவுக்கும், தனக்கும் ஓர் நல்ல அதிர்ஷ்டம் உண்டாவது மன்றி உலகத்திற் கெல்லாம் ஓர் பெரும் திருஷ்டாந்தமாயும் நன்மை செய்வதாயு மிருக்கும்.

1883 - ம் வருஷம் மெகாலே (Macaulay) என்பவர் செய்த பெரும் பிரசங்கத்தில் கீழ்வருமாறு கருதி யிருக்கிறார் : - "எனக்கு யாதொரு பயமு மில்லை. நாம் செய்ய வேண்டிய கடமைகள் நம் கண்முன் பிரகாசிக்கின்றன. கடமைகளைச் செய்வதே விவேகமான வழியும், சுவராஷ்டிர நல்வாழ்வும், சுதேச கண்ணியமு மாகும். மிகவும் இழிவான அடிமைத் தனத்திலும் மூட பக்தியிலும் முழுகியிருக்கும் ஜனங்களை மேலே எடுத்து பிரஜை களுக்குள்ள அதிகாரங்களை யெல்லாம் பெறத் தகுந்தவர்களாக்கி, அவர்களை யாண்டு வந்தால், தடையின்றி நாம் யாவரும் புகழ்ந்து கொள்ளும்

பா.—23

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படியான ஓர் பெரும் பட்டத்திற்குக் காரணமாயிருக்கும். அரசாட்சியானது நம்மிடத்திலிருந்து போய்விடலாம். எதிர்பார்க்காத விக்கினங்கள் நேர்ந்து நமது ஆழமான உபாய தந்திரங்களை எல்லாம் தாறுமாறாக்கிவிடலாம். நமக்கு வெற்றி நிலை பெறாததாயிருக்கலாம். ஆனால், சில வெற்றியில் விபத்தே கிடையாது. இயற்கையாய் அழிவில்லாத இராஜாங்கமும் ஒன்றிருக்கின்றது. மூர்க்கத்தனத்தை விட்டு, சாந்தமான நியாயத்திற்கு உட்படுவதுதான் அந்த வெற்றி. நம்முடைய கலைகளும், நல்லொழுக்கங்களும், சிறந்த நூல்களும், உயர்ந்த நீதிகளும்தான் அந்த இராஜாங்கம்.''

ஸர் வில்லியம் ஹண்டர் (Sir william Hunter) என்பவர் கம்பெனியாரால் செய்யப்பட்ட நல்வினைகளைப் பரிசோதித்துப் பார்த்து விட்டுச் சொல்லுகிறார்: "ஆனால் இந்தியாவானது விக்டோரியா சக்கிரவர்த்தினியினுடைய ஆளுகைக்குள் வந்த பிறகு, இப்படி கம்பெனியார் செய்ய ஆரம்பித்த நன்மையானது, விருத்தியடைந்தபடியால், அதற்கு வேண்டிய உத்தியோகஸ்தர்கள் இந்தியாவிலே எளிதில் கிடைக்கக் கூடியதாயிருக்கிறபடியால், இங்கிலாந்திலிருந்து உத்தியோகஸ்தர்களை ஏற்றுமதி செய்வது இந்தியாவுக்கு ஓர் பெரும் சுமையாயிருக்கிறது. 40 வருஷத்திற்குப் பிறகு, இத் தேசமானது 50 மடங்கு அதிகமான அயர்லாந்தைப் (Ireland) போலாய்விடும். அன்ய தேசத்துக் கூலிக்காரரைக் காட்டிலும், இத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேசத்துக் கூலிக்காரரே மலிவாய்க் கிடைப்பார்கள். இத் தேசத்தாருக்கே அதிகமாய் உத்தியோகங்களைக் கொடுப்பது, நல்ல நீதிக்குக் காரணமாயிருப்பது மன்றி, இத் தேசத்து வருமானத்திற்கும் தகுந்ததா யிருக்கிறது. ஸிவில் ஸர்விஸுக்கு (Civil Service) சில ஹிந்து தேசத்தாரைச் சேர்த்துக் கொண்டு கண் துடைக்கும் பேரம் உதவாது. ஹிந்து தேச ஜனங்களைச் சுலுவாயும், நியாயமாயும் ஆள வேண்டுமானால், அவர்களை நாம் அவர்களைக் கொண்டே ஆளவேண்டும். அவர்களை யாளும் பொருட்டு, ஆங்கிலேயர்களுக்கும் ஹிந்து தேசத்தாருக்குக் கொடுக்கும் கூலியே கொடுக்க வேண்டும்.'' (England's Work in India P. 118-9)

இங்கிலாந்திலிருக்கும் டிவான்ஷயர் (Devon shire) என்னும் மாகாணத்துப் பிரபுவானவர் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்: "இன்னாட்டை நன்றாய் ஆளவேண்டுமானால், மிகவும் புத்திமான்களா யிருக்கும் இந்து தேசத்தாரைக் கொண்டே ஆளவேண்டும்.''

இக்காலத்தில் அனேக சமாசாரங்கள் மின்னல் வேகமாய் நடக்கிறபடியால், நாளைக்கு என்ன சம்பவிக்குமோ அதைச் சொல்லுவது மிகவும் அரிது. ஏனெனில், நன்மையாகினும், தீமையாகினும் செய்ய ஆரம்பித்துவிட்டால் அதற்குத் தகுந்த பலனே யுண்டாகும். நன்மையிலிருந்து நன்மையும், தீமையிலிருந்து தீமையும் உண்டாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனப்பூர்த்தியாய், விசுவாஸத்துடன் ஸத்திய வாக்கை (Solemn Pledges) நிறைவேற்றுவதில் ஹிந்து தேசத்தார் எதிர்பார்ப்பதென்ன வென்றால், பிரிட்டிஷ் அரசனும், ஜனங்களும், இராஜ சபையும், இராஜாங்கமும் இந்தியாவின் வேண்டுகோளை ஸத்தியமாய் பூர்த்தி செய்யப் பிரயத்தனப்படுவதே யாம். பம்பாய் பாதிரித் தலைவர் (Bishop of Bombay) இந்தியாவின் வேண்டுகோளெல்லாம் பிரிட்டிஷ்காரரின் கீழ் சுய ஆட்சி பெற்று ஆங்கிலேயர்களுக் குரிய சுவாதந்திரியங்களை அடைவதுதான் என்று சொல்லியிருக்கிறார்.

(இந்தியா: 29.12.1906—பக். 8-9)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீமான் திலகரைப் பற்றி மிஸ்டர் நெவின்ஸன் கூறுவது

"பாரத தேசத்தில் நவீன சக்தி"[1] என்னும் பெயருடன் மிஸ்டர் நெவின்ஸன் என்ற ஆங்கில ஆசிரியர் எழுதி வெளியிட்டிருக்கும் நேர்த்தியான நூலைப் பற்றி முன்னமே பேசியிருக்கிறோம். அந் நூலில் ஸ்ரீ திலகரைப் பற்றி அவ் வாசிரியர் தந்திருக்கும் அபிப்பிராயத்தைக் கீழே பெயர்த் தெழுது கிறோம் :

"திலகருடைய நிறைந்த விழிகள் அற்புத மான பிரகாசமுடையன. அவ் விழிகளிலே துணிவும் எதிர்ப்பும் ஒருவிதமான தகவு முண்டா யிருக்கிறது. ஆனால் பொதுவிலே அவருடைய மாதிரியானது சாந்தத்தையும், அடக்கத்தையும் காண்பிக்கக் கூடியது. வீட்டி லிருந்து பேசும்போதும், சபைகளிலே செய்யும் பிரசங்கங்களிலும் அவர் சுருங்கிய உறுதி யுடைய வாக்கியங்களை உபயோகிக்கிறார். அவருடைய பேச்சில் அலங்கரிப்புக்க ளில்லை. வெளிப்படையான ஆவேச மில்லை. அவர் மனதிலே உத்வேகம் நிரம்பி யிருக்கும் போதுகூட அவருடைய பிரசங்கம் அனாவசிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மான பாஷாலங்கார மில்லாத உண்மைகளின் அடுக்காக இருக்குமே யல்லாது அவர் பேச்சில் வெளிப்படையான ஆத்திரம் தோன்றுவ தில்லை. இந்த உறுதியும், அடக்கமும் அவர் தமது சொந்த நன்மை தீமைகளைக் கருதாம லிருப்பதினின்றும், அவருடைய சட்ட நூற் பயிற்சியினின்றும் உண்டாயின வென்று தோன்றுகிறது. முதலில் அவரை ஒருவன் பார்த்தால் அவருடைய அறிவு சிறந்ததோர் வக்கீலறிவின் தன்மை யுடைய தென்று தோன்றக்கூடும். வக்கீலறிவாவது யாதெனில், மிக்க தர்க்க நுட்ப முடையதாய் ஸூக்ஷ்ம பேதங்களை அறியத் தக்கதாய் தான் யோசனை செய்வதைவிட, யோசனைகளை வெளியிட்டுரைப்பதில் அதிகத் திறமை யுடைய தாய், நிமிஷத்தில் யோசனையையும், வெளி யுரையையும், சபையிலுள்ளோருக்குப் பொருந் தும்படி செய்யும் வன்மை யுடையதாய் அமைந் திருப்பதே யாகும்.

ஆனால், அவருடைய சரிதையையும், முயற்சிகளையும் கவனிக்குமிடத்து, அவரு டைய அறிவு கேவலம் மேலே கூறப்பட்ட தன்மை யுடைய தன்றென்பது விளங்கும். தானாகவே அரிய சாஸ்திர யோசனைகள் செய்வதிலும் பண்டிதனுக் குரிய தொழில்களில் பிரவிர்த்திப்பதும் அவருடைய அறிவின் உண்மையான இயற்கை யாகு மென்பது ஆராய்ச்சியின் பேரில் தெளிவாகும். இந்தியா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வின் முக்கியமான சீர்திருத்தக் காரருக்குள்ளே, இவர் 'முழு வைதிகக்' கட்சியைச் சேர்ந்தவர். இந்தியாவுக்குப் பெரு விபத்துகள் நேரிடும் போது பகவான் அவதாரம் செய்து, அவ் விபத்துகளை நீக்குவா ரென்ற நம்பிக்கை இவருக்குண்டு. மேல் நாட்டிலிருந்து தருவிக்கப் பட்டிருக்கும் நாஸ்திகக் கோட்பாடுகளை இந்தியாவில் பரவ விடாமல் எதிர்ப்பதில் இவருடைய மத நம்பிக்கை இவருக்கு ஓர் பெரும் துணையாக நிற்கின்றது. பாண்டித்யத் திலே இவருடைய புகழ் உலகத்தில் ஸம்ஸ்கிருத விற்பன்னர்கள் உள்ள இடங்களி லெல்லாம் பரவி யிருக்கிறது. ஆழ்ந்த பயிற்சியும், நிகரற்ற சுய அறிவுமுடைய பண்டிதர் இவர் என்பதை எல்லோரு மறிவார்கள்.

'வேதங்களின் துருவமுனைப் பிறப்பு' என்ற புஸ்தகத்திலே இவர் பூர்வீக ஆரியர்கள் வடக்கு துருவப் பிரதேசத்தில் வாழ்ந்தார்கள் என்பதை வேதங்களினின்றே தக்க ஆதாரங்கள் எடுத்துக்காட்டி இவர் ருஜுப்படுத்தி யிருக் கிறார். அப் புஸ்தகத்தின் கொள்கை எவ்வளவு தூரம் மெய்யென்பதை நிச்சயித்துக் கூற நான் வல்லமை யுடையவனன்று. ஆனால், அவர் அதிகோரமான ஆபத்துக்கள் விளைந்திருந்த காலத்திலே - பணம், செல்வாக்கு, புகழ் எல்லாம் மறைந்திருந்த தருணத்தில்- அத்தனை பெரிய கிரந்த மெழுதிய விஷயமே எனக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறது. அவ்வித

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மான தருணத்திலே மற்ற சாதாரண மனிதர்களுக்குப் புராதன கிரந்தங்களைப் பற்றியும், துருவப் பிரதேசங்களைப் பற்றியும் நினைப்பதற்குக்கூடத் தைரியம் ஏற்பட்டிருக்காது.

அவருடைய உள்ளம் கடூர நிலை யடைந்து போய் விட்டதென்று சிலர் சொல்லுகிறார்கள். இந்தியாவில் மிகுந்த உன்னத நிலையிலேயிருப்பவரும் நற்குண முடையவருமாகிய ஓர் ஆங்கிலேய உத்தியோகஸ்தர் "எனக்குத் திலகரிடம் அரிய மதிப்புண்டு. அவரை நேரில் சிநேகிதம் செய்துகொள்ள வேண்டுமென்ற இஷ்டமுண்டு. ஆனால், அவரை அழைப்பதற்குப் பயமா யிருக்கிறது. நான் கூப்பிட்டால் எங்கே உதாசீனம் செய்து விடுவாரோ என்று தோன்றுகிறது. அவர் அத்தனை தூரம் ஆங்கிலேய அதிகாரிகளிடம் குரோத முடையவர் என்று சொல்லிக் கொள்கிறார்கள்" என்பதாக என்னிடம் தெரிவித்தார். சில வாரங்களுக் கப்பால் அகஸ்மாத்தாக மேற்கூறப்பட்ட உத்தியோகஸ்தருக்கும் திலகருக்கும் சந்திப்பு நிகழ்ந்தது. அப்பொழுது எதிர்பார்த்ததற்கு மாறாக அவ்விருவரும் பரஸ்பரம் மதிப்பும் உபசாரமும் பாராட்டிக் கொண்டார்கள். எனினும் நேர்த்தியான சுபாவமுடைய ஓர் மனிதனுக்குக் குரோத குணம் ஏற்படுவது சாத்தியமானால், இந்தத் திலகருக்கு அவ்வித குணம் ஏற்படும்வண்ணமாக அவருக்குப் பிறர் செய்த தீங்குகள் எத்தனையோ இருக்கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(இதன் பிறகு திலகரே தமக்குச் சிம்மகர் கோட்டையின் சூழல்களை யெல்லாம் காண்பித்த விஷயத்தைப் பற்றி நெவின்ஸன் விஸ்தாரமாகப் பேசி விட்டுப் பின்வருமாறு முடிக்கின்றார்.)

புதிய கட்சித் தலைவர்களனைவரிடத்தும் காணப்படுவதாகிய ஓர் ஆகர்ஷண சக்தி என்னை அறியாமலே அவரிடம் எனக்கு மதிப்புண்டாகும்படி செய்யும் கவர்ச்சித் திறன் இவரிடம் இருக்கின்றது. சஞ்சலம், சந்தேகம் என்பவற்றின் நீக்கமும், வீரப் போரிலே ஆனந்தமும், சுய நலத்திலே சிறிதேனும் கருத்தில்லாமையும் ஆகிய இக் குணங்களால் அந்த ஆகர்ஷண சக்தி ஏற்படுகிறது. (எனக்கே இப்படியானால் அவருடைய சொந்த தேசத்தாருக்கு எப்படி யிராது.) அவர்கள் விஷயத்தில் இந்த அற்புதமான ஆகர்ஷண சக்தியுடன் பரம ஏழைகளான கிராமாந்திர ஜனங்களுள்பட எல்லா வகுப்பு மனிதர்களிடமும் அவருக்குள்ள நெருங்கிய பழக்கத்தையும், அவர்களுடைய பிரியத்திற்கடுத்த ஆசாரங்கள், மத நம்பிக்கைகள் என்பவற்றை அவர் தாங்கும் திறமையையும் சேர்த்து யோசிப்போமானால், அவர்களினிடையிலே அவருக்கு மட்டற்ற செல்வாக்கு நிலைத்திருப்பது சிறிதேனும் வியப்பாக மாட்டாது.

(இந்தியா : 12.12.1908 பக். — 5-6)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. 'பாரத தேசத்தில் நவீன சக்தி' :

நெவின்ஸன் பற்றியும், அவரது நூலைப் பற்றியும் (அதாவது, "பாரத தேசத்தில் நவசக்தி" [நவீன ஆவேசம்]) பாரதி எழுதிய வசனங்கள் இவைதாம் :

"இங்கிலந்திலிருந்து சென்ற வருஷக் கடைசியில் நமது நாட்டிற்கு வந்து பல இடங்களில் யாத்திரை புரிந்து சென்ற மிஸ்டர் நெவின்ஸன் என்ற ஆங்கிலேய விற்பன்னரைப்பற்றி நேயர்கள் அறிந்திருக்க வேண்டும். அவர் இப்போது "பாரத நாட்டில் நவசக்தி" என்ற பெயர் கொண்ட புஸ்தகமொன்று எழுதிப் பிரசுரம் செய்திருக்கிறார். அதில் நமது தேசத்தின் தற்கால நிலைமையைப்பற்றிப் பல ரஸமான செய்திகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. மிகுந்த அறிவும், கல்வித் தேர்ச்சியும், இதய விசாலமும் உடையவராகிய அந்த ஆங்கிலேயர் மேற்கூறப்பட்ட புஸ்தகத்திலே குறிப்பிட்டிருக்கும் அபிப்பிராயங்கள் சிலவற்றைக் கீழே பெயர்த்தெழுதுகிறோம்."

(இந்தியா: 24.10.1908—பக்.5.)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீமான் அரவிந்த கோஷ்

ஸ்ரீமான் அரவிந்த கோஷைப் பற்றி மிஸ்டர் நெவின்ஸன் பின்வருமாறு எழுதுகிறார் :

"அரவிந்த கோஷின் வசனங்களிலே ஓர் தெய்வீகமான தொனி — ஓர் ஆத்மீக உயர்வு — விளங்குகிறது. புராதன காலங்களிலே இவர் இருந்திருப்பாரானால், "சமய வெறி" கொண்டவ ரென்று ஸாமானியரால் கூறப்படும் மஹான்களில் ஒருவராக விளங்கி யிருப்பார். அத்தனை தூரம் இவரிடம் ஒருநிலைப்பட்ட திருஷ்டியும், எல்லாம் மறந்து நிற்கும் பக்தியும் காணப்படுகின்றன.

சுதேசீயம் என்பதை அரவிந்தர் ராஜ நீதி சம்பந்தமான ஓர் நோக்கமாகவேனும் செல்வ வளர்ச்சிக் குரிய ஓர் உபாயமாகவேனும் பாராட்டவில்லை.

பூர்வகாலத்திலே உயிரை வெறுத்துத் தெய்வாராதனை புரியும் மேலோர்களைச் சுற்றி, ஓர் ஜோதி வளைய மிருந்ததாக மற்ற பக்தர்கள் கண்ணுக்கு எங்ஙனம் தோன்றி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யதோ, அதுபோலவே சுதேசீயத்தைச் சுற்றி ஓர் தெய்வீக ஜோதி அரவிந்தர் விழிக்குப் புலப் பட்டது.

ஆழ்ந்த யோசனையே இயற்கையாகக் கொண்டு, பிறருடைய பகைமையையும், அபிப்பிராயத்தையும் சிறிதேனும் பொருட் டாக்காமல், எனக்குத் தெரிந்த மனிதர்களிலே அதிகமாக மவுன இயற்கை யுடையவராய் விளங்கும் அரவிந்தர் ஞான திருஷ்டி பெற்ற மேலோர்களில் ஒருவராகவே சொல்ல வேண்டும். ஆனால், ஞானதிருஷ்டியிலே கண்ட விஷயங்களை ஸாமானிய அனுபவத்திற்குக் கொண்டு வந்துவிட வேண்டுமென்று கருவி கரணங்களைக்கூட உத்தேசியாமல் முயற்சி புரியும் வகுப்பைச் சேர்ந்தவர்.

1908-ம் வருஷத்தில் பம்பாயிலே அரவிந்தர் செய்த ஓர் உபந்யாசத்திடையே அவர், "சுதேசீயம் இறைவனிடமிருந்து வருவதாகிய ஓர் தர்ம மார்க்கம்" என்றார்."

(இந்தியா : 31.10.1908 — பக்.3)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதி : 7

Two Remarkable Books.

இரண்டு முக்கியமான புஸ்தகங்கள்.

தமிழ்ப் புஸ்தகங்கள் இப்போது சிறிது காலமாக மிகவும் [illegible] தொடங்கிவிட்டன. அச்சியந்திரம் கண்டுபிடித்திருப்பதால் எத்தனையோ விதமான அநுகூலங்களிருந்த போதிலும், சிற்சில தீமைகளில்லாமற் போகவில்லை. அவற்றிலே முக்கியமான தீமை யாதெனில், படித்தற்குத் தகுதியுடையவையும், இல்லாதன பலவுமாக நூற்றுக்கணக்கான புஸ்தகங்கள் "[illegible] வெளியில் வரும் புற்றீசல்போலப் [illegible]" வெளிப்படுகின்றன. அச்சியந்திரங்கள் மிகவும் வரம்பற்றுப்போய்க் கிடக்கும் இங்கிலாந்து முதலிய தேசங்களிலே இருப்பதுபோல நமது தேசத்தில் மேற்படி கஷ்டம் அத்தனை அதிகமாக இல்லையென்றாலும், இக்குறைபாடு அநேகருக்குக் காண்பிக்கப்பட்டு வருகின்றது. இப்படிப்பட்ட காலத்தில் படித்தற்கினிய, நல்ல, பயனுடைய புஸ்தகங்கள் அச்சிட்டு வருவதைக் காணும்போது மனதுக்கு மிகுந்த [illegible] ஏற்படுகின்றது. [illegible] புஸ்தகங்களையும் [illegible] மனதுக்கு மிகுந்த [illegible]

மதிப்புரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

☐

இப் பகுதியில் எல்லோரும் வாசிக்கத்தக்கனவும், விலக்கத்தக்கனவும், பயனுள்ளனவுமான நூல்களுக்கும், பத்திரிகைகளுக்கும் விமர்சனங்கள் எழுதப்பட்டனவற்றைக் காணலாம்.

படித்தற்கினிய, நல்ல, பயனுள்ள நூல்களைப் பாராட்டும் அதே போழ்தில், அந் நூல்களில் காணக் கிடக்கும் பிழைகளைப் பாரதி சுட்டிக் காட்டும் பான்மையையும் இங்கே நாம் காணலாம்.

மக்களுக்கு வேண்டிய செய்திகள் கொண்ட நூல்கள் தமிழ் முதலிய சுதேச பாஷைகளில் எழுதப்படல் வேண்டும் எனவும், பயனுள்ள சிறந்த நூல்களைத் தமிழறிவுள்ள அனைவரும் ஆதரிக்க வேண்டும் எனவும், நல்ல நூல்களின் மதிப்பு, அவற்றினூடே விரவிக் கிடக்கும் 'பச்சை பச்சையான' கருத்துக்களால் குறைவுபடுகின்றது எனவும், பத்திரிகைகளில் "ஸயன்ஸ்" என்று சொல்லும் நவீன பரிசோதனை வழிகளை விளக்குவதே காலத்தின் தேவை எனவும், பாரத நாட்டினரின் ஒற்றுமைக்கு ஊறு விளைக்கும் நூல்களை மக்கள் ஆதரிக்கக் கூடாது எனவும், அறிவு விளக்க நூல்களை மக்கள் முற்றும் அங்கீகரித்துக் கொள்ள வேண்டும் எனவும் எழுதியுள்ள மதிப்புரைப் பகுதிகள் நம் சிந்தனைக்கு விருந்து அளிக்கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நெல் சாகுபடி

சென்னை மாகாணத்து தென் ஜில்லாக்களிலே நெல் சாகுபடி நடக்கும் மாதிரிகளின் சம்பந்தமாக மதுரை ஜில்லா போர்டில் விவசாய உத்தியோகம் பார்த்தவராகிய ஸ்ரீ ஜி. காமாக்ஷி ராவ் என்பவர் ஓர் நேர்த்தியான சிறு புத்தகம் இங்கிலீஷிலே எழுதியிருக்கின்றார். அதிலே இவர் தென் இந்தியா விவசாயிகள் தமது பூர்வீக வழிகளினின்றும் சிறிதேனும் மாறுபட விரும்பாதவர்களாயும், நவீன விவசாய சாஸ்திர அபிவிருத்தியினால் ஏற்பட்டிருக்கும் புது முறைகளைக் கவனியாதவர்களாயும் இருப்பதினால் பெரு நஷ்டங்களுக் குட்படுவதைப் பற்றிக் கண்டனை செய்து, அவர்களுக்கு அனுகூலமான சில விஷயங்களைப் போதனை செய்திருக்கின்றார். ஆனால் இங்கிலீஷில் உபந்நியாச மெழுதிவிட்ட மாத்திரத்திலேயே நமது விவசாயிகள் திருந்திவிட மாட்டார்க ளல்லவா! நேரிலே அவர்களை அழைத்து, தமிழ் முதலிய சுதேச பாஷைகளிலே உபந்நியாசம் புரிந்தும் நேரிலே செய்து காட்டியும் அவர்களைத் திருத்த முயலவேண்டும். ஸ்ரீ காமாக்ஷி ராவ் தமது சிறு புஸ்தகத்தைத் தமிழிலேயும் தெலுங்கிலேயும் மொழிபெயர்த்தற்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குரிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். இது நிற்க.

அவர் பழைய விவசாய வழிகளிலே அனேக குற்றங்கள் இருப்பதாகச் சொல்லுகின்றார். இவர் கூறும் சீர்திருத்தங்களிலே சிலவற்றைக் கீழே தருகின்றோம். நாற்று நடுதல் விஷயத்திலே அவர் சொல்லும் சீர்திருத்தம் வெகு முக்கியமானது. அதாவது சரியான நிலைமையிலிருப்பனவும் நோயற்றனவு மாகிய நாற்றுக்களையே நட வேண்டும். 6 முதல் 9 அங்குலம் வரை இடம் விடாமல் நடவே கூடாது. நாற்றுக்களின் வேரை நிலத்துக்குள் பலமாக அழுத்த வேண்டும். அறுவடைக்கு முன்பாகவே தானியங்களை முற்ற விட்டு விடும் வழக்கத்தைஇவர் பலமாகக் கண்டனை செய்கின்றார். விரல்களினிடையே அமுக்கிப் பார்த்தபோது பால் வராதிருக்கும்படி அத்தனை பலமடைந்த வுடனேயே தானியங்களை அறுத்து விட வேண்டுமென்று இவர் அபிப்பிராயப்படுகின்றார். அறுப்பின் பொருட்டு தமிழ் ஜில்லாக்களிலே விவசாயிகள் நவீன கருவிகளை உபயோகியாமல், பழங்காலத்து அரிவாளையே உபயோகிப்பது தப்பென்று சொல்லுகிறார். களமடிக்கும் விஷயத்திலேயும் இவர்களின் மாதிரியானது மிகவும் அநாகரீகமா யிருக்கிறதென்று கூறுகிறார்.

இனி, பரம்படிக்கும் வழக்கம் முற்றிலும் தப்பானதென்று பல நவீன விவசாய விற்பன்னர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூறுவதை இவரும் வற்புறுத்துகின்றார். பரம்படிப்ப தினால் ஜலம் நிலத்திற்குள் அதிகமாகப் படிந்து பயிரின் வேர் வரை போகாமல் நின்று விடுகிற தென்று இவர் அபிப்பிராயப்படுகிறார். பரம்படிப்ப தால் பயிரின் வேர் குறுகி விடுகின்றது; எல்லாத் திசைகளிலும் சரிந்து வளர்கிறது. பரம்படிப்பதின் தீமைகளை விவசாயிகளுக்குப் புலப்படுத்துதல் அசாத்தியமா யிருக்கிறது. அவர்கள் புராதன வழக்கங்களையே பெரிதாகப் பாராட்டுவது மல்லாமல், தமது செய்கைக்குப் பழமொழிகளை ஆதாரமாகக் கூறத் தலைப்பட்டு விடுகிறார்கள்.

மதுரை, தஞ்சாவூர் ஜில்லா விவசாயிகள் ஒரே விதமான பயிர் செய்கிறார்களே யன்றி, அடிக்கடி பயிர் மாற்றும் நல் வழக்கத்தை அனுசரியாம லிருப்பது பற்றி ஸ்ரீ கா. ராவ் வருத்தந் தெரிவிக் கின்றார். யந்திரத்தினால் விதைக்காமல் கை யினால் விதைக்கும் வழக்கத்தையும் இவர் ஒப்புக் கொள்ளவில்லை. செங்கற்பட்டு ஜில்லாவில் கை விதைப்பு இல்லாம லிருப்பதுபற்றி சந்தோஷ மடை கின்றார். கை விதைப்பினால் நேரிடும் கெடுதிகளை இவர் மிகவும் விவரமாக எழுதி யிருக்கின்றார். சில விதைகள் மிகவும் நெருக்கமாக விழுந்து விடு கின்றன. சில மிகவும் அகற்சியுற்று விழுகின்றன. சில மிகவும் ஆழத்திலே பதிந்து விடுகின்றன. சில மேலாகவே யிருக்கின்றன. இதனால் மிகுந்த விதை சேதம் ஏற்படுகிற தென்று இவர் அபிப்பிராயப் படுகிறார்.

பா.—24

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரோலினா நெல் பயிர் செய்து பார்ப்பது மிகவும் அனுகூலமென்று இவர் கருதுகிறார். இந்த நெல்லுக்கு அதிக ஈரம் வேண்டாம். இதன் வேர் அதிக ஆழம் போவதால் இது மிகவும் வேனில் தாங்கும். இது 4 மாதத்துப் பயிர். ஒரு ஏக்கருக்கு 4000 முதல் 5000 ராத்தல் வரை தானியம் கிடைக்கும். உரங்களின் விஷயமாக இவர் சொல்லும் விஷயங்கள் மிகவும் ரஸமா யிருக்கின்றன. கால்நடைகளின் மூத்திரத்தை நம்மவர் பாது காப்பது கிடையாது. செழிப்பான உணவற்ற கால்நடைகளின் சாணம் சிறந்த உரமாக மாட்டாது. இதைக்கூட வரட்டிகளாகச் செய்வ தால் மிகுந்த நஷ்டம் உண்டாகிறது. கசாப்புக் கடை கழிவுகள், வௌவால், கோழி முதலிய பக்ஷி களின் எரு, எள்ளுப் பிண்ணாக்கு, மலம், மீன், நதிகள், வாய்க்கால்கள் முதலியவற்றின் மண்டி, எலும்புகள் முதலியவை நல்ல உரமென்பதை நம்மவர்கள் அறிந்துகொள்ளவில்லை.

இனி உப்பு நிலங்களை நல்ல நிலமாக்குவதற்குச் சில வழிகள் கற்பிக்கின்றார். இட விரிக்கஞ்சி நாம் அவற்றை இங்கே விவரிக்க முடியவில்லை. ஸ்ரீ காமாக்ஷி ராவ் தமது நூலைத் தமிழிலும், தெலுங்கிலும் மொழிபெயர்க்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே மறுபடியும் செய்துகொள்ளுகின்றோம். இனி வேறு இம் மாதிரி நூல்கள் எழுதுவோரும் சுதேச பாஷைகளிலேயே எழுதுதல் நலமாகும்.

(இந்தியா : 15.12.1906 — பக். 6)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ராஜ பக்தி

இம் மகுடம் பூண்ட விஷயமொன்று செய்யுள் ரூபமாக அகவற் பாவில் எழுதப்பட்டு நமக்குக் கிடைத்தது. கௌபர் (Cowper) என்னும் ஆங்கிலப் புலவர் 'ராஜ பக்தி' யென்பதைப் பற்றி இயற்றியதை மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்க அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீ கோபால கிருஷ்ண ஐயர் தமிழில் மொழி பெயர்த்திருக்கின்றார். இதை நாம் முதலில் வாசித்தவுடன் மொழிபெயர்ப்பென்றே நினைக்கவில்லை. சாதாரணமாய் மொழிபெயர்க்கப்பட்ட வசனங்கள், விசேஷமாய்ச் செய்யுள்கள், பாரைக் காட்டில் குதிரை வண்டி போனதுபோல கடபுட வென்று ஒலிக்கும்.

ஆனால், நமது ஐயர் செய்திருக்கும் மொழி பெயர்ப்பானது தெரிந்தவர்க் கன்றி மற்றவர்க்கு மொழிபெயர்ப்பெனவே தோன்றாது. இது அதை வாசிப்பார் மனத்திற்கே தோன்றும். இச்செய்யுளில் விளங்கும் சொற் பொலிவும் பொருட் சிறப்பும் நடையின் தெளிவும் ஸ்ரீ ஐயரின் தமிழறிவையும் யாப்புத் திறனையும் நன்கே விளக்குகின்றன,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ ஐயரையும், தேசாபிமானத்தை விளக்கும் இதுபோன்ற செய்யுட்களியற்றிய - எமக்கனுப்பவல்ல — ஏனைய தமிழறிஞரையும் ஒரு பொழுதும் மறவோம்.

(இந்தியா : 16.3.1907 — பக். 8)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"இண்டஸ்ட்ரீ"

'தொழில் முயற்சி' என்று பொருள்படும் இந்தப் புதிய தெலுங்குப் பத்திரிகை ஏலூரில் பக்ஷந்தோறும் பிரசுரிக்கப்படுகிறது.

நமக்குக் கிடைத்திருக்கிற முதல் இலக்கப் பத்திரிகையில் விவசாயம், வர்த்தகம், யந்திர சாலைகள், தொழில் வேலைகள், சீமை விவகாரம், பிரபஞ்ச விவகார தர்மங்கள் முதலிய இக் காலத்திற்கு உபயோகமான விஷயங்கள் காணப்படுகின்றன.

இந்தப் பத்திரிகை ஸ்ரீ ராஜ மந்திரி ப்ரகட புஜங்கராவ் பஹதூர் என்ற ஜமீன்தாரின் ஆதரவின் கீழ் நடப்பதாய்த் தெரிய வருகிறது. இவர் ஏற்கெனவே 'மஞ்ச வாணி' என்கிற ஒரு மாதாந்தப் பத்திரிகை பிரசுரித்துத் தெலுங்கு பாஷையை அபிவிர்த்தி செய்து வருகிறார். இவர் இயற்றிய நூல்களிற் சில எப்.ஏ.; பி.ஏ. பரீக்ஷைகளுக்கும் பாடமாய் வைக்கப்பட்டிருக்கின்றன.

இப்பொழுது தேசத்தில் தோன்றி யிருக்கும் புதிய உணர்ச்சியை அநுசரித்துத் தொழில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விஷயமான இந்தப் பத்திரிகையைத் தொடங்கித் தெலுங்கு நாட்டாரின் நிலைமையை உயர்த்துவதற்காக இவர் செய்யும் பிரயத்தனம் பெரிதும் கொண்டாடத் தகுந்தது.

நமது தென்னாட்டு ஜமீன்தார்கள் இவ்வுதாரணத்தைப் பின்பற்றித் தேசத்துக்கு உபகரிக்கும் துறைகளில் உழைப்பார்களாயின், அது அவர்களுக்கு எவ்வளவோ பெருமையாயிருக்கும்.

இந்தப் பத்திரிகையில் ஒரு விசேஷ மிருக்கிறது. அதாவது இதில் உபயோகமுள்ள விஷயங்களை எழுதி வருகிறவர்களுக்குத் தூண்டுதலாயிருக்குமாறு ஒவ்வொரு மாசமும் அதற்கு முன் ஏற்படுத்தப் படும் இண்டஸ்ட்ரீ சம்பந்தமான வியாசம் எழுதியனுப்புகிறவர்களுக்கு முதல் வெகுமதி ரூபா 25-ம், இரண்டாம் வெகுமதி ரூபா 10-ம், மூன்றாம் வெகுமதி ரூ. 5-மாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

'தொழில் முயற்சிகளுக்கு உபயோகப்படும் 25 இந்தியச் செடிகளும் அவற்றின் உபயோகமும்'' என்ற விஷயமானது அடுத்த ஆகஸ்டு மாதத்திய வெகுமதிக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

(இந்தியா : 22. 6. 1907—பக். 10)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ருதுவான பிராமணப் பெண்களின் விவாகம் சாஸ்திரீயமானது

1906-ம் வருஷத்தின் தொடக்கத்திலே சென்னை ஹிந்து ஸமாஜத்தின் மெம்பரொருவர் "ருதுவான பிராமண ஸ்திரீகளின் விவாகம் சாஸ்திரீயமானது" என்பதைப் பற்றி நல்ல வியாசம் எழுதிக் கொடுப்பவர்களுக்கு ரூபா 100 பரிசு கொடுப்பதாக வெளியிட்டார். பலரிட மிருந்து வியாசங்கள் கிடைத்தன. பிறகு அவ் வியாசங்களின் ஸாராம்சத்தை யெல்லாம் ஒருங்கு சேர்த்து ஓர் புஸ்தகமாகத் திரட்டிப் பிரசுரிக்க வேண்டுமென்று அந்த ஸமாஜத்தார் தீர்மானித் தார்கள்.

அவர்களுடைய வேண்டுகோளின்படி திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டரா யிருந்து, இப்போது அதை விட்டு விட்டுக் கோகலேயின் சபையில் சேர்ந்து வேலை செய்பவரும், ஸம்ஸ்கிருத, ஆங்கிலேய பாஷைகளில் நல்ல தேர்ச்சி யுடையவரு மாகிய ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் மேற்கூறிய விதமான ஓர் ஸார சங்கிரகம் எழுதிப் பிரசுரித்தார். இது ஆங்கிலேய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாஷையில் எழுதப்பட்ட நூலாயிருப்பது பற்றி, ஆங்கில மறியாத வைதீக ஜனங்களுக்குப் பயன்படா தாகையால், மதுரை வக்கீல் ஸ்ரீ பி. நாராயணய்யர் இதைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக் கிறார். இத் தமிழ்ப் பிரதி யொன்று நமது பார்வைக்கு வந்தது.

மனுவின் காலத்திற்கு முன்பு பிராமண ஸ்திரீ களுக்கு ருதுவான பிறகுகூட விவாகம் நடத்துவது வாடிக்கையா யிருந்த தென்றும், ரிஷிகளில் அநேகர் அவ் வழக்கத்தையே நியாயமாகக் கூறி யிருக் கிறார்க ளென்றும் இப் புஸ்தகத்தில் நன்றாக ருஜுவாகிறது.

ஆனால், மனுவுக்குப் பிறகு பல ஸ்மிருதி கர்த்தாக்கள் பிராமண ஸ்திரீகளுக்கு ருது காலத் திற்கு முன்னாகவே விவாகம் செய்து தீரவேண்டு மென்று விதித்திருக்கிறார்கள். எனவே, சாஸ்திரங் கள் முரண்படும்போது, ஜனங்கள் எது நியாய மென்பதைத் தமது சொந்த அறிவினாலேயே நிச்சயிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். நிற்க.

இப் புஸ்தகத்தின் விலை 4 அணா. சென்னை ஜி. ஏ. நடேசன் கம்பெனியாரால் நல்ல காகிதத்தில் நன்றாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால், ஸம்ஸ்கிருதம் கற்றுப் பாண்டித்தியம் பெறாத ஸாமான்ய ஜனங்களுக்கு இது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரயோஜனப்படாது. தேன் கூட்டிலே ஈ நிரம்பியது போல ஸம்ஸ்கிருத மேற்கோள்கள் நிரம்பியதாக இருக்கின்றது. மேலும் உச்சரிக்கத்தகாத வார்த்தைகளும், "பச்சை பச்சையான" கருத்துக்களும் நிறைந்து புஸ்தகத்தின் மதிப்பைச் சிறிது குறைக்கின்றன.

(இந்தியா: 26. 12. 1908—பக்.5)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிழைக்கும் வழி

இப் பெயர் கொண்ட மாதாந்தப் பத்திரிகை யொன்று சென்னப்பட்டணத்திலே சென்ற ஜனவரி மாத முதல் வெளியாகி வருகின்றது. நமது நாட்டிலே தோன்றி யிருக்கும் நவீன சக்திக்கு இப் பத்திரிகை சிறந்ததோர் திருஷ்டாந்த மாகும். தமிழ்ப் பாஷையை வெறும் காவ்யாதிகளுக்கு மட்டுமே உரிய பாஷையாக்கினால், அது நாளுக்கு நாள் வளர்ச்சி பெற இடமில்லை. சாஸ்திரீய (Scientific) நூல்களும், சாஸ்திரீய வழக்குகளும், அந்த நடையும், அவ்வகைப்பட்ட சித்த விருத்தியும் நமது பாஷையிலே அதிகப்படும்படி செய்வது நம்மவருள்ளே கற்றோர்களின் கடமை.

சென்ற 50 வருஷங்களிலே பெங்காளி பாஷை அபரிமிதமான அபிவிருத்தி யடைந்திருக்கிறது. எவ்வளவு ஸூக்ஷ்மமான சிந்தனைகளையும் அப் பாஷையிலே அதி சுலபமாக வெளியிட்டுவிடலாம். தமிழ்ச் செய்யுளில் இது எளிதாய்விடும். தமிழ் நடையில் இது கஷ்டமென்பதை அனுபவஸ்தர்கள் அங்கீகரித்துக் கொள்வார்கள். இதன் காரணம் நாம் தமிழ் நடையைச் சரியான முறைகளில் விருத்தி செய்துகொண்டு வாராமையே யாகும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இங்கிலீஷ் முதலிய ஐரோப்பிய பாஷைகளி லிருந்து நாடகங்களையும், காவ்யங்களையும் தமிழில் மொழிபெயர்ப்போர் நமது தமிழ்மொழிச் சுவையை அறியாதவர்கள்; காவ்ய நாடகங்களின் இயல்பையும் அறியாதார். இவற்றை மொழி பெயர்ப்ப தெல்லாம் அனாவசியம். மேற்குத் தேசத்தாரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது யாதெனில் அவர்கள் 'ஸயன்ஸ்' என்று சொல்லும் நவீன பரிசோதனை வழிகளே யாகும்.

இந்த எண்ணம் நமது நாட்டிலே பலமடைந்து வருகிற தென்பதற்கு நம் முன்னே யிருக்கும் 'பிழைக்கும் வழி' என்ற பத்திரிகை தக்க அறிகுறி யாக விளங்குகின்றது. இதில் ஸ்ரீ பா. ராஜரத்தின முதலியார், ஸ்ரீ கெ.பி. ராமநாதய்யர் முதலிய சிறந்த கல்விமான்கள் - ஐரோப்பிய சாஸ்திர வழி களை நன்கு தெரிந்தோர் - வியாசங்க ளெழுதி யிருக்கிறார்கள். 'பகுதிக் குறிப்புகள்' என்ற வரிசை யின்கீழ் தமிழ்நாட்டாருக்குப் பிரயோஜனகரமான செய்திகள் ஓர் புதையல் போலச் செறிந்திருக் கின்றன. ஸ்ரீ கோதண்டராமய்யர் (சுதேசமித்திரன் ஆபீஸ்) ஜனோபகாரி டாடாவின் சரித்திர மெழுதி யிருக்கிறார்.

விஷயங்களைத் தெரிந் தெடுத்தல், அவற்றின் தொகுதி, வகுப்பு முதலிய பல அமிசங்களிலே மிகவும் புகழ்ச்சிக் குரியதா யிருக்கும் இப் பத்திரிகை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யில் ஓர் பெருங் குறை இருக்கிறது. தமிழ் நடையின் அமைவு, வழக்கு என்னுமிவற்றைச் சிறிதேனும் கவனிக்கவில்லை. இந்த ஒரு குறையை மட்டும் பத்திராதிபர் நீக்கி விடுவாராயின், இப் பத்திரிகை தமிழ் மொழிக்குப் புதியதோர் அணிகலமாக விளங்கும்.

(இந்தியா : 20.2.1909 — பக். 4)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஹிந்து ரஸாயன சாஸ்திரம்

ஸ்ரீ பிரதாப சந்திர ராய் (பெங்காளத்து ரஸாயன விற்பன்னர்) "ஹிந்து ரஸாயனத்தின் சரித்திரம்" என்ற பெயர் கொண்ட தமது புகழ் பெற்ற நூலின் இரண்டாம் பாகம் எழுதி முடித்திருக்கிறார். இது அடுத்த மாதம் பிரசுரமடையும். இவர் முதல் பாகம் வெளியான பிறகுதான், நம்மிலே பலருக்கு நமது புராதனர்கள் ரஸாயன சாஸ்திரத்தில் எத்தனை தூரம் அபிவிருத்தி யடைந்திருந்தன ரென்பது தெரியலாயிற்று. இப்போது பிரசுரமாகப் போகிற இரண்டாம் பாகம், ஸ்ரீ ராய் பதினைந்து வருஷம் உழைத்த உழைப்பினுடைய பலனாகும். இப் பெரும் கிரந்தத்திலே, ரஸாயன சாஸ்திரம் பற்றிய சுத்த நூல்களின் விஸ்தாரம் மட்டுமே யன்றி, அச் சாஸ்திர விஷயமான பிரஸ்தாபங்க ளடங்கிய சில தந்திரங்க (ஆகமங்க)ளிலிருந்து சில பகுதிகள் மொழிபெயர்ப்புடன் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

முதல் பாகத்தில் செய்யப்பட்ட ஹிந்து ரஸாயனத்தின் கால நிர்ணயத்தைக் காட்டிலும் இப் பாகத்தில் ஸ்ரீ ராய் அதிகமாகக் காலத்தைப் பின்னே தள்ளிக் காட்டி யிருக்கின்றார். இப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புஸ்தகத்திலே "ஹிந்துக்களின் பரமாணு வாதம்" என்ற அத்தியாயம் பிரின்ஸிபால் வரஜேந்திர நாத சீலர் என்ற வித்துவானால் எழுதப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ சீலர் தமது அளவற்ற கல்வியையும் பயிற்சியையும் இவ் விஷயத்திலே செலுத்தி வேலை செய்திருக்கின்றார். ஹிந்துக்களின் பரமாணு வாதத்தைப் பற்றி இதுவரை உலகத்திற்குள்ள அறிவு இந் நூல் வெளியான பிறகு பெரு மடங்கு விருத்தி யடையு மென்பதில் ஆக்ஷேப மில்லை.

ஸ்ரீ ராய் தமது மஹிமை கொண்ட நூலின் முதல் பாகம் வெளியிட்ட பிறகு கூட, "ரஸாயன சாஸ்திர சம்பந்தமாக அனுபவந் தழுவிய பல விடு சூத்திரங்கள் ஹிந்து நூல்களிலே அங்குமிங்கும் விரவிக் கிடக்கின்றனவென்பது மெய்யே யாயினும், ரஸாயனம் ஓர் நிர்ணிதமான சாஸ்திரமாகப் பூர்வ ஹிந்துக்களுக்குள்ளே இருந்த தென்பதற்கு என்ன ஆதாரமுளது?" என்று பலர் சந்தேகப்பட்டார்கள். இப்போது பிரசுரமாகும் இரண்டாம் பாகத்தைப் படிப்பார்களானால், அவ்வித சந்தேகிகளின் பேச்சு நின்று விடுமென்று ஸ்ரீ ராய் சொல்லுகிறார்.

புகழுக்கும் செல்வத்துக்குமே ஞானத் தேவியை உபாஸனை செய்வது உலகத் தியல். ஆனால், பாரத தேசத்தார்கள் எக் காலத்திலும் அந் நோக்க மில்லாது, ஞானத் தேவியைக் கேவலம் அவளுடைய திருவருளின் பொருட்டாகவே உபாஸனை செய்யும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வழக்க முடையவர்கள். அவ் வழக்கம் சென்ற சில நூற்றாண்டுகளாக நின்றிருந்தது. இப்போது மறுபடி தொடங்கி யிருத்தல் பாரத நாட்டிற்கு மட்டுமே யன்றி, உலக முழுமைக்குமே நன்மை தரக்கூடிய விஷயமாகும்.

(இந்தியா : 10.4.1909—பக்.4)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸங்கீதானுபவ ஸார ஸங்கிரகம்

இப் பெயர் கொண்ட நூல் திருநெல்வேலி ஜில்லா, ஸ்ரீவைகுண்டத்தைச் சேர்ந்த பெருங் குளத்தில் வசிக்கும் ஸ்ரீ வா. ஸ்ரீனிவாஸ அய்யங்கா ரால் இயற்றப்பட்டு, நமது பார்வைக்கு வந்திருக் கின்றது.

ஸங்கீத சாஸ்திரத்தின் பெருமைகளை நாம் வர்ணிக்கப் புகுதல் சந்திர கலைகளின் இன்பங் களைப் பற்றி சிபாரிசுக் கடிதம் எழுதிக் கொடுப்ப தற்கு நிகராகும்.

தமிழ்ப் பாஷையில் ஸர்வ ஜனங்களுக்கும் பயனுண்டாகும்வண்ணமாக நாத நூலின் நுட்பங் களை எடுத்து விளக்கி யிருப்பதன் பொருட்டு இவருக்குத் தமிழுலகம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறது. ஆரம்பப் பயிற்சிகள் (வாத்திய முதலியவற்றிலும், வாய்ப்பாட்டிலும்) செய்வோ ருக்கு இந் நூல் மிகப் பிரயோஜனமுடைய தென்று நாம் அனுபவ பூர்வமாகக் கூறுகின்றோம்.

(இந்தியா : 5.6.1909 — பக். 4)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிரிமினல் வியவஹார ஸங்கிரஹம்

திருநெல்வேலி ஜில்லா வக்கீல் ஸ்ரீ கிருஷ்ணமாசாரியாரால் இயற்றப்பட்ட ஷை பெயர்கொண்ட ஓர் புஸ்தகம் எமது ஆபீஸுக்கு வரப்பெற்றோம். இப் புத்தகம் சிறப்பான தமிழ் நடையி லெழுதப் பட்டிருப்பது மன்றி அத்தியந்த உபயோக முள்ளது. நமது தென்னிந்தியாவில் இங்கிலீஷ் தெரியாத ஜனங்கள் கிரிமினல் சட்டங்களை யறிய வேண்டுமாயின், பெரும்பான்மை இப் புத்தகத்தினின்று மறியலாம்.

வெகு ஏழையா யிருக்கும் ஜனங்கள் கிரிமினல் வழக்கு விஷயங்களில் வக்கீல்களுக்கு ரூபாய் கொடுத்து அவர்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்பதைவிட, இப் புத்தகத்தினின்றும் தாங்களே யறிந்துகொள்ளலாம். மிகவும் அற்பமான குற்றம் முதல், தீபாந்திர தண்டனை விதிக்கும்படியான பெரிய குற்றம் வரையில் இப் புத்தகத்தில் நன்கு விமர்சிக்கப்பட்டிருக்கிறது. கைதிகள் நடந்து கொள்ளவேண்டிய விவரமும் சொல்லப்பட்டிருக்கிறது. வழக்கு விசாரணையில் கவனிக்க வேண்டிய விஷயங்கள், இன்னும் இவ்வாறான பற்பல

பா.—25

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உபயோகமான விஷயங்க ளெல்லாம் இப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இது எல்லோருக்கும் அவசியமான புத்தகந்தான்.

இப் புத்தகம் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டு, ஒழுங்காய் கட்டி வைக்கப்பட்டிருக்கின்றது. இப் புத்தகத்தில் அடங்கி யுள்ள விஷயங்களைப் பார்த்தால், அதன் விலை பெரிதன்று.

(இந்தியா : 26.6.1909 — பக். 5)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வைசிய குல விளக்கம்

சென்ற வாரத்தில் வைசிய குல விளக்கமென்ற பெயரிட்ட ஓர் நூல் கிடைக்கப் பெற்றோம். அந் நூலாசிரியர் அப் புத்தக மியற்றுவதற்காக ஆத்திசூடி என்ற நீதி நூல் முதல் திருக்குறள் ஈறாக வுள்ள அநேக அரிய பெரிய நூல்களை யெல்லாம் தான் எடுத்துக்கொண்ட எண்ணத்தை நிறைவேற்றுவான் வேண்டி சான்றாக வுரைத்து முக்கியமாக வேளாளர் என்பவரை வைசிய ரல்ல ரென்று நிரூபித்திருக்கிறார்.

உலகிலுள்ள அநேக வகுப்பாருள் வேளாளரை மாத்திரம் கூறியிருப்பதை நோக்கின் யாரோ வேளாளரி லொருவர் வைசிய தூஷணையோ அல்லது தாம் வைசியரென்றோ உரைத்ததைக் கண்டனஞ் செய்ய வேண்டி எழுதி யுள்ளதாகவும் புலப்படுகிறது.

இதில் கூறியுள்ள நியாயங்கள் எம்மட்டு உண்மையோ அறியோம். ஆனால் உலகில் ஒவ்வொரு மதத்தாரும், ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் தங்கள் மதத்தையும், வகுப்பையும் சிலாகித்து வருவது மரபாதல் இயற்கை. இதிற்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போந்துள்ள நியாயங்கள் பலவும் நூலாசிரியர் கருத்தைத் தழுவி யிருக்கிறது.

பாரத புத்திரராகிய நாம் செய்ய வேண்டிய விஷயங்களும் பரிசோதித் தறிய வேண்டியவைகளும் அநேக மிருக்க ஒற்றுமைக்கு வேண்டியதை முற்றும் நிராகரிக்கிற இத்தகைய நூல்க ளியற்றுவதில் என்ன பிரயோசன முள்ளதோ அறியோம். நமது பாரத மாதாவானவள் தன்னரும் புத்திரர்களை இத்யாதி விஷயத்தினின்றும் நீக்கி ஒற்றுமை யுண்டாக்குவா ளாக.

(இந்தியா : 17.7.1909 — பக். 2)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எல்லோரும் வாசிக்கத்தக்க ஓர் முக்கிய அற்புத புஸ்தகம்!

ஸ்ரீமான் விவேகாநந்த ஸ்வாமிகள் அமெரிக்காவில் சிக்காகோ என்னும் பட்டணத்தில் கூடின ஸர்வ மத மஹாசபையில் செய்த பிரதம உபன்னி—யாசங்களடங்கிய ஓர் புத்தகம் நமது பார்வைக்கு வந்தது.

ஸ்வாமிகள் வெளி நாடுகளுக்குச் சென்றும் இந்தியர்களுடைய அபிவிருத்தியை நாடிச் செய்த காரியங்களின் திறமையை இந்தியாவில் கற்றறிந்தோர்களுக்கு எல்லாம் தெரிந்த விஷயமே. ஆனால் இன்னும் சில கல்வி கற்காத பாமர ஜனங்களுக்கு இந்தியர்களைப் பற்றி மிக இழிவாயும் கேவலமாயும் எண்ணம் கொண்டிருந்த அனேகமாயிரம் இருள் திரள்கள் போன்ற பாதிரிகள், அன்னிய மதஸ்தர்கள் நடுவில் ஆரிய வீரிய சூரியனாய் நின்று அவர்கள் கண் கூசும்படி ஜோதியாய் ஆரிய தர்ம பிரசங்க ஒளி வீசிய ஸ்ரீமான் விவேகாநந்த ஸ்வாமிகளைப் பற்றியும், அவர் பிரஸங்கித்த அரிய பெரிய விஷயங்களும், அவரது குரு சொன்ன நீதி வாக்கியங்களும் தேசங்கள் எங்கும் சரியானபடி பரவவில்லை. இப்பொழுது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாகப்பட்டினம் ஸ்ரீ ஆர். நாராயணசாமி அய்யர் செய்த பேருதவியால் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அது விஷயத்தில் பரம ஆனந்தம் அடைகிறோம். இப் புஸ்தகம் மிகவும் உபயோகமுள்ளது.

இது நாகப்பட்டினம் எட்வர்ட் அச்சியந்திர சாலையில் பதிப்பிக்கப்பட்டது. இதன் விலை **2** அணாவே யாம்.

(இந்தியா : 18.9.1909 — பக். 13)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதி : 8

இந்தியா.

சனிக்கிழமைதோறும் வெளியாகும்.

குடியரசு நீடித்து வாழ்க.

VIVE LA REPUBLIQUE—LONG LIVE THE REPUBLIC.

LA PRISE DE LA BASTILLE

அயல் நாடுகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

□

ஜப்பான், சீனா, ருஷியா, பிரான்ஸ் ஆகியன போன்ற அயல்நாடுகளின் செய்திகள் இப் பகுதியில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப் பட்டுள்ளன.

ஜப்பானைப் பற்றிய ரஸமான செய்திக் குறிப்புக்களும், சீனதேசத்தின் 'மஞ்சள் விபத்து'க் (The yellow Peril)கான காரண காரியங்கள் பற்றி யும், இந்திய நாட்டின் விடுதலை முயற்சிகளுக்கு வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் செய்த ஏற்பாடுகள் குறித்தும், ருஷ்ய - ஜப்பானிய யுத்தம் பற்றியும், வாணிபத்திலும் பொருளியலிலும் ஜப்பானியர் சிறந்து விளங்கப் பாடுபட்டதுபற்றி யும், ருஷ்யாவிலும், பிரிட்டிஷ் இந்தியாவிலும் நிலவிய ஆட்சிமுறை பற்றியும், பிரெஞ்சுக் குடியரசுப் புரட்சியைப் பற்றியும் இப் பகுதியிலுள்ள கட்டுரை கள் நன்கு படம்பிடித்துக் காட்டுகின்றன..

□

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஜப்பான் சென்று திரும்பி யிருக்கும் தெலுங்கு வாலிபராகிய மிஸ்டர் ராமராவ்

[பெல்லாரியைச் சார்ந்த மாத்வ பிராமண இளைஞரான ராமராவ் என்பவர் கண்ணாடித் தொழில் பயிற்சிக்காக ஜப்பான் நாடு சென்றுவிட்டு, 1907இல் சென்னை நகருக்கு வந்திருந்தார். அவரைச் சந்தித்து, ஜப்பான் நாட்டைப் பற்றிப் பாரதி அறிந்துகொண்ட பற்பல புதிய செய்திகளில் ஒருசிலவற்றை இக் கட்டுரையில் நமக்கு வழங்கியுள்ளார்.

ஜப்பானிய நாகரிகம், கல்வி முறை, தழுவும் மதம், ஸ்திரீகளின் பண்பு நலன்கள் — ஆகிய இந்த விஷயங்களுடன், அந் நாட்டார் நம் இந்தியர்களைப் பற்றிக் கொண்டிருந்த கருத்தையும் இக் கட்டுரை தெரிவிக்கிறது.]

ஒரு வருஷத்துக்கு முன்பு பெல்லாரியிலிருந்து கண்ணாடித் தொழில் பயின்று மீளும் பொருட்டாக ஜப்பானுக்குச் சென்றவராகிய மிஸ்டர் S. ராமராவ் இப்போது சென்னைக்கு வந்திருக்கிறார். இவர் தெலுங்கு பேசுபவர். ஜாதியிலே மாத்வ பிராமணர். இவர் உள்ளே வெளிக்கொண்ட கண்ணாடி உருண்டை வடிவங்கள் செய்ய மட்டுமே பயின்றிருக்கிறார். தட்டைக் கண்ணாடி செய்யும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முறைமை பயில்வதற்கு ஜப்பானிலே ஸவுகரியங்கள் கிடைக்கவில்லை யென்று சொல்கிறார். இவர் நவீன கைத்தொழில் முறைகளைப் புஸ்தக மூலமாகப் பயிற்றுவிக்கும் பாடசாலைகளிலே சேராமல் தொழிற்சாலை யொன்றுக்கு நேரே போய் அங்கே பயிற்சிபெற்றிருக்கிறார்.

கண்ணாடித் தொழில் மட்டுமே யன்றி ஸ்லேட், மெழுகுவத்தி, நெருப்புக் குச்சி என்ற கைத் தொழில்களும் நன்கு படித்து வந்திருப்பதாகச் சொல்லுகிறார். இவர் தொழிற்சாலை இன்ன இடத்திலே ஏற்பாடு செய்வதென்று இன்னும் நிச்சயப்படுத்திக் கொள்ளவில்லை. முதற் பணம் கொடுத்து உபகரிப்பதாக இதுவரை யாரும் முற்பட்டு வந்திருப்பதாகவும் தோன்றவில்லை. அமெரிகா முதலிய நாடுகளுக்குச் சென்று கண்ணாடித் தொழிற் பயிற்சியை இன்னும் அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டுமென்ற ஞாபகமிருப்பதாகத் தெரிகிறது. பெல்லாரியிலே போய் இவர் குடியிருப்பது கஷ்டமென்று நினைக்கிறோம்.

ரங்கூன், கொழும்பு முதலிய இடங்களுக்குக் கப்பல் யாத்திரை செய்து திரும்பி வந்திருக்கும் பிராமணர்களை ஜாதியிலே சேர்த்துக் கொள்வது இப்போது ஸஹஜமாய் போய்விட்டது. ஆனால், ஜப்பானுக்குப் போய் வந்த மனிதர்களின் விஷயத்திலே அத்தனை உதாரகுணம் நம்மவர்களுக்கு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இந்த ராமராவ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஜப்பானிலிருக்கும்போதுகூட மாமிச ஆகாரம் எதுவுமின்றி சாதமும் பருப்பும் மட்டுமே புஜித்து வந்திருக்கிறார். இவர் யாதொரு கஷ்டமுமின்றி ஜாதியிலே சேர்த்துக் கொள்ளப்படுவாரென நம்பு கின்றோம்.

இவரிடம் நாம் செய்துவந்த சம்பாஷணைகளி லிருந்து நாம் ஜப்பானைப் பற்றி அறிந்துகொண்ட புதிய விஷயங்களை யெல்லாம் இங்கே எழுத வேண்டுமென்றால் இடம் போதமாட்டாது. ஆதலால், இவர் சொல்லியவற்றுள்ளே முக்கியமான சில விஷயங்களை மட்டும் கீழே தெரிவிக்கிறோம்.

ஜப்பானிய நாகரீகம்

ஜப்பானியர் கைத்தொழில் சம்பந்தப்பட்ட மட்டிலே ஐரோப்பிய நாகரிக முழுதையும் அறிந்து கொண்டு விட்டார்கள். தொழிற்சாலைகள் ஜப்பானிலே நிரம்பிக் கிடக்கின்றன. செல்வர்களின் வகுப்பைச் சேர்ந்தோர் ஐரோப்பியர்களைப்போல செலவாளிகளாகவும், போகப் பிரியர்களாகவும் வாழ்கிறார்கள். ஆனால், சாமானிய ஜனங்கள் இன்னும் மிகுந்த குறைவான செலவிலேயே வாழ்க்கை புரிகின்றார்கள். மிருக மாமிச போஜனத் திலே ஐரோப்பிய நாகரிகம் கொண்ட உயர் வகுப்பார் மட்டிலும் பிரியம் கொண்டிருக்கிறார் கள். சாமானிய ஜனங்கள் அரிசியும், மீன்கறியும் உண்கிறார்கள். பவுத்த மார்க்கத்தைச் சேர்ந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குருக்கள் அந்த மீன் கறியைக்கூடத் தொடுவ தில்லை.

ஜப்பானியரைப்போல சுசி ருசியுள்ள ஜாதியார் வேறெவருமே கிடையாது. ஒரு ஜப்பானியனுடைய வீட்டிற்குள்ளே போனால் அங்கே சாமான்கள் வைத்திருக்கும் ஒழுங்கும், மேஜைகள், நாற்காலிகள் முதலியவை தயார் செய்திருக்கும் நேர்த்தியும் கண் களுக்கு மிகவும் இன்பம் தரத்தக்கன. கட்டடங்கள் கட்டுதல், ஆடைகள் அணிதல், ராஜாங்க முறைமைகள் முதலிய எத்தனையோ விஷயங்களில் ஜப்பானியர் பெரும்பாலும் ஐரோப்பிய நாகரிகத் தையே தழுவி வருகின்றார்கள்.

கல்வி முறை

ஜப்பான் முழுதும் எல்லா வாலிபர்களும் கல்வி கற்றுத் தீரவேண்டுமென்பது விதியாய் விட்டது. எல்லா விதமான கல்வியும் பயிற்றப்படுகின்றது. சீன தேச அரிச்சுவடி எழுத்துக்கள் இதுவரை வழக்கமாக ஏற்பட்டு வந்த போதிலும், இப்போது அவற்றை மாற்றி ஜப்பானிய பாஷையின் சொந்த அரிச்சுவடி யொன்றையே மறுபடியும் பொது வழக்க மாக்குவதற்குரிய முயற்சிகள் நடந்து வருகின்றன. ஜப்பான் தேச ராஜதானியாகிய டோகியோ நகரத்திலே யுள்ள பாடசாலைகளில் இங்கிலீஷ், ஜெர்மன் முதலிய உதவி பாஷைகள் கற்பவை சம்பந்தப்பட்ட கல்வி முறைகளே பெரும்பாலும் ஜனங்களால் விரும்பப்படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மதம்

பவுத்த மார்க்கம், கன்பூஷியஸ் மதம் (சீனர் நாட்டது), ஜப்பானுக்கே புராதனமாக உள்ள பிதிர்க்கள் வழிபாடு, இவற்றின் கலப்புக்கள், வேறு பல மூட பக்தியுள்ள ஆசாரங்கள் என்பவை யனைத்தும் ஜனங்களால் பெரும்பாலும் அனுசரிக்கப் படுகின்றன. சிறுபான்மை யுள்ள ஜனங்கள் கிறிஸ்து மார்க்கத்தைச் சேர்ந்திருக்கிறார்கள். அட்மிரல் டோகோ முதலிய அனேக முக்கியஸ்தர்கள் கிறிஸ்து மார்க்கத்தைச் சேர்ந்து விட்டார்களென்ற வதந்தி மெய்யில்லை. ஜப்பான் சக்ரவர்த்தியும், வேறுபல ராஜாங்க உத்தியோகஸ்தர்களும் மகமதிய மார்க்கத்தைத் தழுவ உத்தேசித் திருக்கிறார்களென்ற பிரஸ்தாபம் முழுப் புரட்டைத் தவிர வேறன்று. வாலிபர்கள் பெரும்பாலும் நாஸ்திக வாதத்திலே பலமடைந்து வருகிறார்கள். ஆனால், சகல ஜனங்களுக்கும் சுதேச பக்தியே இப்பொழுது பொது மார்க்கமாகி விட்டது.

ஸ்திரீகள்

ஜப்பானிய ஸ்திரீகளிலே பெரும்பான்மையான வர்கள் நல்ல சுந்தரிகளாக இருக்கிறார்கள். ஜப்பானிய ஸ்திரீகள் எப்போதுமே டம்பமற்ற அலங்காரம், ரஸிகத் தன்மை, வீட்டொழுங்கு, விருந்தினரை உபசரித்தல், இனிய வசனம் முதலிய நல்ல குணங்களுக்குப் புகழ் படைத்தவர்கள். இந்தக் குணங்களுடன் இப்பொழுது மேலான கல்வியறிவும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேர்ந்திருக்கின்றது. ஓர் ஜப்பானியனது வீட்டிற்குப் போனால் தடாகத்திலே செந்தாமரை யிருப்பது போல அந்த வீட்டு யஜமானியே வீடு முழுமையிலும் மகிழ்ச்சியும், குதூஹலமும் பரவும்படி செய்கிறாள்.

ஜப்பானிலே பல ஸ்திரீகள் ஐரோப்பிய ஸ்திரீகளைப் போலப் புருஷர்களுடன் எல்லா விஷயங்களிலும் ஸமானத்துவம் பெற்றுவிட முயற்சி புரிகிறார்கள். ராஜாங்க சம்பந்தமான உரிமைகள் கூடப் பெற்றுவிட வேண்டுமென்ற ஆசை ஜப்பானிய மாதர்களுக்கு உண்டாய்விட்டது. இந்த மாதரபி-விருத்தி முயற்சியானது இன்னும் எந்த மட்டில் போய் நிற்குமென்பது இப்போது சொல்ல முடியாது. ஜப்பானிய ஸ்திரீகளின் கற்பொழுக்கத்தைப் பற்றிப் பலர் பலவிதமாகக் கூறுகிறார்கள். அதில் ஒன்றும் நிச்சயமாகத் தெரிவிக்க முடியாது.

இந்தியாவைப் பற்றி ஜப்பானியர் நினைப்பது

இந்தியாவுக்கு ஜப்பானிய பாஷையிலே 'டென்ஜிகு' அதாவது "ஸ்வர்க்க நாடு" என்று பெயர். 'காமி' (அதாவது தேவன்) என்று சொல்லப்படும் முதலாவது ஜப்பானிய அரசன் இந்தியாவிலிருந்தே ஜப்பானுக்கு வந்திருக்க வேண்டுமென்று நம்பப்படுகிறது. இந்தியாவிலே ஸ்ரீ புத்த பகவான் பிறந்தவ ராதலால், இது பரிசுத்த பூமி யென்பதாக ஜப்பானியர் எண்ணுகிறார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தியாவிலிருந்து அங்கே செல்லும் மாணாக்கர்களிடமும், மற்றோரிடமும் ஜப்பானியர் வைத்திருக்கும் மதிப்புக்கு அளவு கிடையாது. இந்தியர்கள் பொய் சொல்ல மாட்டார்களென்றும், இழிவான செய்கைகள் செய்யமாட்டார்களென்றும் அந் நாட்டார் நம்புகிறார்கள். முற்காலத்திலே உலக முழுதிற்கும் ஞான விளக்காக இருந்த இந்தியா இப்பொழுது பதனமடைந்துபோய், அந்நியர் கைவசமாகி, மிகுந்த பரிதாபகரமான நிலைமையில் இருப்பது பற்றி ஜப்பானியர் மிகவும் இரக்கமடைகிறார்கள். இந்தியர்கள் சிக்கிரம் கண் விழித்துத் தமது நிலைமையை அறிந்துகொண்டு மறுபடியும் உன்னத நிலை யடையப் பாடுபடாத விஷயத்தில் இவர்களுக்கு இன்னும் அபரிமிதமான இழிகோலங்கள் ஏற்பட்டு விடுமென்று ஜப்பானியர்கள் எண்ணி வருத்தமடைகிறார்கள்.

(அடுத்த முறை இவ் விஷயமாகவே இன்னும் பல அமிசங்கள் வரையப்படும்.* ப-ர்)

(இந்தியா : 16.2.1907 — பக். 7)

---

* கட்டுரையின் இறுதியில் குறித்துள்ளபடி மேலும் பல அமிசங்கள் மேற்கொண்டு எந்த இதழிலும் வெளிப்படவில்லை என்பது வருத்தத்திற்கு உரியது.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மஞ்சள் விபத்து

['மஞ்சள் விபத்து' பற்றிய வரலாறு இந்தக் கட்டுரையில் விரித்துரைக்கப்பட்டுள்ளது.

'லண்டன் டைம்ஸ்' பத்திரிகைக்குப் பழைய 'மஞ்சள் விபத்'தைப் பற்றிய நினைவு வரக் காரணம் யாதாக இருக்கமுடியும் என்பதற்கான விளக்கத்தையும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றது, இந்த அரிய கட்டுரை.]

மஞ்சள் நிறமுடையவர்களாகிய சீன-ஜப்பானிய தேசத்தார்கள் உலகத்திலே செல்வாக்கு மிகுந்துபோய் விடுவார்களானால், ஐரோப்பிய நாட்டினர்கள் இப்போது பூமண்டல முழுதிலும் ஏனென்று கேட்பாரில்லாமல் செலுத்தி வரும் அதிகாரத்துக்குக் குறை நேரிடக் கூடுமென்று அஞ்சி, மேற்கூறப்பட்ட கிழக்குத் தேசத்தார்கள் அபிவிருத்தி யடைந்து வருவதை ஐரோப்பியர்கள் "மஞ்சள் விபத்து" (The yellow peril) என்று பெயரிட்டழைத்து, அம் மஞ்சள் விபத்தைத் தடுப்பதற்குத் தம்மால் ஆன பிரயத்தனங்களெல்லாம் நடத்தி வருகிறார்கள்.

சீனா தேசத்தில் சில தினங்களின் முன்பு சக்கரவர்த்தியாகிய க்வாங்-ஹ்ஸூ என்பவரும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(அவருடைய பெரிய தாயாரும் சென்ற மூன்று தலைமுறையாகப் பெயருக்குச் சக்ரவர்த்திகளிருந்த போதிலும் உண்மையிலே ராஜ்யாதிகாரம் நடத்தி வந்தவளுமாகிய) ட்ஸே - ஹ்ஸீ என்ற தாய் ராணியும் ஒருவர் சனிக்கிழமையும், மற்றவர் ஞாயிற்றுக் கிழமையுமாக அடுத்தடுத்து இறந்து போய்விட்டார்கள். இந்தச் சம்பவத்தினின்றும், லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகைக்கு "மஞ்சள் விபத்தை"ப் பற்றிய ஞாபகம் மிகவும் அதிகரித்துவிட்டது.

ராஜ குடும்பத்தில் மேற்படி இருவர் இறந்ததிற்கும் "மஞ்சள் விபத்து"ப் பயம் அதிகரிப்பதற்கும் என்ன சம்பந்தமென்பதை அறிய வேண்டுமானால், அதற்குப் பின்வரும் விவரங்கள் தெரிந்து கொள்ளுதல் பொருந்தும். இறந்துபோன க்வாங் - ஹ்ஸூ சக்கரவர்த்திக்கு முன் பட்டத்துக்கு முந்திய (மூன்றாம்) பட்டத்திலே ஹ்ஸியென் -பெங் என்பவர் அரசாண்டு வந்தார். அந்த ஹ்ஸியெங் - பெங் சக்ரவர்த்தியின் அந்தப்புரத்தில் காலஞ் சென்ற ட்ஸே-ஹ்ஸீ என்ற தாய் ராணி ஐந்தாம் வகுப்பு ஆசை நாயகியாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டாள். (சீனா சக்கரவர்த்தியின் அந்தப்புரத்திலே வைப்பாட்டிகள் வகுப்பு வகுப்பாக இருப்பது மரபு!) இந்த ட்ஸே - ஹ்ஸீ ராணிக்கு அப்போது யேஹோனாலா என்று பெயர்.

யேஹோனாலா அபூர்வமான ரூப லாவணியமுடையவள். சாகும்பொழுது இவளுக்கு 68 வயதான போதிலும், அப்போதுகூட 40 வயது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்திரீயைப்போலவே தோன்றியதாகச் சொல்லப் படுகிறது. இந்த ராணியை அந்தப்புரத்திலே போய்ப் பார்த்து வந்த ஓர் ஐரோப்பிய மாது '60 வயதிலேகூட ட்ஸே - ஹ்ஸி ராணியின் குரல் பதினேழு வயதுக் குமரியின் குரலைப் போலிருக் கிறது' என்றெழுதி யிருக்கிறாள். இத்தனை சிறந்த லாவணியத்தோடு, கல்வித் திறமையும், அறிவு நுட்பமும் பொருந்தியவ ளாதலால், பாலியத்தில் இவள் நாயகனாகிய ஹ்ஸியென் - பெங் சக்ரவர்த்தி அந்தப்புரத்திலுள்ள மாதர்க ளெல்லோரிலும் இவள்மீது அதிக அன்பு செலுத்துவாராயினர். இவளுடைய அதிருஷ்ட வசத்தால் அப்போதிருந்த பட்ட மஹிஷிக்குக் குழந்தை யில்லாமல் போயிற்று. இவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. எனவே சிறிது காலத்திற்குப் பிறகு இவளே பட்ட மஹிஷியாய் விட்டாள். அப்படியான பின்பும், முந்திய பட்ட மஹிஷியை இவள் மிக்க மதிப்புடனும், கவுரவத்துடனும் நடத்தி வந்தது, இவளுடைய லௌகிக ஞானத்திற்குச் சிறந்த தோர் அறிகுறியாகும்.

நாளடைவில் இவளுக்கு அரசன் மீதிருந்த செல்வாக்கு மிகவும் அதிகரித்துவிட்டது. எனவே பெயரளவில் தனது கணவன் அரசனா யிருந்த போதிலும், (இந்தியாவிலே நூர்ஜஹான் ராணி யிருந்ததுபோல்) உண்மையில், ராஜாங்கம் என்ற அசுவத்தின் கடிவாளம் இவள் கைவசமாய் விட்டது. சிறிது காலத்திற்குப் பிறகு இவளுடைய கணவன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இறந்து போய்விட்டார். சிறு குழந்தைப் பிராயத்திலிருந்த இவளுடைய மகனுக்குப் பட்டம் கட்டப்பட்டது. எனினும் இவளே பிரதிநிதியாக இருந்து அரசு செலுத்தி வந்தாள். இவள் மகனும் வெகு சீக்கிரத்திலே இறந்து போய்விட்டார். அப்போது தனது தங்கை குமாரனாகிய க்வாங் - ஹ்ஸூவை ஸ்வீகாரம் செய்துகொண்டாள்.

(க்வாங் - ஹ்ஸூ தான் சில தினங்களின் முன் காலஞ் சென்ற சக்ரவர்த்தி)

க்வாங் - ஹ்ஸூவுக்கு 18 வயதாய் அவர் பருவமடைந்த வுடனே ராஜ்யாதிகாரத்தில் ஓர் அமிசம் அவர் வசம் ஒப்புவிக்கப்பட்டது. ஆனால் க்வாங் - ஹ்ஸூ ஐரோப்பிய நாகரிகத்திலே பிரியமுடையவர். தாய் ராணியோ ஐரோப்பியர்களிடம் பரம விரோதம் பாராட்டி வந்தாள். க்வாங் - ஹ்ஸூ சீர்திருத்தக் கட்சியாரோடு சேர்ந்து திடீர் திடீரென்று புதிய கட்டளைகள் பிறப்பித்துப் புராதன முறைமைகளை முழுதும் மாறுபடுத்திவிட முயன்றார். இது அனேக ஜனங்களுக்குப் பிடிக்கவில்லை. சைநியமும் சக்ரவர்த்தி பக்கத்திலில்லை. அதன் பேரில், தாய் ராணி சைநிய பலத்துடன் அந்தச் சக்கரவர்த்தியை ஓர் அரண்மனைக்குள் அனேகமாகக் கைதி நிலையில் வைத்துவிட்டு ராஜ்யபார முழுதையும் தானே வகித்துக் கொண்டாள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாளடைவில் ஜப்பானைப் பார்த்துச் சீனாவிலும் நவீன எண்ணங்கள் பரவத் தொடங்கின. ஓர் ராஜா அல்லது ராணியிருந்து ஸ்வேச்சா ராஜாங்கம் செய்வது தப்பு; ஜனப் பிரதிநிதிகளின் சங்கம் ஒன்றேற்பட்டு அச் சங்கத்தாரே ராஜ்ய நிர்வாகத்தில முக்கிய பொறுப்பாளிகளாக இருக்க வேண்டுமென்ற விருப்பம் சீன ஜனங்களுக்குள்ளேயும் பரவுதல் பெற்றது.

லௌகிக ஞானத்திலே சிறந்தவளாகிய தாய் ராணி கால வரையிலே பழையன கழிதலையும் புதியன புகுதலையும் தடுக்க முடியாதென்பதை நன்றாகத் தெரிந்துகொண்டாள், விருத்தாப்பிய காலத்தில் இவளுக்கும் ராஜாங்க முறைமையில் சீர்திருத்தங்கள் செய்வது அவசியமென்று மனதில் பதிந்து விட்டது. இவள் மரண சமயத்தில் பிரசுரம் செய்த ஓர் கட்டளையில் "ஒன்பது வருஷத்திற்கப்பால், பிரதிநிதியாட்சி ஸ்தாபிக்கப்பட வேண்டும். எனது வாழ்நாளிலே அந் நோக்கம் எனக்கிருந்தும் நிறைவேறவில்லை. என் மரணத்திற்குப் பிறகேனும் அது நிறைவேறினால்தான் வானத்திலிருக்கும் எனது ஆத்மாவிற்கு ஒருவாறு திருப்தியுண்டாகும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இப்போது புதிதாகச் சிங்காதனத்தில் வைக்கப்பட்டிருக்கும் பையனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் "ஸூவான்-டுங்" என்ற பட்டப் பெயரிலேகூட 'பிரதிநிதி யாட்சி' என்ற தொனிக் குறிப்பிருப்ப

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பையனுக்குத் தக்க பிராயம் வருமளவும், பிரதிநிதியாக அரசு செலுத்தும்படி நியமிக்கப்பட்டிருப்பவரும் சீர்திருத்த எண்ணங்களுடையவ ரென்று தெரிகிறது. இதுதான் 'மஞ்சள் விபத்'தைப் பற்றி லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகைக்குப் புதிய அச்சம் தோன்றியிருப்பதற்கு முகாந்தரமாகும்.

காலஞ்சென்ற தாய் ராணி இருக்குமளவும், அவள் புராதன நடையுடையவளாதலால் தற்கால ராஜாங்கங்களுக்குச் சரியான போட்டியாகக் கூடிய நிலைமைக்குச் சீன தேசத்தை அவள் கொண்டு வர மாட்டா ளென்ற எண்ணம் ஐரோப்பியர்களுக்கிருந்தது. அவளுடைய மரண காலத்துச் சாஸனத்திலேகூடச் சீர்திருத்த விருப்பம் குறிப்பிடப்பட்டிருப்பது லண்டன் 'டைம்ஸ்' பத்திராதிபர் போன்றவர்களுக்கு உள்ளூர அதிருப்தியையுண்டாக்கி யிருக்கின்றது.

இன்னுமொரு முக்கியமான விஷயம். தாய் ராணி, சக்ரவர்த்தி ஆகிய இருவரும் இறந்துபோனவுடனே ஏற்கெனவே சீர்குலைந்ததாக அன்னிய தேசத்தாரால் கருதப்பட்டு வந்ததாகிய சீன ராஜாங்கத்தில் பல குழப்பங்கள் நேரிடுமென்று சிலர் எதிர்பார்த்திருந்தார்கள். அந்த எண்ணம் முற்றிலும் பயனற்றதாக முடிந்து விட்டது. தாய் ராணியும், அரசரும் காலஞ் சென்றவுடனே யாதொரு குழப்பமு மில்லாமல் சுலபமாக அடுத்த அரசனுக்குப் பட்டம் சூட்டி, எப்போதும் போலவே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பய ஹேது ஒன்று மில்லாமல் ராஜ்ய சக்கரம் உருண்டு வருவதைக் காணுமிடத்துச் சீன ராஜாங்கத்தின் உள் நிலை இதுவரை சீர்கெட்டிருந்ததாக அன்னியர் கூறி வந்தது பெருத்த பொய் யென்பது வெளியாகிறது. எனவே, இனி ஜப்பானைப் போலவே சீன தேசமும் நாளுக்கு நாள் அபிவிருத்தி பெற்றுச் செல்வத்திலும், வர்த்தகத்திலும், வெற்றிகளிலும் புகழோங்கி வளரக்கூடும். அப்படியாய் விடும் பக்ஷத்தில், ஆங்கிலேயர் முதலானவர்களுக்கு ஆசியா கண்டத்தில் இப்போதிருக்கும் அதர்மமான செல்வாக்குக் குறைந்து போய் விடுமென்பதைக் குறி வைத்துக் கேட்க வேண்டுமா?

இதுதான் 'மஞ்சள் விபத்து.' இதற்குத்தான் இப்போது முதலாகவே, லண்டன் 'டைம்ஸ்' பத்திராதிபர் போன்றவர்கள் அச்சமடைந்து கொண்டு வருகின்றார்கள்.

(இந்தியா : 12.12.1908 — பக்.3)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரிஸில் இந்தியர்களின் கூட்டம்

[பிரிட்டிஷ் இந்தியாவின் கொடூர - அதர்மச் சட்டங்களுக்கு அஞ்சி, பிரெஞ்சுப் பகுதியான பாரிஸில் தங்கியிருந்த இந்தியத் தலைவர்களின்பேரில் இங்கிலாந்துப் பத்திரிகை ஒன்று வீண் பழி சுமத்தி எழுதியதை, ராய்டர் செய்தி நிறுவனத்தார் உலக முழுவதும் பரப்பியபோது, பாரத சுதந்திர முயற்சி கொள்கை பற்றிப் பாரதி எழுதிய கட்டுரையே இங்கே இடம் பெறுகிறது.]

பாரிஸ் நகரத்தில் இந்தியர்களின் கூட்டம் ஒன்றிருந்துகொண்டு, அங்கே லண்டனிலிருந்து வரும் ஆங்கிலேயப் பிரபுக்களைக் கொலை செய்ய நிச்சயித்திருக்கிறார்க ளென்ற பொய் வதந்தி இங்கிலந்தில் ஓர் பத்திரிகையிலே பிரசுரமாயிற்று. அதை ராய்டர் தந்திக் கம்பெனியார் உலக முழுதிலும் பரப்பினார்கள்.

பாரத ஸ்வதந்திர முயற்சிக்கு விரோதமாயிருப்பவர்களில் இந்த ராய்டர் கம்பெனியும் சேர்ந்ததாகும். இப்போது அங்குள்ள இந்தியர்களின் தலைவராகிய ஸ்ரீ சியாமஜி கிருஷ்ண வர்மா என்பவர் லண்டனில் பிரசுரமாகும் "மார்னிங்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போஸ்ட்'' பத்திரிகைக்கு ஒரு கடிதமெழுதி யிருக்கின்றார். அக்கடிதத்தில் அவர் ஷை பொய்க் கதையைக் கண்டனை செய்கிறார். "நுனிக்கொம்பிலிருந்து கொண்டு யாரேனும் அடிக்கொம்பை வெட்டுவார்களா? அதர்மச் சட்டங்களுக்கு அஞ்சி ஸாவதானத்தின் பொருட்டு பிரெஞ்ச் எல்லைக்குள் வந்திருக்கும் நாங்கள், பிரென்ச் சட்டத்திற்கு விரோதமாக ஏதேனும் செய்வோமா? எங்களுக்கு அத்தனை நன்றியறிவு கிடையாதா?'' என்று கிருஷ்ண வர்மா எழுதுகிறார். ஆனால் ஆங்கிலேய ரஹஸ்யப் போலீஸான் எவனேனும் ஒரு வயிற்றுக் கஞ்சியற்ற அற்பனிடம் ஒரு வெடிகுண்டு தயார் செய்து கொடுத்து, அதைப் பாரிஸ் நகரத்தில் கொண்டு போடும்படி செய்துவிட்டுப் பிறகு கிருஷ்ண வர்மா முதலியவர்களின்மீது பழி சுமத்தக் கூடுமென்ற சந்தேகந்தான் அடிக்கடி ஜனிக்கிறது.

பாரத ஸ்வதந்திர முயற்சியானது ரத்த முயற்சியன்று. அமைதி முயற்சியாகு மென்பதை விபினபாபு முதலிய சுதேசியத் தலைவர்கள் ஓயாமல் சொல்லிக் கொண்டே யிருக்கிறார்கள். அதெல்லாம் ஆங்கிலேய கவர்ன்மெண்டாரின் காதில் விழவில்லை. மஹாவித்துவான்களும், ஞானிகளுமாகிய விபினபாபு, திலகர் முதலியவர்கள் சொல்வதையெல்லாம் ஆங்கிலேய கவர்ன்மெண்டார் ஏமாற்றென்று நினைக்கிறார்கள். கூலிக்குப் பொய் சொல்லும் ரஹசியப் போலீஸார் தேச பக்தர்களுக்கு விரோதமாகச் சொல்வதை யெல்லாம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெய்வ வாக்காக எடுத்துக்கொள்ளுகிறார்கள். மனமானது ஆத்மாவுக்கு வேண்டியது போலக் கூடவேயிருந்து எப்படி நாசம் செய்கிறதோ, மஹோதரன்[1] எப்படி ராவணனை[2] நாசம் செய்தானோ, அது போலவே இந்த ரஹஸியப் போலீஸார் (வேவுகாரர்) ஆங்கிலேய ராஜாங்கத்தை நாசம் செய்யப்போகிறார்கள்.

(இந்தியா : 23.1.1909 — பக். 5)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. மஹோதரன் :

"இவன் இராவணனுக்கு அமைச்சனாகவும் தோழனாகவும் இசைந்திருந்தான். வஞ்சகத்தில் எவரையும் விஞ்சி நின்றவன். இவன் மாயைகள் பலவற்றையும் நன்கு கற்றிருந்தா னாகையால் தன்னுடைய பகைவர்களை ஏய்ப்பதில் புகழ்பெற்று விளங்கினான். உணவுகளைக் கண்டபடி உண்டு தன்னுடைய வயிற்றை மிகப் பெருக்க வைத்திருந்தா னாகையால் இவனுக்கு மகோதரன் (பெரு வயிறன்) என்னுங் காரணப் பெயர் அமைந்து நின்றது. இராவணனை நல்வழியிற் செல்ல விடாமல் இவன் எப்பொழுதுந் தடுத்து நின்று இறுதியில் அவனுக்கு அழிவைத் தேடிக் கொடுத்தான்."

(சிறப்புப் பெயரகராதி : பக். 511)

2. இராவணன் :

"விசிர வசுவிற்குக் கேசியிடம் பிறந்தவன். தவஞ் செய்து சிறந்த வர பலங்களை யடைந்து இலங்கையை அரசாண்டான். இவன் சீதையைக் கவர்ந்து அசோக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வனத்தில் சிறை வைத்தபடியால் விரைவில் அழிந்தொழிந்தான். இராமாயண நூல் இவனுடைய வரலாற்றைக் கூறுவதற்கு எழுந்த நூலே யாகும்.''

(சிறப்புப் பெயரகராதி — பக். 695)

"..........இவன் சிவபெருமானிடம் பேரன்புடையவன். மூன்றுலகையும் ஆண்ட பெரு வீரமும் ஆற்றலும் உள்ளவன்...

இராவணன் இராமனுடைய பிரமாத்திரத்தால் மாண்டான்.''

(கலைக் களஞ்சியம் தொகுதி 2—பக். 77)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'ருஷிய - ஜப்பானிய யுத்தம்'

முதற் பருவம் - படை சேகரித்தல்

[ருஷிய- ஜப்பானிய யுத்தத்தைப்பற்றி மிகச் சிறந்த முறையில் காப்டன் ஸெஜ்விக் என்பார் நூல் எழுதியதைப் பாராட்டி, பம்பாய் 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகை எழுதியது. நூல் பற்றிய விமர்சனத்தையும் அந்தப் பத்திரிகை எழுதி யிருந்தது.

மேற்படி பத்திரிகையின் விமர்சனத்தை அப்படியே பாரதி மொழிபெயர்த்து அளித்ததுடன், பின்னொரு சமயம் தாமே நூலைப் படித்துப் பார்த்துத் தம்முடைய கருத்துக்களையும் தெரிவிப்பதாக எழுதினார். ஆங்கிலப் பத்திரிகையில் வெளிப்பட்ட நூலின் மதிப்புரையின் தமிழாக்கத்தை இங்கே காண்போம்.]

ருஷிய-ஜப்பானிய யுத்தத்தைப் பற்றி எத்தனையோ நூல்கள் ஆங்கிலேயரால் எழுதப் பட்டிருக்கின்றன. ஆயினும் அவற்று ளெல்லாம் காப்டென் ஸெஜ்விக் என்பவர் எழுதி யிருக்கும் தலைப்பிலே கண்ட பெயருடைய நூல் அதி விசேஷமான தென்று பம்பாயில் பிரசுரமாகும் 'டைம்ஸ் ஆப் இந்தியா' என்ற கீர்த்தி பெற்ற ஆங்கிலேயப் பத்திரிகை அபிப்பிராயப்படுகிறது. இப் புஸ்தகத்திலே ருஷிய - ஜப்பானியர்களுக்குள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விரோதம் தொடங்கிய நாள் முதல் ஜூலை மாதம் 31 ஆம் தேதி (இரு திறத்தாரும் யுத்தரங்கத்தில் சைநியங்களைக்கொண்டு சேர்த்தது) வரை நடந்த செய்திகள் மட்டுமே கூறப்பட்டிருக்கின்றன. நடந்த செய்திகளை யெல்லாம் இந் நூலாசிரியர் தெளிவுடன் வரிசைக் கிரமமாக, அணிப்படுத்தி, நன்றாகச் சொல்லி யிருக்கிறார். இத்துடன் மிகப் பயன்படத்தக்க சித்திரங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப் புஸ்தகத்தைப் பற்றி விமர்சன மெழுதி யிருப்பதில் 'டைம்ஸ்' (பம்பாய்) பத்திரிகை பின்வருமாறு சொல்லுகிறது :

"ஆரம்பப் பக்கங்க ளொன்றில் இந் நூலாசிரியர் ஆங்கிலேயர்க ளெல்லாம் கவனிப்பதற்குரிய ஓர் முக்கியமான விஷயத்தை எடுத்துச் சொல்லி யிருக்கிறார். அதாவது, எந்த தேசத்தார் தேச கவுரவத்தை முதன்மை யாகவும், சரீர சுகத்தை இரண்டாவதாகவும் கருதப் பழக்கப்பட்டிருக்கிறார்களோ, எந்த தேசத்தார் ராணுவப் பயிற்சியிலுள்ள கஷ்டங்களை அனுபவித்தல் கவுரவ மென்றெண்ணுகிறார்களோ, அப்படிப்பட்டவர்கள் சரீர சுகத்தின் பொருட்டுப் பொருளும், பொருள் தேடுவதன் பொருட்டு அமைதியும் வேண்டு மென்பதையே பிரதம சிந்தையாகக் கொண்டிருக்கும் தேசத்தாரைக் காட்டிலும் பெருமை பெற்ற காரியங்களைச் செய்து முடிக்க வல்லவர்களாவார்கள். முன்னையவர் பின்னையவரைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காட்டிலும், சுருங்கச் சொல்லுமிடத்து, உயர்ந்த ஜாதியா ராவார்கள். இவ் விஷயம் ருஷிய - ஜப்பானிய யுத்தத்தினால் நிதரிசனப் படுத்தப்பட்டிருக்கின்றது.

பேகன் என்ற ஆங்கிலேய ஞானி, "ராஜ்யாதிகாரத்திற்கும், பெருமைக்கும் எல்லா சாதனங்களிலும் முக்கியமானது யாதெனில், ஓர் தேசத்தார் யுத்தத் தொழிலை முக்கிய கவுரவமாகவும், முக்கியப் படிப்பாக வும், முக்கியத் தொழிலாகவும் கருதுவதே யாகும்" என்று சொல்லி யிருப்பது ருஷிய - ஜப்பானியப் போரின் அனுபவங்களால் பல மடைகின்றது.

ருஷியர்கள் எவ்வளவோ வீரச் செய்கை கள் செய்திருந்த போதிலும், அவர்களிடத்தில் சில முக்கிய குணங்கள் இல்லாமையால் தோற்றுவிட்டார்கள். ருஷிய — ஜப்பானிய யுத்தம் உலகத்துக்குப் புதிதாக ஒன்றும் கற்பித்து விடவில்லை; முஸ்திப்பின் அவசியத் தன்மை, தர்ம பலத்தின் விசேஷம், காப்பு முறைமையைக் காட்டிலும் எதிர்ப்பு முறைமை சிறப்புடையதாதல், கடல் சக்தியிலுள்ள பலம் என்ற யுத்த சாஸ்திர உண்மைகளையே திரும்ப உலகத்துக்கு எடுத்துக்காட்டி யிருக் கின்றது.

உலகம் தொடங்கிய காலமுதல் இவ் விஷயங்களே பல தேச சரித்திரங்களிலும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிதரிசனப்பட்டிருக்கின்றன. 'எப்படியும் அமைதியே வேண்டும்' என்ற கட்சியார் இவ் வுண்மைகளின் குறிப்பையும், ரஸ்கின் ஞானியார் 'எல்லா மஹா ஜாதிகளும் போரிலே பிறக்கின்றன. அமைதியிலே சாகின்றன' என்று சொல்லி யிருப்பதின் குறிப்பையும் மனத்தே கொள்வார்களாக.''

மேலே பம்பாய் 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகை (*1909* ஏப்ரல் *7*ம் தேதி) அபிப்பிராயத்தை மொழிபெயர்த் தெழுதி யிருக்கின்றோம்.

நாமே சீக்கிரம் அந்தப் புஸ்தகத்தைப் படித்து, அதைப்பற்றி நமக்குத் தோன்றும் விஷயங்களைப் பிரஸ்தாபிப்போம்.

(இந்தியா : 17. 4. 1909—பக்.2)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருட் சுதந்திரத்திற்கு ஜப்பானியர் படும் பாடு

[பொருட் சுதந்திரத்திற்காக ஜப்பானியர் செய்கிற முயற்சிகளைக் கோடிட்டுக் காட்டி, ஜப்பானியப் பத்திரிகை சுட்டிக் காட்டிய பேருண்மையை நம் இந்திய மக்கள் கவனிக்க வேண்டிய அவசியத்தை இக் கட்டுரை தெரிவிக்கின்றது.]

வாணிபத்திலும், பொருளிலும் நம்மைப் போலப் பராதீனமான ஜாதி உலகத்திலே வேறில்லை. அப்படி யிருந்தும் நாம் சென்ற நூற்றாண்டு முழுமையும் நமது நிலையைக் கவனிக்காமல் உறங்கிக் கிடந்தோம். இப்போதுகூட அரைக்கண்தான் விழித்திருக்கிறோம். நமது மனஸ்திதியை, ஜப்பானியரின் ஸ்திதியுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். இவ்வளவுக்கும் ஜப்பானியர்கள் நம்மைப்போல ஸகல விஷயங்களிலும் பராதீனமானவர்க ளல்லர். எனினும் இன்னும் அதிக சுதந்திரத் தன்மை (வியாபாராதி விஷயங்களில்) பெறவேண்டுமென்று ஸர்வ ஜாக்கிரதையுடன் உழைத்து வருகிறார்கள். "நெடுங் கிழக்கு" என்ற ஜப்பானியப் பத்திரிகை சிறிது காலத்திற்கு முன் பின்வருமாறு எழுதி யிருந்தது :

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"புழுதித் தூள்களைப் போதுமான அளவு குவித்தால் மலையாகிவிடும்" என்ற பழமொழி ஜப்பான் தெருக்களிலே ஓயாமல் அடிபடுகிறது. ஆனால், ஓரிரண்டு காசு கொடுத்து எழுதும் பென்ஸில் வாங்குவோரில் பலர் ஜப்பான் தேசத்திலிருந்து அன்னிய பென்ஸில்களுக்கு வருஷத்தில், 1,000,000 யென் செலவாகிற தென்பதை அறிகிறதில்லை. பெரிய பெரிய ஸர்க்கார் கச்சேரிகள் முதல் மலைக் கிராமங்களில் சிறு பாடசாலைகள் வரை ஒவ்வோரிடத்திலும் அன்னிய தேசப் பென்ஸில்களை உபயோகப்படுத்துகிறார்கள். ஜப்பான் எழுந்து விட்டதென்று சொல்லப்படும் இக் காலத்தில் இவ் விஷயம் மிக்க ஆச்சரியத்துக் கிடமாயிருக்கிறது."

இந்தியர்களே, கவனித்துக் கொள்ளுங்கள்.

(இந்தியா : 24.4.1909 — பக். 4-5)

*

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ருஷியாவும், பிரிடிஷ் இந்தியாவும்

[இக் கட்டுரை ருஷிய ஆட்சி முறையைப் பிரிட்டிஷ் இந்திய ஆட்சி முறையோடு ஒப்பிட்டுக் காட்டும் பான்மையில் அமைந்த கட்டுரையாகும்.

டால்ஸ்டாய் என்பவர் எழுதிய கட்டுரைகளுக்காக அவர்மீது ருஷ்ய அரசாங்கத்தார் வழக்குத் தொடுக்க முன் வரவில்லை. ஆனால், பிரிட்டிஷ் இந்தியாவிலோ ஜனங்கள் நன்மைக்காகப் பாடுபட்டவர்கள் எல்லாம் விசாரணைகூட இல்லாமல் சிறை பிடிக்கப்பட்டனர் என்பதை இச் சிறு கட்டுரை எடுத்துக் காட்டுகின்றது.]

ருஷியாவிலுள்ள டால்ஸ்டா யென்ற மஹா ஞானி[1] யொருவர் சில வியாஸங்களை எழுதினார். அதை "ஸெல்டன்" என்றொருவர் தன்னுடைய முத்திராசாலையில் அச்சிட்டுப் பிரசுரஞ் செய்தார். அதற்காக ருஷியா கவர்ன்மெண்டார் கோபமுண்டு, ஸெல்டன் என்பவர்மீது குற்றஞ் சாட்டி, விசாரணைக்குக் கொண்டு வந்தார்கள்.

இதைக் கேட்ட மாத்திரத்தில் டால்ஸ்டாயிக்கு மனம் பொறுக்காமல், வியாஸங்க ளெல்லாம் தன்னா லெழுதப்பட்டன வென்று ஒப்புக்கொண்டு, தன்னை விசாரணை செய்யும்படியாகவும்,

பா.—27

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸெல்டன்மீது யாதொரு குற்றமு மில்லை யென்றும் கடித மெழுதினார். ஆனால், கோர்ட்டார் அவரை (டால்ஸ்டாயை) தொடக்கூட மாட்டோ மென்று மறுத்து விட்டு, ஸெல்டன் என்பவரையே தண்டித் தார்கள்.

இப்படி யிருக்க, பிரிடிஷ் இந்திய அரசாட்சி யைச் சிறிது பார்ப்போம். பெரிய மகான்களாகிய ஸ்ரீமான் அச்வினி குமார தத்தர், ஸ்ரீ கிருஷ்ண குமார மித்திரர் முதலியோர் தான தர்மங்களைச் செய்துகொண்டு, ஜனங்கள் உஜ்ஜீவிக்குமாறு நற் போதனைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். பிரிடிஷ் அரசாட்சியின்கீழ் இப்படிப்பட்ட பெரியோர்களின் கதி யென்ன? எல்லோரும் விசாரணை யில்லாமல் தேசப் பிரஷ்டம் செய்யப் பட்டு, காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

(இந்தியா : 19.6.1909—பக்.2)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. டால்ஸ்டாய் என்ற மஹாஞானி :

ருஷ்ய நாட்டைச் சார்ந்தவர்; நூலாசிரியர்; மிகச் சிறந்த தத்துவ ஞானி; சிந்தனையாளர்.

இவரைப் பற்றிப் பாரதியே எழுதியுள்ள வசனங்கள் வருமாறு :

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"இம் முனிவரின் பெருமையைப் பற்றித் தமிழ்நாட்டில் அதிகப் பிரஸ்தாபம் கிடையா தெனினும், இவர் ஐரோப்பா முழுதிலும் நிறைந்த கீர்த்தி யுடையவர். ஐரோப்பியரின் செல்வாக்கும் பழக்கமும் உடைய மற்ற நாடுகளிலேயும் எண்ணிறந்த அறிஞர்கள் இவரை ஒரு மஹரிஷி போலப் பாராட்டுகின்றார்கள். இந்த ருஷிய ஞானி ஐரோப்பிய நாகரிகம் என்று சொல்லப்படும் போலி நாகரிகத்திலே யுள்ள குற்றங் குறைகளை யெல்லாம் நன்றாகத் தெரிந்து, ருஷிய ஜனங்கள் அக் குறைகளைத் தவிர்க்க வேண்டுமென்று பல வருஷங்களாகப் போதனை செய்கிறார்.

இப்போது இவருக்கு வயது எண்பதிற்கு மேலாய் விட்டது. மஹா வயோதிகர். ருஷியாவில் உயர்ந்த பிரபுக் குடும்பத்திலே தோன்றித் தமது செல்வத்தையும் பதவியையும் துறந்துவிட்டுத் தனியாகப் போய் உழுது ஜீவனம் செய்கிறார். எவனேனும் ஒரு அரசனிடம் போயிருந்து, இச்சகம் பேசி வாழ்வ திகழ்ச்சி யென்றறிந்து, நெசவுத் தொழிலைக் கைக்கொண்ட நமது திருவள்ளுவ முனிவரைப் போன்றவர். அத் திருவள்ளுவர் கூறியுள்ள "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்ற தர்மத்தை எழுத்துக்கூடப் பிசகாமல் அனுசரிப்பவர். பிறர் கஷ்டப்பட்டு உழுது பயிரிட்டுக் கொணர்ந்த தானியத்தை அவர்கள் பசித்திருக்கத் தாம் உண்டு களித்தழிக்கின்ற மிராசுதார்கள்கூடநியாயமான வாழ்க்கை யுடையவர்க ளில்லை; தாமே ஏரெடுத்து உழுது ஜீவிக்கவேண்டும் என்ற கொள்கை யுடையவர். இது உலகத்துக் கெல்லாம் சாத்தியமாயினுமே, ஆசாவிடினுமே, இவருடைய மனத் தூய்மைக்குச் சிறந்ததோர் குறியாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவரது அரசியல் தர்மங்கள் அன்பையே பிரமாண மாகக் கொண்டவை. இவருடைய கொள்கைகளை யெல்லாம் இங்கே எழுத முடியாது. ருஷிய ஜனங்களை இப்போதுள்ள கொடுங்கோன்மையினின்றும் பிழைப் பிக்க வேண்டுமென்று உள்ளன்போடு பாடுபடுவோர் களிலே இவர் ஒருவர் என்ற முக்கியமான விஷயம் மட்டிலும் இங்கே குறிப்பிடத்தக்கது."

(இந்தியா : 3. 4. 1909—பக். 3)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குடியரசுப் பண்டிகை

[பிரெஞ்சு தேசமானது, கொடுங்கோன்மை ஆட்சியி னின்றும் விடுபட்டு, குடியரசு ஆட்சியை நிறுவிய சரித்திரத்தை இக் கட்டுரை தெரிவிக்கின்றது.

ஸ்வதந்திரம், ஸமத்துவம், ஸஹோதரத்துவம் என்னும் மும்மணிகளை உலகிற்கு வழங்கிய பெருமை மிக்க சரிதையை விளக்கிய பாரதி, சுதந்திரம் பெறவே ஒவ்வொரு தேசத்தாரும் முயற்சி செய்கிறார்கள் என்றும் அதை அடையத்தான் போகிறார்கள் என்றும் உறுதி யாகவும் தெரிவித்த பான்மை வியக்கத்தக்க தாகும்]

இம் மாதம் 14-ம் தேதி நமது புதுவையிலும், இதர பிரெஞ்சு இராஜாங்கங்களிலும் குடியரசுப் பண்டிகை அல்லது இராஜா பண்டிகை யென் றொன்று நடைபெற்று வரப்போகிறது. இது இவ் வருஷம் மாத்திர மல்ல, ஒவ்வொரு வருஷமும் பொது ஜனங்க ளெல்லாம் மனங் களிக்குமாறு ஓர் மகோற்சவமாக நடத்தப்படுகிறது. இம் மகோற்சவத்தின் காரணத்தைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம். இங்கு சிறிது பிரெஞ்சு தேசத்தின் பழைய சரித்திரத்தையும், நிலைமையையும் சொல்வது தகுதியா யிருக்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரெஞ்சு தேசத்தின் நிலைமை

120 வருஷங்களுக்கு முன்பாகப் பிரெஞ்சு தேசமானது தற்காலத்தி லிருக்கும் சில கிழக்கு தேசங்களைப் போல, கொடுங்கோன்மையினாலும் வறுமையினாலும் வருந்திக்கொண்டிருந்தது. அது ஒரு பெரிய இராஜாங்கமா யிருந்தபோதிலும் ஜனங்களுக்குள் ஸஹோதரத்துவமும், ஐக்கியமு மில்லாம லிருந்தபடியால் பலவிதமான துன்பங்களுக்கு உட்பட்டிருந்தார்கள்.

லேதர் தெ கஷ்ஷே (Lettre de cachet) என்னும் ஒரு ராஜா ஆக்கினையினால், காரண மில்லாமல், தேச நன்மைக்காகப் பாடுபடும் பெரியோர்களைச் சிறைச்சாலையில் கொண்டு போய் அடைத்து விடும்படியான கொடிய வழக்க மொன்றிருந்தது. ஷெ லேதர் கஷ்ஷேயைத் தற்காலத்தில் பிரிடிஷ் இந்தியாவில் அனுசரித்து வரும் வெளியேற்றும் சட்டத்திற்கு ஒப்பாகச் சொல்லலாம். அரசன் தன்னிஷ்டம்போல் வரிவசூல் செய்து செலவழித்துக் கொண்டிருந்தான். அதில் ஜனங்களுக்குச் சிறிது அதிகாரமேனும் கிடையாது. அதிகாரிகள் தங்களுக்கு இஷ்டமானவர்களுக்கு அதிக சம்பளமும், மற்றவர்களுக்குக் குறைவான சம்பளமும் கொடுப்பது வழக்கம். ஆனால் இருவர் செய்வதும் ஒரேவிதமான தொழில்தான். ஜனங்கள் வருந்திக் கொண்டிருந்தபோதிலும் உள்ளூரில் உற்பத்தி செய்யும் பண்டங்களின் மீதெல்லாம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரமான வரி விதித்தும் 'மனாபொலி' யென்று சொல்லும்படியான அரசிறையைப் பலாத்காரமாய் வசூல் செய்தும் வந்தார்கள். நியாயஸ்தலங்களில் பக்ஷபாதம் அதிகரித்து வந்தது. அதிகாரிகளுக்கு வேண்டியவர்கள் வந்தால் ஒரு நியாயமும், மற்ற ஏழை ஜனங்கள் வந்தால் வேறொரு நியாயமுமாக விருந்தது. இவ் வநீதிகளை யெல்லாம் கண்டனம் செய்து பிரசுரம் செய்யும் பத்திரிகைகளையும், புத்தகங்களையும் அதிகாரிகள் தடுத்துக் கொண்டு வந்தார்கள். அநேக பத்திராசிரியர்கள் சிறையி லடைக்கப்பட்டார்கள்.

மேற்படி துன்பங்களை யெல்லாம் ஸஹிக்க முடியாமல் "எத்தா ழெனெரோ" என்னும் இராஜ ஸங்கத்தில், ஜனப் பிரதிநிதிகள் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று கேட்டார்கள். ஆனால், அரசன் ஒப்புக்கொள்ளாமல், ஜனப் பிரதிநிதிகளை வெளியே போகும்படி தன்னுடைய ராணுவத் தலைவன் மூலமாய் உத்தரவு அனுப்பினான். அப்பொழுது ஜனப் பிரதிநிதிகளின் தலைவரான மிராபோ (Mirabeau) என்பவர், இப் பெயர் போன்ற வார்த்தைகளைச் சொன்னார்: "நாங்கள் ஜனங்களால் நியமிக்கப்பட்டு இங்கு சேர்ந்திருக்கும் பிரதிநிதிகள். எங்களை ஈட்டிகளால் குத்திக் கொன்று வெளியே தள்ளினா லொழிய போகோ மென்று உன்னுடைய எஜமானனிடத்திற் போய்ச் சொல்லு." பிறகு பிரதிநிதிகளெல்லாம் ஒன்றுகூடி ஸர்வ ராஜ்ஜியாதிகாரத்தையும் வகித்த மந்திரா லோசனை ஸபை யொன்றை நியமிக்காமல் பிரிவ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தில்லை யென்று பிரதிக்கினை செய்துகொண்டார்கள். ஆகையால்தான், இந்தப் பிரதிநிதி கூட்டத்திற்கு "அஸாம்ப்ளே நாஸ்யோனால் கோன்ஸதிதியுவாந்த்" என்ற பெயருண்டாயிற்று.

பின்பு பரீஸ் நகரத்தா ரெல்லோரும் ஒத்தேல் தெவீல் என்னுமிடத்தில் ஒன்றுசேர்ந்து ஒரு கொமிதேயை (Committee) ஏற்பாடு செய்தார்கள். அந்தக் கொமித்தேயிக்கு பய்யி (Bailly) என்பவரை அக்கிராஸனாதிபதியாக நியமித்தார்கள். அந்த கொமிதேயைச் சேர்ந்தவர்கள் இந்த ஆபத்துக் காலத்தில் ஜனங்களுக்கு உணவு, போர்க்கருவி முதலியவைகளைக் கொடுக்கவேண்டும். பிறகு பரீஸ் நகரத்தைக் காப்பதற்காக கார்த் நாஸியோனால் (Grade Nationale) என்னும் ஸேனையை யேற்பாடு செய்து அதற்கு லா பாயத் (La Fayette) என்பவரைத் தலைவராக நியமித்தார்கள்.

மேற்படி சம்பவங்க ளெல்லாம் 1789-ம் ஷுய்யே (Juillet) மாதம் 13-ம்தேதி நடந்தது. 14-ம் தேதி காலையில், ஜனங்களுக்கு ஸஹாயமா யிருந்த நேகர் (Necker) என்னும் மந்திரியை அரசன் வேலையை விட்டுத் தள்ளியதும், வெளிச் சேனைகளைத் தனக்கு உதவியாகச் சேகரித்ததும் பாரீஸ்ஸை எட்டின. இதைக் கேட்ட மாத்திரத்தில் ஜனங்கள் வெகுண்டு பஸ்தீ லென்னும் சிறைச் சாலையை இடித்துத் தரைமட்டம் செய்து, அங்கிருந்த தேச பக்தர்களை எல்லாம் விடுதலை செய்தார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பஸ்தீ லென்னும் சிறைச்சாலை

பஸ்தீ லென்னும் சிறைச்சாலை ஓர் பெருங் கோட்டையைப் போலக் கட்டப்பட்டு ஒரு பெரிய சேனையினால் காக்கப்பட்டிருந்தது. அதற்கு ஓர் குவர்னேரையே நியமித்திருந்தார்கள். அதில் எண்ணிலாதவ்வளவு லேதர் தெ கஷ்ஷே என்னும் ராஜ ஆக்கினையினால் பிடிக்கப்பட்ட குற்ற மற்றவர்களும், நியாயஸ்தலத்தில் அநியாயமாய் தண்டிக்கப்பட்ட தேசபக்தர்களும், இன்னும் இதர மஹான்களும் அடைக்கப்பட்டு நெடுங்காலமாக வருந்திக் கொண்டிருந்தார்கள். ஆகையால்தான் அச் சிறைச்சாலையை ஜனங்கள் பார்த்தவுடனே, அது அவர்களுக்கு அரசன் அநீதியே யோர் உருவங் கொண்டாற்போலப் புலப்பட்டது.

ஆதலால், அதைத் தரைமட்டமாக்கிவிட்டு ஜனங்கள் அதன்பேரில் ஆனந்தக் கூத்தாடிக் கொண்டு "கொடுங்கோன்மை என்றுமழிக! கொடுங் கோன்மை என்றுமழிக!" (Abas la tyrannie-Down with tyranny) என்று கூக்குரலிட்டார்கள். இந்த 14-ம் தேதியாகிய மகாதினம்தான் 120 வருஷங்க ளாகக் கொண்டாடப்படுகின்றது.

இத் தினம் பரீஸ் நகரத்தில் கொடுங் கோன்மையை யழித்துவிட்டதனால் பிரெஞ்சு தேசத்திற்கு உண்டான கீர்த்தியின் வரம்பை யாரால்தான் சொல்ல முடியும்? ஸ்வதந்திரம், ஸமத்துவம், ஸஹோதரத்துவம் என்னும் மூன்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தத்துவங்களும் உலகத்திற்கு உபதேசிக்கப்பட்டன. மூவர்ணக் கொடியானது நாட்டப்பட்டது. பிரெஞ்சு ராணுவ வீரர்கள் ஷ தத்துவங்களை நிலைநாட்ட எவ்வளவு அற்புத வேலைகளைச் செய்தார்கள்! அவை இன்றைக்கும் வியக்கத் தக்கவையாகவே யிருக்கின்றன.

இவ் வபீஷ்டங்களை யடையும் பொருட்டே ஒவ்வொரு தேசத்தாரும் முயற்சி செய்கிறார்கள். இவைகளை ஒவ்வொருவரும் அடையத்தான் வேண்டும்.

புதுவைவாஸிகளே! நாமெல்லோரும் இந்த மகோற்சவ தினத்திலாவது நமது சண்டை சச்சரவு களை மறந்து, ஒன்றுகூடி மனங் களிப்போமாக.

ஸ்வதந்திரம் நீடித்து வாழ்க! ஸமத்துவம் நீடித்து வாழ்க! ஸஹோதரத்துவம் நீடித்து வாழ்க! குடியரசு நீடித்து வாழ்க! Vive la Republique.

(இந்தியா : 10.7.1909 — பக். 3)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதி : 9

பல்சுவை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

□

பல் பொருள்கள் பற்றிய கட்டுரைகள் இப் பகுதியில் அடங்கி யுள்ளன.

தஸரா பண்டிகையின் நோக்கம், சில பெரியோர் களின் மரணம், கோவைச் சிறையில் வ.உ.சி.யின் சாட்சியம், நாகரிகப் படிப்பிலுள்ள பயன்கள், சிறை யில் திலகரின் பணி, பாரத தர்ம மகா சபையின் நோக்கம், சாண்டோ ராமமூர்த்தியின் வலிமை, ஜாதீய ஒருமை, சங்கீதத்தின் எதிர்கால நிலை, தொழிலாளி - முதலாளி உறவு நிலை- ஆகிய இவை போன்ற குறிப்புச் செய்திக் கட்டுரைகள் இப் பகுதியைச் சிறக்கச் செய்கின்றன.

□

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தஸரா பண்டிகை

சென்ற வியாழக்கிழமையோடு இந்தியா முழுதும் தஸரா பண்டிகை[1] முடிவு பெற்றது. ஸரஸ்வதி பூஜை, துர்க்கா பூஜை முதலிய பல விசேஷங்களின் பொருட்டு இந்தியாவின் வெவ்வேறு பாகங்களில் தஸரா கொண்டாடப்படுகிற தெனினும், இந்த "விஜயதசமி"த் திருநாளின் முக்கியக் குறிப்பை நம்மவர்கள் மறந்துவிடக் கூடாது.

ஸ்ரீ ராமன்[2], ராவணனை வென்று ஜயம் பெற்றது இந்த திவ்விய தினத்திலேதான். ஹிந்துக் களுக்கு மட்டுமே யல்லாது, பொதுவாக எல்லா இந்தியர்களுக்கும் இந்தத் தினம் வெகு பரிசுத்த மானது. சற்குணம், ஞானம், வீரத்தன்மை, தூய்மை என்பவற்றிற்கு ஆஸ்பதமாக இருந்த ஸ்ரீ ராமபிரான் அநீதிக்கும் கொடுமைக்கும் அஞ்ஞானத்திற்கும் மிருகத் தன்மைக்கும் அடையாளமாகிய ராவணனை நாசம் புரிந்த நாள் வெகு மஹிமை பெற்றதென்பது எவருக்கும் விளங்கும். அஞ்ஞானம் அழிவதாக! கொடுமையும் குரூரத்தன்மையும் பேராசையும் வஞ்சனையும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சூனியமாய் விடுவதாக! தர்மம் ஓங்குக! அதர்மம் வேரற்றுப் போய் ஒழிக!

வால்மீகி[3], கம்பன்[4] முதலிய மஹான்களால் கூறப்பட்டிருக்கும் ஸ்ரீ ராம சரித்திரம் ஹிந்துக்களுடைய ஒப்பிலாத திரவியங்களிலே ஒன்று. ஹிந்து மாதர்களும், ஹிந்து புமான்களும் ராமாயணத்தின் ஒழுக்க முறையைப் பின்பற்றுவார்களானால், நமக்குள்ள குறைகளெல்லாம் நீங்கிவிடும். ராமன், லக்ஷ்மணன்[5], பரதன்[6], சத்ருக்னன்[7] என்ற நிகரற்ற ராஜ குமாரர்களின் நடையைப் பின்பற்றி நாமெல்லாம் அன்புடனும் ஐக்கியத்துடனும் வாழ்தல் வேண்டும்.

நமது மாதர்களெல்லாம் ஸீதா தேவி[8]யைப் போலக் கற்பு நிலைமையும் நாயக பக்தியும் பெற்றிருக்கவேண்டும். ராமாயணத்தின்[9] பாடங்களை நாம் உண்மையாகக் கற்றுக்கொள்ளும் பக்ஷத்தில் நம்மனைவரின் பொது நோக்கமாகிய "பாரத நாட்டின் உன்னதம்" விரைவில் கைகூடி விடும்.

(இந்தியா : 29.9.1906—பக்.13)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. தஸரா பண்டிகை :

தமிழ்நாட்டில் கொண்டாடப்பெறும் நவராத்திரிப் பண்டிகையைக் கன்னட தேசத்தார் தஸரா பண்டிகை என்ற பெயரால் கொண்டாடுகின்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"நவராத்திரி" என்ற கட்டுரையில் பாரதி,

'ஒன்பதிரவு பராசக்தியைப் பூஜை செய்கிறோம். லக்ஷ்மி யென்றும், ஸரஸ்வதி யென்றும், பார்வதி யென்றும் மூன்று மூர்த்தியாக நிற்பது பராசக்தி. இவ்வுலகத்தை ஆக்கல், அழித்தல், காத்தல் என மூன்று தொழில் நடத்துவது.

ஹிமாசலந் தொடங்கிக் குமரி முனை வரை வேதத்தை நம்பும் கூட்டத்தார் எல்லாம் இந்தப் பூஜை செய்கிறோம். ஏழைகளாக இருப்போர் பராசக்திக்கு மலரையும் நீரையும் உள்ளத்தையும் கொடுத்து வலிமை பெறுகிறார்கள். செல்வமுடையோர் விருந்துகளும் விழாக்களும் செய்கின்றனர்."

(பாரதி நூல்கள் : கட்டுரைகள்—பக்:31)

என்று குறிப்பிட்டுள்ளார்.

2. ஸ்ரீராமன் :

"அயோத்தி யாண்ட சூரிய வம்சத் தரசர்களில் அசன் புத்திரனாகிய தசரதன் தான் புத்திரன் இல்லாமல் கலைக்கோட்டு முனிவரால் புத்திர காமேஷ்டி யாகஞ் செய்விக்க, அந்த யாகத்தில் ஒரு பூதம் தாம்பாளத்தில் பாயச மேந்தித் தந்தது. அதனைத் தசரதன் தனது மனைவியர் மூவருக்கும் பகுத்துத் தந்தனன். அதனால் முதற் றேவியாகிய கோசலையிடத்துத் தேவர், அரக்சர் உபத்திரவத்தைச் சகிக்காது விஷ்ணு மூர்த்தியை வேண்ட, அந்தத் திருமால் 'நாம் தசரதன் புதல்வனாகப் பிறந்து உமது குறையைத் தீர்க்கிறோம்' என்றபடி சித்திரை மாதம் நவமி திதி புனர்பூச நக்ஷத்திரத்தில் திருவ வதரித்து இராமனெனப் பெயர் பெற்று விளங்கினார்."

(அபிதான சிந்தாமணி—பக் : 185)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"அயோத்தியை ஆண்ட தசரதன் மகன். தன் தந்தையாகிய தசரதன் மொழியைக் காப்பாற்றக் கைகேசியின் சொற்படி தன் மனைவி சீதையுடனும் தன் தம்பி இலக்குமணனுடனும் பதினான்கு ஆண்டுகள் காட்டிலே துறவுக் கோலத்துடன் வாழ்ந்தான். சீதையைக் கவர்ந்து சென்ற இராவணனை, வாலியின் தம்பியாகிய சுக்கிரீவன், அநுமான் முதலிய வானர வீரர்களுடன் இலங்கைக்குச் சென்று கொன்றான். கங்கையில் ஓடம் விட்ட வேடனாகிய குகனையும் தோழனாக ஏற்றான். இராமன் என்பதற்கு மனதுக்கினியவன் என்று பொருள். பரசுராமன், பலராமன் என்பவனையும் இராமன் என்று சொல்வதுண்டு."

(கலைக் களஞ்சியம் தொகுதி 2—பக் : 68)

3. வால்மீகி :

இவர் பிறப்பால் அந்தணர். வேடருடன் கூடி வாழ்க்கை நடத்தியவர். தீவினைக்கு மாற்றாக இராம நாமத்தைக் கூறி நல்வழிப்பட்டவர். தவச் சிறப்பால் முனிவரானவர். இவர் சமஸ்கிருதத்தில் இயற்றிய இராம காதையே இராமாயணம் என்று அழைக்கப்படுகின்றது தவஞ் செய்கையில் புற்று வளர்ந்து இவரை மூடியதால், இவருடைய பெயர் வான்மீகர் என்று மாறியது.

4. கம்பர் :

இவரால் இயற்றப்பட்ட இராமகதை கம்ப ராமாயணம் என்ற பெயரால் வழங்குவதாயிற்று.

"'புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்றார் பாரதி. தமிழ்மொழியை வாழ்வித்த முப்பெரும் கவிஞருள் கம்பரும் ஒருவர் என்பது அவர் கருத்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"கம்பர் காலத்தில் சைவமும் வைணவமும் தமிழ் நாட்டில் சிறந்து விளங்கிய சமயங்களாகும். இவ்விரு சமயங்களும் இணக்கமுற்று வாழ்தல் வேண்டும் என்பது அவர் விருப்பம். வடமொழியில் ஆதிகாவியம் என்று போற்றப்படும் வால்மீகி ராமாயணமே கம்ப ராமாயணத்தின் முதனூல் ஆகும்."

(கலைக் களஞ்சியம் தொகுதி 3—பக் : 214-215)

5. லக்ஷமணன் :

"தசரதருக்குச் சுமித்திரையிடம் பிறந்த குமரர். இவர் இராமரைவிட்டு நீங்காது மிதிலி சென்று சநக புத்திரியாகிய ஊர்மிளையை மணந்து, தமயனை விட்டு நீங்காமல் தாய் சொற்படி காடு சென்று இராம பிரானுடன் இருக்கும்" (பேறு பெற்றவன்)

(அபிதான சிந்தாமணி—பக்:209)

"......இராம — ராவணப்போரில் அதிகாயனையும், இந்திரசித்தையும் கொன்றான். இராவணன் இறந்தபின் இராமன் ஏவலால் விபீடணனுக்குப் பட்டம் கட்டினான்.

......இவனுக்குச் சௌமித்திரி, இளைய பெருமாள், இராமானுசன் எனவும் பெயர்கள் உண்டு. இவனை ஆதிசேடனின் அவதாரம் என்பர்."

(கலைக் களஞ்சியம் தொகுதி 2—பக்:108)

6. பரதன்

"தசரத மன்னனுடைய புதல்வர்கள் நால்வரில் ஒருவன். இராமன்பால் பேரன்புடையவன். தன்னுடைய தாயாகிய கைகேயி தனக்காகப் பெற்ற நாட்டை அரசாட்சி செய்யாமல் பாதுகையை வைத்து அரசாட்சி செய்தவன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

...இராமன் குறித்த காலத்தில் வராமையால் தீப் பாய முயன்று அதற்கானவைச் செய்து விரைந்து வந்த அனுமானால் தடுக்கப் பெற்றவன்.''

(சிறப்புப் பெயரகராதி : பக். 429-430)

7. **சத்ருக்னன் :**

''தசரதனுக்குச் சுமித்திரையிடம் பிறந்த குமரன். சநகன் புத்திரியாகிய சதகீர்த்தியை மணந்தவன்.''

(அபிதான சிந்தாமணி — பக். 571)

8. **ஸீதாதேவி : (சீதை)**

''ஜனகன் மகள். இராமபிரானுடைய மனைவி. ஜனகன் வேள்விச் சாலை அமைப்பதற்காகப் பூமியைச் சமப்படுத்துவதற்கு உழும்போது உழுபடைச் சாலியினின்றும் தோன்றினவ ளாதலின் சீதை எனப் பெயர் பெற்றாள். ஜானகி, மைதிலி, வைதேகி முதலிய வேறு பெயர்களும் உண்டு.''

(கலைக் களஞ்சியம் தொகுதி 5—பக். 12)

''வேதவல்லி என்பாள் முன் சாபப்படி இராவணனை அழித்தற்கு இலங்கையில் ஒரு தடாகத்தில் ஒரு தாமரை மலரிற் சிறு பெண் குழந்தையாகத் தோன்றினாள். அதனைக் கண்டோர் எடுத்துச் சென்று இராவணனிடங் கொடுத்தனர். இராவணன் காலக் கணிதர்களைக் கொண்டு அக் குழந்தையின் பலனைப் பார்த்தான். அக் குழந்தையால் தனக்கும் இலங்கைக்கும் அழிவுண்டாகும் என்று உணர்ந்தான். அக் குழந்தையை ஒரு பெட்டியில் வைத்துக் கடலில் விட்டு விடச் செய்தான். அப் பெட்டி அலையாலடித்துச் செல்லப்பட்டு மிதிலாபுரிச் கடற்கரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யில் ஒதுங்க நாளடைவில் அவ்விடத்தில் மண் மேடிட்டது. அவ்விடத்தில்தான் சனகன் வேள்விக்கு உழத் தொடங்கிப் பெட்டியைக் கண்டெடுத்தான்."

(சிறப்புப் பெயரகராதி — பக். 237-238)

9. **இராமாயணம் :**

"இராமாயணமானது தந்தை மகன், கணவன் மனைவி, தமயன் தம்பி, நண்பன் பகைவன், குரு சிஷ்யன், அரசன் குடிகள் போன்ற உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத உறவுகள் யாவும் தூய அன்பின் நலனாலும் தன்னலத் துறவின் நலனாலும் எவ்வாறு விழுமியனவாகின்றன என்பதை விளக்கிக் காட்டுகிறது.

இராமாயணத்தைப் பகவத் கீதை என்ற தத்துவ நூலுக்குப் பிறப்பிடம் எனவும் கூறலாம். கீதையில் சொல்லப்படும் கருமம், ஞானம், பக்தி—ஆகிய மூன்றும் இராமாயணத்தில் உதாரணங்கள் மூலம் விளக்கப்படுகின்றன."

(கலைக் களஞ்சியம் தொகுதி 2 — பக். 69)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதிய வருஷத்துப் பட்டங்கள்

இரண்டாந் தேதி வெளியிட்ட புது வருஷப் பட்டங்களைப் பார்த்ததில் "நமது பெயருக்குக் கொஞ்சம் வால் நீளும்" என்று ஆவலோடு பார்த் திருந்த அனேகர் திருப்திப் படாமல் போய்விட்ட னர். இவ் வாலுண்டாக்குவதில், ஸெக்ரிடேரியட்டில் என்ன வழி யனுஸரிக்கின்றாரோ தெரியவில்லை. வெளியிட்டிருக்கும் பட்டங்களைக் கணக்கிட்ட போது காங்கிரஸ் கட்சியார் அனைவருக்கும் அந்த எழுத்துகள் சேர்க்கப்படவில்லை. 'இப்ரஹிம் ரஹிம் தூலா' என்பவர் ஒருவரே அதில் தப்பி வாங்கி விட்டார். மைசூர் மகாராஜாவும் K.G.C.S, (நைட் கிராண்ட் கம்மாண்டர் ஆப் ஸ்டார்) என்கிற பட்டம் பெற்றார். அதை "மகாராஜா" என்கிற பட்டத்தைக் காட்டிலும் ஜனங்கள் ஒரு மேன்மை யாக மதிக்கமாட்டார்கள்.

இதுதவிர, கைஸர்ஹிண்ட், ரைபஹதூர், கான் ஸாஹிப் ராவ், ஸாஹிப் என்னும் பல பட்டங்கள் அதிக மலிவாய் அனேகருக்குக் கிடைத்துவிட்டன. அந்த நம்பர்களை நம்மால் கணக்கிட முடியாது. இதுவரையில் பட்டம் பெறுவதில் அதிக தாகத்தோடு காத்திருந்த பலருடைய தாகமும் தீர்ந்து, அமைதி பெற்றிருப்பரென நம்புகிறோம்.

(இந்தியா : 5.1.1907 — பக். 5)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ காளி சரண பானர்ஜியின் மரணம்

ஸ்ரீ காளி சரண பானர்ஜி இவ் வாரம் வியாழக் கிழமை யன்று இறந்து போய்விட்டாரென்ற சமாசாரத்தை மிகவும் துக்கத்துடன் அறிவிக் கின்றோம். இவர் கல்கத்தாவிலே கதோ கிறிஸ்தவர் வகுப்புக்குத் தலைவராக விளங்கினார். கல்கத்தா யூனிவர்ஸிடியில் 4 வருஷம் ரிஜிஸ்ட்ராராக வேலை பார்த்தவர். காங்கிரஸ் தலைமையிலே ஒருவராக இருந்து, இவர் இந் நாட்டின் அனுகூலத்தின் பொருட்டு மிகவும் பாடுபட்டிருக்கிறார். எனினும், சில வருஷங்களாக இவருக்குத் தேக அசவுக்கிய மேற்பட்டபடியால் பொதுக் காரியங்களில் அதிக மாகப் பிரவேசிக்க முடியாமல் போய்விட்டது.

சென்ற கல்கத்தா காங்கிரஸ் சமயத்தில் இவர் தமது தேக அசவுக்கியத்தைக் கூடப் பாராட்டாமல் சபை நடப்பதைப் பார்க்க வந்திருந்தார். அப்போது களைப்பு மிகுதியால் மூர்ச்சித்து விழுந்துவிட்டார். அங்கிருந்து இவரைச் சுமந்து வெளியே கொண்டு சென்ற காலத்தில் ஜனங்கள் அளவற்ற பரிதாப மடைந்தார்கள். இப் பெரியோர் இப்போது இறந்து போய்விட்ட செய்தி கேட்டு, எல்லா தேசாபிமானி களுக்கும் மனத் தளர்ச்சி யுண்டாகு மென்பதில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆக்ஷேபமில்லை. பெங்காள மாகாணத்தினுடைய துரதிர்ஷ்டத்தைப் பாருங்கள்! முதலிலே உமேச சந்திர பானர்ஜி காலஞ் சென்றார். பிறகு ஆனந்த மோஹன வஸு. இப்போது காளி சரண பானர்ஜி போய்விட்டார்.

சென்னையிலே 1887-ம் வருஷத்திலே முதல் காங்கிரஸ் நடத்தப்பெற்றபோது காளி சரண பானர்ஜியும், மிஸ். முல்லர் என்ற ஆங்கிலேய மாதும் சபையினின்றும் எழுந்து போனதை அப்போது காங்கிரஸ் பார்த்த அனேகர் மறந்திருக்க மாட்டார்கள். அவர்கள் எழுந்து சென்றதின் காரணமென்னவென்றால், அந்தச் சபையிலே மிஸ்டர் நார்ட்டன் (பாரிஸ்டர்) பேசத் தொடங்கினமையே யாகும். பாரிஸ்டர் நார்ட்டன் ஒழுக்கத் தவறு கொண்டவராதலால் அவர் காங்கிரஸிலே பேசக்கூடாதென்று காளி சரணரும் அந்த ஆங்கிலேய மாதும் வற்புறுத்தினார்கள். சபைத் தலைவரா யிருந்த மிஸ்டர் ஆல்பிரட் வெப், மிஸ்டர் நார்ட்டன் பேசலாமென அனுமதி கொடுத்துவிட்டார். அதன் பேரில் காளி சரணரும் மேற்படி ஆங்கிலேய மாதும் எழுந்து வெளியே சென்றுவிட்டனர்.

ஸ்ரீ காளி சரண பாபு இறக்கும்போது அவருக்கு வயது 60 எனினும் அவர் இறந்துபோனது காங்கிரஸ் சபைக்கு ஓர் பலக் குறைவாகவே கருதுவதற் குரியது.

(இந்தியா : 9. 2. 1907—பக்.6)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குமார ரணஜித் ஸிம்ஹஜி

இங்கிலந்திலே கிரிக்கெட் பந்து விளையாட்டிற்குப் பெயர் பெற்றிருப்பவரும் கிறிஸ்து மார்க்கஸ்தருமாகிய குமார ரணஜித் ஸிம்ஹஜி நவநகர் ராஜ்யத்துக்கு அதிபதியாக வருவது நிச்சயமாய் விட்டது. இதற்கு முந்திய நவநகர் ராஜா இறந்ததிற்கப்பால் அடுத்த பட்டத்துக்கு இன்னார் வருவதென்பதைப் பற்றிச் சில விவாதங்கள் ஏற்பட்டன. இந்த விவாதம் இந்தியா மந்திரியின் தீர்மானத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இப்போது இந்தியா மந்திரி, குமார ரணஜித் ஸிம்ஹருக்கு அனுகூலமாகவே தீர்மானம் சொல்லிவிட்டார்.

இனி ரணஜித் ஸிம்ஹஜி இங்கிலந்தை விட்டு விட்டு இத் தேசத்திலே வந்து குடியிருக்கும்படி நேரிடும். இவர் மிகுந்த திறமைசாலி யாதலால் இவர் நவநகர் ராஜாவாக ஏற்பட்டது நமக்கு சந்தோஷமே. ஆனால் இங்கிலந்திலே பிறந்து வளர்ந்த சகவாச பலத்தால் ராஜ்ய முழுதும் வெள்ளையர்களைக் கொண்டு நிரப்பி விடாமல்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுதேசிகளை வைத்துக்கொண்டு ராஜரீகம் செலுத்த வேண்டு மென்பதே நமது கோரிக்கை. இக் கோரிக்கை எவ்வளவுக்கு நிறைவேறுகிற தென்பது நாளடைவிலேதான் தெரியும்.

(இந்தியா : 23.2.1907 — பக். 5)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேசாபிமானமும் மதாபிமானமும்

சென்ற சில தினங்களுக்கு முன் வங்காளம் செரப்பூரில் ஒரு சபை ஸ்தாபிக்கப்பட்டது. இதன் நோக்கமாவது, பொது ஜனங்கள் தேசாபிமானத் தையும் மதாபிமானத்தையும் ஒன்றாய்க் கலந்து கொள்ளப்படா தென்பதைப் பிரசங்கித்தலாகும்.

அதாவது தேசத்தின் பொது நன்மைக்கும் மதத்திற்கும் சம்பந்தமில்லை. இந்தியாவில் பிறந்தவர்க ளெல்லாரும் தாய்த் தேச விஷயத்தில் ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஆனால், மத விஷயத்தில் மகமதிய ரென்றும் இந்துக்க ளென்றும் பலவகை. மத விஷயமாய்ப் பேசும்பொழுது கிறிஸ்து மதஸ்தர்களாகிய ஐரோப்பியர், அமெரிக்கர், இந்திய சுதேசக் கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஒரு வகுப்பார். அவ்வாறே துருக்கியர், இஜிப்தியர், பெர்ஸியர், அராபியர், ஆப்கானியர், இந்திய மகமதியர் ஆகிய எல்லாரும் ஒரு வகுப்பார். அவ்வாறே சைனர், ஜப்பானியர், கொரியர், திபெத்தியர், சிங்களவர், பௌத்த மதஸ்த ரெல்லாம் ஒரு வகுப்பார். ஆனால், இந்த மதாபிமானத்தைத் தேசப் பொது விஷயத்தில் காட்டுவது பிழை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தியாவிற் பிறந்தவர் இந்துவாயினும், மகமதியராயினும், கிறிஸ்தவராயினும், சமணராயினும், ஸீக்கியராயினும் ஒன்றுபோலவே தாய் நாடாகிய இந்தியாவுக்கு உழைக்க வேண்டும். ஆகவே, தேசாபிமானம் வேறு; மதாபிமானம் வேறு என்பதை ஒவ்வொருவரும் கவனித்து, இவ்விரண் டபிமானத்தையும் ஒன்றோடொன்று கலக்கக்கூடாது என்பதே இச் சபையின் நோக்கம்.

(இந்தியா : 16.3.1907 — பக். 6)

*

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நமது ஸ்திரீகள்

இந்தியாவில் வந்து வெகு நாளாய்த் தங்கி யிருந்தாலும், ஆங்கிலேயர் முதலிய அன்னியர் களுக்கு நமது நாட்டில் வசிக்கும் புருஷர்களின் சுபாவ குணங்கள் இன்னவென்று அறிய சாத்தியப் படாமற் போய்விடுகிறது. அப்படி யிருக்க அவர்கள் நம்முடைய ஸ்திரீ ஜாதியினுடைய மனோ ரதங் களையும் பழக்க வழக்கங்களையும் அறிந்துவிட்ட தாகப் பாவனை செய்துகொண்டு, அவர்களைச் சீர்திருத்த யோசனைகள் சொல்வது ஒரு பக்கம் அவர்களுடைய கர்வத்தையும், மற்றொருபால் அவர்களுடைய நகைப்பிற்கிடமான முட்டாள் தனத்தையும் காட்டுகிறது. மெட்ராஸ் 'டைம்ஸ்' பத்திரிகை 'இந்திய ஸ்திரீகள்' என்ற தலைப்பின் கீழ் ஒரு வியாசம் எழுதி யிருக்கிறது. அதை வாசித் தால் நமக்கோ நம்முடைய ஸ்திரீ ஜாதிகளுக்கோ பயன்படக்கூடிய யோசனைகள் ஒன்றையும் காணோம். ஆனால் ஒரு விஷயம் மட்டும் மிகவும் வியக்தமாய்த் தெரிகிறது. அதாவது ஆங்கிலோ-இந்தியர்களால் நடத்தப்பட்டுவரும் "மெட்ராஸ் டைம்ஸ்" பத்திரிகை போன்ற பத்திரிகைகள் இந்த விஷயத்தைக் குறித்துப் பேசக் கொஞ்சமும் அருகர்களாக மாட்டா வென்ற விஷயம்தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆங்கிலேயர்கள் ஒரு வியவகாரத்தைத் தொடங்குமுன் ஒரு சித்தாந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு விடுகிறார்கள். அதென்னவெனில், தாங்கள் நாகரீகத்திலும் மனப்பயிற்சியிலும் எல்லா ஜாதியாரினும் மேலானவர்க ளாகையால் இதர ஜாதியாரை அவ் விஷயங்களில் நிறுத்துப் பார்க்க வேண்டுமானால், தங்களுடைய நாகரீகத்திற்கும் பயிற்சிக்கும் எவ்வளவு தூரம் அவர்கள் எட்டி வருகிறார்க ளென்று மாத்திரம் தான் பார்க்க வேண்டும் என்பதே. இந்தத் தப்பான அபிப்பிராயம் எல்லா ஜாதியார்களிலும் கொஞ்ச தூரம் வியாபித்திருப்ப துண்டு. ஆனால், ஆங்கிலேயரிடத்தில் அதிலும் விசேஷமாய் ஆங்கிலோ-இந்தியர்களிடத்தில் இந்த அபிப்பிராயம் தலைக்கேறிப் போய் விட்டது. இதற்கு அனேக காரணங்கள் உண்டு. அவற்றைப்பற்றி நாம் இங்கே விஸ்தரிக்க இடம் இல்லை.

ஒவ்வொரு ஜாதியாரினுடைய ஆசார விவகாரங்கள் அவரவர் தேச அமைப்பையும், சீதோஷ்ண ஸ்திதியையும், கையாடிவரும் தொழிற் களையும் அனுசரித்தே இருக்கும். மேற்சொன்ன விஷயங்கள் அந் நாட்டாருக்குச் சில விருப்பங்களை யும் சில வெறுப்புகளையும் ஏற்படுத்தின மாத்திரத்தில் அவற்றின் சார்பாகவே அவர்களுடைய மனோபாவங்களும் அவற்றிலிருந்து நடை, உடை, பாஷை பாவனைகளும் ஏற்படுகின்றன. நியாயம் இப்படி யிருக்க, ஒருவர் தன்னைப்போல் இல்லா விட்டால் அவர் தன்னிலும் இழிவானவர் என்றாவது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேலானவர் என்றாவது தீர்மானிப்பது கேவலம் ஒரு முட்டாளினுடைய காரியமாகும். ஆயினும், கால தேச வர்த்தமானங்களைச் சார்ந்து ஆசார விவகாரங்கள் மாறினும், எல்லா மானிட ஜாதிகளுக்கும் பொதுவாகச் சில குணங்களும் தர்மங்களும் ஏற்பட்டிருக்க வேண்டும். அவற்றை அனுசரித்து நடப்பவர்களை நாகரீகமுள்ளவர்களென்றும், அப்படி நடக்காதவர்களை நாகரீகமற்றவர்களென்றும் சொல்லத் துணியலாம்.

மதராஸ் 'டைம்ஸ்' பத்திரிகை இந்தியர்கள் கீழ் தேசத்தார்களைப் போல நாகரீகமற்றவர்களென்றும், இந்திய ஸ்திரீகள் அறியாமை வாய்ந்த அடிமைகள் என்றும் சொல்லிப் பிதற்றுகிறது. மேலும், இந்தியாவை ஒத்த மற்றக் கீழ் நாடுகள்—அதாவது ஜப்பான், பாரஸீகம், துர்க்கி முதலிய நாடுகள் இவ் விஷயத்தில் நெடுங்கால நித்திரையினின்று ஜடிதியில் விழித்தானபிறகும் இந்தியா மட்டும் பின்தங்கி யிருப்பதேன் என்று ஒரு கேள்வி கேட்கிறது. அந்தப் பிரச்னத்தின் விசேஷத்தை வற்புறுத்த இன்னுமொரு விஷயத்தையும் எடுத்துச் சொல்கிறது. மற்றக் கீழ் நாடுகள் பெற்றிராத பாக்கியத்தை இந்தியா பெற்றிருக்கிறதாம். அதென்னவெனில், ஐரோப்பிய ஜாதியார் எல்லாரினும் மிக நாகரீகத்தையும் அபிவிர்த்தியையும் அடைந்த ஆங்கிலேயருடைய ஆளுகைக்குட்பட்டு நூறு வருஷத்திற்குமேல் சமாதானத்தையும், அமைதியையும் அடைந்து வந்திருக்கிறதாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஐரோப்பியராகிய பிரெஞ்சுக்காரர், ஜெர்மானியர், இத்தாலியர், ஆஸ்திரியர், ருஷியர் முதலானவர்கள் என்றைக்கு, ஒரு மகா சபை கூடி அந்தச் சபையில் இந்த ஆங்கிலேயர்தான் தங்கள் எல்லாரையும்விட மிக நாகரீகமும் அபிவிர்த்தியும் அடைந்த ஜாதியார் என்று நிர்மானஞ்செய்து இவர்களுக்கு நற்சாக்ஷிப் பத்திரம் கொடுத்தார்கள் என்பதை மாத்திரம் நம்முடைய அருமை 'டைம்ஸ்' பத்திராதிபர் சொல்ல மறந்துவிட்டார். நாம் ஐரோப்பியச் சரித்திரங்களைத் தொடர்ந்து வாசித்து வருவதில் நம்முடைய ஞாபகத்திற்கு எட்டிய மட்டில் அம்மாதிரியான திருநாள் வந்து போனதாக ஏற்படவில்லை.

மற்ற ஐரோப்பிய ஜாதியாருக்கு எழுதி நாம் தெரிந்து கொள்வோம் என்றால், ஒரு பயம் குறுக்கிடுகிறது. இந்த மாதிரி மதராஸ் 'டைம்ஸ்' பத்திரிகை எழுதி யிருக்கிறதென்று அவர்களுக்குத் தெரிந்தால், சமீபத்தில் நடக்கப்போகிறதாகச் சொல்லப்படும் ஐரோப்பிய அரசுகளின் கூட்டத்தில் (கான்பெரன்சில்) எங்கே இந்த 'மதராஸ் டைம்ஸ்' பத்திராதிபரைத் தங்கள் நாடுகளிலுள்ள சிலாக்கியமான பைத்தியக்காரர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடவேண்டுமென்று நிர்மானஞ் செய்து விடுவார்களோ என்ற பயம் நம்மைப் பிடிக்கிறது.

இதில் ஒரு அற்புதமான விஷயம் இருக்கிறது. இந்தியாவானது அவ்வளவு சர்வ மேன்மை பெற்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஐரோப்பிய ஜாதியாகிய ஆங்கிலேயருடைய ஆட்சியில் நூறு வருஷத்திற்கு மேல் இருந்தும், அந்தப் பாக்கியத்தை யடையாத மற்றக் கீழ் நாடுகளை விட ஏன் பின்தங்கி யிருக்கிறது? இந்த நாடு மற்றெல்லாக் கீழ் நாடுகளைவிட மேன்மைப் பட்டிருக் கல்லவோ வேண்டும்! அப்படி யில்லா திருப்பது தர்க்க நியாயத்திற்கு விரோதமா யிருக்கிறதே. ஆனால் தர்க்க நியாயம் ஒருக்காலும் பொய்க்காது. இதன் முடிவை நம் நேயர்களே சொல்லாது தெரிந்து கொள்ளவேண்டும்.

ஜப்பானிலும், சீனாவிலும், பாரசீகத்திலும், துருக்கியிலும் ஸ்திரீகள் விர்த்தி யடைந்தார்களென்றால் அத் தேசங்கள் ஆங்கிலேயருடைய ஆட்சிக்கு உட்படாதிருந்ததே காரணம். எந்த ஜாதியாரும் ராஜாங்க சுயாதீனம் அடையாதிருக்கும் வரை அதாவது அன்னியர்களுக்கு அடிமையாய் இருக்கும் வரை அவர்கள் எந்த வழியிலும் முன்னுக்கு வரமுடியாது. இதுவே அறிவுடையோர் கொள்கை. இதுவே பல தேசச் சரித்திரங்களின் துணிபு. ஸ்திரீகளின் விஷயம் நிற்கட்டும். இந்திய புருஷர்களின் கதி என்னவாயிற் றென்று பார்ப்போம். அவர்கள் எந்த வழியில்தான் முன்னுக்கு வந்திருக்கிறார்கள்? அவர்களுக்கோ உயர் தரக் கல்வி ஏராளமாய்க் கொடுத்துவிட்டோம் என்று ஆங்கிலேயர் சொல்லுகிறார்கள். அப்படியானால் அவர்கள் துருக்கியர், சீனர், பாரசீகர்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஜப்பானியர் இவர்கள் எல்லாரினும் மிக்க மேம்பாட்டை அடைந்தல்லவோ இருக்கவேண்டும்!

நம் ஸ்திரீகளுக்குள்ள "கோஷா"வும் படுதாவும் நம்மைக் கெடுத்ததாக இல்லை. நம்முடைய அடிமைத் தனமே நம்மைக் கெடுத்து, இக் கோலங் கண்டது. நாம் சுயாதீன மடைந்தால் நம்முடைய ஸ்திரீகளும் சுயாதீனமடைவார்கள். நம்முடைய நாட்டிலுள்ள ஸ்திரீகள் எல்லாருமே கோஷா வல்லர்; ஆயிரத்தி லொன்று அல்லது பதினா யிரத்தி லொன்று அப்படி யிருக்கலாம். நாகரீகத் திற்கு அடையாளம் ஸ்திரீகள் தங்கள் மனோ பீஷ்டப்படி ஒருவரையும் கேளாமல் யாரோடா யினும் எங்கேயும் சுற்றித் திரிந்து எந்தக் காரியத்தை யும் செய்யவேண்டும் என்பதில்லை. மதராஸில் கடற்கரையில் சூரியாஸ்தமனமாகியும் ஆகாமலும் இருக்கும் அந்திப்பொழுதில் அடிக்கடி ஒருவர் சுற்றித் திரிந்தால் "மெட்ராஸ் டைம்ஸ்" பத்திரிகை நம்மை எம்மாதிரியான நாகரீகத்தை ஏற்றுக்கொள்ளச் சொல்லுகிற தென்பது அவருக்குத் தெரியும்!

(இந்தியா : 24.10.1908 — பக். 3)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யூனிவர்ஸிடி பரீக்ஷை

சென்னை யூனிவர்ஸிடிப் பரீக்ஷையில் இந்த வருஷமும் சில பரீக்ஷா பத்திரங்கள் (Question Papers) வெளியாய் விட்டன. நாம் இக் குறிப்பு எழுதும் காலத்தில், இந்த விஷயத்தைப் பற்றிச் சென்னை பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் கோர்டில் விசாரணை நடந்துகொண்டு வருகிறது. பரீக்ஷா பத்திரங்கள் அச்சிடுகின்ற S.P.C.K. அச்சுக் கூடத்தில் யந்திர வேலை செய்யும் ராஜகோபால் நாயுடு என்பவன் தானே அவற்றில் சிலவற்றைக் கொண்டு விலைக்கு விற்றதாக ஒப்புக்கொள்ளுகிறான்.

இந்தக் கேஸ் எவ்வாறு முடிந்த போதிலும், ஒரு விஷயம் மட்டிலும் இப்பொழுதே நிச்சயமாகக் கூறலாம். அதாவது, மெட்ரிக்குலேஷன் சம்பந்தப் பட்ட மட்டில் மறு பரீக்ஷை நடத்துவார்கள். பிள்ளைகளுக்கு இதனால் எவ்வளவு சஞ்சலமும், தொந்தரவும் நேரிடுமென்பதை யாம் சொல்ல வேண்டியதில்லை. சாதாரணமாக இருக்கும் பொழுதே 10,000 பிள்ளைகள் பரீக்ஷைக்குப் போனால், சுமார் 1500 தான் தேறுவது வழக்கம். மற்ற 8500 பேருக்கு மண் போட்டு விடுவார்கள்;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அப்படி யிருக்க மறு பரீக்ஷை நடக்கும் பக்ஷத்தில் அதிகாரிகள் எல்லாக் கோபத்தையும் ஏழைப் பிள்ளைகளின் மேலே வைத்தமுக்கி, மேற்கூறப் பட்டதிலும் குறைவான தொகையே தேறுவதற்கு இடங் கொடுப்பார்கள். மற்றப் பிள்ளைகளின் கதி அதோகதிதான்.

இந்த ஸர்வ நாசகரமான பரீக்ஷைகளிலே பிரிடிஷ் இந்தியாவிலுள்ள அடிமை ஜனங்களுக் கிருக்கும் மோகம் என்றுதான் தீரப்போகிறதோ தெரியவில்லை. பிள்ளைகள் தமது வாழ்நாளைப் பயனுடன் செலவிடுவதற்குரிய உபாயங்கள் ஆயிரக் கணக்காக இருக்கின்றன. அவற்றை யெல்லாம் விட்டு விட்டுப் பதினாயிரத்தில் ஒன்பதாயிரத்துக்கு விநாசமும், மற்ற ஆயிரத்துக்குத் தொழும்பு நிலை யும் ஏற்படுத்திக் கொடுக்கும் யூனிவர்ஸிடி பரீக்ஷை என்ற பிசாசின் வாயிலே பேதை ஜனங்கள் தமது குழந்தைகளைக்கொண்டு வருஷந்தோறும் தள்ளிக் கொண்டே யிருக்கும் ஆச்சரியம் நமக்குக் கொஞ்ச மேனும் அர்த்தமாகவில்லை. இகம், பரம் என்ற இரண்டிற்கும் பயன்படாத செய்கைகளை ஒழியாத விடாமுயற்சியோடு செய்யும் மனிதர்கள் இவ் வுலகத்திலே பிரிடிஷ் இந்தியாவில் மட்டுந்தான் காணப்படுகிறார்களே யன்றி வேறெங்கும் கிடையாது.

(இந்தியா : 12.12.1908 — பக். 4)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை கோயமுத்தூர் ஜெயில் கலகத்தைப் பற்றிச் சொல்லிய சாக்ஷியம்

கோயமுத்தூர் ஜெயிலிலே, சில வாரங்களின் முன்பு நடந்த கலகத்தின் சம்பந்தமாக ஜில்லா ஜட்ஜின் கோர்ட்டிலே ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை 'டிபன்ஸ்' தரப்பில் சாக்ஷியம் சொல்லி யிருக்கிறார். அதனை முழுமையும் மொழிபெயர்த்து மற்றொரு பக்கத்திலே பிரசுரம் செய்திருக்கிறோம். அதை நேயர்கள் மிகவும் ஆவலுடன் படிப்பார்க ளென்பதில் சந்தேகமில்லை. ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளை தாம் இத்தனை பெரிய கஷ்ட தசையி லிருக்கும் போதுகூட, உலகத்தார் படும் கஷ்டங்களைப் பார்த்து நெஞ்சிரங்குத லாகிய அவருடைய இயற்கை எப்போது மிருந்ததுபோலவே சிறிதேனும் அளவு குறையாம லிருக்கிறது.

கோயமுத்தூர்ச் சிறைச்சாலையின் நிலைமையைப் போலவேதான், பிரிடிஷ் இந்தியாவிலுள்ள மற்றெல்லாச் சிறைச்சாலைகளிலும் இருக்கக் கூடுமென்று நாம் ஊஹிப்பது தவறாக மாட்டாது. அந்தச் சாக்ஷியத்திலே சொல்லப்பட்டிருக்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விவரங்களைப் படிக்கும்போது, ஒவ்வொரு உண்மை யான பாரதவாஸியினுடைய நெஞ்சமும் கொதிப் படையத் தக்கதா யிருக்கின்றது. இது நிற்க.

இனி, ஜெயில் வார்டர் ஒருவன் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையைச் சிறிது அவமதிப்பாக நடத்த ஆரம்பித்தபொழுது, அவனுக்கு அவர் கொடுத்த எச்சரிக்கையும், கோர்ட்டிலே ஸர்க்கார் வக்கீல் சொல்லிய சில அதிகப் பிரசங்கித்தனமான வார்த்தைகளுக்குப் பிள்ளையவர்கள் கொடுத்த மறு மொழியும் "அரைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது, உருக்கினுஞ் செம் பொன் தன் சுடர் குன்றாது" என்ற பெரியோர் வசனங்களுக்குத் தக்க திருஷ்டாந்தமாகின்றன.

ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை கைதியா யிருக்கும் போதுகூட அவர் கொண்டிருக்கும் மனநிலைமை யுடன், நம் போலிகளின் மனநிலையை ஒப்பிட்டு நோக்குமிடத்து நமக்குப் பின்வரும் தாயுமானவர் பாடல் நினைப்பிற்கு வருகின்றது:

"கலங்காத நெஞ்சுடைய ஞானதீரர்
கடவுளுனைக் காணவே காயமாதி
புலங்காணார், நானொருவன் ஞானம் பேசிப்
பொய்க்கூடு காத்ததென்ன புதுமை கண்டாய்!"

(இந்தியா : 12.12.1908 — பக். 2)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

மக்களிடையே சுதேச பக்தியை வளர்ப்பதன் பொருட்டு. பாடுபட்ட காரணம் பற்றி வ.உ.சி. அவர்கள் தண்டனை பெற்றுக் கோவைச் சிறையில் இருந்தபோது. அச் சிறையில் கலகம் நடந்தது.

அதுபோது வ.உ.சி. அவர்கள் சாக்ஷியம் அளித்தார். "அதனை முழுமையும் மொழிபெயர்த்து மற்றொரு பக்கத்திலே பிரசுரம் செய்திருக்கிறோம். அதை நேயர்கள் மிகவும் ஆவலுடன் படிப்பார்க ளென்பதில் சந்தேகமில்லை" என்று இக் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டு இருப்பதால், வாசகர்களின் வசதிக்காக அம் மொழி பெயர்ப்பு இங்கே அப்படியே தரப்பெறுகிறது.

கோயம்புத்தூர் ஜெயில் கலகக் கேஸ்

ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை சாக்ஷியம்

கோயம்புத்தூர் ஜெயில் அதிகாரியான மிஸ்டர். மிச்சல் என்பவரை அந்த ஜெயிலில் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கும் மூன்று கைதிகள் சென்ற ஆகஸ்ட் மாதம் 2-ம் தேதி கொடுந் துன்பப் படுத்திக் கொலை செய்ய யத்தனித்ததாகக் குற்றம் சாட்டப் பட்டு, கோயம்புத்தூர் ஸெஸன்ஸ் கோர்ட்டில் விசாரணை நடந்துகொண்டிருக்கிறது.

இந்தக் கேஸில் தற்காலத்தில் கோயம்புத்தூர் ஜெயிலில் கடின சிட்சை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளை யவர்கள் டிபன்ஸ் கட்சி சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கொடுத்த வாக்குமூலமாவது: —

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"நான் ஒரு வக்கீலாக இருந்தேன். சுமார் நான்கு மாதங்களாக நான் கோயம்புத்தூர் ஜெயிலில் தண்டனைக் கைதியாக இருக்கிறேன். நான் இராஜத் துரோகம் என்னும் குற்றத்திற்காகத் தண்டிக்கப் பட்டேன். நான் ஆறு வருஷம் தண்டனை யனுபவிக்க வேண்டியது. ஜெயிலரை (ஜெயில் அதிகாரியை) எனக்குத் தெரியும் உண்மையாகவே கைதிகள் ஜெயிலில் சித்திரவதை செய்யப் படுகிறார்கள். தண்டனைக் கைதிகளை ஜெயில் வார்டர்களும், கான்விக்ட் (கைதி) வார்டர்களும் கொம்புகளாலும், கட்டைகளாலும் கையாலும் கால் செருப்பாலும், கற்களாலும் சிலவேளைகளில் ஜெயிலர் முன்னிலை யிலும் கூட அடித்து ஹிம்ஸிக்கிறதை நான் பார்த்திருக்கிறேன். ஜெயில் சூப்பிரண்டு வாரத்திற்கு ஒருமுறை வந்து, எல்லாவற்றையும் பார்வையிடுகிறார். வார்டர்கள் சூப்பிரண்டு வருவதற்கு முன் கைதிகளுக்கு சூப்பிரண்டு வந்த காலத்தில், அவரிடத்தில் ஒன்றும் சொல்லக் கூடாதென்று போதித்து வைக்கிறார்கள். இதோடு நிற்காமல், கைதிகள் சூப்பிரண்டிடத்தில் ஏதாவது சொல்லி முறையிட்டால், அப்படிச் சொல்லு கிறவர்களை அடிப்பதாகப் பயமுறுத்துகிறார்கள். என்றாலும் இரண்டொருவர் புகார் செய்தார்கள். அதன் பிறகு வார்டர்கள் புகார் செய்தவர்களை அடித் தார்கள்.

ஜெயில் சூப்பிரண்டு ஜெயிலருடைய வார்த்தை களைத் தான் நம்புகிறார். சூப்பிரண்டு ஜெயிலர் சொற்படி ஆடுகிற ஓர் பொம்மை. சூப்பிரண்டு கைதிகள் வார்த்தைகளை நம்புகிறதில்லை. இந்தக் குற்றம் நடந்த சில தினங்களுக்குள் ஒரு கைதியை மனிதன் மலத்தைப் பலவந்தப்படுத்தி, தின்னச் செய்தார்கள். இதைப்பற்றி ஜெயில் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்குப் பிராது கொடுத்தார்கள். அது ஒன்றும் பயன்பட வில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தக் கலகம் நடந்ததற்குச் சுமார் ஒரு மாதத்திற்குமுன் நான் 4-வது நம்பர் பிளாக்கில் இருக்கும் காலத்தில் ஒரு வார்டர் நான்கு கைதிகளை அடித்தான். அந்த வார்டருக்குக் "கோண வார்டர்" என்று வசைய பெயரிட்டிருக்கிறார்கள். அவன் ஜெயிலருக்கு இஷ்டமானவன். அவர்கள் சரீரத்தினின்றும் இரத்தம் பெருகிற்று. அவர்களில் ஒருவனைச் சிகிச்சைக்காக டெபுடி ஜெயிலர் ஆஸ்பித்தலுக்குக் கொண்டு போகச் சொன்னார். பிறகு ஜெயிலர் வந்தார். அவர் இதைப் பற்றிச் சிறிதேனும் கவனிக்கவில்லை.

நான் ஜெயிலரிடத்தில் இதைப் பற்றிப் புகார் செய்தேன். கோண வார்டர் என்னைத் தூஷிக்கக்கூடச் செய்தான். இந்த வார்டர் கைதிகளை மாடு முதலான மிருகங்களை அடிக்கிறதுபோல் அடிக்கிறான் என்று நான் சொன்னேன். இவன் அவமானப்படுத்தினவர்களில் இராமஸாமி அய்யர் என்ற கனவான் ஒருவர் அப்பீலில் கேஸ் அனுகூலமாகி விடுதலை பெற்றுச் சென்றார்.

நான் என்னுடைய விஷயங்களைக் கவனித்துக் கொள்ள வேண்டியதை தவிர, பிறர் விஷயத்தில் தலையிடக் கூடாதென டெபுடி ஜெயிலர் எனக்கு எச்சரித்தார். டெபுடி ஜெயிலர் சொல்வது சரியென்று ஜெயிலர் மவுனமாக இருந்து ஒப்புக்கொண்டார். அவன் என்னை அடித்தால் நான் என் சொந்த பரீசத்தின் பாதுகாப்பின் பொருட்டு அவனைப் பதிலுக்குப் பதில் உதைப்பேன் என்றும், அப்போது விஷயங்கள் பலத்து விடுமென்றும், ஆகையால் அந்தக் கோண வார்டருக்கு எச்சரிக்கை செய்ய வேண்டுமென்றும் சொன்னேன். நான் முறையிட்ட விஷயங்களைப் பற்றி ஜெயிலர் கொஞ்சமும் கவனியாது, அசட்டை செய்துவிட்டார். இந்தக் கேஸில் சம்பந்தப்பட்ட கைதியைப் பற்றி எனக்கு யாதொன்றும் தெரியாது. ஜெயிலர்மேல் வீழ்ந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாக்கிய விஷயத்தைப் பற்றியும் எனக்கு ஒன்றும் தெரியாது. செய்கை நடந்த காலத்தில் நான் 10-ம் நெம்பர் பிளாக்கில் இருந்தேன். கலகமே நடக்கவில்லை. நாங்கள் ஒரு கூக்குரல் கேட்டோம். வாயிலண்டை வந்து கூடினோம். பிறகு நடந்தவற்றைக் கண்ணால் கண்டோம். ஜெயிலில் கலகமே நடக்கவில்லை யென்று நான் சத்தியம் செய்வேன்.

நிரபராதியான ஒரு கிழவனை சூப்பிரண்டு சுட்டுக் கொன்றதற்காகக் கலகம் என்ற இந்தக் கட்டுக்கதையை சிருஷ்டித்திருக்கிறார்கள். இந்தச் செய்கை நேரிட்டதற்குக் காரணம், பொதுவாகக் கைதிகளை ஹிம்ஸித்தல் தான் என்பது என்னுடைய கருத்து. கைதிகளுக்குச் சாப்பிடுவதற்குப் போதுமான காலம் ஏற்படுத்துகிற தில்லை. கைதிகளுக்குக் கொடுக்கிற ஆகாரம் கெடுதலாக இருப்பது மல்லாமல் வேண்டிய அளவிற்குக் குறைந்ததாகவும் இருக்கிறது. சிற்சில சமயங்களில் ஆகாரத்தோடு மண்ணும் கல்லும் கலந்து கிடக்கிறது. உப்பையும் இலை தழைகளையும் போட்டுக் கொதிக்க வைக்கும் சுடுநீருக்குத்தான் குழம்பென்று பெயர். ஜெயிலரிடத்திலாவது சூப்பிரண்டினிடத்திலாவது ஆகாரம் கெட்டதாக இருக்கிறதென்று நான் முறையிட்டதில்லை. அப்படி செய்வது பிரயோஜனமற்றதென்று எனக்குத் தெரியும். வெள்ளாளர்களுக்கு வெள்ளாளக் கைதிதான் சமைக்க வேண்டுமென்று ஜெயில் சட்டத்தில் கண்டிருக்கிறது. அவ்வாறு நடக்கிறதே யில்லையென்று நான் சத்தியம் செய்வேன்.

டிசம்பர் மீ 3உ கிராஸ் கேள்வியில் கொடுத்த வாக்குமூலம் :

"திருநெல்வேலியில் இருந்து நான் இந்த ஜெயிலுக்கு ஜூலை மீ 9 உ கொண்டு வரப்பட்டேன். ஆகஸ்ட் மீ 5 உ வரை என்னை நான்காவது லக்கம் பிளாக்கில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வைத்திருந்தார்கள். பிறகு என்னை விசாரணைக் கைதிகளையும் வெண்காவல் தண்டனைக் கைதிகளையும் அடைத்து வைத்திருக்கும் 10-ம் நெம்பர் பிளாக்கில் அடைத்து வைத்தார்கள். ஜெயிலரைக் கைதிகள் அடிப்பதை நான் கண்டதில்லை. ஆனால், அவர் முன்னிலையில் வார்டர்கள் கைதிகளை அடிப்பதை இரண்டு மூன்று தடவை கண்டிருக்கிறேன். இது நடந்தது ஜூலை மாதத்தில். ஆகஸ்ட் மாதம் 5உக்குப் பிறகு அன்று இப்படி அடிப்பது அவருடைய அறைக்கு முன்னால், இப்படி அடிப்பதை முதலில் சாயங்காலம் 5½ மணிக்குப் பார்த்தேன். இரண்டாவது தடவை பகல் 11 மணிக்கு வேலையிலிருந்து திரும்பி வருங்காலத்தில் கண்டேன். இந்தக் காலத்தில்தான் கைதிகளை சிட்சைக்கு ஜெயிலரிடம் அனுப்புவது வழக்கம்.

என்ன காரணத்திற்காக வார்டர்கள் கைதிகளை அடிக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. கைதிகளை யாவது வார்டர்களையாவது இன்னாரென்று என்னால் இனம் கண்டுபிடிக்க முடியாது. கோண வார்டர் அடிக்கிறது மாத்திரம் எனக்குத் தெரியும். மற்றவர்களை எனக்குத் தெரியாது. ஜெயில் உத்தியோகஸ்தர்களிடத்தில் ஆகாரக் கெடுதியைப் பற்றி நான் புகார் செய்ததே கிடையாது. சூப்பிரண்டு திங்கட்கிழமை வந்து பார்வை யிடுவதைத் தவிர மற்ற நாள்களில் எந்த பிளாக்கையும் அவர் வந்து பார்வையிடுவதை நான் கண்டதே யில்லை. நான் விசாரணைக் கைதியாக இருக்கும் காலத்தில் என்னுடைய காரியமாக என்னை அடிக்கடி சூப்பிரண்டு அறைக்குக் கொண்டு போவது வழக்கம். அவருக்கு இதெல்லாம் தெரியுமென்று நான் புகாரும் ஒன்றும் அவரிடத்தில் செய்ததில்லை.

சென்ற ஐந்து மாதத்தில் அதிகாரிகளின் செய்கை களைச் சரிபார்க்க வந்த கனவான் ஒருவரே நான்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஜெயிலுக்கு வந்து, ஒரு வாரத்திற்குப் பிறகு அவர் வந்தார். நான் அந்த ஒரு வாரத்திற்குள் கைதிகள் குரூர மாக நடத்தப்படுவதைக் கண்டதில்லை. ஆகையால் நான் அவரிடத்தில் யாதொன்றும் குறை சொல்லிக் கொள்ளவில்லை. ஜெயில் இன்ஸ்பெக்டர் ஜனரல் என்னை இரண்டு சமயங்களில் வந்து பார்த்தார். இந்தக் கலகம் நடந்த இரண்டு மூன்று நாளைக்குப் பிறகு ஒரு தரம் வந்து என்னைப் பார்த்து, என்னுடன் சம்பாஷித்து என் க்ஷேமத்தை விசாரித்துச் சென்றார். அவரிடத்தில் குறை சொல்லிக்கொள்ள வேண்டுமென்று எனக்குத் தோன்றவில்லை.

அந்தக் காலத்தில் இந்தக் கலகம் நடந்த பிறகு சில காலம் ஜெயிலர் லீவில் இருந்தார். அதாவது மூன்று மாதம் லீவில் இருந்தார். ஜெயிலர் இல்லாத காலத் திலும்கூட கைதிகளை வார்டர்கள் ஜெயிலர் குத்துண்ட பிறகு சூப்பிரண்டு மிஸ்டர் காடஸ்டன் என்பவரும் கூட மூன்று வாரம் இரஜா எடுத்துக்கொண்டு போனார். அவருக்குப் பதிலாகக் காப்டன் காம்ரன் என்பவர் வேலை பார்த்தார். காப்டன் காம்ரனிடத்தில் நான் சமயம் வாய்க்காததினால் ஒன்றும் சொல்லிக்கொள்ள முடியாமல் போயிற்று.

இந்தக் கலகம் நடந்ததற்கு முன் கைதிகள் எல்லாம் தங்களை மாடு முதலிய மிருகங்களைப்போல் அடிப்ப தாகவும், ஆனால், இதைப் பற்றி சூப்பிரண்டிடத்தில் முறையிடுவதில் யாதொரு பிரயோஜனமில்லை யென்றும் தங்களுக்குள் பேசித் தர்க்கம் பண்ணிக் கொண்டிருந்தது எனக்குத் தெரியும். என்ன நேரிடுமென்று அவர்கள் அந்தக் காலத்தில் சொல்லவில்லை. அவர்கள் அடிக்கடி இம்மாதிரி பேசிக்கொள்வதை நான் கேட்டிருக்கிறேன். ஆனால் அவர்கள் தாங்கள் செய்யப் போவது இன்னதென்று சொல்லவில்லை. நான் அவர்களுக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எதுவும் போதிக்கவு மில்லை. அல்லது எவ்விதமான உபாயமும் எடுத்துக்காட்டவு மில்லை. வேறெந்த தண்டனைக் கைதிகள் கூடவும் நான் பேசக் கூடா தென்று டெபுடி ஜெயிலர் தடுத்திருக்கிறபடியால் நான் மற்றக் கைதிகளோடு பேசுகிறதில்லை.

கவர்ன்மெண்ட் வக்கீல்: "அவருக்கு உம்முடைய முன் நடத்தையும் குணமும் ஒருவேளை தெரிந்திருக்க லாமோ?"

ஸ்ரீ சி.பி.: நான் ஒரு அந்தஸ்துள்ள பெரிய மனிதன் என்று அவருக்குத் தெரியும். கைதிகளைக் கொடுமை செய்கிறதின் முடிவாக ஜெயிலரையாவது அல்லது சூப்பிரண்டையாவது அல்லது அவ்விருவர்களை யுமே கைதிகள் உதைப்பார்கள்; ஒருவேளை கொன் றாலும் கொன்று விடுவார்கள் என்று எனக்குத் தெரியும்.

தற்காலத்தில் நடந்து கொண்டிருப்பதுபோலவே இன்னும் சங்கதிகள் இவ்வாறே நடந்துகொண்டு வருமாயின் நான் எண்ணுகிறபடியே கொலை நடப்பது முற்றிலும் சாத்தியமான விஷயமே. தற்காலத்தில் இருக்கும் ஜெயிலர் லீவிலிருந்து திரும்பி வந்த பிறகு கைதிகள் முன்னிருந்ததைக் காட்டிலும் இப்போது அடிக்கடி இந்த விஷயமாகப் பேசித் தர்க்கம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அநேகமாய் பிரதி தினமும் இது விஷயத்தைப் பற்றிப் பேசுவது என் காதில் படுகிறது. இதைப் பற்றி சூப்பிரண்டுக்குத் தெரிவிக்க எனக்கு இஷ்டமில்லை. ஆனால் நாளடைவில் அவருக்குத் தெரிவிக்க வேண்டுமென்றிருந்தேன். ஆனால் 2-வது தடவை அவர் வந்து என்னுடன் சம்பாஷித்துக் கொண் டிருக்கும் காலத்தில், அவரிடத்தில் எது சொன்னாலும் பிரயோஜனமில்லை யென்றெண்ணினேன். இந்த விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த கைதிகளின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பேரையாவது நம்பரையாவது நான் சொல்ல முடியாது. அவர்கள் 5-ம் நெம்பர் பிளாக் கைதிகள். கோர்ட்டார் முன்னிற்கும் கைதிகளைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நான் அவர்களோடு எப்பொழுதும் பேசின தில்லை. இந்தக் கேசில் சம்பந்தப்பட்ட எதிரி குற்றம் நடந்த காலத்திற்குமுன் ஜெயிலரைக் குத்திவிட வேண்டுமென்று பேசினதை நான் கேட்டதில்லை. 10-ம் நெம்பர் பிளாக்கில் இருந்து நான் 6-7 லக்கம் பிளாக்கு களின் பாகத்தைப் பார்க்கக்கூடும். இந்த பிளாக்குகளில் 10 அல்லது 20 கெஜம் விஸ்தீரணத்தைத்தான் நான் பார்க்கக்கூடும். மற்ற பாகங்கள் என் கண்களுக்குத் தென்படாது.

கவர்ன்மெண்டு வக்கீல் : "7-ம் நெம்பர் பிளாக்குக்கு எதிரில் ஒரு வேலைப் பட்டடை இருக்கிற தல்லவா? அப்படி இருக்குமானால் 10 நெ. பிளாக்கு வாயிலி லிருந்து 7 நெ. பிளாக்கின் பாகங்களில் எதையும் நீங்கள் எப்படி பார்க்கக் கூடும்?"

ஸ்ரீ சி.பி. : "நான் பிளாக்கு முற்றிலும் பார்க்க முடியாதென்றே சொன்னேன். அந்த வேலைப் பட்டடை இருந்தபோதிலும் நான் ஒரு பாகத்தைப் பார்க்கக்கூடும். நீர் அந்த ஸ்தலத்தைப் பார்த்த தில்லை. ஆகையால் உமக்கு அது எப்படி யிருக்கும் என்பதே தெரியவில்லை."

கவர்ன்மெண்டு வக்கீல் : "ஆம், ஆம். என்னைக் காட்டிலும் உமக்கு அந்த ஸ்தலம் நிச்சயமாக நன்றாய்த் தெரியும்."

ஸ்ரீ சி.பி. : "வாஸ்தவம்தான்! நீர் எம்முடன் கூட இருக்கும் அதிர்ஷ்ட பாக்கியம் பெறவில்லையே!"

கவர்ன்மெண்டு வக்கீல் : "கோர்ட்டாரவர்கள் சாட்சியை மரியாதையாக நடக்கும்படி கட்டளை இட வேண்டும்."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ சி.பி. : "கோர்ட்டைப் பார்த்து நான் ஒழுங்காகத் தான் நடக்கிறேன் என்று நம்புகிறேன். இந்தக் கலகம் நடப்பதற்கு முந்தி நான் என்னுடைய அறைக்குள் இருந்தேன். நான் சத்தம் கேட்டு வெளியே வந்தேன். 7, 6 லக்கங்களிட்ட பிளாக்குகளின் வாயிலண்டை கைதிகள் வந்து கூடினார்கள். நான் இதைப் பார்த்தேன். ஆனால், கைதிகள் அறைகளையும் பூட்டுகளையும் உடைத்ததை நான் கேட்கவே யில்லை. இருந்தாலும் வாதி கட்சிக்காரர்கள் பூட்டுகளையும் அறைகளையும் கைதிகள் உடைத்த இந்தக் கதையைச் சிருஷ்டித்திருக் கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். சூப்பிரண்டுதான் ஒரு துப்பாக்கி எடுத்துக்கொண்டு மற்ற வார்டர்களும் துப்பாக்கியோடு சூழ வந்து கொண்டிருப்பதைக் கைதி கள் கண்டவுடனே தங்கள் தங்கள் அறைகளுக்குள் ஓடி நுழைந்து கொண்டார்கள். கைதிகள் எப்பொழுதும் இல்லாத பெருங் கூக்குரல் போடவில்லை. குண்டுபட்டு இறந்து போன மனிதனை நான் பார்த்ததில்லை. ஆனால், அவன் சரீரத்தை வெளியே எடுத்துச் செல்கை யில் நான் பார்த்தேன். நான் இப்போது எண்ணெய் ஆலையில் வேலை செய்து கொண்டிருக்கிறேன்.

வாதி கட்சி மறு கேள்வி.

ஸ்ரீமான் சி.பி. வாக்குமூலம் : "நான் ஆகாரம் கெடுதலாக இருக்கிறதென்று மிஸ்டர் நாகோஜி ராவ் அவர்களிடம் சொன்னேன். அவர் இது விஷயத்தைப் பற்றி ஜெயிலரைக் கேட்டதற்கு, ஜெயிலர் மற்ற கைதி களுக்குக் கொடுக்கும் ஆகாரம்தான் எனக்கும் கொடுக்கப்படுகிறதென்று பதில் சொன்னார். கைதிகள் பயமுறுத்திப் பேசுவதை நான் சூப்பிரண்டினிடத்தில் சொல்லவில்லை. இதற்குக் காரணம், நான் சொல்வதை அவர் நம்பாமல், என்னை ருஜூப்படுத்தும்படி கேட்டு நான் அவ்வாறு ருஜூப்படுத்தத் தவறினால் நான்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தண்டனைக்குள்ளாக வேண்டுமே என்ற எண்ணம் தான். சூப்பிரண்டினிடத்தில் என்ன குறை சொல்லிக் கொண்ட போதிலும் பிரயோசனமில்லை யென்று நினைத்தேன். கொலைகள் நடக்கக் கூடுமென்றும், அதன் பயனாக நிரபராதிகளைச் சுட்டுக் கொல்லக் கூடு மென்றும் நான் நியாயாதிகாரிகளிடத்தில் தெரிவிக்க வேண்டுமென்று எனக்குக் கொஞ்சம் ஆத்திரமாக இருக் கிறது. ஜெயிலரைக் குத்திக் கொல்ல துராலோசனை நடந்து கொண்டிருக்கிற தென்று சில கைதிகள் சூப்பிரண்டினிடம் தெரிவித்தார்கள். ஆனால், அதை அவர் கொஞ்சமும் கவனிக்கவில்லை.

ஸ்ரீ சி.பி. அஸஸர்களுக்குத் தெரிவித்துக் கொண்டது:

"ஞாயிற்றுக் கிழமையன்று பகல் செய்கை நடப்பதற் குள் கைதிகள் எல்லோரும் ஸ்நானம் செய்வதற்கு வெளியே விடப்பட்டார்கள். அவர்கள் அன்று பகல் முழுவதும் வெளியே யிருக்கும்படி விடப்பட்டிருந்தார் கள். பூட்டுகளை உடைத்து ஜெயிலறைகளைத் தகர்ப்ப தற்கு ஒரு காரணமும் இல்லை. இந்தக் கேஸில் விசாரிக்கப்பட்ட மற்றும் சில கைதிகள் இதே விஷயங் களைப் பற்றிச் சொன்னார்கள். அவர்களில் ஒருவன் தான் கோயம்புத்தூர் ஜெயிலுக்கு வருவதற்குமுன் திருச்சினாப்பள்ளி, சேலம் முதலிய அனேகம் ஜெயில் களில் இருந்ததாகவும், அந்தந்த ஜெயில்களில் கைதி களை எந்தவிதமான புகாருக்கும் இடமன்னியில் நடத்தி வருவதாகவும், ஆனால், இந்தக் கோயம்புத்தூர் ஜெயிலில் மாத்திரம் கைதிகளை ஆதரிக்கும் வகை குறை கூறத் தக்கதாகவே இருக்கிறதென்றும் சொன்னான்."

(இந்தியா: 12.12.1908 — பக். 6; 11-12)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தற்காலத்துப் புது நாகரீகப் படிப்பிலுள்ள சில அநுகூலங்கள்

இதனால் தேச பாஷையில் பிழையற நான்கு வரி எழுதவும், பேசவும் கூடாமலும் ஆன்றோர் பகர்ந்த அருங் கவிதைகளின் காரணங்களைக் கண்டு அகமகிழ முடியாமலும் முக்காற் படிப்பு, அரைப் படிப்பு, கால் படிப்பு, அரைக்கால் படிப்பாகி, வல்லினத்திற்கு மெல்லினமும், மெல்லினத்திற்கு வல்லினமும், டண்ணகரத்திற்கு றன்னகரமும், தந்நகரத்திற்கு றன்னகரமும் வரைந்தும் இடர்ப் படுகிறார்கள். தவிரவும், ஓர் விஷயம் தங்கள் கருத் திற்குத் தோற்றினாலும் முற்றும் படிக்காத குறை யினால் அதைப் பிறர் எளிதில் தெரிந்து கொள்ளும்படி வெளியிடும்படியான சக்தி உண்டாவ தில்லை.

பெண்களுக்கு ஸ்கூல் படிப்பு நிறுத்தப்பட்டதும் மற்ற பாஷைகளுக்குப் பொருட் செலவிட்டுக் கற்பித்து வருவதைப்போல், இலக்கியத்தோடு கூடிய தமிழாகிய நமது தேசபாஷைக்கும் மேற்படி போதகாசிரியர்களை ஏற்படுத்திக் கற்பித்து வந்தால் மாத்திரம் நமது பெண்களும் கற்றவர்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னும் பெயருக்கு உரியவர்களாவார்களே தவிர இப்போது பரவிவரும் போலிப் படிப்பினால் மேற்படி பெருமைக்குப் பாத்தியர்களாக மாட்டார்கள். மேற்கண்ட விதம் செய்வது பொருள் படைத்த சீமாட்டிகளுக்கே ஸாத்தியம் என்றாலும், அப்படிப் பட்டவர்களின் உதவியால் எளியவர்கள் வீட்டுப் பெண்களும் முன்னுக்கு வரக்கூடும். நாளடைவில் உண்மைக் கல்வியும் ஓங்கும்; நம்மிடம் உள்ள சிறுமைகளும் நீங்கும். எப்படி வேரிலே விட்ட ஜலம் அம் மரம் முழுதும் வியாபித்துக் குளிரச் செய்யுமோ, அவ்விதமே சரியான கல்வியைத் தந்து புத்தியை விசாலிக்கச் செய்தால், புத்திக் குறைவால் நேரும் மற்ற எல்லாக் காரியங்களும் நிறுத்தப்படும்.

ஜீவனோபாயத்தை முன்னிட்டுப் புது நாகரீகங் களில் தலையிட்டு, நடை உடை பாவனைகளில் வேறுபட்டிருக்க, ஆடவருக்கு விதி யிருந்தாலும், அவர்களுக்கு வாய்த்த பெண்களாவது விவேகிக ளாகவும், தேசாசாரத்தைக் கடைப்பிடித்தவர்க ளாகவும் காணப்பட்டால் பூர்வீக ஆசாரங்கள் தேசத்தில் அடியோடு எடுபடாமல் தலை நாட்டி நிற்க இடந்தரும்.

இந்திய மாதா முன்னுக்கு வரும் விஷயத்தில் இந்திய மக்களாகிய நாம் முயன்றால் மட்டில் அது முன்னேற்றத்தை அடையு மன்றி நமக்காக அன்னியர் எவ்வளவுதான் பரிந்து பாடுபட்டாலும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்திய மாதா பூரண திருப்தியை யடைய மாட்டா ளென்பது ஸ்திரமே.

ஒரு தாயானவள் தன் மக்கள் தன்னை ஆதரிக்கச் சக்தியற்ற சோம்பேறிகளாய் உருமாறி நிற்க, அயலார் மக்கள் இடையிற் புகுந்து இரக்கத்தால் ஆதரித்தபோதிலும் எப்படி அத் தாய் குறை நீங்கிப் பூரண திருப்தியை யடையமாட்டாளோ அவ்வாறே இந்திய மாதாவும் பிறர் முயற்சியால் திருப்தி யடைய மாட்டாள்.

(இந்தியா : 23.1.1909 — பக். 6-7)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பஞ்சம்! பஞ்சம்!

சில நாட்களாக எங்கு பார்த்தாலும் நமது நாட்டில் பஞ்சம், பட்டினி என்ற கூக்குரல் அதிகப் பட்டுக் கொண்டு வருகிறது. அது ஏகதேசத்தில் வந்து கொண்டிருந்தது போய், இப்பொழுது இங்கேயே சில கொள்ளை நோய்களைப்போல உட்கார்ந்து கொள்ள ஆரம்பித்து விட்டது. இதைச் சீக்கிரம் தொலைப்பதற்கு வழி தேடுங்கள். இதனது காரணங்களை யுத்தேசிக்க, 'முடியாது' என்று மனம் விடத்தக்கதா யிருக்கும்; எனினும் நீங்கள் மனம் சோராதீர்கள். அதை எதிர்ப்பதற்கு வேண்டிய சில வழிகளை இனியேனும் இலேசாக மதியாது அநுசரியுங்கள்.

1. அந்நிய நாட்டுச் சாமான்களிலுள்ள ஆசையை முற்றிலும் ஒழித்துக் கையினாலே கூடத் தீண்டாதீர்கள்.

2. நமது நாட்டுப் பொருள்களை வெளியேற்றாதபடி செய்ய எத்தனை வழிகளுண்டோ அத்தனையும் கைக்கொள்ளுங்கள்.

3. பருத்தி, மணிலாக்கொட்டை முதலிய பிற நாட்டுக் கேற்றுமதியாகும் பொருள்களை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதிகமாக யாருடைய தாட்சிணியத்திற்காக வேனும் விதைக்காதேயுங்கள். லாபம் காரண மாக விதைத்து அனுப்புகிறவர்களை ஜாதியை விட்டு விலக்கி, அவர்கள் வேலையை நடக்க வொட்டாதபடி செய்துவிடுங்கள்.

இவைகளை இப்பொழுதேனும் விடாது அநுஸரிப்பீர்களாயின் உங்கள் பட்டினி ஒருவாறு நீங்கும்.

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்."

(இந்தியா : 30.1.1909—பக். 12)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திலகர் என்ன செய்கிறார்?

தனக்கென்ற எண்ணத்தை அடியோடு தொலைத்து, பிறர்க்கு என்று தமது உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்த முற்றும் துறந்த முனிவர்க ளெல்லாம், காடே யாயினும் நாடே யாயினும், மாளிகை யாயினும் காராகிருக மாயினும் தமது திருத்தொண்டிற்குக் காலமும் இடமும் கண்டு ஓயாது பாடுபட்டு வருதல் சகஜமே யன்றோ? அவர் உண்பதும் உறங்குவதுமே பிறர் பொருட்டாயின், பின் அவரது பெருமையைக் கணித்தற் கியலுமா? அத்தகையோர் இவ் வுலகத்து இடைக்கிடை உலவுவதா லன்றோ கொடுமை மிஞ்சிய பிரளய காலங்களிலும்கூட இப் புவியணு மனத்தினாலும் அறிவினாலும் கணக்கிடற்கரிய அண்டகோடிக் குவியல்களின் நடுவில் அடிபட்டுத் தூள் மயமாகாது சுகமே சுழன்று கொண்டிருக்கிறது. இதுபற்றி யன்றோ பெரியாரும்,

> ''உண்டாலம்ம விவ்வுலகம்...
> ....
> தனக்கென முயலா நோன்றாட
> பிறர்க்கென முயலுநர் உண்மையானே''

என்று கூறியுள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்போது நமது தேச குரு திலக மகரிஷியும் மாண்டேலேயில் உடம்பு சுகமாகவே காலங்கழித்து வருகின்றார். தமது ஆச்சிரம வாசம் வீணாகாமல் சிஷ்ய கோடிகளுக்குப் பயன்படுமாறு ஸ்ரீ கிருஷ்ண பகவான் உபதேசித்த "பகவத் கீதை"க்குத் தத்துவார்த்தம் எழுதிக் கொண்டிருக்கிறார். இவ் வேலை ஒய்வு ஒழிவில்லாமல் நடந்து வருகிறதாம்.

(இந்தியா : 27.2.1909 — பக். 8)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்வீகார ராஜா

ஒரு குடும்பத்தில் பிள்ளையில்லாமல் போனால் அன்னிய வமிசத்தைச் சேர்ந்த ஒரு பையனை ஸ்வீகாரமாக எடுத்துக்கொள்வது வழக்கம். அந்தப் பையன் பூர்வத்தில், தான் மிக ஏழையா யிருந்ததை யெல்லாம் மறந்து அதிக கர்வங்கொண்டு தனது ஸ்வீகாரத் தாயையும் அவள் வகை பந்துக்களையும் நிராதரவு செய்து பல விதத்திலே துன்பப்படுத்தித் தான் பிறந்த வீட்டிலிருந்து அண்ணன், தம்பி, மாமன், மைத்துனன் முதலிய நாலாயிரம் பேரைக் கொண்டு வந்து, தான் ஸ்வீகாரம் புகுந்த குடும்பத்தி லுள்ள பணத்தை யெல்லாம் வாரி யிறைப்பான். சில ஸ்வீகாரப் பிள்ளைகள் அப்படி யில்லாமல் நல்ல யோக்கியர்களாக, ஸ்வீகார குடும்பத்துக்கு நன்மை தேடுவது முண்டு.

அதுபோலச் சில தேசத்தார்கள் தம்மைத் தாமே அரசாட்சி செய்துகொள்ள வல்லமை யில்லாமல், அன்னிய தேசங்களிலிருந்து ராஜாங்க ஸ்வீகாரம் செய்துகொள்ளுகிறார்கள். அப்படி ஸ்வீகாரமாக வந்த ராஜாக்களில் சிலர் நல்ல யோக்கியர்களாய்த் தாம் வந்த தேசத்திற்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நன்மைகள் செய்து, ஸ்வதந்திரங்கள் கொடுத்து நியாயமாக அரசாளுவார்கள்.

இந்தியாவிலே பிரெஞ்சுக்காரரும், பிலிப்பைன் தீவிலே அமெரிக்கர்களும், திரான்ஸ்வாலிலே ஆங்கிலேயர்களும் அப்படி நியாயமாக ஆட்சி செய்கிறார்கள். ஆனால், வேறு சில துர்ப்பாக்கிய நாடுகளில், ஜனங்களால் இரவல் வாங்கப்பட்ட ராஜாங்கத்தார் ஜனங்களுக்கு ஸ்வதந்திரங்கள் கொடாமல், பயமுறுத்தியும் தண்டனை செய்தும் ஆட்சி புரிவது மன்றி, அந்நாட்டுச் சுதேசிகளைப் பட்டினி யிருக்கச் செய்து, உள்ள பணத்தை யெல்லாம் தங்களுடைய சொந்த நாட்டு ஜனங்களுக்கு வாரிக் கொடுத்துவிடுகிறார்கள். சில துரதிஷ்ட தேசங்களுக்கு இரவல் ராஜாங்கம்கூட நல்லதாகக் கிடைக்காமற் போய்விடுகிறது!

(இந்தியா : 13.3.1909—பக். 4)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லா. கர்ஸனுக்கு ஓர் புது சிஷ்யன்

இந்தியா ராஜாங்கத்தில் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய எல்லா நாடுகளிலும் உள்ளது போன்ற — இங்கு கூட நமது பிரெஞ்ச் இந்தியாவில் இருப்பது போன்ற — முறைமைகள் எக்காலத்தும் அனுஷ்டானத்துக்கு வரவேண்டுமென்ற சிந்தனை தமக்கில்லை யென்றும், அப்படி என்றைக்கேனும் வருவதாக இருந்தாலும் அதற்கு இன்று ஓர் சிறிய விதை போட்டு வைக்க வேண்டுமென்ற விருப்பம் கூடத் தமக்கில்லை யென்றும் லா. மார்லி சொல்லி யிருப்பதை லா. கர்ஸன் பிரபுக்கள் சபையிலே எடுத்துக் கூறி மகிழ்ச்சி பாராட்டினர்.

இங்கிலந்திலே ஸர்வ ஜன ஸமத்வம் முதலிய உதாரக் கொள்கைகளுக்கு மார்லி நெடு நாள் முக்கிய குருக்களி லொருவராகப் பாராட்டப்பட்டு வந்தவர். லா. கர்ஸன் அவ்விதக் கொள்கைகளுக்கு விரோதி. இந்தியாவைப்பற்றி விவகரிக்கும்போது லா. மார்லிகூடத் தம்முடைய மதத்தைச் சேர்ந்து விட்டாரென்று தெரிந்து, அவருக்கு ஆனந்த முண்டாய்விட்டது. தமது பிரசங்கத்தினிடையே லா. கர்ஸன் "நீர்கூடச் சென்ற இரண்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வருஷங்களில் பல அபிப்பிராயங்களை மாற்றியிருக்கிறீர்'' என்று உற்சாகமாகப் பேசினர்.

கூடிய சீக்கிரத்தில் லா. கர்ஸன், லா. மார்லிக்குத் தமது கையினால் தீக்ஷை கொடுத்துப் பரமார்த்த போதனைகள் செய்து வைப்பாரென்று நினைக்கிறோம்.

(இந்தியா : 20.3.1909—பக். 2)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இராமமூர்த்தி யவர்களின் ஆச்சரிய பலம்

இராமமூர்த்தி என்பவர் நமது சென்னை ராஜ தானியில் வடக்கே விசாகப்பட்டணம் ஜில்லாவில் பிறந்தவர். இவர் நமது தேசத்தில் பழமையாக வுள்ள தேக அப்பியாசங்கள், குஸ்தி முதலியவை களை விடாமற்செய்து ஆச்சரியமான தேகவலுவை இப்போது அடைந்திருக்கிறார். இடைவிடாமல் தேக அப்பியாசத்தில் பழகுவதால் அதிக பிரயோஜனம் உண்டு என்பதை இவருடைய வலுவினாலேயே நாம் அறியலாம். மேல்நாட்டில் அதிக அற்புதமான பலமுடைய **ஸாண்டோ** வென்பவர்கூட இவர் செய்யும் சில குஸ்திகளை இதுவரையிற் செய்ததாகத் தெரியவில்லை.

நமது தேசத்தில் நல்ல குஸ்திகள், தேக அப்பியாச வழிகள் எல்லாம் இருக்கின்றன. அவை களைப் பாலிய முதல் செய்து வந்த ராமமூர்த்தி என்பவர் செய்யும் வித்தைகள் அநேகம். தமது மார்பின் மேல் ஒரு பெரிய கற்பாறையைத் தள்ளி, இருவர் அதன்மேல் சம்மட்டியால் அடித்தால், அவர் அலக்ஷியமாய் இருப்பார். அவர் மார்மேலே மனிதர் ஏறியிருக்கும் கோச் வண்டியை இழுத் தாலும் இவருக்குச் சிரமம் இல்லை, அவர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புஜத்தைச் சுற்றி நெருக்கமாய்க் கட்டிய இரும்புச் சங்கிலியைத் துண்டு துண்டாய் சிதறிவிழும்படி முன்கையை மடக்கித் தமது புயவலிமையை அநேக தடவைகளில் காட்டி வெகுமானம் பெற்றிருக்கிறார். இதுவரையில் செய்யாத ஆச்சரியமான வித்தையை அவர் சமீபத்தில் செய்தார். அதாவது அதிக வேகமாய் ஓடிக்கொண்டே வரும் மோட்டார் வண்டியை அவர் தமது கைகளால் ஒரு க்ஷணத்தில் பிடித்து அசைவற்று இருக்கும்படி நிறுத்திவிட்டார். இது இந்தியர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை உண்டுபண்ணக்கூடிய விஷயம்.

நமது நாட்டு குஸ்திகளை ஆராய்ந்தறிந்து ஒவ்வொரு சிறு பிள்ளையும் பாலிய முதல் தேகப் பயிற்சி செய்து வலுவைச் சம்பாதித்துக் கொண்டால், நோயற்ற வாழ்வுடன் நெடுநாள் ஜீவித்திருக்க முடியும்.

(இந்தியா : 27.3.1909—பச். 10)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சர்க்கரை — தொத்து வியாதிகளை அண்டாமல் செய்தல்

ஐரோப்பா கண்டத்தில் பல தேசங்களில் வியாதிக்காரர்கள் படுத்து இருக்கும் அறைகளில் சர்க்கரையை நெருப்பில் போட்டு எரிப்பது வழக்கமாம். இப்படிச் செய்வதனால் இன்ன குணம் இருக்கிறதென்று தெரியாமலே அநேக ஜனங்கள் செய்துவருகிறார்களாம்.

சர்க்கரையைத் தீயில் போட்டு எரிப்பதினால் ஒருவித ஆவி உண்டாகிறது. இந்த ஆவி தொத்து வியாதிகளுக்குக் காரணமான கெட்ட வாயுக்களைப் போக்கடிக்கும் சக்தி யுள்ளது. இதை பிரத்தியக்ஷ மாக ஒரு டாக்டர் பார்த்திருக்கிறார். அழுகிப் போன மாம்ஸமோ அல்லது முட்டையோ இருக்கும் ஒரு பாத்திரத்தில் சர்க்கரையைப் போட்டுக் கொளுத்தினால், அதிலுள்ள துர்நாற்றம் போய் விடும். சர்க்கரையைக் கொளுத்துவதால் உண்டாகும் வாயுவில் காசம், பேதி, அம்மை — இப்படிப்பட்ட வியாதிகளை விளைவிக்கும் சில கிருமிகளைப் போட்டுப் பார்த்தாராம். இந்தக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிருமிகள் எல்லாம் அரைமணியில் இறந்து போய் விட்டனவாம். ஆகையால் சர்க்கரையைத் தீயில் போட்டு எரிப்பது நல்ல ஆரோக்கியமான வழக்கமாகும்.

(இந்தியா : 27.3.1909—பக். 10)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரத தர்ம மஹா சபை

சென்ற வாரம் வெள்ளிக்கிழமை தொடங்கி ஞாயிற்றுக்கிழமையன்று கல்கத்தாவில் பாரத தர்ம மஹாசபை என்ற சங்கம் முடிவுபெற்றது. இதில் நமது தேசத்தில் உள்ள ஸகல மதஸ்தர்களின் பிரதிநிதிகளும் வந்துசேர்ந்து தத்தம் மார்க்கங்களைப் பற்றிப் பேசினார்கள். எல்லா மார்க்கத்தவர்களும் மூல தர்மங்களில் ஒரேவிதமான அபிப்பிராய முடையவர்க ளென்பதை விளக்க வேண்டுமென்பதே இச் சங்கத்தின் நோக்கம்.

பாரத தேசத்தில் ஆதிகால முதலாகவே நமது பெரியோர்கள் எல்லா மதங்களும் உண்மைதா னென்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். "அன்னேயனே யெனும் சிலசமையம்" என்ற பாட்டில் தாயுமானவர் உணர்த்தி யிருக்கும் கோட்பாட்டை அவருக்கு முன்னும் பின்னும் நமது நாட்டில் ஆயிரக்கணக்கான ஞானிகள் சொல்லி யிருக்கிறார்கள்.

இந்தச் சபையில் ஸ்ரீ ஸாரதா சரணமித்திரரும், தர்பங்கா மஹாராஜாவும் நேர்த்தியான உபந்நியாசங்கள் செய்திருக்கிறார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சோம்பேறிகளும், அறிவுவிசால மற்றவர்களுமே இஷ்ட தெய்வங்களைப் பற்றிப்பரஸ்பரம் சண்டையிட்டுக் கொள்ளுகிறார்கள். அவரவர்கள் தத்தம் இஷ்ட தெய்வ உபாஸனை செய்தால், அதன் மூலமாகவே முக்தி மார்க்கத்தைக் கண்டுபிடித்துக் கொள்ளுவார்கள்.

சிவன் என்று சொன்னால்தான் முக்தி; அல்லது விஷ்ணு என்று சொன்னால்தான் முக்தி என்று நினைப்பது மூட பக்தி. சிவன், அல்லா, விஷ்ணு முதலியன வெல்லாம் நாம ரூபங்களைக் கடந்த பரமாத்மாவுக்கு மனிதர்களால் கொடுக்கப் பட்ட நாமங்கள். ஆதலால், எந்த மார்க்கமும், எந்த பக்ஷமும் மற்றவர்களால் வெறுக்கத்தக்க தில்லை என்ற உண்மை ஆரம்பத்தில் நமது தேசத்தில்தான் ஸ்தாபிக்கப்பட்டது. இடைக் காலத்தில் நம்மவர்கள் அந்த உண்மையைச் சிறிது மறந்துவிட்டார்கள். இப்பொழுது மீட்டும் அதை நம்மவர்களுக்கு நினைப்பூட்டுமாயின், பாரத தர்ம மஹாசபை பெரிய உபகாரம் செய்ததாகக் கருத வேண்டும்.

(இந்தியா 17.4.1909—பக்.4)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சென்னப்பட்டணத்தில் பிராமண ரல்லாதார் சபை

சென்னப்பட்டணத்தில் "லிபரல்" என்ற ஓர் விகடப் பத்திரிகை நடந்துவந்தது. ராஜாங்கத்தார் கொஞ்சம் உறுமினார்கள். அதன்பேரில் அப் பத்திரிகை நின்றுவிட்டது. இப்போது அதன் பத்திராதிபராகிய ஸ்ரீ பி. சுப்பிரமணியம் என்பவர் ஜனாசார விஷயங்களில் தலையிட்டிருக்கிறார். வெகு சுகம்! இந்திய ஜனங்களோ "செத்த புலி." அதை எவ்வளவு குத்தினாலும் கேள்வி கேட்பா ரில்லை! இப்பொழுது இந்த ஸ்ரீ சுப்பிரமணியம் என்பவரும் மற்றொருவரும் சேர்ந்து "பிராமண ரல்லாதவர்கள் சங்கம்" என ஒன்றேற்படுத்தி வேலை செய்யப் போவதாகத் தெரிகிறது. இந்தச் சங்கம் ஏற்படுத்தினவர்களின் நோக்கம் நல்லதா யிருக்கலாம். ஆனால், இதிலிருந்து விளைவது தீமை களே யாகும். இவர், "பிராமண ரல்லாதார் சபை" என ஒன்றேற்படுத்துகிறார். இதைப் பின்பற்றிச் "செட்டி யல்லாதார்", "முதலி யல்லாதார்", "பிள்ளை யல்லாதார்" "நாயுடு வல்லாதார்" என்ற சபைகளேற்பட்டுக்கொண்டே போனால் எத்தனை வினோதமா யிருக்கும்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸர்வ குலங்களும் தத்தம் குணங்களால் மற்றவர்களுக்கு மனப்புண் விளைக்காமல் ஸமரஸ நிலையடைந்து, பாரத மஹா ஜாதி என ஒன்றேற்பட வேண்டுமென்பதாக நாமெல்லோரும் பாடுபட்டு வரும் இக் காலத்தில் இவ்வாறு பிரிவெண்ணங்களுண்டாகக் கூடிய சபைகளேற்படுத்துவோரை நமக்குத் தீமை செய்வோராகவே கருதவேண்டும்.

ஒவ்வொரு குலத்தாரும் சிற்சில சிறு நலங்களை உத்தேசித்தும் பொது நலத்தை மறக்காமலும் தனித்தனி சபைகளேற்படுத்திக் கொள்வது பிழையாக மாட்டாது. அதுவன்றி ஒரு வகுப்பை மட்டும் பிரித்து அவரல்லாத மற்ற வகுப்பினர் சபை என்று ஸ்தாபனம் செய்வதன் பொருள் நமக்கு விளங்கவில்லை. தேசத்து நன்மை செய்ய மனமற்றவர்கள் தயவுசெய்து தீமை செய்யாமலிருக்கலாகாதா?

(இந்தியா: 15.5.1909 — பக்.4)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதிய கிளர்ச்சி

ஸ்ரீ யதிராஜ் சுரேந்திரநாத் ஆர்யா[1] கேஸ் விஷயமாக எழும்பூர் பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் நடந்த விசாரணையின் விவரங்களை மற்றோரிடத்தில் பிரசுரம் செய்திருக்கிறோம். மிகுந்த மனத் திடமும், அவியாத ஞானாவேசமும் உடைய ஸ்ரீ ஆர்யாகூடத் தமது பிராணனை விட்டு விட முயலும்படி அத்தனை கஷ்டங்கள் பிரிடிஷ் சிறைச்சாலைகளிலே நம்மவர்களுக் கிருக்கின்றன. அதிலும் "ராஜத் துரோக"க் குற்றவாளிகளை அளவிறந்த இமிசைகளுக் குட்படுத்துகிறார்களென்று தெரிகிறது. நாகரீக தேசங்களிலே ராஜ்யத் திருத்த சம்பந்தமான கைதிகளை அரசர்களைப் போல நடத்துவார்கள். அநாகரீக மிருகங்களாய் விட்ட நம்மை ஆளும் அநாகரிக மிருக ராஜாங்கத்தார் ராஜ்யத் திருத்தம் வேண்டுவோர்களைக் கொலையாளிகளைவிட இழிவாக நடத்துகின்றார்கள்.

"புதிய கிளர்ச்சி" நாட்டிலுண்டானதாக நாம் பேசிக் கொள்ளுகிறோம். அதன் பயன்களெல்லாம் வட நாடுகளிலே காணப்படுகின்றன. சென்னை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாகாணத்தில் யாதொன்றையும் காணவில்லை. ராஜாங்கத்தார் நமக்கு அஞ்சி நடக்குமாறு நாம் நடந்து கொள்ள வேண்டும். ஸ்ரீமான் திலகரை இந்தியாவில் வைத்திருக்க ராஜாங்கத்தாருக்குத் துணிவேற் படவில்லை. அவருக்கு விதித்திருந்த கடின சிக்ஷையை மெய் காவலாக மாற்றி யிருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் அவர்களுடைய தயவன்று. மஹாராஷ்ட்ர ஜனங்களிடம் அவர்களுக்குள்ள பயமே காரணம். மிகுதியாகத் திலகரை இமிசை செய்தால் மஹாராஷ்ர ஜனங்கள் பொறுக்க மாட்டார்களென்பதை ராஜாங்கத்தார் நன்றாக அறிந்திருக்கிறார்கள்.

"எளியவன் மனைவி யாருக்கும் மைத்துனி". நமது ஜனத் தலைவர்களாகிய ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை போன்றவர்களையும், தேசாபிமானிகளாகிய யதிராஜ் போன்றவர்களையும் அவர்கள் எப்படி வதைத்தாலும் நமது பக்கத்தவர்கள் பொறுத்துக் கொண்டிருப்பார்களென்று கண்டு பிடித்து விட்டார்கள். கூக்குரலேனும் போடக் கூடாதா? பொதுக் கூட்டங்கள் கூடலாகாதா? ஹா! என்ன மானமற்ற ஜாதியாகி விட்டோம்?

(இந்தியா : 22.5.1909—பக்.4)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

1. யதிராஜ் சுரேந்திர நாத் ஆர்யா :

சிறந்த தேசபக்தர்; மேடைப் பேச்சாளர். சென்னை நகரில் பாரதியுடன் பல கூட்டங்களில் கலந்துகொண்டிருக்கிறார். 1907 சூரத் காங்கிரஸில் பங்கு பெற்றவர். 1908இல் ராஜநிந்தை விஷயத்திற்காக 5 வருடத் தண்டனை அடைந்தவர். சென்னைச் சிறைச் சாலையில் தண்டனையை அனுபவித்தவர். சிறையில் இருந்தபொழுது தற்கொலை செய்துகொள்ள முயன்றதாகவும் இவர்மேல் குற்றம் சுமத்தப்பட்டது.

இதைப் பற்றிய செய்திக் குறிப்பானது 'இந்தியா' பத்திரிகையிலேயே பிரசுரமாகி யுள்ளது. அது வருமாறு :

"......சென்ற புதன் கிழமை காலையில் இவர் தனது அறையில் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்ததை ஓர் வார்டர் (காவல்காரன்) பார்த்தபொழுது, தன் கம்பளத்திலிருந்து கயிற்றை எடுத்துக் கழுத்தைச் சுற்றி இறுக்கிக் கட்டிக்கொண்டதாகவும், உடனே கதவைத் திறந்து பார்த்தபொழுது, இவர் பேச்சு மூச்சின்றி கிடந்ததாகவும், உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று கொஞ்சம் பிராணனோடு இருக்கக் கண்டார்கள் என்றும், இதை விசாரிக்கும்படி ஜெயில் சூப்ரன்டெண்டு போலீசாருக்குத் தெரியப்படுத்தியதாயும் வர்த்தமானம் கிளம்பி யிருக்கின்றது."

(இந்தியா: 15.5.1909—பக்.11)

இவர் பாரதியின் நெருங்கிய நண்பராக விளங்கியவர்; கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர்; ஸ்வீடன் தேசத்துப் பெண்ணை மணம் புரிந்து கொண்டவர். பாரதி மறைந்த பொழுது தெலுங்கில் பேசி அவருக்குப் புகழ் அஞ்சலி செலுத்தினார்.

*

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ P. கெர்ஷாஸ்ப் I.C.S.

சென்னை கவர்ன்மெண்டாரால் இப்போது பதவி யிறக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ P. கெர்ஷாஸ்ப் என்ற பார்ஸி உத்தியோகஸ்தர், பிரிடிஷ் இந்தியாவிலே அதிகாரஞ் செய்தபோதிலுங்கூட, நீதிப்புலனை நழுவவிடாமல் வைத்திருக்கும் ஒரு விஷயத்தைப் பற்றியே பொதுவாக நாமெல்லோரும் வியப் படைந்து வருகிறோம். ஆனால், அவர் இதுவன்றி வேறொரு விஷயத்திலும் மிகவும் புகழ்ந்து பேசுதற் குரிய சிறப்பு வாய்ந்தவர்.

புராதன சரித்திர ஆராய்ச்சியிலே இவர் மிகுந்த தேர்ச்சி யுடையவர். 1905-ம் வருஷத்தில் "பாரஸிக நாட்டுப் புராதன சரித்திர ஆராய்ச்சி" என்பதாக இவர் ஓர் அரிய கிரந்தம் எழுதிப் பிரசுரித்திருக்கிறார். ஆதிகால முதலாகவே, ஐரோப்பிய சரித்திரக்காரர்கள் கீழ்த்திசை நாடு களைக் குறைத்துப் பேசித் தம்மைப் பற்றிப் பொய்ப் பெருமை பாராட்டிக்கொள்ளும் கெட்ட வழக்கமுடையவர்க ளென்பதை ஸ்ரீ கெர்ஷாஸ்ப் அந் நூலினிடத்தே நன்கு விளக்கி யிருக்கின்றார். பாரஸிகர்களைக் குறைத்துப் பேசி, கிரேக்கர்கள் எழுதி வைத்திருக்கும் 'சரித்திரம்' பொய்க் கதை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யென்று இவர் பல சரித்திரக்காரரின் வார்த்தைகளைப் பரிசோதனை செய்தும், கால தேச வர்த்தமானங்களை எடுத்துக்காட்டியும் நிதர்சனப் படுத்தி யிருக்கின்றார்.

ஸ்ரீ கொர்ஷாஸ்ப் எழுதுகிறார் :

"அதீனியா (Athenia)வும், அதன் துணை நாடுகளும் அக் காலத்தில் மிக அற்பமாகவும், இகழ்ச்சிக் குரியனவாகவும் இருந்தன. பாரசீகத்தைப் போன்ற வல்லமை கொண்ட ஓர் பேரரசு அவற்றைப் பொருட்டாகவே எண்ணி யிருக்கமாட்டாது. ஷெர்ஷேஸ் சக்ரவர்த்தி நான்கு வருஷம் படைகள் முஸ்திப்பு செய்து பிறகு லக்ஷக்கணக்கான சைநியத்துடன் போய் இச் சிறிய நாடுகளை எதிர்த்தா ரென்ற வார்த்தை மஹா அசம்பாவிதமானது."

உலக நாகரிகத்துக்குக் கிரேக்க தேசம் செய்த நன்மைகளை ஐரோப்பியர்கள் ஒன்று பத்தாகக் கூட்டி யெண்ணி, ஆசியாவினால் உலக நாகரீகத் துக்கு உண்டான உதவிகளைக் குறைத் தெண்ணு கிறார்களென்பது ஸ்ரீகொர்ஷாப்பின் அபிப்பிராயம்.

"சிலாசாஸனாதி ஆராய்ச்சி நடத்தும் பண்டிதர் கீழ்த்திசையே மனுஷ்ய நாகரிகத் திற்குப் பிறப்பிடமென்று உறுதியாகக் கூடிய பல விஷயங்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தியாவிலும், பாரஸீகத்திலும் கி. மு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5000க்கு நெடுங்காலத்துக்கு முன்னாகவே ஆத்ம தத்துவ விசாரணைகள் வெகு விசேஷமாக நடந்திருக்கின்றன.

"ஆவெஸ்தா" என்று சொல்லப்படும் புராதன பாரஸீக வேத நூல் 20 லக்ஷம் வரிகளுடையதென்று பிளினி (அல்லது ஹொணிப்பஸ்) என்ற ஐரோப்பிய சரித்திரக்காரர் முன் காலத்தில் கணக்கிட்டுச் சொல்லி யிருக்கிறார். அந்த நூலில் பெரும் பகுதி இக் காலத்தில் அழிந்துபோய்விட்டது. இப்போது கீழ்த்திசையில் அழியாது மிஞ்சி யிருக்கும் ஆதாரங்களை மட்டும் சோதனை செய்தபோதிலும், ஆசியாவின் மஹிமை தெளிவாக விளங்கும். ஹக்ஸ்லி (Huxley) யும், டார்வி (Darwin) னும் பிறப்பதற்கு 22 நூற்றாண்டுகளின் முன்பு ஸாங்கிய சாஸ்திரிகளும், பவுத்தர்களும் இந்தியாவில் பரிணாம வாதம், குல தர்மம் முதலிய விஷயங்களைக் கண்டுபிடித்திருந்தார்கள். வேதாந்த மார்க்கத்தார் ஸத், 'ஜகத் இவற்றின் ஆழமான ரஹஸ்யங்களை யெல்லாம் துளைத்துக் கண்டுவிட்டனர்.

ஐரோப்பியர்கள் தத்துவ சாஸ்திரத்தின் பிரதம கர்த்தாக்கள் என்று பாராட்டப்படும் பிளேடோ, அரிஸ்டாடில் என்போரின் கோட்பாடுகளை நவீன அறிவு திரஸ்காரம் செய்துவிட்டது. ஆயினும், ஐரோப்பாவில் கீர்த்தி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெற்ற ஞானிகளெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக வேதாந்த மார்க்கத்தில் கவிந்துவருவது கவனிப்பதற்குரிய விஷயம்''

என்று ஸ்ரீ கெர்ஷாஸ்ப் எழுதுகிறார்.

இவ்வித அறிவுக்கும் பிரிடிஷ் கவர்ன்மென்டின் கீழ் உத்தியோகத்துக்கும் ஒத்துவருமா? ஸ்ரீ கெர்ஷாஸ்புக்கு அடிக்கடி உபத்திரவங்கள் வருவது கொஞ்சமேனும் வியப்பாக மாட்டாது. ஸ்ரீ கெர்ஷாஸ்ப் தமது உத்தியோகத்தை (அவர்கள் போகச்சொல்லு முன்பு) தாமாகவே விட்டு விட்டு, சுதேச ஸேவைக்கு வருதல் அவருடைய அறிவுக்கும், பெருமைக்கும் பொருந்திய காரியமாகும்.

(இந்தியா : 29. 5. 1909—பக். 2)

பதிப்பாசிரியரின் குறிப்புக்கள்

கெர்ஷாஸ்ப் என்பவர் 'ஸ்வராஜ்' பத்திரிகை கேஸ் நடக்கும்போது ஸெஷன்ஸ் ஜட்ஜாக இருந்தவர்.

கொந்தப்ப குண்டா கலக சமயத்தில் இவர் தகுந்த முன் ஜாக்கிரதையுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு இருந்தும் அவற்றில் திருப்திக்கொள்ளாத அரசு, அவரைப் பதவி இறக்கம் செய்தது.

இந்தியர் என்பதால், உயர் பதவி கொடாமல், பழி வாங்கும் நோக்கத்துடன் பதவி இறக்கம் செய்யப்பட்டார் என்றும் அந்தச் சமயத்தில் பேசியவர்களும் உண்டு. சிறிது காலத்திற்குப் பின் இவர் பதவி விலகிவிட்டார்.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரத ஸங்கீதம்
இதன் எதிர்கால நிலை

பம்பாயிலே "பார்ஸி" என்பதோர் பத்திரிகை நடைபெறுகின்றது. அதில் பாரத ஸங்கீதம் என்ற விஷயத்தைப் பற்றி ஒருவர் எழுதிக்கொண்டு வந்து பின்வருமாறு முடிக்கின்றார்:

"எல்லாவற்றிற்கும் மேலாக நமது நாட்டில் இப்போது உதயஞ் செய்திருக்கும் ஜாதீய ஒருமை என்னும் பெருநோக்கத்தைக் கருதவேண்டும்.

இப் பெருநோக்கம் எழுத்து வழியாக மட்டுமே யல்லாது வேறு வழிகளின் மூலமாகவும் பிரகாசமெய்தும். ஜாதி மதத் தர்க்கங்கள், ராஜரீக விவாதங்கள் - இவையெல்லாம் மாறிப் பாரத மஹாஜாதி ஒன்றேற்பட்டு ஏகத்தன்மையிலும் அன்பிலும் லயமடைந்து நிற்கப்போகிற பெருஞ் செய்தி நெஞ்சத்தை அற்புத வழிகளிலே உருக்கி, நவீன இசையாகப் பொங்கும். நமது எதிர்காலத்து ஸங்கீதம் இப்பொழுதுள்ள ஸங்கீதத்தைப் போலிருக்காது, மாறுபட்டு இருக்கும்" என்கிறார்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆம், புதிய உயிர் என்றால் அது ஒருவகையிலே மட்டும் பிரகாசமடைவ தன்று. நம்மவரின் அறிவு, தொழில் என்பவற்றில் எத்தனை யாயிரம் பிரிவுக ளுண்டோ, அவை யனைத்திலும் புதிய ஜீவனுக் கடையாளமான ஒளியும், இன்பமும், திறனும், இளமையும் காணப்படும்.

(இந்தியா : 5.6.1909—பக். 4)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொழில் நிறுத்திவிடுதல்

தொழிலாளிகள் கூட்டமாகச்சேர்ந்து தொழில் நிறுத்திவிடுதல் நவீன நாகரீகத்தின் இன்றியமையாத தீங்குகளிலே யொன்றாகும். பிரான்ஸ் தேசத்தில் சென்ற சில மாதங்களாக அடிக்கடி தொழில் நிறுத்துதல்களைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். சென்னை மாகாணத்தில்கூட ரெயில்வே சாரதிகள் (ட்ரைவர்கள்) ஒன்றுசேர்ந்து, வேலையை நிறுத்திப் பிரயாணிகளுக்கு மிகுந்த தொல்லை யுண்டாக்கினார்கள். வியாபார முதலிய பொதுக் காரியங்களுக்கும் இதனால் மிகுந்த இடையூறுக ளுண்டாயின. நமது தேசத்தில் இந்த விவகாரம் அதிகமாகக் கிடையாது. அமெரிக்கா, ஐரோப்பா பிரதேசங்களில் முக்கியமாகச் சென்ற 50 வருஷங்களாக இந்தப் பூசல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்தியாவிலேயும், ஐரோப்பிய வியாபார முறைகளும் தொழில் முறைகளும் விருத்திப்பட விருத்திப்பட, வேலை நிறுத்துதல் என்ற தீங்கும் விருத்தியடைந்து கொண்டுவரும்.

இப்படி நிறுத்துதல்கள் ஏற்படுவதால், தொழிலாளிகளுக்குங் கஷ்டம்; முதலாளிகளுக்குங் கஷ்டம்; பொது ஜனங்களுக்குங் கஷ்டம். எனவே, இதற்கு ஒரு நிவிருத்தி தேடுதல் பொது ஜனங்களின் கடமை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாகின்றது. முதலாளிகளும், தொழிலாளிகளும் வாதிப் பிரதிவாதிகள். இவ் விஷயத்தில் நியாயம் இன்னதென்பது அவர்களுக்கு எளிதாகப் புலப்படாது. ஆதலால் பொது ஜனங்களே இதில் கவனம் செலுத்தி, பொது ஜனத் தீர்மானம் என்ற தளையில் இரு திறத்தாரையும் கட்டுப்படுத்த வேண்டும்.

ஸாதாரணமாக, இவ்வித விவகாரத்தைக் கவனிக்கும்போது திடீரென்று தொழிலாளிகள் மேலேதான் நமக்குக் கோபமுண்டாவது ஸகஜம். மறுநாள் பெங்களூரில் விவாகத்திற்கு முஹூர்த்தம் ஏற்படுத்தி வைத்து, இன்று பகல் சென்னப் பட்டணத்திலிருந்து புறப்படும் மணமகன் சாரதிகளின் பிடிவாதத்தினால் வண்டி ஓடாதென்று கேள்விப்படும்போது அவர்களைப் பிடித்து வாய்க்கு வந்தபடி திட்டுவானே யல்லாது, ரெயில்வே கம்பெனியாரைச் சாபமிட மாட்டான். ஆனால், யோசனை செய்து பார்க்குமிடத்து முதலாளிகளின் மேலேதான் குற்றமிருக்கிறதென்று விளங்கும்.

பொதுவாக உலகத்திலே தொழிலாளிகள் பெரும்பாலும் ஏழைகள்; அன்றாடகம் பொருள் சேர்த்துச் சாப்பிடும் நிலைமையிலே உள்ளவர்கள். இவர்கள் ஸாமான்யத்திலே வேலையை விடமாட்டார்கள். இவர்கள் தொழில் நிறுத்தத்தினால் முதலாளிக்கு நஷ்ட முண்டென்பது வாஸ்தவமே யானாலும், நின்றவுடனே குஞ்சு குழந்தைகளுடன் பட்டினி கிடப்பவன் முதலாளி யன்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொழிலாளியே யாவான். ஆதலால் தொழிலாளிகள் இலேசான காரணத்தை வைத்துக் கொண்டு வேலை நிறுத்தி யிருக்கமாட்டார்கள். மேலும், கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து, ஆத்ம பலமும் ஸ்வேச்சையு மில்லாமல், யந்திரங்களைப் போல வேலை செய்யும் ஏழை ஜனங்கள் கவிகள் சொல்லும் "கவரிமா"னைப் போன்ற மானிகளாகி, வாலிலே ஒரு உரோமம் போனால், அதற்காகத் தமது உயிரை விட்டு விடுவார்க ளென்பது நம்பக்கூடியதன்று. அது நமது அனுபவத்திற்கு நேர் விரோதம்.

"நல்லொழுக்கம் இக் காலத்தில் ஏழைகளுக்கு ஸாத்தியப்படாமல், செல்வர்களுக்கே ஸாத்தியமான ஒரு 'போக வஸ்து' (Luxury) ஆக முடிந்து விட்டது" என்று சில ஆங்கிலேயர்கள் சொல்வதுண்டு. அதுபோல மானமும் ஏழைகளுக்கு ஸாத்தியப்படாமல், செல்வர்களுக்கே ஸாத்தியமான ஒரு 'போகவஸ்து'வாய் முடிந்துவிட்டது. வறுமையின் கொடுமைகளை யெல்லாம் பொறுத்துக்கொண்டு மானத்தையும் தர்மத்தையும் கைவிடாமலிருக்கும் தீரத்தன்மை ஸாதாரணமாய் ஏழை ஜனங்களுக்குள்ளே காணக்கூடியதன்று. அப்படி யிருக்குமானால், ஒவ்வொரு ஏழையும் 'பிரம ஞானி'யாய்ப் போய்விடுவான்.

ஆதலால், நாம் மேலே சொல்லியது போல, ஏழைத் தொழிலாளிகள் சாமான்யத்திலே தமது ஜீவனாதார மாகிய தொழிலைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கைவிடமாட்டார்கள். மேலே முதலாளிகள் பொறுக்கமுடியாத நிஷ்டூரங்கள் செய்தால்தான் இவர்கள் 'என்ன வந்தாலும் சரி. நான் இவனிடம் வேலைக்குப் போகமாட்டேன்' என்று பிடிவாதம் செய்யக் கூடிய நிலைமை ஏற்படும்.

அவர்கள் கையிலே வேலை நிறுத்துவதைத் தவிர வேறே ஆயுதமில்லை. ஸகலவிதமான பலங்களும் முதலாளி பக்கத்திலே யிருக்கின்றன. ஆதலால், தொழில் நின்ற பிறகும் முதலாளி லேசாக ஸமாதானத்துக்கு வரமாட்டான். தொழிலாளிகளின் வேண்டுதல்களுக்கு அவன் இணங்கமாட்டான். எப்படியும் இவர்கள் வறுமையின் கொடுமையால் நமது காலில் வந்து விழுவார்கள் என்பதை அவன் அறிந்திருக்கின்றான். படிப்பு, அறிவு, யோசனை, பொருள் முதலிய அனைத்தும் முதலாளி பக்கத்திலிருக்கின்றது. தொழிலாளி பக்கத்திலே அந்த ஸௌகரியங்களில் ஒன்றுமே யில்லை. இந்த நிலையில் பொது ஜனச் சார்பும் முதலாளி பக்கத்தைச் சேர்ந்து விடுமானால் தொழிலாளியின் பாடு அதோ கதியாய் விடும்.

ஆதலால், ஏழைத் தொழிலாளிகள் வேறு உபாயமறியாமல் வேலை நிறுத்தும்போது, பொது ஜனங்கள் அவர்களிடம் கோபங்கொள்ளாமலிருப்பது மட்டுமே யன்றி, அவர்களுக்குத் தம்மால் இயன்ற ஸௌகரியங்களெல்லாம் செய்து கொடுக்கவேண்டும். இதை யெல்லாம் ஆலோசனை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்தே தேசபக்த திலகமும், ஆபத்பாந்தவரும் ஆகிய ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை தூத்துக்குடியிலே 'கோரல் மில்ஸ்' யந்திரசாலை விவகாரத்தில் தொழிலாளிகளின் பக்கம் அனுதாபஞ் செலுத்தினர்.

கஷ்ட தசையிலிருப்பவர்கள்மீது இரக்கங் கொண்டு அவர்களுக்குத் துணைபுரியும் வழக்கத்தை நாம் எப்போதைக் காட்டிலும் இப்போது பல மடங்கு அதிகப்படுத்தவேண்டும்.

(இந்தியா : 12.6.1909—பக்.3)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆப்கானிஸ்தானத்தில் ராணுவப் பயிற்சி

துருக்கி எழுச்சி பெற்றதினின்றும், மற்றக் கீழ்த்திசை நாடுகளுக்கெல்லாம் ஓர் புதிய உற்சாகம் பிறந்திருக்கிறது. அதிலும் முக்கியமாக மகம்மதிய நாடுகள் அரிய ஊக்கத்துடன் க்ஷேம வழிகளை நாட்டி வருகின்றன. இஹலோகத்துப் பெருமை முதலாவது சரீர சக்தியையும் ராணுவ பலத்தையும் பொறுத்ததாகையால் இந்த நவீன உற்சாகம் ஆப்கனிஸ்தானம் முதலிய இடங்களிலே ராணுவப் பயிற்சியிலே திரும்பி யிருக்கிறது. சில மாதங்களாகவே ஆப்கனிஸ்தானத்தில் ராணுவங்களைப் புதுப்பிப்பதிலும், விருத்திப்படுத்துவதிலும், நல்ல பயிற்சி தருவதிலும், நவீன ஆயுதங்கள் தருவித்துக் கொடுப்பதிலும் மிகுந்த சிரத்தையுடன் வேலை நடந்து வருகின்றது. சில தினங்களுக்கு முன் காபூலுக்கருகே ஓரிடத்தில் அமீர் தமது சேனைகளைச் சேகரித்து வைத்து யுத்த நடைகள் செய்து காட்டச் சொல்லிப் பார்த்தார். ஸர்தார் இனாயதுல்லாகானுடைய ஸேனாபத்யத்தின் கீழ் ஷ்டி யுத்த நடைகள் மிக நன்றாக நடத்திக் காட்டப்பட்டன. துருக்கிய ராணுவ வழிகளைத் தமது சைநியத்தார் நன்கு கற்றுக் கொண்டிருப்பது கண்டு அமீர் மிகத் திருப்தி அடைந்தனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பீரங்கித் துப்பாக்கிகள் செய்யும் தொழிற் சாலைகள் பல ஆப்கானிஸ்தானத்தில் புதிதாக ஏற்பட்டிருக்கின்றன. அவற்றின் மேற்பார்வைக்குத் துருக்கியிலிருந்து உத்தியோகஸ்தர்கள் தருவிக்கப் பட்டிருக்கின்றனர். அந்த உத்தியோகஸ்தர்கள் தமது கடமையை நன்கு செலுத்தி வந்திருப்பது பற்றி மகிழ்ச்சி] கொண்டு அமீர் அவர்களுக்குப் பொற் பதக்கங்கள் சன்மானம் செய்திருக்கிறார்.

* * *

ஆப்கானிஸ்தானம் முற்காலத்தில் பாரத தேசத்தின் ஓர் பகுதியாக இருந்தது. அதற்குக் காந்தார நாடு என்று பெயர். அங்கே நெடுங்காலம் ஹிந்து ராஜாக்களே அரசாண்டு வந்தனர். அக் காலத்தில் அந் நாட்டில் ஆண்மக்கள் மட்டுமே யன்றிப் பெண்கள்கூட மிகுந்த வீரத்தன்மை கொண்டவர்களா யிருந்தன ரென்று நமது சரித்திரங்களிலே படிக்கிறோம்.

(இந்தியா : 9.10.1909—பக்.9-10)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாணாக்கர்களைப் பற்றி ஜஸ்டிஸ் முகர்ஜீ

கல்கத்தாயூனிவர்ஸிடியின் வைஸ் - சான்ஸலராகிய ஜஸ்டிஸ் முகர்ஜீ பர்ஹாம்பூர் கலாசாலையில் செய்த உபந்நியாசத்தில் பின்வருமாறு சொன்னார்:

"மாணாக்கர்களுக்கு சாஸ்திரப் பயிற்சி அதிகமா யிருக்கவேண்டும். நமது நாட்டின் கைத்தொழில் விர்த்திக்கு சாஸ்திரப் பயிற்சியே ஆதாரமா யிருக்கின்றது. காஸிம்பஜார் மஹாராஜா ஓர் சாஸ்திரப் பரீக்ஷாசாலை ஏற்படுத்துவதற்காகப், பெருத்த திரவிய உதவி செய்த விஷயத்தைப் பற்றி மிகவும் சந்தோஷிக்கின்றேன். முதன்முதல் சாஸ்திரப் பரீக்ஷாசாலைகள் சொல்பமாய் ஆரம்பிக்கப்பட்டபோதிலும், காலக்ரமத்தில் மாணாக்கர்களுடையவும் போதகர்களுடையவும் பொது ஜனங்களுடையவும் முயற்சியால் அவை விர்த்தியாகக் கூடும்.

மாணாக்கர்கள் அவர்களுடைய காலத்தில் உண்மையான மாணாக்கர்களாகவே இருக்க வேண்டும். அதாவது, அவர்கள் மேன்மேலும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விஷயங்களை அறிந்துகொள்ள ஆவல்கொண்டு தங்கள் மாணாக்கக் கால முழுமையும் கல்வியிலேயே செலவிட வேண்டும். அவர்களுடைய மாணாக்கக் காலம் முடிவதற்கு முன் வேறு விஷயங்களிலே சிரத்தை கொண்டு பிஞ்சிலே பழுத்த பழங்களாகக் கூடாது.''

(இந்தியா : 9.10.1909—பக்.10)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு : 1

ஹிந்துஸ்தான் ஸ்வதந்திர யுத்த சரித்திரம்

[1857 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தியச் சுதந்திரப் போரைப் பிரிட்டிஷ் சரித்திர ஆசிரியர்கள் 'சிப்பாய்க் கலகம்' என்றெழுதிய காரணம் பற்றி, வீர சவர்க்கார் தேசிய நோக்குடன் அச் சரித்திரத்தை 'எரிமலை' என்ற பெயரிட்டு, நூலாக வெளியிட்டார். அந் நூல் பிரிட்டிஷ் அரசால் தடையும் செய்யப் பட்டது.

மகரிஷி வ.வெ.சு. அய்யர் அவர்கள் நம் தமிழ் நாட்டாருக்கும் இந்தியச் சுதந்திர வரலாறு தெரிந் திருக்க வேண்டும் என்று கருதி, சவர்க்காரின் நூலைத் தழுவி, தமிழில் எழுத முற்பட்டார். அதன் ஒரு பகுதி மட்டும் 7.8.1909ஆம் தேதிய 'இந்தியா' இதழில் பிரசுரமானது. கிடைத்த வரையிலான மொழிபெயர்ப்புப் பகுதியே இங்கு இடம் பெறுகின்றது.]

ஜன சம்மத மன்னியில் நானாவிதமான தந்திரங்களால் கவர்ந்து கொண்டிருந்த ஆங்கி லேயக் **'கம்பெனி'**யின் அதிகாரத்தினின்று நமது நாட்டை மீட்டு, ஸ்வ தருமத்தையும் ஸ்வராஜ்ஜி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் இப்பொழுது 50 வருஷங்களுக்கு முந்தி-சகாப்தம் 1780-ம் வருஷத்தில் - நமது முன்னோர்கள் பெரிய யுத்தம் செய்தார்கள் என்ற விஷயம் ரூடியாகக்கூட நம்மவர்களில் அனேகர்களுக்குத் தெரியாது.

தமிழ்ப் பாஷையில் இந்த விஷயத்தைப் பற்றின கிரந்தம் இதுவரையில் எழுதப்பட்டுள்ளதாக நாம் அறியவில்லை. ஆங்கிலேய பாடசாலைகளில் கீழ்த்தர வகுப்புகளில் நியமித்திருக்கும் இதிகாச (தேச சரித்திர)ங்களில், இந்த யுத்தத்தின் சரித்திரம் விஸ்தாரமாக எழுதப் படாததுடன், எழுதப்பட்டுள்ள சுருக்கங்களும் இல்லாத துரைத்தல், உள்ளதை யொளித்தல் என்னும் குற்றங்களை உடைத்தானவையாக விருக்கின்றன. எவையினின்று சுருக்கப்பட்டனவோ அந்தப் பெரிய கிரந்தங்களும் ஆங்கிலேயர்களாலேயே பெரும்பாலும் எழுதப்பட்டிருப்பதால், தங்களுடைய தேசத்தாரின் ஆளுகைக்கு விரோதமாகக் கிளம்பினவர்களுடைய சரித்திரத்தை நிஷ்பார பக்ஷமாய் அவர்களால் எழுதப்பட்டிருக்க முடியாது என்று யாரும் அறிந்து கொள்வார்கள்.

இந்தப் போரை நடத்தின இந்திய வீரர்களுடைய கடிதங்கள், விளம்பரங்கள், உத்திரவுகள் முதலிய தஸ்தவேஜுகளில் பெரிய பாகம், ஆங்கிலேய ராஜாங்கத்தின் கொடிய பழிக்குப் பயந்து, அந்த வீரர்களுடைய குடும்பங்களால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அழிக்கப்பட்டும் அல்லது மறைக்கப்பட்டும் போய் விட்டன. ஆகவே, இதுவரையில், இரு திறத்தாருடைய தனியான கதைகளை ஆராய்ந்து, ஒத்துப் பார்த்து, பொய்யைத் தள்ளி, மெய்யைத் தழுவி, உள்ளதை உள்ளபடியே காட்டிய சரித்திரம் இது வரையில் எழுதப்பட வில்லை.

ஆனால், ஒரு விஷயத்தைப் பற்றிப் பத்து மனிதர் சாக்ஷியம் சொல்லும்போது, அவர்களில் ஒவ்வொருவனும் அறியாமையினாலே யாகட்டும் அல்லது ஒரு கக்ஷிக்காரன் மீதுள்ள குரோதத்தினாலே யாகட்டும் வாஸ்தவத்தை உரைக்காம லிருப்பினும், அவர்கள் பத்துப் பெயர்களுக்கும் ஒரேவிதமான மனோ தருமமும் அல்லது ஒரே ஆக்கிரகமான குரோதமும் அல்லது ஒரே அளவான அறியாமையும் இராதாகையால், ஒரு தேர்ந்த நியாயாதிபதி அவர்களுடைய சாக்ஷியங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, ஆழத்தில் பதிந்து அமுங்கிக் கிடக்கும் உண்மையைத் தன்னுடைய அறிவுக்கு கோசரமாகிற அளவுக்குப் பிரித்தெடுத்து, இரு கக்ஷிக்காரர்களுக்கும் நியாயத்தை நடத்துகிறான்.

அவ்விதமே ஆங்கிலேய பாஷையில் இந்தப் பெரிய போரைப் பற்றி அனேக சரித்திரக்காரர்கள் அனேக விதமான திருஷ்டி நிலயங்களிலிருந்து நோக்கியும், அனேக விதமான ஆதாரங்களைப் பரிசோதித்தும், அனேக விதமான இருதய உணர்ச்சி களுடனும் எழுதி யிருக்கிறார்க ளாகையால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவைகளனைத்தையும் படித்து அவைகளிலிருந்து கூடியவரையில் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு சரித்திரத்தை எழுதுவது, கடினமாக விருந்தாலும் சாத்தியமாகவே உளது.

இந்தப் பிரகாரம் இந்தப் போரைப் பற்றி ஆங்கிலேயர்களால் எழுதப்பட்டுள்ள நாற்பது ஐம்பது சிறிதும் பெரிதுமான கிரந்தங்களைக் கவனத்துடன் படித்து, இந்த விஷயத்தில், இந்நியர் களால்தான் காட்டப்படக் கூடிய பக்தியுடன் சிந்தனை செய்து, ஒரு தேச பக்தர் மகராஷ்டிர பாஷையில் இந்த அரிய சரித்திரத்தை அவருடைய அரிய நடையில் எழுதி யிருக்கின்றார்.

நமது தேசத்தில் கல்வி புகட்டப்பட்டுவரும் தீய மார்க்கத்தினால் நமக்கு மகராஷ்டிர பாஷையில் கொஞ்சமேனும் பரிச்சய மில்லாததால் ஆதிக் கிரந்தத்தை மொழிபெயர்க்கச் சக்தி யற்றவர்க ளாக விருக்கிறோம். ஆனால், இந்த அற்புதமான சரித்திரம் நம்முடைய பாஷையில் எழுதப்பட வேண்டுமென்ற அவாவினால், மகராஷ்டிர பாஷையி லிருந்து இங்கிலீஷ் பாஷையில் மற்றொரு தேச மித்திரன் செய்துகொண்டு வருகிற பாஷாந்தரத்தி லிருந்து அவர்களுடைய அனுமதியின் பேரில், இந்த சரித்திரத்தை மொழிபெயர்க்க லானோம்.

நம்முடைய ஸ்வதேசிகள் இந்த சரித்திரத்தை எவ்விதமேனும் சீக்கிரத்தில் அறிந்துகொள்ள வேண்டுமென்கிற எண்ணத்துடனேயே, இதை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எழுதி, இந்த அரிய பத்திரிகையில் பிரசுரப்படுத்த வேண்டுமென்று தீர்மானித்தோம். இதைப் படிப்போர்களில் யாராவது ஒருவருக்காகிலும் இந்தப் போரை நடத்தின வீரர்களின் மீது பக்தியும், தஸ்தாவேஜுகளைச் சோதித்து அவர்களுடைய புராணத்தை சவிஸ்தாரமாக அறிய வேண்டுமென்கிற அவாவும், அந்த வீரர்களுடைய தேச பக்தியையும் சௌரியத்தையும் போன்ற தேசபக்தியும், சௌரியமும் எவ்வளவு கொஞ்சமேனும் உண்டாகும் பக்ஷத்தில், நம்முடைய பிரயாசம் ஸபலமாகிய தென்று மகிழ்ச்சியை யடைவோம்.

இங்ஙனம்
மொழிபெயர்த்தோன்

நூன்முகம்

சம்பவங்க ளெல்லாம் நடந்து ஐம்பது வருஷங்களாகி விட்டபடியாலும், இரண்டு கக்ஷிகளிலும் பிரமுகமாக நின்று போர் செய்தவர்கள் இறந்து போய் விட்டபடியாலும், மொத்தத்தில் கால தேச வர்த்தமானங்க ளெல்லாம் மாறிப் போய் விட்டபடியாலும் ஹிந்துஸ்தானத்தில் 1857-ம் வருஷ (சக 1780-ம் ஸு)த்தில் நடந்த சுவதந்திர யுத்தமானது இதிகாசத் தன்மையை யடைந்துவிட்டது. ஆகையால், அறிவை அற்புதமாகத் தூண்டக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூடியதும் அபூத பூர்வகமுமான இந்த சம்பவத்தை இதிகாச ரூபமாகச் செய்து வெளியிட்டிருக்கிறோம். அந்த யுத்தத்தின் வெளிப்படையாக வுள்ள பிரதான அமிசங்களை மாத்திரமல்ல, மறைந்தும் மறைக்கப்பட்டிருக்கிற மற்ற அமிசங்களையுங்கூட அகப்படக் கூடிய சகல ஆதாரங்களிலிருந்து தேற்றி எடுத்துரைத்திருக்கிறோம்.

இந்த கிரந்தத்தி லெழுதி யிருக்கிற விஷயங்களுக்கு ஆதாரமாக உள்ள கிரந்தங்களெல்லாம் இங்கிலீஷ் பாஷையில் எழுதப்பட்டுள்ளன. அவர்கள் தங்கள் கக்ஷியில் நடந்த விஷயங்களைப் பற்றி ஐயமற எழுதக் **கூடுமானாலும்,** எதிர்க் கக்ஷியின் சலனங்களைப் பற்றிய ரகசியமான விஷயங்களைப் பற்றி விஸ்தாரமாக அவர்கள் எழுதுவது அசாத்தியகரமாகவே இருக்கும். ஆகையால் ஊக்கமுள்ள இதிகாச வித்தியார்த்தி ஒருவன் முயற்சித்தால், இந்த புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற சரித்திரத்திலிருந்து வேறுபட்டதும் அதைவிட மேலானதுமான சரித்திர மொன்றைக் கண்டறிந்து எழுதக் கூடும்.

இப்பேர்ப்பட்ட ஒருவன் உத்தர ஹிந்துஸ்தானத்தில் போய்த் தேடும் பக்ஷத்தில், 57-ம் வருஷத்தில் யுத்தம் செய்தவர்களில் இன்னும் பிழைத்திருப்பவர்களிடத்திலிருந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்டோக்தியாகவும், யுத்தம் செய்தவர்களின் குடும்பங்களிலிருந்து இருக்கக்கூடிய தஸ்தவேஜுகளிலிருந்தும் இந்தியர்களுடைய கக்ஷியைச் சேகரிக்கக் கூடும். ஆனால், பரிதாபம்! இந்த சமயம் நெடுநாளைக்கு நிற்காது. அந்தப் போரை நடத்தின தலைமுறை முழுவதும் சீக்கிரம் மடிந்து போய்விடும்; அந்த வீரர்களின் தரிசனம்கூட அசாத்தியமாகி விடும். இந்த இதிகாசத்தில் நின்று வரும் குறையை இதைப் படிப்போர்களில் யாராவதொருவர் தீர்க்க முயற்சி செய்யத் தூண்டப்படுவர்ர்களாகில், இந்த கிரந்த கர்த்தாவினுடைய அற்பமான பிரயாசம் வீண்போகவில்லையென்று முற்றிலும் கொள்ளுவோம்.

இதிகாசத்தை அனாதரவு செய்யும் ஜனத்துக்குக் கீர்த்தி நிறைந்த எதிர்காலமில்லை. ஆனால், இதிலிருந்து ஜனங்கள் புராணத்துக்கு அடிமையாக விருக்க வேண்டுமென்பது எமது அபிப்பிராயமென்று கொள்ளத்தக்கதில்லை. இதிகாசந்தான் ஜனத்துக்கு அடிமையாக இருக்கவேண்டும்.

ஒருவிதமான சந்தர்ப்பத்தில் ஒரு ரீதியான நடவடிக்கை அவசியமாக இருந்தது என்கிற காரணத்தினால், மற்றொரு சந்தர்ப்பத்தில் அதே மாதிரியான நடவடிக்கையையே தொடருவது மௌட்டியமாகவும் பாவமாகவும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருக்கக்கூடும். சிவாஜி மகாராஜாவின் காலத்தில் மகமதியர்களுக்கு விரோதமாக ஹிந்துக்கள் போர் செய்தது காரணமாக, இப்பொழுது அவர்கள் அவ்விதம் செய்தால், அது மிகவும் பிழையும் பாவமு மாகும். கால பேதவியல்பினால் மனிதர்களின் சரியையும் சங்கற்பமும் சந்தர்ப்பங்களை யொட்டி மாறுதலை யடைய வேண்டிய தவசியம். ஆனால், இந்த நிபந்தனை இதிகாசத்தின் ஆவசியகத்தை மாற்றவில்லை. பிற்காலத்தில் தன்னைவிட அதிகமான சாமர்த்தியமுள்ள கிரந்தகர்த்தா ஒருவன் எழுந்து, மேன்மையும் காம்பீரியமும் நிறைந்த இந்த எழுச்சியைப் பற்றி வருணித்து இந்த கிரந்தத்தை மழுங்கும்படி செய்யட்டுமென்று இந்த கிரந்தகர்த்தா மனப்பூர்த்தியாய் விரும்புகிறார்.

முதல் பாகம்

எரிமலை உருமுதல்

ஒரு சின்ன வீடு கட்ட வேண்டுமென்றால்கூட, வீட்டின் பளுவைத் தாங்கப் போதுமானபடி உறுதியான அஸ்திவாரம் வேண்டியதென்று யாரும் ஒப்புக்கொள்ளுவார்கள். இஸ்பேட் கட்டுச் சீட்டினால் செய்யப்பட்ட வீட்டைத் தவிர, வேறு எந்த வீட்டிற்கும் அஸ்திவாரம் அவசியமென்று கற்றறிவில்லாதவன்கூட அறிவான். ஆகவே, காட்டாளுக்குக்கூட வியக்தமாக விருக்கும் இந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெளிப்படையான தருமத்தைத் தள்ளி, ராஜப் பிரளயமாகிற கம்பீரமும் விஸ்தாரமும் நிறைந்த கட்டடத்தை வருணிக்கும்போது, அதன் அஸ்திவாரத்தைப் பற்றி வியவகரிக்காமல் விடுகிறவனும், இந்த ராஜக் கிரந்தியாகிற இடமகன்ற தேவாலயம் கேவலம் ஒரு வைக்கோல் துரும்பைத்தான் ஆதாரமாகக் கொண்டதென்றும் ஸ்தாபிக்கிறவனும் ஒன்று முழு மூடனாகவிருக்கவேண்டும் அல்லது முற்றிலும் அயோக்கியனாக விருக்கவேண்டும். இந்த இரண்டு பட்டங்களிலும் எது அவனுக்கு ஏற்குமானாலும், இதிகாச கர்த்தாவின் புண்ணியமான வேலைக்கு அவன் நிச்சயமாகவே அனருகன்.

(இந்தியா : 7. 8. 1909—பக்.6)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு—2

அசுவினி குமார தத்தர் முதலியவர்களின் ஸ்திதி

[1908 டிசம்பரில் அசுவினி குமார தத்தர் முதலான ஒன்பது தேச பக்தர்களைப் பிரிட்டிஷ் அரசு கைது செய்து, சிறைப்படுத்திய சமயத்தில் 'இந்தியா'வில் தொடர்ந்தாற் போன்று கட்டுரைகள் பிரசுரமாகிய நிலையில், பார்லிமெண்டில் கேள்விகள் எழுந்தபோது, அவற்றிற்குப் பதில்கள் அளித்த பான்மையை விளக்கும் ஓர் அரிய கட்டுரையுடன்,

பண்டித ஸதீஷ் சந்திர சடார்ஜி, சியாம சுந்தர சக்கரவர்த்தி ஆகியவர்கள்பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களும் இங்குத் திரட்டித் தரப்பெற்றுள்ளன.

சென்ற சனிக்கிழமை (ஏப்ரல் 24) கல்கத்தாவிலிருந்து வந்த தந்தி யொன்றில், பெங்காளத்திலிருந்து கவர்ன்மெண்டாரால் விசாரணையின்றி அப்புறப்படுத்தப்பட்ட அசுவினி குமார தத்தர் முதலிய ஒன்பது தேசபக்தர்களில் சிலரைப்பற்றிப் பின்வரும் வர்த்தமானங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. பாபு அசுவினி குமார தத்தரை இரவுகளில் அவருடைய அறைக்குள் அடைத்துப் பூட்டிவிடுகிறார்கள். காலையில் பூட்டுத் திறக்கப்படுகிறது. அவருடைய ரோகம் மிகக் கொடிய நிலையிலே தானிருக்கிறது.

2. பரேலி (Bareiley)யிலிருந்து பாபு சுபோத சந்திர மல்லிக் தாம் சவுக்கியமா யிருப்பதாக எழுதி யிருக்கிறார்.

3. ஸஞ்ஜீவனி (பாபு கிருஷ்ண குமார மித்திரர் நடத்திக்கொண்டு வந்த பத்திரிகை) எழுதுகிறது: "கல்கத்தாவில் சில செல்வாக்குள்ள பெரிய மனிதர்கள் கூடிக் கையெழுத்திட்டு கிருஷ்ண குமார பாபுவை விடும்படி கவர்ன்மெண்டாருக்கு விண்ணப்பம் கொடுத்திருப்பதாகச் சில பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. அதைப்பற்றி நமக்கு யாதொரு தகவலும் தெரியாது."

கிருஷ்ண குமார பாபுவின் ஒரே மகனாகிய ஸுகுமாரமித்திரர் என்பவர் ஏப்ரல் 23-ம் தேதி யன்று ஆக்ராவுக்குப் புறப்பட்டுப் போனதாகத் தெரிகிறது. ஆக்ரா கோட்டையில் அடைபட்டிருக்கும் தமது தந்தையுடன் சந்தித்துப் பேசும்படி ஸுகுமார பாபுவுக்கு கவர்ன்மெண்டார் அனுமதி கொடுத்தார்கள். ஆனால், பிதாவும் புத்திரனும் சம்பாஷணை செய்யும் காலத்தில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஓர் ஸர்க்கார் அதிகாரி கூட இருக்கவேண்டு மென்று திட்டஞ் செய்தார்கள்.

4. பர்மாவிலே டாயெத் மாயோ ஜெயிலில் இருக்கும் பாபு சியாம ஸுந்தர சக்ரவர்த்தியைக் கண்டுவரும் பொருட்டாக அவர் சகோதரராகிய கிரிஜா ஸுந்தரர் என்பவர் ஸமீபத்தில் புறப்படுகிறார். இவர் சியாம பாபுவுடன் இவ்வளவு காலம்தான் பேசிக் கொண்டிருக்கலா மென்பதாக ஏதோ நிபந்தனை யேற்படுத்தி யிருக்கிறார்கள்.

* * *

அசுவினி குமாரர் முதலிய ஒன்பது பேரையும் பிரிடிஷ் கவர்ன்மென்டார் சொந்தச் சாமான் மூட்டைகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத் திற்குக் கொண்டு போவது போலக் கோர்ட்டா, ஸாக்ஷியா, விசாரணையா - யாதொரு தொல்லையு மில்லாமல் கடத்திய செய்கையிலுள்ள நியாயா நியாயங்களைப் பற்றி நாம் ஏற்கெனவே பலமுறை பேசி யிருக்கிறோம். ஆதலால், இங்கு அதை விவகரிக்கவில்லை. ஆயினும், நோயாளியும், விருத் தாப்பியருமாகிய அசுவினி குமாரரைப் பற்றிப் பார்லிமென்டில் மறுபடியும் நடந்த பிரஸ்தாபம் இங்கே குறிப்பிடுதற் குரியது.

மிஸ்டர் ஸ்காட் என்ற மெம்பரின் கேள்வி :

"சென்ற எட்டு வருஷங்களாக அசுவினி பாபு பலஹீனத்தை விளைக்கக்கூடிய ஓர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொடிய நோயால் வருந்துவதாகவும், தமது மனைவியின் போஷணை யில்லாவிட்டால் கிழவருக்குப் பிராணஹானி நேரிடுமென்றும், அந்த அம்மாள் ஸர்க்காருக்குக் கொடுத்த மனுவிலே சொல்லி யிருக்கும் விஷயம் இந்தியா மந்திரி யுடைய கவனத்துக்கு வந்ததா?"

மந்திரி புக்கானன் சொல்லிய மறுமொழி:

"அந்த மனுவின் பிரதி யொன்றை எனது சினேகிதராகிய மாக்கெர்னஸ் (என்ற மெம்பர்) நேற்று என்னிடம் கொடுத்தார். அந்த மனு இந்தியா கவர்ன்மெண்டாருக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அவர்கள் இவ் விஷயத்தில் தக்க கவனம் செலுத்துவார்க ளென்பதில் சந்தேக மில்லை."

மிஸ்டர் மாக்கெர்னஸ் என்ற மெம்பரின் கேள்வி :

"அசுவினி குமாரரைத் தமது வீட்டுக்குத் திரும்ப அனுப்பி விடுவதால் பெங்காளத்தின் தற்கால நிலைமையில் ஏதேனும் பிசகு நேரும்படியாக இருக்கிறதா?"

மந்திரி புக்கானன் மறுமொழி :

"அசுவினி குமாரரைக் கவர்ன்மெண்டார் கைதிப்படுத்திய சமயத்தில், அவரிருந்த ஜில்லாவின் நிலைமையைக் கவனித்து அவரைப் பிடித்து வைத்துவிட்டால் நாட்டு நிலை செம்மைப் படுமென்று நன்கு நிச்சயஞ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்து கொண்ட பிறகுதான் அவரைப் பிடித்தார்கள். அவ்விதமாகவே மற்றவர்களை யும் கைதிப்படுத்தினார்கள். கவர்ன்மென்டார் எண்ணியபடியே பெங்காளத்தில் இப்போது நாட்டின் நிலை சீர்ப்பட்டிருக்கின்றது.''

மிஸ்டர் மாக்கெர்னஸ் :

''இப்போது பெங்காளத்தில் பரிபூர்ண அமைதி யுண்டாய் விட்டதல்லவா?''

மிஸ்டர் புக்கானன் :

''இல்லை. நான் அதை ஒப்புக்கொள்ளவே மாட்டேன்.''

மேலே மந்திரி புக்கானன் அசுவினி பாபு விஷய மாகச் சொல்லி யிருக்கும் விஷயத்தை ''அமிருத பஜார்'' பத்திரிகை 'வெறும் பொய்க் கதை' என்றெழுதி யிருக்கிறது. அசுவினி குமார பாபுவை யும், அவரது நண்பராகிய ஸதீச சந்திர சட்டோ-பாத்தியாயரையும் பிடித்துச் சென்ற காலத்தில் பாக்கர்கஞ்ஜ் ஜில்லாவில் கலகம் நடந்ததா? ஜனங்கள் அதிகாரிகளை எதிர்த்தார்களா? என்ன குழப்பம் நடந்தது? யார் என்ன செய்தார்கள்? பாரிஸாலின் 'நிலை' எப்படி யிருந்தது? இப்போது என்ன சீர்ப் பட்டிருக்கிறது? இப்போதுகூட பாக்கர்கஞ்ஜ் ஜில்லாவில் பரிபூரண அமைதி யுண்டாய் விட்டதா இல்லையா? இல்லையாயின் எந்த ஊரில் ஜனங்கள் என்ன அநியாயங்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்?

பா.—33

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அசுவினி குமார பாபுவைப் பிடிக்கும்போது அவருடைய செல்வாக்கு நடக்கும் பிரதேசமாகிய பாக்கர்கஞ்ஜ் ஜில்லாவிலே யாதொரு குழப்பமும் கிடையாது. தமக்குத் தோன்றியபடி நிஷ்கண்டகத் தனமாக அரசு செலுத்துவோர், தமது பிழைகளைப் பிறர் எடுத்துக்காட்டும்போது ஏதேனும் பொய் முகாந்தரம் சொல்லித் தப்புவித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள்.

அப்பால், மிஸ்டர் ஸ்காட் என்பவர் "அசுவினி பாபுவுக்கு வீட்டில் நடந்தது போன்ற சிகிச்சை நடக்கிறதா?" என்று கேட்டதற்கு, மந்திரி புக்கானன் நீண்டதும் பொருளற்றதுமான ஏதோ மறுமொழி சொல்லிக் கடத்தி விட்டார். கேட்ட கேள்விக்கு நேருக்கு நேராக மறுமொழி சொல்லும் வழக்கம் பிழை செய்தோரிடத்தில் ஒருபோதுமே கிடையாது.

பார்லிமெண்டில் கேட்ட கேள்விகளுக்கு மிஸ்டர் புக்கானன் இப்படி அற்புத மறுமொழி சொல்லி வரவும், இங்கே ஒரு பெரிய வயோதிகர் — நல்ல ஞானி, சிறந்த பண்டிதர், ஜனங்களுக்குத் தந்தை போலிருந்து பாதுகாத்து வந்த மஹா உபகாரி— சிறைச்சாலையில் நிர்நிமித்தமாக அடைப்புண்டு நோயில் வருந்தி நாளுக்கு நாள் உயிர் குன்றிக் கொண்டிருக்கிறார். இதை ஏனென்று கேட்பாரில்லை. இவருக்கு யாதொரு கதியும் இல்லாமல் போய்விட்டது.

(இந்தியா : 1.5.1909 — பக். 3)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு : 3

பண்டிதர் ஸதீஷ் சந்திர சடர்ஜி

['அமிர்த பஜார்' பத்திரிகையில் பண்டிதர் ஸதீஷ் சந்திர சடர்ஜியின் பண்பு நலன்கள் பற்றி நிருபர் ஒருவர் எழுதியதை 'இந்தியா' பத்திரிகை மொழிபெயர்த்து அளித்த பகுதியே இங்கு தரப் பெறு கின்றது.]

ஒரு நிருபர் 'அமிர்த பஜார்' பத்திரிகைக்கு ஜனவரி மாதம் 21-ம் தேதி பாரிஸாலிலிருந்து எழுதுகிறார் :

பாரிஸாலிலிருந்து வெளியேற்றப்பட்ட இருவர்களில் ஸ்ரீமான் பாபு அச்வினி குமார தத்தரானவர் எல்லோருக்கும் நன்றாய்த் தெரிந்தவர். ஆனால், பண்டிதர் ஸ்ரீ ஸதீஷ் சந்திர சடர்ஜியானவர் பாரிஸாலுக்கு வெளியே அவ்வளவு நன்றாய்த் தெரிந்தவரல்ல. அவர் உள்ளத்திற்கு உடன்பட்டு நடக்கும் உன்னத குணமுடையவர். அவர் தேச நன்மையைக் கருதி ஏகாந்தமாய் சுயநலமின்றி ஊழியம் செய்து வந்தார். அவர் நடத்தையின் நேர்மையை நிரூபிக்க, அவர் தன்னுடைய சினேகிதரொருவருக்கு எழுதின கடிதமொன்றே போதும்.

அவர் எழுதுவதாவது : 'எங்களைத் திடீரென்று வெளியேற்றியது, உன் மனதைப் புண்ணாக்கிற்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று எனக்குத் தெரியும். ஆனால், அப்படியாகக் கூடாது. நாம் தெய்வத்தையே நம்பி யிருக்க வேண்டியது. நான் என் சரீரத்தைப் பற்றி லக்ஷியம் செய்கிறதில்லை யென்று உனக்குத் தெரியாதா? நான் கலாசாலையில் செய்துவந்த தொழிலி னின்றும், தர்ம ரக்ஷணை ஸேவையினின்றும் நீக்கி விடப்பட்டே னென்று உனக்கு வியஸனமா? நீ கைக்கொள்ளும் தொழில்களைக் கடமையாகச் செய்து வருகிறாய்; கடவுளுக்காகச் செய்கிற தில்லை. அது கடவுளின் காரியமா யிருந்தால், அவர் அதிக சக்தி யுள்ளவர்களின் வசத்தில் ஒப்புவிக் கட்டும்; இல்லாவிட்டால் அக் காரியம் கிலமடை யட்டும். அதைப் பற்றி எனக்கென்ன?

நான் பகவானுக்காகத் தொழில் புரிந்து வந்தேன். (நான் இப்படித் தொழில் செய்து வந்ததைப் பற்றி மமதை கொண்டிருக்கவில்லை; ஆனால், அதுவே எனக்கு அபீஷ்டமா யிருந்தது.) பகவானே நான் இப்பொழுதிருக்கும் நிலைமைக்கும் காரணம். அவர் கொடுத்த இந் நிலையை நான் ஆவலுடனே கொள்ளுகிறேன். நான் எப்பொழுதும் ஏகாந்தமா யிருக்க விரும்பினேன். இதோ பார், அதுதானே யுண்டாயிற்று. என்னிடத்தில் ராஜஸப் பிரகிருதியானது வளர்ந்தது; அது இனி குறைந்து போய்விட்டது. ஆகையால் நான் இந் நிலையில் இருப்பதைக் குறித்து மனங் களித்திருப்பாயாக. உன்னுடைய ஹிருதயம் சாந்தமடையக் கடவது.'

(இந்தியா : 6.2.1909 — பக். 9)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு : 4

ஸ்ரீமான் சியாம ஸுந்தர சக்ரவர்த்தி

[விபின சந்திர பாலர் இங்கிலாந்திலிருந்து பிரசுரம் செய்த "ஸ்வராஜ்" என்னும் ஆங்கிலப் பத்திரிகையில் சியாம சுந்தர சக்ரவர்த்தி அவர்களைப் பற்றி அரிய கட்டுரை ஒன்றை வரைந்திருந்தார். அதன் மொழி பெயர்ப்பு 31 7.1909 ஆம் தேதிய 'இந்தியா' இதழில் வெளியாகி யுள்ளது. நீண்டதோர் கட்டுரையிலிருந்து சில பகுதிகள் மட்டுமே இங்கு தொகுத்துத் தரப் பெறு கின்றன.]

ஸ்ரீயுத சியாம சுந்தர சக்ரவர்த்தி சென்ற வருஷம் டிஸம்பர் மாதத்தில் (1818-ம் ௵ III-வது ரெகுலேஷன் என்னும் லெட்டர்ஸ்-டி-காட்ச் செட் படி) இப் பாரத நாட்டினின்றும் நிர்வாஸம் (வெளியேற்றம்) செய்யப்பட்டார். இவர் இப்படி தேச நிர்வாஸம் செய்யப்படுமுன், இவ் வங்காளத் திற்கு வெளியில் உள்ள (இந்திய) நாடுகளில், இவர் பெயர் 'வந்தே மாதரம்' பத்திரிகையின் ஸம்பந்த மூலமாய் பிரஸித்தியாய் தெரிந்து வந்தது. ஸூரட் டில் தவறிப் போன காங்கிரஸுக்கு இவர் போயிருந் தார். தமது ஸாமான்ய ஜீவ்ய வழக்க நடவடிக்கை களும், டம்பம், கர்வமில்லாமையும், அதி ஸுலப குணமும், அவருடைய தேச பக்தியின் ஆழ்ந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஊற்றமும், இந்தியாவில் தேசபக்திக்காக நிற்கும் ஆசாரங்கள், கோட்பாடுகள், முன்னிலைகள் (லக்ஷியம்) இவைகளுக்காக மிதவாத தாக்ஷிண்ய மில்லாத மதிப்பும், அப்பொழுது அங்கு இந்தியா வின் நாலா பக்கங்களிலுமிருந்து வந்து கூடியிருந்த பெருந் தொகையான தேசபக்தர் கோஷ்டியின் பிரீதியையும், புகழ்ச்சியையும் இவருக்கு ஸம்பாதித் துக் கொடுத்தன. இப்பொழுது அவர் வங்காள பக்கத்தில் கிளர்ச்சியின் தலைவராகக் கருதப்பட் டிருப்பதற்கு முந்தியே இவர் மெத்த பெயர் படைத்த கல்வி யறிஞர்.

தன்னுடைய ஸொந்த மாகாணமாகிய வங்காளத்தில் ஸ்ரீ சியாம ஸுந்தரர் நெடுநாளாய் நல்ல ஸாமர்த்தியமான பத்திராசிரியர் என்றும், கிரந்த கர்த்தா என்றும் பிரஸித்தி பெற்று விளங் கினார். இவர் வங்காளி பாஷையில் ''பிரதி பாஷி'' என்னும் வாராந்தப் பத்திரிகை நடத்திவந்தார். அது தனது மேலான இலக்கிய விசேஷத்திற்கும், ஆழ்ந்த ஸாத்விகமான சாதுத் தன்மைக்கும், உயர்ந்த யுக்தி யோசனை புத்திமதிகளுக்கும் இணையற்ற தென வங்காளி வாரப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் முதன்மையாய் விளங்கி வந்தது; ஆனால், மற்ற இடங்களைப்போலவே, வங்காளத்திலும் ஸாமான்ய ஜனரஞ்ஜகமானதும் விஜாதீயமானதும் விசித்திரமானதுமான பத்திரிகை களின் நடையானது இலக்கிய இலக்கணங்களிலும் அறிவிலும் சிறந்த உயர் வகுப்புப் பத்திரிகை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விருத்தி யடைவதை நாசமாக்கிவிட்டது; ஆனதால் கொடிய வறுமையினால் வருத்தமுற்ற 'பிரதிபாஷி' நிறுத்தி விடப்பட்டது. அது ஆரம்பித்த நாள் முதல் முடிவு வரையில் வெகுவாய் அது வருமானம் குறைவினாலேயே கஷ்டப்பட்டு ஜீவித்து வந்தது.

காலஞ் சென்ற ஸ்ரீ பிர்மபாந்தவ உபாத்தியாய 'ஸந்தியா' பத்திரிகையை ஆரம்பித்தபோது, ஸ்ரீ சியாம ஸுந்தரர் அதன் உத்தியோகஸ்தராய்ச் சேர்ந்து, தமது இனிய, சுறுசுறுப்பான அழகு வாய்ந்த நடையில், அந்தப் பத்திரிகையானது அதன் ஜீவியத்தில் ஒரு சமயத்தில் அடைந்திருந்த உயர்ந்த நிலைக்கு இணையில்லாச் சிறப்புடன் இவரால் கொண்டு வரப்பட்டது.

பிறகு 'வந்தேமாதரம்' பத்திரிகையானது ஒரு கூட்டு முதல் வியாபாரமாய் ஏற்பாடாகி, சென்ற 1906-ம் வருஷக் கடைசியிலோ என்னமோ ஆரம்பிக்கப்பட்டபோது, ஸ்ரீ சியாம ஸுந்தரர் 'ஸந்தியா'வை விட்டு விட்டு இதன் பத்திராதிபர் உத்தியோகத்தில் சேர்ந்து உழைத்து வந்தார். இவர்தான் அந்தப் பத்திரிகைக்கு விசேஷமாய் மனமும் ஆத்மாவுமா யிருந்து ஊக்கத்துடன் பாடுபட்டு வந்தார்; சென்ற 1908-ம் ஹு நவம்பர் மாதத்தில் கவர்ன்மெண்டார் 'வந்தேமாதரம்' பத்திரிகையை அடக்கி விடுகிற வரையில் அதிலேயே வேலை பார்த்து வந்தார். அதன்பிறகு சில வாரத் திற் கெல்லாம் ஸ்ரீ சியாம ஸுந்தரரைப் பிடித்து,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பஹிரங்கமான விசாரணையாவது, குற்றம் சாட்டப் படலாவது இல்லாமலே 1818-ம் வருஷத்திய IIIவது ரெகுலேஷன் கீழ் தேச நிர்வாஸம் செய்துவிட்டார்கள்.

சென்ற நூற்றாண்டின் கடைசி பாதத்தில் ஹிந்து மதமானது மறுபடியும் உயிர்க்க ஆரம்பித்தது. நாடெங்கும் பரவிய இந்த செல்வாக்கில் விசேஷமாய் பயிற்றப்பட்டு வரும் தலைமுறையைச் சேர்ந்தவர் ஸ்ரீ சியாம ஸுந்தரர்....

இவர் ஒருபோதும் தன் தேச ஜனங்களின் மதாசாரக் கோட்பாடுகள் முதலான பூர்வீக ஸத் வழிகளை மீறி ஒருபொழுதும் நடந்ததில்லை; ஜனங்களுக்கு ஸ்வாபாவிகமாய் ஜன்ம பிராப்தமாய் உள்ள ஸ்வ ஆசார ஸம்ரக்ஷணையால் அதிக உருக்கமாய் உண்டாகும் ஆழ்ந்த தேச பக்தி நிரந்தரமாய் நிரம்பி யுள்ள வகுப்பைச் சேர்ந்தவர். உண்மையில், இவர் தன் காலத்திய லௌகிக யுக்தி நடவடிக்கைகளைக் கூடிய மட்டில் கைக்கொண்டே வந்திருக்கிறார்.

(இந்தியா : 31.7.1909—பக். 8)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு : 5

சியாமஜி கிருஷ்ண வர்மாவின் கடிதங்கள்

1. பாரிஸில் இந்தியர்களின் பொய்த் துராலோசனை

[பார்ரிசில் தங்கி யிருந்த இந்தியர் கூட்டம் ஒன்று சதித் திட்டங்கள் வகுத்தது போலவும், அவற்றிற்கும் ஷாமாஜி கிருஷ்ண வர்மாவுக்கும் தொடர்பு உண்டு என்பது போலவும் எழுதிய பத்திரிகைகளுக்கு அவர் மறுப்புரை எழுதிய கடிதம் "மார்னிங் போஸ்ட்' என்னும் பத்திரிகையில் *1-1-1909* இல் பிரசுரமாகியது. அதை 'இந்தியா' *30-1-1909* இதழில் (பக். *8*) மொழிபெயர்த்து வெளி யிட்டது.

அக் கடித விவரத்தை இங்கே காணலாம்.]

ஐயா,

டிஸம்பர் மாதம் 25௳ பிரசுரமான 'லெக்லேர்' பத்திரிகையில், அதன் பத்திராதிபர் என்னுடன் பேசிக் கொண்டிருந்தபொழுது, டிஸம்பர் மீ 22௳ பிரசுரமான 'மார்னிங் போஸ்ட்' பத்திரிகைக்கு அதன் கடிதக்காரன் எழுதி யிருந்த 'பாரிஸில் இந்தியர்களின் துராலோசனை', 'பாரிஸில் முக்கிய ஸபை', 'மிகவும் அபாயமான துராலோசனை' என்ற வியாஸங்களை எனக்குக் காண்பித்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மான்ஸியே எர்னெஸ்த் ஜீதேஸன்னும் அப் பத்திராதிபர் இரண்டொரு நாட்களுக்கு முந்தி தான் அதைக் கண்டித் தெழுதி யிருந்தார். அதுவுமன்றி லண்டனிலிருக்கும் என்னுடைய சிநேகிதர் பலர் அவ் விஷயத்தைப் பற்றி எனக் கெழுதினார்கள்.

மேலும், உமது பத்திரிகை, இங்கு இந்தியர்களே துராலோசனை செய்து வருவதாயும், அதில் நான் சேர்ந்திருப்பதாயும் எழுதி யிருக்கிறது. அன்றியும், பிரஞ்சு ஸர்க்கார் பிரான்ஸிலிருக்கும் இந்தியர்களின் பொருட்டு இரகசியப் போலீஸ் ஏற்படுத்தி யிருப்பதாகவும், சிலர், பாரிஸிலேயே இவர்களை வெடிகுண்டு வழக்குகளில் ஸம்பந்திக்கச் செய்து பிறகு பிடிக்க எத்தனித்ததாகவும் உமது சொந்தக் கடிதக்கார னெழுதி யிருக்கிறான். அல்லாமலும் டிசம்பர் மீ 23உ வெளியான 'மார்னிங் போஸ்ட்' பத்திரிகையில் மாண்ஸியோர பார்வி யென்பவன் தனக்குத் தெரிந்த வரை 'பாரிஸில் நடந்து வரும் துராலோசனைக் கெல்லாம் ஒரு ஹிந்து பத்திராதிபர்தான் காரணம்' என்று என்னைப் பற்றி மிகவும் கொடூரமாய் எழுதி யிருக்கிறான். ஆகையால், நான் இக் கடிதத்தை உமக் கெழுதலானேன்.

பாரிஸில் ஒரு துராலோசனை ஸபை யிருக்கிற தென்பதே முழுப்பொய். துராலோசனை யென்கிற பதத்துக்குப் பொருளென்ன வென்றால், இரண்டு பெயர்களோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களோ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒன்றுசேர்ந்து வேறொருவனுக்கு அபாயத்தை விளைக்க யோசிப்பதே யாம். இதற்குத் திருஷ்டாந்தம், பிரஜைகள் ஒன்றுசேர்ந்து தங்கள் அரசனுக்கு விரோதமாகத் துராலோசனை செய்வதே யாகும். நானும் என் சிநேகிதர்களும் ஸ்வதேசத்துக்காகப் பாடுபட்டு வரும் எங்களைப் பீடிக்கும் துன்பங்களைத் தொலைக்க வேலை செய்து வருவது எல்லோருக்கும் வெளியாய்த் தெரிந்த விஷயமே. 'இம்பீரியல் கெஜடியர்' என்னும் பத்திரிகைப்படி நானும் உமது கடிதக்காரன் குறித்திருக்கும் 'அமரிக்கையான ஹிந்து'வும் இந்தியாவில் பிறந்திருந்த போதிலும், 'பிரிடிஷ் இந்தியா சட்டப்படிக்கு இந்தியர்க ளன்று, அயலார்' என்றே சொல்லுகிறது.

உமது கடிதக்காரன், பாரிஸுக்கு வரும் ஆங்கிலேய கனவான்களை வெடிகுண்டு போட்டுக் கொல்ல யெத்தனிக்கிறோ மென்றது மிகவும் மதிகெட்ட தனம். ஜனங்களின் தராதரம் தெரியாத பயித்தியக்காரன் அல்லது விரோதி அல்லது வேவுத் தொழிலையே இயற்கையா யுடையவனே இக்குற்றத்தை இந்தியர்களின்மேல் சாட்டவேண்டும். ஆனால், அறிவு மிக்க தாங்கள் உண்மை யென்பதே லவலேசமும் கிடையாத இதை நம்பினதும், இதனுண்மையை முதலில் ஆராயாமல் மிகவும் சீர்பெற்ற உமது பத்திரிகையில் பிரசுரித்ததும் மிகவும் வியக்கத்தக்கதே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இராஜாங்க விஷயங்களுக்காகப் பாடுபடுபவர்களுக் கொரு அடைக்கலத்தைத் தந்து வரும் வெளி தேசத்தில் வெடிகுண்டுகளைப் போடும்படியான அவ்வளவு மனிதத் தன்மை யிழிந்தவர்களாயும், மூடர்களாயும் புதுக் கக்ஷியார் உண்மையா யிருக்கவே மாட்டார்கள். நன்றியறிவில்லா விட்டாலும், சுயநலமாவது கருதுவார்கள். நாகரீகத்துக்கும் அரசாக்ஷி முறைமைக்கும் விரோதமாகத் தங்களுக்கு அடைக்கலம் தந்து வருபவர்களுக்கு விரோதமான செயல்களைச் செய்து, அவர்களுக்குக் கோபத்தை மூட்டுதலானது, தங்களுக்கு மிகுந்த கெடுதியை யுண்டாக்குமென்று அவர்கள் அறிவார்கள்.

'தானுட்கார்ந்திருக்கும் கிளையை வெட்டுபவன் மூடன்' என்கிற பழமொழி அவர்களெல்லோருக்கும் நன்றாய்த் தெரியும். பிரிடிஷ் இந்தியாவில் அராஜகக் கொலைகள், கொலைகளல்ல வென்று சிலர் உறுதியாய்ச் சொல்லலாம். ஆனால், பிரிடிஷ் இராஜாங்கத்துக்கு, வெளி நாடாகிய பிரான்ஸ் இராஜாங்கத்தில் ஒரு இந்தியன் அப்படிச் செய்தானே யாகில், அது கொலையே யாகும்.

பாரிஸிலிருக்கும் புதுக்கக்ஷியார்கள் அப்படி வெடிகுண்டு போட்டு யாரையும் பயமுறுத்தக் கனவிலும் எண்ணவில்லை யென்று நான் சொல்லுவேன். ஆனால், யாராவதொரு மூட இந்தியனைக் கொண்டு பாரிஸில் ஒரு வெடி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குண்டைப் போடுவித்து, உமது கடிதக்காரன் போக்கிரித்தனமாய் சூசிப்பதைப்போல் எங்களில் ஒருவரையாவது பிரெஞ்சு கவர்ன்மென்டார் வெளியேற்றும்படி, பிரிடிஷ் கவர்ன்மென்டு வேலைக்காரர்கள் செய்வார்களோ என்று பயமா யிருக்கிறது.

புதுக்கக்ஷியார்களை விசாரிக்காமலே கொலைக் குற்றங்களுக் குட்படுத்துகிறதையும், அவர்களை நேரிலாவது, அவர்கள் வக்கீல்கள் மூலமாயாவது விசாரியாமலும், குறுக்கு விசாரணை செய்யாமலும் இரகஸியமாய் ஸாக்ஷி விசாரணை செய்து, அவர்களை வெளியேற்றுவதையும் பார்த்தால், அமெரிக்காவின் முக்கிய பிரதிநிதியாகிய ஜார்ஜ் வாஷிங்டன் 'ஸ்வதந்திரத்துக்காக ஒவ்வொருவனும் ஆயுதப் பிரயோகம் செய்யச் சிறிதும் பின் வாங்கவாவது, யோசிக்கவாவது கூடாது' என்று சொன்னதை நான் திரும்பச் சொல்லத் துணிகிறேன். ஆனால், பிரிடிஷ் இந்தியாவில் ஆயுதத்தை முதலிலேயே உபயோகிக்கக் கூடாதென்று மிகவும் வணக்கமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

உமது 'மார்னிங் போஸ்ட்' பத்திரிகையில் இக் கடிதத்தைக் கூடிய சீக்கிரத்தில் பிரசுரிப்பீரென்று நம்புகிறேன்.

இப்படிக்கு
தங்கள் விதேயன்
சியாமஜி கிருஷ்ண வர்மா

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. கிருஷ்ண வர்மாவின் மறுப்பு ஓர் விசித்திரமான கடிதம்

[பாரிஸ் நகரத்தில் வாழ்ந்துகொண்டு ஆங்கிலேய பிரபுக்களைக் கொல்ல இந்தியர் கூட்டம் சதி செய்கின்றது என்றும், கர்ஸன் வில்லி கொலைக்கும், கிருஷ்ண வர்மாவுக்கும் தொடர்பு உண்டு என்றும் எழுதியபோது, அதை மறுத்து, ''டெய்லி எக்ஸ்பிரஸ்'' (Daily Express) பத்திரிகைக்குக் கிருஷ்ணவர்மா கடிதம் எழுதி, அதைப் பிரசுரம் செய்யுமாறு எழுதி யிருந்தார். கிருஷ்ண வர்மாவின் கடிதத்தை 'டெய்லி எக்ஸ்பிரஸ்' பிரசுரம் செய் திருந்தது. அக் கடிதத்தை மொழிபெயர்த்து 2. 10. 1909 ஆம் தேதிய 'இந்தியா' இதழ் (பக்.10) வெளியிட்டிருந்தது. அக் கடித விவரத்தை இனிக் காண்போம்.]

ஐயா,

ஆகஸ்டு மாதம் 21உ ''கிருஷ்ண வர்மாவின் வஞ்சகம்'' என்ற தலைப்பெயரின் கீழும், ''கலகக் காரன்'' அல்லது ''கலவர முண்டாக்குவோன்'', ''ஓர் கற்பிதமான கடிதம்'', ''இக் கலகக்காரனால் திங்கரா எப்படி உபயோகப்படுத்தப்பட்டார்'' எனப்பட்ட உப முகவுரைகளின் கீழ் அச்சிட்ட சில சங்கதிகள் என் ஞாபகத்திற்கு வந்தன. நீர் உமது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பத்திரிகையில் அடியிற் கண்டபடி ஆரம்பித்து இருக்கிறீர்கள். "ஸர் கர்ஸன் வில்லியையும் டாக்டர் லால்காகாவையும் கொன்ற திங்கரா (Dingara) வினால் அப்படிச் சொல்லப்பட்ட கடிதத்தின் ஓர் பதிவு நமக்கு வரப்பெற்றோம். இந்தப் பத்திரம் திங்கராவினால் எழுதப்பட்டதல்ல. பிரான்ஸின் முக்கியப் பட்டணமான பாரிஸில் (Paris) வசிக்கும் பேர் பெற்ற கலகக்காரனான கிருஷ்ணவர்மா வினால் எழுதப்பட்டுள்ளது. கிருஷ்ணவர்மா தம் மிடத்தில் இருந்த முதல் பதிவிலிருந்து இப் பத்திரத்தை இப்போது வெளியிட்டிருக்கிறார். திங்கரா தன் வாழ்நாளில் ஒருபோதும் அம் மாதிரி ஒன்றும் எழுதாமலிருந்த போதிலும் தன் சொந்த காரியத்திற்காக திங்கரா எழுதினார் என்ற கற்பனையைக் காப்பாற்றுகிறார். ஸர் கர்ஸன் வில்லியைக் கொல்ல வேணுமென்ற எண்ணம் திங்கராவுக்கு இருந்தது என்பது எனக்கு முன்னமே தெரியு"மென்று நீர் சொல்லுவதான மேற்கண்ட வினா ஸ்பஷ்டமாய் எடுத்துக் காட்டுகிறது. ஆனது பற்றி, நானும் அக் கிருத்தியத்திற்கு உட்பட்டவன் (உடந்தையா யிருந்தவன்) என்று நீர் எடுத்துக் காட்டுகிறீர்.

சூலை மாசம் 17-ம் தேதி டைம்ஸ் (Times) பத்திரிகையில் நான் பகிரங்கமாக இவ் விஷயத்தை மறுத்து எழுதியிருந்ததற்கும், அதையே தங்களால் சூலை மாதம் 19-ம் தேதி பிரசுரித்திருந்ததற்கும் கடைசியாய் வெளிவந்த 'இந்தியன் ஸோஷியால-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஜிஸ்ட்'' பத்திரிகையிலிருந்து சிலவற்றை அப்படியே எடுத்து 21-ம் தேதி பத்திரிகையில் (Daily Express) அச்சிட்டதற்கும், இவைகளுக்கெல்லாம் நேர் விரோதமாக ஸர் கர்ஸன் வில்லிக் கொலையில் நான் சம்பந்தப்பட்டவன் என்று குற்றம் சாட்டுவது மிகவும் ஆச்சரியகரமானது. நான் எழுதினேன் என்று நீர் உறுதியாய் சொல்லும், திங்கராவின் முதல் பதிவுக்கும் எனக்கும் எழுதினதிலாவது, பிரசுரம் செய்ததிலாவது சம்பந்தமிருப்பதாக எள்ளள வேனும் ருஜு காட்ட உம்மால் முடியுமா? பாரீஸில் இருந்து வெளியாகி இங்கிலீஷ் முதலிய அன்னிய ராஜாங்கங்களுக்குச் செல்லும் இந்தியா விஷயமாய் ராஜநிந்தனை என்று சொல்லப்பட்ட ஒவ்வொரு பத்திரிகைக்கும், நான்தான் காரணபூதன் என்று சொல்வது மடத்தனம். நிற்க.

'டெய்லி எக்ஸ்பிரஸ்' பத்திரிகை ஆபீசிலிருந்து திங்கராவின் பத்திரம் பிறந்ததென்று சொல்லுவது எவ்வளவு மடத்தனமோ அதை நான் உண்டு பண்ணினேன் என்று சொல்லுவதும் அவ்வளவு முட்டாள் தனம். மேலும் நீர் அப் பத்திரத்தின் மூலாதாரத்தினால் உண்டாகும் கௌரவத்தையும், மகிமையையும் அவனுக்குக் கொடுக்காமல் மறுத்துச் சொல்லும் பக்ஷத்தில் நீர், நமது ஹிந்து தேச நிமித்தம் பிராணனைக் கொடுத்த தேசபக்தன் பேரில் வீணாய் பழி சுமத்துகிறீர். (நிந்திக்கிறீர்.) ஆனால், அக் கௌரவமும் மகிமையும் அவனுக்கே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேர்ந்ததே யல்லாமல் மற்றொருவருக்கும் கிடையாது. அதுவும் அன்றியும் ஆஸ்டெண்டிலிருந்து (Astend) முன் ஜாக்கிரதையாய் இருக்கும்படி எனக்கு வந்த எச்சரிக்கைக் கடித விஷயமாய் குற்றம் சொல்லுகிறீர். அதுவும் பிசகு. ஏனெனில், அக்கடிதம் எழுதினவரின் மேல் விலாசமும், பெயரும், அது புறப்பட்ட விடத்தும், என்னிடம் வந்த தேதியுள்ள தபால் முத்திரை குத்திய உறையும் என் ஸ்வாதீனத்தி லிருக்கிறது. மேற்கண்டவைகளை யெல்லாம் ஸரியான காலம் வந்தபோது காட்டச் சக்தியுள்ளவனா யிருக்கிறேன். 'துர்ப்பாக்கிய முள்ள கிருஷ்ண வர்மாவுக்கோ வென்றால், இந்தியக் கலகக்காரர்கள் அவருக்குச் செல்வாக்கிருப்பதாக இப்பொழுது எண்ணுவதில்லை என்றும், மேலும், ஆனால், அதற்கு விரோதமாக, அவரை வேவுகாரரைப்போல் நினைக்க ஆரம்பித்திருக்கிறார்கள்' — இத்தகைய குற்றக் குறிப்புகள் உமது 'டெய்லி எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் எழுதி யுள்ளது.

நான் தங்களை ஒரே சுலபமான கேள்வி கேட்கிறேன். அதாவது என்னை வேவுகாரனாக நினைக்கிறீர் அல்லவா? அப்படி எண்ணும் பக்ஷத்தில், விவகாரத்தில் நான் இங்கிலாந்திற்கு நண்பன் ஆகிறேன். பிறகு, தடையில்லாமல் உமக்கும்கூட நண்பன்தான்.

ஆகையால், நீர் என்னிடத்தில் சண்டை போடக் காரண மில்லை. அப்படி யிருக்கையில்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நியாயத்தையும் ஒழுங்கையும் ஒட்டி நீர் ஏன் தூஷாரோபணம் பண்ணுகிறீர் என்று நான் உம்மைக் கேட்கிறேன். மேற்கண்ட விஷயத்தைக் கூடிய சீக்கிரத்தில் உமது பத்திரிகையில் பிரசுரிக்கும் ஒழுங்குடையவராவீர் என்று நான் நம்புகிறேன்.

இப்படிக்கு
விசுவாசமுள்ள,
சியாமஜி கிருஷ்ண வர்மா
இந்தியன் ஸோஷியாலஜிஸ்ட்
பத்திராதிபர்
10, ஆவின்யூ இங்கிலீஷ் பாறி
பாரீஸ்
26-8-1909

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு : 6

ஸ்ரீமான் சியாமாஜி கிருஷ்ண வர்மா

இவர் 1857-ம் வருஷத்தில் பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த கச்சு தேசத்தில் பிறந்தவர். இவர் பிறந்த குலம் பணியா ஜாதி. இவர் பிற்பாடு தாம் க்ஷத்திரிய குலத்தில் ஜனித்த தாய் இருக்க வேண்டுமென்ற ஆசையுடன், தமது பெயர் கடைசியில் இவர், 'வர்மா' என்ற பதத்தைச் சேர்த்துக் கொண்டாராம். இவர் பிதா 1873-ம் வருஷம் காலம் சென்று விட்டார். பிறகு இவர் பம்பாய்க்கு வந்து தாமும் படித்துக்கொண்டு சில பிள்ளைகளுக்கும் பாடம் சொல்லி வைத்து ஜீவித்து வந்தார். இவருடைய புத்தி கூர்மையையும், அறிவின் பெருமையையும் கண்டு ஓர் தனிகன் தன் மகளை இவருக்குக் கல்யாணம் செய்து கொடுத்தார். மனைவியும் திரண்ட ஸ்திரீதனத்துடன் இவரிடம் வந்தாள்.

இவருக்கு ஆங்கிலேய பாஷையில் விசேஷப் பயிற்சி உண்டாய்விட்டது. ஸம்ஸ்கிருதம் நன்றாய்ப் படித்தறிந்தார். பிறகு தியாஸபி எனும் கலம்பக மத சங்கத்தில் சிறிது காலம் சேர்ந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உழைத்து வந்தார். பிறகு ஆர்ய மத ஸ்தாபக மூல புருஷரான ஸ்ரீமத் தயானந்தாசாரியரிடம் தீக்ஷை பெற்று ஸம்ஸ்கிருதத்தில் விசேஷ பயிற்சி செய்தார்.

1879-ம் வருஷத்தில் இங்கிலாந்திற்குச் சென்று பாலியால் காலேஜில் படிப்புச் சொல்லிக்கொடுத்துக் கொண்டே B.A. பரீக்ஷையில் தேறினார். *1884*-ம் வருஷத்தில் இங்கிலாந்திலுள்ள 'கிரேஸ் இன்' என்னும் இன்னாடெம்பிலில் சேர்ந்து பாரிஸ்டரானார்.

பிறகு இந்தியாவுக்கு வந்து ரட்லம் என்னும் ஸ்வதேச சிற்றரசரிடம் திவான் பதவியில் அமர்ந்தார். *3-4* வருஷம் வேலை பார்த்தார். அவ்விடத்தில் பிரிடிஷ் ரெஸிடெண்டுக்கும் இவருக்கும் ஸரிப்படவில்லை. ஸ்ரீ சியாமாஜீ அந்த வேலையை ராஜிநாமா கொடுத்து விட்டார். பிற்பாடு ஆஜ்மீர் நகரம் சென்று பாரிஸ்டர் வேலை பார்த்து வந்தார். அங்கு போதுமான கக்ஷிக்காரர்கள் இல்லாதபடியால் ஏதாவது வர்த்தக வியாபாரம் செய்ய எண்ணி *1893*-ம் வருஷம் உதயபுரம் வந்தார். அவ்விடத்தில் இவருக்குக் கவுன்ஸில் மெம்பர் வேலை நியமனங் கிடைத்தது. பிறகு தமது அபிப்பிராயத்திற்கும் கவுன்ஸிலர்கள் அபிப்பிராயத்திற்கும் வித்தியாச முண்டாயிற்று. உடனே ராஜீனாமா கொடுத்து விட்டு ஜூன்காட் ஸமஸ்தானத்திற்குப் போய் மந்திரி பதவியை வஹித்தார். பிரிடிஷ் ஏஜண்டுக்கும் இவருக்கும் ஸரிப்படவில்லை. அதையும் தொலைத்துப் போட்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1897-ம் வருஷம் தமது பத்னியுடன் இங்கிலாந்திற்குப் போய்விட்டார்.

லண்டன் நகரத்திற்கு வரும் இந்திய மாணவர்களுடைய ஸஹாயத்திற்காக ஹைகோர்ட் தெருவில் "இந்தியா ஹவுஸ்" என்ற ஓர் பெரிய திவ்யமான கட்டடம் கட்டி யிருக்கிறார். அவ்விடத்தில் அவர் 'இந்தியன் ஸோஷியாலஜிஸ்டு' என்னும் ஒரு மாதாந்தப் பத்திரிகையை இந்தியாவின் மீட்சிக் கென்று சொல்லி நடத்தி வந்தார். இவருக்கு அவ் விடத்தில் அதிகாரிகளால் வீண் தொந்தரவு உண்டாகும்போல் தோன்றிற்று. உடனே 'ஸ்வதந்திரம், ஸமத்துவம்,ஸஹோதரத்வம்' எனும் தத்வாய ஸித்தாந்த ஸ்தாபனம் செய்து அனுஷ்டிக்கப்பட்டு வரும் நமது பிரான்ஸ் தேசத்துத் தலைமை நகரான பாரிஸுக்குப் போய்விட்டார். அவரைப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் பிடித்துக் கொடுக்க வேண்டுமென்றதற்குப் பிரெஞ்சு கவர்ன்மெண்டார் மறுத்து விட்டதாயும் தெரிய வருகிறது.

பாரீஸிலிருந்து கொண்டே இவர் இங்கிலாந்தில் "இந்தியன் ஸோஷியாலஜிஸ்டு" பத்திரிகையை நடத்திவந்தார். சென்ற ஜூலை மாதத்தில் அதை அச்சிட்ட மிஸ்டர் ஹார்ஸிலி என்பவருக்கு 4 மாதத் தண்டனை லண்டனில் விதிக்கப்பட்டது. ஆகஸ்டு மாதத்திய பிரதியை அச்சிட்டுப் பிரசுரம் செய்த மிஸ்டர். G. ஆல்டிரெட் என்னும் 22 வயதுள்ள சிறுவருக்கு ஒரு வருஷத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தண்டனை சென்ற வாரத்திற்கு முன்புதான் விதிக்கப்பட்டது.

லண்டன் நகரத்தில் ஸர். கர்சன் வில்லியை ஸ்ரீமான் மதன்லால் திங்கரா கொலை செய்தது ஸ்ரீ சியாமாஜியின் தூண்டுதலால்தான் பிரேரேபிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று இங்கிலாந்தில் பிரஸ்தாபம் வந்ததாய்க் கேள்விப் பட்டதும் இவர், பின்வருமாறு பதில் எழுதினார்:

"கொலை விருத்தாந்தம் எனக்குத் தெரியவே தெரியாது. ஸர் வில்லியம் கர்ஸன் வைலியை எனக்கு நன்றாய்த் தெரியும். அவர் உதயபுரத்தில் ரெஸிடெண்டராய் இருக்கும்போதுதான் நான் அவ்விடத்தில் மந்திரியா யிருந்தது. நாங்களிருவரும் அத்யந்த ஸ்நேகிதர்கள். எங்களிருவருக்கும் இடையில் அநேக ஸ்நேகப் பான்மையான ஸமாசாரங்கள் நிகழ்ந்திருக்கின்றன. நான் இங்கிலாந்துக்கு வந்த பிறகும் அதை விட்டுப் பாரீஸுக்கு வந்த பிறகும் எங்கள் நேசம் குறையவில்லை. எனக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம் "Dear Mr. Shyamaji" (என் பிரியமுள்ள சியாமாஜி) என்று அவர் எழுதுவது வழக்கம். நானும் "Dear Mr. Wylle" (என் பிரியமுள்ள வைலி) என்று எழுதுவது வழக்கம்.

மதன்லாலை நான் ஒருபொழுதும் பார்த்ததே யில்லை. எதற்காக அவன் கொலை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்தானோ எனக்குத் தெரியாது. அவன் தன் சொந்தக் காரணங்களுக்காகக் கொன்றிருந் தால் பாதகந்தான். அது ராஜரீகப் பொது நலக் காரியத்திற்காகக் கொன்றிருந்தால் அவன் தேசத் திருத்தொண்டனாகக் கொண்டாடப் படுவான்''

என்று லண்டன் டைம்ஸுக்கு எழுதித் தெரிவித்திருக்கிறார்.

இவர் தமது 'இந்தியா ஹவு'ஸில் ஸமீபத்தில் இந்தியாவில் தூக்கினிலிறந்த ஸ்ரீயுதர்களான தினேச சந்திர ராய், குதிராம் போஸ், ஸத்யேந்திர நாத் வாஸு, கன்னையலால் தத் இவர்களுக்காக நான்கு ஞாபகச் சின்ன ஸலவைக் கற்கள் நிறுத்தி, நான்கு ஸ்காலர்ஷிப்புகள் (உபகாரச் சம்பளங்கள்) முறையே ஆயிரம், ஆயிரம், ஆயிரம், ஐயாயிரம் பவுன், இங்கிலாந்தில் படிக்கப் போகும் இந்தியச் சிறுவர்களுக்கு ஏற்பாடு செய்திருக்கிறா ரென்று இங்கிலீஷ் தேச பத்திரிகைகளால் தெரிய வருகிறது. மிஸ். ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் ஸ்காலர்ஷிப்பு, தேச சரித்திர ஸ்காலர்ஷிப், பாரிஸ்டர் ஸ்காலர்ஷிப் ஆக மூன்று ஸ்காலர்ஷிப்புகளும் முன்னமே ஏற்படுத்தி யிருக்கிறாராம். இவற்றைப் பற்றி வீணாய் ஆங்கிலேயர்களும் அவர்கள் பத்திரிகைகளும் பயப் படுகின்றன. உண்மை ஸர்வ ஞானியான கடவுளுக்கே தெரியும்.

(இந்தியா : 25.9.1909—பக்.5-6)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு : 7

சென்னை ஸ்ரீமான் எதிராஜ் சுரேந்திரநாத் ஆரியரின் வழக்கைப் பற்றிய சில குறிப்புகள்

[''சுதேசிப் பிரசங்கி''யாகிய எதிராஜ் சுரேந்திர நாத் ஆரியா அவர்களுக்குச் சிறைச்சாலையில் செய்த பல தீமைகளால் அவர் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்தார். அதற்காக அவருக்கு மேலும் நான்கு மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

'எதிராஜ் சுரேந்திரநாத் ஆர்யா கேஸ் விஷய மாகக் கோர்ட்டில் நடந்த விசாரணையின் விவரங் களை மற்றோரிடத்தில் பிரசுரம் செய்திருக்கிறோம்' என்று 'புதிய கிளர்ச்சி' என்னும் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டு இருப்பினும், இதழ் முழுவதும் பரிசோதித்த அளவில், வழக்கு விவரங்களைக் காண முடியவில்லை.

ஆனால், 24.7.1909 ஆம் தேதிய 'இந்தியா' பத்திரிகையில், சில குறிப்புக்களைக் காண முடிந்தது. அ பெ. பத்திரிகா என்று செய்தியின் இறுதியில் தரப் பெற்றுள்ளதால், பிற பத்திரிகையில் வெளியான செய்தியை மொழிபெயர்த்து அளித்திருப்பதாகக் கொள்ளலாம்.

இனி, கட்டுரைக் குறிப்புக்களைப் பார்ப்போம்.:]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எதிராஜானவர் விசாரணை காலத்தில் மாஜிஸ்டிரேட்டின் முன்பாகத் தான் தற்கொலை புரிய எண்ணவில்லையென்றும், தான் தன் கஷ்டங்களை மாஜிஸ்டிரேட்டின் முன் வெளியிட இதுவோர் உபாய ஏதுவா யிருக்குமென்று அப்படிச் செய்யப் பட்ட தென்றும் சொன்னார்

இவர் கோர்ட்டில் சொல்லி கஷ்டங்களைக் கேட்டுக் கல் நெஞ்சத்தவ ம் கரைந்துருகுவர். ஆனால், மாஜிஸ்ரேட்டானவர் அதைக் கவனிக்கவே யில்லை. தற்கொலை புரியத் துணிந்த சிறுவரின் பேச்சை வெகு அலக்ஷியமாகத் தள்ளி விட்டு, பின்வருமாறு தீர்மானித்தார் :

"எதிராஜானவர் ஜெயிலில் மிதமிஞ்சின வேலை கொடுப்பதாக பிராது செய்தார். ஆனால், அவருடைய சாக்ஷிகள் எனக்குத் திருப்தியாகும்படி அதை நிரூபிக்கவில்லை. தன்னைக் கேலி செய்ததாகவும், சில இங்கிலீஷ் வார்டர்கள் தன்னைப் பரிகாசம் செய்வதாக வும் சொன்னார். இதைப்பற்றி ஜெயிலர் வாக்குமூலத்தில் எதிராஜர் 'வந்தே மாதர' மென்று சொல்வது வழக்கமென்றும், இரண்டு இங்கிலீஷ் வார்டர்கள் பரிகாசம் செய்தார்க ளென்றும் ஒப்புக் கொண்டிருக்கிறார். அன்றி யும், எதிராஜரிருந்த அறைக்குள் சென்று அவர் கழுத்தைச் சுற்றியிருந்த கயிற்றை யறுத்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கைதி வார்டர் சாக்ஷி சொன்னபொழுது "நான் உடனே யோடி பக்கிரி வந்தே மாதரம் கைதியைப் பிடித்திருப்பதைப் பார்த்தேன்" என்று சொன்னான். மற்றொரு சாக்ஷி எதிராஜர் ஜெயிலில் 'வந்தே மாதர' மென்று கூப்பிடப் படுகிறார். ஜெயிலில் கைதிகள் ஒருவருக் கொருவர் கேலிப் பெயர்களால் கூப்பிட்டுக் கொள்வதில் யாதொரு சந்தேகமு மில்லை. ஆனால், அப் பெயர்களால் வேலைக்காரர்கள் கூப்பிடுவது பிசகு. ஓர் ஐரோப்பிய வார்டர் இவரைத் தொந்திரவு செய்ததாகத் தண்டிக்கப் பட்டதாகத் தெரிகிறது என்றான்.

நானபிஷியல் விஸிடரொருவர் தன்னுடன் எதிராஜர் அச்சாபீஸில் மிதமிஞ்சிய வேலை செய்விக்கிறார்க ளென்று முறையிட்டுக் கொண்டதாகச் சாக்ஷியம் சொல்லியிருக்கிறார். இவர் அதைக் குறித்து விசாரிக்காமல் பிரஸ் போர்மனோடு இவரைத் தொந்திரவு செய்ய வேண்டா மென்று சொன்னாராம். மேலும் எதிராஜர் ஒரு வார்டர் தன்னைக் கேலி செய்த தாகச் சொன்னதற்கு, இந்த விஸிடர் அந்த வார்டரோடு அப்படி செய்யக் கூடாது என்ற தற்கு வார்டர் தான் அப்படி செய்யவில்லை யென்றானாம். இந்த விஸிடர் அப்பொழுதே தீர விசாரியாதது மிகவும் வியசனிக்கத் தக்கது."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எந்த ஜெயில் சூப்ரின்டெண்டு மீது முறையிட்டாரோ அவரையும் ஜெயிலராகிய டேவிஸ்ஸையும் சாக்ஷிகளாக விசாரித்ததில், ஜெயிலில் மருந்து கொடுக்கும் ப்ரெளன் என்பவர் ஏதோ நோய்க்காக ஒரு துணி கட்டும்படி சொன்னதாகவும், அதைக் கட்டாம லிருந்தபடியால் எதிராஜர் கவர்னர் வந்த பொழுது முறையிட்டுக் கொண்டதாகவும் தெரிய வருகிறது. இதற்குப் பின்னும் துணி இவருக்குக் கட்டப்பட்டதோ இல்லையோ தெரியாது. இதனால் எதிராஜர் விஷயத்தில் அவர்கள் எப்படி நடந்து கொண்டார்க ளென்பது நன்கு விளங்குகிறது. டாக்டர் ஒன்றைக் கொடுக்கச் சொல்ல அதை அவர்கள் கொடுக்காம லிருந்ததனால் எதிராஜர் கவர்னரோடு முறையிட வேண்டியதாயிற்று.

நானபிஷியல் விஸிடரின் நடத்தையும் புதிதாகத்தா னிருக்கிறது. எதிராஜர் ஒன்று வேண்டுமென்றால், அதை லக்ஷியம் செய்யாம லிருப்பதற்காகவா அங்கு வருவது? கைதிகளின் குறைகளைத் தீர விசாரிக்காத பக்ஷத்தில் இவர் அங்கு செல்லும் பயன் யாது? வீட்டிலேயே யிருந்து விடலாமல்லவா?

மாஜிஸ்டிரேட் கைதிகளின் குறைகளை விஸிடர் கேட்காதது தப்பு என்று சொல்லுகிறார். இவர் முதலில் தான் செய்ய வேண்டியதைச் செய்தாரா? ஓர் இங்கிலீஷ் வார்டர் எதிராஜரைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கேலி செய்ததை வாஸ்தவமென்று ஒப்புக்கொண்டு, கைதிகளுக்குள் கேலி செய்து கொள்வது வழக்க மென்று சும்மாவிருந்து விட்டிருக்கிறார்.

ஜெயிலர் டேவிஸ் தன் வாக்குமூலத்தில், "நிரூபிக்க முடியாத விஷயங்களைச் சொன்னால், **நாம்** கைதிகளைத் தண்டிப்பதுண்டு" என்று சொல்லி யிருக்கிறார். இந்தப் பெருத்த "**நாம்**" என்பது யாரைக் குறிக்கிறதோ தெரியாது. ஒருவேளை எதிராஜர் குற்றஞ் சாட்டின பேர்வழியைக் குறித்து மிருக்கலாம். மேலும் டேவிஸ் எதிராஜர் ஜெயில் விவகாரம் சரியாய் நடப்பதில்லை என்று சொன்ன தற்காக மன்னிப்பு நாட்களில் ஒன்பது நாட்களைக் குறைத்தது மன்றி 3 மாதம் கம்பி விலங்கு போட்ட தாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

எதிராஜர் ஸலிவான் என்பவன் பேரில் முறை யிட, அதைக் கேட்பவரே கிடையாது. ஆகையால் தான் எதிராஜர் ஜெயிலில் ஜீவித்திருப்பதைப் பார்க்கிலும் இறப்பது மேலென்று இம்மாதிரியாகச் செய்தார். இதற்குத்தான் சட்டப் பிரகாரம் நடக்கும் பொருட்டு இவருக்கு நான்கு மாதம் சிறை விதித்தாரே யொழிய, இவர் தற்கொலை புரியத் துணியும்படி செய்த கஷ்ட நிஷ்டூரங்களை நிவர்த்திக்க மாஜிஸ்டிரேட்டு ஒன்றுமே செய்ய வில்லை.

(இந்தியா : 24.7.1909—பக்.7)

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சான்றுப் பட்டியல்

நூல்கள்

1. அபிதான சிந்தாமணி (மறுபதிப்பு 1934)—ஆ. சிங்கார வேலு, சி. குமாரசாமி நாயுடு & சன்ஸ், சென்னை.

2. இந்தியப் புரட்சி இயக்கம் (1978)—பி. கோதண்ட ராமன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், சென்னை.

3. கலைக்களஞ்சியம் தொகுதிகள் (1954—1968)—தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை.

4. காங்கிரஸ் மகாசபை சரித்திரம் (1929): இரண்டாம் பாகம் — சுதேசமித்திரன் காரியாலயம், சென்னை.

5. சிறப்புப் பெயரகராதி (1970)—சு. அ. இராமசாமிப் புலவர், சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.

6. ஞானரதம் (1936)—பாரதியார், பாரதி பிரசுராலயம், சென்னை.

7. பாரத ஜனசபை (காங்கிரஸ் மகாசபையின் சரித்திரம்) (மறுபதிப்பு 1985)—பாரதியார், பாரதி மண்டலம், சிவகங்கை.

8. பாரத ஜனசபை : இரண்டாம் பாகம் (1920)—பாரதியார், சுதேச மித்திரன் புத்தக சாலை, சென்னை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

9. பாரதி தமிழ் (1954)—பதிப்பு: பெ. தூரன், அமுத நிலையம், சென்னை.

10. பாரதி நூல்கள் - வசனங்கள் (மறு பதிப்பு 1940)- பாரதியார், பாரதி பிரசுராலயம், சென்னை.

11. பாரதி பிறந்தார் (மறுபதிப்பு 1954)—'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி, பாரதி பதிப்பகம், சென்னை.

12. பாரதியார் பாடல்களுக்குத் தடை (1985)— மொழிபெயர்ப்பு: மா. வளவன், பாலாஜி புத்தக நிலையம், சென்னை.

13. வ. உ. சிதம்பரம் பிள்ளை சரித்திரம் (1948) - பரலி சு. நெல்லையப்பர், சக்தி காரியாலயம், சென்னை.

14. வங்க இலக்கிய வரலாறு (1965)—சுகுமார் ஸென், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி.

15. முதல் நாளிதழ்கள் மூன்று (1982)—மா. ரா. இளங் கோவன், சேகர் பதிப்பகம், சென்னை.

16. யுவபாரதம் (1937)—லாலா லஜபதிராய் (மொழி பெயர்ப்பு : ரா. கிருஷ்ணமூர்த்தி), பூ. ச. குமார சாமி ராஜு, இராஜபாளையம்.

இதழ்கள்

1. 'குமரி மலர்'—ஏ. கே. செட்டியார், சென்னை.
2. பஞ்சாமிர்தம்—அ. மாதவையா, சென்னை.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாராட்டுரைகளில் ஒருசில....

இதோ ஒரு மனிதன்!

'இதோ ஒரு மனிதன்' என்று அமரர் கண்ணதாசன் அவர்களால் பாரதி அன்பர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட அதிசய மனிதர் திரு. **சீனி. விசுவநாதன்** தம்மைப் பாரதிப் பணிக்கே அர்ப்பணித்துக் கொண்டு, இதுவரை செய்துள்ள சாதனைகளை எளிதில் மதிப்பிட முடியாதென்பது பேருண்மை. தீராத பக்தியும் ஓயாத உழைப்பும் கொண்டு, பல நாட்கள் பேரறிஞர் பலருடைய உதவியுடன் செய்து முடிக்க வேண்டிய காரியங்கள் அனைத்தையும் தாமொருவராகவே முயன்று முடித்திருப்பது அரும்பெரும் சாதனை யன்றோ?

பாரதியார் சம்பந்தமாக இவர் இதுவரை வெளியிட்டுள்ள நூல்கள் அனைத்தும் ஒவ்வொரு விதத்தில் சிறப்புற்று விளங்குகின்றன. இவரது சுய முயற்சியின் காரணமாகப் பல்லாண்டு காலமாகப் பலரும் முயன்று தேடியும் கிடைக்காத பாரதிச் செல்வங்கள் கிடைத்துள்ளன...

சி. விசுவநாத ஐயர்
பாரதியின் இளைய சகோதரர்
["மறுமலர்ச்சிக் கவிஞர்" நூலின்
அணிந்துரைப் பகுதி]

சபாஷ் பாண்டியார்!

மகாகவி பாரதியாரின் கவிதைகளிலும், கட்டுரைகளிலும் மூழ்கித் திளைத்தவர், நண்பர் சீனி.விசுவநாதன். அவர் பதிப்பித்து வெளியிட்டுள்ள நூல்களில் பெரும்பாலானவை பாரதியாரின் நூல்களே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஐம்பது வருஷத்துக்கு முந்திய பதிப்பில் இருந்து இன்றையப் பதிப்பு வரை அவருக்குத் தெரியுமாதலால், எவ்வெவற்றை எப்படி வரிசைப் படுத்துவது என்பதை அவர் மிக அழகாகச் செய்கிறார்.

நண்பர் சீனி. விசுவநாதனின் தொகுப்புகள் அழகானவை; சுத்தமானவை.

பாரதியின் நூல்களை அழகாக வெளியிட வேண்டும் என்ற ஆதங்கம் எனக்கே அதிகம் உண்டு. இந்தத் தொகுப்பைப் பார்த்தபோது அந்த ஆசை இன்னும் அதிகமாயிற்று. 'ஒரு நல்ல பதிப்பு'க்கு அதுதான் 'அடையாளம்.'

நண்பர் சீனி. விசுவநாதன் அவர்களுடைய பணி பாராட்டத் தக்கது.

பாரதியே இன்றிருந்து இந்தத் தொகுப்பைப் பார்த்தால், 'சபாஷ் பாண்டியா' என்று தட்டிக் கொடுத்து, ஒரு மாலையும் போடுவார்.

கவியரசு கண்ணதாசன்
['தமிழருக்கு' நூலின்
அணிந்துரைப் பகுதி]

100836

தொண்டு துலங்குக!

'தமிழருக்கு'த் தாங்கள் அளித்த பாரதிச் செல்வம் மிக மிக உயர்ந்தது...பாரதியின் அமர வாக்குகளை இவ்வளவு நல்ல நூல்களாக உலகிற்குத் தரும் தங்கள் தொண்டு துலங்குக.

கவியோகி சுத்தானந்த பாரதியார்

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சல்வம்

திப்பில்
நக்குத்
ரிசைப்
காகச்

ப்புகள்

ரியிட
ண்டு.
ஆசை
பு'க்கு

பணி

மைப்
ட்டிக்

ாசன்
ரலின்
குதி]

ரதிச்
அமர
ற்குத்

தியார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

GURUKUL KANGRI LIBRARY

	Signature	Date
Accession		12.7.53
Class No.		
Cat no.		
Tag		
Filing		
E.A.R.		
Any other		
Checked		

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar